கமலாலய சிறப்பு

என்னும்

திருவாரூர்ப் புராணம்

குறிப்புதவிநூல்



[COURTESY : SRI. V. S. THYAGARA[illegible]UDALIAR]

ஆதர் ஆலியம்

மகாமகோபாத்யாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலை

அடையாறு]

* *

[illegible]

உ

சிதம்பரம்

மறைஞான சம்பந்த நாயனர்

இயற்றியருளிய

கமலாலயச் சிறப்பு

என்னும்

திருவாரூர்ப் புராணம்

NOT FOR LENDING
குறிப்புதவிநூல்
CONNEMARA PUBLIC LIBRARY
30 JUN 1997
MADRAS-600 008.

சைவப்பெரியார்

உயர் திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A., L.T., அவர்கள்

அன்புடனளித்த அணிந்துரை கொண்டது

★

மகாமகோபாத்யாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

அடையாறு] 1961 [சென்னை-20

விலை ரூ. 5–00

NOT FOR LENDING.

குறிப்புதவிநூல்

குமரன் அச்சகம், 28, திருப்பள்ளித் தெரு, சென்னை - 1.

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUN 1997

அணிந்துரை

புராணங்கள் மகாபுராணங்கள், உபபுராணங்கள், தலபுராணங்கள் என்று பாகுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றைப் பார்க்க வேண்டிய கண்கொண்டு பார்ப்பவர்கள் இவற்றுல் பெரும் பயன் அடைவர்; பிறரும் அடைய உதவுவர். இம் மூவகைப் புராணங்களுள் தலபுராணங்கள், அவ்வத்தலங்களின் பழைய வரலாறுகளை விரித்துரைப்பன. இதனோடு, வாய்ப்பு நேரும்போதெல்லாம், மக்களின் அறவாழ்க்கைக்கும் சமயவாழ்க்கைக்கும் இன்றியமையாது வேண்டப்படும் நீதிகளையும் வேதாகமப் பேருண்மைகளையும் கதைகளினூடே புகுத்தி, மக்கட்குப் புன்னெறியில் வெறுப்பும் நன்னெறியிற் பற்றும் உண்டாக்கும் நன்மையையும் இவை விளைப்பன.

கமலாலயச் சிறப்பு என்னும் இந்நூல் பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றுகிய திருவாரூரின் பெருமைகளை விரித்துரைக்கும் ஒரு சிறந்த தலபுராணமாகும்.

ஆறு சிவத்தலங்களை, விராட்புருடனின் ஆறு ஆதாரங்கள் என்று போற்றுவது சைவ மரபு. அம்முறையில், திருவாரூர் மூலாதாரத்தலம் என்று மதிக்கப்பெறுவது. இப்பண்டைப் பெருந்தலத்தின் சிறப்புக்கள் அளவில. இது சமய குரவர் நால்வராலும் பாடப்பெற்றது. 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் என்று' சுந்தரமூர்த்தி சுவாமிகளால் போற்றப்பெற்றது. பெரிய புராணத்தில் இத்தலம் சிறந்த இடம் பெற்றுள்ளது. பிற புலவர்கள் பாடிய பிரபந்தங்களையும் படைத்துள்ளது.

இம்மாபெருந் தலத்தின் மேன்மைகளை விளக்கும் நூல்கள் வடமொழியிலும் பலவுள என்று அறிஞர்கள் கூறுகின்றனர். தமிழில் திருவாரூர்ப் புராணம் என்னும் பெயரிய நூலொன்றைச் சம்பந்தமுனிவர் என்னும் பெரியார் ஒருவர் இயற்றியுள்ளார்; அது முன்னமே அச்சிடப்பெற்றது.

கமலாலயச் சிறப்பு என்னும் இப்புராணத்தை எழுதியருளியவர், சிதம்பரம் கண்கட்டி ஸ்ரீ மறைஞான சம்பந்த நாயனர் என்னும் ஒரு முனிவராவர். இவர், கி. பி. பதினைரும் நூற்றாண்டினர்; சிதம்பரம் குகை நமச்சிவாயர் மடத்தில் தங்கியிருந்த ஒரு சிவானுபூதிச் செல்வர்; வடமொழி தென்மொழிகளில் மிக வல்லவர்; சகலாகம பண்டிதர் என்று போற்றுதற்குரியவர். இவர் சில ஆகமங்களைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்

என்றும் அறிகிறோம். இவர் இயற்றியருளிய நூல்களிற் சிறு வடிவிலுள்ள பத்தொன்பது நூல்களைச் (செய்யுள் வடிவில் 11; வசன வடிவில் 8) திருவாவடுதுறையாதீனம் 1954–இல் வெளியிட்டுள்ளது. சைவ சமயநெறி, முத்திநிலை, அருணகிரி புராணம் என்னும் நூல்களை அருளிச் செய்தவரும் இவரே.

இக் கமலாலயச் சிறப்பு என்னும் புராணம், 1066 செய்யுட்களை இருபத்துநான்கு சருக்கங்களில் கொண்டுள்ளது. இது திருவாரூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும், வன்மீகநாதர், கமலாம்பிகை, தியாகேசர் முதலிய முக்கிய மூர்த்திகளைப் பற்றியும், இத்தலத்தில் மூர்த்திப் பிரதிஷ்டை செய்து பூசித்துப் பேறுபெற்ற பல தேவர்கள், முனிவர்கள், அரசர்கள் முதலியவர்களைப்பற்றியும், இத்தலத்தைச் சார்ந்துள்ள பல புண்ணிய தீர்த்தங்களைப்பற்றியும் பல செய்திகளைத் தெரிவிக்கின்றது. மேலும், பல நீதிகள், அரசாங்கப் பொறுப்புக்கள், நல்லோர் ஒழுகலாறுகள், வைதிக நெறிகள், பூசனை முறைகள், புண்ணிய பாவ இயல்புகள், சுவர்க்க நரக விவரங்கள், சமயவாழ்க்கைப் பண்புகள், சமரச நோக்க மாண்பு முதலிய சிறந்த பொருள்களையும் விளக்கமாக எடுத்துரைக்கின்றது இப்புராணம். இந்துக்கள் உயரிய குறிக்கோளைக் கொண்டு நல்வாழ்க்கை நடத்தி மேம்படுதற்கு இவ்விளக்கங்கள் பெரிதும் துணைசெய்ய வல்லவை என்னலாம். இவற்றுள் ஒரு சிலவற்றின் தலைப்புக்கள் உதாரணமாக அடியில் தரப்படுகின்றன:

1. நூலின் பத்தாம் பகுதியாகிய கோகன்ன சருக்கத்தில், (i) 'கோகன்னன் யமனை நல்வினையின் பயனை நவிலுமாறு கேட்க யமன் நவிலுதல்', (ii) 'யமன் கூறும் நல்லறங்கள்' (செய்யுள்: 31—35)
2. பன்னிரண்டாம் பகுதியாகிய குலிசேசுர சருக்கத்தில், 'புலியிடம் பசு சபதம் புகலுதல்' (செய்யுள்: 11—27)
3. இருபதாம் பகுதியாகிய சர்வதீர்த்தாசிரயச் சருக்கத்தில் (i) 'அறிவின் அளவு', (ii) 'வைசியர் தன்மை', (iii) 'அந்தணர் வேந்தர் தன்மைகள்', (iv) 'எவரும் நினைப்பதும் செய்வதும்', (v) 'அங்கியர் ஆதிக்கம் பெறல்', 'இன்னும் வரும் பிற நலிவுகள்', (vi) 'தத்துவம் உணராமை', (vii) 'கலியில் விளையும் பாதகங்கள்', (viii) 'கபடர் செயல்', (ix) 'பிற சமயங்களை அவமதித்தல்', (x) 'சமய சமரசமின்மை', (xi) 'தீமையின் வெற்றி', (xii) 'துன்பமிகுதி', (xiii) 'கோப்பெருக்கம்',

30 JUN 1997

(xiv) 'நல்லோர்கீர்த்தி அகழ்தல்', (xv) 'விக்கிரகங்களைத் திருடல்', (xvi) 'கலி நீங்கவழி' (பக்கம்: 842 முதல் 863 வரை). இவைகளிற் பல தற்கால நிலைமையைக் குறிப்பவைகள் போல் அமைந்துள்ளன.

இந்நூலின் ஆசிரியர் விஞ்ஞானத்திற்கு எட்டாத மெய்ஞ்ஞானம் பெற்றவராதலால், இவர் உபதேசங்கள், "ஏறுகின்றேன் என மதித்தே இறங்குகின்றேன் கடையேன்" என்ற திருவருட்பா வாசகத்திற்கேற்ப இன்னற் சூழலிற் சிக்கிச் செய்வகை யறியாது திகைத்து உய்வகை நாடுவோர்க்கு, எல்லாம் சிவமாய்க் கண்டு அன்பு பெருகி ஆனந்தம் அடைதற்கு வழி காட்டுவனவாய்ப் பயன்படலாம்.

இப்புராணம் இனிய எளிய நடையில் பாடப்பெற்றிருக்கின்றது; பலவித அணிகளையும் கொண்டு திகழ்கின்றது; பத்திச் சுவையும் ஞான நூல் விளக்கமும் உடன் கொண்டுள்ளது. இதனைச் சுருக்கமாக ஒழுக்கத்தின் சாறு என்றும், சமயஞானக் களஞ்சியம் என்றும் கூறலாம். எனவே, இஃது ஆசிரியன் பெருமையினாலும், அவன் நுவலும் பொருளின் மாட்சியினாலும், பாட்டின் நலத்தாலும் விழுப்பமுடையது என்று பாராட்டுதற்கு உரியது.

இந்நூல் இதுவரை அச்சில் வராதது. இதன் காகிதப் பிரதியொன்றை, 'தமிழ்த் தாத்தா'—மகாமகோபாத்யாய, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் தேடிப் பாதுகாத்து வைத்திருந்தார்கள். அவர்கள் 'வானோர்க்கு உயர்ந்த உலகம்' புகுந்து விட்ட பின்பு, அவர்கள் அருமைப் புதல்வர் ஸ்ரீ கலியாண சுந்தர ஐயரவர்கள், தமது தந்தையார் சேமித்து வைத்திருந்த அரிய ஏட்டுச் சுவடிகளை எல்லாம் ஸ்ரீமதி ருக்மிணி அருண்டேல் அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

இவ்வம்மையார் உலகப்பிரசித்திபெற்ற கலாக்ஷேத்திரத் தாபகரும், தலைவரும், வாயில்லாப் பிராணிகளின் வதையைத் தடுக்க அரும்பெரு முயற்சிகளை இடைவிடாது செய்துவரும் அருளாளரும் ஆவர் என்பது யாவரும் அறிந்த உண்மை. மகாமகோபாத்யாய ஐயரவர்களிடம் வைத்துள்ள பெருமதிப்பும் அன்பும் காரணமாக, அம்மையார், அவர்களது நூற்களஞ்சியப் பாதுகாப்புப் பொறுப்பை மேற்கொண்டார்கள். பாதுகாப்பதற்கு மட்டுமன்றிப் பலர்க்கும் அக்களஞ்சியம் பயன்படுதற்கும் வேண்டிய அமைப்புக்களையும் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்.

அம்மையார் இந் நூல்நிலையத்தின் கௌரவப் பாதுகாவலராக ஸ்ரீ ரா. விசுவநாதையர், M.A. (முன்னாள் சென்னைமாநில அரசாங்கத் தலைமைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்) அவர்களை நியமித் தார்கள். இவர்கள் மகாமகோபாத்தியாயாவர்களிடம் பேரன்பு பூண்டிருக்கும் சிறந்த புலவர். ஐயரவர்கள் கடைப்பிடித்த செவ்விய ஆராய்ச்சி முறையை முற்றிலும் பின்பற்றிச் செய்வன திருந்தச் செய்யும் பண்புடையவர்கள். இவர்கள் நிலையத்துப் புலவர்களின் துணையையும் கொண்டு, நன்றாக ஆராய்ந்து, பல நூல்களை முதன் முறையாக அச்சுவாகனமேற்றி உலவ அனுப்பி யுள்ளார்கள்.

இவ்வகையில் இப்போது வெளிவருவது இக் கமலாலயச் சிறப்பு. மூலத்திற் சிற்சில பாடல்கள் சிதைவுற்றிருக்கின்றன என்று அறிகின்றோம். அவைகளை நிறைவுசெய்ய ஆதாரங் கிடைக்காத இடங்களிலெல்லாம் புள்ளிக் குறிகளை அமைத் திருப்பது, பதிப்பாளரின் நேர்மையைக் காட்டுகிறது. பாடல் கட்குத் தக்க தலைப்புக்களை இவர் தந்திருப்பது நல்லதோர் புதுமையாகும். படிப்போர்க்குப் பெருந்துணையாய் உதவும் அடிக்குறிப்புக்களை எழுதிச் சேர்த்திருப்பதும் பாராட்டத்தக்கதே.

இந்நூலின் வெளியீட்டால், பொதுவகையில் யாவர்க்கும், சிறப்புவகையில் திருவாரூர் வட்டத்து ஆத்திகப் பெருமக்கட்கும், அங்குள்ள பல மூர்த்திகள் தீர்த்தங்களிடம் மீண்டும் மதிப்பு பெருகலாம். வேண்டிய இடங்களில் திருப்பணிகள் நிகழலாம். சிரிய அறவுணர்ச்சியும், சிறந்த பக்திஞான வளர்ச்சியும், அவற்றை யொட்டி விளையும் பல நலங்களும் பெருகலாம்.

இவ்வாறு நிகழ, எல்லாம்வல்ல இறைவன் நியாகேசப்பெருமான் திருவுளங் கொள்ள வேண்டும் என்று அன்பர்கள் பிரார்த்திப் பார்களாக! தேசிய மகாகவி பாரதியார், கலியுகத்தில் கிருத யுகத்தை வருவித்தருள வேண்டுமென்று தமது விநாயகர் நான்மணி மாலையில் பேரார்வத்துடன் செய்துள்ள வேண்டுகோளை இறைவன் ஏற்றுக்கொண்டு, உலகில் என்றும் இன்பம் பெருகச் செய்தருளுவானாக.

சென்னை,
8—1—1961.

ச. சச்சிதானந்தம் பிள்ளை.

வ

சிவமயம்

முன்னுரை

திருச்சிற்றம்பலம்

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வாணைப்
போக முந்திரு வம்புணர்ப் பாணைப்
பின்னை யெள்பிழை யைப்பொறுப் பாணைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பாணை
இன்ன தன்மைய னென்றறி வொண்ணு
எம்மா னையெளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே.

[சுந்தரமூர்த்தி நாயனார்]

திருச்சிற்றம்பலம்

கமலாலயச் சிறப்பு என்றும், கமலாலய புராணம் என்றும், கமலாலய மஹாத்மியம் என்றும் வழங்கும் இத் திருவாரூர்ப் புராணம் சிதம்பரம் **ஸ்ரீ மறைஞான சம்பந்த நாயனார்** என்ற முனிவரால் இயற்றப் பெற்றது. இந் நூலின் பாயிரச் சருக்கம் 25-ஆம் பாடலினால், இதன் காலம், கலியப்தம் 4647-ஆம் ஆண்டின் பின்னதாகிய பராபவ வருஷம் சாலி. 1469, (கி. பி. 1547) என்பது தெரிய வருகின்றது. அவரியற்றிய பதிபசுபாசப் பனுவல் என்னும் நூலின் சிறப்புப் பாயிரத்தில், 'ஆதி கமலாலயமுதற் புராண மோது மதியாற் சூதனை யொப்போன்' என்னும் பகுதியாலும், இந் நூல் அவர்களால் இயற்றப் பெற்றதே என்பது வலியுறும். இவ் வாசிரியர் சிதம்பரத்தில் சூகைமடத்தில் வசித்து வந்தன ரென்றும், மறைஞான சம்பந்த தேசிகர் என்பன போன்ற வேறு பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தனரென்றும், இவர் இப் புராணமேயன்றி அருணகிரிய புராணம், பதிபசுபாசப் பனுவல், சங்கற்ப நிராகரணம், சில கற்பங்கள் முதலிய வேறு பல நூல்களையும் இயற்றி யுள்ளார் என்றும் தெரிய வருகிறது.

இந் நூல்,

நிலம கட்கழ கார்தரு நீணுதல்
திலத மொப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் டாமரை போன்மலர்ந்
தலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால்.

[திருத்தொண்டர் புராணம்: திருமுகரச் சிறப்பு. 12]

என்று சேக்கிழார் பெருமானால் புகழப் பெற்ற திருவாரூர் என்ற சிறந்த சிவத் தலத்தைப்பற்றிய புராணமாகும். இத் தலம், 'திசை யெட்டுந் தெரிப்பதற்கு முன்னே பின்னே திருவாரூர்க் கோயிலாக் கொண்ட நாளே' என்று ஸ்ரீ அப்பர் சுவாமிகளால் பாராட்டப் பெற்றபடி மிகப் பழமை வாய்ந்தது. சான்றோர்களால் மிகவும் பாராட்டப் பெற்றது. சோழவள நாட்டின் காவிரி நதியின் தென்பால் உள்ளதான இந் நகரம், விராட் புருஷனுடைய மூலாதார மெனவும், பூமி தேவியின் ஹ்ருதய கமல மெனவும், பஞ்ச பூத ஸ்தலங்களுள் பிருதிவி ஸ்தல மெனவும், தன்பாற் பிறந்தவர்களுக்கு முத்தி கொடுத்தலால் பிறக்க முத்தி தரும் தல மெனவும், காலங்கண்ட நகர மெனவும் இன்னும் பலவா ருகவும் ஆன்றோரால் புகழப் பெறும் பெருமை வாய்ந்ததாகும்.

இத் தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்ற தேவர், முனிவர், அரசர், பிறர் என்போர் மிகப் பலராவர். சமயகுரவர் நால்வரும் இத் தலத்தைப் பாடி யருளியுள்ளனர். அவற்றுள் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருப்பதிகம் ஐந்து; திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்தவை இருபத்தொன்று; சுந்தர மூர்த்தி நாயனார் அருளியவை எட்டு. மாணிக்கவாசகர் இயற்றி யருளிய திருவாசகம், திருக்கோவையார் என்ற திருமுறைகளில் இத் தலத்தின் பெருமைகள் பல விடங்களில் விதந்தோதப் பெற்றுள்ளன. சேரமான் பெருமாள் நாயனார் அருளிச் செய்த மும்மணிக்கோவை இத் தலத்துக்குரியதே.

கழற்சிங்க நாயனார், செருத்துணை நாயனார், சோமாசிமாற நாயனார், தண்டியடிகள் நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நமிநந்தி யடிகள், விறன்மிண்ட நாயனார் ஆகியோர் இங்கு வழிபட்டுப் பேறு பெற்றனர். திருத்தொண்டத் தொகையை, ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனார் உலகுக்கு அளிக்கக் காரணமா யிருந் தது இந் நகரமேயாகும். இராச ராச மன்னன் அபயகுல சேகரன்,

நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு திருமுறை காண வழிகாட்டிய தலமும் இவ் ஆரூர் ஆகும்.

இப் புண்ணிய புரத்தைப் பற்றிய தலச் செய்திகள் மகாமகோபாத்யாய டாக்டர் ஐயரவர்கள் பதிப்பித்தருளிய திருவாரூர்த் தியாகராச லீலை, திருவாரூருலா, திருவாரூர்க்கோவை முதலிய நூல்களின் முகவுரைகளில் விரிவாகக் கூறப் பெற்றுள்ளன. அவற்றை அங்குக் காண்பது நலமாகும்.

வட மொழியில் அஜபாரஹஸ்யம், ஆடகேச்வர மஹாத்மியம், கமலாலய மஹாத்மியம், நாகர காண்டம், தியாகராச லீலை, சபதகாரபுர மஹாத்மியம், தியாகராஜ மஹாத்மியம், தேவயாகபுர மஹாத்மியம், தேவாச்ரய மஹாத்மியம், முசுகுந்தபுர மஹாத்மியம், ராமகயா மஹாத்மியம், ஸ்ரீபுர மஹாத்மியம், ஸ்கந்தபுர மஹாத்மியம், க்ஷேத்ரவர மஹாத்மியம் என்று பல நூல்கள் இத் தலத்துக்கு உரியனவாக உண்டு என்பது தெரிய வருகிறது. கமலாலயச் சிறப்பு என்ற இந் நூலின் ஆசிரியர், 'ஆரியத்தினது பொருள் தமிழா லுணர்த்துக வென்றுரைக்கச் சொல்வாம்' (28) என்று கூறிப் பின் 32-ஆம் செய்யுளில், 'காந்த மெனும் சிவபுராணந் தன்னுள், ஆர்ந்தவை தனின் அஞ்தி முத்தனி டாரூர் மேன்மையை'த் தாம் உரைத்ததைச் சுட்டி யிருக்கிறார். இவ்வாறே நாகர காண்டம் என்னும் பெயருடைய திருவாரூர்ப் புராணம் என்னும் நூலைத் தமிழில் பாடியருளிய அளகைச் சம்பந்தப் பெருமானும் (கி. பி. 1592) 'காந்த புராணத்தின் விரிந்த, ஞானமாதவர் புகழ்தரு நாகர காண்டம்' என்றவடமொழி நூலைப் பின்பற்றி தாம் தம் தமிழ் நூலை இயற்றி யுள்ளதாகக் கூறுகின்றனர். ஆகவே, காந்தமே இப் புராணங்களுக் கெல்லாம் மூல மென்பதும், அதனின் வழிநூல்களாக வட மொழியில் ஆன்றோர்கள் இத் தலத்துக்குரிய பல பெயர்களாலும் பல புராணங்கள் இயற்றினர் என்பதும் தெரிய வருகின்றன. அம முறையில் வட மொழியில் எழுந்த கமலாலய மஹாத்மியத்தைப் பின்பற்றி இந் நூலாசிரியரான சிதம்பரம் ஸ்ரீ மறைஞான சம்பந்தர் கமலாலயச் சிறப்பு என்னும் தம் நூலை யாத்திருக்கக் கூடும்.

கமலாலயச் சிறப்பு என்பதே இந் நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயராகும் என்பது பாயிரத்தாலும் (33), பிற குறிப்புக்களாலும் விளங்கும். பாயிரச் சருக்கம் முதலாக, முனிவரெழுவரும் முத்தி பெற்ற சருக்கம் ஈருக இது 1066 திருவிருத்தங்கள் கொண்ட 24 சருக்கங்களை உடையதாகும். (சம்பந்த முனிவர் இயற்றியதும்,

வடபாதிமங்கலம் ஸ்ரீமான் சோமசுந்தர முதலியாரவர்களால் ஐய வருஷம் பங்குனி மாதம் பதிக்கப் பெற்றதுமான திருவாரூர்ப் புராணம் 2929 திருவிருத்தங்கள் கொண்ட 111 சருக்கங்களைப் பெற்ற தாகும்).

இந் நூலினில், சோழ நாட்டின் வளம், திருவாரூர்த் தலச் சிறப்பு ஆகியவை, இலக்கியச் சிறப்பு செறிந்திருப்பதோடு, மக்களின் சமய வாழ்க்கை, ஒழுக்க மேம்பாடு ஆகியவை பெற்று மிக நன்கு விளங்குகின்றன. திருவாரூர்ச் சிறப்புச் சருக்கத்தில், ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகள் அவர்களின் இரண்டு அருளிச் செயல்கள் (111, 115) (திருத்தொண்டர் புராணம் முதலியவற்றில் காணப் பெறுதவை) சுட்டப் பெற்றுள்ளன. நான்காவது சருக்கம் முதல் நூல் முடிய ஆரூரின் பெருமைகளும் அங்குத் தேவர், முனிவர், அரசர், பிறர் ஆகியோரால் நிறுவப் பெற்ற சிவலிங்கங்கள், தீர்த்தங்கள் முதலியவற்றின் வரலாறுகளும் விரிவாகக் கூறப் பெற்றுள்ளன.

ஆரூரில் சிவபிரான் எழுந்தருளியுள்ள மூலத்தானம் திருமூலட்டானம் என்றும் பூங்கோயில் என்றும் பெயர் பெறும். தேவர்கள் இயற்றிய புற்றில் அங்கு இறைவர் எழுந்தருளியிருத்தலால் அவருக்குப் புற்றிடங் கொண்டான் என்றும், வன்மீக நாதர் என்றும் திருப்பெயர்கள் வழங்கலாயின. இவரே இத் தலத்திற் குரிய மூலலிங்கமாவார். இவ் வரலாற்றைக் கூறும் நான்காவது சருக்கத்தில், ஆரூருக் குரிய வேறு பல பெயர்களும் அவற்றின் காரணங்களும் கூறப் பெறுவதோடு, அவ்வூர் கலிசெலா நகர மென்பதும் சுட்டப் பெறுகின்றது. அத் தலத்திலுள்ள தீர்த்தங்களுள் மிகப் பெரியதான தேவதீர்த்தம் உண்டான வரலாறும், அதன் வியக்கத் தக்க பெருமைகளும் அச் சர்க்கத்திலேயே கூறப் பெறுகின்றன. ஐந்தாவது சருக்கம் பதுமத் திருமகள் வரம் பெற்ற வரலாற்றைக் கூறும். வன்மீக நாதர் ஆலயத்துக்கு அடுத்த சிறப்புப் பெற்ற ஆலயம், தவம் புரியும் கோலத்தில் எழுந்தருளிய ஸ்ரீ கமலாம்பிகையின் திருக்கோயிலாகும். இவ்விரு பெருங் கோயில்களை யன்றி, அவ் வாலயச் சுற்றிலும் அசலேசுரம், ஆடகேசுரம், ஆனந்தேசுரம், சித்தேசுரம் என்ற நான்கு திவ்ய திருப்பதிகளும், தேவர், முனிவர், அரசர், பிறர் என்ற பலப் பலரால் நிறுவப் பெற்ற பல வேறு சிவலிங்கங்களும் பல திவ்ய தீர்த்தங்களும் இப் பதியில் உண்டு.

இவற்றோடு, இத் தலத்தின் பெரும் புகழுக்குக் காரணம் அங்கு எழுந்தருளி யிருக்கும் ஸோமஸ்கந்த மூர்த்தியான ஸ்ரீ தியாகேசப் பெருமானின் பெருமையே யாகும். இவர் முதலில் திருமாலாலும், பின் இந்திரனாலும் பூசிக்கப் பெற்று, 'அமரர்நா டாளசதே யாஞராண்ட' என்று ஸ்ரீ அப்பர் சுவாமிகள் அருளியபடி, இப் பூவுலகம் செய்த புண்ணியத்தால் ஆரூரில் முசுகுந்த சக்கரவர்த்தியால் தாபிக்கப் பெற்றார். 'ஆழித் தேர் வித்தகன்' என்று போற்றப் பெற்ற இம் மூர்த்தியின் கருணைத்திறம், திருவிளையாடல்கள், தேவாரங்கள், திருத்தொண்டர் புராணம், தியாகராஜலீலை, திருவாரூர்க்கோவை, உலா, குறவஞ்சி, தனிப் பாடல்கள், கீர்த்தனங்கள் முதலிய பலவற்றால் பெரிதும் விளங்கும்.

இன்னும், இந்த க்ஷேத்திரத்தின் பஞ்ச குரோசத்தினுள் அமைந்துள்ள இரு கோகன்ன க்ஷேத்திரங்கள், கயாசிரசு, குலிசேசுவரம் போன்ற பல திவ்ய க்ஷேத்திரங்களும், கயா தீர்த்தம், நற்பயனிட்டா தீர்த்தம், புஷ்கரணி தீர்த்தம், விசுவாமித்திர தீர்த்தம், சருவ தீர்த்தம், மிச்சிர தீர்த்தம், முனிவர் தீர்த்தங்கள் முதலிய புண்ணிய தீர்த்தங்களும் எல்லை யற்றனவாய் உள்ளன. இவற்றுள் தேவ தீர்த்தம், புட்கரணித் திரயம் இவற்றைப் பற்றிய சருக்கங்கள் வியக்கத் தக்க பல அரிய செய்திகளைக் கொண்டு திகழ்வது காணலாம். சருவ தீர்த்தாசிரிய சருக்கங்கள் யுகங்களைப் பற்றி விளக்கும் அறிவியல் பொக்கிஷமாகும்.

இவற்றின் வரலாறுகளை யெல்லாம் தொகுத்துக் கூறுவது இப் புராணம் ஆகும். இங்குப் பூசித்துப் பேறு பெற்ற தேவர்களுள், திருமால், பிரமன், இந்திரன் ஆகியோர் சிறந்தோ ராவர். முனிவர்களுள் கௌசிகர் குறிப்பிடத் தக்கவர். அரசர்களுள் திரிசங்கு, தயரதன், சமற்காரன், குலிசன் முதலியோர் சிறப்பு மிக்கவர். இறைவனையும், அம்மையையும் இங்குப் பூசித்து இணையில்லா வரங்கள் பெற்று முடிவில் அவன் திருவடி நீழலை யடைந்த மானிடரும் பலர்.

இவ் வரலாறுகளை யெல்லாம் மிக விளக்கமாகக் கூறும் இப் புராணம் வைதிக மார்க்கத்தின் சிறப்புக்களையும், நல்வினை தீவினைகளின் நுட்பமான பாகுபாடுகளையும், மானிடர் கையாள வேண்டிய சிறந்த ஒழுக்கங்களையும், புண்ணிய கருமங்கள், விரதங்கள், அறச்செயல்கள், நீதியுடைமை, பண்புடைமை, வருணாசிரம ஒழுக்கங்களின் பாகுபாடுகள், சமய வாழ்க்கை,

சமயக்காழ்ப்பின்மை, சமய ஒற்றுமை, முதலிய சிறப்புக்களையும் உரிய இடங்களில் விளக்கமாக அமைத்துக் கூறுவது இதன் ஆசிரியரின் ஆற்றலையும், குறிக்கோளையும், பிற மேன்மைகளையும் நமக்கு நன்கு புலப்படுத்தி, நம்மை நல்வழிப்படுத்த எழுந்தனவாகும். ஆரூரின் தெய்வத் தன்மையைப் புலப்படுத்த எழுந்த இத்தலபுராணம் மானிடர்க்குரிய இன்றியமையாத பேறுகளையும் அவற்றை அடையும் வழிகளையும், அவர்கட்கு இம்மை மறுமைகளில் நற்பயனளிக்கத்தக்க அற வாழ்க்கை முறைகளையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நமக்குத் தெரிவிப்பதை நாம் உணர்வது பயனுடைத்தாகும்.

மேலே கூறியவற்றிற்கு உதாரணமாக நூலின் போக்கிலிருந்து சில குறிப்புக்கள் காட்டலாம். நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ள மண்டலி வளச்சருக்கம், திருவாரூர்ச் சிறப்புச் சருக்கம் ஆகிய இரண்டிலும்கூட, நாட்டின் வளம் கூற வந்த ஆசிரியர் இயற்கை வருணனைகளில் அதிக நாட்டம் செலுத்தாமல் நாட்டு மக்களின் அற ஒழுக்கங்களின் மேன்மைகளையே வற்புறுத்திக் கூறிச் செல்வது நோக்கத் தக்கது. அசலேசுரச் சருக்கத்தில் (6), வேட்டையாடுதலில் பின்பற்ற வேண்டிய சில அறங்களையும், களவாடுதலின் தீமைகளையும்; கோகன்ன சருக்கத்தில் ஊன் அருந்துதலின் குற்றத்தையும், உண்மை யுரைத்தலின் பெருமையையும், பசு தன்னைப் பற்றிப் புலியிடம் கூறிய சபதங்கள் முதலியவற்றால், கொடிய பாவவினைகள் இன்னன என்பதையும்; வணிகன் ஆரூரை வலம் வரு சருக்கத்தில் (13), அறியாமற் செய்யும் புண்ணியமும் நற்பயனை யளிக்கும் என்னும் உண்மையையும்; தேவ தீர்த்தச் சருக்கத்தில் (14), பரோபகாரத்தின் சிறப்பையும், மது அருந்துதலின் கொடுமையையும்; கயா தீர்த்தச் சருக்கத்தில் ஊனுண்பான், அதைவதன், செய்ந்நன்றி கொன்றவன் என்ற பேய்களின் கூற்றுக்களால் பிரேத உடல்களைத் தரும் தீவினைகளையும், அவற்றின் உணவுகளைக் கூறும் வகையால் நிய உணவுகளால் உண்டாகும் வழுக்களையும், உய்வில்லாமையைத் தரும் செய்ந்நன்றி கொறலின் கொடுமையையும்; நற்பயனிட்டைச் சருக்கத்தில் (17) கடவுளின் சொத்தைக் களவாடுதலின் தீமையையும்; சருவதீர்த்தாசிரயச் சருக்கத்தில் (20) யுகங்களின் தருமங்களைக் கூறும் முகத்தால் நல்வினை

தீவினைகளின் விரிந்த பாகுபாட்டையும்; நரநரச் சருக்கத்தால் (22) புத்திரப் பேற்றின் இன்றியமையாமையையும், அரசியல் பொறுப்புக்களையும்; முனிவரெழுவரும் முந்திபெற்ற சருக்கத்தால் (23) ஜீவ இம்சையின் இழிவையும், கொடிய பாவச் செயல்கள் இன்ன இன்ன என்பவற்றையும், இவை போன்ற பலவற்றையும் நாம் இந்நூலில் காண்கிறோம்.

அன்றியும், பிரபஞ்ச உற்பத்தி, அண்ட பேதம், நவ கண்டங்களின் பிரிவு, யுக தருமங்கள், கலி காலக் கொடுமைகள், தேவப் பிறப்பு வகைகள், பலவித காலக் குறிப்புக்கள், வேள்விச் சிறப்புக்கள் முதலிய பல அரிய செய்திகளும் இந்நூலினுல் விளங்குகின்றன. இவற்றோடு அரிய சமயக் கருத்துக்களும், மெய்ந் நூல்களின் பல சிறப்புப் பகுதிகளின் விளக்கங்களும். முக்தி பேதங்களும் பிறவும் இப்புராணத்தால் புலனாகின்றன. இவற்றோடு, உலகில் வழங்கும் பல புராணக் கதைகள் பல மாறுபாடுகளுடன் இதனில் கையாளப் பெற்றுள்ளமையைக் காண்கிறோம். இவ்வாறு இதனில் அடங்கியுள்ள அருமைகள் மிகப் பலவாகும்.

கமலாலயச் சிறப்பு என்னும் இந் நூலிற் கூறப்படும் செய்யுட்கள் பெரும்பாலும் ஆசிரிய விருத்தங்களும், சிறுபான்மை நான்கடித் தரவு கொச்சகக் கலிப்பாக்களும் ஆம்; சந்தப் பாடல்களும் இதிற் பல அமைந்துள்ளன; அவை ஆசிரிய விருத்தத்தைச் சார்ந்தவையே. நாட்டுச் சிறப்பு முதலியவை கூறுமிடங்களிலும், தோத்திரப் பாக்களிலும் இனிய சந்தங்களையும் மடக்கு என்னும் சொல்லணியையும், அமைத்து இந்நூலை ஆசிரியர் பாடியிருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாகும்.

இந்நூலில் பல இடங்களில் சொற்பொருட் பின் வரு நிலையாகச் சொற்கள் பொருட்டொடர்புற எளிய முறையில் ஒன்றன்பின் ஒன்றுக எதுகை மோனை நயம்பட அமைந்திருப்பது இதன் ஒரு தனிச் சிறப்பாகும்.

இவ்வாறு நுண்ணிய கருத்துக்கள், யாப்பு முறை வழுவாமை, அணிநலம், பத்திச்சுவை, சுருங்கச் சொல்லல் முதலாகிய அழகுகள் முதலியவை அமையப் பாடுவதில் இவ்வாசிரியர்

வல்லுநர் என்பது இந்நூலை முழுதும் படித்துணர்வார் அறிந்த உண்மையாகும். இதன்கண் சில செய்யுட்களின் அடிகளின் சீர் மிகுந்தும் குறைந்தும் காணப்படுகின்றன. அவற்றைத் தவறு என்று துணிந்துகொள்ள வியலாமையால், அவை ஆரிடத்தின் பாற்படும் என்று கொள்ளுதலே ஏற்புடைத்தாம். இவ்வாறு மிகுந்தும் குறைந்தும் வருமிடங்கள் ஆங்காங்கு அடிக் குறிப்பில் குறிக்கப் பெற்றுள்ளன.

இக் கமலாலயச் சிறப்பில், பதுமத் திருமகள் பரவிய சருக்கத்திலிருந்து இறுதி வரையில் ஒவ்வொரு சருக்கத்தின் முடிவிலும்,

> என்று கூறினன் சூத னெனுமுனி
> வென்ற வீரருக் கைம்புல வேழமும்
> கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
> தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே.

என்ற ஒரே பாடலை மகுடம்போல் வைத்துப் பயன்படுமாறு செய்துள்ளது மற்ற எந்தப் புராணத்திலும் காணப்படாத ஒரு தனிச் சிறப்பாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நூலின் காகிதப் பிரதி யொன்றை மகாமகோபாத்யாய டாக்டர் ஐயரவர்கள் தம் கருவூலத்தில் சேர்த்து வைத்திருந்தது தமிழுலகம் செய்த புண்ணியமாகும். அப் பிரதியும் காலத்தினால் மிகவும் பழுதுற் றிருந்ததோடு, அதன் பாடல்கள் பற்பல இடையிடையே சீர்களும் அடிகளும் விடுபட்டுக் குறைவுற்றனவாக இருந்தன. அவற்றைப் பூர்த்தி செய்வதற்காக வேறு சுவடிகளைப் பல விடங்களிலும் நாடியும் முதலில் கிடைக்கவில்லை. கையிலுள்ள ஒரு சுவடியும் மேலும் நலிவுறுவதற்கு முன்னே, ஒருவாறு அச்சிட்டு விட வேண்டுமென்று கருதி, அதனைச் செப்பனிட்டு அச்சிட்டு வரும் நிலையில், தஞ்சை ஸரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில் திருவாரூர்ப் புராணம் என்ற பெயரில், ஒன்று முதல் 12-ஆவது சருக்கத்தில் 4-ஆவது பாடல் வரையில் மட்டும் உள்ள ஒரு குறைச் சுவடி இருப்பதை அறிந்து, அதன் பாடல்களை எழுதியனுப்புமாறு அந் நூல் நிலைய அமைச்சரை வேண்டி, அவற்றைப் பெற்றோம். அச்

சுவடியினுல் நூலின் 1 முதல் 12 சருக்கங்களில் விடுபட்ட சீர்கள் பல நிரப்ப வாய்ப்பு ஏற்பட்டது, அன்றியும், பல பாட பேதங்களும் கிடைத்தன. இவ்வுதவிக்கு அந் நூல் நிலையத்துக்கு யாம் மிகவும் நன்றியுடையவர்களாகின்றோம். இவ்வாறு கிடைத்த திருத்தங்களை இந் நூலின் அநுபந்தங்களாகச் சேர்த்துள்ளோம்.

பாடல்களுக்குத் தலைப்புக்கள் கொடுத்தும், குறிப்புரை எழுதியும் இந் நூல் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. ஸரஸ்வதி மஹால் சுவடியால் பெற்ற நிறைவுகளும் திருத்தங்களும் வரிசைப் படுத்தி அநுபந்தங்களாகச் சேர்க்கப் பெற்றுள்ளன. இதனில் காணப்பெறும் அரும்பதங்களையும் கருத்துக்களையும் தொகுத்து ஓர் அகராதியும் இந் நூலின் இறுதியில் ஓர் அநுபந்தமாக அமைக்கப் பெற்றிருக்கிறது.

காகிதப் பிரதியில் எழுதுவோரால் நேர்ந்த பிழைகள் மலிந்திருந்த பாடல்களைத் தூய்மைப் படுத்தி, சீர்களைப் பிரித்து எழுதி அமைத்துதவியவர் இந் நூல் நிலையப் பண்டிதரான திரு. **வித்வான் அ. குப்புசாமிப் பிள்ளை** அவர்கள். பாடல்களையும் குறிப்புக்களையும் மறுமுறை ஆராய்ந்து வழுக்களைக் களைந்தும் பல இடங்களில் கருத்துக்களை விளக்கியும் அன்புடன் உதவியவர், இந் நிலையத்து உதவிப் பதிப்பாசிரியரான தமிழ்ப் பேரறிஞர் திரு. **இ. எஸ். வரதராஜ ஐயர், பி.ஏ.** அவர்கள். இவ்விரு சான்றோர்களுக்கும் இந் நிலையம் தன் நன்றியைத் தெரிவிக்கின்றது.

இப் பதிப்பை நன்கு ஆராய்ந்து, இந் நிலையத்திற்கு ஆசி அருளும் வகையில் இவ் வெளியீட்டுக்கு அணிந்துரை ஒன்றை அழகுற எழுதி அருளிய அன்பர் **சைவப்பெரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.,** அவர்களுக்கு இந் நிலையம் மிகுந்த நன்றியைத் தெரிவிக்கின்றது. இந் நிலையம் துவங்கின நாள் முதல் அவர்கள் இதன் வளர்ச்சியில் மிகுந்த ஊக்கங் காட்டி உதவி வருவதையும் இங்குக் குறிப்பிடும் கடப்பாடுடையோம்.

இப் புத்தகத்தை மிகக் குறைந்த காலத்தில் அழகுற அச்சிட்டுதவிய **சென்னை, குமரன் அச்சு** நிலையத்துக்கும் எங்கள் நன்றி உரித்தது.

இவ் வெளியீட்டின் அருமையை உணர்ந்து இந்திய அரசியலார் தம் எண். F. 6—1—60. C-3 dated 8—7—60 of the Ministry of Scientific Research and Cultural Affairs, Govt. of India இதன் பதிப்புச் செலவின் கணிசமான ஒரு பகுதியை அன்புடன் ஏற்றுக்கொண்டு மானியம் அளித்துள்ளார்கள். இந்தப் பெரிய உதவிக்கு அவர்கள்பால் இந் நிலையம் தன் உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றது.

இப் பதிப்பிலுள்ள குறைகளை நாங்கள் நன்கு அறிவோம். முனிவர் பெருமானும் பல சைவ நூல்களின் ஆசிரியரும், பரமோபகாரியுமான இதன் ஆசிரியர் சகலாகம பண்டிதராவர். இப் புராணத்தை அவர்கள் ஒரு ஞானக் களஞ்சியமாக யாத்துள்ளார்கள். இதன் சிறப்பை உள்ளபடி உணர, இறைவன் திருவருளோடு, ஆகமங்கள், திருமுறைகள், சாத்திர நூல்கள், சைவபுராணங்கள், அவற்றின் உரைகள் முதலிய பல கருவிகளில் சிறந்த தேர்ச்சியும் வேண்டும். மகாமகோபாத்யாய டாக்டர் ஸ்ரீ ஐயரவர்களே இதனைப் பதிப்பித்திருக்கக் கூடுமானால் உலகம் எவ்வளவோ பயனடைந்திருக்கக் கூடும். அவர்களுடைய திருவடி பக்தி யொன்றை யன்றி வேறு எவ்வித உரிமையும் பெறுத எம்மால் இதனை வெளியிட அமைத்த **ஸ்ரீ தியாகேசன்** திருவருளின் போக்கை யாம் எவ்வாறு அறிவோம்? இவ் வெளியீட்டால் ஆரூரிலுள்ள பல்வேறு திவ்ய தலங்களும் தீர்த்தங்களும் முன்னைப் பெருமைகளைத் திரும்பவும் பெறக்கூடும் என்று நம்புகிறோம். இதனைப் போன்ற நாட்டிலுள்ள நூற்றுக் கணக்கான தலப் புராணங்களும் மறு பிறப்புப் பெற ஏதுவாகுமென்றும், அவற்றின் உதவியால் தமிழறிவும் சமய உணர்ச்சியும் நாட்டில் மறுபடியும் தலையெடுக்குமென்றும் நம்புகிறோம்.

அன்பர்கள் இப்பதிப்பிலுள்ள பாடற் குறைகளை நிரப்பியும், பொருள் விளங்கா இடங்களுக்குப் பொருள்களைச் சுட்டியும், இதனில் அறிவுத் தளர்ச்சியாலும், சோர்வு, மறதி முதலியவற்றாலும் நேர்ந்துள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டியும் உதவ வேண்டுமென்று அவர்களை வேண்டுகிறோம்.

'என் பிழையைப் பொறுப்பானும் பிழையெலாம் தவிரப் பணிப்பானுமான' எம்பெருமான் தன் பொருட்டான இந் நூல் உலகில் என்றும் விளங்கத் திருவருள் பாலிக்க வேண்டி, அவன் திருவடிகளில் இறைஞ்சுகிறேம்.

ஆடுவாய் நீநட்ட மளவிற் குன்று
வவியடுவா ருமறையோ ரறிந்தே னுன்னைப்
பாடுவார் தம்புருவ நார தாதி
பரவுவா ரமரர்களு மமரர் கோனும்
தேடுவார் திருமாலு நான் முகனுந்
தீண்டுவார் மலிமகளுங் கங்கை யாளும்
கூடும் நாயடியேன் செய்குற் றேவல்
குறையுண்டே திருவாரூர் குடிகொண் டீர்க்கே.

14—1—'61

[திருநாவுக்கரசு சுவாமிகள்]

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

சருக்க அட்டவணை

			பக்கம்
1.	பாயிரச் சருக்கம்	....	1
2.	மண்டலவளைச் சருக்கம்	....	14
3.	திருவாரூர்ச் சிறப்புச் சருக்கம்	....	30
4.	பசுபதி புற்றிடம் பற்றிய சருக்கம்	....	53
5.	பதுமத் திருமகள் பரவிய சருக்கம்	....	93
6.	அசலேசுரச் சருக்கம்	....	100
7.	ஆனந்தேசுரச் சருக்கம்	....	118
8.	சிவலிங்கத் தாபனச் சருக்கம்	....	129
9.	சோமாஸ்கந்த சருக்கம்	....	151
10.	கோகன்ன சருக்கம்	....	171
11.	சித்தேசுரச் சருக்கம்	....	196
12.	குலிசேசுரச் சருக்கம்	....	202
13.	வணிகனூரை வலம்வரு சருக்கம்	....	225
14.	தேவதீர்த்தச் சருக்கம்	....	236
15.	சரசுவதி தீர்த்தச் சருக்கம்	....	276
16.	கயா தீர்த்தச் சருக்கம்	....	281
17.	நற்பயனிட்டைச் சருக்கம்	....	309
18.	புட்கரணித் திரயச் சருக்கம்	....	320
19.	விசுவாமித்திர குண்டச் சருக்கம்	....	329
20.	சருவதீர்த்தாசிரயச் சருக்கம்	....	337
21.	மிச்சிராதி தீர்த்தச் சருக்கம்	....	376
22.	தசரத சருக்கம்	....	384
23.	சதுமுகன் யாகச் சருக்கம்	....	393
24.	முனிவரெழுவரு முத்திபெற்ற சருக்கம்	....	402

அநுபந்தங்கள்

I	நிறைவுகள்	....	418
	பாட பேதங்கள்	....	420
II	அரும்பத முதலியவற்றின் அகராதி	....	426



[COURTESY : SRI. V. S. THYAGARAJA MUDALIAR]

ஸ்ரீ தியாகராஜர்

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUN 2007
MADRAS-600 002

உ

சிவமயம்

கமலாலயச்சிறப்பு

என்னும்

திருவாரூர்ப்புராணம்

---

1. பாயிரச் சருக்கம்

காப்பு

விநாயகர்

1. திருவாரூர்ப் பிரியாதே திகழ்வானை மதியானை
உருவானை யுமைபாகர் தருவானை யுணர்வாரை
இரவாம லருள்வானை யிருணேர வருமாறு
தருவானை யடிபேண வியலோசை தவிராதே.

குறிப்புரை

1. மதி - மதிப்பிற்குரிய. யானை உருவான் - விநாயகன். இரவாமல் - அவர்கள் யாசிக்காமல். இருள் - அஞ்ஞான இருள். நேர்தல் - வருதல்; (மாறி) ஒழுங்குபடுதல்; அதாவது ஞான மயமாதல். ஓசை - புகழ். இயல் ஓசை தவிராதே - இந்நூலுக்கு உரிய இலக்கண முதலிய வழுக்களில்லையாதலுமாம்.

வன்மீகநாதர்

2. திருவாரும் புண்டரிகம் திகழ்தேவ தீர்த்தமுதல்
செறிந்து தங்கும்
தருவாருந் தண்பொழில்சூழ் திருவாரூர் திருமூலட்
டானந் தன்னுள்
உருவாரு முமைமகிழ வுறைவானே யாம்புகழு
முரைகொ ளென்றே
மருவாரு மலர்தூவி வன்மீக நாதரடி
வணங்கு வாமே. (1)

ஸ்ரீதியாகேசர்

3. அநாதிமல முத்தனைச்சின் மயனைமல மறுத்தடியார்க்
கருள்செய்வானை
மனுதியினுக் கிட்டானை மாலயனிந் திரன்முனிவர்
வானோர் தாமும்
தனுதிபனுந் தலைவணங்க வருள்புரியுஞ் சதாசிவனைத்
தனையொப் பானை
எனதிதனை யிருபதமும் பணிந்தேத்த வரியவர
மெளிதி னுமே. (2)

4. திருமாலுக் கருள்புரிந்து சிறந்துறைந்து வைகுண்டந்
தனிலுந் தேவர்
பெருமானுக் கருள்புரிந்து விணினின்று பிரிந்துமுசு
குந்தன் பேணப்

---

2. திரு - செல்வம்; இலக்குமி. தேவதீர்த்தம் - கமலாலயத்திலுள்ள ஒரு சிறந்த தீர்த்த கட்டம். திருமூலட்டானம் - திருவாரூர் ஆலயத்திலுள்ள மூலத்தானத்தின் பெயர்.

3. அநாதிமலம்; மலம் அநாதி என்பது சித்தாந்தம். முத்தன் - விடுபட்டவன். சின்மயன் - ஞான உருவினன். மனுதி - மனம் முதலியன. தனுதிபன் - குபேரன். தனை ஒப்பான் - தனக்குத் தானே உவமையாக உள்ளவன். என் ஆதிதனை, என்றும் எளிதின் ஆமே என்றும் பிரிக்க.

4. புரி - நகரம். கரு - பிறப்பு.

புரியாகத் திருவாரூர் புக்கிருந்தின் னருள்புரிந்தாங்
கவனுக் கென்பால்
கருமாறக் கருணைசெயுந் தீயாகனெனுங் கடவுளடி
கருத்துள் வைப்பாம். (3)

பராசத்தி

5. பருதியவி ரொளியினைப்போற் பராபரனை யமலனைநீங்
காத பாங்காய்ச்
சுருதியையுந் தருசுத்தோ பாதானந் தனிலிலய
மாகித் தோய்ந்தே
அருவெனவா யருவுருவா யனைத்துயிர்க்கு முயிராகு
மன்பி னுலே
இருபயனு முறையுதவும் பராசத்தி யினையடியு
மிறைஞ்சு வாமே. (4)

வேறு

கமலாலய நாயகி

6. அமலே சனதா கமுமானு ளறிவா ருயிரே பெறுமாதா
இமையோர் தொழவே வரமீவா ளெமையா
[ளெனவே தருசீராள்
உமையா ளெனவோ திய பரா ஞரையார்
[பொருளா யுணர்வாளுள்
கமலா லயநா யகிபாதங் கடிமா மலர்தாய் நினைவாமே. (5)

---

5. பருதி - பகலவன். பருதியும் ஒளியும்போல் நீங்காமல். சுத்த + உபாதானம் - சுத்தோபாதானம்; உபாதானம் - முதற்காரணம். இலயமாதல் - ஒன்றித்தல். இரு பயன் - இருமைக்குரிய பயன்.

6. ஆகம் - உடல். தூய் - தூவி.

வாதாவி விநாயகர்

7. தாதாவெமை யாளென வானவர்
தாமேதீனை நாடொறு நாடலுமே
மேதாவிய தாமிடை யூறுகள்
வேருயிட வேயருள் வேதகனர்
ஆதாரமு மானவ னுருயி
ராசாணவ மாறிட வேயருள்
வாதாவிவி நாயக னீரடி
வாசார்மலர் போலணி வாமரோ. (6)

வேறு

8. ஓதா துணர்வா ருரையாவையு
மோமா தியவா சகமூலமும்
நாதா தியுநா தவதீதமு
ஞானே தயமா கவுநாடிடுவாம்
மாதா வுமையா ளிமையோரொடு
மாரு னவர்மா ளமுனளருள்
வேதா கமபோ தகதேசிகனே
வேலாயுத னீரடி பாடிடுவாம். (7)

வேறு

நந்தீகேசுரர்

9. அந்திவெண் பிறையுஞ் சூடு மரனது கணத்துநாதன்
நந்தீகே சுரன்பொற் பாத நாண்மலர் தூவி வாழ்த்திச்
சிந்தனை செய்து வாய்த லிருபுடை செறிந்து நிற்கும்
நந்திமா காளர் தாள்வெள் விடையடி பணிவாம் நாமே. (8)

---

7. தாதா - கொடையாளனே. ஆருயிர் ஆசு ஆணவம் மாறிட, எனப் பிரிக்க. வாசார் மலர் - மணம் மிகுந்த மலர்.

8. ஓதாது உணர்வார் - பிறரிடம் பாடங் கேட்காமலே அறிவார். ஓம் ஆதிய வாசக மூலம். நாதவதீதம் - நாதத்தைக் கடந்தது. நாடுவாம்; முற்றெச்சம். முன்னாள் உமையாள் அருளினுள் என்க. அவள் அருளியது சக்திவேலாகும். மாருனவர் - பகைவர். தேசிகனே வேலாயுதன் என்க.

9. வாய்தல் - வாயில். மாகாளர், இங்குத் துவாரபாலரைக் குறித்தது. விடை - இடபம்.

சண்டேசுர நாயனார்

10. கூப்பியே மலைலி யீசன் றனைக்குறித் ததனி னன்பால்
ஆப்பொழி பாலி யாட்ட வனிட்டனுந் தாதை தாளைத்
தீப்பெரு மழுவால் வீசிச் சிவனருள் பெற்ற தண்டி
பூப்புரை பாதந் தன்னைப் புந்தியுட் சிந்தை செய்வாம். (9)

சனற்குமாரன் முதலிய முனிவர்கள்

11. தாங்குவம் சனற்கு மாரன் தாளெம துள்ளந் தன்னில்
பாங்குறப் பணிவாம் வேத வியாதனற் பாதப் போதும்
ஓங்கிய புகழான் சூத னெளிரடி யுளத்துள் வைப்பாம்
ஆங்கவ னருளைப்பெற்ற ரடிமுடி யணுகு வாமே. (10)

காரைக்கா லம்மையார்

12. உயிர்க்குயி ராகி நிற்கு மொருபர னருளினாலே
மயக்கறத் தோன்றி யோதா துணர்ந்தவள் வாழ்க்கை
[யெல்லாம்
நயக்கவே யாலங் காட்டு ணம்பன தாடல் கண்டே
துயக்கறப் பதிகஞ் சொன்ன வம்மைதாள் பணிவாஞ்
[சூழ்ந்தே. (11)

திருஞானசம்பந்தர்

13. இரண்டரை யாண்டு வீச னின்னருள் பெற்று வென்றே
திரண்டெதிர் குண்டர் தம்மைத் தென்னவன் கூனுந்
[தீர்த்துத்

---

10. ஆ பொழி பால் - பசு பொழிந்த பால். தண்டி - சண்டேசுவரர். இவர் வரலாற்றைப் பெரிய புராணத்துட் காண்க.

11. சனற்குமாரன், வியாசன், சூதன் - இவர்கள் உலகில் புராணம் பரப்பிய முனிவர்கள்.

12. ஆலங்காடு - திருவாலங்காடு; சென்னைக்கு அருகிலுள்ளது. துயக்கு - மயக்கு. அம்மை - காரைக்கால் அம்மையார். இவர் வரலாற்றைப் பெரிய புராணத்திற் காண்க.

13. இரண்டரையாண்டு; மூவாண்டென்பர் சேக்கிழார். குண்டர் - இழிந்தோர். தென்னவன் - பாண்டியன். என்பு தேமொழியாகப் பாடியது, திருமயிலாப்பூரில்; பூம்பாவையை உயிர்ப்

தெருண்டுய யாரு மென்பு தேமொழி யாகப் பாடி
மருண்டவெம் மனமு மாற்று மறையவ னடியுள்
[வைப்பாம். (12)

திருநாவுக்கரசர்

14. அணிவய லதிகை யீச னருளினிற் பதிகம் பாடிப்
பிணிவயின் பிரித்து நாவுக் கரையனே யெனும்பேர்
[பெற்றுன்
திணியவண் கதவம் வேத வனந்தனிற் றிறந்தான்.....
.....யதுதன்னுற் பாங்கா லவனடி பணிகு வாமே. (13)

சுந்தரர்

15. முன்னமே முதலி தின்ற பாலினை முளைப்பித் தானைப்
பன்னிய பாட லாலே பரவைபாற் றூது செல்கென்
றென்னுளு மிருப்பான் றன்னை யேவினன்
[றனைவெள் ளானை
தன்னையூர்ந் தமலன் முள்சேர் சுந்தரன் துணைத்தாள்
[சார்வாம். (14)

திருவாதவூரர்

16. பாண்டியற் கமைச்ச ஞகிப் பரிகொள வென்று வாங்கி
வேண்டிய தனந்தா னுக்கி விமலனுக் காலயத்தை

பித்ததைக் குறித்தது. மறையவன் - திருஞானசம்பந்தரான அந்தணர்.

14. அதிகை - திருவதிகை. பிணி - சூலநோய். வேதவனம் - வேதாரணியம்.

15. முதலிதின்ற பாலினை முளைப்பித்தான் - முதலை யுண்ட பாலனை யுயிர்ப்பித்தவனை. பரவை - பரவை நாச்சியார். இருப்பான் - சிவபெருமான்.

12, 13, 14, 15 செய்யுள்களிலுள்ள வரலாறுகளைப் பெரிய புராணத்துட் காண்க.

16. திருவாதவூரர் - மாணிக்கவாசகர். பரி - குதிரை. விமலன் - சிவபெருமான். ஆண்டு - அங்கு ; திருப்பெருந்துறையில்.

ஆண்டவ னெக்க லாலே யவித்தையற் றவன தைந்து
தாண்டவங் கண்ட வாத வூரனைப் பணிவாந் தாளின். (15)

ஐவகைக்கூத்து

17. பருதிதன் ஒளிபோற் றன்பாற் பற்றியே யுறுமை ஞதி
நிருமலை யாலே யாக்கி ....ததி யேநிலை நீரெல்லாம்
பிரிவுறச் செய்தே யானென் பிழைபுரி வித்தா விக்குத்
திரிமலந் தீர .....சிவன்றிருக் கூத்தாளும். (16)

18. ஐவிதக் கூத்தன் முளுக் கன்புபட் டகத்து ளீங்காத்
தையலைக் கொடுத்து நீறு தரித்தசை வனுக்குத் தான்றன்
பைதலை வதைத்தட் டன்னம் படைத்து மூண்மி.....
[றை யீந்தும்
இவ்வகை மாறுஞ் செய்தா ரிணையடி யிறைஞ்சு வாமே.

மெய்கண்டதேவர்

19. வெண்ணெய்மா நகருட் டோன்றி வித்தக
[முனிமெய்ஞ் ஞானக்
கண்ணிறை களங்கந் தீர்த்துட் கமலமெய் கண்ட தேவன்
பண்ணுறப் பரசு பாணி பகர்ந்தவா ரியத்தி னத்தம்
எண்ணிவண் டமிழாற் றந்தான் அவனடி யிறைஞ்சு
[வாமே. (18)

அவித்தை - அஞ்ஞானம். ஐந்து தாண்டவம் - பஞ்ச (கிருத்திய) நடனம்.

17. பரிதி தன் ஒளி போல் - சூரியனைவிட்டு நீங்காத ஒளி போல். அனாதி நிருமலை - ஆதி முடிவில்லாத தூய பராசக்தி. ஆவி - உயிர். திரிமலம் - ஆணவம், கன்மம், மாயை. இப்பாடல் திருத்தமுறின் நன்கு பொருள் காணலாகும்.

18. தையல் - இயற்பகை நாயனரின் மனைவி. பைதல் - சிறுத்தொண்ட நாயனரின் மகன்; சீராளன். பைதல் - சிறுவன். மாறு செய்தல் - உலகியற்கு முரண்படச் செய்தல்.

19. பரசுபாணி - சிவபிரான். ஆரியத்தின் அர்த்தம் - வட மொழியிலுள்ள வேதத்தின் பொருளை.

சிவனடியார்கள்

20. சிவனது முகத்திற் றோன்றிச் சிவாகம மனைத்து மோதிச்
சிவனுயிர்க் குயிராய் நிற்குஞ் சின்மய னென்றுந் தேறிச்
சிவனுரை விதியிற் செய்து பஞ்சசுத் தியுமுப் போதும்
சிவனடி பூசை செய்யுஞ் சைவர்தாள் சிந்தை செய்வாம்.

முசுகுந்தன்

21. மூந்திய மனுகு லத்தோன் முரணுறு முசுகுந் தன்சென்
றந்தரத் தமரர் போற்ற வலனைமாய்த் தமரர் கோன்பால்
கந்தனு முமையு நீங்காக் கடவுளைக் கைக்கொண் டாரூர்
வந்துதா பித்தான் பாதம் வணங்கியே வாழ்த்து வாமே.

சிவமுனிவர்

22. இப்பொழு தெவரே யேனு மீசனுண் டுளதென் றெண்ணி
முப்பொழு தினுநீர் மூழ்கி முறையுறப் புரிந்து பூசை
எப்பொழு தினுந்தம் வாக்கி னெழுதிவைத் தெழுத்தோ
[ரைந்தும்
திப்பியன் சிவன்றுள் சிந்திப் பவரடி சிந்தை செய்வாம்.

வாழ்த்து

23. அந்தணர் வாழ்க வானத் தமரரும் வாழ்க வாழ்வு
மந்திர நவிற்றுஞ் சைவ மாதவர் தாமும் வாழ்க

---

20. பஞ்சசுத்தி - பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி. "ஐவகைச் சுத்தியு மமைத்து"— அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், சப்பாணிப் பருவம், பாட்டு 3.

21. முரண் - வலிமை. வலன் - ஓர் அசுரன். கந்தனும் உமையும் நீங்காக் கடவுள் - ஸோமாஸ்கந்தமூர்த்தி. தாபித்தல் - நிறுவுதல்.

22. உண்டு உளது - நித்யமாய் உளது. தம் வாக்கின் எழுதிவைத்து என்றமையால், ஐந்தெழுத்து வாக்கோடு என்றும் இயைந்து நிற்கும் தன்மை கூறப்பெற்றது. திப்பியன் - திவ்யன்; தேஜோமயன்.

23. அரையர் ஓங்க - மன்னர்கள் சிறப்படைய. ஓங்க - அகரவீற்று வியங்கோள்.

தந்தையுந் தாயுமென்னத் தரணிதாங் கரைய ரோங்க
முந்தியே திங்க டோறும் பொழிகமும் மாரி யெங்கும்.

24. ஆரியங் கற்று முற்று மறிவுடை யாளர் வாழ்க
ஆரியந் தெரிந்துஞ் சாரு மருந்தமி ழாய்வார் வாழ்க
ஆரியந் தமிழா ராயு மதிமதி நிபுணர் வாழ்க
ஆரியந் தமிழா ராய்வார்க் கணுக்கரும் வாழ்க அன்பால்.

25. அந்தணர் தமக்கு மற்றை யருந்தவர் தமக்கு நோயால்
நொந்தவர் தமக்கு நோக்க மிழந்தவர் தமக்கு முச்சி
வந்தவ ரெவர்க்குந் தம்பா லுள்ளது வஞ்சியாதார்
தந்தம ரோடும் வாழ்க தருமமே தழைக வெங்கும். (24)

வேறு

காலம்

26. ஆண்டுகலி யுகத்துநா னூற்றுமுப் பத்தி
ராயி ரத்துள்
ஈண்டியநா லாயிரமு மறுநூறு மெண்ணேந்து
மேழுஞ் செல்லப்
பூண்டபரா பவவாண்டின் மகரத்திற் புதத்திரயோ
தசிப்பூர் வத்திற்
காண்டருதிங் களின்மாலின் மயேந்திரத்திற் கவுலவமென்
கரணந் தன்னில், (25)

---

24. அணுக்கர் - தொண்டர்.

25. நோக்கம் - பார்வை. உச்சி - உச்சி வேளையில்.

26. கலியுகத்துள் நாலாயிரத்து அறுநூற்று நாற்பத்து ஏழாவது ஆண்டு. எனவே இற்றைக்கு நானூற்றுப்பதினேந்து ஆண்டுகட்கு முன் என்க. பராபவ ஆண்டு மாசி மாதம் வளர்பிறை திரயோதசி திதி திங்கட்கிழமை மிருகசிரிட நாளில் இந்நூல் பாடப்பெற்றது என்க. மயேந்திரம், யோகம். கவுலவம், கரணம்.

இடம்

27. பொருவரிய திருவாரூர்ப் புற்றிடங்கொண் டருண்மூலட்
டான னென்னும்
பரமசிவன் பாங்கான சன்னிதிக்கு வாமதல
பாகந் தன்னில்
திரமுறுதே வாசிரிய மண்டபத்துப் பரமசிவன்
வாக்கைத் தேர்ந்து
தருமமுதல் நெறியுணர்த்துஞ் சைவரும்வை திகருமுறுஞ்
சங்கந் தன்னில், (26)

வழி

28. அருமறைக ளொருநான்கு மாகமங்க ளெழுநான்கு
மங்க மாறுஞ்
தெரியவர வாராய்ந்து பரமான தெய்வமெனத்
தெளிந்து சைவர்
பொருவரிய சிவனூர்ப் புற்றிடங்கொண் டருள்புரிந்த
புகழா மெல்லாம்
உரைசெயுமா ரியத்தினது பொருட்டமிழா
றுரைக்கச் சொல்வாம். [லுணர்த்துகவென்

வேறு

29. பெருந்துணை யனுதி முத்த னுயிர்க்கபே தனுமென்
[றுய்ந்தார்
பரிந்துபார்த் திடமெய்ஞ் ஞானம் பத்தர்பா
[லுறும்போம் பாசம்
அருந்தமிழ் திருந்த வாய்ந்த வறிவுடை யார்க ணேக்கால்
திருந்துமே யிந்த நூலுஞ் சொற்பழு தணைத்துந் தீர்ந்தே.

---

27. வாமதல பாகம் - இடப்பக்கத்தில். தேவாசிரிய மண்ட பம் - தேவர்களும் சிவனடியார்களும் வந்து கூடும் மண்டபம்; ஆரூர்க் கோயிலில் உள்ளது. இதனில் நூல் எழுதிய இடம் கூறப்பெற்றது.

29. அபேதன் - வேற்றுமையற்றவன். ஞானம் உறும் - பாசம் போம் என்க.

30. அந்தணர் குலத்து வந்த வரிவையர் தாமு மூய்யத்
தந்தொழின் முறையி னிற்குஞ் சூத்திரர் தாமு மூய்ய
மூந்தியே கயிலா யத்தி னறமுதன் மொழிய வீசன்
நந்திகே சுரற்கன் பாலே நாடியே வவற நான்குள், (29)

31. உரைத்தனர் சனற்கு மார ரெனுமுனிக் கவரு மோர்ந்தே
விரித்தனர் வியாதர்க் கந்த விரிவவர் விளங்க வாய்ந்தே
சுருக்கிமூ வாறு பேத முறைசொலச் சூதற் கன்பால்
.....வாற வற்றைப் பாரிற் பகர்ந்தனர் முனிவர் தம்பால்.

32. தேர்ந்துகொய் துரைப்பாங் காந்த மெனுஞ்சிவ புராணந்
[தன்னுள்
ஆர்ந்தவை தனின ஞதி முத்தனீ டாரூர் மேன்மை
தீர்ந்தது நாளிப் போதே செகுப்பவன் கூற்றைச் செற்றுச்
சார்ந்தவந் தணனைக் காத்த சங்கரன் கருணை தன்னில்,

வேறு

நூலின் பெயர்

33. ஓட்டிக் கதிரவன் காரிரு ளுவந்தனை வீக்குங்(?)
காட்டு மதுபோலக் கரிசினை நீக்கிடுங் கதியைத்
தேட்டுற் றவர்துயக் கந்தனைத் தீர்த்த சிவனருளைக்
காட்டுங் கையிது வேயிது கமலா லயச் சிறப்பே. (32)

---

30. அவறம் - அவ்வறம்; அற முதலிய நான்காம். வேதம் எனவுமாம்.

31. மூவாறு பேத முறை - பதினெண் புராணங்கள். நந்தி, சனற்குமாரர், வியாதர், சூதர் என்பது புராண வரலாற்று முறை.

32. கூற்று - இயமன். அந்தணன் - மார்க்கண்டன். காந்தத்தில், மார்க்கண்டேயன் வரலாறு கூறும் பகுதியில் ஆரூர்ச்சிறப்பு கூறப்பெற்றது என்கின்றார்.

33. கரிசு - குற்றம், தேட்டுற்றவர் - தேடலுற்றவர். இது சிவனருளைக் காட்டும் கை ஏன்க, இப்பாடல் திருந்த வேண்டியிருக்கிறது.

34. தேசார்ந் துறுங்கம லாலயச் சிறப்பான விச்செய்யுள்
ஈச ரனின் னருளாற் சிவனேசற் குறவென்று
....
.... (33)

வேறு

பதிகம்

35. இந்தநூ லுள்ளே காண்க மாயனு மிமையோர் கோனுஞ்
செந்தழ லோம்பி வேள்வி செய்பொழு துதித்த வில்லை
முந்திமால் பற்றி மோகித் திழுத்தலு மூர்த்தாத் தன்னைச்
சிந்தனைக் கரியான் புற்றிற் றிகழ்ந்துசொம் பித்த வாறும்,

36. தேங்கம லத்து வாழும் திருமக ணீரி னலும்
பாங்குற வலரி னலும் பரமனைப் பூசை பண்ணி
ஓங்கிய புகழான் மாய னுகந்தனைப் பாரி யாகத்
தாங்கிடும் வரமெ னக்குத் தருகெனச் சமைத்த வாறும்,

37. தாணுவைச் சமற்கா ரன்ரு னழைத்தருச் சித்த வாறும்
வாணிகன் மன்ன னுக வரம்பர னளித்த வாறும்
சேணுவார் மணினு ளாருந் திகழ்சிவ லிங்கந் தாபித்
தேணுறும் விதியாற் பூசை செயச்சிவன் தங்கு மாறும்,

38. புத்திரன் றன்னை வேண்டிப் பூசனை புரிந்தான் மாயன்
வித்தக னரனை யந்த விக்கிர கத்தை விண்ணின்
வைத்துமா லருளாற் பூசை வாசவன் புரிந்த பின்னை
இத்தலத் தரையன் முபித் திறையுல கேய்ந்த வாறும்,

---

34. ஈசானன் - சிவபிரானுக்குரிய பெயர்களுள் ஒன்று.

35–42 செய்யுட்களில் இப்புராணப்பொருள் கூறப்பெறுகிறது.

35. மூர்த்தா - தலை. சொம்பித்தவாறு - ஸ்வம்பு மூர்த்தியான வரலாறு.

36. கமலத்து வாழும் திருமகள் - கமலாம்பிகை.

37. தாணு - சிவபிரான். சமற்காரன் - ஓர் அரசன்.

39. கோகனர் புரிந்த பூசை கொண்டருள் செய்த வாறும்,
போகவுட் டபனம் சித்தன் புதல்வனைப் பெற்ற வாறும்,
மோகமுங் குலிசன் றீர்ந்து முனிப்பினைப் பற்ற வாறும்
மூகனை சூரைச் சூழ்ந்து முடிமன்ன னென வாறும், (38)

40. மண்ணுறு மனிதர் தம்மை வானவ ராக்கி மன்னும்
விண்ணுற விருத்துந் தேவ தீர்த்தமும் விரும்பி மூழ்கப்
பண்ணுறப் பனுவல் பாடும் பாரதி தீர்த்தந் தானும்
கண்ணுத லுலகங் காட்டுங் கயாசுரக் கயத்து நீரும், (39)

41. நற்பய னிட்டை யென்றே நவின்றிடுந் தீர்த்தந் தானும்,
அற்புதப் பொய்கை மூன்றுங் கவுசிக னகத் தானம்
உற்றலான் மூழ்கு நீரும் மூன்றரைக் கோடி தீர்த்தம்
பற்றிடும் பாங்குஞ் சமமிச் சிரமுதற் பார நீரும், (40)

42. திரம்பெறு வலியினை தசரதன் சேர்ந்திங் கேதான்
புரிந்தருந் தவங்க டன்னைப் புதல்வனைப் பெற்ற வாறும்,
விரிஞ்சனும் விரைந்து வந்து வேள்வியை விலக்க வாறும்
மருந்தவா ருச்சித் தீசன் ..... படைந் தமையுஞ்
[சொல்வாம். (41)

பாயிரச் சருக்கம் முற்றும்.

---

41. ஆகம் - உடல்.

2. மண்டலவளச் சருக்கம்

நாட்டுச் சிறப்பு

43. ஏய்ந்த ஞானமி லாரு மாய்ந்தக
மைத்தரற் கிணை யாகவே
வாய்ந்த காசியி னேர்த லங்களுங்
கங்கை மாசுடன் மாறவே
தோய்ந்த பொன்னியுஞ் சுந்த ரத்துமை
யானு ருப்பிரி தோயமும்
வாய்ந்து மல்கிய சோழ தேச
வளத்தி னைப்பகர் வாமரோ. *(1)*

காவிரியின் மேன்மை

44. வைய முய்ய வருந்த போகிதி
வாரி யுண்ட வகத்தியன்
கையி லங்கு கமண்ட லத்தினுள்
வந்த காவிரி காணுநர்

குறிப்பு : இஃது, இப் புராணத்தின் நாட்டுச்சருக்கம் ஆகும்.

43. மாய்ந்த கணத்து அரற்கு இணையாகவே வாய்ந்த காசி - 'காசியில் மரிக்க முக்தி' என்ற கொள்கையைப் பின் பற்றிக் கூறியது. கங்கை மாசு - ஆரும் வேற்றுமை. உடன் - உடனே ; ஒருமிக்க எனலும் ஆம். தோய்ந்த உடன் என இயைக்க. பொன்னி - காவிரி. சுந்தரத்துமையானுருப்பிரி தோயம் - கங்கை ; தேவ தீர்த்தம் முதலிய தீர்த்தங்களைக் குறித்தது என்னலாம்.

44. தபோநிதி - தவச் செல்வன். வீட்டுதல் - அழித்தல். சையமால்வரை - காவிரி உற்பத்தியாகும் மலை, ஆட்டுமவர்க்கு - ஆடும் அவர்க்கு ; வலித்தல். காண்பவர் தீவினை விட்டும் ; ஆடுமவர்க்கு நன்மை விளைக்கும் என்க.

வெய்ய தீவினை வீட்டியாட்டு
மவர்க்கு நன்மை விளக்கவே
சைய மால்வரை யுற்று வந்துத
லத்து வர்க்கடல் சாருமே. (2)

வயல் வளம்

45. சந்து காரகில் பீலி சாமரை
சாதி தேறில வங்கமும்
முந்தி யேயிரு பாலு முற்றிட
வோடி நீடிய வாய்த்தலை
சிந்தி யேதிசை தோறு முற்று
விளைத்து விளைந்துறு செந்நெலும்
இந்த மாநில முற்று முண்டுய
நெல்வி தங்களு மீயுமே. (3)

பொழில் வளம்

46. தெங்கு பூக மரா விருப்பை
.....தபாதிரி செண்பகம்
துங்க சான்மலி வண்ப லாநல
சூத நீடிய வார்பொழில்
விங்க வேயிரு பாலு மாமறை
வல்ல வேதியர் வந்துறும்
சங்க மெங்கணு மெங்க ணுமூளர்
சைவ மாதவர் தாமுமே. (4)

---

45. சந்து - சந்தனம். வாய்த்தலை - வாய்க்கால் தலை. உண்டு உய எனப் பிரிக்க; உய - உய்ய; பிழைக்க.

46. பூகம் - பாக்கு மரம். மரா - ஒரு மரம். சான்மலி - ஒரு மரம். சூதம் - மா. விங்க - வீங்க; குறுக்கல். சங்கம் - கூட்டம்; சபை.

47. வாழை யெங்கணு மல்க மந்திக
ஞண்டு தாக்கினி வைகிடும்
வேழ மெங்கணு மலங்க வாலியின்
வெம்பு கைத்திரள் விண்ணு றும்
மாழை யொண்களி கன்ன வின்னிசை
மல்கு மள்ள வயிற்றெ றும்
நீழன் மேதிகள் வைகு மன்ன
நிரந்த பொய்கையி னீங்கியே, (5)

வயல் வளம்

48. வண்டு வார்குழ லாரு ழத்தியர்
மானு மெங்கணி னெடெனு
மண்டு நீர்வயற் செந்நெ லிற்கழு
நீர்க ளைந்திட வாடிடும்
தண்ட மிழ்ப்புல வோர்க டாமவர்
வாண்மு கத்தினைச் சாத்திடும்
புண்ட ரீகமும் வாடு மேயவர்
சூல வேயவை போலவே. (6)

விழாக்கள் முதலியன

49. மாட மாளிகை நீடு சூளிகை
மண்ட பம்முயர் கோபுரம்
நீடு மாலைய முற்று மூர்தொறு
நித்த லும்முற நல்விழாக்

---

47. தாக்கினி வைகிடும் - எஞ்சியதை ஒன்றன்மேலொன்று தாக்கி விளையாடித் தங்கிடும். வேழம் - கரும்பு. மலங்குதல் - அழிதல். வெம - வேகும் என்பதன் திரிபு. மாழை - மான்போன்ற பெண்டிர்.

48. எம் கண்ணினெடு மானும் என்று உழத்தியர், கழுநீர் களைந்திட அவை வாடும்; அவர்கள் புண்டரீகத்தினை அவர் (உழத்தியர்) வாண் முகத்தொடு சாத்திடுதலால், அவற்றையும் சூல, அவையும் வாடும் என்க. சாத்துதல் - (ஒப்பிட்டுக்) கூறுதல். சூல - பறிக்க.

49. சூளிகை - நிலாமுற்றம். ஆலயம் - ஆலயம். கோல - வளைய. நுதல் - நெற்றி.

கூடி டும்முலை வாடி டும்மிடை
கோல வாண்மதி போ னுதல்
ஊடி டும்விழி மாதர் பாட லு
மாட லுஞ்செயு மோசையே. (7)

நகர ஒலிகள்

50. சங்கு பேரிகை காக ளங்கிளை
தக்கை யாழ்துடி தாளமும்
துங்க மாமலை வாய்த ரூறுமு
முங்க வீதிக டோறுமே
பொங்கு மாமத யானை தேரொடு
போத ரப்புவி மன்னரும்
தங்கு மோசையு மண்ட கோளகை
மண்டி யெண்டிசை சாருமே. (8)

அன்னதானம்

51. பந்த பாச மறுக்கு மீசர்
பணிக்கு மந்தணர் வந்துறும்
சந்தி சாலை சமைக்க வுந்தன
மீந்து கந்திர வாதுதாம்
அந்த ணர்க்கு மருந்த வர்க்கு
மலந்த வர்க்கும னுதராய்
வந்த வர்க்கு மருந்த வாரண
முண்டு வாழ்பதி தோறுமே. (9)

---

50. காகளம், கிளை, தக்கை - வாத்திய வகைகள். வாய்தல் - வாயில். போதர - போக.

51. ஈசர் பணிக்கு - சிவ பூஜைக்கு. சமைக்கவும் - அமைக்கவும். தனம் ஈந்து உகந்து, தாம் இரவாது, எனப் பிரிக்க. அலந்தவர் - துன்புற்றவர். அனுதராய் - ஆதரவற்றவராய். அருந்த - உண்ண. ஆரணம் - ஆர் + அன்னம் - உண்ணும் சோறு; நிறைந்த சோறு என்றும் பொருள் கொள்க. அனம் - இடைக்குறை.

பிறர் செயல்களில் தலையிடாது தம்வழியே செல்லல்

52. மன்ன வன்புதல் வன்கு ணங்குண
மற்ற தும்மதி யாதுதாம்
உன்ன தம்பக ராது தாழ்ச்சி
யுரைத்தொ டுங்கிவ ணங்குவார்
மண்ணு ளாரம லேசன் நீறணி
வார்கு ணங்குணை மற்றதும்
எண்ணி டாமலி மண்ட லத்தினர்
பூசை பண்ணுவ ரென்றுமே. (10)

இல்லறத்தார் தன்மை

53. உச்சி யிற்பசி யுற்றி ழிந்தவ
ருற்ற போது முகந்துதாம்
கச்சி டாதுக சிந்த ருத்தவர்
காத லாலன மாமுகில்
பொய்ச்ச போதினும் பொய்ச்சி டாது
பொழிந்த போதென வாழ்வினில்
இச்சை யற்றவர் தாமு மில்லற
நல்ல றம்மென வெண்ணவே. (11)

---

52. இ மண்டலத்தினர் - சோழ நாட்டினர். உன்னதம் பகர்தல் - உயர்வு கூறுதல். அமலேசன் - சிவபிரான். நீறு - திரு நீறு. அடியார் வேடத்தின் பெருமை கூறப்பெற்றது. உலகத் தினர், குணகுணங்களைக் கருதாமல் அரசன் புதல்வனை வணங்கு வதுபோல, இம்மண்டலத்தினர் நீறணிந்தவரை வணங்குவர் என்க.

53. உச்சி - உச்சிப்போது. இழிந்தவர் - வறியர்; சாதியில் தாழ்ந்தவரும் ஆம். கச்சு - கைத்து என்பதன் போலி. காத லால் அனம் அருத்து அவர் என இயைக்க. பொய்ச்ச, பொய்த்த என்பதன் போலி.

பெண்டிர் தன்மை

54. மன்னு மாமறை நீதி யின்முறை
வாய்த்த காந்தன லார்தமை
அன்னை தன்வயி னுற்று டன்பிறந்
தாரு மன்புறு மைந்தரும்
தன்னி னும்பரி வுற்று முற்றவ
ளர்த்தெ டுத்திடு தாதையும்
என்ன வெண்ணிய கப்பு றுங்குல
மாத ராருள ரிற்ரெறும். (12)

நாட்டின் ஒதைகள்

55. இந்து வின்னிகர் வாண்மு கத்தினை
யார்கள் சூளிகை யேறியே
பந்தெ றிந்துக முங்க மானை
பயின்று பாடிடு மோசையும்
மந்தி ரம்பயி லந்த ணாளரு
மோது மாமறை நாதமும்
அந்த ரத்தினு முற்று வானவ
ருக்கு மோதை யளிக்குமே. (13)

வேறு

(மடக்கு)

56. மாத ராரவர் சூடுவர் மாலையே
வாய்ந்த காந்தற்குச் செய்வது மாலையே
காத லாலவர் பூண்பது முத்தமே
கடலு தித்தவ மிர்தவர் முத்தமே

---

54. காந்தன் - கணவன். கணவனல்லாரான ஆடவரை உடன்பிறந்தாராகவும், மக்களாகவும், பெற்ரோராகவும் கருதும் இயல்புடையர். இல் தொறும் எனப் பிரிக்க. அகப்பு - ஆழம்: உள்ளத்தின் ஆழம்.

55. இந்து - சந்திரன். கழங்கு அம்மானை எனப் பிரிக்க. அந்தரம் - வானம்.

56. மாலை - பூமாலை; காதன்மயக்கம். முத்தம் - முத்து; வாய் முத்தம். சாயலுக்கு மயில் ஒக்கும்; நிறத்துக்குத் தளிர்

சாதி மாமயில் சாயலுக் கொக்குமே
தகுநி றத்தினைத் தண்டளிர்க் கொக்குமே
பாதி வெண்பிறை வாணுதற் கொப்பதே
பரிப்ப தும்மவர் காதெழிற் கொப்பதே. (14)

57. வெறிம லர்க்குழ லுக்கிணை மேகமே
மேனி யும்மிள வேனிலு மேகமே
முறுவ லுக்கிணை யாவது முல்லையே
முயக்கி யத்துணை யாவது முல்லையே
மறும திக்குறத் தேதலை வைப்பதே
வாண்மு கம்மது காந்தற்கு வைப்பதே
இறுமி டைக்கிணை யாவது வஞ்சியே
யிகழ்வர் பூணிடை நொய்தென வஞ்சியே. (15)

58. கிளவி யாலவர் சொற்பயில் கிள்ளையே
கிறியி லாமுறு வல்லவர்க் கிள்ளையே
களவு முண்டவர் தங்கடைக் கண்ணிலே
காத லுணுவ ருள்ளவர் கண்ணிலே

ஒக்கும். தளிர்க் கொக்கு - மாந்துளிர்; கொக்கு - மாமரம். காது எழில் கொப்பு; கொப்பு - ஒருவகைக் காதணி.

57. வெறி - மணம். குழல் - கூந்தல். மேகம் குழலுக்கு இணை. மேனியும் இளவேனிலும் ஏகமே என்க. முறுவல் - பல்; முறுவலுக்கு முல்லை. இரண்டாவது முல்லை-முலை; விரித்தல். காந்தற்கு வைப்பதான வாள்முகம் அது, மறு(வுள்ள) மதிக்கு உற தேய்தலை வைப்பது என இயைக்க. காந்தன் - கணவன். வாள் - ஒளி. தேதல் - தேய்தல் என்பதன் விகாரம். பூரண சந்திரனை விளங்கும் பெண்களின் முகத்தைக் கண்டு, இயற்கையிலேயே மறுவுள்ள மதி தேய்தலுற்றது என்க; தற்குறிப்பேற்றம். வஞ்சி - வஞ்சிக்கொடி. அஞ்சி - பயந்து.

58. கிறி - பொய்; தந்திரம்; மாயம். இள்ளை, இல்லை என்பதன் விகாரம்; இது பிராசம் நோக்கியது. களவு - வஞ்சம். அவர் கண்ணிலே - அவர் கருதினால். காதல் நாணுவர் - காதல் கொண்டமைக்கு நாணுவர். ஒப்பு: 'பூணுக் கழகளிக்கும் பொற்

முளரி தானவர் வாண்முக மானுமே
முகவி ழிக்கிணை யாவது மானுமே
தளரு நுண்ணிடை கொங்கை தழைக்கவே
தழைப்பர் காந்தன் தலிவந் தழைக்கவே. (16)

59. அவர்நடைக் கிணை யாகுவ தன்னமே
யாது லர்க்கவ ரீவது மன்னமே
உவரி தானவ ரல்குலுக் கொத்ததே
யொளிது ளங்கு நவமணிக் கொத்ததே
இவரு மேயவர் காதுக் கிசையவே
யிருக்கு நாவுற வேழின் னிசையவே
புவனி தானவர் தம்பொறைக் கொப்பதே
புதிய முத்த மவரிழைக் கொப்பதே. (17)

வேறு

நாட்டில் இல்லாதன

60. ஏங்குத லவர்தங் கையி னவகிளைக் கன்றி யில்லை
வாங்குத ருனுமந்த மனையினுக் கல்ல தில்லை
பூங்குழ லளியி னுக்கும் பொழிலுறு புள்ளி னுக்கும்
தேங்குநீ ரினுக்கு மன்றிச் சிறையிலைத் தேரும் காலே.

ருடியைக் கண்டக்கால், நானுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர்' (நள. 148). முளரிதான் அவர் முகம் எனப் பிரிக்க. மானும் - ஒக்கும். மான் விழிக்கு இணையாவது என இயைக்க. காந்தன் தனி வந்து அழைக்கவே தழைப்பர் என்க.

59. அன்னம் - முதலது பறவை, இரண்டாவது சோறு. உவரி - கடல். நவமணிக் கொத்து காதுக்கு இசைய இவரும் என இயைக்க. ஏழ் இன் இசை எனப் பிரிக்க. பொறைக்கு ஒப்பு அது என்றும், இழை கொப்பு என்றும் பிரிக்க.

60. ஏங்குதல் - இரங்குதல், ஒலித்தல். வாங்குதல் - வளைதல்; பண்டங்களை வாங்குதல். அளி - வண்டு. பொழில் உறு புள் - தோட்டங்களில் உள்ள பறவைகள். அளிக்கும் புள்ளிற்கும் சிறகுகளும், நீரினுக்கு அடைப்பும் உண்டு என்க.

61. சோரரு மவர்தம் மூர லன்றிமற் றில்லைத் தூதாம்
சாரரு மவர்க ணன்றி மற்றிலைச் சாற்றுங் காலை
ஓரமு முறுப்புக் கன்றி யுளத்திலை யுணருங் காலை
மாரனை யன்றி யஞ்சா தெதிர்பொர வல்லா ரில்லை. (19)

62. ஏந்திளங் கொங்கைக் கன்றி மனத்திலை யிரக்க மின்மை
ஆய்ந்தநூ லறிவுக் கில்லை வெண்மையான் பாலுக் கன்றி
ஏந்திய பொன்மை யைய மீதலுக் கல்லா லில்லை
காந்தவண் கல்லுக் கல்லாற் கரிடணங் கற்றோர்க்
[கில்லை. (20)

63. சேம்புசெங் கழுநீ ராதிக் கலதிலைப் பங்கந் தேனூர்
மாம்பொழி றவழும் வட்ட மதிக்கலான் மறுவு மில்லைத்
தேம்புத ருனு மந்தத் திங்களுக் கன்றி யில்லைக்
காம்பன தோளி னுர்கைக் கூளக்கலால் வாட்டங்
[காணும். (21)

---

61. மூரல் என்றதால் சோரர் என்பதற்குக் களவில் காத லிக்கும் காதலர் என்பது பொருளாகும்; மூரலே சோரரும் ஆம் எனலும் ஆம். அவரையன்றிக் கள்வரும் அவர் ஊர்ந்து செல் வதும் அங்கில்லை என்றபடி. சாரர் - சாரணர். கண் - கண்ணென் னும் உறுப்பு. கண்ணே தூதாம்; பிற தூதுவர் சாரணர் இல்லை என்றபடி. ஓரம் - ஓரவஞ்சனை இல்லை என்றபடி. மாரன் - மன்மதன்.

62. வெண்மை - அறிவின்மை; வெண்மை நிறம். ஆன் பால் - பசுவின் பால். பசுவின் பாலே வெண்மையுடையது. பொன்மை - பசலை நிறம் உண்டாதல்; பொன்னுருக்தன்மை. கரிடணம்; கல்லுக்குச் சொல்லும்போது ஆகர்ஷணம்; இழுக்கும் சக்தி: கற்றோர்க்குச் சொல்லும்போது கரிஷணம்; இழிவு.

63. பங்கம் - சேறு; குறைவு. வட்ட மதி - பூரண மதி. மறு - களங்கம், குற்றம். காம்பு அன்ன தோளினர் - மூங்கில் போன்ற தோளையுடைய உழத்தியர். கைக்கூளை - கையாற் கூளையப் படும் கூளைகள் என்க. தேம்புதல் - வாடல்.

64. விருத்தமு மியலி னன்றி யுளத்தில விரதத்தன்றி
வருத்தமு மில்லை யிந்த மண்டல மனிதர்க் கென்றும்
மருத்துவன் குரவ னன்றி மற்றில்லை மருந்து தானும்
திருத்தகு நீறே சித்தத் திமிரமே தீரு நோயும். (22)

வேறு

65. கங்கை யாடிட வெண்ணி யேசிலர்
காத லால்விரைந் தேகுவார்
கொங்கு தண்கும ரித்து றைப்புன
லாடவே சிலர் கூடுவார்
எங்க ணையக லைவாயிர
மேசு ரந்தொழ வேகுவார்
திங்க டோய்திரு மன்ற முன்றொழ
வெண்ணி யேசிலர் செல்வரே. (23)

66. கன்னியும் மிது கோவியும் மிது
கங்கை யும்மிது வென்றெணி
பொன்னி மானதி யாடி யேபுரி
நூலர் தாம்புரி வோடுமே
என்னை யாளுடை யாளை யீசனை
யேத்தி வாழ்த்தி யிறைஞ்சியே
உன்னி யுன்னி வினைத்திறத்தினை
யோட்டு வாருள ரூர்தொறும். (24)

64. இயல் - இயற்றமிழ். விருத்தம் - ஒரு பாவினம்; முதுமை. குரவனன்றி மருத்துவன் இல்லை என்றியைக்க. நீறே மருந்து; அது நோயும் தீர்க்கும். சித்தத்திமிரம் - மனவிருள்.

65. ஆலவாய் - மதுரை.

இவையெலாம் வேறு நாட்டிலுள்ளவர் செயல்கள்.

66. இவை சோழ நாட்டினர் செயல்கள். கோவியும்?

சிவஞானம் பெற்றவர் தன்மை

67. தத்து வம்மசி வாக்கி யத்தரி
தாய நுண்பொரு ளாய்ந்துதாஞ்
சித்த முஞ்சிவ மாக வேசிலை
தன்னி னும்புவி தன்னி னும்
மற்றை நீரி னும்வானி னும்வளி
தன்னி னும்மொளி தன்னி னும்
ஒத்த காட்சிய ராகி யேத்திடு
வாரு முண்டுய ரூர்தொறும். (25)

விடியுமுன் செய்ய வேண்டியவை

68. உதிக்கு முன்னிரு மூன்று நாழிகை
யென்ன வேயுணர்ந் தீசனுர்
பதத்தை யுன்னியி ருந்து தண்டினைப்
பற்றி யூர்ப்புறம் பற்றியே
விதித்த வெல்லையி னீர்ம லத்தினை
விட்டு நீரி னும் மண்ணி னும்
மதித்த லம்பரி சுத்த மாக்கிவி
தித்த நீரடைந் தாடியே. (26)

ஆலயத் தொண்டு

69. மெய்க்க ணிந்து விதித்தி றத்து
விளைத்த நீற்றினை யர்க்கியம்
அர்க்க னுக்கும ளித்தொ ளித்திட
வெல்ல வந்தவ ரக்கரும்

---

67. தத்துவமசி வாக்கியம் - சிவஞானம் பெற்றவர் வாய்க் கேட்டுணர்க. சிலை - கல்; விக்கிரகம்; மலையுமாம். ஐம்பூதங்களும் கூறப்பெற்றமை காண்க. ஐம்பூதங்களையும் ஒருங்கே காண்பது கூறப்பெற்றது.

68. இரு மூன்று - ஐந்து. உணர்தல் - தூங்கி விழித்தல். பதம் - பாதம். விதித்த எல்லை - நூல்களிற் குறித்த இடத்தில். மதித்தலம் - மூலாதாரம். ஆடுதல் - மூழ்குதல்.

69. மெய்க்கு அணிதல் - உடலுக்கு நீறு அணிதல். அர்க்கியம் அர்க்கனுக்கு அளித்து - சூரியனுக்கு அர்க்கியம் அளித்து;

நக்க ராலியம் புக்கி றைஞ்சின
சித்தி டாதுயர் நாடியே
தக்க வாறல கிட்டு மாமெழுக்
கிட்டு ளார்பலர் சைவரே. (27)

70. கந்த மாமலர் கொய்து மாலிகள்
கட்டி யேமிகு காதலால்
அந்த கன்றனக் கந்த கன்முடிக்
கேற்று வார்சில ராசையால்
வெந்த குங்குலி யத்து வெண்புகை
விம்ம வேவிடு வார்சிலர்
எந்தை யார்முனு மானெய் யால்விளக்
கேற்று வார்சில ரென்றுமே. (28)

அடியார் பித்தர் போன்ற செயலுடையர்

71. பாடு வார்சிலர் பண்ணு றப்பரி
வுற்று நெக்குநெக் குள்ளமும்
ஆடு வார்சிலர் சோர நீர்விழி
யாசை யாலல மந்துதாம்
தேடு வார்சிவ னெங்கு ளன்சிவ
னெங்கு ளானெனத் தேடியே
ஓடு வார்பிறர் பித்த ரோவிவ
ரென்று தம்மை யுரைக்கவே. (29)

இவ்வர்க்கிய பலனல் அவனே எதிர்க்க வந்த அரக்கர்கள் தோற்று ஒளிந்துகொள்வர் என்பது கொள்க. நக்கர் - சிவபெருமான். அசித்து - மலம். அலகிடுதல் - பெருக்குதல்.

70. அந்தகன் தனக்கு அந்தகன் - காலகாலன்; சிவபெருமான். விம்மல் - பெருக்கம். ஆன் நெய் - பசு நெய்.

71. பண் - இராகம். உள்ளம் நெக்கு நெக்கு - மனம் மிகமிக நெகிழ்ந்து. சோர்தல் - வழிதல். அலமந்து - வருந்தி.

உழவாரப் படைத் தொண்டு

72. பற்றி யேயுழ வார முங்கர
முற்றிடச் சிலர் பத்தியால்
வெற்றி வேளை யெரித்த வீசர்
விழாவு றுந்திரு வீதியில்
புற்ற னைச்சிறு பூண்டி னைப்புடை
யுற்ற செற்றையு மாற்றியே
குற்ற மற்றகு டத்து நீரையி
றைப்ப ரேகுளிர் கூரவே. (30)

அங்கப் பிரதக்ஷணம் புரிதல்

73. ஈச ருருயிர் நேச ருரிமை
யோரு மேத்தி யிறைஞ்சிடும்
தேச ருர்திரு வீதி யுற்றசி
றப்பு றப்பெறு வார்சிலர்
பாச மற்றிட வெண்ணி யேயடி
யிற்ப டுத்துட லத்தினை
வாச முற்றிய வீதி முற்றுமு
ருட்டு வார்வல மாகவே. (31)

உலகை எள்ளி, இறைவன் திருவடியைத் தியானித்தல்

74. சந்தி மூன்றினு மூழ்கி யேதவ
முவ ருச்சனை செய்துதாம்
இந்தி ராதியர் வாழ்வு தன்னையு
மெள்கி யேயிர வும்பகல்

---

72. உழவாரம் - புல் முதலிய செதுக்கும் ஒரு கைக் கருவி. கரம் - கை. வேளை எரித்த ஈசர் - மன்மதனை எரித்த சிவபிரான். பூண்டு - சிறு செடி. புடை - பக்கம். செற்றை - குப்பை.

73. தேசனர் - ஒளியுள்ளவர். உடலத்தினை - உடலை. வலமாக உடலை உருட்டுதல் - அங்கப் பிரதக்ஷணம் செய்தல்.

74. மூன்று சந்தி - காலை, உச்சி, மாலைச் சந்திகள். எள்குதல் - இகழ்தல். உற - மிக. இந்து சேகரர் - சந்திரசூடர்; சிவபெரு

மந்தி ரத்தினை நாவி னும்முற
வைத்து தித்தம னத்தி னும்
இந்து சேகரர் தாளி ருத்தி
யிருப்ப ரேசில ரென்பொடே. (32)

அறிவுடையார் உலகை வெறுத்து இறைவன் தாளடைதலையே இன்பமாகக் கொள்ளல்

75. புன்பு லாலுட லின்பு தானிது
புற்றின் வாளர வத்தின்வாய்த்
துன்பு றும்மொரு தேரை வாயுறு
மீச்ச ளிச்சுவை துய்ப்பதே
இன்ப மோவல;வீச ருயிர்
நேச னீரிரு தாளுறும்
இன்ப மின்ப மெனத்து ணிந்துல
கத்து வாழ்க்கையை யெள்கியே. (33)

சிவஞானியர் பெருமை

76. தந்தை தாய்தமர் தம்மு டன்பிறந்
தார்கள் புத்திர தாரமும்
பந்த மென்று பயந்து விட்டம
லேச னுர்பதி பத்தியே

மான். என்பொடே இருப்பர்; விரதங்களால் இளைத்த உடலைக் குறித்தது.

75. அரவின் வாய்த் தேரை வாயுறும் ஈசளியின் சுவையைத் துய்ப்பது போலும், புன் புலால் உடம்பின் இன்பினை மானிடன் துய்ப்பது என்க; இந்து இன்பமோ; அல என இயைக்க. எள்குதல் - இகழ்தல்.

76. தாரம் - மனைவி. பந்தம் - பிணிப்பு; கட்டு. பொந்து ஐந்து - பொறி வாயிலைந்து. ஏதம் - குற்றம்; பாவம். நோக்கு: சக்ஷு தீக்ஷை. இந்த வாழ்வினர் - ஞானியர்.

பொந்து மைந்து மொடுக்கி யாருயி
ருற்ற பேரறி வோடுறும்
இந்த வாழ்வினர் தாமு முண்டவர்
நோக்கி லைறு மேதமே. (34)

ஞானியரும் தொண்டு புரிதல்

77. உத்த மம்பெரி யோரு ழைக்குறு
கிக்கொ டுப்பதென் றேர்ந்துதாம்
பத்தி யாலவர் பாடு சென்றன
பான முங்கொடுப் பார்பலர்
கைத்து வாருல கத்து வாழ்க்கையைக்
கண்டு ளார்சிவ மாயினும்
பத்த ரும்முய வெண்ணி யேபரிப்
பார்க ளோதன பானமே. (35)

ஆசாரியர் தன்மை

78. பொத்தை யூன்பொதி போக மோகமு
மாயை தானும ஞதியே
சுத்த னேடுறு மாறு தானெது
வென்று நின்று துளங்குவார்

---

77. உழை - இடம். ஓர்ந்து - அறிந்து. அன பானம் - அன்ன மும் பானமும்; சோறும் நீரும். கைத்தல் - வெறுத்தல். ஓதனம் - உணவு. பரித்தல் - சுமத்தல். சிவம் கண்டுளார் ஆயினும் - தாம் சிவஞானம் பெற்றவராயினும்.

78. பொத்தை - துவாரம். ஊன் பொதி - மாமிசச் சுமை. எது - ஏது. துளங்குதல் - நடுங்குதல். அஞ்ஞதியே சுத்தனை ஆன்மாவோடு அசுத்தமான போகம், மோகம், மாயைகள் சேரும் விதம் எவ்வாறு என்று எண்ணி அச்சத்தால் நடுங்குவார் என்க. சிவதேசிகர் - சைவ ஆசாரியர். மத்தகம் - தலை. இருள் - அஞ் ஞானம். பக்குவமடைந்த சீடர்களின் தலையில் ஆசாரியர் கைவைத் தல் அச்சீடர்களின் அஞ்ஞானத்தைப் போக்கும் என்ப. இது அஸ்தாமஸ்தகசையோகம் எனப்படும்.

சித்த முஞ்சிவ மாக வாகம
மோதி யேசிவ தேசிகர்
கைத்த லத்தினை மத்த கத்துறு
வைத்தவர்க் கிருள் காய்வரே. (36)

மாணவகர் செயல்

79. பொன்னி மாநதி யாடி யேபுல
ரும்மு னால்பயில் புத்திரர்
மன்னு மாமட முற்ற மும்மல
கிட்டு மாமெழுக் கிட்டபின்
இன்ன காரியஞ் செய்ய நாமு
னியற்றி யிட்டம றிந்துதாம்
முன்னி யேகுர வன்ப தம்பெய
ரோதி வேதமு மோதுவார். (37)

80. மன்னு மாமறை யாளர் சீர்மனு
மன்னர் வாணிகர் சூத்திரர்
என்னு நால்வரு மிந்த நால்வரி
டத்தெ மும்மனு லோமரும்
துன்னி நீடிய சோழ தேச
வளத்தி னைச்சொல வல்லரார்
பன்ன வல்லவ ஞயி ரம்முக
முள்ள வன்பணி ராசனே. (38)

மண்டலவளச் சருக்கம் முற்றும்

---

79. புலர்தல் - விடிதல்.

80. அனுலோமர் - கலப்புச் சாதியர். பணிராசன் - ஆதி சேடன். பன்ன - சொல்ல.

குறிப்பு: இப்படலத்தின் தனிச் சிறப்பு நாட்டு மக்களின் ஆன்ம ஒழுக்கம் கூறியதாம்.

3. திருவாரூர்ச் சிறப்புச் சருக்கம்

இடமும் பெருமையும்

81. இத்தகைய பெருவளத்துப் பொன்னிநதி நன்னாட்டு
ளேங்கி யோங்கி
முத்தினையுங் கொத்தினையு முகந்துதிரை யான்மோதுங்
கடுவா யாற்றின்
உத்தரத்த தடத்தினுறு மோங்குபுகழ் திருவாரூ
ரதுவ ஞதி
சுத்தனுக்குஞ் சிவனுக்குந் திருவெல்லை யெனச்சொல்லுஞ்
சுருதி தானும். (1)

சோழ நாட்டின் திலதம்

82. இப்புவியிற் குறிஞ்சிமுதற் றிணையைந்துண் டிவற்றுள்ளுஞ்
சோழ தேசம்
ஒப்பரிய மருதநில மிதுதனக்குத் திலதமென
வுறுமிவ் வாரூர்
இப்புவியின் வளந்தன்னைக் கண்டறிதலேயைய மிதுவன்றி
யியலி னுள்ளே
செப்புதலோ வரிதெனினுஞ் சிலவவற்றுட்
செப்பு வாமே. [டொகை செய்து

குறிப்பு : இது நகரச் சிறப்பு கூறியதாகும்.

81. ஏங்குதல் - இரங்குதல். ஆற்று நீரின் ஓட்ட ஒலியைக் குறிப்பதாம். கொத்து-பூங்கொத்துக்கள். திரை - அலை. கடுவாய்-காவிரியின் கிளை நதிகளுள் ஒன்று. கடுவாய்க்கரைப் புத்தூர் என்ற தேவாரம் பெற்ற தலம், இப்பொழுது ஆண்டார் கோயில் என்னும் பெயருடன் திருவாரூருக்கு அண்மையில் உள்ளது. திருவாரூரில் ஓடும் ஆறு இக்காலத்தில் ஓடம்போக்கி எனப்படும். உத்தரதடம் - வடக்கு இடம்.

82. சோழ நாடான மருத நிலத்துக்கு இவ்வூர் திலதம் என உறும் என்க. திலதம் - நெற்றிப் பொட்டு. கண்டறிதலே ஐயம். இயல் - இயல் நூல். தொகை செய்து - தொகுத்து.

வேறு

நடவுத் தொழில்

83. பொழிதலுமே மழைசைய மெனும்பொருப்பிற்
தன்னுட் புக்காழ்ந் [பொன்னிநதி
தொழுகுபுன லெண்டிசையு முறமள்ளர் வயரூறு
முரமா ரானும்
உழுதுபழு தறவித்தி யொள்ளியசெஞ் சாலியெழு
வாய்நா ரேங்கத்
தொழுதுபுரந் தரனடியைந் தினைமுழங்க நாறுநடத்
தொடங்கு வாரே. (3)

கனி பிடுங்குதல்

84. துண்டமதி வாணுதலார் சுரிகுழலார் வரிவளையார்
தொண்டை வாயார்
வெண்டரள வாணகையார் விடமனைய விழியார்மின்
னிடையி னார்கள்
கண்டனைய வினியமொழிக் கடைசியர்க ளிடைதுவளக்
கவ்வை யுற்றே
மண்டுபுனல் வயரூறுங் கனிகளொவா ரவர்பாடன்
மலியும் வானும். (4)

---

83. சையம் - காவிரி தோன்றும் மலையின் பெயர். பொன்னி நதி - காவிரி. உற - பொருந்த. மள்ளர் - குடியானவர். உரம் ஆர் ஆனும் - வலிமை நிறைந்த காளையும். நாறு - நாற்று. புரந்தரன் அடி தொழுது - இந்திரன் திருவடிகளை வணங்கி. ஐந்தினையும் முழங்க - மருத நிலத்தில் விளையும் நெல் ஏனைய நிலத்தார்க்கும் உபகாரப்படுதலின் ஐந்து நிலத்துப் பறையும் முழங்க என்பதாம்.

84. துண்டமதி வாள் நுதலார் - பிறைச் சந்திரனை ஒத்த ஒளி பொருந்திய நெற்றியை யுடையார். சுரிகுழல் - சுரிந்த கூந்தலை யுடையர். வரி - கோடு. தொண்டை - ஆதொண்டைக் கனி. தரளம் - முத்து. நகை - பல். விழிக்கு விடம். மின்னல்போன்ற இடை என்க. கண்டு - கற்கண்டு. துவள்தல் - வளைந்து நடுங்குதல். கவ்வை - துன்பம். வான் பாடல் மலியும் என்க.

85. துடியிடையார் பிடிநடையார் துணைமுலையார் பணையனைய
தோளார் மீளாக்
கடுவனைய கொடுவிழியார் கவின்முகத்தைக் கண்டுகதிர்
மதியென் றெண்ணி
விடவரவங் கீழ்நோக்கி விரைந்திழிந்து வேலனைய
விழியைக் கண்டு
கொடியிடையார் முகமென்று குறித்துறநாண் மீண்டுதலை
தெல்லை கூடும். (5)

அறிவடையும் கண்டுமுதல் முதலியனவும்

86. தக்கவர்கைத் தானமென விளைதலுஞ்செஞ் சாலியெழு
வாய்கண் மள்ளர்
புக்கரிந்து பொன்வரைபோற் போர்கள்பல செய்துபொரு
கரியைப் போலும்
மிக்ககரு மேதிகளான் மிதிப்பித்துப் பதடியும்வே
ருகத் தூற்றிப்
பக்குவநெல் வினையுதவிப் பலர்க்குமனை தொறுநிறையப்
பாலிப் பாரே. (6)

---

85. துடி - உடுக்கை. பிடி - பெண் யானை. துணை - இரண்டு. பணை - மூங்கில். கடு - விடம். கவின் - அழகிய. சந்திரனைக் கிரகணம் செய்யும் பாம்பு வயலில் வேலை செய்யும் பெண்டிரின் முகத்தைச் சந்திரன் என்றெண்ணித் தரையில் இறங்கிப் பார்க்க, அவர் விழிகளால் அவர்களைப் பெண்டிரென்று அறிந்து, நாண முற்றுத் திரும்பிப்போம் என்க. எல்லை - இடம். ஈண்டு அரவம் என்றது மகளிர் கூந்தலைக் குறித்தது என்னலுமாம்.

86. நெல் ஓங்கி விளைதற்கு, தக்கவர் கையின் கொடுத்த தானம் ஓங்குவது உவமை; ஒப்பு. 'தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்' (நாலடி. 38). போர் - நெற்போர். கரி - யானை. மேதி - எருமை. கரி, மேதிக்கு உவமை. பதடி - பதர். பலர்க்கும் உதவி, என்றியைக்க. பாலித்தல் - வைத்துப் பாதுகாத்தல்.

மரவகைகள் முதலியன

87. வேழவனங் கரும்பல்ல கமுகென்ன விண்டடவி
மிடைந்து நிற்கும்
வாழைவனங் கதலிவன மல்லதெங்கின் வனமென்ன
வானத் தோங்கும்
தாழைவனம் வானுலகந் தாங்கியுறுந் தம்பமெனத்
தலையைக் காட்டா
நீடின்மலி பூகனிர தனகனிமாக் கண்டிகையு
நிரந்து நீடும். (7)

88. கந்தமலி கரும்புன்னை கடிகமழும் பாதிரிநீள்
கன்னி காரம்
சிந்தைசெலுஞ் செண்பகந்தேன் றுவலிமலி
தேற லூறும் [நறுங்கொன்றை
கொந்துமலி குரவமார் குருக்கத்தி செருந்திகொடி
முல்லை யாதி
இந்தவித மெங்குமுள வினையகொழுங் குவளைகிள
ரோடை யெங்கும். (8)

அந்தணர் இருக்கை

89. கலிவலியைக் கடிய வெணிக் காசினிக்குப் பூசுரர்தங்
கருமை யாலே
நலமலியு நான்மறையின் மந்திரங்க ணுவார
நவிற்றி யாகப்

---

87. வேழம் - கரும்பு. கமுகு - பாக்கு மரம். அடவி மிடைந்து - காடுபோல் நெருங்கி. கதலி - வாழை. தம்பம் - தூண். தாழை - தென்னை. பூகன் - பூகம்; போலி.

88. கன்னிகாரம் - கோங்கு. ' கன்னிகாரத்து.....ஒருத்தி தோன்றி ' (சிலப். 11—110). துவலை - நீர்த்துளி. தேறல் - தேன். ஆர் - ஆத்தி.

89. கடிய எணி - விலக்க எண்ணி. காசினி - பூமி. பூசுரர் - அந்தணர். நா ஆர - நாக்கு நிரம்ப. நவிற்றி - சொல்லி. யாகசாலை

பலவிதமுஞ் சாலிதொறும் பண்ணுதலாற் பொழிந்துமழை
பைங்கூ ழோங்கும்
இலமெமக்குத் தருகவன மென்றிரப்பா ரிலநுளர்தாழ்ந்
தீவா ரீட்டம். (9)

தீர்த்தங்களின் சிறப்பு

90. கரைத்துவினைக் கரிசுதனைக் காயத்திற் பிணிபினையுங்
கடிந்து வேண்டும்
வரத்தினையு முடிக்குமவர் மனமகிழ்வ ருணமணிநீர்த்
தீர்த்த வாவி
திரைத்திவலை யொடுதரளந் தரத்தினுற வெறிந்தமணந்
திகழுங் காவி
விரைக்கமல பலருமுற விருப்பமுறக் கண்டாரும்
விளங்கு மெங்கும். (10)

தேவாலயங்கள்

91. எங்குமுள கயாசுரனை யிறுத்தகய முகனுறையு
மெழிலார் கோயில்
எங்குமுள சூரனுட லீர்ந்தவிரு மூன்றுமுக
னெழிலார் கோயில்

தொறும் பலவித யாகம் பண்ணுதலால் என இயைக்க. பைங்கூழ் - பயிர். இலம் - இல்லம்; வீடு. எமக்கு அன்னம் தருக என்று தாழ்ந்து இரப்பார் இலர், ஈட்டம் ஈவார் உளர் என இயைக்க. யாகங்களின் பயனும், அந்தணர் இரத்தல் செய்யாமல் ஈதலைச் செய்யும் அவர்களின் வளனும் கூறப்பெற்றன.

90. கரிசு - அழுக்கு. பிணி - நோய். முடிக்கும் - அருளும்; முடிவுபெறச் செய்யும். உண மனமகிழ்வர் - அந்நீரை உண்ண மகிழ்வர். தீர்த்தம் - தூய நீர்; பாபங்களைப் போக்கும் நீர். வாவி - குளம். திரைத் திவலையொடு தரளம் எறிந்து. காவி - நீலோற்பலம். கமலமலர் - தாமரைப்பூ. நாட்டிலுள்ள வாவிகளின் புனிதமும் தூய்மையும் கூறியது.

91. கயமுகன் கோயில் எங்குமுள என்க; இவ்வாறே பிற அடிகளிலும் இணைக்க. கயமுகன் - விநாயகன். கயாசுரன் - கஜமுக அசுரன். இறுத்த - கொன்ற. இவ்வரலாறு கந்தபுராணம் தக்ஷகாண்டத்துட் காண்க. எழில் ஆர் - அழகு நிறைந்த. சூரன் -

எங்குமுள தாருகனை யீடழித்து வதைத்தவெழிற்
காளி கோயில்
எங்குமுள மயிடனுட லிறுத்தவளா லயங்காரிக்
கிருக்கை தானும். (11)

வீதிகள்

92. கண்டார்தங் கண்களிக்குங் கடிமனைக ணிறைந்தகவின்
வீதி பன்னுட்
கெண்டானு முறவிளங்க விடைபிடையே நாராச
மெங்குந் தங்கத்
திண்டேரும் பரிமாவுஞ் சிந்துரமும் வீதிதொறுஞ்
செறிந்து செல்லப்
பண்டாரம் பயின்மடவார் பாடலொடுந் திருவாரூர்
விளங்கும் பாங்கால். (12)

93. நிறைந்துறலாற் றளர்ந்துப்பா வணவீதி யைநெய்த
னிலமு மென்பார்
நிறைந்துறலாற் செஞ்சாலி முதலான மருதநில
வண்ண மென்பர்

சூரபத்மன். ஈர்ந்த - பிளந்த; அவன் உடலை முருகன் தன் வேலால் பிளந்தனன் என்பர். தாருகாசுரன் காளியால் கொல்லப்பட்டவன். ஈடு - வலிமை, பெருமை. மயிடன் - மகிஷாசுரன்; மகிஷனை இறுத்தவள் துர்க்கை. காரி - ஐயனார் (திவா). இருக்கை - கோயில்.

92. கடிமனை - மண மனை; காவல் மனையும் ஆம். கவின் வீதி - அழகிய வீதிகள். பல் நாட்கு எண் தானும் உற விளங்க - நெடுங்காலமாக. பல என்னும் எண்ணிக்கை மிகுதியும் பொருந்த. நாராசம் - வீதியிலிருந்து பிரிந்து செல்லும் குறுக்குச் சந்துகள்; இவை கணக்கற்றவையாய் நீண்ட காலமாயிருந்தவை என்க. திண்தேர் - வலிய தேர். பரிமா - குதிரை. சிந்துரம் - யானை. செறிந்து - நெருங்கி. பண்டாரம் - தாரம் பண் என மாற்றுக; 'பாடுகின்ற பண்தாரமே' (தேவா. ஞான. திருவீழிமிழலை, திருவியமம்). பாங்கு - தன்மை; பக்கமும் ஆம்.

93. ஆவண வீதி - கடைவீதி. இச் செய்யுள் ஆவண வீதி நானிலத்தையும் ஒத்ததெனக் கூறுவது. உப்பு தளர்ந்து

நிறைந்துறலான் பானேய முல்லேநில மெனச்சிலர்தா
நிகழ்த்து வார்கள்
நிறைந்துறலாற் றெண்மணியுஞ் சிலர்குறிஞ்சி நிலமெனவு
நிகழ்த்து வாரே. (13)

94. பாலினேய மொழியதற்பி ணையனேயா ரணிதோளாற்
பஞ்சி னேய
....
....
....

இசைக் கருவிகளின் முழக்கம்

95. சல்லரிகொக் கரியிடக்கை தக்கையிணை தண்ணுமையாழ்
சங்க மொந்தை
கல்லவடம் படகந்தட் டழிகரடி யுடுக்கைகுழல்
காளந் தாளம்
சொல்லிசையைத் தரும்வீணை பேரிகைதுந் துமிதுடியு
முழவுந் தூங்க
மல்லன்மனை தொறுமடவார் பாடலுமா டலுமுளநீண்
மறுகு தோறும். (15)

நிறைந்துறலால் ஆவண வீதி நெய்தனிலம் என்பர் என்றியைக்க. இவ்வாறே பிற அடிகளையும் காண்க. வண்ணம் - தன்மை. பால் நிறைந்துளதால் முல்லை நிலம். நிகழ்த்துதல் - சொல்லுதல், தெள்மணி - தெளிந்த இரத்தினங்கள்.

94. இப்பாடலின் மூன்றடிகள் சுவடியில் முற்றிலும் சிதைந்துள்ளன.

95. இச் செய்யுளில் ஆரூர் வீதிகளில் விளங்கும் 21 வகை வாத்தியப் பெயர்கள் அமைக்கப் பெற்றுள்ளன. சொல் இசையைத் தரும் வீணை - வாய்ப்பாடலை இசையில் ஒத்திருப்பது வீணை என்க. யாழ் வேறு, வீணை வேறு. மடவார் - பெண்கள். மறுகு - வீதி.

96. தென்றலினைத் தேரெனவூர் சித்தசனுக் கொத்தசிறப்
புருவி னுர்கள்
மின்றிகழு மிடையிரதிக் கினையுருவக் கன்னியரை
விதியி னுலே
மன்றன் மணம் புரியுமெழின் மாளிகையின் வாய்தலிரு
மருங்கு வந்தே
நின்றுபுக ழும்புலவர் .... (16)

97. வானளவு கொடிமிடையு மதிதவழு மெழுநிலைமா
ளிகைக ளெங்கும்
தேனினைய மொழியினையார் திங்களினை மறுச்செய்யுங்
கமலம் போன்ற

---

96. சித்தசன் - மன்மதன்; மனத்திலே தோன்றுபவன். அவன் தேர் தென்றல் ஆம். இரதி - மன்மதன் தேவி. ஆடவர் மன்மதனையும், பெண்டிர் இரதியையும் ஒத்தவர் என்க. விதி - நூல்களில் விதிக்கப்பெற்ற விதிகளுடனே மணவினைக் காலத்தில் புலவர் கவிபாடுவதும் கூறப்பெற்றது.

97. மிடைதல் - நெருங்குதல். எழு நிலை மாளிகை - ஏழு உப் பரிகைகளை உடைய மாளிகை. மதி தவழும் மாளிகைகள் என்ற தால், அவற்றின் உயரம் கூறியவாருயிற்று. ஆனனம் - முகம்; அவர்கள் முகம் கமலம் போன்றன. அக்கமலம் திங்களை மறுச் செய்யும்; இவ்வாறு கூறியது, இரவில் அவை குவியாமையால்; முகத்துடன் ஒப்பிட்டு நோக்கின் மறுவுண்மை காண்டலான் அதற்குக் காரணம் முகமே யாகுமென்பது தோன்ற, "திங்களினை மறுச்செய்யுங் கமலம் போன்ற ஆனனமும்" எனக் கூறினர். ஆனனம் திங்களைத் தனக்கு இணையாகாது என அதன் அழகைக் குறைசெய்யும் என்றலுமாம். அது தன்னில் - அம்முகத்தினில்; அலர் குமிழ் - குமிழம்பூ; நாசியைக் குறித்தது என்க. முத்து - பல்லைக் குறித்தது. அமிர்து - பற்களில் ஊரும் நீர். மீன் அனைய விழியும் உள என்க. குமிழ் போன்ற நாசியும், முத்துப்போன்ற பற்களும், மீன் போன்ற விழிகளும் கொண்ட

ஆனனமு மதுதன்னி லலர்குமிழ்மூத் தமிர்துமுள
ரன்றிப் போர்செய்
மீனனைய விழியுமுள ராய்ந்துகழங் காதிவிளை
யாடல் நீடும் (17)

பெண்டிர் கிளிகள் வளர்த்தல்

98. பஞ்சாரு மடிமடவார் பணைமுலையார் மணிநகையார்
பவள வாயார்
நஞ்சாரும் விழியனையார் நறுந்தேனுன் பாலென்ன
நவிலுஞ் சொல்லார்
செஞ்சாந்தின் றிலகநுதற் றெரிவையர்கள் சிறப்புடனே
வளர்க்குங் கிள்ளை
மஞ்சாரு மாளிகையின் மணிமாடந் தொறுமிருந்து
பயிலும் வண்ணம். (18)

இல்லற வாழ்க்கை

99. ஆரியமு முழுதுணர்ந்தே யருந்தமிழுந் திரிபைய
மறவா ராய்ந்த
கூரியர்தா மோருடலி னேருயிரே யுறுமென்று
குறித்தா ரிங்கே

கமலம் போன்ற முகத்தினர் ஆடும் கழங்கு முதலியன விளையாடல் அவ் வீதிகளில் மிகும் என்க.

98. அடிக்குப் பஞ்சு, பணைத்த தனமும் அழகிய நகையும் உடையர். மணி, முத்தென்று கொண்டு, அதை ஒத்த நகையார் எனலும் ஆம். நகை, பற்களைக் குறிக்கும். வாய்க்குப் பவளம். விழி விடம் மிகுந்திருக்கும். விடம், கருமையாலும், ஆடவரை வருத்தும் தன்மையாலும். சொல்லுக்குத் தேனும் ஆன்பாலும். திலகம் - பொட்டு. நுதல் - நெற்றி. தெரிவையர் - பெண்டிர். மஞ்சு - மேகம். வண்ணம் பயிலும் - வண்ணப் பாடலைக் கற்கும்.

99. ஆரியம், தமிழ் இவற்றிலுள்ள நூல்கள் படித்தவர் ஓர் உடலில் ஓர் உயிர் வாழும் என்பர். ஆனால், ஆரூரில் இல்வாழ்வாரிடையே ஈருடலில் ஓருயிரைக் காண்கிறோம். அவர்கள் தம்

ஈருடலி னேருயிர்போல் கண்டனவேற் றவின்பதுன்ப
மெய்திப்
பாருயிரும் பாரகரும் பயின்றிருக்கும் மனைபலவே
பாங்கி னுலே. (19)

தாயர் குழந்தைகளைப் பாராட்டல்

100. பிடிநடையார் துடியிடையார் பிணைவிழியார்
பின்னுங் கூந்தற் [பணைமுலையார்
கடிமலரா ரிடைவுடையார் கதிர்மதிய மனையகவின்
முகத்தார் முக்க
ணடிகளருள் வரத்தாலே பயந்தவரும் புதல்வரைப்பா
ராட்டு மோசை
வடிவுடைய வானவரும் கேட்டுமகிழ்ந் தவனியினே
வாஞ்சிப் பாரே. (20)

அன்னசாலைகள்

101. அந்தணருக் கிட்டமுற வருத்துவிக்கு மன்னமலி
சாலை யெங்கும்
வெந்தவெண்ணீ றணிந்துடலின் விமலேசன் கமலபதம்
விருப்பத் தோடே

இன்பதுன்பங்களை ஒருமிக்கவே நுகர்கின்றனர் என்பது இச் செய்யுளின் கருத்தாம். பாரகர் - தரிப்பவர்.

100. பிடி - பெண் யானை. துடி - உடுக்கை. பிணை - மான். பணை - பருமை. கடிமலரா ரிடைவுடையார் - திருவும், கலைமகளும் தோற்றலை யுடைவராகிய மகளிர். கவின் - அழகிய. முக்கண் அடிகள் - சிவபிரான். பயந்த அரும் புதல்வரை - பெற்ற அருமையான பிள்ளைகளை. வடிவு - அழகு. அவனி - பூமி. வாஞ்சித்தல் - விரும்புதல்.

101. இட்டம் உற - திருப்தியாக. அருத்துவிக்கும் - உண்பிக்கும். அன்னம் மலி சாலை - நிறைந்த அன்னசாலைகள். உடலின் வெண்ணீறு அணிந்து என இயைக்க. விமலேசன் - சிவபிரான். சந்ததமும் - எப்போதும். தவத்தார் - சிவ முனிவர். அந்தகர் - குருடர். மிடியர் - வறியர். ஆதுலர் - உதவியற்றவர்.

சந்ததமு நினைந்திருக்குந் தவத்தாருக் கன்னமுறுஞ்
சாலை யெங்கும்
அந்தகர்க்கு மிடியருக்கு மாதுலர்க்கு மருத்துமன்ன
சாலை யெங்கும். (21)

நடனமாதர்

102. கனங்குழையார் நுண்ணிடையார் கரும்பனைய
மொழியனையார் கண்டார் தங்கண்
மனங்குழைய நகைசெய்யுங் வசிவில்லார் செம்பவள
வாயார் வாடாத்
தனந்தனையுங் கும்பமொவ்வா தருவனைய காந்தனையுந்
தமக்கே யுள்ளார்
அனந்தனையும் பழித்தருடை யிரைவையர்கள் நடம்பயிலு
மரங்கு மெங்கும். (22)

103. ....
....
....
தலையினுறத் தேசிதனு டரிப்பார்கள் வாழ்மனையுந்
தங்கு மெங்கும் (23)

ஆடலின்திறம்

104. பொற்றொடியார் பூண்முலையார் போர்விழியா ரலர்குழலார்
பொன்னே யன்னர்
சிற்றிடையார் வெண்ணகையார் செவ்வாயார் பாதவிதி
செய்யு மாடல்

---

102. கனவிய காதணி பூண்டவர்கள். நகை செய்தல் - இகழ்தல். வசிவில்லார் - வசியம் செய்யும் கண் புருவ முடையவர், தருவனைய - கொடுத்தலில் கற்பகத்தரு போன்ற. காந்தன் - கணவன்; விருப்பங்கொண்டவன். தமக்கே உள்ளார் - பிறர்பால் போக வொட்டாமல் தடுப்பவர். அனந்தனை - அன்னத்தை.

103. இப்பாடல் சிதைந்துவிட்டது.

104. ஆடல் மகளிரைக் காண்பவர் தம் இமை கொட்டமாட்டாமையால், ஆரூர் இமையோர்கள் கூடிய வானுலகம் ஆயிற்று

பற்றிமன முறப்பார்ப்பார் கண்களிமை யாமையினற்
பரம னூர்க்
குற்றமிலா விமையோர்கள் குலவியவா னுலகமெனக்
கூறு வாரே. (24)

ஆலயப் பணிபுரிவோர் மனைகள்

105. முனமுயன்ற பெருந்தவத்தால் முட்டாமே நாடோறு
முயற்சி யுற்றே
தனையனைய பரமசிவ னாலயத்துள் சென்றுதலை
சாய்த்து வாழ்த்தி
எனகுறையு மிலமமல னாலயத்து ளேவலியற்
றுதலா லென்னே
மனமகிழ்வார் பணிசெய்யு மகத்தடியார் வாழுமெழின்
மனையு மெங்கும். (25)

சிவபூசை புரிவோர் மடங்கள்

106. வெறுத்துடலு மெய்க்கணிந்து வெண்ணீற்றைக் கண்டி
கையும் விரும்பிப் பூண்டே
அறுத்துறவு பகையினையு மனதிமல முத்தனடிக்
கன்ப ராகிப்

என்க. பொன் தொடியார்; தொடி - வளையல், போர் விழி - ஆடவர்களுடன் பூசலே விளைத்தலால், அலர் - மலர், குழல் - கூந்தல், நகை - பல், பாதிவிதி செய்தல் - பாத விந்நியாஸம் புரிதல், அதாவது தாள வொற்றிற்கேற்ப பதம் பெயர்த்தாடல். பரதவிதி என்றும் பாடம் கொள்ளலாம். பார்ப்பார் - காண்போர். பரமன் ஆரூர் - பரமனுக்குரிய ஆரூர். வானுலகம் - தேவருலகம்.

105. முனம் - முன் பிறப்புக்களிலே. முட்டுதல் - தவறுதல். தனை அனைய - தனக்கு உவமை தானே ஆன. ஆலயத்துள் ஏவல் இயற்றுதலால் என குறையும் இலம், என இயைக்க.

106. உடலும் வெறுத்து என்க. கண்டிகை - ருத்ராக்ஷ மாலை. உறவு பகையினையும் அறுத்து என்க. உயிர் பிறப்பு இறப்புக்களைப் பெருமற் செய்ய என்க. கவின் - அழகாக. பெருநூல் - ஆகமங்கள்.

பிறப்பினையு மிறப்பினையும் பிரிக்கவுயிர்க் கவினுரைத்த
பெருநூ லோதி
மறப்பறவே மந்திரத்தாற் சிவபூசை தனைப்புரிவார்
மடமு மெங்கும். (26)

மறையோர் மனைகள்

107. புரிந்தமல னடிப்பூசை பொறியழலை விதிவழியிற்
போற்றி நாளும்
திருந்தவரு மறைபயின்று செய்தமக வினையினையுஞ்
சிவயோ கர்க்கும்
அருந்துவித்துப் பின்னருந்தி யவர்தமக்குப் பிணியுறவே
யறவு நொந்து
மருந்துமளித் துடற்பிணியு மாற்றுமரு மறையோர்வாழ்
மனையு மெங்கும். (27)

சைவ வேதியர் மனைகள்

108. ஓதிமறை யொருநான்கு முணர்ந்தெழுநான் காகமமு
முயிரு ணிற்கும்
போதகனைப் புற்றிடங்கொண் டிருக்குமரும்
புனிதன் றன்னைப் [பரம்பொருளைப்
பாதமலர் முப்பொழுதும் பத்தியினு ளருச்சிக்கும்
பரங்கார் சைவ
வேதியர்கள் விதியினையே விரும்பினர்வாழ்
விளங்கு மெங்கும். [வியன்மனையும்

---

107. அமலன் அடி பூசை புரிந்து என்று இயைக்க. பொறி - நெருப்புப் பொறி. விதி - நூல்களில் கூறப்பட்ட விதிமுறை. மறை - வேதம்; திருந்தப்பயின்று என்க. மகவினை - யாக காரியங்கள். விருந்தினரை அருத்திப் பின் தாம் அருந்துதல் என்ற விதி கூறப்பெற்றது. பிணி - நோய். அறவும் - மிகவும்.

108. ஒரு நான்கு மறையும் இருபத்தெட்டு ஆகமங்களும் ஓதி உணர்ந்து என்க. போதகன் - ஆசிரியன். புற்றிடங்கொண்டிருக்கும் பொருள் - ஆரூர் மூலத்தானக் கடவுளான வன்மீகநாதர். பாங்கு - தன்மை.

ஆலய வளம் கூறத் தொடங்குதல்

109. இணையவளந் தரநாப்ப ணிந்திரன்மா லயனிமையோ
ரெண்ண மார்ந்த
முனிவருநாண் மலர்தூவி முடிசாய்த்துப் பதம்பணிந்து
முறையாற் போற்ற
மனமெழுவாய்க் கறிவரியன் வன்மீக னுதனுயிர்
மாசு தீர்ப்பான்
தணையானற் றகுமெழிலா ராலயத்தின் வளமளந்து
சாற்ற லாமே. (29)

சுற்றுக் கோயில்கள் முதலியன

110. வானணவுங் கோபுரங்கண் மதிதவழுந் துங்கமதின்
மண்ட பாதி
ஊனமற விட்டவர முறவெண்ணி மாலயனு
மும்பர் கோனும்
வானவருஞ் சாரணரு மாதவருஞ் சித்தருமே
மண்மேல் வாழும்
ஏனையரு மருச்சித்த சிவலிங்கத் தாலய மு
மிலங்கு மெங்கும். (30)

---

109. இணைய வளம் தர - (புறத்திலே) இத்தகைய வளன்கள் அமைய. நாப்பண் - அவ்வளங்களுக்கு இடையே; அதாவது, அங்ஙனரின் இடையே. எண்ணம் ஆர்ந்த - தியானம் மிகுந்த; கணக்கற்ற எனலும் ஆம். நாள்மலர் - அன்று பூத்த மலர்கள். மனம் எழு வாய்க்கு அறிவு அரியன் - மனம் முதலான (வாக்கு, காயம் என்ற) கரணங்களால் அறிய முடியாதவன்; எழுவாய் - தோற்றம்; 'எழுவாயிறுவாயிலாதன' (தேவா. 292-5). உயிர்மாசு - பாசம். யான் சாற்றலாமே - நான் பேசக் கூடுமோ. அளந்து - கணக்கிட்டு.

110. அணவுதல் - அணைதல்; தொடுதல். மண்டப ஆதி - மண்டபங்கள் முதலியன. ஊனம் அறவும், இஷ்ட வரங்கள் பெறவும் எண்ணி என்க. இங்குப் பாடம் திருந்தவேண்டும் என்று

திருமுறைகளின் முழக்கம்

111. அந்தணரோ தருமறையு மாலவனத் தமலநடங்
கண்ட வம்மை
பந்தனெழு வாயர்திருப் பாட்டிசையும் பரமேசன்
பரியின் மீதே
வந்துறவே கண்டதிரு வாதவூ ராளிதிரு
வாக்குங் கூரச்
சிந்தைதிகழ் மாளிகைத்தே வனமுதலோர் செந்தமிழே
திகழு மெங்கும். (31)

தோன்றுகிறது. மால், அயன், உம்பர்கோனும் (இந்திரனும்) வானவரும், சாரணரும், மாதவரும், (முனிவர்), சித்தர் ஆகியோர் பலரும் சிவலிங்கம் அமைத்துப் பூசித்த ஆலயங்கள், வன்மீக நாதர் ஆலயத்தைச் சூழ்ந்து எங்கும் இயங்கும் என்க. சாரணர், சித்தர் என்பவர் தேவகணங்களைச் சார்ந்தோர்.

111. ஆலவனத்து அமல நடம் கண்ட அம்மை திருப்பாட்டு - திருவாலங்காட்டில் சிவபிரானின் அமலமான நடனம் தரிசித்த காரைக்கால் அம்மையார் அருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டைமணிமாலை அற்புதத்திருவந்தாதி என்பன. பந்தன் எழுவாய் - ஞானசம்பந்தன் முதலானோர்; எழுவாய் - தோற்றம்; ஒப்பு. 109. அன்றி பந்தன் எழுவாயர் என்பதற்கு பந்தன் பாடல்கள் முதலாக ஏழு வகுப்பினையுடைய ஏழு திருமுறைகளான தேவாரங்கள் எனலும் ஆம். இங்கு வேறு பாடம் கிடைப்பின் நலமாகும். திருப்பாட்டு - தேவாரம். திருவாதவூராளி - மாணிக்கவாசகர்; அவர் திருவாக்கு - திருவாசகமும், திருக்கோவையாரும். அவர் பொருட்டுச் சிவபிரான் பரிமீது வந்த வரலாற்றைத் திருவிளையாடற் புராணத்தில் காண்க. மாளிகைத் தேவர் - திருவிசைப்பா இயற்றியருளியவர்களுள் ஒருவர்; திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையாகும்.

தீருத்தொண்டத் தொகை

112. அறிவரியன் காட்சியினு லனுமானந் தன்னினுமா
கமத்தி னானும்
பிறிவரிய னெவ்வுயிர்க்கும் பெருந்துணைவன் பரமசிவ
னருளைப் பெற்றூர்
அறுபதின்ம ரொருமூவ ரவரோடு மொன்பதின்ம
ரவரை யாங்கள்
அறிவருளித் திருத்தொண்டத் தொகைவிளங்கும்
ரவர்வல் லாரே. [புரிபுகழ்வா

பரமன் தூது நடந்தது

113. பெருங்கடலுன் மூடுதலும் பிரமனகம் பரமென்னப்
பிரம னேடே
உரம்பெரிய திருமாலு மகம்பரமென் றேதுதலு
மழலா யோங்கிப்

---

112. காட்சியினல், அனுமானத்தால், ஆகமத்தால் அறிவ தற்கு அரியன் சிவபெருமான் என்க. எவ்வுயிர்க்கும் பிறிவரியன், பெருந்துணைவன். அருள்பெற்றவர் நாயனர்; அறுபதின்மர் ஒரு மூவர் அவரோடும் ஒன்பதின்மர் - திருத்தொண்டத் தொகையில் கூறப்பெற்ற தனி அடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும். அறுபதின்மர் ஒருமூவர் என்று பிரித்தமை, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்ற மூவரையும் அவர் தம் சிறப்பு நோக்கித் தனியே பிரித்துக் காட்ட என்க. திருத்தொண்டத்தொகை - சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆரூரில் அருளியது. புரி - ஆரூர்; இப்புரியைப் புகழ்வார் அவர் வல்லார் என்க. இச் செய்யுள் ஸ்ரீ சுந்தரமூர்த்தி திருத் தொண்டத்தொகை பாடிய பெருமை கூறிற்று. அருளைப் பெற்றூர் என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குறித்ததாகவும் கொள்ளலாம்.

113. பெரும் கடல் தான் மூடுதல் - ஓர் ஊழியில் பெருங்கடல் உலகத்தையெல்லாம் அழித்து நிரப்ப. பிரமன் - நான்முகன். அகம் பரம் என்ன - நானே பரமன் என்று கூற.

பரந்தெழுந்தே யெவராலும் பார்ப்பரியா னடிமுடியும்
பரவை பாலே
இரந்ததிரு வாரூரன் றனக்கிரங்கித் தூதுவனு
மானி னிங்கே. (33)

சுந்தரர் அருளால் கூனன் பேறு பெற்றது

114. தெய்வமெமக் கெமதாரூர்ச் சிவனுக்குத் தோழனுமா
மூர னென்றே
கொய்தமண மலர்தொடுத்துக் கூனனவர்க் கேவலர்கைக்
கொடுத்துத் தாழ்ந்தான்

பிரமனோடே - அவ்வாறு கூறிய நான்முகனோடு. உரம் பெரிய - வலிமைமிக்க. திருமாலும் - விட்டுணுவும். அகம் பரம் - நானே பரமன் என்று. ஓதுதலும் - சொல்லவும். அழலாய் ஓங்கி பரந்து எழுந்து எவரும் அடி முடியும் பார்க்க அரியான் - நெருப்பாக வளர்ந்து பரவி எழுந்து எவராகிலும் அடியையும் முடியையும் பார்ப்பதற்கு அரியனாய் நின்ற சிவபெருமான். இங்கே திரு ஆரூரன் தனக்கு இரங்கி, பரவைபாலே இரந்த தூதுவனும் ஆனான் - இவ்வூரில் திரு ஆரூரன் என்ற சுந்தரன் பட்ட துயருக்கு மனம் இரங்கி, பரவை நாச்சியாரிடம் கெஞ்சிய தூதுவனாகவும் ஆனான். அரியான் இங்கே தூதுவனானான்.

114. கூனன் ஒருவன், 'ஆரூரன், எமக்குத் தெய்வம், எமது ஆரூர்ச் சிவனுக்குத் தோழனும் ஆம்' என்று, மணமலர் கொய்து தொடுத்து, அவர்க்கு ஏவல் புரிவார் கையில் கொடுத்துத் தாழ்ந்தான்; சைவ குலம் தனில் உதித்த ஆரூரன் தன் அளியால் (அவனைப்) பார்க்க (அக்கூனன்) தன் மெய்யுறு கூன் தீர்ந்தான்; அவன் அருளால் விமலனது சிவபுரியும் விரவினனென்றியைக்க. இக்கதை ஸ்ரீ சுந்தரின் அற்புதச் செயல்களுள் ஒன்று; மூலம் ஆராய்க.

சிவனுக்குத் தோழன்; சுந்தரருக்குத் தம்பிரான் தோழன் என்ற பெயருண்மை காண்க. ஊரன் - சுந்தரன்; ஆரூரனும் அவரே. அளி - கிருபை. மெய் உறு கூன் - உடலில் உண்டான கூனல். விமலனது சிவபுரி - கைலாயம்.

சைவர்குலந் தனிலுதித்த வாரூரன் றன்னளியாற்
பார்க்கத் தீர்ந்தான்
மெய்யுறுகூ னவரருளால் விமலனது சிவபுரியும்
விரவி னனே. (34)

சுந்தரர் அருளால் குருடன் பேறு பெற்றமை

115. மற்றறியேன் தெய்வமெமக் கருட்டுறையான் மணந்
தடுத்து வலிய வாளப்
பெற்றவரை யல்லதெனப் பேணுமவன் விழிக்குருடன்
பேரன்பாலே
முற்றுமடைக் காயவர்தம் முன்வைத்துத்
முறுவல் காணப் [தொழுதவர்முன்
பெற்றவிழி யீணையவர்தம் பேரருளாற் சிவபுரமும்
பெற்றே யுற்றான். (35)

ஏயர்கோன் கலிக்காமன் பிணக்குத் தீர்ந்தது

116. வன்றொண்டன் வீதிவிடங் கனைத்தூது செலவிடுத்த
வார்த்தை கேட்டே
என்றனது முன்வரினே யவனவனை யிருதுண்டஞ்
செய்வே னென்று

---

115. இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட சுந்தரரையே ஒரு குருடன் தன் இறைவனைக் கொண்டு அவரை வணங்கி வர, அவர் அருளால் அவன் விழி பெற்றுச் சிவலோகமும் அடைந்தான் என்னும் வரலாறு இச்செய்யுளில் கூறப்பெற்றுள்ளது. இதன் மூலமும் ஆராயத் தக்கது. அருள்துறையான் - சிவபிரான். மணம் - சுந்தரரின் திருமணத்தை; பெரிய புராணம் தடுத்தாட் கொண்ட, புராணத்துள் இதன் விரிவு காண்க. ஆளப் பெற்ற வரை அல்லது எமக்குத் தெய்வம் மற்று அறியேன் என, என் றியைக்க. அடைக்காய் - பாக்கு. (வெற்றிலையும் ஆம்). அவர் முறுவல் - சுந்தரரின் மகிழ்ச்சிக் குறியான புன்சிரிப்பை. இணைவிழி - கண்களும்.

116. ஏயர்கோன் கலிக்காமரின் வரலாற்று விரிவைப் பெரிய புராணத்திற் காண்க. வன்றொண்டன் - சுந்தரர்க்குரிய பெயர் களுள் ஒன்று. வீதிவிடங்கன் - ஸ்ரீதியாகராஜக் கடவுள், அவன் என் தனது முன் வரினே அவனை என்றியைக்க. இவ்வாறு கூறி

கன்றுமவன் கலிக்காமன் கதந்தவிரும் வகையினையுங்
காட்டி யோட்டி
அன்றவனுக் கருவினைகள் கடிந்துமருள் காட்டினனு
மாரூ ரானே. (36)

வன்றொண்டர் சிவனடியார் சாபம் நீங்கியது

117. வரமுறுதே வாசிரிய மண்டபத்தின் மாதவரை
வணங்கா தேகிப்
பரமசிவன் பதம்பணியும் வன்றொண்டன் புறம்பவனைப்
பரிந்து காக்கும்
அரனவனும் புறம்பென்னு மாண்மையி னவனடிமைத்
திறமும் பாடத்
திருவருள்செய் விறன்மிண்டன் சிவமயமா யினனிந்தத்
திருவா ரூரின். (37)

திருநீலகண்டர்க்கு அருளினமை

118. திருநீல கண்டத்துப் பெரும்பாணன் திருமூலட்
டானன் முன்னே
பெருகார்வத் துடனேயாழ் வாசிக்கப் பெறுவேனே
வென்கை பேணி

யவர் கலிக்காமர். கன்றுதல் - கோபித்தல். கதம் - கோபம். ஒட்டி - கதத்தை ஒட்டி என்க.

117. தேவாசிரிய மண்டபம் - திருவாரூர்க் கோயிலிலுள்ள ஒரு மண்டபம். தேவர்கள் விரும்பி வந்து தொழும் இடம் என்பர். மாதவர் - சிவனடியார். ஒருநாள் சிவனடியாரை வணங்காது சென்ற சுந்தரரை, அவ்வடியாருள் ஒருவரான விறன்மிண்டர் 'இவன் புறகு' என்று சபிக்க, சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடி அச்சாப விடு பெற்றனர் என்பர். இதன் விரிவைப் பெரிய புராணத்திற் காண்க. புறம்பு - விலக்கு. ஆண்மையின் - தான் ஆளாயிருக்கும் தன்மையின்; விறன்மிண்டர்க்காயின், வீரம். திருத்தொண்டத் தொகையால் விறன்மிண்டர் சிவமயமாயினர் என்று இங்குக் கூறியது குறிக்கத்தக்கது.

118. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் திருஞானசம்பந்தருடன் ஆரூர் அணைந்தபோது, அவர் ஆலயத்துள் வருவதற்காகத் தனியே ஒரு வாயில் அமைத்தருளிய வரலாறு இங்குக் குறிக்கப்

உரமாரும் வடமதிலி லெருவாய்தல் செய்வித்துள்
வரவு மேவித்
திருவாரூர்த் திருமூலட் டானனவன் யாழ்கேட்டுச்
சிறப்புச் செய்தான். (38)

நமிநந்தியடிகளின் திருத்தொண்டு

119. பொய்யாத மறைநாவ னமிநந்தி புரிந்துவிளக்
கிடுவா னம்பர்க்
கெய்யாதே யிற்றிரியுஞ்சென் றிரப்பானெய் வினையமணர்
ரிலி னுஞ் செல்லச்
சைவாவந் தண்புனலா லிடுதீப மெனலுமவ
னிதனு லெங்தே
நெய்யாக நீர்விளக்கை யேற்றினவே திருவாரூர்
நிமலன் முன்னே. (39)

மனுச்சோழனின் நீதிச்சிறப்பு

120. தன்னிகரா மனுமன்னன் றன்புதல்வன்
றேரி னுவின் [றனை வதைத்தான்
இன்னலினைக் கண்டிரங்கி யிவனிதன்கன் றினைத்தேரி
னிறுத்தா னென்றே

பெறுகிறது. பெரிய புராணம்: திருநீலகண்டயாழ்ப். 8—9 செய்யுட்கள் காண்க. பெருகு ஆர்வத்துடன்-மேலெழும் அன்புடன். வாசிக்கப் பெறுவேனே, என்றது யாழ்ப்பாணர் முறையீடு. என்கை-என்றதை. வாய்தல்-வாசல். இதற்கு இக்காலத்தில் விட்ட வாசல் என்பது பெயராகும்.

119. நமிநந்தி அடிகள் மறையவர்; மறை நா வல் நமிநந்தி. புரிந்து-அன்புகொண்டு. நம்பர்க்கு விளக்கிடுவான்-சிவபெருமானுக்கு விளக்கேற்றும் பொருட்டு. இக்கோயில் ஆரூரில் திருமூலட்டானத்துக்கு அடுத்த அரநெறி என்ற கோயிலாகும். இல் தொறும் சென்று; பெரிய புராணத்தில் அவர் சென்றது ஒரு வீடே என்று கூறப்பெற்றுள்ளது. வினை அமணர்-தீவினை நிறைந்த அமணர். 'சைவா அம் தண் புனலால் தீபம் இடு' என்று கூறியவர் அமணர். இதனுல் நொந்தே.

120. மனுநீதிகண்ட சோழன் தன் மகன் ஒரு பசுங் கன்றைக் கொன்றதற்காக அம்மகனைத் தேரூர்ந்து அரைத்த செய்தி

அன்னவன்முன் னூருரு ளமலேச னெதிர்தோன்றி
யருள்செய் தானித்
தொன்னகரின் மனுமன்ன ரனேகர்திரு வருள்பெற்றூர்
தொண்டு செய்தே. (40)

முசுகுந்தன் தியாகேசரைத் தாபித்தமை

121. சென்றுதிவி தலந்தன்னின் மனுகுலத்து முசுகுந்தன்
தேவர் காண
வென்றுவல னெனுமசுரன் றனையவரை விளிலிருத்தி
விமலன் றன்னைக்
கொன்றைமலர்ச் சடையானை யுமைகந்த ளெடும்பிரியாக்
குழகன் றன்னை
அன்றுபுரந் தரனருளாற் கொடுவந்து தாபித்தீண்
டருளைப் பெற்றான். (41)

122. உண்டொருவ னுயிருள்ளு மனுதிமல முத்தனவ
னுயிர்கட் கன்பால்
விண்டிடவே மூலமலம் பருவத்தி லருள்புரிவன்
விமலை யாலென்

இங்குக் கூறப்பெறுகிறது. கன்றினை இவன் தேரின் இறுத்தான்; அப்போதே தன் புதல்வனைத் தேரின் வதைத்தான் என்றியைக்க. ஆ - தாய்ப்பசு. இன்னல் - துன்பம். நகர் - ஆரூர்.

121. இவ்வரலாற்றின் விரிவை இந்நூல் சோமாஸ்கந்தச் சருக்கத்தில் காண்க. திவிதலம் - ஸ்வர்க்கம்; தேவருலகம். வலன் என்னும் அசுரன் தனை தேவர் காணத் திவிதலம் தன்னில் முசுகுந்தன் வென்று அவரை (தேவரை) விண்ணில் இருத்தி என இயைத்துப் பொருள் காண்க. உமை, கந்தளெடும், பிரியாக் குழகன் - ஸோமாஸ்கந்தர்; தியாகேசர். புரந்தரன் - இந்திரன். ஈண்டு - தொக்குள்ள; இங்கு எனலும் ஆம். வலனை வென்ற பரிசாக இந்திரன் கொடுத்த மூர்த்தியை முசுகுந்தன் ஆரூரில் தாபித்து அருள் பெற்றான் என்க.

122. அனுதி - ஆதியற்றவன். மல முத்தன் - வினையிலிங்கியவன்; மலங்களிலிருந்து விடுபட்டவன். இவன் உயிர் உள்ளும்

3 0 JUN 1997

தெண்டிகழ விண்டுவழி பாடியற்றி யிறையருளை
யனேகர் பெற்றூர்
தெண்டிரைநீர்க் கடலடையிற் சிகதைதெரித்
தெரிக்க லாமே. [தெனிலவரைத்

ஆரூர்ப் பிறந்தார் பெருமை

123. அறங்கிளரு நால்வேத மாலமர நீழலிருந்
தறைந்தா னூர்
பிறந்தவர்முன் புரிந்ததவம் பெற்றிலமே யெனமுனிவர்
பெரிது நோவர்
நிறைந்தபுனன் மூழ்கியத னிடைநெடுநா ணிற்பதுவு
மின்றி யூனே
மறந்திடலு மின்றியிவர் சிவபுரத்தைப் பெறுமுறையை
மதித்துத் தாமே. (43)

உளன். அவன் அன்பால் உயிர்கட்கு மூலமலம் விண்டிடவே, விமலையால் பருவத்தில் அருள் புரிவன். மூலமலம்- ஆணவம். விண்டிட - நீங்க. விமலை - தேவி; அருள் சக்தி. பருவத்தில் - பருவ காலத்தில். எண் விண்டு திகழ - எண்ணற்று விளங்க. அடை - கடற்கரை. சிகதை - வெண் மணல்; வடசொல்; 'சிகை யினீரிற் சிகதையில்' (சிவதருமோத்தரம். பாவவி...60.) தெரிந்து எனில் - அறியக் கூடுமானால். அவரை - வழிபாடியற்றி அருள் பெற்றவரின் தொகையை. இவ்வூர் இறைவனை வழிபாடியற்றி அருள் பெற்றவரின் எண்ணிக்கையை அறியின் அது கடற்கரையி லுள்ள மணலை எண்ணி அறிவதைவிடக் கடுமையானது என்றார். தெரிக்கலாமோ - தெரிவிக்க முடியுமோ என்றபடி.

123. ஆலமர நீழல் இருந்து அறம் கிளரும் நால் வேதம் அறைந்தான்—சிவபெருமான். 'நன்றுக நால்வர்க்கு நான்மறை யினுட்பொருளை அன்றலின் கீழிருந்தங்கற முரைத்தான் காணேடீ' (திருவாசகம், திருச்சாழல் 16). ஆரூர் பிறக்க முத்தி என்ற உண்மை கூறப்பெற்றது. மூழ்கி நிற்பதுமன்றி, மறந்திடலுமன்றி, சிவபுரத்தை ஆரூர் பிறந்தவர் பெறும் முறையை மதித்து, முனி வர், பெரிதும் நோவர் என்க.

JAFFNA PUBLIC LIBRARY

124. மறையவருஞ் சைவருமா விரதியரும் பாசுபதர்
தாமும் வந்தே
நறைமலர்தூய் நாடோறு நாயகனே காவெனவே
நல்கும் நம்பன்
திறைகொணர்ந்து மாலயனுந் தேவர்களும் பணிந்துதுதி
செய்வாக் காலும்
அறிவரியா னித்தகைய திருவாரூர் வீற்றிருந்தே
யருளு மென்றும். (44)

125. பாங்குறவே பாயிரத்தைப் பகர்ந்துபுனல் பரந்தொழுகு
பொன்னி வாய்த்தே
ஓங்குபுக ழுறுஞ்சோழ மண்டலத்தின் வளமுமுரைத்
தான மட்டும்
தேங்குபுனற் றீர்த்தமுறுந் திருவாரூர்ச் சிறப்பினையுந்
தெரித்தாம் புற்றின்
ஆங்கிலங்கி யமலனிமை யவர்க்கருளுந் திறத்தையினி
யறைகு வாமே. (45)

தீருவாரூர்ச் சிறப்புச் சருக்கம் முற்றும்.

---

124. மா விரதியர் - மகாவிரத சமயத்தைச் சார்ந்த சைவத் துறவியர். பாசுபதர் - சைவர்களுள் பாசுபத முறையை அநுஷ்டிப்போர். நல்குதல் - அருளுதல். திறை - கப்பம். மால் அயனும் தேவர்களும் துதி செய்தனர்.

125. பாங்கு உற - அமைதியுற; அழகுற எனலும் ஆம். இதுகாறும் கூறப்பெற்றவற்றைச் சுட்டி, இனி மேலே கூறப் போவதையும் அறிவிக்கின்றார். அறைகுவாம் - சொல்லுவாம்.

4. பசுபதி புற்றிடம் பற்றிய சருக்கம்

புராண வரலாறு

126. அருந்தவரா ரியர்நயிமி சாரணியத் துறைவாராங்
கணையக் கண்டார்
பெருந்தவனே வியாதனெனும் பெயர்முனிபாற்
பேத மெல்லாம் [புராணத்தின்
திருந்தவுணர்ந் தவன்றன்னைச் சூதனெனுஞ்
சிறந்து வாய்த்த [திருமுனியைச்
விருந்தெனவே யெதிர்கொண்டா ரர்க்கியமுங்
விருப்ப முற்றே. [கொடுத்தாருள்

127. மதுரமொழிச் சூதமுனி தானுரைத்தா ரவருரையை
மறுக்க வஞ்சிப்
புதியவிதிப் பீடத்திற் பொருந்தியிருந் தும்பொருளைப்
பொருவில் லானை
அதிபதிய ரனையவர்க்கு மதிபதியை யதிமல
முத்தன் றன்னை
இதயமலர்ப் பிரியானை யெண்ணிவிழித் தெழுத்தாறு
மியம்பி னானே. (2)

---

126. நைமிசாரணிய வாசிகளான முனிவர்கள், வியாதனிடம் புராணங்களைக் கேட்டவனும், முனிவனுமான சூதன் வரக்கண்டு அவனை எதிர் கொண்டழைத்து உபசரித்தனர் என்க. அணைய - வர. வியாதன் - வியாஸ முனிவர். பேதம் - பிரிவுகள்.

127. உரைத்தார் அவர் உரையை மறுக்க அஞ்சி - தம்மை விரும்பிக் கேட்டவருடைய உரையை மறுக்கப் பயந்து. கேட்டது அடுத்த செய்யுளில் விளங்கும்; அன்றி அவருரைத்த உபசார மொழிகளை மறுக்க அஞ்சி எனலும் ஆம். விதி பீடம் - ஏற்படுத்தப்பெற்ற பீடம். அதிபதியர் - தலைவர். எண்ணி - தியானித்து. எழுத்தாறு - ஷடாக்ஷரம்.

முனிவர் சூதரைக் கமலாலயச் சிறப்புரைக்க வேண்டுதல்

128. அருந்தவர்க ளப்பொழுது சூதமுனி தனைநோக்கி
யறிவன் புள்ளாய்
பரிந்தமல னுருவம் பரித்திருக்கும் பதிபலவும்
பகர முன்னி
விருந்துறயாம் விளங்கினமிப் பொழுதெமக்கு விமலேசன்
விளங்கித் தங்கும்
திருந்துகம லாலயத்தின் சிறப்பருள்செய் யெமக்கெனலுந்
தெரிப்பா மென்றான். (3)

முன்வரலாறு கூறியது

வாமமுனிவர் பிரயாகை அடைதல்

129. கங்கைநதி யமுனைநதி கழறுமவை யோரிரண்டுங்
கலந்தே யோடும்
சங்கமத்தைப் பிரயாகை யென்றுலகத் தோரறியச்
சாற்று நூலும்
அங்கவற்றி னிடையெலியி னருந்தவர்கள் மகம்புரியு
மடைவு கேட்டே
அங்கிரன்ற னரும்புதல்வன் வாமமுனி யாங்கணைந்தா
னுர்வங் கூர்ந்தே. (4)

---

128. அறிவும் அன்பும் உள்ளாய் என்று முனிவர்கள் சூதரை விளித்தனர். பரித்தல் - தாங்குதல். பகர - நீவிர் சொல்ல. முன்னி - அவற்றை எண்ணி. விருந்து - புதுமை. இதுகாறும் சிவபெருமான் எழுந்தருளிய தலங்களைப்பற்றிக் கேட்டு, இப்போது கமலாலயச் சிறப்பினைக் கேட்க முனிவர்கள் விரும்பினர் என்க. கமலாலயம் - ஆரூரின் பெயர்களுள் ஒன்று. தெரிப்பாம் - தெரிவிப்போம்.

129. கழறும் - சொல்லப்பெறும். பிரயாகை, இப்பொழுது அலஹாபாத் எனப் பெறும் தலம். நூலும் சாற்றும் என்க. எலி - எல்லி. தவர் - முனிவர். மகம் - யாகம். அங்கிரன் என்ற முனிவனின் புதல்வன் வாம முனி. ஆர்வம் - விருப்பம்.

முனிவர் வாமமுனியை உபசரித்துக் கேட்டல்

130. மகம்புரியு மாதவரு மெதிர்சென்று வாம முனி
தன்னை வாழ்த்தி
அகங்குளிர முகமலர்ந் தர்க்கியமு மளித்தாரா
தனத்தி னன்பாற்
புகழ்ந்திடலு மவனுமவர் தமையுன்னல் விளங்குமொரு
பொருளுண் டென்றே
பகர்ந்தனர்க ளவரவனு மஃதென்னை பகர்மினெனப்
பகர்ந்த போதில், (5)

முனிவர் விடை

131. அயனருளா லருமறையு மாகமமு மங்கமுமற்
றனைத்து முன்னுள்
பயனுறவே யாராய்ந்த பண்டிதனங் கிரனவன்றன்
பாலே நீதான்
நயனுறவே யவையனைத்து நவின்றறிந்தா யாதலினு
னம்ப னுளும்
வியனுடைய பதிவிதத்துள் விசிட்டதல நின்பாலே
விழைந்தாம் கேட்பான். (6)

---

130. ஆதனம் - ஆசனம். அவனும் அவர் தமை அன்பால் புகழ்ந்திடலும் என்க. உன்னல் எங்களுக்கு விளங்கக்கூடிய ஒரு பொருளுண்டு எனலும், அவனும் 'பகர்மின்' எனப் பகர்ந்த போது எனக் கொள்க.

131. அயன் - பிரமன். அங்கம் - ஆறு வேத அங்கங்கள். அங்கிரன் பிரமனிடம் வேதம் முதலியன பயின்றவன்; அவன்பால் நீ கேட்டனை. நம்பன் - சிவபெருமான். வியன் - பெருமை. பதி விதத்துள் - பலவித நகரங்களுள். விசிட்டம் - மிக உயர்ந்தது. கேட்பான் விழைந்தாம் - கேட்க விரும்பினேம்.

அவ்வூரின் சிறப்பு

132. இருப்பார்க்கு மனோரதமாய்ச் சிவலிங்கத் தமலனிலங்
கெல்லை யாகி
விருப்பால நிழலமல னடிக்குடைய விப்பிரருக்
கிடமாய்ப் பாவம்
பரிப்பாரைப் பரியாத யறம்புரிவார் தமைப்பரிக்கும்
பாங்காய் நீறு
தரிப்பார்கள் சரிப்பதுமா யிருக்குமிட மஃதென்றூர்
தவத்தான் மிக்கார். (7)

வாமமுனி ஆரூரின் பெருமை உரைக்க இயைந்தது

133. வாமமுனி யப்பொழுது மனமகிழ்ந்து பரமசிவன்
மலர்த்தா ளுன்னி
நாமமுற நாநவின்று நாடிமனத் தங்கிரன்றன்
நளினத் தாளும்
ஏமமுற வெவ்வுயிர்க்கு மிரங்கியெனக் கங்கிரன்முன்
னியம்ப வாய்ந்த
சேமமந்தப் புற்றிடத்திற் சிவனுறையு மெல்லையது
தெரிப்பா மென்றான். (8)

---

132. மனோரதம் - மனவிருப்பம். இலங்கு எல்லை ஆகி - விளங்கும் இடமாகி. ஆல நிழல் அமலன் - சிவபிரான். விப்பிரர் - அந்தணர். பரித்தல் - தாங்குதல். பாங்கு - இடம். நீறு - திருநீறு. சரிப்பது - சஞ்சரிப்பது; வாழ்வது.

133. உன்னி - கருதி. நாமம் - சிவபெருமானின் பெயர். நா உறநவின்று - நாவில் பொருந்தச் சொல்லி. நளினம் - தாமரை போன்ற. ஏமம் - பாதுகாவல். சேமம் - நல்வாழ்வு. எல்லை - இடம்.

கலிகாலம்வர முனிவர் அஞ்சியது

134. பரமசிவன் பதமலரைப் பகர்விதியா லருச்சிக்கை
பரத கண்டத்
துரிமையெனச் சனற்குமரன் முதல்முனிவ ராரதத்தி
னுறையு நாளில்
துரிசுதனை யாவர்க்கும் புரிவிக்குங் கலிகாலந்
தோன்றல் கண்டார்
அரிதுகலி காலத்து நீங்கிருக்கை யெமக்கென்றே
யஞ்சி னாரே. (9)

முனிவர்கள் நான்முகனை அடைதல்

135. துனியினையுந் துரிசினையுந் துடைக்குமிடந்
சொல்ல வல்லான் [துணிந்தெமக்குச்
அனகனய னெனவெண்ணிச் சென்றடைந்து
யகன்ற துச்சிப் [வடவரையை
பனகமணி பதித்தொளிரும் பைம்பொனெழின்
பணிய விண்ணோர் [மண்டபத்தில்
வனசமலர் வீற்றிருக்கும் வரதனைக்கண் டடிபணிந்து
வாழ்த்தி நின்றார். (10)

---

134. பரதகண்டத்தின் உரிமை பரமசிவன் பதமலரைப் பகர்விதியால் அருச்சிக்கை; இஃதொரு சிறந்த உண்மையாகும். ஆரதம் - மாமிசமில்லாத மரக்கறி உணவு. துரிசு - குற்றம். கலி காலத்திலிருந்து நீங்கி இருத்தல் எமக்கு அரிது என்று அஞ்சினர் என்க.

135. துனி - துன்பம். துரிசு - குற்றம். அனகன் அயன் - குற்றமற்ற நான்முகனே. வடவரை - இமயம். பனகமணி - நாக ரத்தினம். பனகம் - பாம்பு. பன்னகம் என்றதன் இடைக்குறை. எழில் - அழகிய. விண்ணோர் பணிய வீற்றிருக்கும் வரதன் என்க. வனச மலர் - தாமரை. மலரோன் என்ற பெயருண்மையும் காண்க. வீற்றிருத்தல் - காட்சிக்கெளியராய் அமர்ந்திருத்தல்.

அயன் முனிவரை விசாரித்தல்

136. அயனுமவர் தமைநோக்கி யலந்திருந்தீ ருமையமர
ரலைத்தா ரோநீர்
முயலுமருந் தவந்தன்னை முடிக்கைக்குக் குறையுண்டோ
வுனதி முத்தன்
நயநடன்ரு னிழலடைய நாடியுறு நடலையுடல்
வெறுத்தோ வன்றித்
துயர்விளைக்கு மேதுவிதம் வேறுண்டோ சொன்மினெனச்
சொல்வா மென்றார். (13)

முனிவர்களின் முறையீடு

137. கலிகால மெங்களையுங் கலந்துவினை நலங்களெல்லாங்
கழிந்து போகப்
புலிதாய வினைதன்னைப் புரிவிக்குந் தமோகுணமே
பொலியு முள்ளே
வலிதாய நிலையின்றி மறுமைக்குந் துணையில்லோ
மாத லாலே
மெலியாநின் றேம்வெயிலிற் புழுப்போல விமலவிது
வீட்ட மாட்டேம். (12)

138. அந்தணருங் கலிவலியா லயர்த்தார்க ளருமறையி
னவற்றை யாய்ந்தே
செந்தழலி னுகுதியுஞ் செய்கின்றார் நொய்யரெனுந்
தீம்பர் தாமும்

---

136. இச்செய்யுளில் அயன் முனிவரின் துன்பத்துக்குக் காரணத்தை விசாரித்தது கூறப்பெறுகிறது. அலந்திருந்தீர் - வருந்தினீர். நடலை - துன்பம். விதம் ஏது - காரணம் யாது. சொல்வாம் என்றார், என்றவர் முனிவர்.

137. வினை நலங்கள் - புண்ணியங்கள். புலிது, புல்லிது என்பதன் விகாரம். புல்லிது - அற்பமானது. விமல, விளி. வீட்டுதல் - நீங்குதல்; அழித்தலும் ஆம்.

138. அயர்த்தல் - சோர்தல். நொய்யர் - அற்பர். தீம்பர் - தியவர். துய்க்கம் - மயக்கம். ஏலை - எல்லை; இடம். அந்தணர்

சிந்தனையிற் றுயக்கத்தைத் தீராருந் தூக்கின்றூர்
சிவசின் னங்கள்
அந்தவழு வில்லாத வெலிலபகரென் றரைப்போ
திரங்கி யேதான். (13)

நான்முகன் ஆரூரின் பெருமை கூறல்

139. இருளினுக்குப் பருதியென விளம்பயிரிற் புழுவினுக்கு
மழையு மென்ன
வெருளவரும் விடதரத்துக் கச்சுறுத்துங் கருடனென
மெலிந்து சிந்தை
மருளினுக்குப் பரமசிவன் வாக்கெனவுங் கலிவலியை
மாற்றுந் தானம்
இருநிலத்தி னுண்டதனைப் பராசத்தி யதிட்டித்தே
யிருக்கு மன்றே. (14)

140. ஒருதலையி னப்புரிவைத் தொழிந்தசிவ புரிவிதங்க
ளனைத்து மற்றை
ஒருதலையி னுறவைத்தே யறந்தூக்கிப் பார்த்தலுமப்
புரிக்கே யொத்த
குருவிலைமற் றைப்புரிகட் கப்புரியில் பராசத்தி
குலவ லாலே
உரியபெயர் சீநகர மதுதனையே தீருவாரூர்
என்பா ரோர்ந்தோர். (15)

மனஞ்சோர்ந்தும் ஆகுதி செய்யிடமும், எளிய மக்கள் சிவ சின்னங்களுடன் விளங்கும் இடமும் தெரிவிக்க வேண்டுமென முனிவர் கேட்கப் பிரமன் இரங்கிக் கூறுகிறுன் என்க.

139. பருதி, பரிதி - சூரியன். விடதரம் - பாம்பு; விஷத்தைத் தரிப்பது. தானம் - இடம். அதிஷ்டித்து - இடமாகக் கொண்டு. பராசத்தி பீடம் என்ற அவ்வூர்க்குரிய பெயர்க் காரணம் தெரிவிக்கப்பெற்றது.

140. புரி - நகரம். தராசின் ஒரு தட்டில் அப்பதியையும் மற்றத் தட்டில் பிற எல்லாப் புரிகளையும் வைத்து, அறம் தூக்கிப்

141. புரிந்தரிய தவமந்தப் பூமிதனிற் பூமகள்புற்
றிடங்கொண் டோணைப்
பரிந்துபணிந் தருச்சித்துப் பதவியாற் பரமசிவ
னருளி னுலே
உரம்பெரிய வரிதனக்குப் பதியாகும் வரமுற்ரு
ளவ்வூர்ப் பேருந்
திருந்துகம லாலயமே யெனவரம்பெற் றப்பெயருந்
திகழு மென்றும். (16)

142. தேவரெல்லாஞ் சென்ருங்குத் தாமியற்றும்
சிவலிங் கங்கண் [புற்றினெழுஞ்
டாவலெனு மல்லலொழிந் தாரதனற் றேவாசிர
மெனும்பே ராகும்
காவலன்கா சினியினுக்குச் சமற்கார னென்னும்பேர்
காதல் செய்தே
பூவினெடு வமலனடி பூசித்தே சமற்கார
புரியு மாகும். (17)

பார்த்தாலும் என்க. குரு - பெருமை, கனம். இலை - இல்லை. குலவல் - விளங்கல். ஸ்ரீநகரம் என்ற பெயர்க்குக் காரணமும் அதுவே திருவாரூர் என மருவியதென்றமையும் கூறப் பெற்றன.

141. கமலாலயம் என்ற பெயர்க்குக் காரணம் இங்குக் கூறப் பெற்றது. பூமகள் - இலக்குமி. புற்றிடங்கொண்டோன் - வன்மீக நாதர். பரிந்து - அன்புகொண்டு. உரம் - வலிமை. அரி - திரு மால். பதி - நாயகன்.

142. தாமியற்றும் புற்றின் என்றமையால், தேவர்கள் உண் டாக்கியதே என்பதாயிற்று. ஆவல் எனும் அல்லல் - ஆசை எனும் துன்பம். தேவாசிரியம் என்பது தேவாசிரம் என விகாரப் பட்டது என்க. காசினி - பூமி. தேவர்சிரியபுரம், சமற்காரபுரம் என்ற பெயர்களுக்குக் காரணம் கூறியவாறு. பூவினெடும் - பூவாலும்; ஒடு உருபு கருவிக்கண் வந்தது; ஊசியொடு குயின்ற தூசும்பட் டும் என்றது போல். உம்மையால், பூசைக்குரிய ஏனைய பொருள் களாலும் என்க.

அசலேசுவரம்

143. அப்புரியின் வன்மீகத் தமரரிட ராவரித்த
வசல லிங்கத்
தெப்பொழுதும் பரமசிவ னிட்டவரந் தனையளிப்ப
னிறைஞ்சி யேத்தி
முப்பொழுது மலர்தூவு முனிவர்க்கு மற்றையர்க்கு
முயற்சி யாலே
அப்பினெடு மலர்தூவி யரிதா னுமிட்டவர
மடைந்தா னங்கே. (18)

ஆரூரில் பேறு அடைந்தவர்

144. பெற்றதனே யானுமென துட்பிரியா நிட்களனை
யவன்முளி பேணி
அற்றுனே யிந்திர னு மசுரவிருத் திரனைவதைத்
தடைந்த பாவம்
கற்றுனே கலியனைத்துங் கனகமுடிச் சுரர்குருவு
மசுரர்க் கார்வம்
உற்றுளுஞ் சுக்கிர னு முணர்ந்தனனே மரித்தவரை
யுய்யச் செய்கை. (19)

---

143. ஆவரித்தல் - நீக்குதல். அசவலிங்கம்; அசலேசுவரர். வன்மீக லிங்கத்திற்குத் தென்கிழக்காகக் கோயில் கொண்டுள்ள லிங்கம்; இதனைச் சமற்கார மன்னன் தாபித்தானெனத் திருவாரூர்ப் புராணம் கூறும். இங்குக் கூறப்பெற்றதில், வன்மீகத்திலே அமர்ந்திருந்த தேவர்களுக்கு உண்டான இடர் அசல லிங்கத்தால் தீர்ந்தது என்பதாம். இட்ட - இஷ்ட; விரும்பிக் கேட்கும் வரம். அப்பு - நீர். அரி - திருமால்.

144. யானும் என்றது பிரமனை. அத்தலத்தில் பிரமன் பூசித்துச் சிவபெருமானைத் தன்னுள் என்றும் பிரியாதவனைக் கொண்டான். இந்திரன் விருத்திரனைக் கொன்ற பாவத்தினின்று விடுபட்டான். பிரகஸ்பதி சகலகலைகளையும் கற்றுன். சுக்கிரன் இறந்தவரை எழுப்பும் ஆற்றல் பெற்றுன் என்க. கனகமுடி சுரர்-பொன் கிரீடந்தரிக்கும் தேவர். சுரகுரு - பிரகஸ்பதி. அசுரர்க்கு ஆர்வம் உற்று ஆளும் சுக்கிரன் என்று பிரிக்க. அசுரர்க்கு -

145. மறையுணர்ந்த வகத்தியனு மாந்தினனே வாரியினீ
ரெல்லாம் வற்ற
அறமுடைய பிரமமுனி யாயினனே கவுசிகனு
மரையர் தம்பால்
திறைவளங்கொள் விறல்வேந்தன் றிரிசங்கு திகழ்தேவ
தீர்த்தத் தாடிப்
பொறையுடலி னெடும்புகுந்தான் பொன்னுலக
புகழத் தானே. [மெவ்வுலகும்

பிரமன், முனிவர்களை ஆரூர் செல்லக் கூறுதல்

146. மற்றுமுன மெண்ணரிய வாஞ்சையொடு மணமலர்தூய்
வணங்கி வாழ்த்திப்
புற்றிடங்கொண் டிருக்குமரும் பெரும்பொருளைப்
பூசை செய்தே [பூவானும்
பெற்றனர்த மிட்டவரம் பெருந்தவத்தி னித்தலத்திற்
பெரும்பே றவ்வூர்
உற்றுறைவார் பெற்றிடுவா ராதலினு லப்புரிபுக்
குறைமி னீரும். (21)

அசுரரை. ஆர்வம் - ஆசை. உய்யச் செய்கை - பிழைக்கச் செய்யும் ஆற்றல்.

145. அகத்தியன் கடல் குடிக்கவும், கௌசிகன் பிரமமுனி ஆகவும், திரிசங்கு ஸ்வர்க்கம் புகவும் இங்குப் பூசை செய்து பேறு பெற்றனர் என்க. மாந்துதல் - குடித்தல். வாரி - கடல். கௌசிகன் - விசுவாமித்திரன். அரையர் - அரசர். திறை - கப்பம். விறல் - வெற்றி. திரிசங்கு தேவ தீர்த்தத்தில் முழுகித் தேவர் உலகம் அடைந்தான் என்க.

146. முனம் - முன்பு. எண் அரிய - கணக்கிட முடியாத. வாஞ்சை - விருப்பம். தூய் - தூவி. அரும் பெரும் பொருள் - சிவபிரான். இத் தலத்தில், பெரும் தவத்தின் தம் இட்ட வரம் பெற்றனர் என்க. பேறு - பாக்கியம். பேறு பெற்றிடுவார் என இயைக்க. நீரும் - முனிவராகிய நீரும்.

முனிவர், சிவபிரான் புற்றிடங்கொண்ட வரலாற்றை வினதல்

147. என்றலரோ னியம்புதலு மிருக்குமறை முனிவரவ
னடியை யேத்தி
இன்றெமக்குப் புலப்படாத் தியம்பமலன் புற்றினிடத்
திலங்கி யங்கே
நின்றநில யினை யென்ன நிமலனடி யினைத்தனது
நெஞ்சந் தன்னுள்
ஒன்றவுணர்ந் தவனுமவர்க் குளங்குளிர முகமலர்ந்தே
யுரைப்பா மென்றான். (22)

திருமால் முதலியோர் யாகம் செய்யக் கருதுதல்

148. கழிந்தநெடுங் காலத்திற் கண்ணனுமிந் திரன்றானுங்
கதிரோர் தாமும்
ஒழிந்தவரு மொருதலத்திற் கூடியிருந் தூகித்தோ
ரரிய யாகம்
மொழிந்தமறை வேதத்தின் முடிப்பாமுன் னியவரங்கண்
முனைதற் கென்றே
எழுந்தடைந்தார் குருவென்னு மெல்லையினை நன்முகூர்த்த
மெண்ணித் தாமே. (23)

---

147. அலரோன் - பிரமன். இருக்கு மறை - ரிக் முதலான வேதங்கள். இலங்கி - விளங்கி. உரைப்பாம் - சொல்லுவோம்.

148. கழிந்த நெடும் காலத்தில் - மிகப் பழைய காலத்தில். கண்ணன் - திருமால், திருமாலுக்கே கண்ணன் என்ற பெயருண்டு. கதிரோர் - சூரிய சந்திரர். ஒழிந்தவர் - பிறர். ஊகித்து - ஆராய்ந்து. முடிப்பாம் - செய்து முடிப்போம். முன்னிய வரங்கள் முனைதற்கு - எண்ணிய வரங்கள் பெறுதற்கு. குரு என்னும் எல்லை - குரு ஹோரை. முகூர்த்தம் : முகூர்த்தம் - வேளை.

யாகத்திற்குரிய இடம்

149. தென்றிசையிற் கங்கைநதி திகழ்ந்தோடு மிமையமெனச்
சிறந்த குன்றின்
தென்றிசையின் யமுனைநதி திகழ்ந்தோடுங் கங்கையெனச்
சிறந்த வாற்றின்
தென்றிசையிற் சரசுவதி தீர்த்தமுறும் யமுனையெனச்
சிறந்த வாற்றின்
தென்றிசையிற் குருவென்னுந் தேசமுறுஞ் சரசுவதி
தீர்த்தந் தன்னில், (24)

150. புரிந்திடுவா னிவ்வெகிலயிற் பொருவரிய யாகத்தைப்
புகழ யாரும்
திருந்தியிடு மாகுதியை யிளைப்பறவே செயலாலே
சிறந்தார் யாவர்
வரந்திகழ்வர் வாய்த்துடையா ரவர்தாமே
மனமொத் தங்கே [யெனத்தம்மின்
நிரந்துறவே யுபயோக விதமனைத்துங் குறைவறவே
நிறைத்துக் கொண்டே, (25)

---

149. யமுனையாற்றின் தென் கரையிலே ஸரஸ்வதி தீர்த்தக் கரையிலே (யாகம் புரியத் தொடங்கினர்).

150. எகில ; எல்லை - இடம். பொருவு அரிய - உவமை அற்ற. ஆகுதி - யாக அக்னியில் இடும் பொருள்கள். யார் ஆகுதியை இளைப்பறவே செயலாலே சிறந்தார் வரம் திகழ்வர் வாய்த்து உடையார் - எவர் இளைப்பில்லாமல் ஆகுதிகளை நெடுங்காலம் செய்கின்றாரோ அவரே சிறப்பு உடைய வாய்ப்புடையார் என்று ஸங்கல்பித்துக்கொண்டவர் என்க. வரம் - மேன்மை. வாய்த்து - வாய்ப்பு. நிரந்து - வரிசை யிட்டுக்கொண்டு. உபயோகவிதம் அனைத்தும் - யாகத்துக்கு வேண்டிய அனைத்தையும்.

151. தொடங்கிமகா யாகத்தைச் சுருதிவழி யாகுதியுஞ்
சொரிந்து குண்டத்
திடம்படவே யியற்றியிடுங் காலந்தா னிமையவர்கள்
வருடந் தன்னில்
படர்ந்திடவோ ராயிரந்தான் முற்றியதோ வலவந்தப்
பரம யாகம்
திடம்படமா லாகுதியைச் செய்தனன்மற் றயனினைத்துத்
தீர்ந்து நின்றார். (26)

தீருமால் அகங்கரிக்க, அங்குச் சிவபிரான் தனு தோன்றல்

152. இலையாதே யாகுதியை யியற்றுதலால் யாவர்க்கும்
யான்மே லென்னும்
விலைவாலே வீறினமர் வன்றன்னை வியந்திடுமந்
தவேலை தன்னின்
ஒளியோங்கு கண்டத்த னுருமூன்றன் முக்குணத்தான்
முக்கா லத்தான்
ஒளிமூன்றுந் தெய்வமென வுடையதனு வைசுரந்தா
னுதிக்கக் கண்டான். (27)

---

151. குண்டம் - யாக குண்டம். காலம் தேவ வருடத்தால் ஆயிரம் முடிந்தும் யாகம் முடியவில்லை என்க. மூற்றியதோ அல எனப் பிரிக்க. மால் - திருமால். அயல் - அயலார். தீர்ந்து - ஓய்ந்து.

152. சிறிதும் சலிப்பின்றி ஆகுதியை இயற்றுவதால், யான் எவர்க்கும் மேலானவன் என்னும் காரணத்தாலே மமதையில் இறங்கின திருமால், தன்னை வியந்துகொண்டிருந்த வேளையில், ஒளி ஓங்கும் கண்டத்தனும், மூன்றுருவனனவனும், முக்குணத்தனும், முக்காலத்தவனும், யாகாக்கினிகள் மூன்றும் தம் தெய்வம் என்று கொண்டாடும் யாக புருஷனுமான பரமேசுவரனுடையவில் ஒன்று அங்கே தோன்றக் கண்டான்.

விலைவு - அகங்காரத்தின் பயன். வீறின் - பெருமையில். வேலை - வேளை. கண்டம் - கழுத்து; நில கண்டம். உரு மூன்றன் - ருத்ரன், மால், பிரமன் என்ற மூன்றுருவினன். முக்குணம் - ஸத்வம், ராஜஸம், தாமஸம் என்பன. முக்காலம் - இறப்பு, நிகழ்வு, எதிர்வு. ஒளி மூன்று - காருகபத்யம், ஆகவனீயம், தாக்ஷி

திருமால் தருக்குடன் அவ்வில்லால் தேவர்களை வெருட்டல்

153. தரித்ததனைக் கரத்ததனைற் றருக்கிமிகத் தனைமதித்துக்
காலை வங்கி
உருத்திரனைப் போன்றுதிசைக் குரியாரு மெனக்கொவ்வா
ரும்பர் தாமும்
அரக்கருமற் றையர்தாமு மொவ்வாரென் றத்தனுவி
னம்பு கோத்துத்
துரக்கலும்வா னவரையவர் துயருறவே விரைந்தோடித்
தூரத் துற்றே. (28)

திருமால் வலியிழந்து கமலாலயம் வந்து மயங்கல்

154. வாங்கினர்க டமைத்துரந்த மால்வலியை வசியெனும்பேர்
வித்தை தன்னால்
நீங்கினன்றன் வலிதன்னை நிலைதளர்ந்து தென்றிசையி
னிரந்து சென்றான்

ணாக்னியம் என்ற மூன்று அக்கினிகள்; அல்லது சூரியன், சந்திரன், அக்னி என்ற மூவொளிகளையும் கண்களாகப் பெற்றவன். வைச்வாநரன் என்பது வைசுரன் என்று மருவிற்று என்க. யாகங்களில் கொடுக்கும் உணவுகளை உண்பவன் என்பது பொருள். இறைவனுக்கு யஞ்ஞேசுவரன் என்ற பெயருண்மை காண்க. தனு - வில். வைசுரந்தனுதான் உதிக்கக்கண்டான் என்றியைக்க.

இச் செய்யுளின் பாடம் திருந்தக்கூடும் என்று தோன்றுகிறது.

153. அதனை - அவ்வில்லை. கரம் - கை. தரித்து - ஏந்தி. மிக தருக்கி - மிகவும் கருவமடைந்து. தனைமதித்தல் - தற்பெருமை கொள்ளல். உருத்திரன் - சங்கார ருத்திரன். திசைக்கு உரியார் - திக்பாலகர். உம்பர் - தேவர். ஐயர் - மும்மூர்த்திகள்; அன்றி முனிவர்களும் ஆம். வானவரைத் துரக்கலும் - தேவர்களைச் சிதறடிக்கவும், துரக்கல்; 'இருளைத் துரந்திட்டு' (திருவாச. 25:1).

154. தமை துரந்த மால் வலியை வசி எனும் பேர் வித்தை தன்னால் வாங்கினர்கள் என்க. வசி என்னும் மந்திர வித்தையால் திருமாலின் வலிமையைத் தேவர்கள் வாங்கிக் கொண்டனர். ஓடின

ஆங்கமலன் பராசத்தி யதிட்டேயத் திருவெல்லை
யதனை யுற்றான்
தீங்கினனைச் சிவசத்தி திரோதானஞ் செயமயங்கித்
திகைத்தா னங்கே. (29)

திருமால் தன் வில்லை ஊன்றி நின்று உறங்கல்

155. நிறுத்தியொரு குதைநிலத்தின் விற்றூங்கிக் கரதலத்தா
னெஞ்சின் மீதே
உறுத்தியொரு குதைகளத்தி னுறவுறங்கி னைதுங்கு
மும்பர் கண்டார்
அறுத்தனர்தம் மனத்தச்ச மவன்மயங்கி நின்றுறங்க
லாலே யங்கே
ஒறுத்தவனந் தமையிங்கே யுறங்குங்கா ரணம்யாதென்
றுற்ரு ரையம். (30)

திருமால் மயங்கினமைக்குக் காரணம்

156. அய்யமற விபரீத மறநிறைந்த வறிவுளவாங்
கிரன்றன் மைந்தன்
சய்யுமவன் றனைநோக்கிச் சதக்கிருது வரிமயங்குந்
தன்மை யங்கே

தேவர் சத்திபுரத்தை அடைய, அங்குச் சென்ற திருமால் அப் பராசக்தியின் பிரபாவத்தால் வலி இழந்தான் என்று திருவாரூர்ப் புராணம் கூறும். இரந்து - மனம் இரங்கி. பராசத்தி அதிட்டேய திரு எல்லை - பராசத்தியின் தானமான கமலாலயத்து. திங்கினன் - தமை புரிபவன். திரோதானம் காணுமல்-மறைக்கை; இது திரோபவம் என்றும் கூறப்பெறும்.

155. குதை - வில்லின் அடி. ஒரு குதையைத் தரையில் ஊன்றி வில்லைக் கையில் பிடித்து, மற்றொரு குதையுடன் தன் கையை மார்பில் வைத்து, மால் உறங்கினன் என்க. களம் - கழுத்து. ஒதுங்குதல் - அஞ்சி மறைதல். அச்சம் அறுத்தனர். நம் தமை ஒறுத்தவன் என்று இயைக்க. ஐயம் உற்ரூர் - சந்தேகம் கொண்டார்.

156 அய்யம் - ஐயம். ஐயமற விபரீதமற நிறைந்த அறிவு. ஐயம் - பழுதையோ பாம்போ என்ற சந்தேக உணர்வு. விபரீதம் -

கொய்துரையென் றலுமிவன்முன் குணத்துட்ட
குறுக லாலே [பாவனமாய்க்
மையலினன் பராசத்தி யதிட்டேயத் தலமிதுதான்
மயக்க லாலே. (31)

157. அழிந்திடுவ னெனிலெளிய சிறிதேதுவி னலிவன்முன்னு
ளமரர் முன்னு
மொழிந்தமொழி மறந்திவரை முருக்கியிட முன்னுதலா
லிவராற் றன்மெய்
இழந்திடலாற் பரமசிவன் பராசத்தி யதிட்டேய
வெல்லை தன்னில்
ஒழுங்குடனே யடையாதே யுன்னதனுய்த் தன்னேமதித்
துறுத லானும். (32)

பழுதையைப் பாம்பென மாறுபடக் கொள்ளல். நிறைதல் - குறை வில்லாது பூரணமாதல். அங்கிரன் தன் மைந்தன் - வாமமுனி சதக்கிருது - நூறு யாகங்களைச் செய்தவன்; சதக்ருது என்னும் பெயர் திருமாலுக்கு உண்டு. அரி - திருமால். வாமமுனி கதை சொல்லிக்கொண்டு வரும்போது, நீண்ட யாகம் செய்த சதக்ருது வான திருமால் மயங்கியதற்குக் காரணத்தை வினவ, அவர் உரைத்தார் என்க. அவர் உரைத்தது, 'இவன்தான் - திருமால். துஷ்ட குண பாவனமாய் தோன்றலாலே - கொடிய குணம் உடைய வனுய் வந்ததாலே, மையலினன் - மயங்கியவனுனன், இது பரா சத்தி அதிட்டேயத் தலம்; இங்கு கொடிய குணம் உடையவர் மயங்குவர் என்பது கருத்து. மயக்கலாலே மயங்கினன் என்க.

157. எளிய சிறிய ஏதுவினுல் இவன் அழிந்திடுவன் எனில்- துட்டபாவனனுய் பராசத்தி அதிட்டானத்தில் வந்த சிறிய கார ணத்துக்கு இவன் மயக்கமடைந்தது போதாதோ, அழிந்திடவிட வேண்டுவது ஏன் எனில் என்க. அதற்குக் காரணம் கூறுகின் றனர். முருக்கியிட - கொன்றிட. முன்னுதலால் - கருதலால். தன்னே உன்னதனுய் மதித்து உறுதலானும் என்க. உறுதல் - அடைதல்.

தேவர்கள் நாணை அறுத்தல்

158. என்றியம்பு தலுஞ்சய்யு விந்திரன்வா னவர்யாருஞ்
செல்லா யிங்கே
மென்றிடுவாங் கீழ்நாணி யறுமறலும் விசையுடன்மேற்
குதைதான் விசப்
பொன்றிடுவன் சிரந்துளிந்தென் றெண்ணித்தாம்
புகுந்து செல்லாய் [பூதலத்துட்
அன்றியற்றி ரைவரு மயின்றிடலாற் புற்றடிநா
ணறுந்த தங்கே. (33)

திருமால் சிரம் அற்றுருடுதல்

159. அற்றுவிட வறுநாண்வாய் தனைமென்று ரவிதனில்
மெல்ல மெல்ல
அற்றதடி நாணிதுதா னறலாலே யரிசிறந்தா
னற்று வீழ
எற்றியதே மறைகுதைதா னெற்றுதலா லிற்றசிர
முட்டி யண்டம்
வெற்றியுறும் விற்பிறந்த குண்டத்தி னயலேபோய்
வீழ்ந்த தன்றே (34)

---

158. செல் - கறையான். 'இங்கே' என்றது முதல் 'எண்ணி' என்ற வரை இந்திரன் முதலிய அமரர் எண்ணியது. அன்று இயற்றினர் அவரும் - முன்பே அப்புற்றை உண்டாக்கிய அவரும். அயின்றிடலால் - நாணைத் தின்றதால்.

159. அவர் அறுநாண்வாய்தனை (அஃது) அற்றுவிட மென்றார்; அவனிதனில் மெல்ல மெல்ல அடி நாண் அற்றது; இதுதான் அறலாலே அரி(யின்) சிரம் தான் அற்று வீழ, மறை குதை எற்றியதே; எற்றுதலால் இற்ற சிரம் அண்டம் முட்டி வில் பிறந்த குண்டத்தில் வீழ்ந்தது என்று முடிக்க.

அப்பொழுது விளைந்தவை

160. அண்டமுகட் டிடினையிடித்தே யதிர்ந்துமுனை யாகத்தி
னையல்வீ ழோதை
எண்டிசையு மண்டியுற விருநிலத்தோ ரிமையவரு
மேங்கி னுர்கள்
விண்டிடலா லரிசிரந்தான் வியப்புற்றுற் பாதமென
வெருவ யாரும்
சண்டவனி விண்டுவிழச் சலிப்பாகச் சயிலங்க
டமைச்சா டிற்றே. (35)

இமையவர் அஞ்சியது

161. மின்னியிடித் தெழுவிதமே கழும்பெய்தி டப்புவியை
விழுங்க வெள்ளம்
பன்னிருவர்ப் பரிதியரும் பரந்தெழவே புற்கைகளும்
படியில் வீழ
என்னிதுதா னெனமயங்கி யிமையவரும் வீழ்ந்திருமூன்
றெழுத்துஞ் சொன்னர்
இன்னவித வுற்பாத நீக்கியிடத் திருவுள்ளத்
தெண்ணித் தானே. (36)

---

160. முகடு - உச்சி. முனை - முன்னை. ஓதை - ஓசை. எண் திசையும் : எண்டிசையும். மண்டி - நெருங்கி. சிரம் விண்டிடலால். உற்பாதம் - துர்ச்சகுனம். யாரும் வெருவ - எல்லோரும் அஞ்ச. விண்டு - பிளந்து. சயிலங்கள் - மலைகள்.

161. மேகங்கள் ஏழுவிதம். சூரியர் பன்னிருவர். புவி - பூமி. பரிதியர் - சூரியர். புற்கை - சோறு. இருமூன்றெழுத்து - பஞ்சாக்ஷரம்; ஷடாக்ஷரமுமாம். உற்பாதங்கள் நீக்கியிட இரு மூன்றெழுத்தும் சொன்னர் என்க.

வன்மீகத்தில் சிவபெருமான் இலிங்கமாகக் காட்சியளித்தல்

162. ஞானமய னமலேசன் ஞாலத்தி னுள்ளுறைவா
னும்ப ருய்யத்
தானரிய கனகநிறத் தம்பமென லிங்கமயந்
தரித்துக் கொண்டே
வானவர்க ளியற்றியவன் மீகத்தி னுதித்தனனப்
பொழுது மண்மேல்
ஊனமெலா மொழிந்தனகண் டேனனுஞ் சத்தியலோ
கத்தி னுற்றே. (37)

163. கண்டவுடன் மண்டலத்தைக் கலந்துகலங் கியவமரர்
தமையுங் கண்டு
விண்டலத்துக் கதிபனெடும் விரவியம லேசனது
விரையார் பாதம்
கண்டிடுதல் கருதியிரு கரங்குவித்துப் பிரணவமுங்
கழறிச் சேர்ந்தே
எண்டிசைக்கு மொருசுடரா மிலிங்கமயந் தனைப்பணிந்தே
யேத்தி நின்றேம். (38)

164. கண்ணுதலுங் கறைமிடறுங் கரதலத்தின் மறிமழுவுங்
கலந்து தோன்றத்
தண்மதியுஞ் சடைமுடியிற் றயங்கியிட வுமைபுடையிற்
சமைந்து நிற்க

---

162. கனக நிற தம்பம் - பொன் நிறத் தூண்.

163. விண் தலத்துக்கு அதிபன் - இந்திரன். விரவுதல் - கலத்தல். விரை ஆர் பாதம் - மணம் மிகுந்த திருவடி. பிரணவம் - ஓம் என்னும் மந்திரம். கழறி - சொல்லி.

164. இப்பாடலின் கடைசி அடி சிதைந்து விட்டது. கண்ணுதல் - நெற்றிக் கண்ணும். கறை மிடறு - நீலகண்டம்; விஷம் பொதிந்த கழுத்து. மறி - மான். மழு - கோடாலி. மதி - சந்திரன். புடை - பக்கம். திகழ்ந்தேம் என்றது இறைவர் வாக்கு.

விண்ணவர்க்கு மருள்புரியச் சிவலிங்க மயந்தன்னிற்
றிகழ்ந்தே மிங்கே
....
.... (39)

165. ....
....
....
.... (40)

சிவபெருமான் தனுவை இந்திரனுக்களித்தல்

166. மிக்கதனு விதன்பெருமை ..... விரிஞ்சன்
விளங்கிடச் செய்தான்
மூக்குணத்தான் காலமொரு மூன்றினு மிதனிறமு
மூன்றே யாகும்
அக்கிமதி யருக்கனிதற் கதிதெய்வ மசுரரையு
மடாது வெல்லத்
தக்கதிது தனைத்தரிநீயென் றுசசி பதியப் புரந்தரனைச்
சாற்றிப் பின்னும். (41)

---

165. இப்பாடல் முழுமையும் காணவில்லை.

166. இச் செய்யுளின் முதலடியின் மூன்றும் சீர் 'சுரமெம்மவ்' என்று படிக்கும்படி அமைந்துள்ளது. பொருள் விளங்காமையின் புள்ளி இடப்பெற்றது. விரிஞ்சன் தனு(வான) இதன் பெருமையை (வேதத்தில்) விளங்கச் செய்தான் என்று இயைக்கலாம். மூக்குணம்; சத்துவ, ராஜஸ, தாமஸ குணங்கள். மூன்று காலம் - இறப்பு, நிகழ்வு, எதிர்வு. இத்தனு மூன்று நிறமுடையது; இவை மூக்குணங்களையும், மூன்று காலங்களையும் அது பெற்றிருத்தலைக் காட்டும் என்க. அக்கி, மதி, அருக்கன் - அக்கினி, சந்திரன், சூரியன் இதன் அதி தெய்வங்கள். அடாது - கொல்லாமல். தக்கான இது தனை நீ தரி என்றனன் என்க. சசிபதியாகிய அப் புரந்தரனை என்க. சசி - இந்திராணி. புரந்தரன் - இந்திரன். சசிபதி - சந்திரன் பதியான சிவபெருமான் என்று கொண்டு சிவ

தனுவின் பயன்

167. விண்ணினிடை வைத்திடுநல் வில்லிதனை விண்ணினிது
விளங்க லாலே
வண்ணமொரு மூன்றினையுங் கண்டுமழை பொழியுமுகில்
வாததை யுற்றே
மண்ணவ ரும்பரிவால் மழைபொழித லாற்பொழியு
மழைக்கு மேது
கண்ணனத லாலவன்றன் சிரங்கழுத்திற் பந்திக்கை
கணக்கே யென்றான் (42)

விண்ணவர் அச்சமும் அது தீர்க்கப்பெற்றதும்

168. அப்பொழுது விண்ணவரு மதிபதியு மிகவஞ்சி
யமல னேநீ
இப்பொழுது துர்ச்சனனை யெழுப்பியிடி லினியவனை
வெல்வா ராரே

பெருமானைக் குறிப்பதும் காண்க; இப்பொருளில் சசிபதி எழுவாய்.

167 இச் செய்யுள் சிவபெருமான் வாக்காக அமைந்துள்ளது. நல் வில் இதனை விண்ணின் இடை வைத்திடு; இவ் வில்லின் மூன்று நிறங்களையும் மேகங்கள் கண்டு பொழியும் என்க. மண்ணவரும் அதை உற்றே உகவாது, மழை பரிவால் பொழிதலால், பொழியும் மழைக்கும் ஏது கண்ணன்; அது அலால், அவன் தன் சிரம் கழுத்தில் பந்திக்கை கணக்கே என்றான். இங்கு இப்பகுதியை ஒருவாறு இயைத்துக் காட்ட முயன்றிருப்பினும், இதன் பொருள் விளங்கவில்லை. நல்லபாடம் கிடைப்பின் நலமாகும்.

பந்திக்கை - சேர்க்கை. 'இனித் திருமாலின் சிரம் அவன் கழுத்தில் சேர்ப்பிக்கை காரியமாக வேண்டும்' என்று இறைவர் கூறினர் என்க. கணக்கு - காரியம்; முடிவு.

168. அதிபதி - விண்ணவர் அதிபதி; இந்திரன். திப்பியன் - ஒளி நிறைந்தவன். சின்மயன் - ஞான உருவினன். இது

இப்பியனே சின்மயனே சிவனேநன் றலவிதுதா
னென்று செப்ப
ஒப்பரிய வுமாபதியு மவனுக்குத் தமோகுணத்தை
யொழிப்போ மென்றார். (43)

அரி எழுவதால் விளையும் நன்மைகள்

169. என்னாளு மகத்தினுக்கு மிறையாமே யரியிதனுக்
கெச்ச னாகும்
இன்னாளி லிவன்றலையை யிணுக்கியிடிற் புரிவார்கள்
மகத்தை யாரும்
விண்ணாளும் பொழியுமிகப் பொழிதலினால் விருப்பமுற
விதியி னாலே
மன்னேரும் புரிவரற பாதலினி லிவனுதய
வரமே வொக்கும். (44)

தான் நன்றல என்றனர். அவனுக்கு - திருமாலுக்கு. தமோ குணம், கோபத்துக்குக் காரணமாதலால்.

169. எந்நாளும் இந்நாளில், என்பன எதுகை நோக்கி மாறின. யாமே எந்நாளும் மகத்தினுக்கும் இறை. மகம்-யாகம். இறை-தலை வர். அரி எச்சன் ஆகும். எச்சம்; யஞ்ஞம் என்பதன் மரூஉ-யாகம். இணுக்கியிடில் - சேர்த்துவிட்டால். அவன் தலையை இன்று இணக்கிவிட்டால் யாரும் மகம் (யாகம்) புரிவார்கள். விண்ணாளும் பொழியும்; அவ்வாறு பொழிதலாலே. மன்னேரும் அறம் புரிவர். ஆதலினால் இவன் உதய வரமே ஒக்கும் என இயைக்க. பின் இரண்டடிகளின் பாடம் திருத்தம் பெறுவது நலமெனத் தோன்று கிறது. இவன் தமோகுணத்தை எடுத்துவிடுவேன்; இனிச் சினவான்; இவன் யாக உருவினனாதலால், இவனை எழுப்பினால் யாவரும் யாகம் செய்வர் என்றனர் என்க. விண்ணாளும், என்பது எதுகை நோக்கி திரிந்தது என்க.

முன், அரி பெற்ற வரங்கள்

170. புரிந்தனன்மு னருந்தவங்கண் மாயனிவ னெமைநோக்கிப்
புரிந்த போது
விரும்பியெதி ருறவிளங்கி யாமுமுன துளத்திச்சை
விளம்பா யென்ன
இரந்தனனன் றிரண்டுவர மெமையப்போ தொருவரத்தை
யிந்தோஞ் சேடித்
திருந்தவர மிவன்சிரத்தை யிணக்குதற்கிப் பொழுதேது
வாகு மென்றே. (45)

171. புடைநின்ற வசுவனிக டமைநோக்கிப் புனிதவா
னவரு மப்போ
தடியேங்கட் கேவலினை யருளென்ன மகம்புரிந்த
வத்தா னத்தின்
உடலிதுபோ யுறச்செய்வோ முற்றதரி சிரமங்கே
யொன்றச் செய்மின்
முடிதலுமே யாகவினை யெனமொழிய மொழிந்தபடி
முடிப்பாஞ் சென்றே, (46)

---

170. முன் அரி தவம் செய்து பெற்ற இரண்டு வரங்களில், ஒன்றினை அவன் அப்பொழுதே பெற்றுக்கொண்டான். மற்றொன்றுல் இப்பொழுது இவனை உயிர்ப்போம்' என்றனர் என்க. மாயன் - திருமால். இரந்தனன் - கேட்டான். சேடித்து - மிச்சமாகி. சிரம் - தலை. இணக்குதல் - சேர்த்தல். ஏது - காரணம்.

171. புடை - அருகில். அசுவினிகள் - அசுவினிதேவர்கள். நோக்கி - நோக்க வென்பதன் திரிபு. வானவர் - தேவர். தானம் - இடம். உற - பொருந்த. அங்கே உற்றதான் சிரம். ஒன்றச் செய்மின் - பொருத்துங்கள். வினை முடிதலுமே ஆக - காரியம் முடியட்டும். யாகவினை முடிதலுமே செய்மின், என்றும் இயைக்கலாம். சென்றே முடிப்பாம் என்றனர் என்று அடுத்த செய்யுளுடன் முடிக்க.

இறைவர் பிரமன் முதலியோர்க்கிட்ட கட்டளை

172. என்றவர்தா மியம்பும்போ தெம்மையும்பார்த் தமலேசன்
யாகந் தன்னை
சென்றுகுருக் கேத்திரத்திற் செய்ம்மின்கள் குறைவறவே
சிறக்கச் செய்த
பின்றையரி சிரந்தன்னைப் பிணிமின்க ளவன்பிழைத்தே
யுதிப்ப னப்போ
தொன்றியவ னுடனீர்தா மீண்டிடுமி னெமைக்காண
வொருமை யுற்றே. (47)

பிரமன் முதலியோர் செயல்

173. என்றியம்பி யின்னருளாற் புற்றினிடை யெழுந்தசிவ
லிங்கந் தன்னுள்
ஒன்றினனப் பொழுதுபணிந் தும்பரொடு மும்பர்களுக்
கதிப னேடும்
சென்றுகுருக் கேத்திரத்தைச் செறிந்தெமது
சிந்தை செய்தே [சிவனடியைச்
கொன்றைமலர்ச் சடைமுடியா னடிநினைவார்
கூடு மென்றே, [குறித்தபலன் (48)

யாகம் முடிவுறல்

174. நிறைத்திடவே யெண்ணிமகந் தனையதற்கு வேண்டுவன
நிறைத்துக் கொண்டே
மறைத்திறமு முணர்ந்துமுனி காசியபன் முதலோர்களை
வம்மி னென்றே

---

172. எம்மை, என்றது முனிவர்களை. யாகத்தைக் குருக்ஷேத்திரத்தில் முனிவர் சென்று முடித்து, அரியின் சிரத்தை அவனுடலுடன் ஒட்டி, அவனை உதிப்பித்து, இங்கே தரிசனத்துக்கு அழைத்து வாருங்கள் என்று முனிவர்களுக்கு இறைவர் கட்டளையிட்டனர் என்க. ஒருமையுற்று - நட்புக்கொண்டு.

174. மகந்தனை நிறைத்திட எண்ணி. இது அடுத்த செய்யுளில் உள்ள முற்றுவித்தோம் என்பதனைக் கொண்டு முடியும். குளகம்.

அறைந்தவர்க டம்மாலே குண்டத்தி னழலாக்கி
யதனி னன்பாற்
பிறப்பிலியைப் பிஞ்ஞகனே புருத்திரனே யருச்சித்தா
குதியைப் பெய்தே. (49)

முருந்தன் உயிர்பெற்றெழல்

175. முற்றுவித்தோ மகமதன்பின் முருந்தனது குறையுடலின்
மூர்த்தாச் சேர்த்திப்
பற்றியிட வசுவினிகள் பரமேச னுபதேசப்
படியே செய்தார்
அற்றசுவ டறவழகு பெற்றதுகண் டதிசயித்தேம்
யாங்க ளப்போ
துற்றிடவே யுட்கரணம் புறக்கரண விதமனைத்து
முணர்ச்சி யுற்றான். (50)

யாவரும் மகிழ்தல்

176. அந்தரத்திற் பொழிந்திடவே மலர்மாரி யரமகளிர்
தாமு மாடத்
துந்துமியும் பேரிகையுந் துடிகரடி யெனுமிவையுந்
துவைப்ப வெங்கும்
கந்திருவர் முறையுறவே கரளத்தி னிசைகானஞ்
செய்ய யாரும்
சிந்தனையிற் களிகூர்ந்தார் சிவனருளால் வாய்த்துவரந்
திகழ்தல் கண்டே. (51)

---

175. மூர்த்தா - தலை. அசுவினிகள் செய்தார். அற்ற சுவடு - தலை அறுபட்ட அடையாளம். உட்கரணம் - அந்தக் கருவிகள்; புத்தி, சித்தம் முதலியன. புறக்கரணம் - புறக் கருவிகள்; மெய், வாய் முதலியன.

176. அந்தரம் - ஆகாசம். துந்துமி, பேரிகை, துடி, கரடி - இசைக்கருவிகள். கரளம் - கழுத்து. திகழ்தல் - விளங்குதல்.

தேவர்களும் நான்முகனும் திருமாலை வணங்குதல்

177. துயிலுமவர் விழிப்பதுபோல் விழித்தெழுந்தான்
சுரரைப் பார்த்தான் [மரித்தவரி
வியனுறவே யவர்தாமும் வேந்தனுமஞ் சலிசெய்து
விரும்பி நின்றூர்
நயனுறவே யென்றனையு நாடிவரலா மோவென்று
நவின்ரு னனும்
....ரத்தால் வழிபாடு பலபகர
மகிழ்ச்சி யுற்றான். (52)

178. முனிவருமற் றையர்தாமு முறையுறவே பணியமுக
நயமுஞ் செய்தான்
இனியறிந்தே னென்முகனே யிறந்தவினை யனைத்தினையு
மென்றுஞ் சொன்னன்
புனிதசிவ னதிகார சத்தியினைப் பொருந்துதலாற்
புன்மை தீர்ந்தான்
அனுசயமற் றுரமர ரவர்தமக்குப் பதியுமவ
னல்லார் தாமும். (53)

யாவரும் ஆரூர் அடைதல்

179. வானவரும் வாசவனு மாதவனும் யானுமக
சாலை நீங்கி
ஊனவினை யினையும்ப ரொழிந்ததிரு வாரூர்ச்சேர்ந்
தொருமை புற்றே

---

177. மரித்த அரி எழுந்தான் என இயைக்க. சுரர் - தேவர். வியன் - பெருமை. வேந்தன் - இந்திரன். அஞ்சலி செய்தல் - கை கூப்புதல். என்றனை, என்றது பிரமனை. நான்காமடியில் இரு சீர்கள் சிதைந்துள்ளன.

178. மற்றையர் - தேவகணங்கள் என்னலாம். முறையுற - வரிசைப்படி. சிவன் அதிகார சக்தியினைப் பொருந்துதல்; மகேசுவரத்தன்மையடைதல். அனுசயம் - பச்சாத்தாபம்; வருத்தம். பதி - இந்திரன்.

179. வாசவன் - இந்திரன். மாதவன் - திருமால். யான், என்றது பிரமன். ஊனம் - கீழான தன்மை. உம்பர் - இடத்தைக்

ஞானமயன் றனைஞால முயவுதித்த வன்மீக
நாதன் றன்னைக்
கானமதி னடமாடுங் கடவுடனை யடிபணிந்து
காதல் கூர்ந்தே. (54)

சிவபிரான் அருளியது

180. ஒப்பரிய னப்பொழுது சிவலிங்க மயந்தன்னி
னுதித்து நின்றே
எப்பொருளுந் தானுவை விறையமல னுகிடு
வந்த மில்லாத்
திப்பியன்சின் மயனெம்மைத் திருநோக்காற் சுத்திசெய்து
சேர வம்மின்
இப்புரியின் சிறப்பினையா முமக்கிசைப்பா மிப்பொழுது
கேண்மி னென்றான். (55)

ஆரூரின் பெருமைகள்

181. அறிவரிய தலமிதனுக் கந்தர்கே சுரமென்
றுகு நாமம்
பிறிவறயாம் பராசத்தி யொடும்பொருள்வீற் றிருக்குமது
பெற்றி யாலே

குறித்து. தேவரும் ஆம். ஒருமையுற்று - புலன்கள் ஒன்றுபட்டு. யாவரும் கூடி எனலும் ஆம். ஞாலம் உய்ய - உலகம் ஈடேற. கானம் - காடு, சுடுகாடு.

180. ஒப்பு அரியன் - சிவபிரான். சிவலிங்க மயம் தன்னில் உதித்து - சிவலிங்கமயமாக இருந்த அதனின்று உதித்து என்க. எம்மை - பிரமன், மால் முதலியோரை. திருநோக்கு - அருட் பார்வை.

181. அந்தர்கதேசுவரம் என்றது அந்தர்கேசுரம் என்று மருவிற்று. ஆரூர்க்குரிய பல பெயர்களுள் ஒன்றாக இப்பெயர் கூறப்படாமை ஆராயத்தக்கது. (சிறந்த பாடம் கிடைப்பினும் நலமாம்). பொருள் - இப்பெயரின் பொருள். பிரிவற யாம் பராசத்தி

குறியுறிதற் கிலிவாளோர் குயிற்றியபுற் றிடங்கொண்ட
லிலிங்கந் தன்னில்
உறைவுமணி னுள்ளார்க்கு மூனவினை யொழித்துவர
முதவ வேதான். (56)

இங்குச் செய்யப்பெறும் புண்ணியங்களின் பயன் பெருகும்

182 சேர்ந்திருப்பர் சிவபுரியின் வன்மீகத் தியாமிலங்குஞ்
சிவலிங் கங்கண்
டார்ந்தவரா சத்தாலே யருச்சனைசெய் வித்தவரு
மன்பி னாலே
சார்ந்தவசித் தான்மதரரா சனித்தாருஞ் செய்ததவ
மொன்று கோடி
ஆந்தனத்தை யளித்திடினு மித்தலத்தி னேயன்பர்க்
கார்வத் தாலே. (57)

யொடும் வீற்றிருக்கும் என்பது இரண்டாமடி. அந்தர்கதம் - உள் புகுதல். பராசத்தியும் இறைவனும் ஒருவருள் ஒருவர் புகுந்து வேற் றுமை யறியாத நிலை பெற்றிருத்தல். "உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையான் நடுவுள் நீயிருத்தி" என்ற திருவாசகமும் காண்க. பெற்றி-தன்மை. குறி - அடையாளம். இலிங்கம் - ஆரூரில் தனியே சிவலிங்கம் மூலத்தானத்தில் இல்லை. புற்றே, அவரை இடங்கொண்ட இலிங்கமாக உள்ளது. மண்ணின் உள்ளார்க்கு உதவவேதான் உறைவும் என்றியைக்க.

182. வன்மீகத்தில் யாம் இயங்கும் சிவலிங்கம் கண்டு ஆர்ந் தவர் சிவபுரியின் சேர்ந்திருப்பர் என்க. ஆர்ந்தவர் - நிறைந்தவர். ஆசம் - மகிழ்ச்சி. (ஹாஸ்யம் என்பதன் திரிபு). அசித்து ஆன்ம தரர் சார்ந்த அன்பினாலே ஆசனித்தாரும் செய்த தவம் என்று இயைத்து, சத், அசித் என்ற இருவகை ஆன்மிகளுள் அசித் ஆன்மாவுடையவர், பக்தி மேலீட்டால் ஆசனமிட்டுக்கொண்டு செய்த ஜபதபங்கள் ஒன்று கோடியாகும் என்று பொருள் கொள்ளலாம். சிறந்த பாடங்கண்டு வேறு பொருள் கொள்வ தும் கூடும். இத்தலத்தினே, அன்பர்க்கு ஆர்வத்தாலே தனத்தை அளித்திடினும் ஒன்று கோடி ஆம் என்றியைக்க,

183. தூரத்தே யிப்புரியைத் தொழுவார்கள் துரிசனைத்துந்
தூளி யாகும்
சேரத்தே யிருப்பார்சிந் தனைசெய்வா ருரைப்பார்தந்
தீங்கு தானும்
வாரத்தால் வசிப்பாருக் கோதனமும் வத்திரமும்
வழங்கு மன்பர்
தீரத்தீ வினையனைத்துஞ் சிவலோகஞ் சேர்ந்திருந்து
செல்வராமே. (58)

184. அரியதவ முன்னெடுத்த வனேகவுட லினும்புரிந்தா
ரார்வங் கூர்ந்திப்
புரிபுகுவர் விதியுணர்ந்து புற்றிடங்கொண்
புரிவார் பூசை [டிருக்குமெமைப்
பிரியவுடற் சிவலோகம் பெற்றிருப்பர் பேரிலயத்
தவித்தை யாதி
ஒருவ வனுப வித்திருப்பர் சிதானந்த மென்றிரங்கி
யுரைத்த போதில், (59)

---

183. சேரத்தே இருப்பார் - அருகில் இருப்பார். சேரத்தே, கிராமியச் சொல். தீங்குதானும் தூளியாகும் என்றிணைக்க. உரைப்பார் - புகழ்வார். வாரம் - அன்பு. ஓதனம் - உணவு. வத்திரம் - ஆடை. தீவினை அனைத்தும் தீர என்க.

184. ஆர்வம் கூர்ந்து - அன்பு மிகுந்து. விதி உணர்ந்து பூசை எமை புரிவார் என்றியைக்க. உடல் பிரிய - மரணமடைய. அவித்யாதி ஒருவ, பேர் இலயத்துச் சிதானந்தம் அநுபவித்து இருப்பர் - அஞ்ஞானம் நீங்க, பெரிய பிரிவின்மை (சாயுஜ்யம்) என்ற நிலையில் சிதானந்தம் நுகர்வர். இலயம் - ஒன்று கூடுதல். சிதானந்தம் - மனமகிழ்வு.

இறைவன் ஆன்மாக்களுக்குப் போதிக்கும் முறை

185. போற்றிசய விஞ்ஞானை கலர்க்கிதைய மலரிலங்கிப்
போதிப் பானே
போற்றிசய போற்றிபிர ளயாகலருக் கெதிர்தோன்றிப்
போதிப் பானே
போற்றிசய போற்றிசக லர்க்கவரைப் போல்விளங்கிப்
போதிப் பானே
போற்றிமல பரிபாக மில்லாரை..... னெறும்
புகுவிப் பானே. (60)

எல்லோரும் வரம் பெற்றமை

186. போற்றிசய சயபோற்றி பூரணனே யெம்முளத்திற்
புன்மை யெல்லாம்
மாற்றிவர மருள்புரியும் வாய்மையனே சயபோற்றி
மண்ணு முய்யத்
தோற்றினனே புற்றிடைத் தோன்றுத துணையவனே
போற்றி துங்க
ஏற்றினனே போற்றியென யாங்களுமெங் களுக்கவித்தா
னிட்ட மெல்லாம்.

---

185. விஞ்ஞானை கலர் - ஆணவ மலமொன்றேயுடைய ஆன்மாக்கள். பிரளயாகலர் - ஆணவம் கன்மம் என்ற இரு மலங்களையுடையர். சகலர் - ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களையும் உடையர். இறை, விஞ்ஞானை கலர்க்கு அருவமாய் அவர் இதய மலரிலேயே நின்று போதிப்பர்; பிரளயா கலர்க்கு உருவத் திருமேனியுடன் எதிர் தோன்றிப் போதிப்பர்; சகலருக்கு அவரைப் போன்ற மானிட உருத்திருமேனி கொண்டு போதிப்பர். மலபரிபாகமில்லாதவர் திரும்பவும் பிறப்பெடுக்க வேண்டியதே. கடைசி அடியின் பகுதி சிதைந்துள்ளது.

186. வரம் அருள் புரியும் வாய்மையனே. மண்ணும் - மண்ணுலகும். துங்க - சிறந்த. ஏறு - இடபம். ஏற்றினன் - இடபத்தை யுடையான். யாங்களும் போற்றியென எனக் கூட்டுக. இட்டம் - விருப்பம்.

187. பெற்றுவரந் தேனயந்தப் பெருமானைப் பினும்பணிந்தே
வலியும் பெற்றேம்
முற்றியகா தலினுலே முறைவிதியாற் சிவலிங்கந்
தாபித் தங்கே
அற்சனைசெய் தருள்பெற்றே யப்புரியை நீங்கமனத்
தகத்து வைத்தே
பற்றினமே பாங்கான புரிவிதத்தே யாங்களவன்
பதும பாதம். (62)

பிரமன் முனிவர்க்கு இயம்பியது

188. இப்பொழுது தொகைசெய்தே யானுமக்கீண்
திறத்தை யெல்லாம் [டியம்பியவித்
ஒப்புயர்பு மறத்தனக்குத் தானிலையா யோங்கியொளி
ரிரண்டாம் வேதஞ்
செப்புமெனத் திசைமுகனுந் திருவாரூர்ப் புற்றினெழுஞ்
சிவலிங் கத்தின்
எப்பொருளுந் தானுனை சிவலிலங்குந் தன்மையினை
யியம்பி யேதான், (63)

189. அப்புரியின் வசிக்கைக்கே யாதரவுண் டெம்முளத்து
மாத லாலீர்
இப்பொழுதே சென்றினையு மில்லாமைப்
டிருப்பான் றன்னை [புற்றிடங்கொண்

---

187. ஏவல் - கட்டளை. அங்கே பிரமன் முதலியோர் சிவ லிங்கம் தாபித்துப் பூசை செய்து அருள் பெற்ற வரலாறு கூறப் படுகிறது. யாங்கள் அவன் பதும பாதம் பற்றினம் என்க. புரி விதத்தே - செய்யவேண்டிய விதத்தில். அற்சனை — அர்ச்சனை, எதுகை நோக்கித் திரிந்தது.

188. தொகை செய்து - தொகுத்து. திறம் - தன்மை. நிலை யாய் ஓங்கி. இரண்டாம் வேதம் - யஜுர் வேதம்; ஆகமம் எனலும் ஆம்.

189. ஆதரவு - அன்பு. இணையும் இல்லாமை - உம்மையால் தன்னின் உயர்வுமில்லாமை எனக் கொள்க; எச்ச உம்மை. ஒப்பில்

முப்பொழுது மருச்சிக்கின் மும்மலமு மறுமுலகின்
முனியீ ரென்று
செப்புதலு மவன்கமலத் திருவடியைப் பணிந்தவருஞ்
செல்வா மென்றூர். (64)

பிரமன் அலர் இரதம் ஈந்தது

190. அதிதூரந் திருவாரூர் கலிநலியீ னுளமழியு
மதனை லிந்தப்
புதிதாய வலரிரத மனைவேக மிதுதன்னிற்
புகுந்து சென்மின்
அதிவேகத் தொடுமீளு மிதுநம்பா லென்றவய
னடியைப் போற்றி
விதியேவு மலரிரதந் தனையூர்ந்தே யவரடைந்தார்
விமல னூரூர். (65)

தேவதீர்த்தம் உண்டாக்கியது

191. பரமேச னரியதவம் பண்ணியுறும் பகீரதற்குப்
பரிந்து முன்னாள்
வரமான சுரநதியை வார்சடைமே லேற்றுவிட
மண்ணின் கண்ணே

லானே. மும்மலம் - ஆணவம், மாயை, கன்மம் என்பன. உலகின் முனியீர் - மறு பிறப்பினைப் பெறமாட்டீர். அவன் - பிரமன். அவரும் - முனிவரும்.

190. அதி - மிக. கலி நலியின் உளம் அழியும் - கலி துன் புறுத்தினால் உள்ளம் அழிவடையும். அலர் இரதம் - புட்பத் தேர். மனைவேகம் - மனத்தின் வேகத்தை ஒத்த வேகம் (உடை யது). அயன் - பிரமன். விதி - பிரமன். அவர் - முனிவர்.

191. பரிந்து - இரங்கி. வரம் - உயர்வு. சுரநதி - தேவநதி ; கங்கை. ஏற்று - தாங்கி. விட - தரையில் விட. மேல் பாகம் - மேற்குப் புறம்.

பரமான புவிகழித்தே யுள்ளோடும்பா தாளகங்கை
..... தன்னைத்
திருவாரூர்ப் புற்றினுக்கு மேல்பாகத் துதிக்கவெனச்
செப்பி னரே. (66)

தேவதீர்த்தத்தில் படிந்து வன்மீகரைத் துதித்தல்

192. ஆங்கேதான் வந்துதித்த ததற்குரிய பெயர்தேவ
தீர்த்த மாகும்
நீங்காதே யெங்குமுள தீர்த்தவிதங் களுமதனி
னிரந்து நிற்கும்
ஓங்காரப் பொருடன்னை யனைத்துயிர்க்கு முள்ளுணர்ந்த
மூலிவர் தாமும்
பாங்கான வவர்தேவ தீர்த்தத்திற் படிந்துகடன்
பண்ணி யேதான், (67)

193. வானவர்க ளியற்றியபுற் றிடங்கொண்டா லுலயத்தை
வலஞ்செய் தொப்பின்
ஞானமயன் றனைநடலை யுடலினையும் பிரிவிக்கும்
நம்பன் றன்னைக்
கானமதில் நடமாடுங் கடவுடனைக் கண்குளிர
வணுகிக் கண்டார்
மானவித மூன்றினுக்கு மரும்பொருளைப் பணிந்தெழுந்து
மகிழ்ந்து நின்றே. (68)

---

192. தீர்த்த விதங்கள் - பலவிதத் தீர்த்தங்கள். நிரந்து நிற்றல் - நெருங்கி நிற்றல். படிந்து - முழுகி.

193. நடலை உடல் - பொய்யான உடலை. கானமதில் நடமாடும் கடவுள்; 180. மானவித மூன்று - அவைகளாவன காண்டல், கருதல், உரை என்ற பிரத்யக்ஷம் அநுமானம், ஆகமம் என்ற மூன்று. மானம் - அளவு. இன்னும், 'சிவமானம் சைவ நூல் செப்புயிர்சிற் சத்தி' என்ற பதிபசுபாசப்பனுவல் (1·12) கூறிய மூன்றும் எனலும் ஆம்.

194. விதியினையு முணர்விக்கும் வேதத்தின் விதியாலே
விமலன் றன்னை
அதிபதியா ரனைவர்க்கு மதிபதியை யனுதிமல
முத்தன் றன்னைக்
கதியருளுங் கருணையனைக் கசிந்துருகு மடியவர்க்குக்
காதல் கூரப்
புதுமலராற் புனலாலும் பூசித்துப் பணிந்தெழுந்து
புகழ்ந்தார் தாமே. (69)

தனித்தனியே சிவலிங்கம் தாபித்தல்

195. தனித்தனியே சிவலிங்கந் தாபித்தே யாங்கமலன்
றனைப்பூ சித்தார்
மன்த்துணையாம் வன்மீக நாதர்தமை நாடோறும்
வாஞ்சை கூரப்
புனைத்தமலர் கரத்தேந்தி முப்பொழுதும் பூசித்துப்
புகழ்வார் தாமோர்
தினத்தமலன் றிருமுன்னே பணிந்தெழுந்து
செப்ப லுற்றார். [தங்குறிப்பைச்

வேண்டுகோள்

196. புண்ணியத்தி னல்வாய்த்த புனிதவுடல் பொன்னிகளம்
பூர்வந் தன்னிற்
பண்ணியபா தகத்துநித்த பழுதுடலந் தானிருப்புப்
பந்த மென்றே

---

194. வேதத்தின் விதியாலே பூசித்து என்றியைக்க.

195. மனத்துணையாம் வன்மீக நாதர்; மனத்துணை நாதர் என்பது சிவபிரானுக்குரிய பெயர்களுள் ஒன்று. வாஞ்சை கூர - விருப்பம் மிக. புனைத்த; வலித்தல் விகாரம். ஓர் தினத்துச் செப்பலுற்றார் என்க.

196. புண்ணியத்தால் பெற்ற உடல் பொன் நிகளம். நிகளம் - சங்கிலி. பாபத்தால் பெற்ற உடல் இருப்புப் பந்தம்.

கண்ணியவை யிரண்டினையுங் கயந்துநயந் துனதுடியைக்
கருத்துள் வைப்பார்க்
குண்ணிகழ்வாய் சயபோற்றி யவர்க்கூன மனவலியு
மொழிப்பாய் போற்றி. (71)

தோத்திரம்

197. நீங்காதே புணராதே நிறைந்துயிரு ளிரண்டறவே
நிற்பாய் போற்றித்
தாங்காதே தனுகரண புவனவித மனைத்தினையுந்
தரிப்பாய் போற்றி
வாங்காதே யவையனைத்தும் வாங்கிடுவாய் சயபோற்றி
மனத்துக் கெட்டா
ஓங்காரத் துட்பொருளே சயபோற்றி யெம்பிறப்பு
மொழித்தா ளென்றூர். (72)

அவர்கள் பெற்ற பயன்

198. ஆகத்தின் வெறுப்பினையு மமலத்தி னுதரவு
மடைந்தாற் கங்கே
மோகத்தை மோசித்து மு.....சினை ருள்புரிந்தான்
மூலட் டானன்

பந்தம் - சங்கிலி; கட்டு. கண்ணி - கருதி. இரண்டையும் - புண்ணிய உடலையும், பாப உடலையும். கயந்து - கசந்து; வெறுத்து. உனது அடியை நயந்து. நயந்து - விரும்பி. ஊனம் - குறைபாடு. 'வேண்டுவா ரில்லை விலங்கொருவன் காலில்' என்ற பதிபாசப் பனுவலின் கருத்தை ஆராய்க.

197. இறைவன் உயிர்களோடு தோய்ந்தும் தோயாமலும் நிற்பவன். இரண்டற நிற்றல் - அத்வைதமாக நிற்றல். தனு கரண புவனம் - உடல், உறுப்பு, உலகம். தரித்தல் - தாங்குதல். பிறப்பு ஒழித்து ஆள் என்றூர்.

198. ஆகம் - உடல். மோசித்தல் - நீக்குதல். மூலட்டானன் - வன்மீக நாதர்; ஆரூர் மூலட்டானத்தில் எழுந்தருளியுள்ள

ஏகத்தை யவரப்போ தெண்ணரிய வுயிர்க் குயிரை
யினிய ஞான
மாகத்தைக் கலந்தந்த மயமானர் பேரின்பம்
வாய்க்கத் தம்பால். (73)

வேறு

முனிவர் ஆரூர் சென்று பூசித்தல்

199. என்றுதான் தேவர் தாமு முனியினி தியம்பக் கேட்டே
அன்றுமா தவரு மந்தப் புரியினை யடைவாம் யாமும்
என்றுளத் திச்சை யுற்ரு ரேகுமி னீரு மாங்கே
என்றமா முனிசென் ரூரு ரெல்லையை மேவி னனே. (74)

200. திகழ்தரு தேவ தீர்த்தத் தாடியே நியதி செய்து
புகழுறப் பணிந்து கண்டு புற்றிடங் கொண்டார் தம்மை
நிகழ்மறை விதியி னலே நீரினற் பூவி னலும்
மகிழ்வுறப் புரிந்து பூசை மலரடி வணங்கி னின்றே, (75)

அவர்கள் தோத்திரம் செய்தது

201. ஆக்கையை வெறுத்தார்க் கெல்லா மாக்கையு
[மறுப்பாய் போற்றி
வாழ்க்கையை மதித்தார்க் கெல்லாம் வாழ்க்கையை
[வைப்பாய் போற்றி
வாக்கினு மறியொ ணுத வரதனே போற்றி யெங்கும்
நீக்கற நிற்பாய் போற்றி யெனத்துதி ஏத்தி னின்றே, (76)

மூர்த்தி. ஏகத்தை - ஒருவனு யுள்ளவனே. மாகம் - ஆகாயம். அந்த மயமானர் - அந்தச் சிவத்தன்மையை உற்ரூர்.

199. முனி - முன்னி ; எண்ணி. மா தவர் - பெருந்தவம் செய்யும் முனிவர். மா முனி - வாமன்.

இறைவனருளால் முனிவர் புனிதம் பெற்றமை

203. என்றது மிந்தக் காய மிருவினை மூலநோயும்
ஒன்றுத லென்றுன் பாதத் தொருமையுற் றுலக மூர்த்தி
என்றலு மனதிமுத்த ரிருள்மல மாதி யெல்லாம்.
பொன்றிட அவனை நோக்கிப் புனிதனைக் கினனப் போதே.

பிற முனிவரும் ஆரூர் அடைந்து பிரானை வழிபடல்

204. அருந்தவன் பிரிந்த போதி லாங்குறு முனிவர் தாமும்
விரும்பிய விதியி னுலே வேள்வியை முடித்த வெல்லை
பிரிந்தனர் புரிந்தார் பேசக் கேட்டபே ரெல்லை தன்னைத்
திருந்திய தேவ தீர்த்தத் தாடியே நியதி செய்தே, (78)

205. ....விண் வானவ
ரியற்றி வாய்ந்த
புற்றிடங் கொண்டான் றன்னைப் புனிதனைத்
தரிசித் தெம்முட்
பற்றறுத் தருள்வா யென்று பணிந்தருச்
சனையும் பண்ணி
முற்றிய காத லுற்று முகிழ்த்தகை
யொடுமுன் னின்றே, (79)

206. போதக போற்றி யார்க்கும் புனிதமெய்ப் போதா னந்த
மோதக போற்றி மூல மலவலி முனிவார்க் கன்று
போதக போற்றி பேத மறவுறும் பெரியோ யெங்கும்
வேதக போற்றி யெல்லாம் விரும்பியா ளெமையு
[மென்ரூர். (80)

---

203. காயம் - உடல். இருவினை - நல்வினை, தீவினை என்பன. மூல நோய் - ஆணவ மலம். ஒன்றுதல் என்று என்பது முனிவர் வினை.

204. புரிந்தார் - பூசை புரிந்தார். நியதி - ஒழுங்கு.

206. மோதகம் - ஒருவகை அப்ப வருக்கம்; மகிழ்ச்சியும் ஆம். மெய்ப்போத ஆனந்தமாகிய மோதகம். ஏன்க. மூலவலி

இறைவன் அருளல்

207. வரந்தீன யன்பர்க் கென்று மகிழ்ந்தருள்
புரியும் வள்ளல்
அருந்தவர் தம்மை நோக்கி யனைய
வசநோய் தீர்க்க
மருந்துவன் மீக நாதன் மாற்றினன்
மலங்கள் மூன்றும்
பொருந்தின ரவரப் போதே பூரண
விமல போதம். (81)

வேறு

208. அடக்கினனே யவர்தூல வுடம்பின் பூத
மைந்தினுந்தன் மாத்திரைக ளைந்தினுமைம்பூதம்
அடக்கினனே பூதாதி யாங்காரந் தன்னி
லவையைந்து மவர்க்காதி வைகரி யதனில்
அடக்கினனே தைசதத்தி லைம்பொறியு மனமு
மகங்காரம் புந்திதனி லதுதீனயு மாங்கும்
அடக்கினனே யதனோடு கலைமுதல்மா யைக்கண்
ணப்பாலு முறையுறமா மாயைதனி லடக்கும். (82)

முனிவார் - சத்திநிபாதம் பெற்றவர். பேதம் அற - வேற்றுமை நீங்க; அத்வைதமாய். வேதக - அறிவுமய மானவனே. ஆள் - ஆள்க.

207. மருந்து - மருந்தாகிய. மலங்கள் மூன்று மாற்றினன் என்க. மூன்று மலங்கள் - ஆணவம், மாயை, கர்மம் என்பன. போதம் பொருந்தினர்.

208. தூல உடம்பு - பரு உடல். பூதம் ஐந்து - மண், நீர், நெருப்பு, காற்று, வெளி; (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன). தன்மாத்திரைகள் ஐந்து - ஒலி, ஊறு, உரு, (ஒளி) சுவை, நாற்றம். (சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பன). வைகரி - அகங்காரம் மூன்றனுள் ஒன்று. தைசதம் - இதுவும் மூவகை அகங்காரங்களுள் ஒன்று. ஐம் பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி. மனம், புத்தி, அகங்காரம் என்பன அந்தக்

வேறு

209. பேரறிற் றரையுந் தண்டும் விளங்கிடாப் பிறவி வேராம்
கூரிருண் மலத்தின் சத்தி குன்றியே பொன்ற லாலே
பாரிறு வாயுந் தோன்ரு முளைக்குமோ பயறு வெந்தால்
ஆருற வனுபவிப்பர் முத்தர்தம் மறிவா னந்தம். (83)

பலச்ருதி

210. பன்னியே யிந்த வாக்குப் பகருனர்
கேட்பார் தாமும்
அன்னிய மாமப் பாவ மமலன
துலகஞ் சேர்ந்து
மன்னியே யிருப்பர் மீளார் மடங்குநா
லுலக மெல்லாம்
பின்னம தாகப் பாசம் பெறுவரே
பேரா னந்தம். (84)

கரணங்கள்; இவற்றோடு சித்தத்தையும் சேர்த்து அந்தக் கரணம் நான்கென்பர். கலை முதல் மாயை - கலை, வித்தை, இராகம் புருடன், மாயை என்பன. இவை வித்தியா தத்துவமென்று கூறப் படும்; இவ்வைந்தோடு காலம், நியதி என்றவற்றை முதலில் கூட்டி, வித்தியாபரதத்துவம் ஏழாகும் என்பர். மாமாயை - மூலப்ரகிருதி.

இச்செய்யுள் தத்துவங்கள் ஒடுங்கும் முறையைக் கூறுவதாம்.

209. பயறு வெந்தால் முளைக்குமோ? அதுபோல, இருண் மலத்தின் சக்தி குன்றிப் பொன்றிய காலை பிறவி (அழியும்) என்க. பிறவி வேர் ஆம் இருள் மலம். இருள் மலம் - ஆணவம். 'மருவிற் கருவியுயிர் வாயாத மலம், பிரியவை துஞ்சல் பெறும்' என்ற பதிபசுபாசப்பனுவல் காண்க. முத்தர், தம் அறிவானந்தம் ஆர் உற அனுபவிப்பார் என இயைக்க. பேர் அறிய - நாமமும் கெடில். தரை - புவனம். தண்டும் - உடலும்.

210. இந்த வாக்கு - இந்தக் கதை. பகருனர் - சொல்பவர். அப்பாவம் அந்நியம் ஆம். மன்னி - பொருந்தி. பாசம் பின்னம் அது ஆக - பாசம் உடைந்தொழிய. மடங்கு நாள் பெறுவரே - பிறப்பு அடைவரோ? மீளார் - திரும்பப் பெரூர்.

211. என்றியம் புதலுஞ் சூத னெனுமுனி
வரருந் தாமும்
நன்றென நவின்றே மின்னு நம்பன
தாரூர் தன்னில்
ஒன்றிய விசிட்ட மெல்லா முணரவே
வாஞ்சை யுற்றேமும்
என்றன ரப்போ தந்த முனிவனு
மிசைப்பா மென்றான். (85)

பசுபதி புற்றிடம் பற்றிய சருக்கம் முற்றும்.

---

211. முனிவரர் - முனிச் சிரேஷ்டர். இன்னும் - மேலும். நம்பன் - சிவபிரான். விசிட்டம் - மேன்மை.



[COURTESY : SRI. V. S. THYAGARAJA MUDALIAR]

ஸ்ரீ கமலாம்பிகை

5. பதுமத் திருமகள் பரவிய சருக்கம்

212. மலரயனும் வானவரும் வணங்கவருள் வன்மீக
நாதன் பாதம்
பலர்பணிந்து தாம்வேண்டும் பலமடைந்தா ரவருள்ளும்
பதும மென்னும்
மலருறையு மணங்குபணிந் தரியென்னப் பரிக்கவர
மருளா யென்ன
நிலவணியுஞ் சடைமுடியா னிமலனருள் புரிந்ததையு
நிகழ்த்து வாமே. (1)

பாற்கடலில் இலக்குமியின் தோற்றம்

213. படர்ந்திமையோர் தயித்தியரும் பாற்கடலுள்
டரவு சுற்றிக் [பருவரைநட்
கடைந்தனரின் னமுதுதிக்க வப்பொழுது
கன்னி தோன்றத் [கமலையென்னுங்
தடந்திரைப்பாற் கடலரையன் சந்துட்ட னுய்க்கமலை
தன்னைத் தாங்கி
இடம்பெரிய மாளிகையின் மனைவிகரந் தனிலுதவ
வேந்திக் காத்தாள். (2)

---

212. பதுமத் திருமகள் - லக்ஷ்மி. இது, சருக்கத்தின் முக வுரைச் செய்யுள். பரிக்க - தாங்க; மணக்க. நிலவு - (பிறைச்) சந்திரன்.

213. தயித்தியர் - அசுரர். படர்ந்து - சென்று. பருவரை - பெரிய மலை; மந்தர மலை. அரவு - பாம்பு; வாசுகி. கமலை - இலக்குமி. கடல் அரையன் - சமுத்திர ராஜன். சந்துட்டனுய் - மகிழ்ச்சி பெற்றவனுய். மனைவி கரம் தனில் உதவ - மனைவியின் கையில் கொடுக்க.

திருமால் மதுகைடபரை அழித்தது

214. கரியதிரு மால்காதிற் கலித்துமது கயிடபருங்
குறும்பி தன்னில்
வெருவ வடர்த் தலரயனை வென்றனரப் பொழுதந்த
வேத னேர்ந்தே
பரவியரி பதம்பணிந்து பகர்தலுந்தன் பரிபவம்பார்த்
தஞ்ச லென்றே
அரவணையான் சென்றவரைப் பொருதழித்தா
யிரத்தி னுள்ளே. [ணுண்டையா

கமலை திருமாலை மணக்க விரும்புதல்

215. கடலரைய னரும்புதல்வி கமலைமது கயிடபரைக்
கன்றிக் கொன்ற
மிடலுடையன் மாயனெனக் கேட்டவனைக் கணவனென
விருப்பஞ் செய்தாள்
படுகடலின் பதிபதிக்குப் பாரியெனு மிவர்பரிந்து
வளர்க்கு நாளில்
அடிபணிந்து தந்தைதனை யன்னமுனுந் தன்குறிப்பை
யறிவித் தாளால். (4)

---

214. கலித்து - எழுந்து. காதில் குறும்பி தன்னில் மதுகை டபர் தோன்றினர் என்க. ஓர்ந்து - ஆராய்ந்து. பரவி - தோத் திரம் செய்து. தன் - அயன். பரிபவம் - துன்பம். அரவு அணை யான் - திருமால். ஆண்டை ஆயிரம் - ஆண்டுகள் ஆயிரம். ஆண்டை, ஐ—போலி.

215. கன்றுதல் - கோபித்தல். மிடல் - வலிமை. கடலின் பதி பதிக்குப் பாரி - கடலிலே பதியும் தலைவனை திருமாலுக்கு மனைவி. இதனால், சமுத்திர ராஜனும் கமலையைத் திருமாலுக்கே உரியவளெனக் கருதி வளர்த்து வந்தான் என்க.

தந்தை சிவபிரானைப் பூசிக்கச் சொல்லல்

216. அடைந்திடுவ ரிட்டபல னமலேசன் றனையமரர்
கூடி யந்நாட்
கடைந்தகடல் விடமுண்டு கழலடைந்த வானவரைக்
காத்தான் றன்னைத்
தடந்திரைநீ ரானலரா லருச்சிக்குஞ் சதுரனெனுந்
தந்தை வாக்கைத்
திடம்படக்கொண் டப்பொழுதே சிவனடியை யருச்சிக்கச்
சிரத்தை செய்தாள். (5)

கமலை ஆரூர் அடைதல்

217. பங்கயக்கண் மாயனெனைப் பரிக்கவரந் தரும்பண்ட
ரங்க னென்றே
சங்கரனைச் சதாசிவனைத் தன்னிதைய மலருன்னிக்
கமலை தானே
வங்கமலி வாரிமய மானதன தாதையடி
வணங்கித் தாய்க்கும்
அங்கறிவித் தரியதவம் புரிதலைத்தே வாசிரிய
மடைந்தா ளந்நாள். (6)

---

216. 'அமரர் கடல் கடைந்தபோது தோன்றிய விடத்தை உண்டு, வானவரைக் காத்தான் அமலேசன்; அவனைத் திருமால் அருச்சிக்கும் சதுரன்; அவனை அடைபவர் இட்டபலம் பெறுவர்' என்றவை தந்தை வாக்கு; அதைக் கொண்டு அவன் அடியை அருச்சிக்கச் சிந்தை கொண்டாள் என்க.

தடந்திரை நீரான் - திருமால். சதுரன் - சாமர்த்தியன். திடம் பட - உறுதியாக. சிரத்தை செய்தாள் - கவனித்தாள்.

217. பங்கயக் கண் மாயன் - தாமரை யிதழ்போன்ற கண் களையுடைய திருமால். பரிக்க - மணக்க; பாரி என்ற மனிவிக் குரிய பெயரும் காண்க. பண்டரங்கம் - சிவபிரான்; பழைய அரங்கத்தில் ஆடலை நிகழ்த்துபவன்; பாண்டரங்கம் என்ற கூத்தின் பெயருண்மையும் காண்க. இதய மலர் - மனத் தாமரை. உன்னி - தியானித்து. வங்கம் - அலை. தாதை - சமுத்ர ராஜன். தலை - இடம். தோவாசிரியம் - ஆரூர்.

அவள் வன்மீகரை வழிபடல்

218. படிந்தெழுந்து திகழ்தேவ தீர்த்தத்தில் பரமசிவன்
பதத்தை யுன்னி
முடிந்துமயிர் மெய்க்கணிந்து முழுநீறு நியதியினே
முற்றிப் பூவும்
மடிந்ததிரு மஞ்சனமுங் கரத்தேந்தி வன்மீக
நாதன் றன்னை
நடம்புரியு நாயகனை யருச்சித்து மேல்பாலின்
வைகு நாளின், (7)

சிவபெருமான் தோற்றம்

219. ஒழித்துணலு மேல்பாலுஞ் சிவலிங்கத் தருச்சனைசெய்
தொழுகல் கண்டே
மழுத்தரித்த கரத்தமலன் மாதிலெடு முன்றோன்ற
மலராள் கண்டே
விழித்தரளஞ் சிந்தியிட விமலனடி பணிந்தெழுந்து
விமலை தாளும்
மொழிக்குமறி வருமுதலோய் சயபோற்றி மொழிமுத்தி
மொழிந்தாய் போற்றி. (8)

---

218. படிதல் - முழுகுதல். பதம் - பாதம். மயிர் முடிந்து, நீறு மெய்க்கணிந்து என்றியைக்க. மடிந்த - ஆசாரத்துடன் அமைந்த. திருமஞ்சனம் - அபிஷேக தீர்த்தம். மேல்பால் - மேற்குப் புறத்தில்.

219. உணலும் ஏல் பாலும் ஒழித்து - உண்பதையும் ஏற்கப்படும் பால் பருகுதலையும் நீக்கி. மழு - கோடாலி. மலராள் - இலக்குமி. தரளம் - முத்து. மொழிக்கும் அறிவு அரு முதலோய் - வாக்கினால் அறிந்துரைக்கவரிய மூலப் பொருளே. மொழி முத்தி - சொல்லப்பெறும் முக்தி.

வேறு

பதுமத்திருமகள் பரவீயது

220. சடையாய்சய சடமேற்பிறை தரித்தாய்சய .....
விடையாய்சய விமலாசய விகிர்தாய்சய வெனையும்
உடையாய்சய வுமைபாகமு துடையாய்சய வுருகும்
அடியாருறு மலமாசுக ளறுப்பாய்வர மளிப்பாய். (9)

221. உயிரின்வித மொருமூன்றினு முறைவாய்சய வுறைவாய்
நயனம்மென மதிதியருக் கனையும்மிக நயந்தாய்
அயனண்டரு மறிந்தேற்றுதற் கரியாய்சய வதுலா
சயவொன்றிய புரமூன்றையு மெரித்தாய்
[சயதனுவால். (10)

222. எனவேதுதி யியம்பிப்பர மேசன்மகிழ் வெய்திப்
பனுவீயுனக் குறுதிப்பல மெனவம்பர மேட்டி

---

220. விடையாய் - இடப வாகனனே. விகிர்தன் - (உலகினின்று வேறுபாடுடைய) கடவுள். 'விகிர்தனை விரும்பி யேத்து மிடையீலேன்' (திருநாவுக். திருக்கோவலூர்வீரட். 7).

221. உயிரின் விதம் மூன்று; 'உயிர்க்குயிர் ஒன்றே உயிர்த்திறம் மூன்றே, உயிர் நோயோர் ஐந்தென் றுணர்' என்னும் பதிபசுபாசப்பனுவலைக் காண்க. விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்ற மூன்று. மதி, தி, அருக்கன் என்ற மூன்றும் சிவபிரானின் முக்கண்கள் ஆவர். அயன் - பிரமன். அண்டர் - தேவர். அதுலன் - ஒப்பற்றவன்; 'வான்மிசை யதுலன்' (காஞ்சிப். இரணிச. 5). தனுவால் எரித்தாய் என்றியைக்க.

222. பனு - பன்னு; சொல். அம் - அழகிய. பரமேட்டி - சிவபிரான்; மேலான இடத்தில் இருப்பவன். 'சாய்க்காட்டெம் பரமேட்டி' (திருஞான. திருச்சாய்க்காடு. 4). இனும் - இன்னும்.

எனமாயவன் பரிக்கும்வர மருளென்றலு மீந்தான்
இலும்வேண்டிய வரந்தன்னையு மியம்பென்றென
[விறைவன். (11)

கமலை பெற்ற வரம்

223. என்னுலியற் றியபூசனை கொண்டாய்புரி யிதனுள்
என்னுயக விந்தப்புரி **கமலாலய** மெனும்பேர்
தன்னோடுற வருளென்றலுங் கொடுத்தானது தனையும்
மின்னேரிடை விமலன்பதம் பணிந்தேவிடை
[கொண்டாள். (12)

பலச்ருதி

224. பண்ணோடுறப் படிப்பார்பயன் கேட்பாருமிப் **பனுவல்**
மண்ணோமதித் திடவர்மல வினைதன்னையு மாய்த்தே
விண்ணோர்பத மிகழ்ந்தேவிம லேசன்புரி யமைவாய்
ஒண்மாமல ரிரதந்தனி லுறைவா ருவப்புறவே. (13)

225. உரைத்தாம்திரு மகள்பெற்றிடு வரமும்மினி யுரைப்பாம்
தரைத்தாயென வருமன்னவன் **சமற்காரனன்** புடனே
பரிப்பானையு முலகந்தனைப் படைப்பானையும்
[படைத்தாண்
டரிப்பான்றனை யருச்சித்தவ னருள்பெற்றமை யதுவும்.

---

223. நாயக என்றது சிவபிரானை. மின் நேர் இடை; இலக்குமி.

224. இப்பனுவல் - இந்நூலை; இங்குச் சருக்கத்தைக் குறித்தது. பண் - இசை. மதித்திடு அவர் எனப் பிரிக்க. விண்ணோர் பதம் - தேவர் இருப்பிடமான ஸ்வர்க்கத்தை. விமலேசன் - பரமசிவன். புரி - கைலாயம்.

225. தரை தாய் என வரும் மன்னவன் - பூமிக்குத் தாய் போன்ற அரசன். பரிப்பான் - தாங்குவான். உலகம் படைத்தானையும் படைத்து, ஆண்டு, அரிப்பான் தனை - உலகத்தை உண்டாக்கி அதனை ஆட்சி புரிந்து பிறகு பிரளயத்தில் அழிப்பவ

வேறு

226. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (15)

பதுமத் திருமகள் பரவிய சருக்கம் முற்றும்.

ணுகிய சிவபிரானே. இனி, சமற்காரன் என்னும் மன்னன் ஆளுரில் சிவபிரானைப் பூசித்த வரலாறு கூறுவாம் என்கின்ருர். அதுவும் உரைப்பாம் எனக் கூட்டுக.

226. இச் செய்யுள் சர்க்கந்தோறும் இனிக் கூறப்பெறுவதைக் காண்க. ஐம்புல வேழம் - புலன்களை யானையாகக் கூறியது. குழகன் - அழகன், சிவபிரான்.

6. அசலேசுரச் சருக்கம்

சமற்காரன் வேட்டைமேற் செல்லல்

227. அருக்கனது குலத்துதித்தோ னைர்த மெனுந்தேசத்
ததிபன் வானத்
தருக்கொடையான் சமற்கார னெனும்பெயரான்
தாயு மானுன் [தரணிக்குத்
முருக்கவெனி வனமிருக முரண்சேனை புடையடைய
முன்னே செல்ல
வருக்கமுறும் வலிவேடர் வனத்தையடைந் தனன்வெருவ
மரைமான் மற்றும். (1)

அவன் மானென்றினுல் சாபம் பெறல்

228. சரத்தாலே துணித்தெதிர்ந்த சாபத்தின் வல்லியத்தின்
றலையோ மற்றும்
கரத்தாலே யிளங்கன்று தனக்குமுலை யருத்துமொரு
கவின்மான் கண்டான்
உரத்தாலோர் சரம்விடுத்தா னுறவதனி னுறலுமுலை
வுற்று மானுன்
உருத்தேதகந் தனிற்குட்ட முறப்பெறுக மன்னவென
வுற்றுன் குட்டம். (2)

---

227. அருக்கனது குலம் - சூரிய குலம். அர்தமெனும் தேசம்; வானத்தரு - கற்பகம். தரணிக்குத் தாய்; 225. வன மிருகம் முருக்க எணி - காட்டு விலங்குகளை வேட்டையாடக் கருதி. புடை - பக்கம். வருக்கம் - கூட்டம். மரைமான் - மான் வகைகளுள் ஒன்று.

228. வல்லியம் - புலி. தலையோ என்றதனல் தலைமட்டுமோ? பிறவும் உண்டு என்று கொள்க. அருத்தும் - ஊட்டும். கவின் - அழகிய. உரம் - வலிமை. சரம் - அம்பு. உற - நன்றுக. அத னில் - அம்மானின் உடலில். உளைவுறுதல் - துன்புறுதல். "உன்

ONNEMARIA LIBRARY
30 JUN 1997

மன்னன் இழைத்த குற்றம் இன்னதென்று மான் கூறியது

229. மன்னவற்குக் கடன்வதைக்கை வனமிருகந் தனையதனுல்
வதைத்தேன் யானும்
என்னுடலத் துறக்குட்ட மியம்பினையென் னியெனலு
மிறைவன் மானும்
துன்னியுறுங் கலவிதனிற் றுயிலினிளங் கன்றுமுலை
துய்க்கும் போதும்
இன்னலுறக் கடுங்கணையா லெய்கைவழு
றியம்பக் கேட்டே, [மன்னவர்க்கென்

மன்னன் சிவபூஜை செய்யத் துணிதல்

230. அருந்துயர முற்றரையன் சேனையினை யழைத்தெனுட
லவலந் தன்னைப்
புரிந்தரிய தவஞ்சிவன்றாள் பூசித்துப் போக்குவனீர்
புந்தி தன்னில்
வருந்துதலை யொழிந்தெனது மைந்தருழைச்
வருத்த முற்றே [சென்மினென
பிரிந்தனர்க ளவரதன்பி னந்தவெலை யினைத்தானும்
பிரிந்து சென்றே, (4)

உரு தேகந்தனில் குட்டம் உறப் பெறுக, மன்ன" என்றது மான் இட்ட சாபம். உரு - அழகிய. குட்டம் - குஷ்டநோய்.

229. 'வன மிருகந்தனை வதைக்க மன்னவன் கடன்; 'அதலால் யானும் வதைத்தேன்' என்றது அரசன் மானிடம் கூறியது. இறைவன் - அரசன். துன்னுதல் - நெருங்குதல். கலவி - புணர்ச்சி. முலை துய்த்தல் - பாலூட்டல். கணையால் எய்கை - அம்பால் அடித்தல். மன்னவர்க்கு வழு - அரச தர்மம் செலுத்துபவர்க்குக் குற்றம்.

230. அரையன் - அரசன். அவலம் - துன்பம். அவலம் தன்னைப் போக்குவன் என்றியைக்க. புந்தி - புத்தி. மைந்தர் - அரச குமாரர்கள். அ வரதன் பின் அ எல்லையினைத் தானும் பிரிந்தே என்க. வரதன் - வள்ளல். எல்லை - இடம்.

மன்னன் முயற்சிகள்

231. ஆடினனே தீர்த்தங்க ளனைத்தினும்புக் கவனிதனி
லவல வந்நோய்
வீடியதோ வலமருந்து விழுங்கியுமந் திரந்தன்னை
விளம்ப லானும்
வாடியுள மன்னவன்முன் மறைவனத்தைச்
மனத்தி னுள்ளே [சென்றடைந்து
நாடிநமை யாளுடையன் பதநாடிச் சருகருந்தி
வைகு நாளின், (5)

அரசன் அந்தணர்களை வேண்டல்

232. அந்தணர்க ளருந்தீர்த்த மாடியிட நாடினர்க
ளனைந்தா ராங்கே
சிந்தைமகிழ் வுறத்தானுஞ் சென்றெதிரே
சிறப்புச் செய்தே [பணிந்தவர்க்குச்
மந்திரநா வினரேநீ ரென்னுடலின் மாசுதனை
மாற்றி யாரண
மந்திரத்தான் மருந்துகளா லலதுமா தீர்த்தத்தால்
வரத்தி னலும், (6)

ஆரூர் சங்க தீர்த்தத்தின் பெருமையை அந்தணர் கூறல்

233. அரிதாகி லென்னுடலத் தவலத்தை மாற்றுதனும்
மருளி னலே
எரிவீழ்வேன் விடங்கொள்வே னிழப்பேனிவ் வுடலத்தை
யெனலும் வேந்தே

---

231. நோய் வீடியதோ அல - அக் குஷ்டம் நீங்கவே இல்லை. மறைவனம் - வேதாரணியம். நமை ஆளுடையன் - சிவபிரான். பதம் - பாதம். சருகு - காய்ந்த இலை.

232. ஆங்கே - அம்மறை வனத்தே. சிறப்பு - பூஜை முதலியன. ஆரண மந்திரம் - வேத மந்திரம்.

233. அவலத்தை மாற்றுதல் அரிதாகில் என்றியைக்க. எரி - நெருப்பில். விடம் - விஷம். வெருவேல் - அஞ்சாதே. ஆடில் நீங்கும் என்றியைக்க.

வெருவேலுன் னுடற்பழுது விடுமமலன் சன்னிதியில்
விளங்க நீங்குந்
திருவாரூர் தனிற்சங்க தீர்த்தத்தீற் சிரத்தையொடு
சென்றே யாடில், (7)

234. என்றியம்பத் தீர்த்தவித மெண்ணியவந் தனைரவர்தா
ளிறைஞ்சி வேந்தன்
இன்றுதிரு வாரூரி னிமலனது சன்னிதியி
லிகழுந் தீர்த்தம்
ஒன்றுளதென் றுரைசெய்தீ ருரைத்திடுமி னத்தீர்த்த
விசிட்ட மோர
இன்றெனக்கென் றியம்புதலு மவருமது தனைக்கேளீ
ரிசைப்பா மென்றார். (8)

சங்கமுனி செய்த பிழை

235. **சங்கமுனி** யெனுமறையோன் சரகாதி தனையருந்துந்
தவத்தான் சார்ந்தான்
துங்கவனந் தனிலங்கே **லிகிதமுனி** யெனவெவருஞ்
சொல்லும் பேரோன்
மங்கலவா சிரமத்தில் புகுந்தவன்றன் வைத்தகனி
யதனை வெளவி
நுங்கினனே நூல்விதியு நோக்காதே மிகுபசியால்
நொந்து தானே. (9)

---

234. இகழும் - இருக்கும். விசிட்டம் - மேன்மை. ஓர - உணர.

235. மறையோன் - அந்தணன். லிகிதமுனி; இப்பெயர் திருவாரூர்ப் புராணத்தில் கூறப் பெறவில்லை. கனி - பழம். நுங்குதல் - உண்டல்.

சங்கமுனி கழுவாய் கேட்டல்

236. ஆங்கணைந்தே லிகிதமுனி தான்வைத்த கனியருந்து
மவனைக் கண்டான்
ஈங்கிருந்த கனியினைநீ யெடுத்தயின்ரு யான்முன்செய்
தவத்தா லென்ன
ஓங்குபுக முடையோயுன் னனுமதியைப் பெறலின்றி
யுனலாற் பாவம்
தாங்கினனிற் றவத்துவகை சாற்றெனக்கென் றழச்சங்க
முனிதான் தாழ்ந்தே, (10)

சங்கமுனியின் கைகளைத் துண்டித்தல்

237. அங்கையினற் றொட்டெடுத்தே யருந்தினைநீ கனிதன்னை
யாத லாலுன்
அங்கையினை யரியிலறு மந்தவினை யெனலிகித
னவனு நீயென்
அங்கையினை யரியென்பா லன்புண்டே லெனலிகித
னறிவு நொந்தே
சங்கமுனி யிருகரமுந் தடிந்தனனே யவனேவத்
தவரு தேதான். (11)

---

236. 'யான் முன் செய் தவத்தால் ஈங்கிருந்த கனி நீ அயின்ரு' என்றது லிகித முனியின் கூற்று. யான் தவத்தால் பெற்ற கனியை நீ அயின்ரு என்றனன் என்க. நின் தவத்து வகை சாற்று - உன் தவத்திலை, யான் செய்த குற்றத்திற்குக் கழுவாய் காட்டு என்று லிகித முனியைச் சங்கமுனி கேட்டனன் என்க.

237. அங்கை - உள்ளங்கை. அரியில் - வெட்டினால். வினை அறும் என்க. இரு கரமும் - இரண்டு கைகளையும். தடிதல் - வெட்டுதல். சங்க முனியின் விருப்பத்தாலேதான் லிகிதமுனி அவன் கைகளை அரிந்தனன் என்பது வற்புறுத்தப் பெற்றது.

சங்கமுனி ஆரூரை யடைந்து தவம் புரிதல்

238. அந்தவனந் தனைநீங்கி யாரூரைச் சங்கமுனி
யடைந்து கண்டே
பந்தவினை யினையறுக்கும் பாற்குளத்தை யதுதன்னிற்
படிந்து பார்த்தே
புந்திமகிழ் வுறப்புற்றி லிலங்கியிடும் போதகனைப்
பணிந்து போற்றிச்
சிந்தனைசெய் தவ்வேலை யுனலுமற வரியதவஞ்
செய்யு நாளில். (12)

கடவுள் முன் தோன்றல்

239. அனைத்துயிர்க்கு முயிரான னவரவரு ளிட்டமெலா
மறிவா னன்பால்
தனைப்பணிந்து நினைந்தரிய தவம்புரிவார்க் கிட்டவரந்
தன்னை யீவான்
வினைப்பகவன் விமலேசன் சங்கமுனிக் கருள்புரிவான்
விண்ணோர் போற்றத்
துனைத்தநடை விடைமிசையிற் றோன்றுதலும்
துதித்தா னங்கே. [பணிந்துமுனி

முனிவன் இழந்த கைகளைப்பெற வேண்டல்

240. அருமுனிவ விட்டவர மறைனினக்குத் தருவமென
வமல னன்பால்
நிருமலனே யுயிர்த்துணையே நினைப்பார்கள் வினைப்பார
நீக்கு வாயென்

---

238. பால்குளம் - சங்க தீர்த்தத்தைக் குறித்ததாம். வேலை - வேளை. உனல் - உன்னல், கருதுதல்.

239. இட்டம் - இஷ்டம்; விருப்பம். துனைத்த - வேகமாகச் செல்லும் இயல்புடைய. விடை - இடபம்.

240. இட்ட வரம் அறை - நீ விரும்பிய வரத்தைக் கூறு. பிணியினுக்கும் பெரு மருந்து நீ அல்லால்; இதன்பின்

இருகரமு மிழந்தேனுன் னின்னருளா லிவைபெறவே
யெண்ணி னேனுன்
பெருமருந்து நீயல்லாற் பிணியினுக்கு மெனமுனிதான்
பேசி னனே. (14)

சங்கதீர்த்த மாடச் சிவபிரான் அருளல்

241. சித்திரைமா தத்துமுதற் பக்கத்தி னிறைந்தொளிருந்
திங்கள் சேர்ந்த
சித்திரையு னுபவசியாற் றீர்த்தமா டினர்தமக்குத்
தீரு நோயோர்
கொத்தைமுடங் கூன்குறைந்த வுறுப்பதிக
மற்றுங் குற்றம் [வுறுப்படைவின்
இத்தனையு மறுமிவையிற் சிராத்த முறு வார்பிதிர்க
ளின்புறுவ ரின்றே, (15)

242. அறைந்துமறைந் தனனமல னருமுனியும் பணிந்தமல
னடியை யன்டால்
சிறந்துறுமத் தீர்த்தத்திற் செப்பியவக் காலத்திற்
றிளைத்து மூழ்கப்
பிறந்தனகைத் தலமிரண்டுஞ் சங்கமுனி யிருகரமும்
பெற்ற நீரை
அறங்கிளரு மியல்சங்க தீர்த்தமென வறைந்திடுங்கா
ணறியா யாரும். (16)

வேறுண்டோ என்றது தொக்கது; 'பெரும்பிணிக்கு' என்ற பாடம் கிடைத்தால் சிறக்கும்.

241. முதல் பக்கம் - பூர்வபக்ஷம்; சுக்கிலபக்ஷமும் ஆம். திங்கள் சேர்ந்த சித்திரை - சித்திரா நக்ஷத்திரம் கூடிய பௌர்ணமி. உபவசியால் - உபவாசத்துடன்; பட்டினியுடன். கொத்தை - சொத்தை. அடைவின் - ஒருங்கு. அறும் - நீங்கும். சிராத்தம் - ஒருவகைப் பிதிர்க்கடன்.

242. அன்பாற் பணிந்து என இயைக்க. செப்பிய அ காலம் - 241-ஆம் செய்யுளிற் கூறிய காலம். கைத்தலம் இரண்டும் பிறந்

முனிவர் சமற்காரனுக்குக் கூறியது

243. அற்றுவிடு முன்னுடலத் தவல முளீ யாங்கடைந்தங்
[2]நீரி னுடில்
[1]புற்றிடங்கொண் மருப்பானைப் பொருவிலியைப்
[3]புனித னுவை [பதமுன்னிப்
கொற்றவனே யென்றருளாற் கூறவவ ருடன்வேந்தன்
கூடிச் சேர்ந்தான்
பற்றினர்தம் பற்றறுக்கு மாரூரா னெதிருறுபாற்
குண்டப் பாரம். (17)

அரசன் நோய் தீர்ந்தமை

244. அந்தணர்த மனுமதியா னக்கால மறிந்தந்த
வாவி மூழ்கிச்
செந்தியிற் செம்பொனெனத் தன்னுடலந்
தெளிந்தான் சிந்தை [திகழ்தல்கண்டான்
புந்திமகிழ்ந் தெழிலரையன் புற்றிடங்கொண்
பொருளைப் போற்றி [டிருக்குமரும்
அந்தணரை யடிபணிந்து மருளாலென் னுடலவல
மற்றே னென்றான். (18)

தன என்க. யாரும் அறைந்திடும் என இயைக்க. முனிவரின் வேண்டுகோளால் சங்க தீர்த்தம் என்னும் பெயரால் இறைவர் அளித்தனர் என்பது திருவாரூர்ப் புராணம்.

243. அவலம், இங்குக் குட்டநோய். பொருவிலி - ஒப்பற்றவன். புனிதன் ஆவை - தூயவன் ஆவாய். எதிர்உறு - சந்நிதியில் உள்ள. பாற்குண்டப் பாரம் - பாற்குளத்தின் கரை.

244. அ காலம் - சித்ரா பௌர்ணமி நாள். வாவி - குளம். எழில் - அழகு.

அரசன் சிவலிங்கமொன்று தாபிக்க விரும்புதல்

245. அருந்தவத்தைப் புரிந்தாரூர் வன்மீகத் திறைகோயிற்
கயலே யான்முன்
திருந்தியுறு சிவலிங்கந் தாபித்தே யருச்சிக்கச்
சிந்தை செய்தேன்
புரிந்துமக்கென் புவியீனத்துந் தருகின்றேன்
புகன்மு னப்போ [கேண்மினெனப்
தருந்தவரு மவனிதனை யாங்காக்க மாட்டோமென்
றறைந்தா ராங்கே. (19)

அந்தணர் கூறல்

246. காத்திடுவ ரென்புதல்வர் காசினியை யென்றரையன்
கழறுங் காலை
ஓர்த்துணர்ந்த வந்தணரு மொழுங்கல்ல வெமக்கிதுவெம்
மூர்கே ளுனம்
தீர்த்துவரந் தரும்பொன்னித் தீர்த்தத்தின் மாயூரந்
திருவெண் காடும்
பார்த்திபனே யினியெமக்கித் திருவாரூர்ப் புடைவசிக்கை
பாங்கென் றாரே. (20)

நகரமொன்றை அந்தணர்க்கு அளித்தல்

247. அப்பொழுது மன்னவனு மகமகிழ்ந்து திருவாரூர்க்
கீசா னத்தில்
ஒப்பரிய புரிதன்னை யுரைவிதியாச் சமைப்பித்தே
யூனந் தீர்ந்த

---

245. யான்தான் - யான்முன். அரசன் அந்தணர்க்குப் புவியை அளிக்க எண்ண, அவர்கள் தாம் புவி காக்க மாட்டாமையைத் தெரிவித்தனர்.

246. இது - அரசு பெறுதல். எம் ஊர் கேள். ஊனம் - குறைகள். மாயூரமும், திருவெண்காடும் எம் ஊர்கள்; இனி யாம் ஆரூரில் வசித்தலும் பாங்காகும் என்றனர் என்க.

247. ஈசானம் - வடகிழக்கு. புரி - நகரம். உரைவிதி - நூல்களிற் சொல்லப்பட்ட விதிப்படி. சமைப்பித்து - உண்டாக்கி.

விப்பிரரைப் பதம்விளக்கி விதிவழியாற் கொடுத்தன ளுள்
விருப்ப முற்றே
அப்பலவு நிலநிதிப்பட் டாடைமணி யாபரண
மாதி யெல்லாம். (21)

அந்நகரைக் காக்க முறை வகுத்தல்

248. அந்தணர்க்கிப் பதியுதவ லாலுயர்ந்த னெனமகிழ்ச்சி
யகத்தி னுற்றுன்
மைந்தரையு மனைச்சரையு மம்மினென வழைத்துமறை
யவற்கே யான்றுன்
சிந்தைமகிழ் வுறவிந்தப் புரிதன்னைச் செய்வித்துக்
கொடுத்தேதன் நீர்தாம்
மந்திரநா வினரிவரைக் காத்திடுமின் னிடையூறு
வாரா வண்ணம், (22)

அந்தணரைக் காப்போர் அடையும் பேறுகள்

249. அகமகிழ்ச்சி யுறவல்ல லறவறைந்து சடங்கனைத்து
மமையச் செய்யப்
பகைகளைந்து காக்கின்ற பார்த்திபராம் பெற்றிடுவர்
பாரா ளின்பம்
சகமதனிற் பகையனைத்துந் தடுத்திடுவர் தரித்திடுவர்
விசயந் தன்னைப்
புகழுறவே புத்திரரும் பவுத்திரரும் பிரியாதே
பொருந்த வாழ்வார். (23)

விப்பிரர் - அந்தணர். பதம் - பாதங்களை. அந்தணர்க்கு ஓர் ஊரைத் தானம் செய்தான் என்க. பலவும் கொடுத்தனன், என்க.

248. மந்திர நாவினர் - அந்தணர்.

249. பார்த்திபர் - அரசர். அந்தணரைக் காக்கின்ற அரசர் பெற்றிடுவர் என்க. விசயம் - வெற்றி.

வேறு

அந்தணர்க்கு இடையூறு புரிபவர் அடையும் கேடுகள்

250. அந்தணர்க்குப் புரிவர்க ளனிட்டம் யாவ
ரருந்துயரத் தடைவார்க ளாக்கை நோயால்
தந்துணைவர் தமைப்புதல்வர் தமையி ழப்பர்
தாரத்தைத் தனத்தை மற்றும் .....
வெந்துயர நரகத்தின் வீழ்ந்திடுவா ராழ்ந்திடுவார்
மீள மாட்டார்
சந்ததியு மறுதலினு லிவையறிந்து நீரிவரைத்
தாங்கிக் காமின். (24)

சமற்காரன் தவம் புரிந்தமை

251. என்றியம்பி யவர்தம்மைச் செல்மினென வின்னருளா
லெலவித் தானும்
தன்றவறு தீனத்தீர்த்த தடாகத்தீ ரஞ்சமைத்துச்
சாலை யொன்று
பொன்றிகழுஞ் சடையினனைப் பூசித்துத் தவம்புரிந்தான்
புசித்துக் காயை
ஒன்றியுறச் சதவருடஞ் சதவருடஞ் சருகருந்தி
யுறைந்தா னங்கே. (25)

---

250. அனிட்டம் - விருப்பமற்றவை; கேடு. ஆக்கை - உடல். ஆரூர்க்குச் சமற்காரபுரம் என்ற பெயர் உண்டானமை இதனால் என்க.

251. அவர் தம்மை - மைந்தர் அமைச்சர் முதலானோரை. தவறு - பாபம். நீரம் - கரை; சிறு வரம்பு. தடாகத் தீரத்தில் சாலையொன்று சமைத்து என்க. காயை அருந்திச் சதவருடமும், சருகருந்திச் சதவருடமும் தவம்புரிந்தான் என்க. சத வருடம் - நூறு ஆண்டுகள்.

சிவபெருமான் காட்சியளித்து வினவுதல்

252. புரிந்தனனே யருந்தவத்தைப் புனலருந்திச் சதவருடம்
புகழ யாரும்
அருந்தியருந் தவம்புரிந்தா னிலிலனையம் பதிற்றிரட்டி
யாண்டு செல்லத்
திருந்துமருந் தவமதித்துச் சினவிடைமேற்
னிட்டஞ் செப்பாய் [சிவன்றிகழ்ந்து
அருந்தவனே யெனவவனு மமலனடி பணிந்தெழுந்தே
யறைய லுற்றான். (26)

அசலேச இலிங்கம் தாபிக்க அருளல்

253. சிறப்புறுமிப் புரிதன்னிற் சிவலிங்கந் தாபிக்கச்
சிந்தை செய்தேன்
பிறப்பிலியே யவ்விலிங்கம் பிரியாதே நீயுறையப்
பெறுதல் தானே
பெறற்கரிய பேறென்றான் பெருமானு மவ்விலிங்கம்
பிரியே மென்றும்
உறப்பெறுமே யசலேச னெனும்பெயரவ் விலிங்கமென
வுற்றான் வானின். (27)

---

252. அனிலன் - காற்று. அனிலனை அருந்தி அருந்தவம் புரிந்தான் என்க. ஐம்பதிற்றிரட்டி ஆண்டு - நூறு ஆண்டுகள். திருந்தும் அரும் தவம் மதித்து. இட்டம் - விருப்பம். அறையல் - சொல்லல்.

253. சிந்தை செய்தேன் - கருதினேன். உறைபெறுதல் - உறைதல் என்றும் பிரியேம் என்றது பெருமான் கூறியது. வானின் உற்றான் - வானத்தில் தோன்றிக் கூறினன். உன் இட்டம் செப்பாய், என்று பிரிக்க.

மன்னன் அசலேசரைத் தாபித்தல்

254. அத்திசையை நோக்கியலர் மலர்தூவி யமலனடி
பணிந்து மன்னன்
பத்தியினுற் பணிசெய்வார்க் கருள்புரியும் பரமேசன்
பாவி யேனைப்
புத்திபணி முன்றேன்றிப் புரிந்தவர மளித்ததென்னை
வென்று போற்றி
முத்திதரு மனுதிமல முத்தனடி யருச்சிக்க
முயன்று தானே, (28)

அசலேசரின் பெருமை

255. புரிந்தமர ரியற்றியபுற் றிடங்கொண்டா லயத்திற்
பூர்வத் தென்பால்
திருந்தியுற வாலயத்தைச் செய்வித்துச் சிவலிங்கந்
தாபித் தங்கே
விரிந்தவிதி வழியாலே யருச்சிக்கத் தானேக்கி
விசிட்ட லிங்கம்
பரிந்துபரி சிக்கவரும் பரலோகஞ் சேர்ந்திருப்பர்
பாவந் தீர்ந்தே. (29)

256. அடைந்தேயவ் வாரூரப் பச்சிமதிக் காரனக
னசலன் றன்னைத்
தொடர்ந்தவினை துடைப்பானைத் தோன்றுத
துகளி லானைப் [துணையவனைத்

---

254. மன்னன் - சமற்காரன். புத்திபணி - அறிவுட்டி; பண்ணி என்றது பணி என்று குறுகிற்று.

255. பூர்வத் தென்பால் - தென்கிழக்கில். பூர்வம் - கிழக்கு. விசிட்டம்; விசிஷ்டம் - மேன்மை. பரிசித்தல் - தொடுதல். அரும் பரலோகம் என்று பிரிக்க.

256. பச்சிம திக்கு ஆர் அனகன் அசலன் தன்னை எனப் பிரிக்க. பச்சிமம் - மேற்கு. ஆர் - நிறைந்த. அனகன் - குற்ற

படிந்துபுத மலரிணையைப் பார்ப்பமெனக் கருதினரும்
பாவந் தீர்ந்து
திடம்பெறவே திவிதலத்திற் செல்வத்தைப் பெற்றிருந்து
தீளைப்பார் திண்ணம். (30)

257. மாகத்தி னன்பாகச் சதுர்த்தசியன் றதனையென்று
மறவாப் பத்தர்
மோகத்தை முனிவானை முக்கணனை யறநெறியின்
முதல்வன் றன்னை
யாகத்து முறைவானை யானெய்யால் கம்பளத்தா
லருச்சித் தார்கள்
போகத்தாம் புரிந்தவினை மூன்றுபரு வந்தனினும்
புனித ராவார். (31)

சிவபிரான் அசலேசரின் நீங்காதிருத்தற்கு ஏது

258. நீங்காமற் சிவலிங்கந் தனில்நிற்போ மென்றமல
னிகழ்த்தி னன்முன்
நீங்காதே நிற்பன்கொ லிங்கியுறுங் கொல்லென்றே
நிருப னெண்ண

மற்றவன். படிந்து - வணங்கி. துகள் - குற்றம். பார்ப்பம் - பார்ப்போம் என்றதன் திரிபு. திவி தலம் - தேவ உலகம்.

257. மாகத்தினில் - மாக மாதத்தில். மாகம் - மாசி. அதனை - அந்நாளை. மோகத்தை முனிவான் - மாயையை நீக்குபவன்; சிவ பெருமான். யாகத்தும் உறைவான் - யாகங்களில் தங்குபவன். ஆன் நெய் - பசு நெய்யால். கம்பளம் - போர்வை. மூன்று பருவம் தாம் புரிந்த வினை போக, என்க. பருவம் - காலம்; இறப்பு நிகழ்வு எதிர்வு என்பன.

258. முன் நிகழ்த்தினன் - முன்பு அருளினன். நிருபன் - அரசன். பூங்கோயில் - அழகிய கோயில். சாயை - நிழல். ஒரு புடை - ஒரு பக்கம். அசலேசரில் சிவபிரான் தங்கியிருத்தற்கு அடையாளம், அவ்விலிங்கத்தின் நிழல் எப்போதும் ஒரு புற மாகவே விழும் என்பதாம். பாராய் - காண். இங்குத் திருவாரூர் புராணச் செய்யுட்கள் கூறுவன :—

நீங்காதிவ் விலிங்கத்தி னிற்பாம்யாம் நிச்சயமா
மிதனுக் கேது
பூங்கோயிற் சிவலிங்கச் சாயையொரு புடையன்றிப்
புணரா பாராய். (32)

அரசன் அசலேசரைத் தரிசித்தல்

259 என்றெழலும் வான்வாணி யிறைபருளா லரையனவி
டுக்க ணீங்கி
அன்றுபுகுந் தாலயத்தில் சிவலிங்க நீழலொரு
புடையே யன்றிச்
சென்றியங்காத் திறந்தன்னைத் தரிசித்தான் களிப்புற்றுன்
சிந்தை தன்னில்
இன்றுமது தான்பார்க்கி லிலங்குமொரு திசையினிலங்
காமற் றெங்கும். (33)

அவ்விலிங்கத்தின் அதிசய ஆற்றல்

260. இருமூன்று மாதத்து ளிறப்பார்கண் காணுதவ்
விலிங்க நிழல்
இருமூன்று மாதத்தை யிறந்ததினந் தனிலிருப்பார்க்
கிலங்குங் கண்ணின்

எந்த ஞான்றுமே யுலக முய்ந்திட விருங்கருணை
தந்து றைந்திடு மதற்கொரு குறிதனி ஞான
வந்த லிங்க நன்னிழல் குண திசையி லன்றி
வந்தி டாதொரு திசையினு மிம்மொழி வாய்மை (17)

ஆறு திங்களி லிறப்பவர் நோக்கினு லந்த
வீறிலா நிழல் காணுரு தென்றிரு விசும்பில்
கூறு வாணி கேட்ட ருந்தவர் குழாத்தொடுங் கோமான்
மாறுரு தபேருவகை யின்ம லர்ந்தன் மாதோ.

259. வான் வாணி - ஆகாயவாணி. இடுக்கண் - துன்பம். இலங்குதல் - விளங்குதல்.

260. ஆறு மாதங்களுக்குள் மரணம் அடைபவர் கண்ணுக்கு அந்நிழல் காணுது; அதாவது அவ்விலிங்க நிழல் கண்ணுக்குத்

உருமூன்று மாய்ப்பாரே லோங்காரப் பொருளாகி
யூனந் தீர்ந்தே
தருவானந் தமக்கின்பஞ் சதாசிவனங் கியலிங்கச்
சாயை தானே. (34)

சமற்காரன் அசலேசர்க்கு விழா முதலியன நடப்பித்தல்

261. நிதியுதவி நீர்வாய்த்த நிலனுதவி நீடியபூ
ணுடை தானும்
விதிவழியிற் றிருவிழவும் வியப்புறவே செய்வித்து
விண்ணோர்க் கெல்லாம்
அதிபதியை யசலேச னெனுநாம முடையானை
யமலன் றன்னைச்
சதிவழியி னடம்புரியுஞ் சங்கரனைப் பதம்பணிந்து
சமற்கா ரன்றான், (35)

வேறு

சமற்காரன் தோத்திரம் செய்தல்

262. இந்தி ரன்புய முறித்து ருத்தெரி
கரத்தி னன்பலி யிறுத்துமே
அந்த ரஞ்செலு மருக்க னைத்தவறு
மெச்ச னைத்தலை யரிந்துமே

தெரியப்பெறுதார் ஆறு மாதங்களுள் இறப்பார் என்பது. இறந்த தினம் - கடந்த நாள். கண்ணின் இலங்கும் - கண்ணுக்குத் தெரியும். அங்கு, இயல் இலிங்கச் சாயைதான் சதாசிவன் நம் தமக்கு இன்பம் தருவான். இரு மூன்று - தூல, சூக்கும, காரண சரீரங்கள்.

261. நிதி - செல்வம். பூண் - ஆபரணம். சதி - தாளவொத்து.

262. இச் செய்யுளில் தக்கயாகத்தில் நிகழ்ந்த இந்திரன் கையை ஒடித்தது, அக்கினியை உருத்தது, சூரியன் பல்லைத் தகர்த்தது, எச்சனைத் தலை அரிந்தது, சந்திரனை மிதித்தது, தக்கனைத் தலை தடிந்தது, ஆகிய செய்திகள் கூறப் பெறுகின்றன. தக்கன் - தக்ஷன்; இவன் மகள், தாக்ஷாயணி. எச்சன் - யாக சொரூபி. பரிவை ஓட்டி - துன்பங்களை ஓட்டி.

சந்தி ரன்றனை மிதித்தொ றுத்தறி
விறக்க னைத்தலை தடிந்துமே
பந்தெ ரிந்துவிளை யாடு வித்தபர
மேட்டி யேபரிவை யோட்டியே. (36)

263. போற்றி போற்றிசய பூத பஞ்சகவு
டற்பொ றைச்சிறை முறித்துமேல்
ஏற்றி வைத்திருளி ரித்தி டென்னுமடி
யார்த மக்கருளு மீசனே
போற்றி போற்றிபுல னைந்து நான்குமனு
காத போதினுறு போதனே
மாற்றி யாளெனையு மாயை மோகமும
யக்கி னைக்கொலு மருந்தனே. (37)

வேறு

264. என்றுதித் தியம்புதலு மிறையமல னரையனுடல்
வெறுத்த தண்ணிக்
கன்றுமுட லினைவினையைக் காயத்தின் காரணத்தை
யனுதி யேதான்
ஒன்றியுறு மலத்தினையு மோட்டியுத வினனவனுக்
குலவா வின்பம்
தென்றிசையிற் றலவிதத்திம் முறையாலுஞ் சிறப்புளதெ
திருவா ரூர்தான். (38)

---

263. பஞ்சகம் - ஐந்தின் கூட்டம். பொறை - பாரம். உடல் பொறை பூத பஞ்சகம் என்க. சிறை என்றமை, கட்டுப்பாட்டுள் அடங்கி யிருத்தலால். முறித்தல் - ஒடித்து நீக்குதல். இருள் - அஞ்ஞானம். இரித்தல் - ஓட்டுதல். புலனைந்து - புறக்கருவிகளின் புலன்கள். நான்கு - அந்தக்கரணங்கள். இவ்வொன்பதும் அடங்கினபோது போதிப்பவன். என்னையும் மாற்றி ஆள் என இயைக்க. மருந்தன் - வைத்தியன். கொலும் - கொல்லும்.

264. இறை அமலன் - சிவபிரான். அண்ணுதல் - அடுத்தல். அரசன் தன் முயற்சியால் உடல் வெறுத்ததை அடுத்து. கன்றும் - வருந்தும். வினை - இருவினைகளையும். காயத்தின் கார

பலச்ருதி

265. உரைப்பாரு மிந்தவிய லுகப்புறவே கேட்பாரு
மொழித்துப் பாவம்
இருப்பாரின் புறவிறைவன் சிவலோகத் திலினிசைப்பா
மிருண்ட பாசம்
அரிப்பானை யானந்தே சுரனயன்மா லிருவரையு
மழித்தங் கமாலை
பரிப்பானைப் பதம்பணிந்த பத்தருறும் பலத்தினையும்
பாங்கி னுலே. (39)

வேறு

புராண வரலாறு

266. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (40)

அசலேசுரச் சருக்கம் முற்றும்

ணம் = அவித்தை. அதனையே தான் ஒன்றி உறும் மலம் = ஆணவம். இவற்றைப் படிப்படியே நீக்கியருளினன். உல்வா இன்பம் உதவினன் என்க. உல்வா = கொடாத. உலவா இன்பம் = வீட்டின்பம். திருவாரூரின் சிறப்பு இம்முறையாலும் உளது.

265. இயல் = சரக்கம். இசைத்தல் = சொல்லுதல். அயன், மால் இருவரையும் அழித்து அங்க மாலையாக அவர்களின் தலைகளைச் சுமப்பானை. ஆனந்தேசுவரச் சருக்கம் அடுத்து வருவதை இங்கு முன்கூறி, பாங்கினுலே இசைப்பாம் என்றனர் என்க.

7. ஆனந்தேசுரச் சருக்கம்

ஆனந்தேசர் ஆலயத்தின் எல்லைகள்

267. வானவர்க ளியற்றவுறும் வன்மீகத் திறைகோயில்
வடமேற் பாகம்
ஊனவிரு யொழித்தும்ப ருலகுதவு மொளிர்தேவ
தீர்த்தக் கிழ்பால்
மானனைய நோக்கிகம லாலயநா யகிவரமார்
கோயிற் றென்கீழ்
ஞானமய னானந்தே சுரனமருந் திருவெல்லை
நாடுங் காலே. (1)

பத்திரசேனனின் வழிபாடு

268. பருதிகுலந் தனிலுதித்தான் பத்திரசே னன்றன்முள்
பணியார் தம்மை
வெருவவடர்த் திடுதிறலான் வேளினேசே ருருவுடையான்
வியலூர் காஞ்சிப்
புரிபுரப்பா னவன்பாரி கமலவதி யெனுமிவர்தம்
பூரு வத்தின்
உருவுமுண ராநந்தே சுரனருளா லுணர்ந்தவன்ரு
ளுளத்துள் வைத்தார். (2)

---

267. உறும் - அமையும். ஊனம் - திமை. வரம் ஆர் - மேன்மை நிறைந்த. வரங்கள் (தருதல்) நிறைந்த எனலும் ஆம். நாடும்கால் - ஆராயும்போது.

268. பருதிகுலம் - சூரியவமிசம். தான் பணியார் - பகைவர். அடர்த்திடுதல் - போரில் நெருக்கியழித்தல். திறல் - வலிமை. வேள் - மன்மதன். நேர் - ஒத்த. வியன் ; வியம் - பெருமை. புரப்பான் - ஆள்வான். பூருவத்தின் உருவும் உணர் என்றதனால், அம் மன்னன் தன் முற் பிறப்பு வரலாற்றை உணர்ந்தவன் என்பது புலப்படுகிறது. பட்டினசாமி நாய்கன் என்ற பெயருடைய வணி

269. வரமுடைய விசாகத் திற்புகுந்தா ரூர்.....
வரநீர் மூழ்கிப்
பரிவுடனே யானந்தே சுரன்கமல பாதத்திற்
பணிந்து போற்றி
இரவுபக லுண்ணாது முறங்காது மினமலர்தூ
யெண்ணந் தன்னின்
பிரிவறவே யவனடியைப் பேணியெழுத் தைந்தினையும்
பேசித் தாமே, (3)

270. வேதியர்கள் வேதவொலி தாளவொலி முழவினொலி
வீணை யோசை
கோதையர்கள் கீதவொலி யிசைசங்கழ வனசக்.....
கொங்கை யார்.....
நீதியுற நடம்புரிய நிசிவேலை கடந்துவர
நீரின் மூழ்கி
ஆதிநடு வந்தமிலா வமலனடி பணிந்தவனின்
னருளைப் பெற்றே, (4)

அரசன் காஞ்சிக்குத் திரும்புதல்

271. அந்தணர்க்கு மருந்தவர்க்கு மலந்தவர்க்கு மாகத்தி
னேயால் நொந்து
வந்தவர்க்கு மீந்தனமும் வத்திரமு மனமகிழ
வாய்மை பேசிச்

கள் ஆனந்தசரைப் பூசித்து அடுத்த பிறவியில் பத்திரசேனனாய்ப் பிறந்தான் என்று திருவாரூர்ப் புராணம் கூறும். அவன்பாரி கமலவதி; இவளும் முன் பிறப்பில் வணிகன் மனைவியாயிருந்து ஆனந்தசனை வழிபட்டவள்.

269.- விசாகம் = வைகாசி மாதம் விசாக நக்ஷத்திரம் கூடிய அன்று. வரம் = மேன்மை. இன மலர் = ஒன்றுக்கொன்று ஒத்த மலர்; ஒரேவகையினதும் ஆம். எண்ணம் = மனம்.

270. முழவு = ஒருவகை தோற்கருவி; மத்தளம். வனசம் = தாமரை. வேலை = வேளை.

271. அலந்தவர் = துன்புற்றவர்; வறியர்.

சிந்தனைசெய் தமலேசன் றிருவடியைப் புடையடையுஞ்
சேனை யோடும்
புந்திமகிழ் வுறத்தமது காஞ்சியெனும் பொருவரிய
புரிபுட் புக்கார். (5)

அரசன் மனைவியொடும் ஆண்டுதோறும் வந்து ஆனந்தேசனை வழிபடல்

272. ஆண்டுதொறும் வைசாக விசாகத்தி னைந்தித
சுரனைப் பாதங்
காண்டிடுவ மெனக்கருதிக் கடிதடைந்து கடிமலர்தூய்க்
காதல் செய்து
மீண்டிடுத லிருவர்க்கும் பிரியாத விரதமிது
விளம்பார் யார்க்குந்
தாண்டவஞ்செய் சங்கரனுர் தமக்களித்த முன்னுணர்ச்சி
தனைத்தாம் பெற்றார். (6)

அந்தணர் மன்னனை ஆண்டுதோறும் வருதற்குக் காரணம் கேட்க, அவன் கூறல்

273. இந்தமுறை யினைவழுவா தெய்தினரோ ராண்டாரூ
ரெல்லை தன்னைச்
சிந்தைமகிழ் வுறப்பணிந்து சிவனடியைச் சிவனதாசன்
னிதியி னேகி
அந்தணரை யடிபணிந்தா ரவருமகிழ்ந் தாண்டுதொறும்
வைசா கத்தின்
வந்துவிசா கத்தமலன் பதம்பணிவீ ரெனவுமந்த
மன்னன் சொல்வான். (7)

---

272. இருவர்க்கும் - அரசனுக்கும் அவன் தேவிக்கும். உணர்ச்சி - முற்பிறப்புணர்ச்சி.

273. இவ்வாறு ஆண்டுதோறும் குறித்த நாளில் அரசன் வந்து வழிபடுவதற்குக் காரணத்தை ஆரூர் அந்தணர் வினவினர் என்க.

அரசன் தன் முன்பிறப்பு வரலாறு கூறுதல்

274. வணிகனியான் முன்னுடலின் வைசிதமா நகரத்தின்
வைகு நாளில்
நணியவினத் தினருமெனை யவமதித்தா ரெனக்குநி
யறுதலாலே
'துணையலவென் றவர்தமையுந் துறந்தயல்நா
றுணவி யான [டடைந்தேனென்
கணைவிழியு முடன்போந்தாள் கமலமலர்ப் பொய்கையினை
விழியிற் கண்டேடம். (8)

ஆரூரில் தான் பிழைத்து வந்த தன்மை

275. செங்கமலப் பொய்கையினிற் சிறப்புடைய வலர்கொய்து
திகழக் கட்டி
அங்கையினி லதுவேந்தி யலர்கொள்வீ ரென்றார்புக்
கறையும் போது
மங்கலநன் மனையார்கள் வம்மினென வெமையழைத்து
வாங்கிப் போது
தங்கையினு லியன்றதுதான் தரவாங்கிப் பசிதணித்துத்
தங்கும் நாளில், (9)

அவர்கள் ஒருநாள் கோயிலுக்குட் புகுந்தது

276. புக்கனமிவ் வாரூரின் வைசாக விசாகத்திற்
புனலின் மூழ்கித்
தக்கதென வலிதரித்தா ரிலரொடுங்க ..... நனியாந்
தளர்ந்து வைகும்

---

274. நணி அவ் இனத்தினரும் - நெருங்கிய என் சுற்றத்தினரும். நிதி அறுதலாலே - செல்வம் போனதாலே. கணை விழி - அம்புபோன்ற கண். கமலமலர்ப் பொய்கை - கமலாலயம்; தேவதீர்த்தம்.

275. வணிகன் ஆரூரில் தாமரை மலர் கொய்து, மாலைகளாகக் கட்டி விற்று வந்த வரலாறு கூறப்படுகிறது.

276. வலி தரித்தாரிலரொடுங்க; இங்கு வரி சிதைந்துள்ளது; பொருள் விளங்கவில்லை. ஒரு நாள் மாலைகள் வாங்குவாரில்லாமல்

அக்கணத்தி னிற் பேரிமுழ வாதியொலி தாளவொலி
யீனத்தும் பொங்க
இக்கணமே போயிதனைக் கேட்பமென வாலயத்து
ளெய்தி னரேமே. (10)

அங்கு அவர்கள் ஆனந்தேசுரரைத் தரிசித்தது

277. அருமறையு முறைசெய்வா ரலர்தூவிப் பணிவாரஞ்
சலியி னரேடே
நிருமலனே பொருவிலியே நினைப்பார்கள் வினையறுப்பா
யென்று நின்றே
பரவிடுவார் தமைக்கண்டு பரமானந் தேசுரனைப்
பார்த்தேம் பாங்கால்
இருகரமுங் குவித்திறைஞ்சி யின்புற்றே மன்புற்றே
மிறைவன் முளில். (11)

பூசை விசேடம்

278. இற்றையினள் நிசிதன்னி லிவரெல்லர மிறைவனடி
யிறைஞ்சி யேத்தி
முற்றுநிசி யுறங்காதே முயலுமருந் தவமென்னை
மொழிகென் றேவப்
பெற்றவொரு விப்பிரனும் வைசாக விசாகமிது
பிரானைப் பேணும்
நற்றவற்கு வென்றுநல மளிக்கையினுக் கேதுவென
நவின்றப் போதில், (12)

வணிகன் மனம் தளர்ந்தனன், என்று கதைப் போக்கை யொட்டிப் பொருள் கொள்க. அன்று கோயிலில் விசேட ஆரவாரம் கேட்க, அவர்களும் அங்குச் சென்றனர் என்க.

277. முறை செய்தல் - கூட்டமாக ஓதுதல். பொருவிலி - இணையற்றவன்.

278. இற்றையின் நாள் - இந்த நாள். மொழிக என்று ஏவப் பெற்ற ஒரு விப்பிரன், என்றமையால் வணிகர்க்குக் கூறுமாறு ஆனந்தேசர் ஒரு விப்பிரனை ஏவினர் என்க. விப்பிரன் - அந்தணன். நல் தவனுக்கு என்றும் நலம் அளிக்கைக்கு ஏது என நவின்று அ போதில் எனப் பிரிக்க.

மலரை அந்தணனுக்களித்து, உறங்காது கடவுளை வணங்கி இரவைக் கழித்தனர்

279. வாசமல ரீசனுக்காம் வருகவிது தருகவென
வெம்மை யந்தப்
பூசுரனே யெனலுமவன் கைக்கொடுத்தோ
தந்த பொன்னைக் [மவனெங்கைத்
காசினைவேண் டாமென்று கைவிட்டோ முறங்காதே
கருதிப் பார்த்தோம்
ஈசனையா மிரவெல்லாந் துதிசெய்து மகிழ்வுறவே
யிறைஞ்சி னேமே. (13)

280. விரித்தானை யாறங்க நால்வேத முயிர்க்கிரங்கு
விமலன் றன்னைப்
பரித்தானைச் சுரநதியைப் பகீரதற்காப் பறந்தடர்க்கும்
புரங்கண் மூன்றும்
எரித்தானை யடியிறைஞ்சி யுதயத்தின் மீண்டேம்யான்
பசிமே லிட்டு
மரித்தேனப் பொழுதிரங்கி யனுமரணம் பண்ணினளென்
மனைவி தானும். (14)

---

279. ஈசனுக்கு ஆம் - கடவுளுக்கு அமையும். பொன்னைக் காசினை - பொன் காசை. அன்றிரவு முழுமையும் உறங்காது கடவுள் தியானத்திலேயே கழித்தனர் என்க.

280. ஆறு வேத அங்கங்களை விரித்தவன் என்க. சுரநதி - கங்கை. பரித்தல் - சுமத்தல். அடர்க்கும் - நெருக்கும். திரிபுரர்கள் தங்கள் ஆகாயக் கோட்டைகளைக் கொண்டு உலகை அடர்த்தனர் என்பது வரலாறு. மீண்டேம் - வீடு வந்து சேர்ந்தோம். மரித்தேன் - இறந்தேன். அனுமரணம் - உடன்மரணம்.

அவர்கள் மறுபிறப்பெடுத்தமை

281. பிரமசிவ னுனைந்தே சுரன்பதத்தைப் பரவலா
லியா லுங் காஞ்சிப்
புரவலன்பா லறிவுடனே புரிந்துதித்தேன்
புரிக்கு ளெல்லாம் [பொற்றொடியும்
வரமுடைய தேசான புரிமன்ன னவன்மனவி யுளமகிழ
வயிறு வாய்ந்தாள்
பருவமவ ளுறுமளவில் மணவோலை யவடந்தை
பரப்பி னனே. (15)

கமலவதி பத்திரசேனனை மணத்தல்

282. ஈண்டினர்க ளவன்புரியி லெண்டிசையி லுறுமன்ன
ரெழிலி னுடே
ஆண்டனைந்தார் யான்றனு மந்தவெழி லரையருட
னனுகி நின்றேன்
காண்டனளன் றெனையங்கே கமலவதி யறிந்தளவில்
காதல் கூர்ந்து
தீண்டமண மாலைதனைச் செறித்தனளென் கழுத்தினுறச்
சிறப்புச் செய்தே. (16)

தாம் ஆரூர் வந்த காரணத்தை அரசன் கூறல்

283. பிரிந்தந்தப் புரியானும் பிணைவிழியுங் காசியெனும்
பேரூர் சேர்ந்தேம்
இருந்துமுன்னைப் பிறப்பெண்ணி யெழிலாரூர்ப்
தேசன் பாதம்
[பரமானந்

---

281. அறிவு - கருவிலே அறிவுபெற்று; அன்றி, முன் பிறப் பறிவு எனலும் ஆம். பொன்தொடி - பொற்றொடி; மனவி. தேசானபுரி - ஒரு நகரம். அவ்வரசன் பெயர், சேனாதிபதி என்று திருவாரூர்ப்புராணம் கூறும்.

282. ஈண்டினர் - கூடினர். செறித்தனள் - சேர்த்தனள்.

283. அந்த புரி பிரிந்து - அந்த நகரை விட்டு. பிணை - மான். பரிந்து - அன்புகொண்டு.

பரிந்துபடர்ந் தாண்டுதொறும் வைசாக விசாகத்திற்
பணிவாம் சேர்ந்தீண்
டருந்தவரே யெனலுமவ ரதிசயித்தின் னருள்புரிந்தா
ரவர்தம் பாலே. (17)

அரசன் ஆனந்தேசுரருக்குச் சிறப்புச் செய்தல்

284. அந்தணரை யடிவணங்கி யவரேவல் பெற்றுத்தா
மமலன் முன்னே
கந்தமலர் தூய்த்தொழுது கதிருதிக்கு முன்மூழ்கிக்
கடனுஞ் செய்து
சிந்தைமகிழ் வுறவுதவிச் செம்பொன்னும் பூசுரர்க்குச்
சிறப்புச் செய்து
பந்தமறுத் தருள்புரிவான் றனக்குமவ னடியிணைமுன்
பணிந்து நின்றே, (18)

வேறு

தோத்திரம்

285. என்பு தோலி றைச்சி மூளை யீரல் மேதை நீர்மலம்
புன்பு லாலு டற்சி றைப்பொ றைப்பு னர்ப்பொ
[ழித்திடும்
அன்ப னேய னந்த னேய னாதி யேயெ னாதியே
இன்ப மேகொள் நம்ப னேயி லங்கு சோதி யீசனே.

---

284. இச் செய்யுளில் அரசன் நாள்தோறும் செய்துவரும் சில செயல்கள் கூறப்பெறுகின்றன. கதிர் - சூரியன். கடன் - காலையில் நீருடன் செய்யும் ஸந்தியாவந்தனம் முதலியன. பூசுரர் - அந்தணர். பூசுரர்க்குப் பொன்னும் உதவி என்க. சிறப்பு - மரியாதைகள். பந்தம் அறுத்து அருள்புரிவான் - சிவபிரான். பந்தம் - பிணிப்பு; மலங்கள்.

285. மேதை - நரம்பு. உடற்பொறை, என்பு முதலியவற்றுலாலா சிறை என்றபடி. புணர்ப்பு - சேர்க்கை. அனந்தனே - முடிவற்றவனே. அனாதியே - ஆதியற்றவனே. என் ஆதியே - எனக்கு மூலமானவனே. நம்பன் - விரும்பத்தக்கவன்; சிவபிரான்.

286. போற்றி போற்றி பூதி பூட ணைபு ராண காரணா
போற்றி போற்றி போற்றி பூத நாத னேபு ராரியே
போற்றி போற்றி போத வாக ஞவெ ளிப்பொ ருப்பனே
போற்றி போற்றி யெங்க ளுட்டு யக்க றுத்த போதகா.

வேறு

அரசன் ஆரூரினின்று காஞ்சி சென்றது

287. என்று துதித் திறையருள்பெற் றிணையிலியைப்
விடைகொண் டேதான் [பதம்பணிந்து
கொன்றைமலர்ச் சடையானைக் கூற்றினுக்குங் கூற்றான
குழகன் றன்னை
அன்றிருவர்க் கரியானை யானந்தே சுரன் றன்னை
யமலன் றன்னைப்
பொன்றிகழு முருவினனை யுளத்திருத்திக் காஞ்சியெனும்
புரியுட் புக்கார். (21)

ஆட்சி முறை

288. இன்னமுறை தவருதே யாண்டுதொறும் பணிந்தானந்
தேசன் பாதம்
ஒன்னலரை யொறுத்துயிர்கட் குறுகணற வன்னையென
வோம்பிப் பொன்போல்

---

286. பூதிபூடணை - விபூதிதரிப்பவனே. பூஷணன், பூடணன் என்றுயிற்று. புராண - பழைமையானவன். காரணன் - எல்லாவற்றிற்கும் காரணனானவன். புராரி - திரிபுரங்களை அழித்தவன். உள்துயக்கு - உள்ளேயுள்ள தளர்வு. போதம் - அறிவு. வெளி - வெள்ளி.

287. இணையிலி - ஒப்பற்றவன். குழகன் - அழகன். கூற்றினுக்கும் கூற்று - காலகாலன். இருவர் - மால், அயன்; அடிமுடி தேடலுற்று அயர்ந்த வரலாறு.

288. ஒன்னலரை ஒறுத்தல் - பகைவரை அடர்த்தல். உறுகண் - துன்பம். சிவபுரி - கைலாயம்.

மின்னுசடை முடியானை விமலேசன் வேதமுத
லனைத்து நாளும்
பன்னியருள் பரமேசன் சிவபுரிப்பக் கிருக்கின்றான்
பாரி யோடும். (22)

அரசியுடன் அரசன் ஈசன் தீருவடி நீழலடைதல்

289 பொருந்தியதன் மேலுமுள புவனவித மங்குள்ள
போக பேதம்
அருந்தியனைத் துலகினையு மமலேச னடக்கிடுநா
ளாண வாதி
பிரிந்திடவே யிருவருந்தாம் பெற்றிருந்தே யனுபவிப்பர்
பேத மில்லாப்
பரம்பரனின் மலனசலன் பதுமமலர்ப் பாதநிழற்
பரமா னந்தம். (23)

பலச்ருதி

290. கற்றுணர்ந்தே யானந்தே சுரன்புகழைக் கட்டுரைக்குங்
கருத்தி னரும்
பற்றிமனந் தனிலிந்தப் பனுவலரும் பொருள்கேட்டுப்
பரிப்பார் தாமும்
முற்றினர்கள் வைசாக விசாகத்தி லிசிப்பூசை
முறைமை யாலே
அற்றுவினை யனைத்தினையு மமலேசன் புரிவாழ்வுற்
றமலத் தாவார். (24)

---

289. புவனவிதம் - பலவித உலகங்கள். போகபேதம் - சுகத்தின் வகைகள். அடக்கிடு நாள் - ஊழிக்காலம். ஆணவாதி - ஆணவம், மாயம், கர்மம் என்பன. பரம்பரன் - மேல் நிலைக்கும் மேலானவன்

290. பனுவல் அரும்பொருள்கேட்டு - இந்நூலின் அருமையான பொருளைக்கேட்டு. பரித்தல் - தாங்குதல். கட்டுரைத்தல் - பிறர்க்கு எளிதில் விளங்க உரைத்தல். பூசை முற்றினர் என்றியைக்க. இக்கதை கேட்டவர் ஆரூரில் வைசாக விசாகத்தில் நிசிப்பூசை செய்து முடித்தவர் பெறும்பேற்றைப் பெறுவார்கள் என்று கூறப்பெற்றது.

இனிக் கூறப் போவது

291. பத்திமிகும் பத்திரசே னன்றனக்கும் பாரிக்கும்
பாங்கி னுலே
நித்தனிரு மலனனைந் தேசனருள் புரிந்தமையும்
நிகழ்த்தி னெம்பொன்
ஒத்தவுரு வனுமரியு மும்பருமிம் பருமுவகை
யுற்றே தாபித்
தித்தலத்திற் சிவலிங்கத் தருச்சித்த நிறமுமினி
யியம்பு வாமே. (25)

வேறு

292. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (26)

ஆனந்தேசுரச் சருக்கம் முற்றும்.

---

291. நித்தன் - அழியாதவன். பொன்னெடுத்தவருவன் - பிரமன். அரி - திருமால். உம்பர் - தேவர். இம்பர் - இவ் வுலகத்தார்.

8. சிவலிங்கத் தாபனச் சருக்கம்

இலக்குமி பூசித்த இலிங்கம்

293. விண்ணவர்க ளியற்றியபுற் றிடங்கொண்ட விமலேசன்
கோயில் மேல்பால்
பண்ணினைய மொழிக்கமலி பகர்வீதியாற் சிவலிங்கம்
பரிவாற் றாபித்
தெண்ணரிய வுயிர்க்கெல்லா முயிரான விறைவனடி
யருச்சித் தேத்திக்
கண்ணனெனு மரிகணவ னுகவரம் பெற்றனளக்
கடவு ளன்பால். (1)

வேறு

பிரமன் முதலாகிய தேவர்கள் தாபித்தவை

294. அதற்குத் தரத்திற் சிவலிங்கந் தாபித்
தலரோ ருருச்சித்தே
மதிக்கும் வரம்பெற் றனனனலோன் மேல்பாற்
றன்னின் மறைமுறையால்
அதற்குத் தரபாற் சிவலிங்கந் தாபித்
திமையோ ருருச்சித்தார்
வதைக்க வெண்ணி விருத்திரனை மலராற்
புனலால் மகிழ்வுறவே. (2)

---

293. இப்பகுதியில், தேவர் முதலியோர் ஆரூரில் புற்றிடங் கொண்டான் மூலத்தானத்தைச் சூழ்ந்து பிரதிட்டித்த இலிங்கங் களின் வரலாறு கூறப்படும். கமலை - இலக்குமி. இங்கு இலக்குமி இறைவனைப் பூஜித்துத் திருமாலைக் கணவனுகப் பெற்றனள்.

294. உத்தரம் - வடக்கு. அலரோன் - பிரமன். அனலோன் - அக்கினி. விருத்திரனை வதைக்க எண்ணி என்றியைக்க.

இந்திரன், அசுவினிகள் பூசித்தவை

295. அதற்குத் தரபாற் றிபித்தே யமல
னடியி லருச்சித்தே
மதிக்கும் வானோர் தமக்கெல்லா மதிப
னனென் மகவான்றன்
அதற்குத் தரபாற் சிவலிங்கந் தாபித்
தலரா லருச்சித்து
விதித்த முறையா லசுவனிகள் விரும்புஞ்
சித்தி விதம்பெற்றார். (3)

நமன், சேட்டை, சுக்கிரன் அருச்சித்தவை

296. அதற்கு மேல்பா லானந்தே சுரனே நமனு மருச்சித்தான் ;
அதற்கு வாயுத் திசைதன்னில் சேட்டை சிவன்ரு
[ளருச்சித்தாள் ;
அதற்கீ சானத் தருச்சித்தே யமல னடியிற் சுக்கிரன்றன்
மதிக்கு மிருத சஞ்சிவி தனையும் பெற்றான் மகிழ்வுறவே.

புரந்தரன் பூசித்து அவலம் நீங்கியது

297. பூர்வ மூலத் தானத்தின் பூர்வ
திசையிற் புரந்தரன்றன்
ஆர்வ முறவே யமலனடி யருச்சித்
தலரா லகலிகைதோள்
சார்த லாற்றன் னனைமுனி சபிக்க
வந்தச் சலிப்பொழிந்தான்
தீர்த லவலஞ் சிறப்புறுதல் சிவபூ
சகர்க்கே யுறுந்திண்ணம். (5)

---

295. மகவான் - இந்திரன் ; நூறுயாகங்களைச் செய்தவன். அசுவினிகள் - தேவர்களுள் ஒருவகையினர்.

296. நமன் - இயமன். சேட்டை - மூதேவி. மிருதசஞ்சிவி - இறந்தோரை எழுப்பும் மந்திரம் ; ஒருவகை மருந்தும் என்பர்.

297. பூர்வதிசை - கிழக்கு. புரந்தரன் - இந்திரன். புரந்தரனை முனிசபித்த வரலாறு கம்பராமாயணம் பாலகாண்டம் அகலிகைப்

விசுவதேவர், வேதபுருடர், ஸரஸ்வதி பூசித்தவை

298. அதற்கு வடபாற் ருபித்தே **விசுவ தேவ** ரருச்சித்தார் ;
அதற்கு வடபாற் ருபித்தே **வேத புருட** ரருச்சித்தார் ;
அதற்கு வடபாற் ருபித்தே **வாக்கின் செல்வி** யருச்சித்தே
மதிக்கு மயன்றன் கணவனெனும் வரமும் பெற்றுள்
[மகிழ்வுறவே. (6)

முகுந்தன், தக்ஷன் பூசித்தவை

299. மூலத் தானத் துத்தரத்தின் **முகுந்தன்**
ருபித் தருச்சித்தான் ;
சாலப் பிழையை முன்புரிந்த **தக்க**
னந்தப் பிழைதணப்பான்
சீலத் துடனே யதன்வடபாற் சிவலிங்
கத்தைத் தாபித்தே
மாலைத் தடுத்தார் மாதேவ ரென்றே
புரிந்தா னமர்பூசை. (7)

துர்க்கை, சத்தமாதர், விநாயகன் பூசித்தவை

300. அதற்கு வடபாற் சிவலிங்கந் **துர்க்கை**
தாபித் தருச்சித்தாள் ;
அதற்குத் தரபா லருச்சித்தார் **சத்த**
மாதாக் களுமந்த

படலத்துட் காண்க. சலிப்பு - துன்பம். அவலம் தீர்தல் - துன்பம் நீங்குதல். திண்ணம் - உறுதி. சிறப்பு - மேன்மை ; வீடு.

298. விசுவ தேவர் - தேவகணத்து ளொருவர். வாக்கின் செல்வி - ஸரஸ்வதி. ஸரஸ்வதி இங்குப் பூசித்து பிரமனைக் கணவனைப் பெற்றுள். அயன் - பிரமன்.

299. முகுந்தன் - திருமால். சாலப்பிழை - சிவபிரானை அவமதித்து மகம் செய்தது. மாலை - மயக்கத்தை.

300. சத்தமாதாக்கள் பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, மகேந்திரி மாகாளி என்பார். (சூடாமணி

விதத்தே ழுள்ளு மாகேசிக் கருள்செய்
விமல னெலீலத்தென்பால்
மதத்த வேழ விநாயகனும் புரிந்தான்
பூசை மகிழ்வுறவே. (8)

சத்த மாதர்களின் ஆலயமும் விசுவாதிக இலிங்கமும்

301. அதற்குத் தரமாந் திருத்தீர்த்த மதனுத்
தரத்தி னிடையமர்வார்
இதத்தை யுலகத் தினுமியற்று மெழுமா
தர்களு மியல்பாக
அதற்கண் ணியவுத் தரபாலில் பூர்வ
லிங்க மமர்ந்திலங்கும்
அதற்கு நாம மருமறையோர் விசுவா
தீகனென் றறிந்தறைவார். (9)

இயமனும் விநாயகரும் பூசித்தது

302. அதற்குத் தரத்தி லமர்ந்திலங்குந் துட்டப்
பிரத னெனுமமலன்
பதத்தி லியம னருச்சித்துப் பகரும்
வேத விதியாலே

நிகண்டு) அந்த விதத்துள் மாகேசிக்கருள் செய்யும் விமலன், என்றதால் மாகேசுவரியின் அமிசங்களே சப்தமாதர் என்பது புலப்படுவது காண்க.

301. திருத்தீர்த்தம் - இலக்ஷ்மி தீர்த்தம். அத்தீர்த்தத்துக்கு வடக்கே ஸப்த மாதர்கள உலகத்து இதத்தை அளித்துக் கொண்டு அமர்கின்றார் என்க. ஸப்தமாதாக்கள் வேறு ஸப்த மாதர்கள் வேறு என்பர்; ஆராய்க. அண்ணிய - அருகிலுள்ள. ஸப்த மாதர்களின் இடத்துக்கு வடக்கே விசுவாதிகன் என்ற பெயருடைய பூர்வலிங்கம் இயங்கும் என்க.

302. துஷ்டபிரதன் - சிவபிரானுக்குரிய பெயர்களுள் ஒன்று. பதம் - பாதம். வேதவிதியாலே அருச்சித்து என்க. அதம் - அழிவு. ஐங்கரன் - விநாயகன்.

அதத்தைப் புரியு மதிமேதை யறிவும்
பெற்றே யகமகிழ்ந்தான் ;
அதற்குத் தரத்து மைங்கரத்தோன் ருபித்
திலிங்க மருச்சித்தே, (10)

கௌமாரி தீர்த்தமும் இலிங்கமும்

303. கதத்து வதைத்துக் கயாசுரனே விண்ணோர்
கவலீல தனைக்களைந்தான் ;
அதற்கி சானத் துறுமலிதண் டண்டத்
தப்பா லாந்தீர்த்தம்
அதற்கு நாமங் கவுமார மெனவே
மறையோ ரறிந்தறைவர்
அதற்கு மேல்பாற் கவுமாரி தாபித்
திலிங்க மருச்சித்தாள். (11)

கவுமாரி லிங்கத்தைப் பூசிக்குங் காலம்

304. அடைந்து விரைந்தா வணிமாதத் தவிட்டங்
தன்னிற் பூரணியிற்
படிந்தே யந்தப் பாய்புனலிற் பண்ணி
நியதி பகர்விதியால்
நடந்தான் புரிவான் கவுமாரிக் கருளு
நம்ப னடிபணிவார்
கடிந்தே காசின் விதமெல்லாங் கருதும்
பலத்தைக் கடிதடைவார். (12)

---

303. கயாசுரன் - ஓர் அசுரன் பெயர். விநாயகரால் அழியுண்டவன் என்பது கூறப்பெற்றது. 'கயாசுரனே அவனைக்கொல்வித்தார் போலும்' என்பது அப்பர் தேவாரம். எண் தண்டத்து அப்பால் - எட்டுக் கோல் தூரத்தில். கவுமாரம் - கௌமாரி தீர்த்தம் என்பது. கௌமாரி, ஸப்தமாதர்களுள் ஒருவர்.

304. பூரணை - பௌர்ணமி. படிந்து - அந்தத் தீர்த்தம் முழுகி. நடந்தான் புரிவான் - கௌமாரிக்காகக் கடவுள் நடம் புரிந்து காட்டிய செய்தி கூறப்பெற்றது. காசின் விதம் - பாவ விதங்கள். காசின் விதமெல்லாங் கடிந்தே யென்க. காசு - குற்றம்.

வாலி பூசித்த இலிங்கம்

305. அதற்கு வடபா லிலையிரண்டு தண்டத்
தப்பா லாந்தலத்தில்
மதிக்கும் வாலி யுருத்திரன்முன் மலரா
னீரான் மகிழ்வுறவே
விதித்தான் முறையால் வேதத்தின் விமல
னடியை யருச்சித்தான்
துதித்துத் தொழுவா ரவ்விலிங்கந் தம்பாற்
றுரிசைத் துடைப்பாரே. (13)

நாரத முனிவர், பூபுகன் என்னும் மன்னன் அருச்சித்தது

306. திருமால் முன்ன மருச்சித்த சிவலிங்
கத்தின் பூர்வதிசை
பெருகார் வத்தால் நாரதன்முன் பெருமா
னடியி லருச்சித்தான் ;
ஒருவா ததனுக் குத்தரத்தி னுருவார்
லிங்கந் தாபித்தே
மருவார் மலரா லருச்சித்தான் பூபுக
னென்னு மன்னவனே. (14)

தும்புரு, கங்கை, யமுனை இவர்கள் அருச்சித்தவை

307. அதற்கு வடபாற் றாபித்தே யருச்சித்
தான்றும் புருவென்பான் ;
அதற்கு வடபாற் றாபித்தே கங்கை
யலரா லருச்சித்தாள் ;

---

305. ஐயிரண்டு தண்டம் - பத்துக் கோல். விதித்தான் - விதித்து ; முற்றெச்சம். துரிசு - பாவம் ; குற்றம்.

306. பூர்வதிசை - கிழக்கு. ஒருவாது - நீங்காமல். உரு ஆர் - உருவம் நிறைந்த பூபுகன், ஓர் அரசன்.

307. தும்புரு - ஒரு கந்தர்வன் ; யாழ் வாசித்தலில் வல்ல வன். துகளிலி - சிவபிரான். பிரயாகை - கங்கையும் யமுனையும் கூடுமிடம். தோயம் - நீர்த்தம்.

அதற்கு வடபாற் றூபித்தே யமுனை
யருச்சித் தனளங்கே
துதித்துத் தொழுவார் துகளிலியைத் தோய்ந்தார்
பிரயா கையிற்றேயம். (15)

விசுவாவசு, வசிட்டர், அருந்ததி பூசை புரிந்தவை

308. புகழார் நார தேசனுக்குப் பூர்வ
திசையி லருச்சித்தான்
மிகிழ்வால் **விசுவா வசு** வென்பார் ; **வசிட்ட**
முனியுந் தன்வடபால்
திகழ்வா மிலிங்கந் தாபித்தே செய்தான்
பூசை ; அதன்வடபால்
நிகழா நின்ற **வருந்ததி**யும் புரிந்தாள்
பூசை நிபாலுனுக்கே. (16)

ஆகா என்பவனும், பவானி, தக்ஷாயனி, பார்வதி இவர்கள் அருச்சித்தவை

309. அதற்கு மேல்பாற் றூபித்தே **யாகா**
வென்பா னருச்சித்தான் ;
அதற்கீ சான திசைதன்னில் **பவானி**
தாபித் தருச்சித்தாள் ;
அதற்கு வடபாற் றூபித்தே **தக்கன்**
புதல்வி யருச்சித்தாள் ;
அதற்கு வடபாற் றூபித்தே யருச்சித்
தனள்பார்ப் பதியன்பால். (17)

---

308. நார்தேசன் = நாரதரால் பூசிக்கப்பெற்ற இலிங்கம். பூர்வ திசை = கிழக்குத் திசை.

309. ஆகா = ஓர் கந்தருவன் பெயர். பவானி, தக்கன் புதல்வி, பார்வதி இப்பெயர்கள் அம்பிகை ஒவ்வோரவசரத்தில் ஏற்றுக்கொண்ட பெயர்கள்.

விசையை, வீரபத்திரன் அருச்சித்தவை

310. அதற்கு வடபா லருச்சித்தாள் விசையை
என்பா ளன்பாலே
மதித்த விசுவா வசுவென்பான் புரிந்த
பூசை மகிழ்கோயில்
அதற்குப் பூர்வ திசைதன்னில் தாபித்
தலரா லருச்சித்துத்
துதித்து வீர பத்திரன்முன் கணநா
யகனையத் தோன்றினனே. (18)

காளி, சந்தீர சூரியர், நளன் இவர்கள் அருச்சித்தவை

311. அதற்கு வடபாற் றபித்தே காளி
யலரா லருச்சித்தாள் ;
அதற்கு வடபா லுடுபதிதான் றபித்
தலரா லருச்சித்தான் ;
அதற்கு வடபா லலர்கதீரோன் றபித்
தலரா லருச்சித்தான் ;
அதற்கு வடபா னளனென்னு மரையன்
றபித் தருச்சித்தான். (19)

காமன், ஐயனர், மாகாளன், நந்தி இவர்கள் அருச்சித்தல்

312. அதற்கு வடபாற் றபித்தே காம
னலரா லருச்சித்தான் ;
அதற்கு வடபாற் றபித்தே சாத்தா
வலரா லருச்சித்தான் ;
அதற்கு வடபால் மாகாளன் றபித்
தலரா லருச்சித்தான் ;
அதற்கு வடபாற் றபித்தே நந்தி
யலரா லருச்சித்தான். (20)

---

311. உடுபதி - சந்திரன். கதிரோன் - சூரியன். அரையன் - அரசன்.

312. சாத்தா - ஐயனர்.

பிருங்கி, சண்டேசன், துந்துமாரன், யயாதி அருச்சித்தவை

313. அதற்குப் பூர்வ திசைதன்னில் **பிருங்கி**
தாபித் தருச்சித்தான்
அதற்குத் தென்பாற் **சண்டேசன்** ரூபித்
தலரா லருச்சித்தான்
அதற்கே சான திசைதன்னில் **துந்து**
மார னருச்சித்தான்
அதற்குத் தென்பாற் ரூபித்தே **யயாதி**
யலரா லருச்சித்தான். (21)

பிரமன் அருச்சித்து ஆக்கும் அறிவு பெற்றது

314. அண்ட ரியற்றும் புற்றிடங்கொண் டமரு
மமலன் றென்றிசையில்
புண்ட ரீகத் தலருறைவான் ரூபித்
தலராற் பூசித்தே
துண்டப் பிறைவெள் ளெருக்கிதழி சூடுஞ்
சடையா னடிதன்னில்
அண்ட விதங்க ளனேத்தினையு மாக்கு
மறிவு மவன்பெற்றான். (22)

கயிலைமலையானும் அம்பிகையும் அருச்சித்து எல்லா வுயிர்கட்கும் இடர் நீக்கியது

315. அதற்குத் தென்பாற் ரூபித்தே **கயிலை**
மலையா னருச்சித்தான்
இதத்தைக் குறித்தெவ் வுயிரினுக்குந் தோன்றுத்
துணையா யிருப்பானே

---

314. அண்டர் - தேவர். அண்டவிதங்கள் - பலவகை அண்டங்கள்.

315. கயிலை மலையான் - அம்பிகை என்று இங்குக் குறிக்கப் பெற்றவர் பரம்பொருளான சிவபிரானின் அம்சமாயுள்ளவர்.

அதற்குத் தென்பா லம்பிகையுந் தாபித்
தலரா லருச்சித்தாள்
இதத்தைக் குறித்தே யெண்ணிறந்த வுயிர்கட்
கெல்லா மிடர்கெடவே. (23)

வருணன், வாயு, கௌசிகமுனி, காசியபர் இவர்கள் அருச்சித்தவை

316. அதற்குத் தென்பாற் றாபித்தே **வருண**
னலரா லருச்சித்தான்
அதற்குத் தென்பாற் றாபித்தே **வாயு**
வென்பா னருச்சித்தான்
அதற்குத் தென்பாற் **கவுசிகமா** முனிவன்
றாபித் தருச்சித்தான்
அதற்குத் தென்பாற் **காசியப** னென்னு
முனியு மருச்சித்தான். (24)

பாரத்வாசன், கவுதமன், இமையவல்லி, பிருகுமுனி இவர்கள் அருச்சித்தது

317. அதற்குத் தென்பாற் றாபித்தே **பாரத்**
வாச னருச்சித்தான்
அதற்குத் தென்பாற் **கவுதம**னும் தாபித்
திலிங்க மருச்சித்தான்
இதத்தை யெண்ணி யுயிர்க்கிமைய **வல்லி**
தாபித் திடுமிலிங்கம்
அதற்கு மேல்பால் **பிருகுமுனி** தாபித்
தலரா லருச்சித்தான். (25)

உபமுனி, பரசுராமன் அருச்சித்தது

318. அதற்கு வடபா **லுபமுனி**யுந் தாபித்
தலரா லருச்சித்தான்
அதற்கு வடபாற் றாபித்தே **பரசு**
ராம னருச்சித்தான்

---

318. உபமுனி - உபமன்யு முனிவர். யயாதி பூசித்த இலிங்கம், யயாதீசன் எனப் பெயர் பெற்றது என்க.

வதைத்த பாவ வலிதொலைய மாதாத்
தனைத்தன் வலியாலே
சிதைத்தாற் சிறந்த யயாதீசன் றிகழு
மிடமும் செப்பினமே. (26)

ஆறுமுகன், பகீரதன், சித்தர், சாத்தியர் இவர்கள் அருச்சித்தவை

319. அதற்குத் தென்பாற் றுபித்தே யாறு
முகவ னருச்சித்தான்
அதற்குத் தென்பாற் பகீரதனுந் தாபித்
தலரா லருச்சித்தான்
அதற்குத் தென்பா லருச்சித்தார் சித்த
ரென்னு மவரெல்லாம்
அதற்குத் தென்பாற் றுபித்தே யருச்சித்
தனர்சாத் தியரெல்லாம். (27)

320. அதற்கு நிருதி திசைதன்னிற் குய்ய ரெல்லா மருச்சித்தார்
....
....
.... (28)

சாரணர், கின்னரர், வாணன், தாபித்தருச்சித்தவை

321. அதற்குத் தென்பாற் றுபித்தே யருச்சித்
தனர்சா ரணரெல்லாம்
அதற்கு நிருதி திசைதன்னி லருச்சித்
தனர்கின் னரரெல்லாம்
மதிக்கும் புகழார் கலியாண சவுந்த
ரேசன் மகிழ்கோயில்
அதற்கு மேல்பாற் சிவலிங்கம் வாணன்
றுபித் தருச்சித்தே. (29)

---

320. இச் செய்யுளில் மூன்று அடிகள் காணப்படவில்லை.

321. சாரணர், கின்னரர் - பதினெண் கணங்களுள் ஒருவர்.
வாணன் - பாணாசுரன்.

வாணன் வரம் பெற்றது

322. பண்ணற் கரிய தவம்பணலுந் தோன்றிப்
பரம னவன்முன்னே
எண்ணத் துன்னும் வரந்தன்னைத் தருவாம்
வாண வியம்பெனலும்
கண்ணுக் கினியா னருச்சிக்கக் கரத்தா
யிரத்துச் சிவலிங்கம்
நண்ண வருள்செய் நாடோறு மெனநல்
கினனே நாயகனும். (30)

வாணலிங்கம் அருச்சித்தவர் இட்ட வரங்களைப் பெறுவர்

323. அருளும் வரத்தா னுடோறு மருச்சித்
திலிங்க மாயிரமும்
பெருகுந் தொகையாற் பதினென்கு கோடி
லிங்க முறப்பெற்றான்
ஒருவா தமல னவ்விலிங்கத் துறையு
மென்று மாதலினால்
பெருகார் வத்தி னருச்சித்தா ரதனி
லிட்ட வரம்பெறுவார். (31)

வாசுகி முதலியோர் அருச்சித்த ஐந்து லிங்கத்தையும் பார்த்தவர்கள் விடத்தால் இறவார்கள்

324. அதற்குத் தென்பால் வாசுகிதான் தாபித்
திலிங்க மருச்சித்தான்
அதற்குத் தென்பாற் றபித்தே யனந்த
னலரா லருச்சித்தான்

---

322. தன் ஆயிரம் கரங்களுள்ளும் ஆயிரம் சிவலிங்கம் வரப் பாணன் வரம் பெற்றான் என்க.

323. ஒருவாது - நீங்காமல். பெருகு ஆர்வத்தின் - மேன் மேலும் பெருகும் அன்பு கொண்டு.

324-325. வாசுகி, அனந்தன், (ஆதிசேடன்), கார்க்கோடகன், தக்ஷன், பதஞ்சலி இவ்வைந்தும் சிறந்த பாம்புகள். இவ்

மதிக்கும் வாணை சுரனமரும் .....
ரிருதி தன்விற்
துதிக்குந் துவார பிலமொன்றுண் டென்றே
யியலுஞ் சொல்லிடுமே. (32)

325. அதற்குத் தென்பாற் குபித்தே கார்க்கோ
டகன்ரு னருச்சித்தான்
அதற்குத் தென்பா னருச்சித்தான் தக்க
னென்று மாவேந்தன்
அதற்கு மேல்பால் பதஞ்சலியுந் தாபித்
தருச்சித் தனனிந்த
விதத்தி லிலிங்க மைந்தீனையும் பார்த்தார்
விடத்தா லவியாரே. (33)

கௌசிகன், புலத்தியன், புலகன் இவர்கள் அருச்சித்தவை

326. அசலே சுரன்றன் சன்னிதியி னருச்சித்
தனனே கவுசிகன்ரூன்
வசியோ மற்றை வரமெல்லாம் வழங்கு
மமலன் வணங்கிடுமாங்
கிசைவா லதற்கு வடதிசையி லிருவர்
தாபித் தருச்சித்தார்
நசையார் நாமம் புலத்தியனே புலகன்
மற்றை யவனுமம். (34)

வைந்தினையும் தரித்தவர் விஷத்தால் பாதிக்கப்படார் என்று கூறப்பட்டது. வாண லிங்கத்தின் நிருதி திக்கில் ஒரு பிலவாயில் (குகையின் வாய்) காணும், அதன் தென்திசையில் கார்க்கோடகன் பூசித்த லிங்கம் காணப்படும் என்றது.

326. கௌசிகன் தாபித்த இலிங்கத்தை வணங்கிடில், அமலன் வசியம் முதலான வரங்களை அளித்திடுவான். நசை - விருப்பம்.

கிருது, சனகமுனி இவர்கள் அருச்சித்தது

327. அசனி தன்னைத் தடுக்கைக்கு வல்ல சித்தி யவர்பெற்றூர் ;
அசனி தன்னை யழியார்க ளந்த விலிங்கந் தரிசித்தார் ;
இசைவாற் கிருது வதன்வடபா லருச்சித் திட்ட
[வரம்பெற்றூர் ;
பசையார் சனக முனியதற்கு வடபாற் பூசை
[பண்ணினனே. (35)

ஜனகலிங்க பூசைக்கு உரிய காலம்

328. புரிந்தார் பூசை வைசாக பூர்வ
மூன்றுந் திதிதன்னில்
தெரிந்து செறிந்த ரோகிணியிற் சிவமாங்
கதியைச் சேர்வார்கள் ;
புரிந்தே சனக னருச்சித்த லிங்கந்
தனைநூல் பகர்விதியால்
நிரந்தே யிதற்குத் தரத்தமல னருளுஞ்
சிறப்பு நிகழ்த்துமே. (36)

சனற்குமாரன் அருளியதும் அவ்விலிங்கத்தை வழிபட்டும் பேறு பெறுதல்

329. சனற்கு மாரர் சிவலிங்கந் தாபித்
தலரா லருச்சித்தே
மனத்து வேண்டும் வரம்பெற்றூர் ; மலின
வுடலின் வந்துதினே

---

327. புலத்தியன், புலகன் இவர்கள் தாபித்த இலிங்கத்தைப் பூசித்தவர் இடியால் பாதையுறூர் என்க.

328. வைசாக மாதப் பூர்வபக்ஷத்துத் திரிதியையும் ரோஹிணியும் கூடிய காலம் ஜனகலிங்க பூசைக் குரியது. உத்தரம் - மேலே. இனி, சிவபெருமான் அருள்கள் கூறப்பெறும் என்க.

329. மலின உடல் - மெலிந்த உடல். தினை - தினைத் தோறும். சனற்குமார இலிங்கத்தை, மலின உடலினராய்,

இனித்தாஞ் செய்வா மென்னெனவே யிடுக்க
ணுறுவா ரிடர்கதிர்முன்
பனிப்போ லிங்கு மூப்போதும் வலஞ்செய்
திடினப் பரமனையே. (37)

330. பூர்வ பக்கத் தட்டமியிற் புனித
ராகி வலஞ்செய்வார்
ஆர்வ முறமூ வாயிரமந் தக்கணமே
யிட்ட வரமனைத்தும்
சார்வா லயஞ்சுற் றஞ்ஞூறு வலஞ்செய்
திடினுந் தவறறவே
தீர்வர் தீய வினையெல்லா மொருநூற்
றெட்டுச் செய்வாரும். (38)

பாண்டவர் ஆரூரில் திருமாலைக் கண்டது

331. வனத்தின் மறைந்து பாண்டவர்தாம் வைகுநாளி
னடைந்தாரூர்
தனத்தை மிடியர் கண்டாற்போற் றவஞ்செய்
மாயன் றனைக்கண்டார்
மனத்து மகிழ்ச்சி யுறவங்கே வணங்கி
மாலே நின்னருளாற்
புனத்தை நீங்கி யெம்புரியிற் புகுது
மேதுப் புகலென்றார். (39)

'இனி என்ன செய்வோம்' என்று இடர் உறுபவர்கள், தினந் தோறும் வந்து, அப்பரமனை மூப்போதும் வலம் செய்திடின், அவருடைய இடர், கதிரவனைக் கண்ட பனிபோல் நீங்கும் என்றியைக்க.

330. அந்த இலிங்கத்தைப் பூர்வபக்ஷ அஷ்டமியில் மூவாயிரம் பிரதக்ஷணம் செய்கிறவர்கள் இஷ்ட வரம் அனைத்தும் பெறுவர்; ஐந்நூறு பிரதக்ஷணம் செய்பவரின் தவறுகள் அறவே திரும். ஒரு நூற்றெட்டுச் செய்பவரின் நிய வினைகள் நீங்கும்.

331. மிடியர் தனத்தைக் கண்டால் போல். மிடியர் - வறியர். மாயன் - திருமால். புனம் - காடு.

தீருமால் பாண்டவர்க் கருளல்

332. இந்த வாரூ ரெல்லையி னு மிலிங்கம் விதியாற் றுபித்தே
கந்த மலரா லருச்சிக்கிற் கவலை களைந்து காதலினுல்
நுந்தம் புரியைச் சேர்வீர்நீ ரென்றே நுவல மாலவரும்
அந்த மடி நள் ளெனுமிவற்றை யில்லான் றன்னை
[யமலனையே. (40)

தருமபுத்திரலிங்கம், (தருமன் பூசித்தது)

333. சனற்கு மாரர் தாபித்த லிங்கந்
தனக்குத் தரதிசையின்
மனத்து மகிழ்ச்சி யுறவிலிங்கந் தாபித்
ததனின் மலரேந்தி
எனத்தா காத்தா ளெமையென்றே புரிந்தான்
பூசை யியல்வழியால்
தனக்கொப் பாகு மன்னவரை யில்லான்
தரும புத்திரனே. (41)

விநதை அருச்சித்த இலிங்கம்

334. அடைவா ரிட்ட வரமந்த விலிங்கத் தருச்சிப் பவரதற்கு
வடபால் விநதை சிவலிங்கந் தாபித்துளது ; மகிழ்வுறவே
கடிமா மலரா லருச்சித்துக் கடவுள் கருணை தன்னுலே
மிடலார் கருடன் றனைப்பெற்றே விடுத்துத் துயரம்
விருப்புற்றுன். (42)

---

332. மாலவரும் நுவல என மாற்றுக. நுவல - சொல்ல. அந்தம், அடி, நள் - முடிவு, தொடக்கம், நடு.

333. உத்தர திசை - வடக்குத் திசை. 'என் அத்தா எமைக் காத்தருள்' என்றே என்க. மன்னவரை இல்லான் ; மன்னவரைப் பெருதவன் ; அதாவது, தனக்குத் தானே நிகர் ஆனவன்.

334. இட்ட வரம் அடைவார் என்க. இட்டம் - இஷ்டம். அந்த இலிங்கத்தை என்றது, தருமன் பூசித்த இலிங்கத்தை என்க. விநதை - கருடனின் அன்னை. மிடல் ஆர் - வலிமை மிக்க. விநதை துயரம் விடுத்து விருப்பு உற்றுள் என்க.

இராமன் பூசித்தது (இராமலிங்கம்)

334. புரிந்தே யந்த விலிங்கத்திற் புரிவார்
பூசை புத்திரரைப்
பரிந்தே பெறுவர்; சியவனனனப் பதியா
யைத்தின் பூர்வதிசை
தெரிந்தே தாபித் தருச்சித்தோ மென்றே
தசர தன்புதல்வன்
அரிந்தே யரக்கன் றலைபத்துஞ் சிறையின்
மீட்டா ணைங்கினையே. (43)

வலாசுரன், அருச்சுனன், கிருட்டினன் பூசித்த லிங்கங்கள்

335. அதற்குத் தரத்தின் வலனென்னு மசுரன்
ரூபித் தருச்சித்தான்
அதற்குத் தரத்தி லருச்சுனனுந் தாபித்
திலிங்க மருச்சித்தே
வைதத்தே பகைத்த மன்னவரை மகிழ்ந்து
வையந் தனையாண்டான்;
அதற்குத் தரத்தின் வசுதேவன் புதல்வன்
ரூபித் தருச்சித்தான். (44)

---

334. விநதை லிங்க பூஜையின் பயன் புத்திரப்பேறு ஆகும் என்க. சியவனன் ஓர் முனிவன். அவன் நிறுவியது அலகாபதி. இப் புராணத்தில் இப்பெயர் வந்த காரணம் ஆராய்தற்குரியது. பூர்வ திசை - கிழக்கு. ஓம் என்றே அருச்சித்து என்று இயைக்க. தசரதன் புதல்வன் - இராமன். அரிந்து - வெட்டி. அணங்கு - சீதாப்பிராட்டி.

335. வலன், இவன் வரலாற்றைச் சோமாஸ்கந்த சருக்கத்திற் காண்க. மன்னவரை வதைத்தே என்றியைக்க. உத்தரம் - வடக்கு. வசுதேவன் புதல்வன் - ஸ்ரீ கிருஷ்ணன்.

குறிப்பு :—செய்யுள் 202 முதல் 333 முடிய தொடர் எண்களில் ஓர் எண் கூடுதலாக அச்சிடப் பெற்றுள்ளமை பிழையாகும்.

வியாதமுனி அருச்சித்த வியாசலிங்கம்

336. வாசு தேவ னருச்சித்த சிவலிங்
கத்தின் வடதிசையின்
ஆசு தீர **வியாத**முனி யமலன்
றன்னை யருச்சித்துத்
தேசு பெற்றே வேதமெலாந் தெளிந்து
கோவை யுறச்செய்து
பாசந் தீர முனிவர்க்கும் பகர்ந்தா
னுளத்திற் பரிவுறவே. (45)

உரோமசன், துர்வாசன், வயினதேயன், பிரகஸ்பதி பூசித்தவை

337. அதற்கு வடபால் **ரோமசமா** முனிவன்
ரூபித் தருச்சித்தான்
அதற்கு வடபாற் ரூபித்தே யருச்சித்
தனனே துருவாசன்
அதற்கீ சான திசைதன்னின் **வயின**
தேய னருச்சித்தான்
மதிக்கும் வலனுக் கிறைகிழ்பால் **வானோர்**
குரவ னருச்சித்தான். (46)

அத்திரி, அநசூயை, வான்மீகர் பூசித்தவை

338. அதற்கு வடபா லத்திரிமா முனிவன் ரூபித் தருச்சித்தான்
அதற்கு வடபா லனசூயை தாபித் திலிங்க மருச்சித்தாள்
அதற்கு வடபால் வான்மீக முனிவன் ரூபித் தருச்சித்தே
பதத்தால் விசிட்டப் பனுவலினைப் பகரும் பரமவரம்
[வரம்பரித்தான். (47)

---

336. ஆசு - குற்றம். தேசு - ஒளி. கோவையுறச் செய்து - வரிசைப்படுத்தி.

337. வயினதேயன் - கருடன். வானோர் குரவன் - பிரகஸ்பதி.

338. விசிட்டப் பனுவல் - இராமாயணம். பரமவரம் - மேலான வரம். பரித்தான் - ஏற்றான்.

புதன், கார்த்திகேயர் இவர்கள் அருச்சித்தது

339. வரங்க டருமச லேசலிங்கம் வடபாற்
புதன்ரு னருச்சித்தான்
கரங்க டம்மாற் கடிமலராற் **கார்த்தி**
கேய னியலார
நிரந்தே யதற்கு வடபாலி னமலன்
றன்னை யருச்சித்தான்
புரிந்த **வினைக்குப்** பரிகாரம் வேண்டா
வென்றுள் பூசிக்கில். (48)

ஆடிப்பூரம் ஆவியோணம் இந்நாட்களில் அருச்சனை செய்யும் சிறப்பு

340. ஆடிப் பூரத் தவ்விலிங்கத் தருச்சித் தார்வேண்
[டியதடைவார்;
ஆடிப் பூர முடிவெழுவா யாவி யோண மிவற்றெல்லாம்
கூடு மலரா லருச்சித்துக் கொதிய பூப நிவேதித்தார்
வீட வினைகள் சிவலோகம் விரவிச் சிவன்றுள்
[சேர்குவரே. (49)

மார்க்கண்டேயர், சிருங்கர், சங்கமுனி இவர்கள் அருச்சித்தவை

341. அதற்குத் தரத்திற் றுபித்தே **மார்க்கண்**
டேய னருச்சித்தே
மதிக்க விண்ணோர் மண்ணோரும் பெற்று
னழியா வரந்தன்னை

---

339. கரங்கள் - கைகள். கடிமலர் - மணமுள்ள பூக்கள். சிவபெருமான் தாளைப் பூசித்தார்க்குத் தாம் செய்த பாவவினைக்கு வேறு பரிகாரம் வேண்டா வென்பதாம்;

இருள்சேர் இருவினையும் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (திருக்குறள்)

340. அபூபம் - அப்பம். கொதி அபூபம் என்றது - கூடான அப்பத்தை.

அதற்குத் தரத்தே தாபித்தே சிருங்க
முனிதா னருச்சித்தான்
அதற்குத் தரத்திற் சங்கமுனி தாபித்
தலரா லருச்சித்தான். (50)

சயமுனி, நகுடன், தசரதன் இவர்கள் அருச்சித்தவை

342. மதிக்குப் புதல்வ னருச்சித்த வரதன் பூர்வ
திசை தன்னில்
விதித்த முறையால் **சயமுனிதான்** விமலன்
றன்னை யருச்சித்தான்
அதற்கே சான திசைதன்னின் நகுடன்
தாபித் தருச்சித்தான்
அதற்குத் தென்பாற் றபித்தே யருச்சித்
தனனே **தசரதனும்**. (51)

அரிச்சந்திரன், தருமத்ததிபதி, எச்சன் இவர்கள் அருச்சித்தவை

343. **அரிச்சந் திரனு** மதன்தென்பாற் றபித்
திலிங்க மருச்சித்தான்
பரிக்கும் பூமி தனக்கீசன் பூர்வ
திசையிற் பரிவுறவே;
தெரிக்குந் தருமத் நதிபதிதான் சிவலிங்
கத்தி னருச்சித்தான்;
அருச்சித் தனனே யதன்றென்பால் **எச்ச**
னென்னு மதிபதியே. (52)

---

342. சயமுனி - ஜைமினி. நகுடன் - நகுஷன்.

343. பரிக்கும் - எல்லாவற்றையும் தாங்கியுள்ள. பூமி தனக்கு ஈசன் என்பதனை அரிச்சந்திரனுக்கே பொருத்துக. தருமத்ததிபதி - தருமராஜன். எச்சன் - யக்ஷன்.

விஞ்ஞானன், சித்தீரசிகண்டி புதல்வர், முசுகுந்தன் அருச்சித்தவை

344. அருச்சித் தனனே யதன்றென்பா லிங்கத்
தலரால் **விஞ்ஞானன்**
அருச்சித் தனர்சித் தீரசிகண்டி புதல்வர்
தாமு மதன்றென்பால்
அருச்சித் தனனே முசுகுந்த னசலே
சுரன்றென் பாலன்பால்
அருச்சித் தனருண் டினுமவரை யளந்தே
தெரிக்க வலாராரே. (53)

பலச்சுதி

345. இந்த வியலே யிசைப்பாரு மிட்ட
முறவே கேட்பாரும்
பந்த மான வினையறுத்துப் பரமன்
புரத்தி லினிதிருப்பர்
சிந்தை மகிழ வெழுதினருந் திளைப்பார்
போக விதந்திவியின்
வந்து மண்ணிற் பிறந்தாலும் வாழ்வர்
வணங்க மன்னருமே. (54)

---

344. விஞ்ஞானன் - விசேட அறிவு வாய்ந்தவன். சித்திர சிகண்டி புதல்வர் - மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலத்தியர், புலகர், கிரது, வசிட்டர். கடைசி அடியில், இன்னும் பலர் அருச்சித்த சிவலிங்கங்கள் அங்கு உண்டு என்பது கூறப்பெற்றது.

345. இசைப்பார் - பாடுவார். பரமன் புரம் - கைலாசம். திளைத்தல் - நுகர்தல். திவியின் - சுவர்க்கத்தின். 'தரையொடு திவிதல நவில்தரு' (தேவா. 568·2). மன்னரும் வணங்க வாழ்வர் என்க.

346. பாங்காகச் சிவலிங்கந் தனிப்பலருந் தாபித்த
பரிசுஞ் சொன்னேம்
ஓங்காரப் பொருளிந்த வுலகுய்ய வுமையோடுங்
கந்த னேடும்
நீங்காதே காதனத்தி லிருந்திங்கே யுறைதலையு
நிகழ்த்தக் கேண்மின்
தீங்கான வினைத்திறத்தைத் தீர்த்தருளுஞ் சிவனடியைச்
சிந்தை செய்தே. (55)

வேறு

347. என்றுகூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (56)

சிவலிங்கத் தாபனச் சருக்கம் முற்றும்.

---

346. ஓங்காரப் பொருள் - சிவபிரான். உமையொடும் கந்த னேடும் ஏகாதனத்தில் அமைந்தது, ஸோமாஸ்கந்த மூர்த்தம். ஏகாதனத்தில் - ஒரே ஆசனத்தில். நிரந்து - வரிசையாகி, நிகழ்த்த - சொல்ல.

9. சோமாஸ்கந்த சருக்கம்

348. மன்னுசுவா யம்புவெனு மனுநாளிற் புத்திரனே
வாஞ்சை செய்தே
பன்னுபுகழ் நாரணன்முன் பதுமையொடுஞ் சென்றுபர
மேசன் பாதம்
தன்னிதயத் துறத்தேவ தாருவென வடைந்துசிவ
லிங்கந் தாபித்
துன்னரிய சின்மயனைச் சிவனையருச் சனைசெய்தே
யொழுகு நாளில், (1)

நவம் செய்யும் திருமால் முன்பு சோமாஸ்கந்தர் தோன்றுதல்

349. கடுவேனிற் காலத்திற் கனல்வளர்த்துத் திசைநான்குங்
காயந் தன்னை
நடுவேபொங் கழலேற்றி நலித்துமழை நாளுணர்வா
னுப்பண் போக்கி
இடர்குளிர நீர்சூழ்கி யிமந்தனிலி லரி..... ....
றியற்று மாண்டு
படவொரா யிரம்பரம னுமைகந்த னெடுந்தோன்றப்
பணிந்து மாலும், (2)

---

348. நாரணன் பதுமையுடன் புத்திரனே வாஞ்சை செய்து, சிவலிங்கம் தாபித்து அருச்சனை செய்து ஒழுகு நாளில் என்று இயைக்க. சுவாயம்புமனுவின் ஆட்சி முதல் மன்வந்தரம் ஆகும். இப்பொழுது நடைபெறுவது ஏழாவது மன்வந்தரம்; அதனை மனு, வைவஸ்வதர். பதுமை - திருமகள். தேவதாரு - கற்பகம்; விரும்பியதை அளிக்கும் தெய்வமரம். அதை அடைவதுபோல் அடைந்து, என்க.

349. கடுவேனில் - கடுமையான இளவேனிற் காலத்தில், மூதுவேனிலென லுமாம். காயம் - உடல். நலித்தும் - நலிவித்தும்; துன்புறுத்தியும். முதலிரண்டடிகள், திருமால்

மால் பரமேசுவரரை வரம் வேண்டுதல்

350. பண்மறையாற் றுதிபகரப் பரமேச னுளமகிழ்ந்து
பகராய் நீதான்
கண்ணியது கரியவனே யென்றருளக் கைதொழுது
கரிய மாலும்
தெண்ணிலவச் சடையாயுன் றிருவருளா லொருகுறையு
மில்லேன் சித்தத்
தெண்ணியவா றெருபுதல்வன் றனைப்பெறயான்
யெனக்கே யென்றான். [அருள்வாய்நீ

ஈசன் வரமருளுதலும் உமை சபித்தலும்

351. உதிப்பனுனக் கொருபுதல்வ னுன்னியவா றென்றமல
னுரைத்தா னுங்கே
கொதித்துமைமா யனைக்குழகன் னடிபணிந்தே
குண்நீ யென்னை [யெனைப்பணிகைக்
மதித்திலைகா னுன்புதல்வன் வதைப்படுவன் மாயவனே
யென்ன மாலும்
பதைக்கவுடல் பயமுற்றுப் பழுதென்பா லுளதென்று
பணிந்து நின்றான். (4)

வேனிலில் பஞ்சாக்னி மத்தியில் நின்று தவம் புரிந்ததையும், பின் இரண்டடிகள் குளிர் காலத்தில் நீரில் நின்று தவம் புரிந்ததையும் கூறும். இடர் போக்கி, என இயைக்க. இமம் - பனி. ஓராயிரம் ஆண்டு பட என்க. பட - கழிய.

350. கண்ணியது - கருதியது. கரியவனே - திருமாலே. தெள் நிலவு - தெண்ணிலவு.

351. கொதித்து - கோபித்து. குழகன் - சிவபிரான். என்னை நீ உள் மதித்திலை என்க. உள் - உள்ளத்தில். வதைப்படுவன் - வதைக்கப்படுவான்.

வேறு

நிருமால் வைகுந்தம் நண்ணிச் சிவபிரான் திருவுருவை அமைக்க ஏற்பாடு செய்தல்

352. வானந் தன்னிற் றேவியொடு மைந்த
னெடுமெம் மிறைமறைந்தான்
கானந் தணந்து வைகுண்டங் கண்ணன்
கமலை யொடுநண்ணி
ஊனம் புதல்வற் கொழிப்பாமென் றுன்னி
யிறைவ னுமைகந்தன்
தானு மேகா தனந்தன்னிற் றங்கு
முருவஞ் சமையென்றே, (5)

தியாகேச வடிவம்

353. ஏவ விமையோர் கம்மியனே யியற்றி
னூல்விதியின்மன்
மூவர் தம்முண் முதலமலன் மயத்தை
மூன்று கண்ணிலெடு
மானு மழுவு மிடக்கரத்தில் வலது
கரத்தின், வாய்க்கவரம்
ஆவ வென்றே யமைத்தகர மிடத்தும்
வலத்து மணியுறவே. (6)

354. புனிற்றுப் பிறையுஞ் சடையுறவே பூணூல்
நாக மார்புறவே
சினத்த வரவு மரையுறவே சிரார்
கமலத் திருவடியில்

---

352. ஊனம் - உமை கொடுத்த சாப விளைவு.

353. இமையோர் கம்மியனே ஏவ - (அவன்) விதியின் மன் நூலின்(படி) இயற்றிலன் என்க. விதியின் மன் - பிரமன். இமையோர் கம்மியன் - விசுவகர்மன். மயம் - மூர்த்தம்; 371. மான் இடக் கரத்தில் மழு வலக்கரத்தில் என்க. வரம் - வரதஹஸ்தம். ஆவ - அபயஹஸ்தம். அணியுற - அழகுபெற.

354. பூணூல் நாகம் - உம்மைத்தொகை. மரை - மான். குனித்த சிலம்பு - வளைந்த சிலம்பு. 'குனித்த புருவமும் கொவ்

குளித்த சிலம்பின் கூடிடவே குளிரக்
கண்டார் கனகமலா
தனத்தி னிடத்தாண் மடக்கியுற வலத்தாள்
சிறிது தாழ்ந்துறவே. (7)

355. ஓரா தனத்தி னிடப்பாலு முமையா
ளுருவ முறைமுறையால்
போரா ரசுரர் தமையெல்லாம் பொருவ
வதைத்துப் பொருவரிய
கூரார் வேலா யிமையவற்கு வானின்
வாழ்வு கொடுத்தருள்செய்
ஏரார் குமரன் றிருவுருவ மிலங்கி
யுறநள் ளிருவர்க்கும். (8)

திருமால் சோமாஸ்கந்தரைப் பூசித்தல்

356. வகுத்த வடிவி னடைவுறவே மனவா
சகமுங் கடந்தானே
இகத்தும் பரத்தும் பலமுதவு மிறைவி
தனையு மிளையனையும்
மகிழ்ச்சி யுடையா தரவுவர வர்ச்சித்
தானம் மறைவிதியால்
சகத்தைப் பரிப்பான் றவவீரன் புரிந்தான்
பூசை தவறறவே. (9)

வைச் செவ்வாயும்' (திருநாவுக். தேவாரம்). கமலாதனம் - ஓர் ஆசனவகை.

355. நள் - நடுவில்.

356. பலம் - பயன். இறைவி இம்மை மறுமைப் பயன்களை ஈவள் என்பது கருத்து. இளையன் - குமரன். ஆதரவுவர - அன்பு உண்டாக. தவவீரன் - தவமும் வீரத்தன்மையுமுடைய திருமால். சகத்தைப் பரிப்பான் - உலகத்தைக் காப்பவனான திருமால். தவறு அற - குற்றமின்றி.

சோமாஸ்கந்தர் தோன்றியதும் திருமால் பணிந்து, பின் உமையை வேண்டுதல்

357. இன்ன முறையா லியற்றுதலும் பூசை
யோரான் டிறையவ னும்
முன்னின் றனனே யுமையுடனே முருக னுடனு
முகுந்த னுகந்
தென்னை யுடையாய் சயசயவென் றிறைவனடியி
னிறைஞ்சி யன்பால்
பின்னன் புடனே யுமைபாதம் பணிந்து
துதித்தான் பேசினனே. (10)

358. நின்னை யன்றிச் சிவனில்லை நீயுஞ்
சிவனை யின்றியிலை
என்னு மியற்கை யினையெண்ணி யிறைவ
னடியி னிறைஞ்சினனன்
றுன்னைப் பணியா தொழிந்தேனுன் உண்டு
பிழையு முமையவளே
இன்னம் பிழையைப் பொறுத்தன்னு யிசைந்த
பாவந் தணியென்ன, (11)

வேறு

உமை தான் கொடுத்த சாபத்தைச் சிறிது மாற்றுதல்

359. என்னது வாக்கி னுலே யியம்பிய சாபம் போகா
துன்னது புதல்வன் றன்னை யுறுமவன் பின்னை யுய்வன்

---

357. முகுந்தன் - திருமால்.

358. இச்செய்யுள் முகுந்தன் உமையை வேண்டியது. இசைந்த பாவம் தணி; செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள் என்றபடி; அன்றி, அன்று கொண்ட வெகுளி நில்லையைத் தணித்துக்கொள் எனலும் ஆம்.

359. சாபம் புதல்வன் தன்னை உறும் என்றியைக்க. உய்வன் - பிழைப்பன். அனங்கன் - உருவமிலாதவன். அழிதலுமின்றி ஒன்று மன்னுவன்.

அன்னவ னனங்க ளுகி யழிதலு .....
மன் னுவன் மாய னேயென் றுமை சொல மகிழ்ந்தான்
[மாலும். (12)

புத்திரவாஞ்சையுற்றூர்க்கு உமை கூறுதல்

360. புத்திர வாஞ்சை யுற்றூர் பூதலத் தோர்மற் றுரும்
முத்தனை யென்னை யிந்த முருகனைப் புரியிற் பூசை
புத்திரன் றன்னைப் பெற்றுப் புகழுற வாழ்வ ரிட்ட
சித்தியும் பெறுவ ரென்று திருவளஞ் செய்தாள் செல்வி.

தான் வகுத்த வடிவத்தை எடுத்துக்கொண்டுபோய்த் திருப்பாற்கடலிற் பூசிக்க வரம் பெறுதல்

361. பரம னு மரியை நோக்கிப் பகருனக் கிட்ட மான
வரமது தருவா மென்ன வகுத்தவிவ் வடிவந் தன்னை
விரைவொடு கொடுபோ யின்பால் வேலையிற் புரியப் பூசை
கருதின னிங்கா திந்த வுருவுறை கருணை செய்தே, (14)

362. என்றியம் புதலு மாய னிறைவனு
மிசைந்துப் போதே
ஒன்றின னெளிருந் தன்ன துருவின
னுமையா டானும்
ஒன்றின ஞரிமை யாந்தன் னுருவி னுட்
குமரன் முனும்
ஒன்றின னுரிமை யான தனதெழி
லுருவத் துள்ளே. (15)

---

360. முத்தன் - முத்தி தருபவன்; சிவபிரான்.

361. வகுத்த இவடிவம்-உண்டாக்கிய இந்தச் சோமாஸ்கந்த மூர்த்தத்தை. இன்பால்வேலை - இனியபாற்கடல். இந்த உரு நீங் காது உறை - இந்த உருவத்தில் நீங்காது தங்குவாயாக. பூசை புரியக் கருதினன், என்க.

362. ஒன்றினன் - சேர்ந்தான். அந்தச் சோமாஸ்கந்த உரு வத்துள் சிவபிரான், உமை, முருகன் மூவரும் கலந்தவர் என்க.

[COURTESY : SRI. V. S. THYAGARAJA MUDALIAR]

அஜபா நடனம்

மகிழ்ந்தரி பரிந்தே யக்த வைகுண்ட மணிப்பான் மல்கித்
திகழ்ந்துறுங் கடலிற் ருபித் நிறையுமை திறமார் கந்தன்
நிகழ்ந்துறு மேனி தன்னி னினேவொடு பூசை செய்தே
புகழ்ந்நிடத் தொடங்கி னனே போதகன் பாதப் போது.

திருமால் பாற்கடல் சென்று அம்மூர்த்தியைப் பூசித்துத் துதித்தல்

363. மகிழ்ந்தரி பரிந்தே யந்த வைகுண்ட
மணிப்பான் மல்கித்
திகழ்ந்துறுங் கடலிற் றூபித் திறையுமை
திறமார் கந்தன்
நிகழ்ந்துறு மேனி தன்னி னினைவொடு
பூசை செய்தே
புகழ்ந்திடத் தொடங்கி னனே போதகன்
பாதப் போது. (16)

சிவபிரானைத் துதித்தல்

364. காரணர் தமக்கு மேலாங் காரண போற்றி போற்றி
ஆரணத் தாலு மார்க்கு மறிவரு மமல போற்றி
பூரண போற்றி நாக பூடண போற்றி போற்றி
தாரணி தனினு நீங்காய் சயசய போற்றி போற்றி. (17)

உமையைத் துதித்தல்

365. வானவர் வணங்க வேண்டும் வரமருள் வல்லி போற்றி
ஏனையர் தமக்கு மிட்ட வரமரு ளிறைவி போற்றி
கானிடை நடம தாடுங் கடவுளைப் பிரியாய் போற்றி
ஞானமன் பினர்க்கே நல்கு நாயகி போற்றி போற்றி.

---

363. அரி - திருமால். வைகுண்டம் அணிப்பால் மல்கித் திகழ்ந்து உறும் கடலில். அணிப்பு - அண்ணிப்பு; அருகு. இறை - சிவபிரான். திறம் - வலிமை. திருமால் பாற்கடலில் சயனித்துத் தன் திருமேனிமீது சோமாஸ்கந்தரைத் தாபித்து, போதகன் பாதப் போதில், பூசை செய்து, புகழ்ந்திடத் தொடங்கினன் என்க. போதகன் - சிவபிரான். பாதப்போது - பாதமாகிய மலர்.

364. ஆரணம் - வேதம். நாக பூடண - பாம்புகளை ஆபரணமாகக் கொண்டவனே.

365. வேண்டும் வரம் - விரும்பும் வரங்களை. இட்டம் - இஷ்டம். ஏனையர் - வானவர் அல்லாப் பிறர். நல்கும் - அளிக்கும்.

உமையையும் முருகனையும் துதித்தல்

366. அண்டர்க ளச்சந் தீரத் தாருகா சுரனைக் கொன்று
விண்டல மவற்கே யீந்த வித்தக போற்றி போற்றி
துண்டனுஞ் சூரன் றன்னைத் துணித்தவேற் சூர போற்றி
கண்டனக் கினியாய் போற்றி கந்தனே போற்றி
போற்றி. (19)

367. எனத்துதித் திறைவன் றன்னை யிறைவியைக்
குமரன் றன்னை
மனத்துற மகிழ்ச்சி வாஞ்சை நாடொறு
மலரால் நீரால்
தனக்கிணை யில்லா வேத விதியினுற்
சமைத்துப் பூசை
யினைத் தனக் கிட்டமான பலத்தையுற்
றிருக்கு நாளில், (20)

வேறு

இந்திராதி தேவர்கள் திருமாலிடம் முறையிடுதல்

368. இந்திரன்வாற் கலியனெனு மசுரனெடு பொருதேயஃ
திழந்து வானும்
நொந்தமர ரொடுமந்த நோலினனை வெலவெண்ணி
நொடிக்குங் காலத்

---

366. அண்டர் - தேவர். அவர்க்கே - அத்தேவர்க்கே. வித்தக - ஞானியே! துண்டன் - துட்டன்; துஷ்டத்தன்மையுடையவன். துணித்த - வெட்டிய. கண்தனக்கு இனியாய்.

367. சமைத்தல் - அமைத்தல்.

368. வால்கலியன், ஓர் அசுரன். அஃது - அப்போர். நோலினன் - வலியவன். நொடித்தல் - வருந்துதல். அந்தரம் - வானம். அரவத்து அணை - பன்னகசயனம்; பாம்புப் படுக்கை. உமக்கு என்றது, தேவர்கனை.

தந்தரத்தி லின்றிழிந்து பாற்கடலி லடைந்தரவத்
தணையான் பாதம்
வந்தனைசெய் தனரரியும் வாட்டமுமக் கென்னெனத்தம்
வருத்தஞ் சொன்னார். (21)

திருமாலின் ஏவலால், தவம் புரிந்து இந்திரன் வாற்கலியனை அழித்தல்

369. புரிந்திடினே யருந்தவத்தைப் புவனிதனிற் புனிததலம்
புகுந்து நீதான்
வரந்திகழும் வாற்கலியன் வலிதொலைந்து மாய்வனெனு
மாய னேடே
பரிந்தடைந்து பாரகத்தைப் பவித்திரமாந் தலத்தினருந்
தவத்தைப் பண்ணப்
புரந்தரன்முன் வாற்கலியன் பொன்றினன்போர்க்
புகுந்தார் விண்ணின். [களத்தமரர்

இந்திரன் திருமாலிடம் சோமாஸ்கந்தரைப் பெறுதல்

370. இந்திரன்தா னிறைஞ்சியரி யிணையடியி லிறையிறைவி
கந்த னென்னும்
இந்தமய மருச்சிக்க வெனக்கருளென் றியம்பியவ
னருளாற் பெற்றே
மந்திரத்தைத் தருகின்ற மறைவிதியான்மா லவனும்
மகிழ்ச்சி கூரக்
கந்தமலர் விதத்தாலும் வானுலகத் தருச்சிக்குங்
காலந் தன்னில், (23)

---

369. புவனிதனில் - பூமியில். தவத்தைப் புரிந்திடின் என இயைக்க. பாரகம் - பூமியாகிய இடம். பவித்திரம் - தூய்மை. புரந்தரன் - இந்திரன். புரந்தரன் தவத்தைப்பண்ண, அவன் மாய்ந்தான் என்க. பொன்றுதல் - இறத்தல். அமரர் விண்ணின் புகுந்தார்.

370. இந்தமயம் அருச்சிக்க ; மயம், 354. அவன் - திருமால். சோமாஸ்கந்த மூர்த்தியை இந்திரன் திருமாலிடமிருந்து பெற்றுத் தன் உலகில் வைத்துப் பூசித்து வந்தான் என்க.

இந்திரன் முசுகுந்தனின் உதவிபெறுதல்

371. அந்தமக வானமரிற் றேற்றசுரர்க் கதிபதியாம்
வலனுக் கிங்கே
வந்துதவு வாரெமக்கென் றெண்ணியிடில் மனதில்முசு
குந்தன் வந்தால்
இந்தவசு ரனைவெல்வோ மென்றவனை யழைப்பித்தே
யவனுந் தானும்
அந்தவசு ரனையழித்தே யிருவருமே காதனத்தி
னிருந்தா ரங்கே. (24)

முசுகுந்தன் சோமாஸ்கந்தரை விரும்பியது

372. கந்தமலர் விதத்தானுங் கவினுடைப்பூண் விதத்தானுங்
காதல் கூர
இந்திரன்முன் முசுகுந்தற் கிதமுதவி நின்புரிசெல்
லென்ற போது
வந்தனைசெய் திந்திரனை மன்னவிறை யிறைவிமயி
லூர்வா னென்றின்
இந்தவித விக்கிரகத் தருச்சிக்கு மிச்சைபெரி
தெனக்கே யென்றான். (25)

---

371. மகவான் - இந்திரன். வலன் - ஓர் அசுரன். முசுகுந்தன், சோழமன்னனொருவன். ஏகாதனம் - ஒரே ஆசனம். வலன் என்ற அசுரனால் இந்திரன் பீடிக்கப்பட, அவன் முசுகுந்தன் என்ற பூவுலக மன்னனின் துணைபெற்று அவ்வசுரனை வென்றான் என்க.

372. கவின் - அழகு. பூண் - ஆபரணம். இதம் - நன்மை தரும் வரிசைகள். நின்புரி - உன் ஊர்; சோணாட்டு நகர். மயில் ஊர்வான் - முருகன். இன் + இந்த வித விக்கிரகத்து - இனிய இந்தவிதமான உருவத்தை, எனக்கே — ஏ, பிரிநிலை, முசுகுந்தன் இந்திரனிடம் சோமாஸ்கந்த மூர்த்தியை விரும்புதல் கூறப் பெற்றது.

வேறு

முசுகுந்தன் திருமாலிடம் வரம் பெற்றது

373. அரியொடறை யுனக்கிட்ட மனுமதிக்கி லவனருச்சி
யெனவரமெய் யருள்வா னீயே
விரை வொடுசென் றடைந்துகடல் விண்டுவினைக்
வேந்தன் போற்றப் [கண்டிறைஞ்சி
பரிவுடனே பார்த்தரியும் பாங்கான வரமுனக்கென்
பகர்வாய் வேந்தே
தருவமெனத் தன்குறிப்பைச் சாற்றமன்ன
சார்ங்க பாணி. [னனுமதித்தான்

முசுகுந்தன் சோமாஸ்கந்த மூர்த்தியைப் பூவுலகிற்குக் கொணர்ந்தது

374. பணிந்தரிதன் பதமலரின் விடைகொண்டு பார்த்திபனும்
வானுலகம் பற்றி யங்கே
இணங்கியிமை யவர்கோனே யிட்டவரம் பெற்றேனென்
றியம்பக் கேட்டுக்
குணங்குறியு மில்லாதான் கோலமய மிந்திரன்முன்
கொடுக்கக் கொண்டே
தணந்துவிணிற் பதியொடுமண் ணுலகந்தன் னில்வந்து
சார்ந்தான் வேந்தன். (27)

---

373. முதலடியில் ஏழுசீர்கள் வந்துள்ளன. "நீயே விரை வொடு கடல் சென்று அடைந்து, விண்டுவினைக் கண்டு இறைஞ்சி, வரம் மெய் அருள்வாய் நீயே என்று அரியொடு அறை; அருச்சி என அனுமதிக்கில், வேந்தன் (திருமாலிடம் சென்று போற்ற,) அரியும் பரிவுடனே அவனைப் பார்த்து, 'உனக்குப் பாங்கான வரம் என்? பகர்வாய். வேந்தே, தருவம்,' என, மன்னவனும் தன் குறிப்பைச் சாற்ற, சார்ங்கபாணி அநுமதித்தனன்" என்று இயைத்துப் பொருள் காண்க.

374. முதலடியில் ஏழுசீர்கள் வந்துள்ளன. அரி தன் பத மலரில் பார்த்திபன் பணிந்து விடைகொண்டு என்க. வானுலகம் - தேவலோகம். இணங்கி - அடைந்து. இமையவர் கோன் - இந்திரன்.

முசுகுந்தன் ஆரூரில் தியாகேசரைப் பிரதிட்டை செய்தது

375. மனுகுலத்தில் வைவசுதன் கற்பத்தில் பாரதத்துள்
வாய்த்த தாரூர்ப்
புனிததல மெனவுணர்ந்து புற்றிரிடங் கொண்டிருக்கும்
பொருளின் தென்பால்
இனியமக மாதத்தி லத்தத்திற் றேயுமதி
யேயும் போதில்
பனிவரைபோ லாலயத்தைப் பண்ணினன்விண்
ணூலின் பாங்கால். [ணவர்பதிசொ

முசுகுந்தன் சோமாஸ்கந்தரைத் திருவாரூரில் தாபித்துப் பூசித்தது

376. விண்ணவரும் வேதியரும் புடையடைய மங்கலங்கள்
விளங்க வெங்கும்
தண்மதிசேர் சடையானே யுமைக்கந்த னெடுநீங்காத்
தலைவன் றன்னை
மண்ணவரு மகிழ்நகர் வலங்கொண்டே யாலயத்து
மன்னர் கோமான்
பண்ணினனே தற்பரத்தைப் பரமசிவன் பகர்விதியாற்
பாதப் போதே. (29)

இயம்பினவன் முசுகுந்தன; கேட்டவன் இந்திரன். குணங்குறியும் இல்லாதான் - அருவனான சிவபிரான். கோல மயம்; 354. தணத்தல் - நீங்கல். வி(ண்)ணிற்பதி - அமராவதி. வேந்தன் - முசுகுந்தன்.

375. பாரதம் - பரதக்கண்டம். வாய்த்தது - உண்டானது. புற்றினிடம் கொண்டிருக்கும் பொருள் - வன்மீகநாதன். மகமாதம் - மாசி மாதம். அத்தம் - அஸ்த நட்சத்திரம். தேயுமதி - கிருஷ்ண பக்ஷம். பனிவரை - இமாலயம். விண்ணவர் பதி சொல் நூலின் பாங்கால் - இந்திரன் கூறிய நூலினைப் பின்பற்றி.

376. புடை - பக்கங்களில். தண்மதிசேர்சடையான் - சந்திர சடாதரனான சிவபிரான். நகர் - ஆரூர். மன்னர் கோமான் - முசுகுந்தன். பகர் - சொன்ன. பாதப் போது - பாதமலர்.

377. புரிந்துவிதி முறையுறவே பூசனையைப் பெருவிழவும்
புரிய லுற்றுன்
விரிந்துமுழங் கிடமுழவ முதலான வி்தமெங்கும்
விளங்க வேதம்
பரிந்தகொடி யெண்டிசையுஞ் சன்னிதியும் பற்றிநிவந்
தோங்கப் பாங்கால்
திரம்பெறுமை யிருதிசையிற் றேவரவ ராயுதமுந்
திகழச் சேர்ந்தே, (30)

பூசை புரிதற்குரிய பொருள்களும் பூசைக்கு வந்தவர்களும்

378. அலர்விதஞ்சந் தாதிவித மணியிழையின் விதமாடை
விதமன் ஞதி
பலவிதமு மிகமல்கப் பதியனைத்து முறுந்தேவர்
பத்த ரோடு
மலர்மலியுந் தவிசினிடை வரச்சைவ ரப்பர்.....தா
மற்றை யோருந்
துலையிலியே துகளிலியே துகளறுத்தா ளெமையென்று
தொடரச் சூழ்ந்தே, (31)

379. எண்ணரிய கொடிவிதமு மிந்துவினேர் குடைவிதமு
மிலங்கி யோங்கப்
பண்ணிலவு மொழிமடவார் பாடலொடு மாடலொலி
படர்வா னுந்தித்

---

377. வேதம் எங்கும் விளங்க என்றியைக்க. நிவந்து - உயர்ந்து. பத்துத் திசைகளிலுள்ள தேவர்கள் தம் படைகளுடன் சூழ்ந்து நிற்க என்க.

378. அலர்விதம் - பலவித மலர்கள். சந்தாதி - சந்தனம் முதலிய வாசனைப் பொருள்கள், அன்னதி பலவிதம் - அன்னத்தின் விசேடங்கள். துலையிலி - தனக்கு யாரும் நிகரற்றவன். துலை யென்றது ஆகுபெயர். துகள் - குற்றம்.

379. இந்து - சந்திரன். பண் - இசை. நிலவு - விளங்கும். முடிமனர் - முடிமன்னர். விண்தோய் கோயில் - வானத்தை எட்டும் உயரமுள்ள கோயில்,

தின்னியதேர் வீதிதொறுந் திகழ்ந்திலங்க முடிமனருந்
தினமு மேத்த
வெண்மதியு மணிமுடியான் வீதிவலம் புரிந்துறையும்
விண்டோய் கோயில். (32)

பங்குனி உத்திர அபிடேகம்

380. பங்குனியி லுத்திரத்தில் பனிமதியுங் கூடியுறும்
பாங்கு தன்னிற்
செங்கனகக் கலசத்திற் பூரித்துத் திகழ்விதியா
லுதகந் தாபித்
தங்கையினு லவற்றையெடுத் தபிடேகஞ் செய்தனர்பே
ரன்பி னுலே
சங்கரனுக் குமைகந்த னேடுறையுந் தலிவனுக்குச்
சைவர் தாமே. (33)

இறைவனுக்கு ஆடையாபரணஞ் சாத்தி நிவேதித்தல்

381. பாங்காகப் பட்டாடை யாபரணஞ் சந்துபனி
நீருஞ் சாத்தி
நீங்காத காதலுறப் போனவிதநி வேதித்து
நினைவுக் கெட்டா
ஓங்காரப் பொருளினுக்குந் தூபமொளி மற்றையுப
சாரஞ் செய்து
தேங்காவி மலரணியுந் திருவடியைத் தொழுதன்பாற்
றரிசித் தாரே. (34)

---

380. உதகம்-நீர். பனிமதியும் கூடியுறும் பாங்கு-பௌர்ணமி. பூரித்தல் - நிறைத்தல். சைவர் - சிவாசாரியர்கள்.

381. பாங்கு - அழகு. சந்து - சந்தனம். தேம் - இனிமை; மணம். காவிமலர் - நீலோற்பல மலர்.

ஆண்டுதொறுந் திருவிழாச் செய்தல்

382. முற்றுவித்துத் திருவிழவு முறைவிதியா லாண்டமரர்
முதலோ ரெல்லாம்
பற்றறுக்கும் பசுபதியைப் பதம்பணிந்து தந்தமது
பதியைச் சார்ந்தார்
மற்றைய ..... வழுவா தாண்டுதொறும்
கையி லேந்திப்][வந்துமலர்
புற்றிடங்கொண் டிருப்பாளைப் பதம்பணிந்து
புகழச் செய்வார்.][பெருவிழவு

383. முறைவிதியாற் குறைவறவே முசுகுந்தன் பெருவிழவு
முற்று வித்தே
பொறையுடைய பூதலமும் பொன்னுலகும் புகழ்ந்திடவே
புரிவி னேடே
குறைவறவே நடத்துதற்குக் கொடுத்துநிதி வளநாடுங்
கூத்தன் பாதத்
தறைகழலான் புரியடைந்தா னமலனடி யடைவனுல
கடங்கும் நாளில், (36)

இனிவரும் அரசர்கள் இவ்வாறு பூசிப்பின் நலம் பெறுவர் என்பது

384. இந்தமுறை குறையாதே யினியியற்று மரையருமூற்
றின்ப மிங்கும்
அந்தமினி யாமலவரன் புரத்துறைந்தே யார்வமுற
வயங்கு மின்பம்

---

382. இச்செய்யுள் திருந்தவேண்டி யிருக்கின்றது.

383. நிதியும் வளநாடும், (பூசை, விழா முதலியன நடத்தற்குக்) குறைவறவே கொடுத்து, பாதத்து அறை கழலானும் கூத்தனுமாகிய சிவபிரான் புரியான கயிலாசபுரியை அடைந்தான் (சாலோகம் அடைந்தான்); உலகு அடங்கும் நாளில் (ஊழிக்காலத்தில்) அமலன் அடி அடைவன் என்று கூட்டிப் பொருள் கொள்க.

384. இந்த முறை - மேலே கூறிய முறைப்படி. அரையர் - அரசர். இங்கும் இன்பம் உற்று - இம்மையில் இன்பம் அடைந்து.

முந்துறுநான் காமென்று முடங்கிடுநா ளனைதிமல
முத்த னேக்கால்
பந்தமுறத் தினைத்திருப்பர் தன்மயச்சித் தத்துவய
பரமா னந்தம். (37)

தியாகேசரைப் பூஜிப்பவர் கவனிக்க வேண்டியவை

385. புரிவார்க ளிடையூறு பொருவரிய பரமசிவன்
பூசை தன்னில்
எரிவாய நிரயத்தி லிழிந்தழிவ ரேழுர்க
ளென்றே யெண்ணி
ஒருகாசும் விழையாதே யுமிபதரும் கொள்ளாதே
யுயிர்கட் கெல்லாம்
அருளாள னடிப்பூசை புரிவிப்பா ரற்றுமல
மமலத் தாவார். (38)

இனி - மேலே. அமல அரன்புரத்து - மலமற்ற சிவபுரத்தில். நான்கு ஆறு ஒன்றும் முடங்கிடும் நாள் - நான்கு ஆறு என்பன இருபத்துநான்கென விளங்கும் ஆத்மதத்துவங்கள்; அவை ஐம் பூதங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து தன்மாத்திரைகள், ஐந்து கர்மேந்திரியங்கள், நான்கு அந்தக் கரணங்கள். இவற்றை அசுத்ததத்துவமென்றும் போக்கிய காண்டமென்றும் கூறுவர். ஒன்று என்பது, ஒரு செகத்தாக உள்ள ஆதிம தத்துவங்களெனப் பொருள்படும். ஒன்று - 25 ஆவதாகிய ஆன்மாவுமாம். முடங்கிடுதல் - அழிதல். அனைதிமலமுத்தன் - சிவபிரான். நோக்கு - அருட் பார்வை. தன்மய சித் அத்துவய பரமானந்தம் தினைத்திருப்பர். தன்மயம் - ஆன்ம மயம். சித் - அறிவு. அத்துவயம் - அத்துவிதம்; 'அத்துவிதம் என்ற சொல்லுக்கொன் றென்றலப் பொருள்வே, றற்றதென வேமலியின்றும்' என்பது பதிபசுபாசப் பனுவல் 2:37. இச்செய்யுள் ஆன்மா முக்தி பெறும் முறையை விளக்கியது ஆம்.

385. பொருவு அரிய பரமசிவன் பூசை தன்னில் இடையூறு புரிவார்கள், எரிவாய நிரையத்தில் இழிந்து அழிவர் என்றே எண்ணி, ஒரு காசும் விழையாதே, உமிபதரும் கொள்ளாதே, உயிர்களுக்கெல்லாம் அருளாளன் அடி பூசை புரிவிப்பார், மலம் அற்று, அமலத்து ஆவார் என்று அன்வயிக்க. பொருவு - இணை.

திருப்பணிக்கு நீதி முதலிய உதவுவோர் பெறும் பலன்

386. திருப்பணியை நிதிகொடுத்துச் செய்விப்பார் மாபூசை
செய்விப் பாரும்
இருப்பர்சிவ புரந்தன்னி லின்புற்றப் பேரிலயத்
திறைதாள் சேர்வர்
கருத்துறவே போதிப்பார் கருணையராய் நிதிவாங்கிக்
கபட மின்றித்
திருப்பணியைச் செய்விக்குந் தெள்ளியரு முற்பலத்தைச்
சேர்வார் திண்ணம். (39)

சிறப்புப் பூசனைகள் புரிவோர் பெறும்பேறு

387. நித்தியநை மித்திகமுங் காமியமு முணர்ந்தியற்ற
நிமலன் சொன்னூல்
புத்தகத்தின் வரைவித்துப் பூசனையும் புரிவித்தா
லயத்தி னுள்ளே
வைத்துமண மலரானு மருச்சனைசெய் விப்பார்வல்
வினையை மாய்த்தே
அத்தன்மா புரத்தின்ப மனுபவித்தே யமலனடி
யடைவார் மீளார். (40)

நிரயம் - நரகம். உயிர்களுக்கெல்லாம் அருளாளன் - சிவபெருமான். மலம் - மும்மலம். அமலம் - மலமற்ற நிலை.

386. மாபூசை - விசேஷ பூசை; திருவிழா முதலியவை. இலயம் - ஒன்று சேர்கை. ஊழியின் இறுதியில் இலயமடைதல் முன் 382 ஆம் செய்யுளிலும் குறிக்கப் பெற்றது காண்க. உற்பலம் - நீலோற்பலம்; தியாகேசன் திருவடியைக் குறித்தது. கருத்துறவே கருணையராய் போதிப்பார் என்றது, திருப்பணி விசேடத்தை எடுத்துச் சொல்பவர் எனறு பொருள்பட நின்றது. செய்விக்கும் - பிறவினை.

387. நித்திய - நித்திய பூசை; தினசரிப் பூசனை. நைமித்திகம் - விசேஷ காலங்களில் நிகழ்வது. காமியம் - பயனை விரும்பிச் செய்யும் பூசை. நிமலன் சொன்னூல் - ஆகமம். அதனை உணர்ந்து நித்திய நைமித்திகம் காமியம் இயற்ற என்று இயைக்க. ஆலயத்தின் உள்ளே புத்தகத்தின் வரைவித்து என்றதால், கோயிலில்

சோமாஸ்கந்தரைப் பூசிப்போரும் அவர் பெறும் பயனும்

388. முறைவிதியாற் றிகழ்தேவ தீர்த்தத்தி னுறமூழ்கி
முத்தன் றன்னை
இறையவனை யுமைகந்த லெடுமேகா தனத்திருக்கு
மெழிலி னானை
நறைமலர்தூய்ப் பதந்தொழுவார் நடலைவினை
நயந்து வாழ்ந்து
சிறையுடலைத் தீர்ந்துசிவ புரத்துறைந்து சிவனடியைச்
சேர்வார் திண்ணம். (41)

முயற்சிக்கே உண்டாம் பயன்

389. வாஞ்சையுறத் தரிசிப்பே மகேசனடி யென்றுவழிப்
படர்ந்து மாண்டார்
தாஞ்சிவலோ கத்திருந்து தணந்துசிவ புரிதன்னைத்
தரையிற் றோன்றி
ஞாஞ்சியலில் லோநமையு நடத்துமம லேசனென
நாடிக் கண்டு
தாஞ்சினருட் டாமரையைச் சார்ந்திருப்பர் தமோடிலமுந்
தணந்து போமே. (42)

விசேட வழிபாடுகட்குக் கணக்கு உள்ளமை குறிக்கப் பெற்றது. நிமலன் சொன்னால் பூசனை என்றும் இயைக்கலாம். வல்வினை - இருவினையும் ஆம். புரம் - சிவபுரம்; கைலாயம்.

388. முத்தன் - சிவபெருமான். நடலைவினை - வஞ்சக வினை. சிறை உடல் - ஆன்மாவைச் சிறைப்படுத்தி யிருக்கும் உடல்.

389. வாஞ்சை - விருப்பம். வழி படர்ந்து மாண்டார் - வழியிலே நடந்து, நடையிலேயே இறந்தவர். தணந்து - நீங்கி. தரையில் சிவபுரி - ஆரூர். தன்னை - தன்னில்; உருபு மயக்கம். ஞாம் - நாம். நாடி - ஆராய்ந்து. கண்டு - தெரிந்துகொண்டு. சின் அருள் தாமரை - அறிவு மயமானதும் அருள் நிரம்பியதுமான தாமரை போன்ற திருவடி. சார்ந்திருப்பார் - அடியர். இலம் - இல்லம்; அகப்பற்று, புறப்பற்றுகிய சமுசார வாழ்க்கை.

அறியாமல் பூசிப்பவரும் பயனடைவர் என்றது

390. அறிவலரு மாதரவா லடைந்தாடித் திகழ்தேவ
தீர்த்தத் தார்க்கும்
பிறிவிலனைப் பிறப்பிலியைப் பிறப்பினையு மிறப்பினையும்
பேதிப் பானை
மறிமருவுங் கரத்தேந்து மாதவன் றனைப்பாதம்
வணங்கிக் கண்டு
செறிவர்சிவ புரமமலன் றிருவுருவுஞ் சேர்ந்துநனி
திளைப்பா ரின்பம். (43)

நினைப்பவர் அடையும் பயன்

391. நினைப்பவர்தாந் தரிசிக்க நிமலனடி நின்றுலு
மியங்கி லுலும்
துனைத்துவழி நடந்திடினுந் துரிசறுவர் துயரற்றுத்
துரப்பர் மண்ணைப்
பினைப்பிறவார் சிவலோகம் பெற்றிருந்தின் புறுவார்பே
ரிலயந் தன்னில்
அனைத்துமறப் பாசவித மனுபவிப்ப ரழியாத
பேரா னந்தம். (44)

---

390. அறிவலரும் - அறிவில்லாதவரும்; அதாவது, தம் செயல் புண்ணியமானது என்ற நினைவு இன்றிச் செய்பவரும்; அஞ்ஞான நிருதமாக நல்லது செய்பவரும் சிவபுண்ணியத்துக்கு உரியவர் என்றபடி. ஆர்க்கும் பிரிவிலன் - எவரிடமும் பிரிவில்லாமல் நிறைபவன்; பிறிவு, எதுகை நோக்கியது. பிறப்பினையும் இறப்பினையும் பேதிப்பானை - தன் அடியவர்களுக்குப் பிறப்பு இறப்புக்கள் இல்லாமல் செய்யக்கூடியவனை. மறி - மான். சிவபுரம் செறிவர் என்க. சிவபுரம் செறிதல், திருவுருவு சேர்தல், இன்பம் திளைத்தல் - சாலோகமடைதல், சாரூபமடைதல், சாயுஜ்யம் அடைதல் ஆம்.

391. தான், நிமலன் அடி தரிசிக்க நினைப்பவர் என்று இயைக்க. இயங்குதல் - நடத்தல். துனைத்து - விரைந்து. துரிசு - பிறப்பாகிய குற்றம்; பாவமும் ஆம். மண்ணைத் துரப்பர் - இவ்வுலக வாழ்வு நீங்குவர். பினை - பின்னை. தொடுத்தல் பாசவிதமனைத்தும் அற எனவியைக்க.

பலச்ருதி

392. பாங்குறவே யிந்தவியல் படிப்பாருங் கேட்பாரும்
பாவ மெல்லாம்
நீங்கியிடச் சிவபுரத்தி னிரந்திருப்ப ரின்புடனே
யினிமுன் னுளில்
ஓங்குபுகழ் மதுரைதனிற் கோகன்ன ரோரிருவ
ருணர்ச்சி யுற்றே
ஈங்கணேந்து சிவலிங்கத் தருச்சித்தன் புறுமுறையு
மியம்பு வாமே. (45)

வேறு

393. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (46)

சோமாஸ்கந்த சருக்க முற்றும்.

---

392. பாங்குற - திருத்தமுற. நிரந்திருப்பர் - ஒழுங்குபட்டிருப்பர். பாவமெல்லாம் நீங்கித் தூய்மையாய் ஒழுங்குபட்டிருப்பர் என்பதாம். 'நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்' (குறள் 648). கோகன்னர் ஒருவர் - கோகன்னன் என்னும் ஒரே பெயரை யுடைய இரண்டு வேதியர்.

10. கோகன்ன சருக்கம்

394. மண்டலத்தே யமுனையெனும் மாநதியின் நீரத்தின்
மதுரை யென்றே
எண்டிசையு மியம்பவினி திலங்குபுரி தனிலெவரு
மெண்ண வாழ்வார்
பண்டிகழு மறைபயிலும் பனவர்குல .....துகோ
கன்ன னென்பான்
உண்டொருவ னவனைப்போன் மற்றுமொரு கோகன்ன
னுளனவ் வூருள். (1)

யமன் தூதுவனுக்குக் கட்டளையிடல்

395. தருமனொரு தூதுவனைத் தானழைத்துத் தபனனடு
வுச்சி தன்னில்
வருதலுநீ யமுனையெனு மாநதியின் நீரத்தின்
மதுரை யென்னும்

---

394. நீரத்தின் - கரையில். மதுரை - உத்தர மதுரை. பண் திகழும் மறை - இசையோடு விளங்கும் வேதத்தை. பனவர் - வேதியர். வாழ்வார் என்று பன்மையிற் கூறியது, ஒரே ஊரில், ஒரே பெயருடைய இருவரைக் குறித்து என்க. கோகன்னன், கோகருணன் என்ற பெயரின் சிதைவு; பசுவின் காது போன்ற காதை உடையவன் என்பது பொருள்.

395. தருமன் - யமதருமன். தபனன் நடு உச்சி தன்னில் - சூரியன் வான நடுவில் விளங்கும் உச்சி வேளையில். பூசுரர் - அந்தணர். நாள் (உம்) ஒரு கணமும் உற்றது - நாளும் குறித்த விடையும் நெருங்கிவிட்டன. கோகனனை வதைத்து இங்கே புணர்; புணர் - வந்து சேர். ஓதும் செல் என - கூறப்படும் மேகம் என்று சொல்லும்படி; 'காரெனக் கடிது சென்றான்' (கம்ப. அயோத்யா. குகப். 36). என்றது போல. செல் - 'மோதும் செல்' என்றும் கொள்ளலாம். மேகம் என அவன் சென்று அப்போது அங்கே உற்றான் என இயைக்க.

புரிபுகுந்து பூசரருட் கோகனை வதைத்திங்கே
புணர்நா ளூற்ற
தொருகணமு மோதுஞ்செல் லெனச்சென்ற வவனப்போ
துற்ரு னங்கே. (2)

தூதுவன் தவறுசெய்ய, தருமேசன் மறுபடியும் கூறல்

396. உருவானும் பெயரானு முணர்வானும் வயதானும்
உடலி னுற்ற
குருவானும் வேறற்ற.... றையகோ கன்னனுயிர்
கொண்டு சென்றே
தருமேசன் முன்னிறுத்த விவனுயு வின்னுமுளை
தவறே செய்தாய்
ஒருவாதே யிவன்றனைநீ கொடுபோயவ் வூனுடலத்
துள்ளே வைப்பாய். (3)

கோகன்னன் மண்ணுலகடைய மறுத்தல்

397. என்றியம னியம்புதலுங் கோகன்னன் பணிந்துகர
மிரண்டுங் கூப்பி
நின்றியம னெதிரடைந்தே னினைமுனைநல் வினையெனக்கு
நீட லாலே

---

396. இச் செய்யுள் குளகம்; அடுத்த செய்யுளிலுள்ள 'இயம்புதலும்' என்பதனோடு பொருந்தும். குருவானும் - நிறத்தானும். ஆயு - ஆயுள். ஒருவாது - யான் சொல்வதைக் கடவாமல். ஒருவுதல் - நீங்குதலும் ஆம். ஊன் உடல் - தூல சரீரம். தூதன் தவருன கோகருணனைக் கொண்டுவந்ததால், இயமன் இவ்வாறு கூறினன் என்க. தருமேசன் - தருமராஜன்.

397. இயமன் எதிர் நின்று, 'முன் நல்வினை எனக்கு நீடலாலே நினை அடைந்தேன்' என்ருன் என்க. மரித்திடுவேன் - இறப்பேன். மிடியால் - வறுமையால். எய்த்தேன் - இளைத்தேன். என்று 'எனக்கு நின் உலகம் என்று இச்சித்தே இருந்தேன்' என்றியைக்க. 'மண்ணுலகம் எனக்குத் தான் நன்றே அன்றே' என்ருன் என்க.

என்றுமரித் திடுவேனென் றிச்சித்தே யிருந்தேனுன்
மிடியா லெய்த்தேன்
என்றெனக்கு நின்னுலக மண்ணுலக மெனக்குத்தா
னன்றே வன்றே. (4)

தருமன் கூறியது

398. என்றழுங்கி யியம்புதலு மிறுத்திடுநா டனிலிமைக்கு
மளவிற் பாதி
குன்றிடினுங் கொன்றிடுவ திலைகொடிய வினையார்க்குங்
குணத்தி னுர்க்கும்
என்றுமொரு தன்மையதா யிருத்தலினல் தருமனெ னும்
பெயர்தா னெம்பால்
ஒன்றியுறு மாதலினு லுனக்காயு வின்னுமுள
வொல்லைச் சொல்வாய். (5)

கோகன்னன் மகிழ்ச்சி யுற்றது

399. இட்டமுற வெமைக்கண்டாய் நீயிதனு னினக்கினிய
வரத்து ளொன்று
கட்டுரையாந் தருவமெனக் கருணையினுற் றருமேசன்
கழறக் கேட்டே
விட்டதுட லெமக்குத்தான் மேலியில்நல் வினையென்றே
விருப்ப முற்றுச்
சட்டெனவே கோகன்ன னிட்டவரந் தனைத்துணிந்து
சாற்ற லுற்றான். (6)

---

398. இறுத்திடும் நாள் - கொல்லும் நாள். குன்றிடினும் - குறைந்தாலும். தருமன் என்னும் பெயர்க்குக் காரணம் கூறியது காண்க. ஒன்றுதல் - சேர்தல். ஒல்லை - விரைவில். 'சொல்வாய்' என்று கேட்டது இன்னதென்று அடுத்த செய்யுளிற் காண்க.

399. கட்டுரை - சொல். கழற - சொல்ல. 'எமக்கு உடல் விட்டது மேலை நல்வினை என்றே' என்று அந்தணன் கூறியது, தான் வரம் பெறும்பேறு பெற்றமை கருதி என்க. சட்டெனவே - விரைவாக; உலகு வழக்குச் சொல்.

கோகன்னன் நிரயத்தைக் காணவிரும்பி யமனிடம் விண்ணப்பித்தலும் யமன் கூறலும்

400. பண்ணினர்கள் பாவமிகும் படுகுழிமா நிரயத்துட்
படிவா ரென்றே
மண்ணுலகின் மறையவரு மதித்தறைவ ரவைமனது
வாக்கி னுலே
எண்ணியிட விச்சித்தே னெனக்கினியா யென்றியம்ப
வியமன் முனும்
கண்ணி..... கதிலவ்வற்றுட் கட்டுரைப்பா
கழற வல்லார். [மெவரனைத்துங்

401. தருமபுரி யிதெமது தானமிதன் வடபால்வை
தரணி யாற்றுள்
பெருகுநறும் பாலதனைத்தாளர ..... தவரே
பெரியோர் நம்பால்
அருவருப்பூ ணுதிரவெள்ள மாயொழுகு மதுதன்னுட்
புரையோ ராழ்வர்
கரையடைவ ராவின்வால் கைப்பிடித்த னுதவினர்சாங்
காலந் தன்னில். (8)

---

400. நிரயம் - நரகம். மிகும் பாவம் பண்ணியவர்கள் என்றியைக்க. எனக்கு இனியாய், என்றது தருமனை. அவை மனதினுலே மதித்து வாக்கினுலே அறைவர் என்றியைக்க. எண்ணியிட இச்சித்தேன் என்றது, அவற்றைக் கண்டு கணக்கெடுக்க விரும்பினேன் என்றபடி. அனைத்து நரகங்களையும் எவர் எடுத்துரைப்பார்? சிலவற்றைக் கூறுவோம் என்றபடி.

401. தருமபுரி - யமபுரி. வைதரணியாறு - யமலோகத்துக்குச் செல்லுவதற்கு முன் கடக்கும் ஆறு; நெருப்பு மயமான தென்பர். அருவரும் பூண் உதிர வெள்ளம் - அருவருப்பைக் கொண்ட இரத்த வெள்ளம். ஆவின் வால் கைப் பிடித்தல் - பசுவின் வாலைக் கைப்பிடித்து வைதரணி யாற்றைக் கடத்தல். கோதானம் செய்தலின் பலன் இதுவாகும்.

402. கருதுறுமப் பாதாள மேழினுக்கு மப்பாலேச்
கப்பா னுன்கு
இருபதினே டிருநான்கு கோடியவை யவற்றுள்ளு
மிருபத் தொன்று
கருதியிடு கட்டுரைப்பாங் கடுந்துயரக் கடலவற்றுள்
ககனர்..... தாழ்வர்
துரிசினையுந் தனித்தனியே முறையுறவே யவற்றினுக்குந்
துணிகச் ..... (9)

ரௌரவம்

403. கொடியரவு ரவமுதல திருப்புமயக் குடமதனிற்
குமைத்திட் டாக்கைக்
கடிய.... தெரிப்பர்தயிலத்தைப் பூரித்துக்
கனன்று வேவ

இப்பாடல் திருந்தவேண்டி யிருக்கிறது. புண்ணியவான் களுக்கு அவ் ஆறு சிறந்த பாலுடையதாகக் காணும்; அல்லா தார்க்கு உதிர வெள்ளமாய் ஒழுகும். சாகுங் காலத்துச் செய்யப் பெறும் கோதானத்தால், அவ்வாறறைக் கடக்க வழியுண்டாகும் என்பது கருத்து.

402. பாதாளம் ஏழ் - கீழுலகம் ஏழு. பாதாளத்தின் கிழ் 28 கோடி நரகங்கள் உள்ளன; அவற்றுள் 21-இனைக் கூறுவாம் என்றது. கருதியிடு இருபத்தொன்று எனக் கூட்டுக. நரகம் ஒவ்வொன்றும் - கடும் துயரக் கடல் என்க.

குறிப்பு: 404 முதல் 424 முடிய உள்ள செய்யுட்களில் 21 நரக விசேடங்களின் பெயர்களும், இன்ன நரகம் இன்ன பாவம் செய்தவர்க்கு உரியது என்பதும், அங்கங்கே விளையும் துன்பங் களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. நூல்களில் நரகங்களின் பெயர்கள் வெவ்வேறு விதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆசிரியர் எந்த மூல நூலை ஒட்டிச் சொல்லுகின்றார் என்பது தெரியவில்லை. செய்யுட்கள் மிகவும் சிதைந்து உள்ளமையால், நேர்மையான குறிப்புக்களும் எழுதக்கூடவில்லை.

403. கொடிய ரௌரவம் முதலது எனப் பிரிக்க. பிறர் மனையில் உணவு உண்பாரையும், பொன்னைக் களவாடியவரையும்

ஓடிவறவே பிறர்மனையி லோதனத்தின் விருப்பத்தா
லுண்பார் தம்மைக்
கடியரெம தூதரயற் கனகங்கொள் கள்வரையுங்
கறுத்துத் தாமே. (10)

மகாரௌரவம்

404. இரண்டாகு வதிற்பெரிய ரவுரவத்திற்றங் துடலிருப்புக்
குடத்தி னிட்டுப்
புரண்டாடத் தயிலத்தைப் பூரித்துப் பொறியழல்வைத்
தெரிப்பர் புந்தி
மருண்டாற்கு மயக்கறுக்கு நட்பினன்றன் மனைவிதனை
மருவி னுரை
உருண்டாக மொழியும்போ துதவினரை யுன்னுதார்
தூம மார்ந்தே. (11)

அந்ததமம்

405. அந்ததம மூன்றுவ ததுதன்னி லழுங்கிடுவா
ரரவங் கூரச்
சிந்தைதனிற் கண்ணிலே திளைத்தார்கள் பிறன்மனையாள்
சிறந்த வாகங்
கொந்துமவர் கண்ணிரண்டு டக்கூர்ந்த விருப்பழற்
புட்கள் கூடி
நொந்தழுவ ரவர்வருந்தும் வருத்தத்தையய் .....
ருவல் லாமோ. (12)

இந்நரகத்தில் இருப்புக் குடத்தில் எண்ணெயைக் கொதிக்க வைத்து, அதில் இட்டு வேவப் பார்ப்பார்.

404. இரண்டாவது நரகம் மகாரௌரவம். நண்பன் மனைவியை மருவினவனுக்கும், காலத்தாற் செய்த நன்றி கொன்றவனுக்கும் இந்நரகம் உரியது ஆம். நட்பின் தன்மை, மருண்டாற்கு மயக்கறுக்கும் என்று கூறப்பெற்றது. ஆகம் - உடம்பு. உடல் நீங்கும்போது ஒத்த துன்பத்தில் உதவினரை என்க.

405. கண்ணிலே திளைத்தார்கள் - கண்ணால் கண்டு அநுபவிக்கின்றவர்கள். சிறந்த ஆகம் - அழகிய சரீரம். இருப்பு அழல் - இரும்பால் செய்து நெருப்பில் காய்ச்சப்பட்ட கம்பி.

பிரமுகம்

406. பிரமுகனன் காவதது தன்னிலழுங் கிடுவார்கள்
பெரியோர் தம்மைக்
குரவர்தே வரைப்பழுது கூறினர்க ணுவத்தினைக்
கூர்வா ளாலே
அரிவரல றிடப்பின்னு மவர்வாயி னடித்தொறுத்தே
யழன்ற காரஞ்
சொரிவரவர் படுகுன்றத் துயரவிதந் தனையளந்து
சொல்வா ராரோ. (13)

சுப்பிரசித்தம்

407. சுப்பிரசித் தன்ருனே யைந்தாவ தததுதன்னிற்
ருேழ னகி
எப்பொழுது மினியனுமா யிருப்பானுக் களிட்டத்தை
யியற்றி னனைத்

இதற்கு அந்ததாமிச்ரம் என்ற பெயருமுண்டு. அரவம் கூர - ஒலி மிக. ஆகம் தினைத்தார்கள் என்று இணைக்க. பிறர் மனைவியை ஆகம் தினைத்தவர் இந் நரகத்தில் தள்ளப்பெற்று, அழல் கூர்ந்த இரும்பு கண்ணிரண்டும் ஊட, புட்கள் கூடி அவற்றைக் கொந்தும்; அவர் அழுவர் என்று இயைக்க. ஊட - உள் ளுருவிச்செல்ல.

406. பழுது கூறினர் - குற்றங் கூறினர். காரம் சொரிவர் - வெங்கார முதலாகிய கார உப்பையேனும் அவ்வுப்புக் கலந்த நீரையேனும் ஊற்றுவர். குரவரைப் பழித்த குற்றத்துக்கு இந் நரகம் உரியதாம். அவர் நாவை அரிந்து காரம் ஊற்றித் தண்டிப்பர். இந் நரகம் பிரமர்த்தனம் என்பதும் ஆகலாம்.

407. இது, தோழர்களுக்குத் துரோகம் செய்தவர்க்கு உரியது. அவரை வாளால் வெட்டி, உடலின் மீது வறுத்த மணலை இறைப்பர் என்க. தபனன் - சூரியன்.

தப்பறவே சிறுவாளாற் றடிந்திடுவ ருடன்முழுதுந்
தபன னென்ன
வெப்பமுறு மணலினையும் வீசியொறுத் திடுவரவர்
மெய்யிற் றானே. (14)

நிகும்பம்

408. இருமூன்று குவதுதா னிகும்பமென விரும்புபெய
ரதனி லேய்வர்
பெருவாதை யுறவதைத்தார் தமக்கென்றும் பிழைபுரியார்
தம்மை யாங்கே
ஒருவாதே யுறுவரிட ரூன்முழுதும் வெந்துருகி
யோல மிட்டே
எரிபோலு மணற்குவையி லிருத்தியெம தூதுவர்தா
மிழைத்த லாலே. (15)

பிபற்சம்

409. ஏழாவ ததுதானே வீவற்ச மெனும்பேரோ
டிலங்கு மங்கே
ஆழாநின் றழுங்குவர்புக் கமேத்யமூத் திரத்தினுறு
மன்று தன்னில்
தாழாமல் விரைந்தெழுந்து சார்ந்துதன் மன்னவரைப்
பணிந்து தாளில்
காழான கருத்தினராய்க் கோளுரைத்துப் பிறர்தம்மைக்
காய்விப் பாரே. (16)

---

408. பிறரை மிகவும் வதைத்தவர்க்கு இந் நரகம் உரியது.

409. அமேத்திய மூத்திரத்தில் - மலத்திலும் மூத்திரத்தி லும். இராஜத் துரோகிகளுக்கு இந் நரகம் உரியதாம். காழான - வயிரங்கொண்ட.

குற்சிதம்

410. புரிந்தமல னடிப்பூசை பூசிக்கைக் கொன்றுமது
புரியா ராகி
அருந்தவரைத் தேசிகனே யாதுலரைக் குருடரையு
மருத்தா மற்றும்
இருந்துதனி யுண்பார்கண் மூத்திரத்துங் மலந்தனிலு
மமிழ்ந்தே யாழ்ந்து
வருந்துவ ரெட்டாவதனிற் குற்சிதமே யதன்பேரு
மதிக்குங் காலே. (17)

துரகதம்

411. தானத்தாற் றவத்தாலுந் தக்கவர்கள் பசியாற்றம்
மனையிற் சாரப்
போனத்தை யவர்க்கருத்தா தவர்தம்மைப் புறனிருத்தித்
தாமே யுண்ணும்
ஊனத்தா ரொறுப்புண்பா ருரகத்தாற் றேளான்முள்
ளூசி யானும்
தோனத்தே யிடவொன்பா லுவதனிற் றுரகதமென்
றதன்பேர் சொல்வார். (18)

---

410. குற்சிதம் என்னும் நரகம் சிவபூசைக்கு இடையூறு புரிபவர்க்கும், தக்கோர்க்கும் இரவலர்க்கும் உணவு கொடாமல் தமியராய் உண்பவர்க்கும் உரியது.

411. ஒன்பதாவது நரகம் துரகதம் எனப்படுவது. விருந்தினரைப் புறத்தே வைத்துத் தாம் உண்பார் இந் நரகத்தில் ஒறுக்கப் பெறுவர். போனத்தை - உணவை. போனகம் போனமென்றாயது. ஊனத்தால் - குற்றத்தால். உரகத்தால் - பாம்பால். புறனிருத்தி - வெளியே இருக்கச் செய்து. வெளியே யிருத்தித் தானுண்ணுதல்;

'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று' (குறள் 82)

தோல் நைத்தே இட - உடலின் தோல் நைந்துபோக,

துர்ச்சகம்

412. அன்னியன் றன் மனையாளை யாதரவு கூரவணைந்
தனுப வித்தார்
வன்னிகரி லிருப்புத்தூண் டனைத்தழுவி மயங்கிமிக
வருந்து வார்கள்
என்னுமது தசமெனவே வெண்ணிடுக விதன்பெயரு
மியலை யாய்ந்தார்
பன்னுவர்துர்ச் சகமெனவே யினிப்பதினென் ருவதனைப்
பகர்வாம் பாங்காய். (19)

துர்க்கடம்

413. வாஞ்சையுறப் பிறரன்னம் வாசிதொறு முண்ணுமவர்
மனினர் வாயைக்
காஞ்சவயத் துண்டத்தாற் கரங்கள்பறித் தருத்தக்
கலுழ்ந்து நெஞ்சம்
தாஞ்செயலு மற்றிடுவர் தந்தவறு தனையுணர்ந்து
தமைத்தா னோவர்
நாஞ்செயுமா றினித்தானென் றேநைவர் துர்க்கடமா
நரகந் தன்னில். (20)

கண்டகம்

414. பன்னிரண்டா வதனுமங் கண்டகமே பசுக்களுக்குப்
பசியுந் தீரப்
புன்னறுநீ ரினையூட்டிக் காவாத புல்லியரும்
பூர்வ நீதி

---

412. துர்ச்சகம் என்பது பத்தாவது நரகம். இதனில் பிறன் மனைவியை விரும்பியவனை வலிய இரும்புத் தூணைத் தழுவச் செய்வர். வல் நிகரில் இருப்புத் தூண் - வலிய இணையற்ற இரும்புத் தூண் என்க. தசம் - பத்தாவது.

413. காஞ்ச - காய்ந்த; போலி. அயத் துண்டம் - இரும்புத் துண்டு. துர்க்கடம் - நரகத்திறங்களில் ஒன்று.

414. பசுக்களைக் காவாதவர் இந்நரகத்தில் படுந்துயரம் கூறப் பெற்றது. பூர்வ நீதி தன்னை விலங்கித்தவர் - பழமையான நீதியினின்றும் தன்னை விலகும்படி செய்தவர்; நீதி தவறி நடப்போர்

தன்னிவிலங் கித்தவருந் தழலனைய வெயிலுற்றுத்
தவிப்பார் கிடந்து
துன்னிவருங் கிருமிவிருச் சிகமிவற்று மருந்துயரம்
துய்ப்பா ரங்கே. (21)

சித்தீரதுந்துமி

415. பதின்மூன்று குவததுதான் சித்தீரதுந் துமியெனவே
பகரும் பேராம்
இதமெனவே பாணிரிசை குழன்முழவ மினியபிற
கேட்பார் தம்மைத்
திதமுறுகைச் சிறுவாளாற் செவியிரிவர் திரண்டவிடி
யோசை போல
வதமுறவே யதிர்த்தகுர லுதித்திடவாங் கவரதுகேட்
டொடுங்கு வாரே. (22)

புன்னகம்

416. புன்னகம் பதிலுன்கா வதுதந்தை பொன்றியநாட்
புதல்வ ரைாய்ந்
தன்னுதி விதங்கொண்டே யறிந்துவிதி சிராத்தமியற்
றுனே யாகில்
கன்னீரு யிடக்காயுங் கடுவெயிலிற் பட்டாங்கே
கனன்று வெந்தெ
என்னைசெய் வாமினியா மன்னைவன் னைவென்றே
யிரங்கு வானே. (23)

என்பதாம். கிருமி - புழுக்கள். விருச்சிகம் - தேள். இவற்றும் - இவற்றலும்.

415. கேட்கத் தகாத பாடல்களைக் கேட்டவரை இந் நரகில் காது அரிவர் என்றபடி. திதம் உறு - நிலையாகப் பொருந்திய. 'திதமாய் நிற்கு நிற்குமம்மாயை' (ஞானவா. இட்சு. 29). அதிர்த்த - நடுக்கமிக்க. பாணர் இசை - பாட்டுப் பாடுகின்றவர் பாடும் இசை.

416. பிதிர் சிராத்தம் செய்யாதவர் புன்னகம் என்னும் நரகில் இடப்பெறுவர். பொன்றிய நாள் - திதி. கல் + நீருய் = கல்லும் நீருகும்படி.

கததம்

417. பதினேந்தா வதுநரகங் **கததம்**மே பகரினது
பரந்த வங்கி
அதுதன்னில் வீழ்ந்துருகி யழுங்குவா ராயிரமாண்
டன்னே வென்றே
பொதுமகடோட் புணர்ந்தாரும் புதல்வரழு
றியதந் தைக்கு [வாயர்ப்பொன்
விதிவழியால் வெவ்வழலிற் சுடுகையற மவர்கையால்
வேவா தாரும். (24)

கீலாகலம்

418. எண்ணிரண்டா வதுகீலா **கல**மெனவி யம்புவரேந்
திழையார் தம்மை
நண்ணியிர வும்பகலு நாணது புணர்வாரை
நான்கு வேதம்
எண்ணினவ ரவர்தம்மை யிகழ்ந்துரைப்பா ரவர்தமையு
மியம தூதர்
நுண்ணியகூ ரிருப்பழலின் நோயுடலத் தொளைத்தங்கே
நோவிப் பாரே. (25)

---

417. கததம் - பதினேந்தாம் நரகத்தின் பெயர். இதனில் பொது மகளிர் தோள் புணர்ந்தவர் வீழ்வர். அங்கி - அழல். அன்னே - இரக்கக் குறிப்பு ; ஐயோ என்பதாம்.

418. கீலாகலம் - பதினருவது நரகத்தின் பெயர். அங்கிய மாதரைப் புணர்தல், வேத நிந்தனை ஆகிய பாவங்களுக்கு இந் நரகம் கூறப்படுகிறது. நோவிப்பார் - வதைப்பர்.

நிசித சத்திரம்

419. பதினேழா வதுநிசித சத்திரமே பலபாவம்
பண்ணி னுரை
இதமான விரதத்தை முட்டாம லியற்றுதே
யிடையின் விட்ட
விதனமன முடன்முழுது மிரிந்தொறுப்பர் கூர்வாளா
லலறி வீழக்
கதமடைய வெமதூத ரவர்செய்த கரிசுதனைக்
கழிக்க வாங்கே. (26)

நிதாகம்

420. பதினெட்டா வதன்பெயர்தா னிதாகமெனப் பகர்வரதிற்
படிந்தே ருரும்
க்தமுற்றே தூடணஞ்செய் கடியார்க ணுல்வேதங்
கற்ருர் தம்மைப்
பதமுற்ற வருமறையைப் பழித்தாரும் பகர்ந்தகொழுந்
தழலிற் பட்டே
நிதமுற்றே வருந்துவர்முன் செய்தவினைப் பயனெனவே
சிந்தை நைந்தே. (27)

(முட்) சான்மலி

421. இலைப்பாவ புண்ணியமு மிசனுமென் பார்தமையு
நம்பி னுரைக்
கொலத்தானுந் துணிகின்ற கொடியவரைக் கூரழன்மூள்
கொளவைத் தேற்றி

---

419. பதினேழாவது நரகம் நிசித சத்திரம் என்பது. கதம் அடை அவ்வெம தூதர் என்று பிரிக்க. கதம் - கோபம். இது விரதங்களை இயற்றுதவர்க்கு உரியது.

420. இந் நரகமும் வேதத்தைப் பழித்தவர்க்கே ஆகும்.

421. இந் நரகம், புண்ணியம், பாபம், தெய்வம் இல்லை என் பார்க்கும், நம்பினவரைக் கொன்றவர்க்கும் உரியது. ஓலை - ஓல்லை; இடைக்குறை; விரைவில். யமனுடைய ஓலையுமாம்.

ஓலைத்தூத ரொறுத்திடுவர் பத்தொன்ப தாகுவதி
லுற்ற பேரித்
தலத்தோர்க்கு வளையுறுமுட் சான்மலியென்
சாற்று வாரே. [றியலுணர்ந்தோர்

அசிதாலவனம்

422. அசிதால வனமிருவ தாவததி லிழுக்கப்பட்ட
டழுது நோவர்
கசியாதே பிறர்தம்மைக் கெடுத்திடவே யிடம்பார்க்குங்
கரிசி ஞரும்
மசியாதி பணிவிற்கு மவலருமே வருநிதியி
ஞசை யாலே
நசியாத நால்வேதந் தனைவிற்கு மந்தணரு
நடுக்க முற்றே. (29)

வைதரணி நரகமும் யமன் கோகன்னனனைத் திரும்ப
ஊருக்கனுப்புதலும்

423. வைதரணி யெனுநரக மெழுமூன்ரு வதுமலநீ
ராறே யாகும்
கையதனு லதுநீந்த நதிக்கரைக் .....வந்
ததுவா கற்ருன்
ஐயமற வனக்கறைந்தா மறக்கொடிய வெழுமூன்று
மந்த ணவுன்
நையுமுன முடல்விரைய நண்ணுகநின் புரியென்று
நயந்து சொன்னுன். (30)

---

422. இந் நரகம் பிறரைக் கெடுப்பவர்க்கும், மை முதலிய வசியப் பொருள்கள் பண்ணி விற்பவர்க்கும் வேதத்தை விற்பவர்க்கும் உரியது. கசியாது - நீங்காது. கரிசு - குற்றம். மசியாதி - மை முதலியவை.

423. இச் செய்யுளில் இரண்டாம் அடி சிதைந்துளது. யமன் கோகன்னனை மீண்டும் அவன் ஊர் விரையச் சென்று தன் உடலில் புக அனுப்புகின்ருன்.

கோகன்னன் யமனை நல்வினையின் பலனை நவிலுமாறு கேட்க, யமன் நவிலுதல்

424. திரும்பாத படியேசென் றடைவேனென் னுடலினித்
தியார் சேரும்
நரகவிதந் தனைநண்ணு நல்வினையு நவிலெனக்கு
நாத வென்றே
தருமனடி தனிற்பணிந்து கோகன்னன் வேண்டவந்தத்
தருமன் ரூனும்
கருதிடுகோ கன்னனவன் தன்னுடனே சிலவிதங்கள்
கட்டு ரைப்ப, (31)

யமன் கூறும் நல்லறங்கள்

425. பரர்தமக்கே யுபகாரம் பண்ணினருங் கைம்மாறு
பாரா தென்றும்
உரிமையதாம் நான்மறையுஞ் சாத்திரமு நாடோறு
மோது வாரும்
பரமனுக்கு மாலயத்தைப் பதுமனியல் விதிவழியாற்
பணுவிப் பாரும்
திரைபொருதெண் ணீர்வாவி கூபதடா காதியினைச்
செய்விப் பாரும், (32)

---

424. பாவங்களின் வகைகளையும் அவற்றின் பயனை நரக வேதனைகளையும் கேட்ட கோகருணன் நல்வினைகளைப்பற்றி அறிய விரும்ப, கூற்றுவன் அவற்றைக் கூறத் தொடங்கினன் என்பது இச் செய்யுளின் கருத்து.

425. பரர் - அந்நியர். பணுவிப்பாரும் - பண்ணுவிப்பாரும். வாவி - குளம். கூபம் - கிணறு. தடாகம் - குளம்.

இச் செய்யுளில் (1) கைம்மாறு கருதாது பரோபகாரம் செய்தல், (2) நூல்களைப் படித்தல், (3) ஆலயங் கட்டுவித்தல், (4) குளம், கிணறு வெட்டுவித்தல் கூறப்பெற்றன.

426. பண்ணுநரும் விரதங்கள் பண்ணுமற் பரர்பிழைதம்
பிழையே போல
எண்ணுநருந் தம்மூடலி யவமதித்துப் பேணுதே
யிருப்பார் தாமும்
தண்ணளியைக் கொண்டியாரும் பனிக்காலந்
தக்கோர்க் கீயும் [தனில்வெந்நீர்
புண்ணியருந் தண்புனலே முதுவேனி லுறவுதவும்
புனிதர் தாமும், (33)

427. அடைந்தார்க்கு மழைபொழியு மக்காலத் தினிலுதவு
மன்பி னரும்
கடிந்தாரும் புலனைந்தும் பிரமசரியம் வழுவாத
கற்பி னரும்
திடந்தேவன் னுளனென்றே யெண்ணியவ
சிந்திப் பாரும் [னடியிணையைச்
தொடர்ந்தேமா தவர்தம்மைப் பணிந்தன்னந்
தூயோர் தாமும், [துய்ப்பிக்குந்

---

426. விரதங்கள் பண்ணுனரும் என்க. பரர் - அந்நியர். தம்முடலி யவமதித்துப் பேணுதிருப்பார் - துறவிகள்; நோய் மூப்புச் சாக்காடுடைமையான் உடலி யவமதிப்பர் என்க. பேணுதிருத்தல் - உடல் வளர்ச்சிக்கேற்ற உணவு முதலிய வகைகள் கொள்ளாமலும் ஆடையாபரணங்களால் அழகு செய்துகொள்ளாமலும் இருத்தல். (நாலடியார் : 41-42-43). தண்ணளி - கிருபை.

இதனில் (5) விரதங்கள் செய்தல், (6) பிறர் பிழை மறத்தல், (7) தம் உடலிப் பேணுதிருத்தல், (8) தண்ணீர்ப் பந்தர் வைத்தல் ஆகியவை கூறப்பெற்றன.

427. இதனில் (9) அடைந்தவரை ஆதரித்தல், (10) புலன் கடிதல், (11) பிரமசரியம் வழுவாமை, (12) கடவுள் தியானம், (13) தவசிகளுக்கு அன்ன மளித்தல் கூறப்பெற்றன. மழை பொழியும் அக் காலத்து உதவுதல்; துறவிகட்கு இருக்கை யளித்தல், ஏனையோர்களுக் குடை முதலிய கொடுத்துதவுதல் இவை போன்றவை.

428. ஆர்வமுறப் பூதான மந்தணர்க்குச் செய்யுநரு
மவனி தன்னில்
ஊர்வதனைப் பறப்பதனை யுலவியுறு முயிரினையு
மொறுத்தல் செய்யாச்
சீர்மையரு மந்தணர்க்குத் திலமுதவுஞ் சிறப்பினரும்
நிரையஞ் சேரா
நீர்மையரே யென்றருளா னிகழ்த்துதலுங் கோகன்னன்
றுதித்து நின்றே, (35)

கோகன்னன் விண்ணப்பம்

429. அரியதெனு மறம்புரிந்தா ரடையார்க ணரகதனை
யவல மென்னும்
கரிசுபுரிந் தவர்வானங் கலந்துக ளித்துறையார்க
ளென்னு மிந்த
இருவிதமு மறிவிப்பார் பலர்புரிந்த பாவவித
மெல்லாம் நீங்கி
அரியபல மெளியதவத் தடையுமுப தேசமெனக்
கருளா யென்றான். (36)

---

428. இதனில் (14) பூதானம், (15) ஜீவகாருண்யம், (16) திலதானம், ,ஆகியவை கூறப்பெற்றன.

உலவி உறும் உயிர் - புழு முதலியன. ஒறுத்தல் - துன் புறுத்தல். திலதம் - எள்.

429. இச்செய்யுளில், கோகன்னன் இயமனை நோக்கி, "அறம் புரிந்தவர் நரகம் அடையார் என்பதும், குற்றம் புரிந்தவர் கொடிய நரகம் புகுவர் என்பதுமான இருவிதங்களையும் பலர் கூறுவர்; ஆனால் பாவங்களையெல்லாம் நீக்குவதும் அரிய பலன்களை அளிப் பதுமான ஒன்றினை எளிதாகச் செய்ய எனக்கு உபதேசம் வேண்டும்" என்று கேட்ட செய்தி கூறப்பெறுகின்றது.

இயமன் ஆரூரின் பெருமை கூறியது

430. இரந்தநம னப்பொழுதே யெளியதவத் தரியபல
மியம்பக் கேண்மோ
வரந்தரு நீர்க்காவேரி வளநாட்டு ளாரூரின்
வாஞ்சை வைத்தே
நிரந்துநிம லேசனடி பணிந்தொருநாள் வைகினரும்
நீங்கிப் பாவம்
புரிந்திருப்பர் சிவபுரியிற் பதியவல நிரதத்திற்
புகழி னேடே, (37)

ஆரூரில் சிவலிங்கம் தாபித்துப் பூஜை செய்வதன் சிறப்பு

431. சிவலிங்கந் தாபித்துச் சிவாகமத்தின் விதியாலுஞ்
செய்தார் பூசை
தவறறவே யப்..... றணந்துதுரி சினேமேலை
யுலகிற் றங்கி
உவம்னிலாப் பயனருந்தி யுலகமெலா மொடுங்கிடுநா
ளுனந் தீர்ந்து
சிவமயமாய்ப் பேரின்பந் திளைத்திருப்பர் பினைப்பிறவார்
திண்ணந் திண்ணம். (38)

---

430. இரந்த - இரக்கப்பட்ட. காவேரி வளநாடு - சோணாடு. வாஞ்சை - விருப்பம். நிரந்து - நெருங்கி. நிர்மலேசன், நிமலேசன் என்றுயிற்று. பாவம் நீங்கிச் சிவபுரியில் அலர் விமானத்தில் புகழி னேடே பதி புரிந்திருப்பர் என்றியைக்க. அலர் விமானம் - புஷ்பக விமானம். பதி புரிதல் - தலைமை பெற்றிருத்தல். இவ்வாறு கூறியதால் ஆரூரில் ஒரு நாள் பூசனை செய்வது பாவநீக்கத்தையும் புண்ணியப்பயனையும் தரும் என்பதாயிற்று.

431. துரிசினை - பாவத்தை. தணந்து - நீக்கி. மேலுயுல கில் - சிவலோகத்தில். உவமன் இலாப் பயன் - இணை கூறி யமையாத பயன். ஒடுங்கிடுநாள் - உலகப் பிரளயகாலத்தில். ஊனம் - பாவம். பினை - பின்னை. அடுக்கு - விரைவுப் பொருட்டு. இரண்டாமடியில் சீர் விட்டுப் போயுள்ளது.

இயமன் செய்த உபதேசம்

432. ஆதலினல் நீதாறு மமலனது திருவாரூ
ரடைந்தங் கேதான்
காதலினற் சிவலிங்கந் தாபித்துக் கட்டுரையின்
விதியி னலே
போதமுட னருச்சித்துப் பொல்லாத தியவினை
யனைத்தும் போக்கி
நாதனுல கடைந்துலக நகிக்கும்போ தமலனடி
நணுகு வாயே. (39)

கோகன்னன் உயிர் பூதவுடலிற் சென்று சேர்தல்

433. என்றுமகிழ்ந் தியம்புதலும் பணிந்தவன்ற
னுளங்கொண் டேதான் [னிணையடிமுன்
சென்றுதன துடலத்தில் கோகன்னன் செறிந்துவிழித்
திமைத்தல் கண்டே
இன்றிழந்த வுயிர்பெற்றே மெனக்கிளரு ரெல்லாரும்
ஏம்ப லுற்றூர்
அன்றவனும் போய்மீண்ட வடைவினைத்து
னூர்வங் கூர்ந்தே. [மவர்க்குரைத்தா

மற்றொரு கோகன்னனை யமனுலகிற்கு அழைத்தேகல்

434. இருக்கவிரு நிலந்தன்னி னுளில்லாக் கோகனனு
வியைத்தா தன்முன்
பிரித்துடலிற் கொடுபோய்த்தன் பெருமான்றன்
யவினைத் தானும் [முன்னிறுத்தி

---

432. காதலினல் - பத்தியோடு. கட்டுரை - சிவாகமம். போதம் - ஞானம். நாதனுலகு - சிவலோகம்.

433. அடைவு - முறை. 'ஆர்வம் கூர்ந்தே' என்பதை அடுத்த செய்யுளிலுள்ள 'இருக்க' என்பதனுடன் முடிக்க.

434. நாள் இல்லா - உயிருடன் இருக்க வேண்டிய காலம் கடந்த. உடலின் பிரித்து என இயைக்க. பெருமான் - இயமன்,

பரித்தபயத் தொடுபணிந்தான் பதமலரி னப்பொழுது
பனவன் முனும்
அரித்தெனது வினையெனையு மாண்டருளென் றவனடியிற்
பணிந்தா னங்கே. (41)

யமன் வேறு கோகன்னனை மீண்டும் பூவுலகிற்கனுப்பி முன் வந்த கோகன்னனிடம் நன்மார்க்கத்தை அறியும்படி செய்தல்

435. அப்பொழுது நமன்முனு மந்தணனை முகநோக்கி
யார்வங் கூர்ந்தே
தப்பியதுன் மரணநாட் டமருன்றன் தேகத்தைத்
தகிக்கு முன்னே
இப்பொழுதே யியங்குகமுன் னெமையடைந்த கோகன்ன
னிசைத்த மார்க்கம்
அப்பரிசு மறியவனு லெனவிடைகொண் டவனுந்தன்
னகஞ் சேர்ந்தான். (42)

இரண்டாம் கோகன்னன் உயிர்பெற்று முதற் கோகன்னனைக் கண்டு அவன் கூறியதைக் கேட்டல்

436. உற்றவன்மு னுடலத்தி னுணர்ந்தெழுந்தா
முவகை யுற்றே [னுணர்ந்தெழுனு
அற்றவுயிர் பெற்றேமென் றனைவருந்தா மதிசயித்தா
ரவர்க்குத் தானும்

பனவன் - பிராமணன். எனது வினை அரித்து என இயைக்க. அரித்தல் - போக்குதல்.

435. அந்தணன் - பின்வந்த கோகன்னன். தகிக்குமுன்னே - தியில் எரிக்கு முன்னே. இயங்குக - செல்க. அவனுல் - முன் னறிந்து வந்த கோகன்னனுல் தெரிந்துகொள். ஆகம் - தூல உடல்.

436. தெற்றெனவே - தெளிவாக. மதித்தான் - ஆராய்ந்து தெளிந்தான்.

தெற்றெனவே செப்பினன்முன் சென்றமுறை
சிறப்புத் தானும் [நமனுரைத்த
மற்றயகோ கன்னனுக்கும் வந்துரைத்தா னவனுரையு
மதித்தான் கேட்டே. (43)

இருவரும் திருவாரூர் சென்று சிவபிரானைப் பணிந்தமை

437. இருவருந்தா மகிழ்ந்துமனத் திருந்தபதி தனைமனைவி
தனைமற் றெல்லாம்
ஒருவிவழி யிடையுற்று ரூர்விதமுங் கான்விதமு
மொல்லை நீங்கித்
திருவமருந் திருவாரூர் சேர்ந்தாடித் திகழ்தேவ
தீர்த்தந் தன்னில்
பரமசிவன் வன்மீக மிடங்கொண்ட பசுபதிதாள்
பணிந்து நின்றே, (44)

அவர்கள் புற்றிடங்கொண்டானைப் பிரார்த்தித்தது

438. விண்ணவர்க ளியற்றியபுற் றிடங்கொண்ட வித்தகனே
விமல போற்றி
கண்ணனுக்குச் சிரங்கழுத்திற் பிணித்தருளுங்
போற்றி போற்றி [கருணையனே
மண்ணுலகோர் மலர்தூவித் தொழவவரைச் சிவபுரியில்
வைப்பாய் போற்றி
தண்மதிசென் றடைமுடியாய் சயபோற்றி நாதாதி
சமைத்தாய் போற்றி. (45)

---

437. ஒருவி - நீங்கி. வழியிடை உற்றார் - வழி மேற்கொண்டார். திரு - இலக்குமி.

438. கண்ணன் - திருமால். சிரங்கழுத்திற் பிணித்தருளியது - அற்ற சிரத்தைக் கழுத்தில் வைத்துப் பொருத்தியது; வரலாறு பசுபதிபுற்றிடங் கொண்ட சருக்கத்திற் காண்க. தண்மதி சென்றடைமுடியாய் - குளிர்ச்சி பொருந்திய சந்திரன் சென்று தங்கிய சடைமுடியையுடையவனே! வரலாறு கந்தபு. தக்ஷிகா. சந்திரசாபப்படலத்துட் காண்க. சமைத்தல் - படைத்தல்.

439. வேதவிதி யாகமத்தின் விதிவிதமு மாராய்ந்தைதம்
புலனும் வெல்லும்
சாதகரை யாண்டருளி யவர்தமக்குத் தமோவலியுந்
தடுப்பாய் போற்றி
ஆதிநடு வந்தமிலா வனேத்துயிர்க்கு முயிரானு
யமல ஞான
போதகனே சயபோற்றி பூரணனே சயபோற்றி
போற்றி போற்றி, (46)

ஆரூரில் சிவலிங்கம் தாபித்தமை

440. என்றுதுதித் தமலேச னிணையடியைக் கருத்திருத்தி
யின்ப மெய்தி
அன்றியம ளூரில் சிவலிங்கந் தாபித்தே
யருச்சிப் பாயேல்
ஒன்றுவைநீ சிவபுரியை யுலகொடுங்கும் போதமலத்
துற்று மீளாய்
என்றிசைத்த வுபதேசந் தனையுமெனி யவனடியு
மிறைஞ்சி யேதான். (47)

தென்றிசை வடதிசைகளில் இலிங்கங்கள் தாபிக்கப் பெற்றமை

441. பந்தமறுத் திடவெண்ணிப் பதிதனிற்றென் [றிசைமுடிவில்
பரமன் றன்னைச்
சிந்தனைசெய் தருச்சித்தான் சிவலிங்கந் தாபித்துச்
சிற்பி நூலின்
மூந்திய வந்தணன்வேத மொழியான்மூ விதவுயிர்க்கு
முயிரை மற்றை
அந்தண னுமப்படியே வடதிசையில் வைத்தனக
னருச்சித் தானே. (48)

---

439. சாதகரை - பயிற்சியுடையாரை.

440. சிவபுரியையொன்றுவை என்க.

441. பந்தம் - பிறவித்தளை. மூவிதவுயிர் - விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்பன. உயிர்க்குயிர் - இறைவன். அனகன் - குற்றமற்றவன்; சிவபெருமானை.

அச்சிவலிங்கங்களின் பெயர்க்குக் காரணம்

442. அங்கமரு மறையாய்ந்த கோகன்ன ரிருவருந்தா
மார்வங் கூர்ந்தே
சங்கரனே யருச்சித்த தலமிரண்டுங் கோகன்ன
மென்பர் தக்கோர்
எங்களிறை யமலேச னெழுந்தருளி யிருத்தலினவ்
வெல்லீலக் கென்றும்
தங்குமுருத் திரபாத மெனும்பெயரு மென்றியலோர்
சாற்று வாரே. (49)

இருவரும் ஆரூரில் தங்கியிருத்தல்

443. முப்போது நாடொறுநீர் மூழ்கியலர் கொய்துநிதம்
மொழிந்து வேதம்
அப்பாதி விதமனேத்துங் கொணர்ந்தமல னடிக்கமலத்
தருச்சித் தன்பால்
எப்போது மிறைவனடி யருச்சிக்கப் பெறிற்பேறு
மற்றென் னென்றே
ஒப்பான வுளத்தினரா யுவகையுளா ரூனுடலி
லுவர்ப்பு முள்ளார். (50)

கோகன்னிருவரும் முத்தியடைதல்

444. ஆதரவு மருச்சனையு மவனிதனில் வெறுப்பினையு
மமல னுய்ந்தே
வேதியர்க ளிருவரையும் விரைமலர்த்தேர் தனிலேற்றி
விண்மேல் வைத்தான்
போதமுற வமலேசன் பொற்பாத மவரங்கே
புரிந்து வாழ்ந்து
மீதுலகின் விதமுமடைந் தொடுங்கிடுநா ளடைந்திருப்பர்
விமலன் பாதம். (51)

---

443. அப்பு - நீர். பேறு மற்று என், எனப் பிரிக்க.

444. அமலன் - சிவபெருமான். வேதியர்களிருவர் - கோகன்னர்கள். உலகவிதம் - எல்லாவுலகமும். ஒடுங்கிடுநாள் - முறைந் தொடுங்குங்காலம்.

445. உதித்திடுநா ளுலகவிதம் வருந்தியா ருடலோடு
மூன மான
விதத்தையெல்லாம் விமலேசன் வியனருளால்
விமலன் செம்பொற் [விடுத்தமையால்
பதத்துநிழ லினிதுறைவர் பஞ்சவிதக் கிருத்தியத்தின்
ளென்றும் பண்ணர்
சிதத்துவய வானந்தந் திளைத்திருப்ப ரதுநாவாற்
செப்ப லாமோ. (52)

கோகன்ன விலிங்கத்தைப் பூசிக்கும் காலமும் அதன் பலனும்

446. திகழ்வுறுமா கத்தபர சதுர்த்தசியி னிசியிலூண்
செய்யா திங்கே
மகிழ்வுறவே புரிந்தார்கண் மாபூசைச் சிவலோக
மன்னி வாழ்வர்
புகழுறவே யிம்மையினும் புரிந்தபல மீனத்தினையும்
பொருந்தி வாழ்வர்
இகவறவம் மையிற்பலத்தை யிருண்மலந்தீர்ந்
ரிணையி லின்பம். [தனுபவிப்ப

---

445. மறுபடியும் சிவபிரான் திருவருளால் பிரபஞ்ச சிருஷ்டி நேருங்காலத்தும், இவர்கள் உடலையுங் மலங்களையும் அமலேசன் திருவருளால் விடுத்தமையால் (மறுபிறப்பு எடுக்காமல்) அவன் திருவடி நிழலிலேயே திளைத்திருப்பர். இறைவனுக்குரிய பஞ்ச கிருத்தியங்களில் இவர்களுக்கு ஓர் உரிமையும் இல்லை. ஆனால் உயர்ந்த தத்துவப் பரமானந்தத்தில் அவர் திளைத்திருப்பர்; அதன் பெருமையை நாவால் உரைக்கலாமோ? என்று பொருள் கொள்ளலாம்.

446. மாகத்து அபரசதுர்த்தசி - மாசிமாதத்தில் கிருஷ்ண பக்ஷத்துச் சதுர்த்தசி திதியில். மாபூசை புரிந்தவர்கள் என்றியைக்க. இகவுஅற - நீக்கமின்றி. இருண்மலம் - மாயாமலம்.

பலச்ருதி

447. கற்றுரு மிவ்வியலைக் கருத்தினுறக் கேட்டாருங்
கரிசு தன்னை
அற்றுர்க ளப்பொழுதே யடைவார்கள் சிவலோக
முடலந் தத்தின்
முற்றுலை யிதழெழுதி முறையுறமை யெழுதினரூன்
முடையி னீங்கி
உற்றேவின் னுலகத்தி னனுபவிப்பர் போகவித
முறைவர் மேலும். (54)

அடுத்த சருக்கத்தின் தோற்றுவாய்

448. அந்தணரோ ரிருவருக்கும் அமலேச னருள்புரிந்த
வாறுஞ் சொன்னேம்
மந்திரநா வினன்சித்த ரெனுங்கணத்தின் மன்னவன்வந்
தாரூர் தன்னின்
அந்தநடு வடியுமிலா வமலனைத்தா னருச்சித்தே
யலரி னுலும்
சிந்தனையிற் களிகூரப் புதல்வனைப்பெற் றமையுமினிச்
செப்பு வாமே. (55)

வேறு

449. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (56)

கோகன்ன சருக்கம் முற்றும்.

---

447. கரிசு - பாவம். அற்றுர்கள் - முற்றெச்சம். உடலந்தத்தின் - பூதவுடல் நீங்குங் காலத்தில். முற்று ஓலை - முற்றிய பனையோலை; முற்று - முழுதும் எனலுமாம். மை எழுதி - மை பூசி. ஊன்முடையின் நீங்கி - தசையையுடைய உடலினது புலால் நாற்றத்தினின்றும் நீங்கி; உடலை விட்டு என்றபடி.

448. அலரினுலும் அருச்சித்தே என்றியைக்க.

11. சித்தேசுரச் சருக்கம்

ஆங்கிரன் சித்த அரசனுக்கு உபதேசித்தது

450. சித்தரெனுங் கணத்தரையன் சிறுவனீத்தான்
விண்ணிற் சென்றே [பெறவிரும்பி
வித்தகனை யாங்கிரனைப் பதம்பணிந்து விளம்பலுந்தன்
வேட்கை கேட்டே
அத்தமன மூரிற் சிவலிங்கந் தாபித்தே
யருச்சிப் பாயேல்
புத்திரனை நீபெறுவை யென்றவனுங் கருணையினுற்
புகன்ற போதில், (1)

அரசன் திருவாரூர் சென்று ஆலயம் தோற்றுவித்தது

451. அரையனவ னுங்கிரனை யடிபணிந்து விடைகொடுமீண்
டாரூர்ச் சேர்ந்தே
திரைபொருது கரையுலவுந் திகழ்தேவ தீர்த்தத்தில்
திளைத்தே யாடிப்
பரமசிவன் புற்றிடங்கொண் டிருக்குமெழிற் பசுபதிதாள்
பணிந்தே யந்தத்
திருவெல்லைக் கீசான திசைதன்னி லாலயத்தைச்
செய்வித் தேதான், (2)

---

450. சித்தேசுரம் - சித்தீசுரம் எனவும் வழங்கும். சித்த ரெனும் கணம் - பதினெண் தேவகணங்களுள் ஒன்று. திருவாரூர்ப் புராணத்தில் இவன் ஒரு பூவுலகினன் என்றும், 'சித்தியாவும் படைத்ததனல் சித்தீசுரனும் பேர் படைத்தவன்' என்றும் கூறப்படுகின்றன். ஆங்கிரன் - இங்குப் பிரகஸ்பதியைக் குறித்தது. ஆங்கிரஸின் புத்திரன், ஆங்கிரன்; தத்திதாந்தம்.

451. அரையன் - சித்த அரசன். ஆடி - மூழ்கி. ஈசான திசை - வடகிழக்குத் திசை.

சிவலிங்கம் தாபித்துப் பூசித்தது

452. அருமறையின் விதியாலே சிவலிங்கந் தாபித்தங்
கார்வத் தாலே
மருமலரா னறுஞ்சாந்தான் மணமலியுந் தூபத்தால்
வளர்தீ பத்தால்
உரிமையுற மற்றுமுள வுபசார விதத்துமுயிர்க்
குயிராய் நிற்கும்
பரமசிவன் றனைப்பாசம் பறிக்குமம லனைப்பூசை
பண்ணி னானே. (3)

அவன் பல விரதங்களை மேற்கொண்டமை

453. சிலநாளுண் ணுதுறங்கா திரவுபகற் சிவபூசை
செய்தா னன்பால்
சிலநாள்சாந் திராயணமென் விரதத்தைச் செய்துசிவ
பூசை செய்தான்
சிலநாளிற் பராகமென் னுங் கிருச்சிரத்தைச் செய்துசிவ
பூசை செய்தான்
சிலநாளிற் றிங்களுப வாசத்தைச் செய்துசிவ
பூசை செய்தான். (4)

---

452. வளர்தீபம் - ஆராதிக்கும்போது சுருங்காமல் ஒளி ஓங்கி எரியும் தீபம். பாசம்பறிக்கும் - உயிர்களின் பிறவியை வேரறுக்கும். பாசம் - மும்மலங்கள்.

453. சாந்திராயணம் - பூர்ணிமை முதல் அமாவாசை வரை ஒவ்வொரு பிடி அன்னம் குறைத்தும், அமாவாசை முதல் பூர்ணிமை வரை ஒவ்வொரு பிடி அன்னம் மிகுத்தும் உண்டு அனுஷ்டிக்கும் பிராயச்சித்த விரதம். பராகம் என்னும் கிருச்சிரம் - பராகம் என்னும் விரத வகைகளில் ஒன்று; பன்னிரண்டு நாள் இரவும் பகலும் உண்ணாமலிருப்பது. கிருச்சிரம் - பிராயச்சித்தமாக அனுஷ்டிக்கப்படும் விரதம். உபவாசம் - பட்டினி.

சிவபெருமான் தோன்றிக் காட்சி யளித்தலும் அரசன் துதித்தலும்

454. புரிந்திடலு மும்முறையாண் டாயிரஞ்சென்
பொருவு மில்லான் [றிடப்புனிதன்
விரும்பியவ னருந்தவத்தை வெள்விடைமேற்
விமலை யோடும் [றோன்றுதலும்
நிரந்தசிவ கணத்தோடு நேயத்தாற் கண்டுவிழி
நீரும் பொங்கப்
பரிந்தமலன் பதம்பணிந்து பராபரனே போற்றிபசு
பதியே போற்றி, (5)

வேறு

455. செயசெய சிறுவற் கருள்வானே
செகவுயிர் சமனைத் தடிவோனே
செயசெய பொதியிற் றிகழ்வானே
திடமுற மறனறுத் திடுவோனே
செயசெய தலையிற் பலிதேர்வாய்
தெரிவையர் மகிழத் தெருவேபோய்
செயசெய திருவைக் குரையானே
திகழ்சின வரவத் தரையானே. (6)

---

454. அவன் அருந்தவத்தை விரும்பி, என்றியைக்க. வெள் விடை - இடபம். விமலை - அம்பிகை. நேயத்தால் - அன்போடு. விழிநீர் - ஆனந்தக்கண்ணீர்.

455. சிறுவன் - மார்க்கண்டேயன். சமன் - இயமன். உயிர் செக - அவன் உயிர் அழிய. தடிதல் - கொல்லுதல். பொதியில் - மன்றில். மறன் - பாவம்; போலி. தலை - பிரமகபாலம். தெரிவையர் - பெண்டிர். திருவை - வேதம் ஓதலின் ஒருமுறை; இங்கு வேதத்தைக் குறித்தது. உரை - பொருள். உரை - பிறருக்குக் கேட்கும்படி செபிக்கும் வாசக செபம் (சைவசமயநெறி. பொது. 151). இப்பொருள் கொண்டு, திருவைக்குரையானே, என்பதற்குத் திருவையாகச் சொல்லப்படுகின்ற செபத்துக்குப் பொருளான வனே என்றும் பொருள் கொள்ளலாம். அரவத்து அரையானே - பாம்பை இடையில் தரித்தவனே.

456. செயசெய திருவுக் கருள்வானே
தினகர னுருவிற் றிகழ்வானே
செயசெய சிகையிற் பிறையானே
திகழர வதனினவைத் திடுவானே
செயசெய கனகச் சிலையானே
திரிபுர மெரிவித் திடுவானே
செயசெய சிவனற் புரியானே
செயசெய வுயிரிற் றிகழ்வானே. (7)

வேறு

457. என்றுதான் றுதிக்கச் சித்தர்க் கிறையெமக்
கிறையன் ருனும்
அன்னவன் தனக்கே யார்வங் கூர்ந்தெமக்
கன்ப நீதான்
உன்றனக் குறுதி யான வரமுரை
தருவா மென்ன
வென்றிவெள் விடையின் மேலாய் புதல்வனே
விழைந்தே னென்ருன். (8)

458. உன்னிய படியே நீதா னுதிப்பனேர் புதல்வன் ருனும்
என்னவே யியம்ப வீச னெனக்கினி யாய்நீ யென்றும்
மன்னியான் பூசை செய்கி யமந்தனின் மனிதர் தாமும்
உன்னிய வரங்க ளெல்லா முதவுவாய் பணியோர்ந்
[தென்றே. (9)

---

456. திரு - இலக்குமி. தினகரன் - சூரியன். சிகை - சடை முடி. அரவதனை - பாம்பை. கனகச் சிலையான் - பொன்னுகிய மேரு வில்லான். சிவனற்புரி - சிவபெருமான் எழுந்தருளியுள்ள சிவலோகம்.

457. சித்தர்க்கிறை துதிக்க, என்றியைக்க. ஆர்வம் கூர்ந்து - அன்புமிகுந்து. உறுதியான - நிலைபெறும்படியான. விழைதல் - விரும்புதல்.

458. நீ உன்னியபடி, என்று மாற்றுக. நியமம் - கோயில்.

சிவபிரான் அரசனுக்கு அனுக்கிரகம் செய்தல்

459. அடியினைப் பணிந்தான் மன்ன னமலனு மிந்த லிங்க
வடிவினை நீங்கா துற்றே வரத்தினை யளிப்பாம் பத்தர்க்
கிடருட லெடுத்து மாயா ரெம்புரி யேய்வா ரிங்கே
கடனுறப் புரிவார் பூசை யெமையெம துருவங் காண்பர்.

460. ஒருவுத லன்றி யாந்தா முறையுமிவ் விலிங்கத் தென்பால்
புரிவுற விருந்தே யெம்மைப் புந்தியி னினைந்து சொல்வர்
திருவெழுத் தாறுஞ் சேர்வர் சிவபுர மீளா ரென்றே
விரவினர் வானந் தன்னில் விரைமலர் பொழிய
[விண்ணோர். (11)

அரசன் சித்தரோடு தன் தேசத்தை யடைதல்

461. அத்திசை தன்னை நோக்கிப் பணிந்தெழுந் தார்வங்
[கூர்ந்தே
சித்தரும் புடையே சேரத் தன்னுயர் தேசம் புக்கு
வித்தக னருளாற் பெற்றுப் புதல்வனை விருப்ப முற்றுன்
புத்தியு முத்தி தானு மெளிதெனப் புந்தி செய்தான்.

சித்தேசுரத்தின் சிறப்பு

462. வேண்டினர் புதல்வன் றன்னை விதியினவ்
விலிங்கந் தன்னைத்
தீண்டியே பூசை செய்யிற் சிறுவனைப்
பெறுவர் திண்ணம்

---

460. ஒருவுதல் - நீங்குதல். புரிவற - விருப்பமுற. புந்தியில் - மனத்தில். திருவெழுத்தாறு - ஆறெழுத்து மந்திரம். வானோர் விரைமலர்பொழிய சிவபுரம் விரவினர் என்க. திருவெழுத்தாறும் சொல்வர் சேர்வரென்க.

461. புடையேசேர - பக்கத்திற் சேர்ந்துவர. யுத்தி - ஞானம்.

462. காண்டுணர் - தரிசிப்பவர். ஈண்டு - இப்பிறப்பில். ஆண்டும் - மறுமையிலும். இட்டம் - விருப்பம். விருப்பமுற்றுன் - ஆசை நிறைவேற்றப் பெற்றுன். விருப்பமுற்றுன் புத்திரன் அடைதல் தானும் எளிதெனப் புந்திசெய்தான் எனினுமாம்.

காண்டுநர் தாமுங் கண்கள் களிப்புறக்
கருத்தி னிட்ட
மீண்டுறப் பெறுவ ராண்டும் பெறுவரே
யிட்ட மெல்லாம். (13)

பலச்ருதி

வேறு

463. சித்தனுக்குச் சிவனளித்த திறமுணர்த்துஞ் செய்யுளியல்
செப்பு வாரும்
பத்தியினுற் கேட்டுணரும் பாங்கினருந் தியவினைப்
பந்த மெல்லாம்
நைத்தழிய நடலையுட லினைத்தணந்து நம்பனது
புரத்தை நண்ணி
வித்தகனின் னருளாலே வீற்றிருப்பார் பிறப்பினுமண்
பெறுவர் வீடே. (14)

வரும் சருக்கத்திற்குத் தோற்றுவாய்

464. ஊனமிலா யதுகுலத்தி லுற்பவித்த குலிசன்ரு
ணூட்ட லானூன்
ஞானமுனி துருவாசற் கவனவின்ற சாபத்தாற்
புலியாய் நண்ணிக்
கானமிரு கங்களையுங் கறுத்தொறுத்து வதைத்தருந்தி
வைகுங் காலத்
தானருளாற் சிவலிங்கங் கண்டருளப் பெற்றதிலி
யறைகு வாமே. (15)

---

463. செய்யுளியல் செப்புவார் - செய்யுளின் பொருளை நல்லோர் அவையின்கண் விரித்துக்கூறவல்லவர். நைத்தழிய - வருந்தியழிய. நைத்து - நைந்து, வலித்தது. நடலை - துன்பம். தணந்து - நீங்கி. பிறப்பினும் - பிறப்பெடுத்தாலும்.

464. யதுகுலம் - சந்திர குலத்தில் தோன்றிய யயாதி என்னும் அரசனது புதல்வர்களில் ஒருவனது குலம்.

465. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (16)

சித்தேசுரச் சருக்கம் முற்றும்.

---

12. குலிசேசுரச் சருக்கம்

துருவாசர் அரசனை புகுதல்

466. படித்துணர்ந்தா னருமறையும் பலகலையுந் துருவாச
முனிவன் பாங்கால்
முடித்துமறை யுறச்சாதுர் மாசிகமென் விரதத்தைப்
பசிதான் முற்றக்
கொடைக்கமரர் தருவனையான் கேகயநா டாள்குலிசன்
கோயில் புக்கான்
அடிக்கமலம் பணிந்துமுனி தனையவனு மிருத்தினனை
தனத்தி னன்பால். (1)

அரசன் முனிவரை உணவு இட்டு உபசரித்தல்

467. உண்டுநிதி பலவடியேற் கூர்பலவு மற்றவையு
மிவற்றை யெல்லாம்
கொண்டருள்க வெனமகிழ்ந்து கூறுதலு முனியுமிவை
கொள்வோ மல்லோம்

---

466. துருவாச முனிவன் குலிசன் கோயில் புக்கான் என்க. கொடைக்கு அமரர்தரு அனையான் - கொடுப்பதில் கற்பகம் போன்றவன். கோயில் - அரண்மனை. ஆதனத்தில் அன்பாய் இருத்தினன்.

467. உண்டு என்பதை ஊர், நிதி, மற்றவை என்பனவோடுங் கூட்டுக. உள்ளதனை உதவாய் என்றது - முனிவர் பசிமிகுதியால்

உண்டிவிரும் பினமுனது மனைதன்னி லுள்ளதனை
யுதவா யென்னப்
பண்டுபுரி தவப்பயனென் றருத்தினனட் டானவிதம்
பாராள் மன்னன். (2)

துருவாசர் அரசனுக்குச் சாபங் கொடுத்தல்

468. அருத்தியவின் கறிவிதங்க ளனேகமுள வவைதம்முட்
டசையு முண்டென்று
அருத்தினன்மா முனியதனை யுண்டதன்பின்
யெமக்கு நீதான் [ணுணர்ந்தூனை
அருத்தினையா தலிலுலே புலியாகி யருந்திடுக
தசையே யென்றான்
பரித்தபயத் தொடுமரையன் பணிந்துமுனி பதந்தன்னிற்
பகர லுற்றான். (3)

அரசன் முனிவரைச் சாபவீடு கேட்டல்

469. உன்மனையி லுள்ளதனை யூட்டெமக்கென்
லூட்டி லேனுன் [றுரைத்தமையா
என்மனையிற் சமைந்தகறி யெவற்றினையு மிதுபிழையென்
றிசைத்த சாபம்

'உணவு எனக்கென்று சமைக்கின் காலதாமதமாகும் ஆதலால் அப்போது சமைந்துள்ளது மட்டில் உதவுவாய்' என்று கூறியதாகக் கொள்க. விதம் அட்டு ஆன அருத்தினன் - பலவிதங்களாகச் சமைத்து வைத்தன எல்லாவற்றையும் முனிவர் உண்ணக் கொடுத்தனன்.

468. தசை - மாமிசம். உண்டதன்பின் உணர்ந்து என்றமையால், உணராமலே உண்டுவிட்டனர் என்க. தசையே அருந்திடுக என்று முனிவன் சாபமிட்டான். பரித்த பயத்தொடும் கொண்ட அச்சத்தோடும்.

469. எவற்றினையும் ஊட்டினேன்; என்றியைக்க.

உன்னருளா லொழியுமுறை யுகந்துரைசெய் மருந்தனையா
யுயிர்கட் கெல்லாம்
இன்னருளைப் புரிவானே யெனக்கினியா யிடர்கடிவா
யெந்தா யென்றான். (4)

முனிவர் சாபவீடு கூறல்

470. மனத்திரங்கி யப்பொழுது மறைமுனியு நீசரிக்கும்
வனத்தி னோராத்
தனித்துவரு மதுதன்னை வதைத்தருந்த வெண்ணுவைபின்
சாந்தம் வாய்ந்தே
எனக்கவல வுடலொழிய விரங்கியுப தேசமரு
ளென்பை யென்னப்
புனத்ததுதா னறிவிக்குஞ் சிவலிங்கங் கண்டொழிப்பை
புலிமெய் நீதான். (5)

மன்னன் புலியாகி வனத்துறுதல்

471. எனவியம்பி யிருக்குமறை முனிதனதா சிரமத்தைச்
சென்றே யெய்ந்தான்
மனர்மன்னன் வல்லியமாய் வனம்புகுந்து மான்மரையும்
வதைத்துத் தின்றே
முனைநினைவு மறநெடுநாள் முழையினுமற் றெவ்வுயிரு
முருக்கி மாந்தி
இனலுமுறு மெல்லையினுக் கணித்தான வனத்தாக்கள்
பலவு மேய்ந்தே. (6)

---

470. சரிக்கும் - சஞ்சரிக்கும். ஆ - பசு. அவல உடல் - துன்பத்தைத்தரும் உடல். புனத்தது - காட்டின்கண் உள்ள அப்பசு. புலிமெய் - புலியுடல்.

471. ஏய்தல் - அடைதல். மனர் - மன்னர் என்பதன் விகாரம். வல்லியம் - புலி. மரை - ஒருவகை மான். முனை - முன்னை. முழை - குகை. முருக்கி - கொன்று. மாந்தி - உண்டு.

நந்தினி என்னும் பசு சிவலிங்கத்துக்கு அபிடேகஞ் செய்தல்

472. இரைதேரும் பொழுதவற்று ணந்தினியென்
தேனு வொன்று [றியம்புபெயர்த்
விரைவோடே பிரிந்தவற்றை வேற்றுவனத்
புகுந்த வேலை [திரைவிரும்பிப்
எரிபோலச் சிவலிங்க மிலங்குதல்கண் டதன்முடிமே
லின்பா லாட்டிப்
பிரியாத நேசமுறப் பிரிந்துபுணர்ந் ததுகிரைகள்
பிரியாத் தானம். (7)

473. வழுவறவே நாடோறுஞ் சென்றந்த விலிங்கத்தின்
வண்பா லாட்டிக்
குழுவுடனே கூடித்தன் குழக்கன்று தனக்கருத்திக்
கோல மாக
ஒழுகுமுலைப் பாலினைத்தா னிம்முறையே யொழுகிடுநா
ளொருநா ணீங்கிக்
குழுவதனைச் சிவலிங்கங் குறித்தியங்கும் வழிதனிற்கோட்
புலியைக் கண்டே, (8)

இனலும் - இன்னலும்; துன்பமும். அணித்தான - சமீபத்தி லுள்ள. ஆக்கள் - பசுக்கள்.

472. தேனு - பசு. இன்பால் - இனிய பால். எரிபோல - தீயின் சுவாலைபோல. ஆட்டி - அபிடேகம் செய்து. பிரியாத நேசம் உற பிரிந்து - பிரியா விடை கொண்டு. நிரைகள் பிரியாத் தானம் தேனு புகுந்தது என்று இயையும். நிரை - பசுக்கூட்டம்.

473. வண்பால் - வளமிக்க பால். குழு - பசுவின் குழு; குழு - கூட்டம். குழக்கன்று - இளங்கன்று. அருத்தி - ஊட்டி. கோலம் - அழகு. ஒழுகு - தானாக ஒழுகுகின்ற. குழுவதனை நீங்கி என்க. குறித்து இயங்கும் - நினைத்துச் செல்லும். கோட்புலி - கொலைத் தொழிலையுடைய புலி.

புலிகண்ட பசு நடுங்கி நலிவெய்தல்

474. அச்சமுற வுடல்நடுக்க வழுதுதரை தனில்வீழ்ந்தே
யன்னே வன்னே
கைச்சவிட மிடற்றூர்க்குங் கன்றுக்கும் பாலூட்டி
யூட்டி லேமிங்
கிச்சினவாள் வரிவேங்கைக் கெதிர்ப்பட்டே மானலு
மீன்பா றன்னே
நிச்சலுநின் மலற்காட்டு மெமக்கிதனுல் வதையிலென
நினையும் போதில், (9)

பசு புலியை வேண்டிக்கொள்ளுதல்

475. வல்லியமா வினைநோக்கி வருந்துறநீ நினைவிடுவே
னல்லேன் மாய்ப்பன்
ஒல்லையிலென் றுரைத்தலுமே யாவுமென துடலொழியு
மென்றே யான்றன்
அல்லலுறு கின்றேன்பா லாட்டிலமின் றமலேசன்
முடிமே லன்பால்
இல்லையிளங் கன்றினுக்கு மீன்பாலை யருத்திலெமென்
றிரங்கி யெய்த்தேன். (10)

---

474. கைச்ச - வெறுக்கப்பட்ட. கைத்த என்பதன் போலி. விட மிடற்றூர் - விடம் பொருந்திய கண்டத்தை யுடைய சிவபெரு மான். வாள் வரி - வாள் போன்ற கோடுகள். நிச்சலும் - நாடோ றும். நித்தலு மென்றதன் போலி. சிவபெருமானுக்குத் தினந் தோறும் வழிபாடு இயற்றும் எனக்குப் புலியால் வதை உண்டா காது என்று தைரியம் கொண்டபோது என்க.

475. வல்லியம் - புலி. ஆ - பசு. வருந்துற மாய்ப்பன் எனக் கூட்டுக. ஒல்லை - விரைவு. என் உடல் ஒழியு மென்றே அல்ல லுறுகின்றேன் என்றது என்க. இல்லை - அல்லாமலும். பசு தான் இரங்கி எய்த்ததற்குக் காரணம் கூறியது.

புலியிடம் பசு சபதம் புகல்தல்

476. ஆங்கணிங்தே யமலனுக்கு மாட்டிப்பால் கன்றி னுக்கு
மருத்தி மீள்வேன்
ஆங்கருந்தப் பொழுதெனீ யதுதவறி லந்தணீன
யிறுத்தா னெய்தும்
தீங்குறுவேன் ; செய்ந்நன்றி தனைக்கொன்று னுறுகின்ற
பாவஞ் சேர்வேன் ;
பாங்கறவே தாய்தந்தை யெனுமவரை வஞ்சித்தான்
பாவ மேய்வேன் ; (11)

477. பாங்குடைய பாரிதனக் குறினிருது நாலாநாட்
பரிசி யாதான்
தீங்குறுவேன் ; நாலாநா ளேந்தா நா ளினையன்றித்
தினைக்கும் பார்ப்பான்
தாங்கியிடும் பாதகத்தைத் தரித்திடுவேன் ;
தம்மைக் கொன்றுன் [தனையடைந்தார்
தீங்குறுவேன் ; கோளுரைக்குஞ் சிதடருறும் பாதகமுஞ்
சேர்வேன் ; திண்ணம். (12)

---

476. அருத்தி - உண்பித்து. அப்பொழுது எனை ஆங்கு அருந்து என்று இயைக்க. இறுத்தான் - கொலை செய்தவன். கொன்றுன் - சிதைத்தவன். ஏய்வேன் - பொருந்துவேன். பாங்கு - முறைமை. இது முதல் 492-ஆம் செய்யுள் முடிய பசு தான் சொல் தவறினால் அடையலாகும் குற்றங்களை வரிசைப் படுத்திக் கூறுவது காண்க. இஃது நூலில் ஓர் அருமையான பகுதி.

477. பரிசியாதான் - புணராதவன். தினைக்கும் - இன்பம் அனுபவிக்கின்ற. தரித்திடுவேன் - தாங்கிக் கொள்வேன். கோளுரைக்கும் - புறன் கூறுகின்ற. சிதடர் - அறிவில்லாதவர்.

478. கற்புடையாள் மனையிருக்கக் காதலவ ளிடத்தின்றிக்
கலசக் கொங்கை
விற்பவர்தோ ளினைவிரும்பி வெறுக்கையினைக்
மெய்யிற் புல்லும் [கொடுத்தவர்தம்
அற்பருறும் வல்வினையை யடைந்திடுவேன் ; கற்புடையா
ளணங்கென் னுத
துற்சனர்தந் துரிசுறுவேன் ; அவடன்னைக் காமுறுவார்
துயரந் துய்ப்பேன். (13)

479. வில்லமரந் தெங்குவட வேம்புபுளி ஞெல்லிவிளா
வினையும் வெட்டும்
புல்லியர்புக் கழுதழுந்தும் பொறியழலிற் புகுந்தழுங்கிப்
புலப்பு வேனுன் ;
அல்லலுறுத் தமருலகத் துறையவெணி யரன்கோயில்
வலஞ்செய் வாரைக்
கொல்லுமவர் கொடியவினை யுடையேன் ; மும்
மதுதான் கோயில். [மூர்த்திகட்கு

480. கண்டகத்திற் காலூன்றின் காயமுழு துங்குலையு
மெவர்க்கும் கைவாள்
கொண்டசத்தி னுடறன்னைக் குறைத்தரிந்து,
மற்றுங் கொன்றான் [மான்மரையு
உண்டிடுத லறக்கொடிது, சீசியென் றுவராம
லுகத்தூ ணுண்ணுங்
துண்டருறுந் துரிசுறுவேன் ; கன்னக்கோல்
துயருந் துய்ப்பேன் ; [வாள்பணுவார்

---

478. கலசக் கொங்கை விற்பவர் - வேசையர். வெறுக்கை - பொன். புல்லும் - தழுவுகின்ற. வல்வினை - தீயவினை. அணங்கு - தெய்வம். துரிசு - பாவம். காமுறுவார் - விரும்புவார்.

479. வில்லம் - வில்வம். புலப்புவேன் - புலம்புவேன். அரன் கோயிலே மும்மூர்த்திகட்கும் கோயில் என்று கூறிற்று எனக.

480. கண்டகத்தில் - முள்ளின் மேல். காயம் - உடம்பு. குலையும் - நடுங்கும். அசத்தின் - ஆட்டின். அற - மிகவும்.

481. கஞ்சாவைத் தின்பாருங் கழித்தமது வினையுண்ணுங்
கரிசர் தாமும்
நெஞ்சாரப் பூசித்தார் போலறிவ ழுந்துநகை
நாணு ரென்றே (நாடிக்)
கஞ்சாவைத் தின்னுர்நூல் கற்றுணர்ந்தார் கள்ளுண்கை
யாலே கெட்டார்
கஞ்சாவுந் தினுங்கடையர் கரிசடைவேன்; புறனுரைப்பர்
கசடுந் தீரேன். (16)

482. நரையில்லை திரையில்லை நடலையுட லினுக்கில்லை
யென்று மிங்கே
விரையவிருந் தெனவொருவன் விரும்பியுத வியுமருந்து
வியந்து வாங்கி
வரைவறவே யுதவிமனை யிருந்தார்க்குத் தான்பின்பு
மாந்தன் மாண்பே
இரையருந்துங் காகம்போ லிதுசெய்யார் பாதகமு
மேய்வ ஞனே. (17)

சிசி - இழிவுக் குறிப்பு. உவராமல் - வெறுக்காமல். 'உவரா வீகைத் துவரையாண்டு'; புறநானூறு. 201. உகந்து-விரும்பி. துண்டர் - துஷ்டர்கள். துரிசு - பாவம். கன்னக்கோல் - கள்வர்களின் ஆயுதம்; கன்னகம் எனவும் பெயர் பெறும். (சிலப். அடியார்க்கு உரை. அடி 142). களவுக்குக் கன்னக்கோலும், கொலை புரிதற்கு வாளும் செய்பவர் என்க.

481. கரிசர் - குற்றமுடையர். கழித்தமது - நல்லோரால் விலக்கப்பட்ட கள். இரண்டாமடியில் ஒரு சீர் மிக்கு வந்துளது. ஏனையடிகளும் திருந்தவேண்டியுள்ளன.

482. திரை - முதுமையில் தோல் சுருங்குதல். நடலை - நோய் முதலியவற்றுல் உண்டாகும் துன்பம். வரைவு அற - அளவு இன்றி. மாந்தல் - உண்டல். இரையருந்தும் காகம்போல் (திருக்குறள் 527). 'காகமுறவு கலந்துண்ணக் கண்டீர்' (தாயு. காடுங் கரையு - 3). இச் செய்யுளில் 'விருந்து புறத்ததா' என்று தொடங்கும் (குறள் 82) கருத்து அமைந்துள்ளமை காண்க.

483. புரிந்துசிவ லிங்கத்திற் பூசையினைப் பூசித்த
பலத்தை யீந்தே
அருங்கனகம் பிறர்கையில் வாங்குமவர் பாதகமு
மடைவேன் ; ஆர்க்கும்
இரங்கியிருக் காதிமறை யியம்பினனைச் சிவலிங்கத்
திருப்பான் றன்னைப்
பரம்பரனைக் கூலிக்குப் பூசிப்பார் பாதகமும்
பரிப்பே னுனே. (18)

484. ஆக்கிடுவே னிலையமும் மவனுக்குத் திருவிளக்கு
மிடுவே னன்பால்
தேக்குபுனல் திருக்குளமுஞ் சென்றிடுவே னென்றுவருஞ்
செல்வத் தாற்றன்
ஆக்கையினை யோம்புமவ னவலவினை யினையடைவேன் ;
அந்த ணாளர்
நாக்கினவி ஞன்மறையைப் பழிப்பரவர் பாதகமு
நண்ணு வேனுன் ; (19)

485. வேரின்றித் தண்டுதழை விளங்காது மண்ணின்கண்
விமல னன்றி
ஊருமுடன் மற்றையுட லுறுமுயிரு மொளிராவென்
றுணர்ந்தா ரிந்தப்
பாரிலரி யாரென்னப் பணியாம லவர்தமையும்
பழிப்பார் பாவம்,
ஆரியனைப் புறங்கூறு மவலருறும் பாதகமு
மடைகு வேனே. (20)

---

483. கனகம் - பொன். மறை இயம்பினன் - சிவபெருமான். பரித்தல் - ஏற்றல்.

484. வரும் செல்வம் என்பது, இங்கு யாசகம் பண்ணிப் பெறும் செல்வம் என்க.

485. மண்ணில் வேரில்லாமல் தண்டு தழை விளங்காது ; அதைப்போல், விமலனன்றி, உடல் உறும் உயிரும் ஒளிரா என்று உணர்ந்தவர், இப் பாரில் அரியார் என்று கொள்க. ஊரும்

486. உடல்சிறையென் றுவர்ந்திதனை யொழிப்பானெங்
குருடித் தேடிப் [குருதானென்
படிமுழுதும் பசுப்பாசம் பதிப்பானைக் கண்டுபதம்
பணிந்து போற்றிக்
கடவுளிவ னெனக்கருதிக் கசிந்தழுவாற் கமலனடி
காட்ட லன்றி
உடலுடைமை தருமிவனென் றுபதேசஞ் செயுமூனர்
பழுது முள்ளேன். (21)

487. இடபத்திற் பொதியெடுத்தே இழுதையுறு பாதகமு
மேய்வேன்; ஆக்கள்
உடலத்தின் ஊறுபட வடிப்பார்தம் பாதகமு
முறுவேன்; இல்லத்
திடுபிச்சை யெனவந்தார்க் கேதேனு முதவாதார்
பாவ மேய்வேன்;
மடுவுற்ற மீனனைத்தும் வதைப்பார்தம் கொலையதனுட்
பாவ மேய்வேன். (22)

உடல் - புழு முதலிய ஊர்வன. ஆரியன் - ஆசாரியன். அவலர் - வீணர்.

486. இச் செய்யுள் உயர்ந்த குருமார் செய்யும் பேருபகாரத்தையும், அற்ப குருக்கள் செய்யும் வீண் உபதேசத்தையும் ஒப்பிட்டுக் காட்டியது. உவர்தல் - வெறுத்தல். எங்குரு - எமது குரு. படி - பூமி. பசு - உயிர். பாசம் - தளை. பதிப்பான் - சீடன் உள்ளத்திலே பதியச் செய்பவன். பதம் - பாதம். கடவுளைக் குருவிடம் காண்டல் என்பது சித்தாந்தக் கருத்து. அமலன் - சிவபிரான். உடல் உடைமை - உடலால் செய்யும் பணிவிடைகளையும் பொருள்களையும். இவன் தரும் - சீடன் தருவான். ஊனர் - குற்ற முடையவர். பழுதும் உள்ளேன் - பாதகத்துக்கு உள்ளாவேன்.

487. இடபத்தின் - எருதினால். பொதி யெடுத்து - மூட்டைகளைச் சுமக்குமாறு செய்ததனால். இழுதை - அறிவில்லாதவன். ஊறுபட - காயம் உண்டாகும்படி. மடு - நீர் மடு.

488. ....
....
....
....
..... பாதகமு மடைந்திடுவே னன்னம்விற்பார்
தமக்குறு பாதகஞ்
சேர்வேன் சிவலிங்கந் தனைவிற்பார்
தவறுஞ் சார்வேன். (23)

489. தானமெனக் கன்னிகையைத் தாரையொடு தக்காளுக்
குதவித் தான்பின்
மானமழிந் தவடன்னை மற்றையொரு வனுக்குதவு
வஞ்ச நெஞ்சன்
ஊனமுளேன் ; ஊனமிலா ருடற்கூன முறவஞ்ச
மொல்லை செய்யும்
ஈனருறுங் கரிசடைவேன் ; பொய்த்தவஞ்செய் வாரிழுக்கு
மெய்து வேனே. (24)

490. வேதத்தை விற்பார்தம் பாதகமும் விரவிடுவேன் ;
வேத மோதும்
சாதிக்கு ளந்தணர்தங் குலத்துதித்துந் தண்ணியர்தோ
டன்னைச் சார்வார்

---

488. இச்செய்யுள் மிகவும் சிதைந்துளது.

489. ஒரு கன்னிகையை ஒருவர்க்கு மணம் பேசி மற்றொரு வர்க்கு மணமுடித்தல் ; ஓர் ஊறும் இல்லாதவர்க்கு வஞ்சத்தால் ஊனம் உண்டாக்குதல் ; பொய்த் தவஞ் செய்தல் என்ற மூன்று பாதகங்கள் இங்குக் கூறப்பெற்றன.

உடற்கு ஊனம் உற ஒல்லை வஞ்சம் செயும் ஈனர் - தேகத்திற் குப் பிணி முதலியவை விரைவில் உண்டாமாறு வஞ்சிக்கின்றவ ராகிய மதியீனர் ; வஞ்சம் செய்தல் - உணவாதிகளால் வஞ்சித் தல். இழுக்கு - குற்றம்.

490. வேதத்தை விற்பார் - பொருள் வாங்கிக்கொண்டு வேதத்தைப் போதிப்பார். தண்ணியர் - தாழ்வாகிய வேசியர் ;

ஏதத்தை யுடையாரே யவடன்னை யிழித்தகற்ற
லினிதே யன்றி
வாதித்து வதைசெய்வார் வல்வினையிற் முழ்ந்தழிவே
னவனி தன்னில். (25)

491. புலைச்சியுமன் னியர்மனையிற் புக்கெடுக்கிற்
சோரத் தாலே [பொருடன்னைச்
அலைத்தவள்கை யறுப்பதுபாங் கதுவன்றி யவடன்னை
யன்றிக் கன்றித்
தொலைத்திடுவார் துரிசடைவேன் ; சுரபியினைப்
துமேய்ந்த தென்றே [பயிரதுவைத்
அலைத்தழிப்பா ரருவினையு மடைந்திடுவேன் ; அதுகடக்க
வல்லே னல்லேன். (26)

492. சோராதி யில்லானைத் திரிவாலே சோரனெனத்
துணிந்து சொல்வார்
தீராத பாதகமுஞ் சேர்ந்திடுவேன் ; தீங்கிலனைச்
சினமு மூற்றுப்
பாராதே பழியினையு மிவனிந்தப் பழிபுரிந்தா
னென்பார் பாவம்
பேராதே பெற்றிடுவேன் ; தனைத்தானே
பிழையும் பேரென். [வதைப்பனென்றன்

இன்பத்துக் குரியவர் என்றலுமாம். வதை செய்தல் - கொலை செய்தல்.

491. அலைத்து - அடித்து. பாங்கு - மேன்மை. கன்றி - கோபித்து. தொலைத்திடல் - கொன்றிடல். சுரபி - பசு. அலைத்து அழிப்பார் - அடித்துக் கொல்லுகின்றவர்கள். குற்றம் செய்த பெண்டிரையும், வயலில் மேய்ந்த பசுவையும் கொல்லுதல் கொடிய பாவம் என்றபடி.

492. சோராதி - களவு முதலியவை. திரிவாலே - மனமாறு பாட்டால். பழியினையும் பாராதே - தனக்கு வரும் பழியையும்

புலியின் இரக்கம்

493. என்றியம்புஞ் சபதவித நந்தினிதன் வாய்க்கேட்டே
யிரக்க மெய்திச்
சென்றுசிவ லிங்கத்தின் றீம்பாலை யாட்டிநீ
மீண்டு சேரீண்
டென்றுபுலி யியம்புதலும் பிரிந்தியங்கி நந்தினிபா
லிலிங்கத் தாட்டிச்
சென்றுமுனம் புரிந்தவெலை சேர்தலுமே கன்றுமெதிர்
சென்று நின்றே, (28)

நந்தினி கன்றுக்குப் பாலருத்துவித்தல்

494. அன்னுய்நீ யின்றுவரல் வைகியமி ... .
....றித்
தென்னேதா னியம்பெனலு நந்தினியு மீன்பாலை
யருந்திப் போது
பின்னுளென் னெடுபேசப் பெறுதியெனக் கன்றருந்திப்
பெருகும் ப.....
.... தினியுனக்குற்ற விடுக்கணியம்
பென்ற போதில். (29)

பாராமல். பேராது - தவிராமல். தணீத்தானே வதைப்பேன் - தற்கொலை செய்துகொள்வே னுவேன். என் தன் பிழையும் - இத்தகைய என் பிழையையும். இதுகாறும் கூறியவை நந்தினி கூறிய வஞ்சினங்கள்.

493. சபதவிதம் - சபத வகைகளை. சிவலிங்கத்தின் - சிவ லிங்கத்துக்கு. முனம் புரிந்த எலை - முன் சென்றிருந்த இடம்.

494. என்னே.யாதோ. இப்போது அருந்து; பின் நாள் என்னெடு பேசப்பெறுதி என்க. அடிகள் சிதைந்துள்ளன.

புலியைக் கண்டதை நந்தினி புகறல்

495. தனித்துவனந் தனிற்சென்றே னனலனைய விழியுழுவை
தன்னைக் கண்டேன்
இனிச்செயலென் னேவென்றே யிடுக்கணுற நடுக்கமுற
விளைத்து வீழ்ந்தேன்
எனக்கிரைநீ யழுதுபல னென்னெனலும் புலியின்பா
லிறைக்கு மாட்டி
உனக்கிரையா வேனிதுதா னுண்மையெனச் சபதவித
முரைத்துப் போந்தேன். (30)

கன்று நானே இரையாவேனென்றல்

496. என்றியம்பக் கேட்டிரங்கி யிளங்கன்று நீயிங்கே
தங்கங் கேநான்
சென்றதனுக் கிரையாவே னெனத்தெளிந்து செப்புதலு
மன்னை தானும்
என்றனது சபதத்துக் கிசைந்ததால் யானேபோ
யிரையா வேனீ
நின்றிடுக வானிரையி னெனயானும் வந்தழிவே
னின்னே டென்றே. (31)

நந்தினி கன்றினிடத்தும் ஏனைய ஆக்களிடத்தும் செலவு பெறுதல்

497. மொழிந்தகுழக் கன்றுதனை முகந்துடலந் தனைநக்கி
நீதா னிங்கே
அழுங்குதலை யொழிந்துமிந்த வாக்களொடு நில்லென்றுங்
கருகு வந்த

---

495. அனல் அனைய விழி - நெருப்புப் போன்ற கண்களை யுடைய. உழுவை - புலி. புலி என்னெனலும் என்க. இச் செய்யுள் நந்தினி கூற்று.

496. நீ இங்கே தங்கு நான் அங்கே சென்று அதனுக் கிரையாவேன் எனக் கன்று செப்புதலும் என வியைக்க. அன்னை - தாய்ப்பசு. ஆனிரை - பசுக் கூட்டம்.

497. சுரபிவிதம் தனக்கும் - பல பசுக்களுக்கும். தன் குறிப்பு கூறி என இயைக்க.

தொழுஞ்சுரபி விதந்தனக்குங் கூறித்தன் குறிப்பிந்தக்
குழக்கன் றும்பால்
வழங்கினனீர் வளர்மின்க ணைனங்குப் போகின்றே
னென்ற மாற்றம், (32)

ஏனைய ஆக்கள் செலவைத் தடுத்தல்

498. கேட்டழுங்கிச் சுரபிகளுங் கிளர்ந்தமொழி தவறுதலுங்
கீழ்மை யார்க்கும்,
ஈட்டுமிகு நிதிதன்னை யிழக்கவருங் காலத்தும்,
எதிர்ந்து தம்மை
வாட்டுமவர் வரும்பொழுதும், வாள்விழியார்
வலிதை தன்னை [கலவியினும்,
வேட்டிடுமங் கலந்தனிலும், வெவ்வினையா கா;போகேல்
என்ற வேலை, (33)

நந்தினி ஆக்களின் கூற்றை மறுக்க, அவை அதனை வாழ்த்தி அனுப்புதல்

499. அன்னியரைக் குறித்திரங்கி யசத்தியத்தை யறைந்திடுத
லருக மார்க்குந்
தன்னுடலைக் குறித்தறைதல் தவறென்ன நந்தினிதான்
சாற்றிச் செல்ல

---

498. 'கிளர்ந்த மொழிதல் தவறுதல் யார்க்கும் கீழ்மை; ஆனால் சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்தல் ஆபத் தர்ம மாகும்' என்று கூறி நந்தினியைச் செல்ல வேண்டாவென்று பிற பசுக்கள் தடுத்தன என்க. ஈட்டும் - சம்பாதிக்கும். வாட்டு அவர் - கொல்கின்றவர். வேட்டிடும் - விவாகம் செய்கின்ற.

499. சில சமயங்களில் சொன்ன சொல் தவறன்று என்று ஆக்கள் கூற, நந்தினி பிறருடைய நலனுக்காகச் சொல் தவறுதல் குற்றமாகாதேயன்றி, தன் நலத்தைக் கருதி அவ்வாறு சொல்லுதல் தவறு என்று கூறிற்று என்க. இது மிக அருமையான கருத்தென்பதை உணர்க. ஆர்க்கும் அருகம் என்றியைக்க. அருகம் - தகுதி; வடசொல். பின் இரண்டடிகள் நந்தினிக்குப் பசுக்கள் கூறியவை. நம்பால் - விருப்பத்தால். 'நம்பு மேவு நசை யாகும்மே' (தொல். சொல். சூ. 329). ஓம்பும் - பாதுகாக்கும்.

இன்னலுனக் கெவ்விடத்து மில்லையசத் தியமியம்பா
வியல்பி னுலே
நன்மையுனக் காகுமென நவின்றுக்க ளதன்கன்றை
யோம்பு நம்பால். (34)

புலி முனையுரைவெய்தி, நந்தினியை வேண்டுதல்

500. விரைந்தியங்கி நந்தினிவாள் வரிவேங்கை முன்னிற்க
வியப்ப தெய்தி
இரங்கிமுனை யுணர்வுமுற விதனுலே யெமக்கொழியு
மிந்த வாக்கை
வரம்பலவு முறுவமென மதித்துளத்து வல்லியந்தான்
வணக்கஞ் செய....
....க்கிப்பழுதுடலு மறுமாறு நந்தினியே
பகரா யென்றே. (35)

நந்தினி புலியுடலை நீக்கக் கூறும் உபாயம்

501. மொழிந்தபொழு தாவிரங்கி முன்னுளில் வாணன்முன்
மூல நோயும்
அழிந்திடவே ..... ளடனயனுதிமல முத்தனையர்ச்
சனைசெய் தன்பால்

---

500. வாள் வரி வேங்கை - வாள்போன்ற வரிகளை யுடைய புலி. ஆக்கை - புலியினுடல். முனையுணர்வு - முன்னை உணர்வு; பூர்வீக உணர்ச்சி. மதித்து - எண்ணி. பழுதுடல் - சாபத்தால் பெற்ற புலியுடல்.

501. வாணன் - பாணசுரன். இவன் முன்னெருகால் ஆரூரில் சிவலிங்கம் தாபித்துப் பூசை செய்தனன். அதற்கே நந்தினி அபிடேகம் செய்து வந்தது. மூலநோய் - பிறப்புப் பிணி. பெருங் கவலையினைக் கழிந்து என வியைக்க. இட்ட வரம் - இஷ்டமான வரம். கண்டால் - தரிசித்தால். புலி - விளி. புலி உடல் ஒழிந் திடுவை வா என்றியைக்க. இச் செய்யுள் அடுத்த செய்யுளிலுள்ள கண்டே என்பதனுடன் முடியும். இரண்டாமடி சிதைந்துள்ளது. ஈற்றடி திருத்தமாயில்லை.

கழிந்துபெருங் கவலையினை யிட்டவரம் பெறச்சிவ
லிங்கங் கண்டால்
ஒழிந்திடுவை புலியுடல் வா,உறுதி வரம்பெறுவாயென்
றுரைத்துச் சென்றே, (36)

குலிசன் தன் முன்னுருவம் பெற்றமை

502. எப்பொழுதுந் தவறுதே யின்பாலை யாட்டுசிவ
லிங்கங் கண்டே
தப்பறவே யதன்முடியிற் றுளுட்டித் தன்முலைப்பா
லிங்கே வாவென்று
அப்பொழுது புலிதனக்கு மறிவிக்கப் புலிகண்டா
தரவி னலே
துப்பனைய திருமேனி தொழுவதனை யரையனெனத்
தோற்று வித்தான். (37)

அரசன் சங்கரனைத் துதித்தல்

503. தனையடைந்தா ரிடர்கடியுஞ் சங்கரனின் னருளாலே
சாபந் தீர்ந்து
மூனவடிவு தனைப்பெற்ற முடிமன்னன் பரமனடி
முன்முன் முழுந்தே
எனையின்னல் கெடுத்தானே ! எனக்கிலியாய் !
போற்றி ! என்றும் [சயபோற்றி !
பனுவலற்கு மரியானே போற்றியெனப் பணிந்தன்பின்
பசுவைப் பார்த்தே, (38)

---

502. தன் முலைப்பால் ஆட்டி (புலியை விளித்து) 'இங்கே வா' என்று நந்தினி அழைத்தது என்க. தான் என்றது பசு. ஆதரவினல் - அன்பினல். துப்பு அனைய - பவளம் போன்ற. திருமேனி அதனைத் தொழ வென்க. அரையன் என தோற்று வித்தான். சிவபெருமான் அவனுக்கு முன்னை உருக்கொடுத்து, உலகுக்கு அரச உருவுடன் அவனைத் தோன்றச் செய்தருளினன் என்க.

503. மூனை வடிவு - அரச வடிவு. பனுவலற்கும் - பிரமனுக்கும்.

புலியான வரலாற்றை நந்திலியிடம் அரசன் புகறல்

504. முன்னுளில் முனிசபிக்கப் புலியானேன் மோசனமுன்
னுலா மென்றே
அன்னுளம் முனியறைந்தா னப்படியுன் னருளாலே
யற்றேன் குற்றம்
என்னுடு கேகயமே யதுகுலத்தி னுற்பவித்த
குலிச னுனே
நன்னுடு தனையடைய நந்தினியே வழிசொலென
நவின்ற போதில், (39)

ஆ அரசனுக்கு ஆரூரில் அரன்பூசை செய்கவென்றல்

505. தரைத்தலத்து ளரியதிது சமற்கார புரியிந்தத்
தலத்தி னுற்றே
விரைத்துலகத் தாசையினை விட்டுவிம லேசனடி
வியந்து போற்றி
அருச்சனையைப் புரிந்துசெயி னருவினையு மிருள்மலமு
மற்று நீதான்
உரைக்குமுணர் வரியசிவ னடியடைவை யென்றுவு
முரைத்த போதில், (40)

நல்லார்வாய்ச் சாபத்தால் நன்மையுமுண்டாம் என்றது

506. பொல்லாத புலியுடலம் போக்கினையிப் பொழுதெனக்குப்
புவியின் கண்ணென்
றல்லாத வூனுடல மறுக்குமுப தேசமுமுன்
னருளாற் பெற்றேன் ;

---

504. மோசனம் - விடுதலை. அம் முனி - துருவாசன். யது குலம் என்பது - சந்திரகுலத் தரசனை யது என்பவனுடைய குலம். நன்னுடு - தனது நல்ல நாட்டை. இரண்டாமடியில் அந் நாளென்பது எதுகை நோக்கி அன்னுளெனத் திரிந்தது.

505. சமற்காரபுரி - திருவாரூர். விரைத்து - விரைந்து ; வலித்தல். இருள் மலமும் - மாயா மலமும். உரைக்கும் - வேதத் திற்கும்.

506. ஒன்று அல்லாத - பொருந்துதல் இல்லாத ; சிறுமதிப் பும் பெருத எனலும் ஆம். கல்லாய மனம் - கல்போன்ருன மனம்.

நல்லார்வாய்ச் சாபத்தா னடுக்கமிலா நன்மையுமுண்
டென்றே நாடிக்
கல்லாய மனங்கசிந்து முனிவனையுங் குரவனெனக்
கருதி னேனென். (41)

நந்தினி மீண்டு வந்து தன்னினத்தை அடைந்து சிவபெருமான் அருளியதைக் கூறியது

507. இயங்குகநந் தினியெனினு ளினுக.....
னிறைஞ்ச வாவு [தலையினென்றரைய
நயந்தவனுக் கருள்புரிந்து நாடித்தன் னினங்களுறுந்
தலத்தை நண்ணிப்
பயந்தகுழக் கன்றினுக்குப் பாலருத்தித் தானந்தப்
பசுக்கட் கெல்லாம்
வியந்துமுகங் குளிர்ந்திலங்க விமலனருள் புரிந்தவிதம்
விளம்பிற் றங்கே. (42)

பக்தர்கள் பேரின்பம் துய்த்தல்

508. மறப்பறவே தன்னியம முடித்தென்றுந் தனதடியை
மறவாப் பத்தர்
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்ற னருள்பெற்ற வனிதலம்பி
ரிந்து சென்றே

கசிந்து - உருகி. முனிவனையும் - துருவாசனையும். குரவன் - ஆசாரியன். இச் செய்யுளில் அமைந்த அருமையான கருத்து உணரற் பாலது.

507. முதலடி சிதைந்துள்ளது. நயந்து - விரும்பி. அவனுக்கு - குலிசன் என்னும் அரசனுக்கு. தலம் - இடம். பயந்த - பெற்ற. இலங்க - விளங்க.

508. நியமம் - செய்ய வேண்டிய பூசை முதலியன. பத்தர் - அன்பர்கள். பிஞ்ஞகன் - சிவபெருமான். 'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க' (திருவா. சிவபுரா. அடி 7). அவனிதலம் - பூமண்டலம். ஊனம் - பிறவித் துன்பம்.

சிறப்புடைய சிவலோகஞ் சேர்ந்திருந்து திளைக்கின்ற
தாங்குச் செல்வம்
உறக்கமுறும் போதுயிர்க ளுனமறப் பேரின்ப
மோங்கத் தூங்கும். (43)

குலிசன் சிவபெருமானைப் பூசித்துத் துதித்தல்

509. வேந்தனு நூல் விதியாலே நாடோறும் பூசித்து
விமலன் பாதம்
வாய்ந்துறவே மனமகிழ்ச்சி மண்டபமுங் கோபுரமு
மற்றுஞ் செய்வித்
தாய்ந்துடல மல்லமென வறிந்துவெறுத் தருவினையு
மூல நோயும்
மாய்ந்திடவே வரமருளு மாதேவ னடிவணங்கி
வாழ்த்த லுற்றான். (44)

வேறு

அரசன் செய்த துதி

510. அற்ற தந்தண னிருக்கு நாளினி
யழிப்ப னென்றுவரு காலனைச்
செற்ற டைந்தசிறு வற்க ளித்தழிவி
லாவ ரஞ்சக மதிக்கவே,

---

509. நூல் - சிவகாம நூல். மனமகிழ்ச்சி வாய்ந்துறவென்க. மற்றும் - மதில் முதலானவையும். உடலம் அல்லம் - நாம் என்பது இவ்வுடல் அன்று என்ற உண்மை. வெறிந்து - வெறுமையாகி. அருவினை - தீர்த்தற்கரிய வினை. மூலநோய் - ஆணவ மலம். 'மூலநோய் தீர்க்கு முதல்வன் கண்டாய்' (தேவா. 845, 9). மாய்ந்திட - அழிந்துபோக.

510. அந்தணன் - மார்க்கண்டன். இருக்கும் நாள் அற்றது - உலகிலிருந்து வாழும் நாள் முடிந்தது. காலனைச் செற்று - யமனை அழித்து. அழிவிலா வரம் - என்றும் இருக்கும் வரம். சிறுவன் - மார்க்கண்டன். கற்றை - திரட்சியான. சடையுறைக் கறைப் பிறை - சடையின்கண் தங்கிய களங்கமுள்ள பிறைச் சந்திரன். சந்தவின்பத்தின் பொருட்டு இடையில் வல்லெழுத்து மிக்கது. மணிகண்டன் - நீலகண்டன்.

பற்றி யாண்டபர மேச னே!சய!ப
ராப ரா!சய! பரந்துறுங்
கற்றை வார்சடையு றைக்க றைப்பி றைமு
டித்த கண்டமணி கண்டனே! (45)

511. அஞ்சி வானவ ரலந்து தாருக ன
லோக் கையா னுமம லேசனே!
தஞ்ச நீயலது மற்றி லோமென
வியற்று .....ரிதனை யேவியே
துஞ்சு வித்தவனை வான வர்க்கிடர்
தொலைத்த வித்தகசு ரேசனே!
நெஞ்சு நெக்குருகு மன்பருக்கரு
ணிருத்த னே!சய!ரு த்தனே! (46)

வேறு

இறைவன் குலிசனுக்கு முத்தியளித்தல்

512. என்றுதுதி யியம்புதலு மிறையமலன் மகிழ்ந்தவனை
யிடுக்க ணெய்கள்
ஒன்றுமுட லுடலான வினையனைத்து மொழிந்துவிட
வுருகி நோக்கிச்

---

511. முதலடி திருத்தமில்லை. இரண்டாமடி சிதைந்துளது. துஞ்சுவித்து - இறக்கும்படி செய்து. அவனை - அத் தாருகனை. அவனைத் துஞ்சுவித்து என வியைக்க. வானவர்க்கு இடர் தொலைத்து அன்பருக்கு அருள் நிருத்தன் என்க. நிருத்தன் - நடமாடுபவன். வித்தக - ஞான சொரூபனே. சுர + ஈசன் - தேவர் கட்கு நாயகன். ஒருத்தன் - இணையற்றவன்.

512. உடல் - முன்னது தேகம், பின்னது வருத்துதல் என்னும் பொருட்டு. உறு - மிக்க. பேரிலையம் - பேரின்பத்துடன் கலந்து. பாதம் இதயத்தின் என்றுமுற பேரிலையத்து இருக்கின்றன் என்று முடியும். அருள்பெற சிவனடியார்கள் சிவபுரத்தில் இருந்து பின்பு ஊழிக் காலத்தில் திருவடியில் இலயம் அடையும் செய்தி முன்னும் பல இடங்களிற் கூறப்பட்டமை காண்க.

சென்றுசிவ புரத்தினுறச் செலுத்தியிருத் தினனவனுஞ்
சிவன்பொற் பாதம்
என்றுமுற விதயத்தி னிருக்கின்றன் பேரிலையத்
துறுபே ரின்பம். (47)

குலிசேசலிங்கமெனும் நாமம் பெறுதல்

513. புவிவேந்தன் குலிசன்செய் பூசனையைப் புரிந்துகொள்ளும்
புனித லிங்கத்
தவராலுங் குலிசேச னெனுநாமந் தனிச்சாற்றத்
தங்கு மங்கே
புவிநீங்கிச் சிவபுரத்திற் புக்கிருப்பார் கார்த்திகைபூர
....நீப
நவமான வானெய்யா னுறவேற்றி யவ்விலிங்க
நாடி னரே. (48)

பூரணையில் பூசிப்பவருக்கு உண்டாகும் பலன்

514. மற்றையமா தங்கடொறும் வாய்த்துறும்பூ ரணைதன்னில
வாய்மை வாக்கின்
உற்றவிதி யினைப்புணர்ந்து புரிவித்துப் பூசனையை
யுவகை யுற்றே
பற்றறுக்கும் பராபரனே ! பசுபதியே ! யெனப்பகர்ந்து
பணிவார் பாவம்
அற்றிடவே சிவபுரத்தை யடைந்திருப்பர் பரகதியு
மவர்க்கே யாகும். (49)

---

513. புரிந்து - விரும்பி. பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு (திருக்குறள் 5). புனிதம் - பரிசுத்தமான. அங்கே தங்கும் தவராலும் என இயைக்க. புவி - உலக வாழ்வு. நவமான ஆன் நெய்யான் - புதுமையான பசுவினெய்யினால். புத்துருக்கு நெய் என்ப. மூன்றுமடி சிதைவு.

514. பூரணை - பௌர்ணமி. வாய்மை வாக்கின் விதி - ஆகம விதிகளால். பற்று - ஆசை. பசுபதி - ஆன்ம நாயகன்.

இவ்வியலின் பயனும், அடுத்த வியலின் தோற்றுவாயும்

515. ஆதரவா லிந்தவியல் கற்றுணர்ந்தே யரனன்பா
னன்பர்க் கன்பாற்
காதலுறக் கேட்பாருங் காரிசறவே சிவலோகங்
கலந்து வாழ்வர்
போதமிலா வொருவனிக னவனிந்தப் புரிதன்னை
வலஞ்செய் தேகால்
ஆதியருள் பெற்றமர ருலகடைந்தா னதுவுமினி
யறைகு வாமே. (50)

வேறு

516. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (51)

குலிசேசுரச் சருக்கம் முற்றும்.

---

515. அரன் அன்பான் அன்பர்க்கு அன்பால் - அரன்மாட்டு அன்புகொண்ட அன்பருக்கு அன்புடையவராய். காதல் உற - அன்பு பொருந்த. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' (திருஞான. பதிக. 217-1). போதம் - சிவஞானம். ஆதி - சிவ பெருமான்.

13. வணிக னூருரை வலம்வரு சருக்கம்

ஊமை வணிகன் ஊர் ஆவினை மேய்த்தல்

517. மன்னுபுகழ் மூரூரில் வசியர்குலத் தினிலொருவன்
வாக்கி லூமன்
இன்னலெனும் வறுமையுற விரங்கியினி யென்கொலென
வெண்ணி யேயங்
நன்னகரத் தாருடையா ரனுமதியான் மேய்த்தவர்க
ளாக்க டம்மைத்
தன்னுரிமைக் குடும்பத்தைத் தரிப்பனவ ருதவியது
தனூத்தான் கொண்டே. (1)

ஆவும் வணிகனும் அறியாமல் ஆருரை வலம் வருதல்

518. வனந்தன்னிற் புன்மலிந்த வயலினுமேய்த் தாவெல்லாம்
வருநா டன்னில்
தனியொருநாட் பூர்வதிசை புகச்செலுத்தி யாவெல்லா
மேய்க்கும் போதில்
இனந்தன்னைப் பிரிந்தோராத் தென்புலத்தி லிரைவேட்கை
யாலே யேக
மனந்தன்னிற் றளர்ந்ததனைக் காணுமை யாற்றென்பால்
வசியன் புக்கான். (2)

---

517. மன்னுபுகழ் - நிலைபெற்ற கீர்த்தி. வசியன் - வைசியன். ஊமன் - ஊமை. கொல் - அசை. உடையார் - பசுவுக்குரியார். ஆக்கள் தம்மை - பசுக்களை. தரிப்பன் - பாதுகாப்பவனுனன். உதவியது - கொடுத்த பொருளை.

518. வனந்தன்னில் - காட்டில். ஆவெல்லாம் மேய்த்து வருநாளில் என்க. பூர்வ திசை - கிழக்குத் திசையில். இரை வேட்கையால் - இரை தின்னும் விருப்பத்தினால்; பசியால். தளர்ந்து - சோர்ந்து.

ஆவும் வணிகனும் ஆரூரை வலம் வந்தது

519. அப்பாலே மேலவன மதுபுகச்சென் றருன்ரு னு
மாங்கு நீங்கி
அப்பாலே வடபுலம்புக் கப்பாலைப் பூர்வபுல
மடைந்த போது
தப்பாதே யதனதடிச் சுவடுதனைக் கண்டுசரித்த
ததனைக் கண்டான்
அப்போதூர் வலஞ்செய்தா னுயினனே வலஞ்செய்த
தாய தாவும். (3)

520. கண்டபசு வினையோட்டிக் கொடுசென்று காரிருளா
லுடையா னின்முன்
மண்டியுறச் செலுத்தியிவ னேவலினைப் பெற்றதன்
மனையிற் சார்ந்தான்
பண்டையினல் வினையாலே பகன்முழுதும் பட்டினியு
முற்ரு னங்காள்
எண்டிகழ்சித் திரைமாதத் தபரசதுர்த் தசிதானு
மிசையப் பெற்ருன். (4)

வணிகனும் ஆவும், மன்னனும் அமைச்சனுமாதல்

521. சென்றிடலுஞ் சிலநாளின் சிறைவிட்டுத் தெசானனல்தே
சத்தைச் சேர்ந்தே
ஒன்றுமுண ருதித்தானத் தேசத்த ரையன்பா
லுடன்விட் டாவு

---

519. அடிச்சுவடு - ஆவின் கால் பதிந்த இடம். பூர்வ புலம் - கிழ் புலம். சரித்தது - சஞ்சரிக்கின்றதனை. வணிகனும் ஆரூரை வலஞ் செய்தவனனன்; ஆவும் அவ்வூரை வலஞ் செய்த தாயிற்று என்று கோள்க.

520. காரிருளால் - கடுமையான இருட்டில்; உருபு மயக்கம். மண்டி உற - நெருக்கம் உற; உடையவனுக்கு அருகில். அபர சதுர்த்தசி - கிருஷ்ணபக்கச் சதுர்த்தசி. இசையப் பெற்ருன் - பொருந்தப் பெற்ருன்.

521. சிறை விட்டு - உடலாகிய சிறையை ஒழித்து. அரை யன்பால் உதித்தான் என்க. மன்ற - நிச்சயமாக. மன்ற அவ

மன்றவனுக் கமைச்சனென வத்தேசத் துதித்துமுன்
னறிவி னேடே
முன்றசையிற் றிருவாரூர்த் திருவெல்லை வலஞ்செய்த
சிறப்பி னாலே. (5)

அரசனும் அமைச்சனும் பண்டைய உணர்வோடு திருவாரூரை வலஞ்செய்து துதித்தல்

522. அறியாதே யரிதாய காலமுந்தென் னூரின்
விசிட்டந் தானும்
குறியாதே பலத்தினையும் வலஞ்செய்தே மப்புரியைக்
கூட்டை விட்டே
பிறியாத வறிவுட னும் பிறந்தேமே யென்றுதமிற்
பேசிக் கொண்டும்
மறவாத மனத்தினரா யிருவருந்தென் னூரின்
வாஞ்சை வைத்தே, (6)

523. அடைந்தார்கள் கடந்திடைநா டருமருந் தன்னமல
னூர்தன்னைப்
படிந்தாடித் தேவவர தீர்த்தத்திற் பரமனடி
பணிந்து போற்றிக்

னுக்கு என்பதில், அவனுக்கு என்பது முதற் குறைந்தது. முன் அறிவு - பூர்வ ஜன்ம உணர்ச்சி. முன் தசையில் - முன் காலத்தில்.

522. அரிதாய காலமும் அறியாதே - சித்திரை மாதத்து அபரசதுர்த்தசி என்ற அருமையான காலத்தையும் தெரிந்து கொள்ளாமல். விசிட்டம் - மேன்மை. பலத்தினையும் குறியாதே - அக்காலத்தில் ஆரூரை வலம் வருவதால் உண்டாம் பலனையும் தெரிந்து கொள்ளாமல். கூட்டை - உடம்பை.

523. அருமருந்தன் - கிடைத்தற் கருமையான அமுதம் போன்றவன். அமலன் - மலமற்றவன். வரம் - மேன்மை. தீர்த்தத்திற் படிந்து - தீர்த்தத்தில் முழுகி. உணவு, பேச்சு, காமம், கோபம் முதலானவற்றை நீக்கி என்க. கட்டுரை - பேச்சு. கதம் - கோபம். கடிதல் - நீக்குதல். படர்ந்து - சென்று. பாங்கால் - தகுந்த முறையால்.

கடிந்தூண்கட் டுரைகாமங் கதமுதலுங் கடவுளடி
கருத்துள் வைத்துப்
படர்ந்தேசித் திரையபர சதுர்த்தசியி னெல்லிவலம்
பாங்காற் செய்தார். (7)

524. வானவர்க ளியற்றியவன் மீகமிடங் கொண்டிருக்கும்
வரதன் றன்னை
ஞானமயன் றன்னைப்பாததானடலை ..... றுகத்து
ளுலொன் பான்மேன்
மானமயத் தனுபூதி வழங்குமரு மருந்துதனை
வணங்கிப் பாதம்
போனமெமக் கருள்புரிந்த போதகனே போற்றிசய
போற்றி போற்றி. (8)

வேறு

525. எனக்கு நீயிணை யாவா யேயென
வெதிர்த்த மாயனை டேடார் போதனும்
எனக்கு நீயிணை யாகாய் காணென
வெதிர்த்த போதிகல் வேரு யேயிட
கனத்த கூரெரி தானு யேவர
கதத்தொ டேகளி காய்வா னேசனுய்
தனத்த னுதன தானு தனவென
கதிக்கு மாடிடு தாளா னேசய. (9)

---

524. வரதன் - வரம் தருபவன். மான மயத்து அனுபூதி - பெருமையால் நிறைந்த பொருளைப் பிரமாணங்களைக் கொண்டு அறிந்த அறிவு. போனம் - உண்பதற்குரிய செல்வம். பூர்வ உணர்ச்சியால் - பூர்வத்தில் உணவின்றி வருந்திய தன்மையை நினைந்து. 'போனமெமக் கருள்புரிந்த போதகனே' என்றனர். இரண்டாமடி சிதைந்துளது.

525. திருமாலும் நான்முகனும் வாதிட, சிவபெருமான் அங்கு எரியாகத் தோன்றிய வரலாறு இங்கே கூறப்பட்டுள்ளது.

526. அரத்த வாய்மட வாரோ டாசையு
மறுத்த மாதவ ராளா னுமெமை
நிறுத்த நீறணி யரனே காவென
நிகழ்த்து வார்வினை நீரு யேயறத்
தருக்க ணுதித மோமா யாவலி
தடுத்து ளோயொளிர் தாளா னேசய
சனற்கு மாரனை யாள்வா னேசய
தபித்த வானவர் சார்பா னுய்சய. (10)

வேறு

527. என்றுதுதி செய்துபினும் பணிந்தெழுந்தே
றிருமுன் னேதாம் [யிறையமலன்
துன்றுமணிப் பூண்பட்டுச் சுகந்தமும்வைத்
சொன்றி தன்னைக் [தருள்பெற்றுச்
குன்றெனவே குவித்தருத்திக் குலமறையோர்
கொடுத்தே யிட்டஞ் [காதலர்க்குங்
சென்றனர்தம் புரிதன்னிற் சேனைவிதம் புடையடையச்
சிறப்பி னேடே. (11)

---

526. அரத்த வாய் - சிவந்த வாய். மடவாரோடு ஆசையும் - பெண்ணாசையையும். மாதவர் ஆளானும் எமை - பெருந் தவசிகளாகிய சிவனடியாருக்கு அடிமையாகிய எங்களை. நீறணி அரன் - நிருத்த அரன்; எனக் கொள்க. வினை நீருயே அற - வினைகள் முற்ற ஒழிய. தருக்கு - செருக்குடைய. அணுதிதமோ மாயா வலி தடுத்துளோய் - அணுதியாகிய தமோ குணமாகிய மாயையின் வலிமையை ஒழித்துள்ளவனே. ஒளிர் தாளானே - ஞான ஒளியையுடைய பாதத்தை யுடையவனே. தாளைச் சிந்திப்பாரது அக விருள் கெடுதலான் அங்ஙனம் கூறினர் என்று கொள்க. தபித்த - வருந்திய. சார்பு - துணை.

527. துன்று - நெருங்கிய. மணிப்பூண் - இரத்னபரணம். பட்டு - பட்டாடை. சுகந்தம் - வாசனைப்பொருள். சொன்றி - சோறு; திசைச்சொல். காதலர்க்கும் - அன்பராகிய சிவனடியார்க்கும். இட்டம் கொடுத்து - அவரவர் விரும்பும் அளவில் கொடுத்து. சேனை விதம் - நால்வகைச் சேனைகள்.

ஆண்டுதொறும் வந்து அவர்கள் பூரித்தல்

528. ஆண்டுதொறுந் தவருதே யடைந்தாரூர் வலஞ்செய்யு
மவர்க டாமோர்
ஆண்டடைந்து திருவாரூ ரகமகிழத் திகழ்தேவ
தீர்த்தத் தாடிப்
பூண்டவிருப் பொடுபணிந்து புற்றிடங்கொண் டிருக்குமரு
மருந்தன் பொற்றாள்
வேண்டவெவர் களுமெல்லை விதிமுறையான்
மீண்ட போதில், [வலஞ்செய்து

அவர்கள் முனிவர்களைப் பணிந்து புராணவிதம் கேட்டல்

529. அணைந்தாரூர் தனிலிருந்த யாஞ்ஞவற்கர் முதலரிய
தவரைக் கண்டார்
பணிந்தாரப் பண்டிதர்தம் பதமலரி னவர்தாமும்
பரிவு கூர்ந்தே
குணஞ்சாத்து விதமிவர்கட் கென்றறிந்து மங்கலங்கள்
கூறி னார்கள்
எணந்தானு முருகியிட விருவர்க்கும் புராணவித
மியம்பி னாரே. (13)

அரசனை முனிவர் வினவுதல்

530. பரிவுறவே புராணவிதந் தனைக்கேட்ட புரவலன்மெய்ப்
புளக மெய்த
அருவிபொழி தரவிழிக ளானந்த முற்றிருந்தா
னவனைப் பார்த்தே

---

528. எவர்களும் வேண்ட - யாவரும் விரும்ப. எல்லை - ஆரூர் எல்லையை.

529. பண்டிதர் - வித்துவான்கள். பரிவு - அன்பு. சாத்து விதம் - முக்குணங்களுளொன்று. எணம் - எண்ணம் (மனம்). இருவர்க்கும் - அரசனுக்கும் அமைச்சனுக்கும்.

530. புளகம் - மயிர்சிலிர்ப்பு. அருவிபொழிதர - ஆனந்தக் கண்ணீர் அருவியாயொழுக. வர முனிவர் - சிறந்த முனிவர். விரவிய - கலந்த.

வரமுனிவ ரெல்லோரும் வாழ்த்தினர்க ளவன்முனும்
வணங்கி நின்முன்
விரவியவின் னருளாலே யவரவனை முகநோக்கி
வினவ லுற்றார். (11)

531. சிந்தித்த பலன்செய்யுஞ் சிவலிங்க வித்தீர்த்த
விதமும் பார்த்தார்க்
கந்தத்தே சத்தினுமுண் டாதரவை யவற்றினெழித்
தமைச்ச னேடும்
இந்தத்தே சத்தினில்வந் தாண்டுதொறு மிவ்வாரூ
ரெல்லை தன்னை
வந்தித்தே வலஞ்செய்யுங் காரணமென் பகரெமக்கு
மன்ன வென்றார். (15)

மன்னவன் முற்செயலனைத்தும் மதித்துச் சொன்னது

532. மன்னவனு மப்பொழுது நாணுறமுற் செயலனைத்து
மதித்துச் சொன்னன்
அன்னவிதந் தனைக்கேட்டே யருமுனிவ ரதிசயமுற்
றூர்வங் கூர்ந்தே
இன்னகரை வலஞ்செய்வேம் யாமுமென
செய்தா ரூரைப் [வெண்ணிவலஞ்
பன்னரிய சித்திவிதம் பரமசிவ னருளாலே
பற்றி னாரே. (16)

---

531. சிவலிங்கமும் தீர்த்தமும் பிற நாடுகளிலுமுண்டே! இங்கு வருதற்குக் காரணம் என்னவென்று அரசனை முனிவர் வினவினர் என்க. அவற்றின் ஆதரவை ஒழித்து என இயைக்க.

532. நாணுற்றது, தான் ஊமையையும் இடையனையும் இருந்தமை நினைத்து. முற்செயல் - முன் வணிகனையிருந்த வரலாறு. இன்னகரை - இங்ஙகர் என்பது எதுகை நோக்கித் திரிந்தது, இனிய நகர் என்றுமாம்.

மன்னவனு மந்திரியும் சுவர்க்கமடைந்தது

533. ஈசனரு ளேவலினு லாங்குமல ரிரதந்தாளி
ரண்டுந் தோன்றத்
தேசுடைய விமானத்தின் மன்னவனு மந்திரியுஞ்
செறிந்து சேர்ந்தார்
வாசமலி மலர்பொழிய மதர்விழியார் புடையடைய
வானந் தன்னில்
ஆசுடலற் புதவுடல மானதுசெம் பருங்கனக
மாலைப் போலே. (17)

வணிகன் வானுலகடைந்த காரணத்தைச் சூத முனிவர் கூறுதல்

534. என்றியம்பச் சூதமுனி யிருக்குமறை முனிவரெலா
மெண்ண மில்லான்
அன்றெருநா ளாதரவுஞ் சுசியுமிலா னூரை
வலஞ்செய் தேதான்
பொன்றியறி வுடன்பிறந்து புரிந்தாரூர் வலஞ்செய்து
புகுந்தான் வானும்
என்றிதிசை யாதெனலுஞ் சூதமுனி காரணமுண்
டின்னை மென்றான். (18)

---

533. அருள் ஏவலினால் - அருளிய ஏவலினால், அல்லது அருளாகிய ஏவலினால். மலர் இரதம் புஷ்பத் தேர். தேசு - அழகு. மலர் பொழிய - தேவர்கள் மலர் மாரி பெய்ய. மதர் விழியார் - தேவ மாதர்கள். புடை அடைய - இருபக்கமும் சூழ்ந்து அவர்கட்குரிய பணிகளை ஆற்ற. செம்பு அருங்கனகம் ஆனைப்போல், ஆசுடல்; அற்புத உடலமானது என்க. இவ்வுவமை பாராட்டத் தக்கது.

534. இருக்கு மறை - ரிக் முதலியாகிய வேதங்கள். எண்ணமிலான் - அறிவு பெருத வணிகன்; திருவாரூரை வலம் செய்தால் பயன் உண்டு என்ற எண்ணமில்லாமல் வலம் வந்தவன் என்பதாம். ஆதரவும் சுசியும் இலான் - உள்ளத்தில் அன்பும் உடலில் சுத்தமும் இல்லாதவனாய். அறிவுடன் - பூர்வ ஞானத்துடன்.

ஆடகேசுர லிங்கம்

535. பண்டுண்டி வானவர்கள் பண்ணியபுற் றிடங்கொண்ட
பகவன் றென்பால்
தண்டுரைந் தினுக்கப்பாற் றிகழ்பாதா ளாலயமே
யென்னுங் கோயில்
உண்டாட கேசுரனப் பாதாளத் திலிங்கமய
மாகி யோங்கும்
கண்டேதா னறிவாரார் காண்பார்க ளயன்முதலோர்
காதல் செய்தே. (19)

வணிகன் பேறுபெற்றதற்குக் காரணம்

536. சித்திரைமா தத்தபர சதுர்த்தசியின் மாலயனுந்
தேவர் தாமும்
பத்தியினு லாரூரிற் பாதாளத் தாடகநா
யகன்பொற் பாதம்
சத்தியவா சகவிதியா லருச்சித்துத் தாம்விரும்பும்
பலத்தைச் சார்வார்
அத்திதியின் வலஞ்செய்தப் பலமடைந்தா னென்றறிமி
னூர் வட்டம். (20)

---

535. பண்டு - முன்னுள். உண்டி - வானவர்கள் கூடி. ஈரைந்து தண்டு - பத்துக்கோல். தண்டு, நான்கு முழம் கொண்ட நீட்ட லளவை. அதனைக்கொண்ட கோல் என்க. ஆடகேசுரன் - பாதாளாலயத்தில் இலிங்கமயமாயிருக்கும் சிவபிரான். பாதாளா லயம் என்ற கோயிலில் ஆடகேசுரர் லிங்கமயமாய் விளங்குகிறார் என்க.

536 ஆடகநாயகன் - ஆடகேசுரன். சத்தியவாசகம் - ஆக மம். பலம் - பயன். சார்வார் - பெயர். ஆரூர் வட்டம் அத்திதி யில் வலம் செய்து இவன் அப்பலன் அடைந்தான் என்க.

வலம் வருதலின் சிறப்பு

537. படிந்தெழுந்து திகழ்தேவ தீர்த்தத்திற் பரமனடி
பணிந்து போற்றிக்
கடிந்துணல்வாக் காசைமதங் கதத்தினையும் வெண்கலிங்க
மதனைக் கட்டி
நடந்துநிலத் தூர்வனவு நசியாதே யிந்நாளி
லாரூ ரெல்லை
படர்ந்துவலம் புரிந்தார்கள் பற்றிடுவ ரிட்டவரம்
பரம னன்பால். (21)

ஆடகேசுரத்தின் பெருமைகள்

538. இம்மைதனிற் பலன்றனையு மெண்ணுதே யுடலினையு
மிகழ்ந்து வாய்க்கும்
அம்மைதனிற் பலன்றனையு மாதரவு செய்யாதே
யமலன் பாதம்
தம்முளத்தி லர்த்தித்த பலமிந்நாள் வலஞ்செய்யுந்
தகுதி யார்தாம்
மும்மலமு மற்றிடுவர் பெற்றிடுவர் முத்தனடி
முளையா ரென்றும். (22)

---

537. உணல், வாக்கு, ஆசை, மதம், கதத்தினையும் கடிந்து என்றியைக்க; 523 செய்யுளையும் காண்க. வெண்கலிங்கம் - வெள்ளையாடை. நிலத்து ஊர்வனவும் நசியாதே ஆரூர் எல்லை நடந்து படர்ந்து வலம்புரிந்தார்கள் என்று இயைக்க. நடக்குங் கால் ஊர்ந்து செல்லும் எறும்பு முதலிய உயிர்கட்கு வருத்தம் உண்டாகாமல் நடத்தல் அறிஞர்கள் இயல்பு. இதனைக் குசேலோ பாக்கியானம், தங்நகர்ப்புறமடைந்தவத்தியாயம் 30ஆம் செய்யுளிற் காண்க. பற்றிடுவர் - தமக்குரியதாகப் பெறுவர் என்றபடி. இட்டவரம் பற்றிடுவர் என்க.

538. இம்மைதனில் - இப்பிறவியில். எண்ணுதே - நினையாமல். அம்மைதனில் - மறுமையில். ஆதரவு செய்யாதே - விரும்பாமல். அர்த்தித்து - விரும்பி. இந்நாள் என்றது, சித்திரைக் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி நாள். மும்மலம் - ஆணவம், கன்மம், மாயை. என்றும் முளையார் - என்றும் பிறவாராவர்.

539. இயம்பியவிக் காலத்தி லியன்றதுதா னேதேனு
மறையோற் கியில்
வயம்பெறவே மதியிரவி யுள்ளளவு நின்றுபலம்
வாய்க்கச் செய்யும்
பயந்துபரி வுடனருத்திற் பிதிர்கடமைக் குறித்துப்பா
யானந் தன்னை
வியந்தகயா தீர்த்தத்திற் சிரார்த்தத்தைச் செய்தபலன்
மேவு வார்தாம். (23)

இவ்வியலைப் படித்தாரடையும் பயனும், அடுத்த சருக்கத்தின் பொருளும்

540. படித்தாருங் கேட்டாரும் பாங்குறவே யிவ்வியலைப்
பாவ மெல்லாம்
விடுத்தேதா மிருப்பார்கள் விமலனது சிவபுரத்து
விருப்ப முற்றே
அடுத்தாடு மவரவல மறுத்தமர ருலகத்தி
னவரை யாக்கும்
திடத்தீரந் திகழ்தேவ தீர்த்தத்தின் சிறப்புமிகைச்
செப்பு வாமே. (24)

---

539. ஏதேனும் - எந்தப் பொருளேயேனும். வயம் பெற - வெற்றியுண்டாமாறு. நின்று - நிலைபெற நின்று என்பதாம். பாயானம் - பாதேயம்; வழி உணவு; இங்குப் பிண்டத்தைக் குறித்தது. கயா, வடநாட்டில் உள்ளது; அங்குச் செய்யப்பெறும் சிராத்தம் பல தலைமுறைகளுக்குப் பிதுர்க்களைக் கரையேற்றும் என்பர்.

540. அடுத்து - மேன்மேலும். ஆடும் - மூழ்கும். அவலம் - பிறவித் துன்பம். ஆக்கும் - புனிதராக்கிச் செலுத்தும். திடத் தீரம் - உறுதியான கரையையுடைய.

வேறு

541. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (25)

வணிகனூரை வலம்வரு சருக்க முற்றும்

---

14. தேவதீர்த்தச் சருக்கம்

தீர்த்தத்தின் அமைப்பும் சிறப்பும்

542. வியந்திடும் பலன்க டம்மை விளைத்திடும்
விசிட்ட தீர்த்தக்
கயம்பல வுண்டா ருருள் ளவற்றுளு
மொன்று கங்கை
தியம்பக னேவ லாலே சேர்ந்துறுந்
தேவ தீர்த்தம்
துயங்கினர் துரிசு தீர்க்குந் தொடின்துதி
சூரரு மாக்கும். (1)

543. அண்டர்க ளியற்றும் புற்றி னவர்துய
ரறுக்கக் கோலம்
கொண்டவன் கோயின் மேல்பால் .....
குணகுட நீடும்

---

542. விசிட்ட தீர்த்தம் - மேன்மையான தீர்த்தங்கள். கயம் - குளங்கள், தீர்த்தமாகிய குளம் என்க. தியம்பகன் - மூன்று கண்களையுடைய சிவபெருமான். திரியம்பகன் என்னும் வட மொழிச் சிதைவு. துயங்கினர் - சேர்ந்தவர்கள், 'இரணியன் துயங்கி நின்றான்' (வர.த. பாகவத. நாரசிங்க. 28) துரிசு - பாவம். தொடின், தீர்க்கும் ஆக்கும் என்றியைக்க.

543. கோலங்கொண்டவன் - வன்மீகநாதன். நீடும் - நீண்டிருக்கும். தண்டு - 535 ஆம் பாடற் குறிப்பைப் பார்க்க. அக்

தண்டுநாற் பதுமீ ரைந்தும் தெற்கொடு
வடக்கு மேற்கும்
எண்டிக ழேழே ழொன்றுண் டுடைகுண
கரைக்கு மென்னில், (2)

544. அத்தடந் தன்னில் மூழ்கி லருந்துயர்ப் பாவ மற்றே
வித்தக ராயிஞரை யெண்ணியார் விளம்ப வல்லார்
சுத்தரா னவர்க டம்முட் சிலர்தமைத் தொகுத்துச்
[சொல்வாம்
நித்தனி நிமலன் றன்னைத் திருவடி நினைந்து நெஞ்சுள்.

திரிசங்குவின் பெருமை

545. பருதிதன் மரபின் வந்த பார்த்திபன் பரம சூரன்
பெருகிய சீர்த்தி பெற்றுன் பெயர்திரி சங்கு வென்ப
உருகியே வசிட்ட ஞைதக் கேட்டுளா னுபதே சத்தைத்
தருமநா டோறுஞ் செய்வான் சமைத்தனன் யாக
[மெல்லாம். (4)

குளம் நாற்புறமும் ஐம்பது கோல் நீளங்கொண்ட சதுரமாகும் என்று கூறப்பெற்றது.

544. வித்தகராயிஞரை எண்ணி விளம்ப வல்லார் யார் என்க. சுத்தரானவர் - அகமும் புறமும தூயராகியவர்கள். தொகுத்து - சுருக்கி. நித்தன் - அழியாதவன். திருவடி நெஞ்சுள் நினைந்து சொல்வாம் என்க.

545. பருதிதன் மரபு - சூரிய குலம். பார்த்திபன் - அரசன். பரமசூரன் - மேன்மையான வீரன். சீர்த்தி - மிகுபுகழ். (தொல். சொல். உரி. சூ. 16) வசிட்டன் உபதேசத்தை ஓதக் கேட்டுளான் என்றியைக்க; வசிட்ட முனிவனைக் குருவாகக் கொண்டவன் என்பதாம். சமைத்தனன் - செய்தான்.

திரிசங்கு ஆக்கையோடு தான் சுரருலகு அடையவேண்டி குருவிடம் விண்ணப்பித்தல்

546. குரவனை வசிட்டன் றன்னைக் குறுகினன் றனித்துத்
[தான்போய்
பரவினன் பணிந்து பாதம் பண்ணினன் விதியி னுலே
வரமுறு மகத்தின் பேத மற்றெரு குறையு மில்லேன்
சுரருல கெடுத்த வாக்கை யொடும்புகுஞ் சுகிர்தஞ்
[சொல்லாய். (5)

வசிட்டர் மறுத்தல்

547. என்றியம் பியசொற் கேட்டே யிருக்குமா முனிவன்
[ருனும்
நன்றென நகைத்து நீதா னுடிய பலத்தை நல்க
ஒன்றிடும் வினைதா னென்று மிலையென வுரைத்தா
[னிப்போ
தென்றனக் கிட்ட மான பலமியற் றிடமாட் டாயேல்.

திரிசங்கு மற்றெரு குரவரை நாடக் கருதுதல்

548. மற்றெரு குரவன் றன்னை மதித்தடைந் தவன்ற னுலே
பற்றுவ னிட்ட மான பலத்தினை யென்ன மன்னன்

---

546. குரவனை - குல குருவை. பாதம் பணிந்து பரவினன் - திருவடியை வணங்கித் துதித்தான். விதியினுல் - முறைப்படி. வரம் - மேன்மை. மகத்தின் பேதம் - பலவகை யாகங்களை. மகத்தின் பேதம் விதியினுலே பண்ணினன் என்க. சுரர் உலகு - தேவருலகம். எடுத்த ஆக்கை - புண்ணியத்தின் பயனுய் எடுத்த உடல். சுகிர்தம் - நன்மை.

547. இயம்பிய - சொன்ன. மாமுனிவன் - மகா முனிவராகிய வசிட்டர். நாடிய - விரும்பிய. பலத்தை - பலனை. ஒன்றிடும் வினை - பொருந்திய நல்வினை. நீ விரும்பிய பயனைத் தரும் வினை ஒன்றுமில்லை என்றனன் என்க. 'இப்போது.....மாட்டேயேல்' என்றது திரிசங்குவின் மாற்றம்.

548. மதித்து - ஆராய்ந்து. பற்றுவன் - அடைவேன். நீ நவின்ற வார்த்தை நன்று. நன்று - குறிப்புச் சொல்; ஏகாரம் கெட்டு நின்றது. உன் இட்டம் பெற்றிடு.

நற்றவ வசிட்டன் ருனு நன்றுநீ நவின்ற வார்த்தை
பெற்றிடுன் னிட்ட மற்றேர் குரவனைப் பெற்றே
யென்ருன். (7)

மாதவன் மைந்தரும் நிந்தைசெய்து சபித்தல்

549. மன்னவன் வணங்கி யந்த மாதவன் மலர்த்தா ணீங்கி
அன்னவன் முனிதன் மைந்தர் நூற்று வரவர்தாள்
[போற்றிச்
சொன்னதுங் குரவன் ருன்முன் சொன்னதுஞ்
[சொல்லக் கேட்டே
நின்னிலை நன்றே யென்றே யவர்களு நிந்தை செய்தே,

550. இதமுனக் கென்றுஞ் செய்யுங் குரவனை யிகழ்ந்தா யின்று
பதிதனு மானுய் நீதான் பாதக னுகை யாலே
அதமமே புரியும் பொல்லாப் புலையனே யாக வென்று
கதமுறச் சபித்தார் மன்னன் கடையனு யினனப்
[போதே. (9)

அரசன் சாபம் உற்ற கோலம்

551. ஆக்கையிற் கருமை யுற்ரு னவயவத் தழகு மற்ருன்
மூக்கினுஞ் சுளிய யாரு முடையுடன் முழுதும் பெற்ருன்
நாக்கினில் நயமு மற்ருன் ஞமலியால் நலியப் பட்டான்
பார்க்குநர் பழிக்கப் பார்மே னடந்தனன் பதத்தி னுலே.

---

549. மலர்த்தாள் நீங்கி - மலர் போன்ற திருவடிகளைத் தொழுதுகொண்டிருந்த மன்னன் அதை விட்டு நீங்கி என்பதாம். சொன்னதும் - தான் சொன்னதும். முன் சொன்னது. 'ஒன்றிய வினைதானென்றும் இலை' என்பது. நன்றே - இழிவுக் குறிப்பு. நிந்தை செய்து - பழித்து.

550. இதம் - (ஹிதம்) நன்மை. பதிதனும் - விலக்கப்பட்டவனும். அதமம் - இழிவு. ஏ - பிரிநிலை. கதம் - கோபம்.

551. கருமை - கருநிறம். மூக்கினும் சுளிய - மூக்கு சுளித்து வெறுக்கும்படியாக. முடை - புலால் நாற்றம். நயமும் அற்ருன் - இன்சொற் கூறுதல் ஒழிந்து கடுகடுத்தலும் அருவருக்கத் தக்கன

மன்னன் வருந்தியது

552. நீக்கிட வல்லே னல்லே னகிலே னீசத் தன்மை
தீக்குழி வீழ்வே னன்றித் திரைபொரு கடலி னுழ்வேன்
வாக்கினை னஞ்சு தன்னை மாந்தியும் மரிப்ப லென்றே
யாக்கையை வெறுத்துத் துன்பக் கடலினி லழுந்தி
[னனே. (11)

553. இவ்வுரு வத்தைக் காணி லிடுகிடை யாரென் னுவர்
இவ்வுரு வத்தைக் காணி லெனக்கினி யாரென் னுவர்
இவ்வுரு வத்தைக் காணி லமைச்சரு மெங்ங னுய்வார்
இவ்வுரு வத்தைக் காணில் புதல்வரு முய்வா ரெங்ஙன்.

554. ஒன்னலர் கேட்டே யென்னை வுகப்புற நகையுஞ் செய்ய
என்னினிச் செய்வா மென்றே யிரங்கின னின்ன
[லுற்றுத்
துன்னிடுந் துணையு மின்றித் துய்த்திடும் பயனு மின்றித்
தன்னது புரியைச் சார்ந்தா னிசிதனிற் றளர்ந்து தானே.

வுமான சொற்களே யுடையனனன். ஞமலியால் - நாய்களால். நலியப்படுதல், அவை சூழ்ந்துகொண்டு குரைத்தல், கடித்தல் முதலிய வற்றால். பார்க்குநர் - காண்போர். பதத்தினாலே - கால்களாலே.

552. நீசத்தன்மையைப் போக்கிக்கொள்ளும் வன்மை இல்லாதவனையினேன். திரைபொரு - அலைகள் மோதுகின்ற. வாக்கினால் - வாயினால். மரிப்பல் - இறப்பேன். துன்பக் கடலினி லழுந்தினன் - முடிவு இல்லாத் துன்பத்துள் அழுந்தி வருந்தினன் என்பதாம். சாபம் பெற்ற மன்னன், தீயாலும், கடலாலும், நஞ்சாலும் இறக்கத் துணிந்தான் என்பதாம். மாந்தியும் - உண்டும்.

553. இடுகு இடையார் - சிறிய இடையினையுடைய மாதர். எனக்கு இனியர் - என்மேல் அன்புடையவர்கள். உய்வார் - வாழ்வார். என் ஆவர் - எவ்வாறு அமைவர். இவ்வுரு என்றது பொருளால் ஒத்து மீண்டும் மீண்டும் வந்ததால் இது சொற் பொருட் பின் வருநிலையணி யென்ப.

554. ஒன்னலர் - பகைவர்கள். உகப்புற - தம் உள்ளத்தில் மகிழ்ச்சி தோன்ற. இன்னல் - துன்பம். துன்னிடும் - நெருங்கு

அமைச்சர் வருந்துதல்

555. ஏவின னமைச்சர் பாலு மெதிர்வரு மொருவன் றன்னைக்
காவலன் வரவு கேட்டே யவர்களுங் கடிது சேர்ந்தார்
நோவினை யவர்கட் கெல்லா நுவன்றன னுவலக்
[கேட்டே
பாவிக ளானே மென்றே பருவர லவரு முற்றார். (14)

தீர்சங்கு மந்திரிக்குச் செப்பும் கட்டளை

556. தேடுவ னெனக்கு வந்த தீங்கினைத் தீர்ப்பான் றன்னைக்
கூடுவ னவனு லிந்தக் குற்றமுந் தீர்வேன் குன்றி
வாடன்மி னினிநீ ரிப்போ மைந்தருள் வரமுள் ளானை
நீடிய வுலகங் காக்க நிறுவுமின் முறையா னென்றான்.

மைந்தர்கள் வருத்தம்

557. உன்னையே யின்றி யாங்க ளொருபொழு
தேனுந் தங்கோம்
நின்னுடன் வருவோ மென்று மைந்தரு
நிகழ்த்தக் கேட்டே

கின்ற. துய்த்திடும் பயன் - உண்ணல் உடுத்தல் முதலியவை. நிசிதனில் - இரவில். தானே - தான்மட்டில் தனித்து. ஏ - பிரிநிலை.

555. எதிர் வரும் ஒருவன் தன்னை அமைச்சர்பாலும் ஏவினன் என்க. அமைச்சரிடம் சென்று தன் வருகையை அறிவிக்கும்படி எதிரில் வரும் ஒருவனுக்குக் கட்டளை யிட்டனன் என்பதாம். கடிது - விரைவில். நோவினை - தனக்குண்டான துன்பத்தை. நுவன்றனன் - சொன்னன். பருவரல் - துன்பம்.

556. தீர்ப்பான்றன்னைக் கூடுவன் தேடுவன் எனவியைக்க. கூடுவன் - முற்றெச்சம். அடைபவனுய்த் தேடுவேனுவேன் எனக் கொள்க. குன்றி - மனம் குன்றி. வாடன்மின் - வருந்தாதீர்; வரம் உள்ளானை - அரசுபுரிதற்கேற்ற மேன்மைக் குணமுள்ளவனை. மைந்தர் என்றதனால் அத்தகைய வன்மையுடையர் பலர் ஆயினும் அவருள்ளும் வரமுள்ளானை என்றான் என்று கொள்க.

557. ஒருபொழுதேனும்-ஒரு சிறுபொழுதும் (இமைநேரமும்). தங்கோம் - நீண்டுத் தங்கமாட்டோம். நிகழ்த்த - சொல்ல. இலங்கி ஏல் - உடல் பண்டை நிறம் பெற்று ஏற்பாயாக; இவ்வாறு

என்னைநீர் வேண்டு வீரே லிலங்கியே
லெனச்சொல் கென்று
பன்னின னவரெல் லாரும் பயந்தடி
பணிந்து நின்றார். (16)

வேறு

அரிச்சந்தீரன் முடிசூட்டப்பெற்று அரசு புரிதல்

558. மந்திரிகண் மைந்தர்களு மன்னனு மதிபெற்றே
நொந்துளத்தின் மீண்டார்க ணேக்கியரிச் சந்திரனே
முந்தினைநீ மைந்தருக்குள் முடியுனக்கே தகுமென்று
மந்திரிக ளவன்றனக்கு முடிகவித்தார் மறைமுறையால்.

559. மன்னுமனு முறைநிறுவி மண்டலத்தைத் தனைமதியா
ஒன்னலரைப் பொருதொறுத்தே யுலகமெலா முவகையுற
அன்னையென வத்தனென வருள்புரிந்து தாளுளந்
தன்னையுந்தா னேயுதவுந் தருமியரிச் சந்திரனே. (18)

சொல்க என்றான் என்க. பன்னினன் - சொன்னன். பயந்து - அஞ்சி.

558. நொந்து உளத்தின் - உளத்தின் நொந்து; மனம் வருந்தி. முந்தினை - முற்பட்டவனையுள்ளாய். மைந்தர்க்குள் நீ மூத்தவன் என்க. முடி - கிரீடம். கவித்தார் - சூட்டினர். மறை முறையால் - வேதவிதிப்படி.

559. மன்னு - நிலைபேறுள. மனு முறை - மனுவின் நீதி. மண்டலத்தை மனுமுறை நிறுவி - நில உலகத்தை மனு நீதி கொண்டு ஆண்டு. ஒன்னலரை - பகைவர்களை. பொருது ஒறுத்து - போர் செய்து வென்று அவர்களைத் தண்டித்து. உவகை - மகிழ்ச்சி. அன்னையென உவகையுற அத்தனென அருள் புரிந்து எனவியைக்க. அத்தன் - தந்தை. தானே தன்னை யுதவும் தருமி என்றது, பின்னை விசுவாமித்திர முனிவர் கடனுக் காகக் காசி சென்று தானும் வெட்டியானுக்கு விலையான்தை நினைப்பூட்டுகின்றது. தருமி - தருமமுடையவன்.

தீர்சங்கு தீருமறைக்காடடைதல்

560. புரவலனு மயோத்தியெனும் புரிநீங்கி யென்புலையை
விரையவொழித் திடுமிருடி விசுவாமித் திரனென்றே
கருதிவழி யிடைநாடுங் கானகமுங் கடந்தொல்லைத்
திரைபொருகண் கடலடையிற் றிருமறைக்காட்
[டினைச்சேர்ந்தான். (19)

முனிவர் உறைவிடத்தை அரசன் அறிதல்

561. தீர்ந்துபகை யினைநகுலந் திரியுமர வுடன்புலியும்
தீர்ந்துபகை யினைமானி லெடுந்திரியுஞ் சிங்கமுந்தான்
தீர்ந்துபகை யினைத்திரியுஞ் சிந்துரத்தி லெடுமிவ்வா
றோர்ந்தரைய னிதுமுனிவ னுறையுமிட
[மெனவுணர்ந்தான். (20)

அரசன் முனிவரைக் காணல்

562. தங்கியிடப் பசிதண்ணீர்த் தபனமுமுள்
[ளுறத்தளர்ந்தான்
பொங்குபுனற் றடங்கண்டான் பருகினனப்
[பொய்கையினீர்
மங்கலமா முனிவனது திருவெல்லை மருங்கணைந்தான்
அங்கவனைத் தூரத்திற் கண்டுபணிந் தன்புற்றான். (21)

---

560. புரவலன் - திரிசங்கு. இருடி - ரிஷி; வடமொழித்திரிபு. கண்கடல் அடையின் - இடமாகிய கடற்கரையின் கண்ணுள்ள; திருமறைக்காடு - வேதாரணியம். திரைபொரு கடலடையின்கண என்க.

561. நகுலம் - கீரி. சிந்துரத்தினெடு - யானையொடு. ஓர்ந்து - ஆராய்ந்து. நகுலமும் - அரவும், புலியும், மானும், சிங்கமுமாகிய சிந்துரமும் பகைதீர்ந்து திரியும் இடத்தைக்கண்டு இதுவே முனிவர் உறைவிடமாம் என்று அரசன் உணர்ந்தான் என்க.

562. பசி தங்கியிட, தண்ணீர்க்குத் தபனமும் உளளுற என்க. தபனம் - எரிச்சல்; விடாய். எல்லை - இடம்.

அரசன் முனிவர்க்குத் தன்னை அறிவித்துக் கொண்டமை

563. புனிதருறு மாசிரமந் தனியொத்தான் புலியனென
முனிதலுமே புடையடைந்தான் முனிகணங்க
[ளெனைக்கேண்மின்
மனுகுலத்துத் திரிசங்கு வெசிட்டமுனி மைந்தர்கடாம்
எனைமுனிந்து சபித்தார்க ளவிதாழிக்க
[வீண்டனைந்தேன். (22)

தான் சாபம்பெற்ற வரலாற்றை அரசன் முனிவர்க்குரைத்தல்

564. என்றியம்பக் கேட்டிரங்கிக் கவுசிகனு மிரவிகுலத்
தொன்றினனே யுனைச்சபித்த காரணமென்
[னுரையெனலும்
என்றனைத்தா னெடுத்தவுட லொடுசொர்க்கந் தனிலிருத்து
நன்றிவினை யெனக்குரவி லென்றுவசிட்
[டனைவின்றேன். (23)

565. ஆக்கையுட னமருலகத் திருத்துமருந் தவமிலைகாண்
ஆக்கையினை விட்டகடையு மருந்தவமுண்
[டெனவறைந்தான்
ஆக்கையினை நீங்காதே யமருலகத் திருத்தாயெல்
ஆக்கையுட னடைவிப்பா னடியடைவே
[னெனவறைந்தேன். (24)

---

563. புலியன் ஒத்தான் என என்றியைக்க. முனிதலும் - கோபித்தலும். புடை - பக்கம். கணம் - கூட்டம். சண்டு - இங்கு. 'புலியன் தனியொத்தான் புனிதமுறும் மாசிரமம் புடையடைந்தான் என முனிதலுமே' என இயைக்க.

564. கவுசிகன் - விசுவாமித்திரன். இரவிகுலத்து ஒன்றினனே - சூரிய குலத்துள் அமைந்தவனே.

565. அறைதல் - கூறல். அடைவிப்பான் - பிறவினை.

566. எடுத்தவுட லொடுநின்னை விண்ணிருத்து மினியானை
அடிக்கமலம் பணிந்தவனு லப்பலத்தை யடைந்திடுநீ
நடக்கவிரைந் தென்றென்னை நவின்றிடலு நானுமவன்
அடிக்கமல மலர்ப்பாதம் பணிந்தெழுந்து கரங்குவித்தே.

567. பெற்றவன்ற னனுமதியைப் பிரிந்தந்த வெல்லையினை
உற்றனர்க ளந்தமுனிக் கொருநூறு புதல்வரவர்
பற்றியவா சிரமத்திற் படர்ந்தவர்தம் பதம்பணிந்து
சொற்றலுமே யென்குறிப்பை யவருமெனைத்
[தூடணித்தார். (26)

568. உற்றகுர வனைநீக்கி யுறுதிவரந் தனைவேண்டி
மற்றையொரு தேசிகனை வாஞ்சித்தாய் மன்னவனே
பற்றுகநீ புலியனெ னும் பாவவுரு வெனப்பகர்ந்தார்
பெற்றனனே யவராலே யானிந்தப் பிழையென்றான்.

தீர்சங்கு விசுவாமித்தீரரை வணங்கிக் கேட்டல்

569. உற்றபுலி யினைநீக்கி யுறுதிவர முனதருளால்
பற்றுவலென் றெனிவந்து பாதமல ரினையடைந்தேன்
மற்றெனக்கோர் துணையுமில்லை மறுமைக்கு மிம்மைக்கும்
உற்றதுணை நீதானே யெனமன்ன னுரைத்தலுமே. (28)

முனிவர் புண்ணிய தீர்த்தங்களில் ஆடச் சொல்லுதல்

570. முனிவனுமஞ் சேலஞ்சே லெனமொழிந்து முகமலர்ந்துன்
துனிதொலையு மாடுநர்க்குத் துரிசுவினை யினைத்துடைக்கும்

---

566. விரைந்து நடக்க, என இயைக்க. கரங்குவித்து - கும்பிட்டு.

567. தூடணித்தல் - திட்டுதல்.

568. இச் செய்யுளின் முதன் மூன்றடி வசிட்ட முனிவர் புத்திரர்களின் கூற்று. தேசிகன் - குரு.

569. பற்றுவல் - அடைவேன்.

570. துனி - துன்பம். ஆடுநர் - முழுகுவார். துரிசுவினை - தீவினை ; பாவம். அனுசயம் அற்று - பச்சாத்தாபத்தை விடுத்து.

புனிதமுறுந் தீர்த்தங்கள் பூதலத்தி லுண்டுபல
அனுசயமற் றவைதனிற்சென் முடுகவென்
[றறைதலுமே. (29)

அரசன் நன்மை பெருமல் மறுபடியும் முனிவரை வந்து காணல்

571. அருமுனிவ னனுமதிபெற் றகன்றவனி தலத்துள்ள
வரமுடைய தீர்த்தங்கள் கண்டுமன்னன் மகிழ்ந்தாடித்
திரிதரவுஞ் சிறைப்புலைதான் தீர்ந்ததிலை யதனாலே
பருவரலுற் றவன்மீண்டு வந்துமுனி பதம்பணிந்தான்.

முனிவரிடம் மன்னன் தன் குறை கூறல்

572. ஆடினனே தீர்த்தங்க ளனைத்தினு மென் னுடலவலம்
வீடியிடக் கண்டிலனென் றெனைவெகுண்டு சபித்தார்முன்
ஊடியெனக் கும்மாலே யுற்றபழு தினையொழிப்பேன்
தேடியொரு தேசிகனைத் திசைபத்துந் திரிந்தேயான். (31)

573. போக்குமொரு போதகன்ரு னில்லையெனிற் புலையுடலை
நீக்கிடுவேன் யான்ருனே யென்றழன்று நிகழ்த்துதலால்
தீக்குழியிற் புகுந்திடுவேன் றிரையுததி தனிற்செறிவேன்
நீக்கிடுவே னிவ்வுடலை யெனமுனிமுன் னிசைத்தினனே.

---

571. திரிதரல் - திரிதல். சிறை - விடாது பிணித்த. பருவரல் - துன்பம்.

572. அவலம் வீடிட - துன்பம் நீங்க. அரசன் முனிவரிட்ட சாபத்தைத் தீர்க்கத் தான் தேசிகனைத் தேடி அலைந்த முன் வரலாற்றினைச் கௌசிகனிடம் கூறினன் என்க. சபித்தார் - வசிட்ட புத்திரர். ஊடி - பிணக்குற்று. முன் ஊடி வெகுண்டென்றனைச் சபித்தார். எனக்குற்ற பழுதினை யும்மாலே யொழிப்பேன் எனக் கூட்டுக.

573. அழன்று - சினந்து. உததி - கடல். முன் வசிட்டரின் புதல்வரிடம் கூறியபடி, 'என் புலைத்தன்மையைப் போக்கும் ஒரு தேசிகனை அடையாவிட்டால், என் உடலை மாய்த்திடுவேன்' என்று கூறியபடி செய்வேனென்று கௌசிகனிடம் திரிசங்கு கூறினன் என்க.

முனிவர் தேவதீர்த்தத்தின் பெருமை கூறியது

574. ஒழிதயர மன்னவென வுரைத்துளத்தி னொருப்பட்டே
எழுதுமணி விளக்கென்ன விரண்டரைநா ழிகையிருந்து
பழுதறுக்குந் தீர்த்தவிதம் பார்த்தறிந்தா னதன்பின்பு
தொழுதகரத் தரையனையும் பார்த்தனனே
[துணிமுனிவன். (33)

575. நீங்கிவிடும் புன்புலைதா னினக்குநினைந் துளந்தன்னில்
ஓங்கெயில்சூழ் திருவாரூர்ப் புற்றிடங்கொண்
[டுறைவான்முள்
ஆங்கவன்ற னலையத்தின் மேல்பாகத் தலருடனும்
தேங்குபுன லந்தேவ தீர்த்தத்திற் றினைத்தாடில். (34)

(78)

அரசன் தேவதீர்த்தம் ஆடி நல்லுருப் பெறுதல்

576. இப்புரிக்கு வடமேல்பா லியோசனையைந் துக்கப்பால்
அப்புரிசே ரெனலுமுனி யடிபணிந்தே யரையனடைந்
தப்புரியை யமலனடி நினைந்தனனீ ராடுதலும்
திப்பியமா முருவுறவே சிவனருளாற் சிறந்தனனே. (35)

தீரசங்கு சிவபிரானைத் துதித்தமை

577. புன்மையினைத் தீர்த்தானைப் புற்றிடங்கொண்
[டிருப்பானைச்
சின்மயனைத் தேவர்க்குந் துயக்கறுத்த சிவன்றன்னை

---

574. உளத்தின் ஒருப்படுதல் - ஆழ்ந்த தியானத்திலிருத்தல், எழுது விளக்கு - எழுதிய விளக்கு. ஓவியம்போல் அசைவற்ற நிலையையும், விளக்கென்றது நிறைந்த முக ஒளியுடன் இருந்த தன்மையையும் கூறியது. பழுது - பாவங்கள். தீர்த்தவிதம் - பல தீர்த்தங்கள். பார்த்தது, அகக் கண்ணால் என்க. துணி முனிவன் - உள்ளத்தில் துணிவு பெற்ற விசுவாமித்திரன்.

575. ஆடில், நீங்கிவிடும் என்றியைக்க. தாள் உளந்தனில் நினைந்து என்க. அலர் - (தாமரை) மலர்.

576. இப்புரி - மறைக்காடு. அப்புரி - ஆரூர்.

577. துயக்கு - வருத்தம்.

நின்மலனே யலர்தூவிப் பணிந்தெழுந்து நேயத்தால்
சொன்மயனைத் துணையிலியைத் துதிசெய்யத்
[தொடங்கினனே. (36)

வேறு

578. சயசய தக்கன கன்றலையைத்
தழலுமிழ் மழுவிற் றடிவானே!
சயசய வெனமற் றசமதனின்
றலையினை யவனுக் கருள்வானே!
சயசய வரியெச் சனுமெனவத்
தகவிலி தலையைத் தடிவானே!
சயத முலக்கினிகர மதனைத்
தவிர விரையத் தடிவானே. (37)

579. சயசய வயனுச் சியினுறு தலையைச்
சடுதியி னுகிரிற் றடிவானே!
சயசய முப்புர மெரியுணவேமுற்
சரமுமிழ் சயிலத் தனுவீரா!
சயசய வரியர்ச் சனைபுரி பொழுதிற்
றழலினை யுமிழ்சக் கரமீவாய்!
சயசய முனிவர்க் கறமுதல் நெறியைத்
தமமற வருள்சத் தியவாதி! (38)

---

578. இச் செய்யுள் தக்ஷியாகச் செய்திகள் சிலவற்றைக் கூறுவது. மழு - கோடரி. அசம் - ஆடு. எச்சன் - யாக புருஷன். 'தக்கனையும் எச்சனையும் தலையறுத்து' (திருவா. 259). தகவு இலி - தகவிலி. தடிதல் - வெட்டுதல். அக்கினி - தீக் கடவுள். தவிர்தல் - நீக்கல். தடிதல் - வெட்டல். 'வெய்யவ னங்கி விழுங்கத் திரட்டிய, கையைத் தறித்தானென் றுந்தி பெற' (திருவா. 300).

579. அயன் - பிரமன். உகிர் - நகம். 'நல்ல மலரின்மேல் நான்முகனுர் தலை, ஒல்லை யரிந்ததென் றுந்திபெற' (திருவா. 311). சரம் உமிழ் சயிலத்தனு ; மேருமலையை வில்லாகவும் திருமாலை அம்பாகவும் கொண்டு சிவபிரான் முப்புரம் எரித்த வரலாறு கூறப் பெற்றது. சயிலம் - மலை. அரி - திருமால் ; அரி அரனுக்கு அர்ச்

வேறு

அரசன் மறுபடியும் மறைக்காடு சென்று முனிவனைக் காண்டல்

580. என்றுதுதித் திறையமலன் றன்னருள்பெற்
[றெழில்வேந்தன்
சென்றுதிரு மறைக்காடு சேர்ந்துதிரு முனிமுன்னே
ஒன்றினனுள் ளோகையுறக் கண்டனனே யுறுதுணையை
வென்றவனைப் புலனைந்தும் வினையறுக்கும் வீரனையே.

581. அங்கமிரு நான்குமுற வவனிதனிற் பணிந்தெழுந்தான்
பங்கமெனுந் துனிவிட்டுப் பாறவருள் பணித்தனையுன்
சங்கமுன முயன்றபெருந் தவத்தாலே வாய்த்ததெனக்
கிங்கிசைந்த பலன்போன்மற் றையபலமு
[மெளிதென்றான். (40)

முனிவர் அரசனுக்காக வேள்வி செய்யத் துணிதல்

582. மகிழ்ந்துளத்துண் மாதவனு மன்னவன்ற னுடல்கண்டு
புகழ்ந்தவனை முகநோக்கிப் புரவலனே யினியாகம்

சனிபுரி பொழுதில் குறித்த அளவில் ஒரு மலர் குறைய, அவன் தன் கண்ணைப் பிடுங்கி அர்ச்சிக்க, இறைவன் உவந்து அவனுக்குச் சக்கரம் அருளிய வரலாறு கூறப்பெற்றது. 'நலமுடைய நாரணன்றன் நயனமிடந் தரனடிக்கிழ், அலராக இடவாழி யருளினான் காண் சாழலோ' (திருவா. 272). முனிவர் - சனகர் முதலிய நால்வர். தமம் - இருள்.

580. உள் ஓகை - மன மகிழ்ச்சி. புலனைந்தும் வென்றவன் - முனிவன்.

581. அங்கமிருநான்குமுறப் பணிதல் - சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தல். பங்கம் - குறை. பாற - நீங்க. உன் சங்கம் - உன் சேர்க்கை. சங்கம் வாய்த்தது என்க. மற்றைய பலம் - உடலுடன் சுவர்க்கம் சேர்தல்.

582. மா தவன் - பெருந்தவசி. திவிதலம் - தேவருலகம். உறுவிப்பாம் - அடைவிப்போம்.

திகழ்ந்திடவே விதிதன்னுற் செய்துதிவி தலந்தன்னில்
உகந்துறையுஞ் சிறப்பினையு முறுவிப்பா

[மென்றுரைத்தே, (41)

முனிவன் பிரமனைக் காண்டல்

583. ஈங்கிருநீ யென்றவனை யிருத்திமறை வனம்பிரிந்து
பூங்கமலத் தயன்புரியிற் புகுந்தலரோன் பதம்பணிந்து
பாங்குறவே துதிபலவும் பண்ணுதலும் பங்கயனும்
ஓங்குபுக ழுறுமுனியே யுன்னியதென் னுரையென்றான்.

முனிவர் பிரமனை வேண்டல்

584. .....தெதப் புரந்தயர வெனையடைந்த புரவலனை
ஆகத்தி னுடனிருத்த யமருலகந் தனிலியனே
யூகித்தே னும்பரொடு மெழுந்தருளி யுடனவியை
யாகத்தோ டிருத்துவிநீ யெனையடைந்த வரையனையே

பிரமன் கூற்று

585. என்றியம்ப முனியயனு மென்னெடுநீ யியம்பியசொல்
நன்றெனவே நகைத்தருளி நடலையுட லொடுசுவர்க்கம்
ஒன்றியிடப் புரிகின்ற வுறுதிமக வினையுண்டோ
பொன்றவுடற் பொன்னுலகம் புகுமகமுன்

[டெனப்புகன்றான். (44)

---

583. அயன்புரி - ஸத்யலோகம். அலரோன் - பிரமன். பங்கயன் - பிரமன். உன்னியது - கருதியது.

584. புரவலன் - திரிசங்கு. அமருலகந்தனில் இருத்த என இயைக்க. ஊகித்தேன் - நினைத்தேன். உம்பர் - தேவர். அவியை - யாகத்தோடு. அரையன் - அரசன்.

585. நடலை - பொய். மகவினை - யாகம். உடல் பொன்ற - உடல் அழிய. பொன் உலகம் - சுவர்க்கம்.

முனி கோபித்துக் கூறல்

586. உண்டிடுவோ மனிதன்னை யொளிருமெரி முகத்தன்றிக்
கொண்டிடுத லிலையாமே யெனக்கூறுங் கொள்கையினைக்
கண்டுமுனி கதமுற்றுக் கடிமலர்மே லயனேயான்
அண்டருல கிருத்திடுவேன் புரிந்தமக மவன்றன்னையே,

முனிவர் வேள்வி செய்யத் தொடங்கல்

587. என்றியம்பிப் பிரிந்தடைந்து வேதவனத் தெல்லையினை
அன்றரையன் றன்னையழைத்தே யமருலக நீயடைதற்
கின்றியற்று வான்தீர்க்க மெனுமகத்தை யெனவியம்பிக்
குன்றெனவே யுபயோக விதமெவையுங் கூட்டுவித்தான்.

588. விதிமுறையான் வியற்சாலைக் குண்டவிதம் புரிவித்தே
அதிபதிக்குந் தீக்கையினை யாக்குவித்தே யிருதிசையில்
பதிபதின் மர்தமைவா னோர் தமையழைத்தார்
[பங்கயன்வான்
அதிபரும்வந் திலர்மற்றை யார்வந்தார் மறையவரும்.

பன்னிரண்டாண்டு முடிந்தும் பலன் உண்டாகவில்லை

589. தொடங்கியரும் பெருமகத்தைச் சுருதிவழி தவருமல்
இடம்படவே யியற்றினராண் டிருமூன்று மிருமூன்றும்

---

586. எரிமுகத்து உண்டிடுவோம்; அன்றி யாமே கொண்டிடுதல் இலை, என இயைக்க. கதம் - கோபம். அண்டர் - தேவர். அவன்தன்னை - திரிசங்குவை.

587. வேதவனம் - மறைக்காடு. தீர்க்கம் எனும் மகம்; மகம் - யாகம். உபயோகவித - பலவிதக் கருவிகள்.

588. குண்டவிதம் - பற்பல யாகக் குண்டங்கள். அதிபதி - யஜமானன்; வேள்வி செய்வோன். தீக்கை - தீக்ஷை. தேவர்கள் வரவில்லை; அந்தணர் வந்தனர் என்க. திசையிற் பதி பதின்மர் தமையும் வானோர் தமையுமென்க. மூன்றும் அடி சீர் மிக்குள்ளது.

589. இரு மூன்றும் இரு மூன்றும் - பன்னிரண்டாண்டுகள். தீர்க்கமகக் கருமம் முற்றியது. அயனும் அடையாமையால் அரையன் பலன் அடைந்திலன் என்க.

கடந்திடலில் முற்றியது திர்க்கமகக் கருமந்தான்
அடைந்திலனே பலமரைய னடையாமை யாலயனும்.

திரிசங்கு கூறல்

590. யாகத்தை முடித்ததற்பி னிட்டபலன் கிட்டாமல்
சோகித்துத் திரிசங்கு தொழுதகரத் தடனின்று
மாகத்தி னுறையற்று மகவினைதான் வழுவாகி
ஆகத்தோ டமருலகம் புகாமைவசிட் டனுமறிந்தே, (49)

591. அவமதிசெய் திடுவாரே யந்தமுனி யரும்புதல்வர்
புவிதலத்தைப் புரக்கைக்குப் புதல்வரையு நியமித்தேன்
தவமுயல்வ தேயெனக்குத் தக்கதரு வனந்தன்னில்
சிவமுனியே யென்றியம்ப முனிநாணித்
[திகைத்திருந்தான். (50)

முனிவன் அரசனுக்கு ஊக்கமளித்தல்

592. ஒழிகதுய ரினைமன்ன வுனையானே வானத்தின்
அழகுறவே யிருத்திடுவே னதற்கிசைந்த தவமுயன்றே
விழுமியவிப் பிரனுனேன் வேதவிதி சாதித்தே
எழுதலமு மேனையவு மியற்றுவனிப் பொழுதென்றே,

முனிவர் சிவபிரானைப் பூசித்தல்

593. அன்பரிடர்க் கருமருந்தைத் தனதடியை யடையாத
வன்பருளந் தரியாத மாலயனு மாண்டவுடல்

---

590. சோகித்து - சோகமடைந்து. தொழுத கரத்துடன் - கூப்பிய கைகளுடன். மாகம் - ஆகாயம். வழு - பிழை.

591. வசிட்டனும் அரும்புதல்வரும் அவமதி செய்திடுவார். புதல்வரும் என்று உம்மை விரிக்க. அரு வனம் - புகுதற்கு அருமையான காடு.

592. விழுமிய - சிறந்த. விப்பிரன் ஆனேன் - அந்தணன் ஆனேன். எழு தலம் - ஏழு உலகங்களையும். ஏனையவும் - கிரகங்கள் முதலியவற்றையும்.

593. இடர்க்கு மருந்து. வன்பர் - வலிய மனமுடையர். தரியாத - தங்கியிராதவன். மாண்ட - இறந்த. சடை பொன் நிறம்

என்பணியு மிறையவனே யிமையாமுக் கண்ணினனெப்
பொன்புரியுஞ் சடையானே விதிமுறையாற் பூசித்தே.

வேறு

அகாரணோபகாரத் தோத்திரம்

594. பால னுய்ய வெண்ணி யுன்ப தம்ப னிந்த போதுறும்
கால னெய்ய வன்று தைத்த கால னேய காலனே!
வேலை நஞ்செ மூந்த போது விண்ணு ளோர்வ ணங்கவே
ஆல முண்ட கண்ட னேய காரு ணோப காரியே. (53)

595. நாம நூறே நூறு நூறு நாவி னன விற்றுவார்க்
கேம மெய்த நின்பு ரத்தி ருத்து வாய்நி ருத்தனே
சாம வேத கீத நாளு மோது வாய சம்புவே
ஆமை பூணு மார்ப னேய காரு ணோப காரியே. (54)

596. நாக்கி னன வின்று றுஞ்சொல் நாக்கி னுக்கு மூலமாம்
வாக்க னுதி மாயை யின்வ குத்து மான தத்திருள்
நீக்கு வாய்நி லத்தி னுன்னி மித்த காரு ணற்குமெய்
ஆக்கி நோக்கி நீக்கு வாய காரு ணோப காரியே. (55)

உடையது. 'பொன்னை வென்றதோர் புரிசடை முடி' (திருவா. 428).

594. பாலன் - மார்க்கண்டன். பதம் - பாதம். நைய - அழிய. காலனே - காலை உடையவனே. அ காலனே - காலத்துக்கு உட்படாதவனே. அகாரண உபகாரி - காரணமின்றியே உதவி புரிபவன்.

595. நூறு நூறு நூறு - பத்து லக்ஷம். நவிற்றுவார் - சொல்லுவார். ஏமம் - க்ஷேமம். புரம் - சிவபுரம்.

596. சொல் - வாக்கு. அனுதி மாயை - இவை தத்துவங்கள். மானதத்து இருள் - மனத்து இருள்; அஞ்ஞானம். நிமித்த காரணம் - ஏவுதற்கர்த்தா. மெய் ஆக்கி - உடலைக் கொடுத்து. நோக்கி இருள் நீக்குவாய். உயிர்களைப் படைத்தல் முறையும் நீக்கும் முறையும் கூறப்பெற்றன.

597. போற்றி போற்றி பூதி நீறு பூசு வார்க ணேசனே
போற்றி போற்றி பூத லாதி மேனி யான பூரணே
போற்றி போற்றி யைம்பு லக்கு ரம்பை யீண்டு போகவே
மாற்றி யன்ப ருக்க ரும்ப தங்கொ டுக்கு மன்னனே.

வேறு

சிவபிரானிடம் முனிவர் முறையிடல்

598. எனத்துதித்தே யிறைஞ்சுதலு மிறையமலன்
[முன்றோன்றி
நினக்குறுதி வரந்தன்னே நிகழ்த்திடுக தருவமென
எனைச்சரண மெனவடைந்தான் றனைத்திவியி
[னிருத்தியிட்
நினைத்துமக மியற்றுதலு மயன்முதலோர் நிந்தித்தார்.

முனிவன் வரம் பெறல்

599. திப்பியனே சின்மயனே சிவனேயெம் பெருமானே
இப்பொழுதே மூவுலகு மியற்றியிடும் வரமெனக்குத்
தப்பறவே தந்தருணீ யெனவமலன் சமையென்றே
செப்பிமறைந் தனன்வானின் றிருமுனியத்
[திசைதொழுதான். (58)

விசுவாமித்திரர் சிருஷ்டி

600. இனிப்படைப்பே னெனத்துணிந்தே யியற்றினன்ரு
பரவிதமுன்
தனித்தனியே விலங்கினையும் விதமுறவே
சமைத்தனன்பின்

---

597. நேசன் - பிரியமானவன். பூதல ஆதி மேனியான பூர்ணன் - பூமி முதலான பஞ்ச பூதங்களையும் திருமேனியாகக்கொண்ட முழுமுதலே. குரம்பை - உடல். பதம் - பரமபதம்; திருவடி.

598. தருவம், என்று கூறியவர் சிவபிரான். நிந்தித்தார் - இகழ்ந்தார்.

599. சமை - ஆக்குவாயாக; இது சிவபிரான் அருளியது.

600. தாபரவிதம் - பலவித நிலையியற் பொருள்களை; தாவரங்களை என்றும் கூறலாம். மனித்தரை - மனிதரை; வலித்தல் விகா

மனித்தரையுஞ் சுரர்தமையும் வல்லசுரர்க்
கபசயராய்ப்
பனித்தொதுங்கு மண்டரையும் படைப்பமெனும்
பருவத்தில், (59)

இந்திரன் பிரமனிடம் முறையிடல்

601. எண்ணிமுனி யுலகியற்ற விந்திரன்ரு னையனுலகு
நண்ணியய னடிபணிந்து நான்முகனே கவுசிகன்ரூன்
பண்ணுகிற னுலகனிதம் படைப்பதனைத் தடுக்குதற்கு
மண்ணுலகம் புகுவமென மலரயனு மனுமதித்தே, (60)

பிரமனிடம் முனிவன் கூறல்

602. தரைத்தலத்துள் தேவதவனந் தனையடைந்து
[சமைப்பதுகண்
டுரைத்திடுக விசுவாமித் திரனேவே றுலகங்கள்
நிரைத்திடவே படைக்கின்ற நெறிதன்னை யெனமுனியும்
விரைத்துலக விதம்படைத்திவ் வேந்தனைவின்
[மிசைவைப்பேன். (61)

பிரமன் வேண்டுகோள்

603. என்றியம்ப வலரயனு மினிப்படைப்ப தொழிந்திடுநீ
இன்றிவனைத் திரிசங்கு வெனுநாம முடையானை

ரம். சுரர் - தேவர். வலிய அசுரர்க்குத் தோற்று, நடுங்கி ஒதுங்கும் பிற தேவகணங்களையும். அண்டரையும் - தேவரும் தேவகணங்களையும். பருவம் - பொழுது.

601. முனி எண்ணி உலகங்களை இயற்ற. தடுக்குதல் - அடுத்தல். ஐயன் - பிரமன். அனுமதித்து - ஒப்புக்கொண்டு.

602. விரைத்து - விரைந்து; வலித்தல். இவ்வேந்தன் - திரிசங்கு.

603. உம்பர் உலகு ஒன்றுவிப்பேன் என இயைக்க.

ஒன்றுவிப்பே னும்பருல கெனமுனியும்
[படைப்பொழிந்தான்
அன்றரைய னேடயனுந் திருவாரு ரினையடைந்தே, (62)

பிரமனும் மன்னனும் ஆரூர் அடைந்து சிவபிரானைப் பிரார்த்தித்தல்

604 வானவர்க டாமியற்று வன்மீகந் தனிலிலங்கும்
ஞானமயன் முன்பணிந்து நாதாந்த நாயகனே
ஊனவுட லோடிவரை யனும்பருல குறுமவர்மேல்
தானமுறு புனற்றீர்த்தந் தரவருள்செய் யெனச்சாற்றி,

605. பெற்றமல னதிபதியைப் பிரிந்துதிரி சங்குவெ னும்
கொற்றவனை முகநோக்கிக் கொலவரியை யிமையவர்செய்
புற்றிடங்கொண் டிருக்குமரும் பொருடன்னைப்
[பொருவிலியை
நெற்றிவிழி நின்மலனை நேயமுற நினைந்துள்ளே, (64)

நான்முகன் தீர்சங்குவை உடலொடு சுவர்க்கம் சேர்த்தது

606. ஆடுகநீ யிப்பொழுதித் தீர்த்தத்தி னெனவறைந்தான் ;
தேடரிய திதுநமக்கென் றவனதனிற் றினைத்தெழுந்தான்;
ஆடகமெய் யோடிமையோ ரம்பகத்தோ டவனைவிணில்
ஏடலர்தா மரையான்வைத் தேகினன்றன்
[னெழிற்புரியின். (65)

---

604. உம்பர் அவர் உறும் மேல் தானம் உறும் தீர்த்தம் தர அருள்செய் என்றியைக்க.

605. பெற்று - அவ்வரத்தைப் பெற்று. அரியை - திருமாலை. இமையவர் - தேவர். இமையவர் அரியைக் கொல்லச் செய்த என்க.

606. 'நின்மலனை உள்ளே நினைந்து இத்தீர்த்தத்தின் ஆடுக' என்றுன் பிரமன் என்க. அவன் - தீர்சங்கு. ஆடக மெய் - பொன்மேனி கொண்ட உடல். அம்பகம் - கண் ; இமையாக் கண் ணுடை என்க. அம்பகம், எழுச்சியும் ஆம். விணில் - விண்ணில். தாமரையான் - நான்முகன். தன்புரி - ஸத்யலோகம்.

தேவர்கள் இந்திரனிடம் முறையிடல்

607. இந்தமுறை யினையறிந்தே யிருநிலத்தி னெல்லோரும்
வந்துமகிழ் வுறப்படிந்து வரதேவ தீர்த்தத்தில்
அந்தவுட லொடுமமர ருலகடையக் கண்டமரர்
நொந்துமிக விந்திரனே டேகாந்த நுவன்றார்கள். (66)

608. புரியாதே தவந்தன்னைப் புண்ணியரை யருத்தாதே
எரியோம்பி யாகவினை யியற்றுதே யாவரும்போய்த்
திருவாரூர் தீர்த்தத்திற் றிளைத்தாடிச் சேர்வார்விண்
எரினுவி லெமக்கவியைத் தருவாரு மிலரென்றே. (67)

தேவதீர்த்தம் தூர்ந்தமை

609. எண்ணியினி யித்தீர்த்தந் தனைமனித ரிழிந்துவிடப்
பண்ணுதலே பாங்கென்று பவமானன் றனையழைத்து
மண்ணிறைத்து வரதேவ தீர்த்தத்தை மாற்றுகெனத்
துண்ணெனச்சென் றவன்தூர்த்தான் றிருத்தியதூஉ
[மினிச்சொல்வாம். (68)

இந்திரன் பிரமஹத்தியால் பிடிக்கப் பெற்றமை

610. இந்திரன்முன் விருத்திரனென் றியம்புபெய ருடையானை
மந்திரநா வினன்றன்னைத் தயித்தியனை வதைத்திட்டான்
அந்தவதை யவன்றன்னை யாவேசித் தலைத்திடலும்
நொந்தனனப் போதயனு மவனுடலி னேவறிந்தே. (69)

---

607. வரம் - வரங்களைத் தரும்; மேன்மையான எனலும் ஆம். ஏகாந்தம் - தனிமையில்.

608. அருத்துதல் - உண்பித்தல். எரி நாவில் எமக்கு அவியைத் தருவாரும் இலர் - யாக அக்கினியின் வழியாய் எமக்கு அவி கொடுப்பார் இல்லை.

609. இழிந்துவிட - இழிவு செய்ய. பவமானன் - வாயு. திருத்தியது - நன்றாக்கியது.

610. விருத்திராசுரன் - அந்தணன். தயித்தியன் - அசுரன். ஆவேசித்து - புகுந்து. நோவு - துன்பம்.

இந்திரன் நோய் விடுபடல்

611. வீடியிடு முனக்கிந்த வினைதீர்த்த விதந்தோறும்
ஆடிலென வாடினன்போ யதனற்றீ ராமையினால்
வாடுதலும் வான்வாணி யுணர்த்தமகிழ்ந் தாரூர்புக்
காடினனே யவன்றேவ தீர்த்தத்தை யகழ்ந்ததனில். (70)

612. ஆடியவப் பொழுதேதன் னவலவினை யினையற்றான்
வாடியவா னவர்க்கருள்செய் வன்மீக நாதரடி
நீடியவா தரவுடனே பணிந்தெழுந்து நின்றுதுதி
பாடியவ னருள்பெற்றுப் படர்ந்தடைந்தான்
[பயனுறுவான். (71)

விருத்திர வதை வரலாற்றை முனிவர் வினுதல்

613. என்றியம்பச் சூதமுனி யிருக்குமறை முனிவரெலாம்
அன்றுவிருத் திரன்றன்னை மகவான்ரு னழித்தானெனைக்
கொன்றவினை யவன்றன்னைக் கூடியவென் னிவைதம்மை
இன்றைக்கு விரியவுணர்த் தெனமுனியு மோமென்றான்.

விருத்திரன் வரலாறு

614. வரமுடைய வாளசுர னிரணியன்றன் மகள்பெயராள்
இரமையவ டனைப்பரித்தா னியலியம்பும் விதிவினையால்
உருவுடைய துவட்டாவென் றேதுபெய ரினையுடையான்
இருவருமின் புறவிருந்தார் புத்திரனை யிச்சித்தார். (73)

---

611. வீடியிடும் - அழியும். வான்வாணி - ஆகாயவாணி; அசரீரி. அகழ்ந்து - தோண்டி. தூர்ந்த தேவதீர்த்தம் இந்திரனால் அகழப்பெற்றது என்க.

612. பயன் உறு வான் படர்ந்து அடைந்தான் என்க.

613. மகவான் - இந்திரன். இவிருத்திரன் தன்னை, என்று பிரிக்க. ஓம், என்றமை உடன்பாட்டைக் குறிக்கும்.

614. இரமைப் பெயராள் என்க. துவட்டா என்பவன் இரண்யன் மகளான இரமையை மணந்தான் என்க. துவஷ்டா, சுக்ர புத்ரன்.

இரமை தவம்புரிதல்

615. புரிந்தரிய தவத்தினையான் புத்திரனைப் பெறுவலென
அருந்தவத்தைப் புரிந்தனளா யிரவாண்டுள் ளமலனடி
பொருந்தியிடப் புனையிழையப் பொழுதவள்முன்
[னரன்றோன்றி
விரும்பினையா தினையதனைத் தருவாம்நீ விளம்பெனலும்,

இரமை கேட்ட வரம்

616. அங்கமரு மறைவல்ல வந்தணனு மாகவுறும்
தங்குலத்தைத் தாங்கியிடுந் தயித்தியனு மாகமிடல்
அங்கமழி யாதிருக்க வாயுதத்தா லழகுபுகழ்
தங்குமொரு தனையனைநீ தந்தருளின் றெனக்கென்றாள்.

சிவபிரான் வரமளித்தல்

617. தந்திடுவா னீகுறித்த தனையனைத்தா னவர்தேவர்
வந்துபொரு திடினுமவ ராயுதத்தால் வதையுண்ணன்
மந்திரநா வினன்மறையின் முறையாகம் பண்ணுவனற்
சுந்தரியே யென்றிறைவன் விணின்மறையத்
[தொழுதகன்றாள். (76)

விருத்திரனின் தோற்றம்

618. இருதுமதி யாய்விசுவ கன்மாவோ டிணங்கவணை
கருவிளைந்த துதரத்திற் கரஞ்சிரமற் றையமுற்றிப்

---

615. இரமை ஆயிரம் ஆண்டு தவம் செய்து சிவபிரானிடம் வரம்பெற்ற செய்தி இங்குக் கூறப்பெறுகிறது. புனையிழை; இரமை.

616. தனையன் - மகன். அந்தண அங்கமும், அசுர குலமும், ஆயுதத்தால் அழிக்கப்படாத உடலும் கொண்ட அழகிய மகனைப் பெறல் வேண்டுமென அவள் விரும்பினள் என்க.

617. வதையுண்ணன் - சாகமாட்டான்.

618. இருதி மதியாய் - முதற்பூப்பினை யடைந்து. இவ்வாறு கூறியதால், இவள் தவம் செய்த பிறகு கன்னிப் பருவம் பெற்று

பருதியர்பன் விருவருந்தாந் திரண்டதொரு படியென்ன
உருவுடைய வரும்புதல்வ னுற்பவித்தா னுகப்புறவே.

விருத்திரன் கல்வி பெற்றமை

619. தந்தையவன் றனக்குவிருத் திரனெனும்பேர்
[தனைச்சாற்றி
அந்தணருக் குரியவிதி யனைத்துமறி வித்தனனே
முந்திமறை முழுதுணர்ந்து முற்றிடுநா ளவன்பாற்போய்
மந்திரமும் போதித்தான் சுக்கிர னு மனமகிழ்ந்தே. (78)

இந்திரன் விருத்திரனிடம் தோற்று நான்முகனை அடைதல்

620. இனிவெல்வே லிந்திரனை யென்றவன்விண்
[ணிடைப் புகலும்
துனியுறவே சுரர்பதியு மெதிர்பொருதான் சுரராண்டு
தனிலுறவை யாயிரந்தா னபசயனுய்ச் சத்கரித்துப்
பனியுறவே படர்ந்தடைந்தான் பங்கயத்தான்
[பதத்தினையே. (79)

விசுவகர்மனை மணந்தனள் என்க. இது, ஆராயத்தக்கது. அனை இணங்க என்றியைக்க. கருவினைந்தது - அவள் வயிற்றில் கரு தோன்றிற்று. கரம் சிரம் மற்றைய முற்றி - கைகளும் தலையும் பிறவும் வளர்ந்து. பன்னிருவர் பருதியார் - பன்னிரு சூரியர்கள். உகப்பு - மகிழ்ச்சி.

இச் செய்யுளின் பாடமும் இதன் உரையும் ஆராயத்தக்கன.

619. தந்தை - துவஷ்டா (?). தந்தை மறை அறிவித்தான்; சுக்கிரன் மந்திரம் போதித்தான் என்க.

620. துனி - துன்பம். சுரர்பதி - இந்திரன். சுரர் ஆண்டு - தேவ ஆண்டு. மானிடரின் ஓர் ஆண்டு சுரர்க்கு ஒரு நாள் என்பர். உற - பொருந்த. அபசயனுய்த் தோல்வி அடைந்து. பங்கயத்தான் - பிரமன். பனி - நடுக்கம். பதத்தினை சத்கரித்து - பாதத்தைப் பூஜித்து. ஸத்காரம் செய்தல் - உபசரித்தல்.

விருத்திரன் அயன் புரியை அடைய இயலாதெனக் கூறல்

621. அப்பொழுது விருத்திரனுஞ் சுக்கிரனை யடிபணிந்து
ஒப்பரிய கருணையினு லும்பருல கினையாள்வேன்
இப்பொழுதிந் திரன்புகுந்த வயன்புரியு மெனதென்ன
அப்புரியை யடையவலை யலையென்ரு னுரியன்ருன்.

622. இந்திரன்ரு னப்புரியை யிண்..... பனக்கிப்போ
தந்தவயன் புரியடைத லருமையெத னலென்ன
இந்திரனு யிரவருட நைமிசமென் ரணியத்
தந்தமிலா வருந்தவஞ்செய் தரனருள்பெற்
[ருங்கடைவன். (81)

விருத்திரனும் தவம் புரிதல்

623. என்றியம்ப யானுமுன தின்னருளா லவ்வனத்தில்
நின்றரிய தவமுயல்வே னெனநிகழ்த்தி யவனேவச்
சென்றடைந்தவ் வனந்தன்னிற் சிவனடியைச்
[சிந்தனைசெய்
தொன்றியவன் பொடுநின்ரு னுண்ணுது முறங்காதும்.

---

621. விருத்திரன் சுக்கிரனிடம் சென்று இந்திரன் நகரையும், பிரமன் உலகத்தையும் நான் அடைய அருள் புரிக என இறைஞ்ச, அவன் அவ்வாறே அநுக்ரகித்தான் என்க. உம்பர் உலகு - தேவருலகு. அயன் புரி - பிரமனின் நகரம். வலையலை - வல்லாபல்லை. ஆரியன் - ஆசாரியன்; சுக்கிரன்.

622. முதலடி சிதைந்துள்ளது. இந்திரன் நைமிசாரணியத்தில் ஆயிரம் ஆண்டு அருந்தவம் செய்து, அயன்புரியை அடைந்துள்ளான். அதனால் நீ அயன்புரி அடைதல் அருமை என்று சுக்கிரன் விருத்திரனுக்குக் கூறினன் என்க.

623. தவமுயல்வேன், என்றவன் விருத்திரன். உண்ணுதும் உறங்காதும் நின்ருன் என்க.

624. வசித்திடுவேன் வானிடையே மாரிதனி னீர்தன்னில்
வசித்திடுவேன் பனிக்கால மாரூத வேனிலுறில்
வசித்திடுவே னவனிதனில் வயிறுறினே பசிவாயுப்
புசித்திடுவே னிப்படியாண் டொருநூறு போக்குதலும்,

தேவர் அவனைக் கொல்லு முறையை ஆராய்தல்

625. ஓர்ந்தனர்க ளவன்புரியு முயர்தவமா லயன்முதலோர்
தேர்ந்தனரப் பொழுதவனைச் செகுக்குமுறை
[யவருளுமால்
ஈர்ந்திடவே படுவனல னிலங்கிடுமா யுதத்திலவன்
வார்ந்தபுனன் முடிவைத்தான் கொடுத்தபெரு
[வரத்தாலே. (84)

இந்திரன் வச்சிரம்பெற வழி நினைத்தல்

625. என்பாலே வச்சிரத்தை யியற்றியவ னுடலெறியில்
வன்பார வுடல்பொடியாய் மடிந்திடுவ னெனமதித்தான்
என்பாலே சரபத்தி னிபத்தோன்பா லியற்றுவமோ
என்பானை யிந்திரனை நோக்கியரி யியம்பிடுவான். (85)

---

624. மாரிதனில் வானத்தும், பனிக்காலம் நீர்தனிலும், வேனிலில் அவனியிலும் வசித்திடுவேன்; பசி உறின் வாயுவும் புசித்திடுவேன் என்றான் என்க.

625. மால் அயன் முதலோர் ஓர்ந்தனர். ஓர்தல் - ஆராய்தல். செகுத்தல் - கொல்லுதல். மால் - இந்திரன். ஈர்ந்திட - பிளந்திட. ஆயுதத்தில் படுவன் அலன் - அவனை ஆயுதத்தால் கொல்லுதல் இயலாது. வார்ந்த புனல் முடி வைத்தான் - சிவபெருமான். சிவபிரான் கொடுத்த வரத்தால் அவன் ஆயுதத்தால் படான்; மால் அவனைப் பிளந்தால் படுவன் என்று அயன் முதலியோர் ஓர்ந்தனர்.

இவ்வாறு கூறியவன் திருமால் என்று திருவாரூர்ப் புராணம் கூறும்.

626. மதித்தான்; மதித்தவன் இந்திரன். சரபத்தின் என்பாலை இபத்தோன்பால் இயற்றுவமோ - யானைபோன்ற விருத்

திருமால் ததீசி முனிவரைச் சுட்டியது

627. ஒருநூறு முழநீள முடைத்தாகி யதனிடையில்
இருமூன்று கோணமுறி லியற்றிவிட லாமென்ன
ஒருநூறு முழவென்பு முண்டோவென் றிடமகவான்
இருநூறு முழவென்பு ததீசியுடற் கென்றேமால். (86)

இந்திரன் அந்தணனாகி முனிவரிடம் செல்லல்

628. அந்தமுனி புடையடைந்துன் குறையறையி
[லவன்றனுடல்
தந்திடுவன் சரசுவதி தீர்த்தத்திற் றவம்புரியும்
மந்தமறச் செல்கெனலு மகவான்வா னவரோடும்
அந்தணனாய்ச் சென்றவன்முன் னடையமகிழ்ந்
[தன்னவனும், (87)

ததீசி தம் உடலை இந்திரனுக்கு ஈதல்

629. அந்தணனு முருவுடனே யமரரொடு மமரேசன்
வந்தனைவேண் டியதுனக்கென் னெனமுனிவன்
[மதித்துரைத்தான்
இந்திரனுந் தன்குறிப்பை யியம்பியிட முனிதானும்
தந்தனமென் றுடல்கொடுத்துச் சிவபுரியைத்
[தானடைந்தான். (88)

திரன்மீது சரபத்தின் என்புகொண்டு வச்சிரம் செய்வோமா? அரி - திருமால்.

627. நூறுமுழ நீளமும், இடையில் ஆறு கோணங்களும் உண்டான எலும்பு கிடைக்குமாயின் வச்சிராயுதம் இயற்றிவிடலாமென இந்திரன் கூற, ததீசி உடலில் இருநூறுமுழ என்பு உண்டு என்று திருமால் கூறினன் என்க. மகவான் - இந்திரன். மால் - திருமால்.

628. மந்தம் அற - தாமசம் நீங்க; விரைவில். அன்னவன் - முனிவன்.

629. தன் குறிப்பு - முனிவனின் என்பு வேண்டுமென்ற குறிப்பு.

இந்திரன் வச்சிரத்தால் விருத்திரனைக் கொன்று ஒடிடல்

630. ஈண்டரச முனிதந்தா னேன்றேயென் றதிசயித்து
மீண்டார்கொண் டென்பரிமுன் வியப்புறவச் சிரமாக்கி
வேண்டாதான் றவம்புரியும் வியன்வனம்புக்
[கவன்முதுகின்
வேண்டானுற் றெறிந்துமறிந் தோடினனே
[யிந்திரன்றன். (89)

இந்திரன் கடலில் ஒளித்தல்

631. அஞ்சியலை கடலடைந்தாங் குறுமரிய வரையுற்றன்
நைஞ்சனனே நையாதே நலியநமைத் தொடர்வானே
வஞ்சகனென் றெணிப்பார்த்தான் வந்தவழி
[யினமயங்கித்
துஞ்சினனென் றறியாதே சுரற்கதிபன் றுயருற்றே.

விருத்திரன் மாய, இந்திரனை அவ்வதை பீடித்தது

632. திண்டிதலும் வச்சிரத்தான் செந்தழலிற் றிரணமென
மாண்டனனே விருத்திரன்றன் வதைதொட்ட திந்திரனை
நீண்டவுறுப் புகள்குறுக நெஞ்சழல வாய்புலர
மாண்டனையும் வலியினையு மிழந்தனனே மகவான்றன்.

---

630. அரச முனி - ததிசி. ஏன்றே - இசைந்து; ஏற்றே என்பதன் விகாரமுமாம். என்பு கொண்டு வச்சிரம் ஆக்கி அரிமுன் மீண்டார் என்றியைக்க. வேண்டாதான் - பகைவன். வியன் - பெருமை. வேண் தான் உற்று; வேண் - விருப்பம். மறிந்து - திரும்பி. ஏண் முதுகின் உற்று - வலிய முதுகினைக் கிட்டி என்றும் கூறலாம்.

631. அரிய வரை - பகைவர் எட்டற்கரிய மலையை. நைந்தனனே (அல்லது தான்) நையாதே, நமை நலியத் தொடர்வானே என்று இந்திரன் ஐயுற்றன் என்க. நைஞ்சனனே, நைந்தனனே என்றதன் போலி. துஞ்சினன் - இறந்தான். சுரற்கு அதிபதி - இந்திரன்.

632. திரணம் - துரும்பு. மாண் - மாண்பு. மகவான் - இந்திரன்.

தேவர்கள் இந்திரனைக் காணுமல் தீகைத்தது

633. அண்டரும்போ தனுமடைந்தவ் வனத்தசுர
[னழிந்தமையும்
கண்டனர்க ளிந்திரனைக் காணர்கள் கசிந்துருகி
எண்டிசையும் புகுந்தவன்ரு விருக்குமிடந் தேடினர்கள்
கண்டனர்கள் நெடுங்காலங் கழிந்ததற்பின்
[கடல்வரைமேல். (92)

அயன் தேவர்களை எச்சரித்தல்

634. பூங்கமலத் தயனறிந்து புரிந்தவினை யான்மகவான்
நீங்கினன்றன் கவினுடலி னீர்பார்மின் வானவரே
பாங்கல்ல நீரிவனைப் பரிச்சிக்கை யிவன்புரிந்த
தீங்குமையுஞ் செறிந்துவிடு மிவன்றனைநீ சேர்ந்திடினே.

இந்திரன் வினுதல்

635. என்றிரங்கி யியம்புதலு மிமையவர்க ளிந்திரனைச்
சென்றணுகா தயலுற்ரூர் திகைத்தபோ திந்திரனும்
என்றனைநீ ரணுகாமை யென்னையெனக் கியம்பீடுமின்
பொன்றினனே விருத்திரன்ரூன் பொரவருமோ
[புகன்றிடுமின். (94)

---

633. அண்டர் - தேவர். போதன் - சுருகுரு; வியாழன். வரைமேல் கண்டனர்கள்.

634. புரிந்த - செய்த. வினை - அந்தணனை விருத்திரனை அவன் தவம் புரிந்துகொண்டிருந்த நிலையில் முதுகில் அடித்துக் கொன்ற தீவினை. கவின் - அழகிய. உடலினீர், என்றதை விளியாகவும் கொள்ளலாம். நீர் நீங்கினன், என்று கொண்டு, கடல் நீருள் மறைந்தான் என்றுங் கொள்ளலாம். பரிசிக்கை - தொடுகை; பரிச்சிக்கை என்று விரிந்தது. செறிந்துவிடும் - நெருங்கிடும்.

635. அயல் உற்ரூர் - அப்பால் நின்றனர். பொன்றினனே - இறந்தானே. பொர - போரிட.

அயன் விடை

636. என்றுவின விடுதலுமே யேடலர்தா ரானிரங்கிப்
பொன்றினன்காண் விருத்திரன்ரு னந்தவதை
[நினைப்பொருந்தி
நின்ரெறுக்கு மாதலினு னீங்கினர்விண் ணவர்நின்னை
என்றியம்ப விவன்வதைதா னெனைத்தொடர்ந்த
[தென்கொல்லோ. (95)

இந்திரன் வினவும் அயன் விடையும்

637. வதைத்தனன்முன் தைத்தியரை யலகிலரை யந்தவதை
புதைத்ததல விந்தவதை பொருந்திவருத் துதற்கேது
கதைத்தருளாய் கடிமலர்மேல் கருணையனே யெனவயனும்
விதித்திறத்தாற் றவம்புரிந்த விப்பிரன்காண்
[விருத்திரன்ரூன். (96)

638. மாதவனு மவன்றன்னைப் பின்னின்று வதைத்தனைநீ
ஆதலினு லந்தவதை யடைந்ததென வேவந்தப்
பாதகந்தா னெனைத்தீரும் படிபகரா யெனமகவான்
பூதலத்திற் றீர்த்தவித மாடிலது போகுமென்றே, (97)

இந்திரன் தீர்த்தங்கள் ஆடுதல்

639. விரிஞ்சனியம் புதலுமவன் அடிபணிந்து
[விண்ணவர்கோன்
பிரிந்துநிரைந் தாடினனே தீர்த்தவிதம்
[பிழையொழிப்பான்

---

636. ஏடு அலர் தாரான் - இதழ்கள் விரிந்த மலர் மாலை பூண்ட இந்திரன்; அயனும் ஆகும். நினை - உன்னை. ஒறுக்கும் - தண்டிக்கும்.

637. அலகிலரை - எல்லையற்றவரை. புதைத்தது அல - (என்னை) மூடிக்கொள்ளவில்லை. கதைத்தல் - சொல்லுதல். விப் பிரன் - அந்தணன்.

639. விரிஞ்சன் - பிரமன். பிழை ஒழிப்பான் - பாவம் போகு மாறு. நிரைந்து - வரிசையாக. பிரயாகை - ப்ரயாகை. பகீரதி - கங்கை.

பரிந்துபிர யாகையினைப் பகீரதியைப் படிந்தாடித்
திரிந்தனனப் பொழுதுபொறுத் திடலுமது தீராதே.

மகவான் உயிர்விடத் துணிதல்

640. மரிப்பமிலி யெனவாடி விடந்தன்னை மாந்துவமோ
பருப்பதத்துச் சியினின்று பாரினுற வீழ்வோமோ
நெருப்பினிடைப் புகுவோமோ யெனநினைந்து
[நீண்டதொரு
வரைச்சிகரத் துற்றுவிழச் சம்மதித்தான் மகவான்முன்.

அசரீரி தேவதீர்த்தப் பெருமை கூறுதல்

641. அந்தரத்தில் வாணியெழுந் தமலேச னருளாலே
இந்திரனே நினைநீயே யிறுப்பதியல் பலவிண்ணும்
மைந்துடனே மூன்றுகநீ யமருலகா ளுதற்குரிமை
வந்தவினை நைந்தொழியும் வகையினையு மதியறைவாம்.

642. திடர்செய்தாய் திருவாரூர்த் தேவதீர்த் தம்முன்னுள்
இடர்கெடுங்கா ணதுதன்னை யணைந்துமணை
[யெடுத்தேற்றிக்
கடனுறவே யதனுதிக்குங் கங்கைதனிற் கடிதாட
உடலினுயிர் போயிறி னுறுஞ்சிவன்ரு ளுளத்துனியே.

---

640. மாந்துதல் - அருந்துதல். பருப்பதம் - மலை. வரை - மலை.

641. அந்தரம் - ஆகாயம். இறுப்பது இயல்பு அல, எனப் பிரிக்க. மைந்து - வலிமை. மூன்றுகம் - மூன்று யுகங்கள். மதி - புத்தி. மதி - மதிப்பாயாக.

642. திடர் - மேடு. தேவதீர்த்தம் திடர் செய்தவன் தவ மானன் (609); இவ்வாறு செய்யக் கட்டளை யிட்டவன் இந்திரன். மணை - மண்ணை. உயிர் போய் உடல் இறின் சிவன் தாள் உறும் என்றியைக்க. தேவதீர்த்தத்தில் கங்கை தோன்றுதல் கூறப் பெற்றது. உளத்து உன்னி ஆட என்க.

இந்திரன் தேவதீர்த்தமாடிப் பழுது தீர்ந்தமை

643. என்றியம்ப விந்திரனு மிடுக்கணெழிந் தாருரைச்
சென்றடைந்து தேவவர தீர்த்தத்தைச் சிறப்பாற்செய்
தொன்றியுறுஞ் சுரநதியி லமலனடி யுளியாடி
அன்றெழலு முடலவல மற்றதுதே சுற்றனனே. (102)

இந்திரன் சிவபிரானைத் தியானித்திருத்தல்

644. காராரு மிடற்றானைக் கமழ்கொன்றைச் சடையானைப்
போராரு மெரித்தானைப் புற்றிடங்கொண் டிருப்பானை
நீராரு மலராரு மருச்சித்தே நேசத்தால்
தீராத வினைதீர்த்தா னற்புகழைச் சிந்தித்தே. (103)

வேறு

துதி

645. ஏது வேசிவ நினைப்பி னுக்குமென
வெண்ணு வாரிதைய நண்ணுவாய்;
ஏது வேயெமது யாப்பி னுக்குமென
வெண்ணு வாரிதைய நண்ணுவாய்;
ஏது வேதுயர்க டிந்து
நின்னருளை யெண்ணுவாரிதைய நண்ணுவாய்;
ஏது வேறிலைநன் னீணெறிக்குமென
வெண்ணு வாரிதைய நண்ணுவாய். (104)

---

643. இடுக்கண் - துன்பம். வர தீர்த்தம் - மேன்மையான தீர்த்தம். சுரநதி - கங்கை. உளி - தியானித்து. தேசு - ஒளி.

644. கார் - கருமை. மிடறு - கழுத்து. கமழ் - மணம் வீசும். போர் ஆனை - போரிட எழுந்த யானை. தீராத வினை தீர்த்தான் - சிவபிரான்.

645. சிவ நினைப்பு - சிவத்தை நினைத்தல். அவனை நினைப் பதற்கும் அவனே ஏது. ஏது - காரணம்; உதவி. 'அவனரு ளாலே அவன்றாளடைந்து' (திருவா.) என்பது நோக்குக. யாப்பு - உடல்; உடலிலிருத்தல்.

646. ஏது வேசிவ னியங்கு தாரகை
விதத்துமென்பவ ரெணத்துளாய்
ஏது வேசிவ னியங்கு வான்மதி
யினுக்கு மென்பவ ரெணத்துளாய்
ஏது வேசிவ னியங்கு கின்றவி
ரவிக்கு மென்பவ ரெணத்துளாய்
ஏது வேசிவ னியங்கு மற்றையர்
தமக்கு மென்பவ ரெணத்துளாய். (105)

647. ஏது வேசிவ னியங்கு கின்றநன
விற்கு மென்பவ ரெணத்துளாய்
ஏது வேசிவ னுறங்கு கின்றகன
விற்கு மென்பவ ரெணத்துளாய்
ஏது வேசிவன் யார்க்குமேற் றவுணர்
விக்கு மென்பவ ரெணத்துளாய்
போத காசய! புராரி யேசய!
வெனச்சி வத்துதி புரிந்தனன். (106)

வேறு

பிரமன் முதலியோர் இந்திரனைக் கண்டு மகிழ்தல்

648. அற்றவல மிந்திரன்ரு னமலனரு ளால்வரத்தைப்
பெற்றபெரு மையுமுணர்ந்து பிரமனெடு திருமாலும்

---

646. தாரகை - நக்ஷத்திரம். மதி - சந்திரன். இரவி - சூரியன். வானத்துள்ள ஒளிப் பொருள்கள் இயங்குதற்கு ஏது சிவன் என்பவர் எண்ணத்துள்ளாய் என்பது இச் செய்யுளின் கருத்து.

647. நனவு - ஜாக்கிரம். கனவு - சொப்பனம். மூன்றுவது அடி சிதைந்துள்ளது. மூன்று அவஸ்தைகளுக்கும் சிவபிரானே ஏது என்பது கூறப்பெற்றது. போதகன் - அறிவிப்பவன். புர அரி - திரிபுரங்களைச் சங்கரித்தவன். புரம் - உடலும் ஆம்.

648. அவலம் அற்று என்றியைக்க. அமலன் - சிவபிரான். அவனை உற்று அற்றது; பிரமஹத்தி என்னும் குற்றம்; உகந்தார் - மகிழ்ந்தார்.

மற்றையரும் பூதலத்தில் வந்தனரிந் திரன்முழுதான்
உற்றவனை யற்றதுகண் டவருமவன் றனையுகந்தார்.

649. பங்கயனு மரிதானும் பாதகத்தை நீங்கினனும்
அங்கையினு லலர்தூவி யாரூர னடிபணிந்தே
தங்களூர் தானுமிறை யனுமதியாற் சார்ந்தார்கள்
சங்கையினைத் தடுத்தாளுஞ் சங்கரனைத் தாங்கினந்தே.

வேறு

650. முன்னுமொரு கற்பத்தின் முனைத்தவிருத் திரன்றன்னை
முருக்கி யுற்றான்
இன்னலினை யிந்திரனவ் விடாப்பழியை நாற்
கூறு செய்தே
பன்னுபுக ழயன்றனும் பணிமொழியார் நீர்தருப்பா
ரிற்றின.... ....ட்டான்
அன்னவத்தைச் சேடமற வதனையறுத் தனன்மதுரை
யால வாயான். (109)

---

649. இறை அனுமதியால் - சிவபெருமான் விடையருள். சங்கை - ஐயம்.

650. இந்திரன் முன்னும் ஒரு கற்பத்தின் விருத்திரன் தன்னை முருக்கி இன்னலினை உற்றான்; அதனை ஆலவாயான் அறுத்தனன். இவ் வரலாற்றைத் திருவிளையாடற் புராணம், இந்திரன் பழிதீர்த்த படலத்திற் காண்க. இம்மதுரைச் செய்தி முன்னை ஒரு கற்பத்தில் நடந்ததென்பது இந் நூலாசிரியர் கொள்கை. மதுரை ஆலவாயான் - சோமசுந்தரக் கடவுள். மூன்றுமுடி சிதைந்துள்ளது. அதனில் இந்திரனுக்கு விளைந்த பழியை அயன், நான்கு கூறுக்கி, பெண்டிர், நீர், மரம், பூமி இவற்றிற்கு அளித்த வரலாறு கூறப்பெற்றுள்ளது.

"அப்பிடை நுரையாய் மண்ணி லருவருப் புவரா யம்பொற்
செப்பினங் கொங்கை யார்பாற் றிண்டுதற் கரிய பூப்பாய்க்
கப்பிணர் மரத்திற் காலும் பயினதாய்க் கழிக வென்றார்"

என்ற பரஞ்சோதி, திருவிளையாடற் புராணம், இந்திரன் பழி தீர்த்த படலம் 13-ஆம் பாடற்பகுதி காண்க.

தேவதீர்த்தப் பெருமையைச் சுட்டும் பிறிதொரு வரலாறு
கேமசருமன் வரலாறு

651. இன்னுமதன் விசிட்டத்தை இயம்புவமப் புரிதன்னுள்
மன்னுமறை யவன்பரத்து வாசகோத் திரத்துவந்தான்
தன்னுடைய பெயர்சண்ட தருமனவன் றனையன்பேர்
பன்னுபுகழ் மிகுகேம சருமமெனப் பகர்வாரே. (110)

கேமசருமன் அறியாமல் மது அருந்தல்

652. உருவுமுளன் றிருவுமுள வெண்டொடியார்
[வாஞ்சையுறும்
பரிவுமுள னவனதனு லொருபரத்தை மனைபயின்முன்
இருளிரவிற் றபனமுற வேந்திழைநீர் தருகெனலும்
கரகமுறு மதுவினைநீ ரெனக்கருதிக் கைக்கொடுத்தாள்.

அவன் பாவம்தீரப் பெரியோரை நாடல்

653. வார்த்தனன்வாய தனிலதனை வயினுறுமுன்
[கான்றுமிழ்ந்தான்
பார்த்தனனப் பரத்தைதனைப் பாதகத்தை நீயெனக்குச்
சேர்த்தனையே யெனநொந்து சினத்ததட்டி யென்பாவம்
தீர்த்திடுவா ரெவரென்று பெரியோரைத் தேடினனே.

அவத்தை - துன்பம். சேடமற - மிச்சமில்லாமல் போக. அவ்வவத்தை என்றது, எதுகை நோக்கி அன்னவத்தை என் றுயிற்று.

651. விசிட்டம் - மேன்மை. தனையன் - மகன்.

652. திரு - செல்வம். ஒண்டொடியார் - மகளிர். பரிவு - அன்பு. பரத்தை - தாசி. தபனம் - தாகம். கரகம் - குடம். மது - கள்.

653. கான்றுமிழ்தல் ; ஒருபொருட் பன்மொழி.

அந்தணர் கழுவாய் கூறினது

654. அருமறையு மாராய்ந்த வந்தணரைக் கண்டிறைஞ்சிப்
பருவரலுற் றடைந்தபெரும் பாதகத்தை யகற்றினவே
பிரியுமிது பிறங்காம லானெய்யைப் பெரிதுருக்கிச்
சொரிவதுவே வாய்வார்ப்பேனெனத் துணிந்தே
[யிடுமளவில். (113)

அவனைப் பெற்றோர் கண்டு அலமருதல்

655. அனுமதித்த வந்தணரை யடிபணிந்து மீண்டவர்கள்
பனுமுறையி னல்நெய்யைப் பாவுகனல் பெருத்துருக்கி
இனியெனது வாய்வார்ப்பே னெனத்துணிந்தே
[யிடுமளவிற்
பனியுறத்தாய் தந்தையறிந் தலறியவன் பாலடைந்தார்.

656. அன்னைவன் னைவென்றே யழுங்கியுனக் கவலந்தான்
என்னைதா னெனவினைந்த விழுக்கியம்பக் கேட்டிரங்கிக்
கொன்னேநீ யாவிதனைக் குறைப்பதென்னைக்
[குவலயத்தில்
நன்னீரை நயந்தாடில் வெய்யவினைநசித் திடுங்காண்.

---

654. பருவரல் - துன்பம். ஆனெய் - பசுவின் நெய். ஆன் நெய்யைப் பெரிது உருக்கி, துணிந்து, வாய் வார்ப்பேன் என்று துணிந்து இடும் அளவில் இது (இப் பாவம்) பிறங்காமல் பிரியும் என்று அந்தணர் கூறினர் என்க.

655. பனும்; பன்னும் - சொல்லும். பாவு - பரவும். தந்தை - சண்ட தருமன்.

656. இழுக்கு - குற்றம். கொன்னே - வீணே. குவலயம் - உலகம். நசித்திடும் - அழிந்திடும்.

இளைஞனும் பெற்றோரும் இறக்கத்துணிய, வியாக்கிரபாதமுனிவர் அங்குத் தோன்றுதல்

657. என்றியம்புந் தந்தைமொழி யிசையாதே நனிமது.....ன்
அன்றவரு நீதருக வழல்தன்னி லழிவேம்யாம்
பொன்றுகபின் னீயென்று புகன்றுகரத் திடும்போதில்
சென்றடைந்தா னப்புரியிற் சரண்புலிதான்
[றிருமுனிதான். (116)

முனிவர் அவர்களைத் தடுத்தல்

658. இந்தவிளை கண்டிதுதா னென்னென்று னவர்தாமும்
வந்தவழு வினையுரைத்தார் வதைபுறவே விதிபகர்ந்த
அந்தணரை யறநொந்தா னுவியொரு மூவர்க்கும்
சிந்தவருஞ் செய்கையினைத் தடுத்தனனே திருமுனிதான்.

முனிவர் தேவதீர்த்தப் பெருமை கூறல்

659. பாவவிதந் தனைப்பாறும் பரமான தீர்த்தமிது
தேவவர தீர்த்தமெனச் செப்பியிது தனின்மூழ்கில்
பாவமிது திருமென்று பாதகனை யுடன்கொடுபோய்த்
தேவவர தீர்த்தத்தின் மூழ்குவித்தான் றிகழ்விதியால்.

---

657. மகன் இறக்கத் துணிய, பெற்றோரும், 'யா(மு)ம் அழிவேம்; அழல் தருக' என்றனர் என்க. அழல் - நெருப்பு. 'பின் நீ பொன்றுக' என்றியைக்க. சரண்புலி; புலிச்சரண்; வியாக்கிரபாதம். வந்த முனிவன் சங்கன் என்று திருவாரூர்ப் புராணம் கூறும்.

658. விதி - கழுவாய் விதி. அற - மிகவும். மூவர் - பெற்றோரும் தனையனும்.

659. பாறும் - நீக்கும். பரமான - மேலான. பாதகன் - கேமசருமன்.

அந்தணன் தீவினை நீங்கியது

660. அப்பொழுது வான்வாணி யவலவினை தானிந்த
விப்பிரனை விட்டொழிந்த தெனக்கேட்டு வியப்புற்றூர்
அப்பதியா ரனைவோரு மந்தணனு மடிபணிந்தே
இப்பொழுது நின்னருளா னீங்கினன்றீங்
[கினையென்றூன். (119)

தேவதீர்த்தத்தின் இன்னும் பல பெருமைகள்

661. எண்ணரிய ரின்னுமுள ரித்தீர்த்தந் தனிலாடிப்
பண்ணியபா தகம்பாறிப் பழுதுடலந் தனைநீங்கி
விண்ணுலகந் தனைநண்ணி யிருக்கின்றூர் விமலேசன்
கண்ணுதலான் வெண்ணீற்றூன் கறைமிடற்றூன்
[கழல்நினைந்தே. (120)

662. பரிவுடனிப் புனன்மூழ்கிப் புற்றிடங்கொண் டிருப்பானை
பரிவுடனே தெரிசித்துப் பணிந்தாரன் னியவிடத்தே
பரிவுடனே யடைந்தாங்கே விடினுமுடல் விண்ணுலகும்
ஒருவியுமை யொருபாக னுலகடைவ
[ருவப்புறவே. (121)

---

660. வான்வாணி - ஆகாயவாணி. விப்பிரன் - பிராமணன். நின், என்றது வியாக்கிரபாதரை.

661. பாறி - அழிந்து. பழுதுடல் - அழியு முடல். கறை மிடற்றூன் - விஷக்கறை பொருந்திய கண்டத்தை யுடையவன்; நீலகண்டன் என்பதாம்.

662. இத் தீர்த்தத்தில் ஒருமுறை மூழுகிப் பிறகு வேறோரிடம் சென்று மரித்தவரும் சிவனுலகமடைந்து சாமீபமடைந்திருப்பர் என்பது இச் செய்யுளின் கருத்தாகும்.

பலச்ருதி

663. சிந்தைமகிழ் வுறவிந்தத் திகழ்தேவ தீர்த்தத்தின்
சிறப்புத் தன்னைச்
சிந்தையுறக் கற்றுணர்ந்த தகுதியருங் கேட்டுணருஞ்
சால்பி னோரும்
பந்தவினை யினையறுத்துப் பரமேசன் சிவலோகம்
பற்றி வாழ்வார்
அந்தமுறுங் காலத்தி லமலேச னடிப்பணியு
மடைந்து வாழ்வார். (122)

அடுத்த சருக்கத் தோற்றுவாய்

664. தெண்ணிலவு புனற்றேங்குந் திகழ்தேவ தீர்த்தத்தின்
சிறப்பைச் சொன்னேம்
எண்ணியுளத் தெவ்வுயிர்க்கு முயிராகி நிறைந்திலங்கு
மிறைவன் பாதம்
பண்ணமொழி கமலாலை யவிதிபார்ப் பதிகோயிற்
றென்பா னெற்றிக்
கண்ணற்கு மேல்பாலிற் சரசுவதி தீர்த்தமிசைக்
கழறு வாமே. (123)

---

663. தகுதியினர் - பரிபக்குவ முடையோர். சால்பினோர் - பண்புடையோர். கற்றலிற் கேட்டலே நன்று. ஆகலின், சால்பினோர் எனப்பட்டார். பற்றி - தமக்கு உரியவிடமாகப் பெற்று. அந்தம் உறும் - முடிவு அடையும்.

664. தெண்ணிலவு - தெளிந்த சந்திரிகை போன்ற. புனற்று - நீரை யுடையது. தெண்ணிலவு புனல் தேங்கும் திகழ் தேவதீர்த்தத்தின் எனவியைக்க; புனலை யுடையதாய் விளங்கும் தேவதீர்த்த மென்க. எவ்வுயிர்க்கும் - எவ்வகைப்பட்ட உயிர்க்கும். சரசுவதி தீர்த்தம் பார்வதி (கமலாம்பிகை) கோயிலுக்குத் தெற்கே, புற்றிடங்கொண்டான் கோயிலுக்கு மேற்கே (மேலைப் பிரகாரத்தில்) உள்ளது. கமலாலயம் - ஆரூர்க் கோயில். விதி - சுற்று. நெற்றிக் கண்ணன் - சிவபிரான்; இங்கு வன்மீகநாதரைக் குறித்தது. கழறுதல் - சொல்லுதல்.

வேறு

665. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (124)

தேவதீர்த்தச் சருக்கம் முற்றும்

---

15. சரயுவதிதீர்த்தச் சருக்கம்

666. உத்தரதே சந்தன்னி லயோத்தியெனும் புரியொன்றுண்
டுவமை யில்லா
அத்தகைய புரிமுன்னு ளாண்டதச ரதன்குலத்தி
னனை வேந்தன்
சத்தியவ தனனுலே தசரதனெ னும்பெயரைத்
தரித்தா னுமன்
சித்தசனை யொத்தவனெண் டிசைமுழுதுங்
றேசஞ் சேர்ந்தே. [காப்பான்றென்

தசரதன் வேட்டையாடுதல்

667. நாட்டினுக் குந்..... .....வலங் கினுக்குறவு
நயந்து தானும்
வேட்டையினை வலிகோலும் இளஞரொடு .....
வீர ரோடும்

---

666. வட நாட்டில் அயோத்தி என்னும் நகரில், தசரத மன்னன் வழிவந்த தசரதன் என்ற பெயரையுடைய ஒரு மன்னன், மன்மதனை ஒத்த உருப் பெற்றிருந்தும், ஊமனாகி, நாடு காவல் புரிந்து வந்தான் என்பது இச் செய்யுளின் பொருள். சித்தசன் - மன்மதன்.

667. வலிகோலும் - வலியைச் சுற்றிக் கட்டுகின்ற. இளஞர் - வாலிபரோடு. சரபம் - சிங்கத்தைக் கொல்லும் எண்காற்

காட்டையடைந் தனன்புலியைக் கரடியினைச் சரபத்தைக்
கரியை மானை
ஓட்டியொறுத் துடலறுத்து வதைத்தனன்மற்
மொடுக்கி யேதான். [றையபிறவை

அரசன் சரசுவதி தீர்த்தமாடல்

668. படர்ந்தனன்றென் றிசைநோக்கிப் பரிவாரத்தொடும்
பதிதென் னூர் [பரம
அடைந்தனன்றீ பனத்தோடு மறல்வேட்கை
வவலந் தீர்க்கும் [யொடும்போத
தடந்திரைநீர்ச் சரசுவதி தீர்த்தத்தைக் கண்டதனிற்
றண்ணீ ருண்டான்
படிந்தெழுந்தா னதுதன்னிற் பதவிதியாற் பனுவலினைப்
பாடி னனே. (3)

அரசன் ஊமை தீர்தல்

669. அதிசயித்தா னரையனவன் மூகனியா னிதன்முன்ன
மாவா னுயும்
பதவித..... ....ததயங்கள் பாடிநன் னீர்பருகிப்
பண்ணு நண்ண

பறவை என்பர். ஓட்டி - துரத்தி. மற்றைய பிறவும் என்றது கூறப்படாத ஏனை விலங்குகளை. முன் இரண்டடிகள் சிதைந் துள்ளன.

668. பரிவாரம் - தன்னைச் சூழ்ந்துள்ள கூட்டத்தினர். தென் - அழகிய. தீபனம் - பசி. அறல் வேட்கை - நீர் வேட்கை; தாகம். அவலம் என்றதில் எல்லாத் துன்பமும் அடங்கும். படிந்து - மூழ்கி. பதவிதி - வேதம் ஓதும் முறைகளில் பதம் பத மாகச் சொல்லும் ஒரு முறை. பனுவல் - வேதம்.

669. ஊமனையிருக்கும் தான் வேதத்தைப் பதவிதியால் பாட இயன்றதை எண்ணி அரசன் அதிசயித்தான் என்க. பண்ணும்

விதமுறமூழ் கலினுலு மென்றெண்ணிக் கண்டனன்றன்
திருக்கண் ணுலும்
மதிநுதலே வண்கமலா லேயத்துறையு நாயகியை
வடதிர்த் தத்தில். (4)

அரசன் பராபரையைப் பூசித்து வரம் வேண்டுதல்

670. கரதலங்க ளோரிரண்டிற் கமலமல ரினைப்பரிக்கும்
கன்னி தன்னைப்
பரமசிவன் றனைப்பிரியாப் பராபரையைப் பசுவுக்குப்
பாசந் தீர்க்கும்
நிருமலையைக் கருவிலியை நினைப்பார்கள் வினைப்பாவ
நீக்கு வாளை
விரிவுடையென் சிந்தையினில் வீற்றிருப்பா ளைப்பூசை
விதியாற் செய்தான். (5)

671. அஞ்சலிசெய் தெதிரவனின் றன்னையே வலகிறந்த
வுயிர்க டோறும்
எஞ்சலற வுறைவாய்நீ யிருபய.... .....
....
அஞ்சனத்திற் பரிபாகத் ததுநீக்கி யமலனையு
மறிவிப் பாய்நீ
திஞ்சலு..... பணுமிவையுந் துடைப்பாய்நீ
தொண்டர்க் கெல்லாம். [தொழுதேத்துந்

நண்ணப்பாடி என்றியைக்க. மதிநுதலைக் கண்டனன் - சிவபெரு மானையும் தரிசித்தான். வடதிர்த்தத்தில் - திர்த்தத்தின் வடக்கில்.

670. அம்பிகை தன் இரு கரங்களில் தாமரை மலர் வைத் திருத்தல் கூறப்பெற்றது. பரித்தல் - தாங்குதல். பராபரை - உமை. பசு - உயிர். பாசம் - வினையாகிய பிணிப்பு. நிர்மலை - மலமற்றவள். வினைப்பாவம் - வினையால் உண்டாகும் பாவம்.

671. அடிகள் சிதைந்துள்ளன. அலகு இறந்த - எல்லை யற்ற. எஞ்சல் அற - குறைவு நீங்க. அடியார்களின் அறியாமைப் பிணியை நீக்கி, இறைவனெடும் கூட்டுவிக்கும் அருட்சக்தியை இச் செய்யுளில் வியக்கின்றார் என்க.

672. பூமகளு நீதானே புவிமகளு நீதானே
புனித வாய்மைப்
பாமகளு நீதானே பலவிதசத் தியுநீயேப....
....
க.....களாகிய கங்கை நிகழ்பொன்னி யமுனைசர
சுவதி யென்னும்
பேர்மகளீ ரனையருநீ.... ....சரியவுயி ரனைத்தும்
பெற்றுய் நீயே. (7)

உமை வரமருளல்

673. என்றுதுதி தசரதன்ரு னியம்புதலு முமைமகிழ்ந்தே
யிரக்க மெய்தி
முன்றிகழ்ந்து வேண்டுவர மொழிதருவே மெனவவனு
மூழ்கி யிங்நீர்
உன்றனைப்பூ சனைபுரிவார்க் கிட்டவரந் தனையுதவி
யுகந்தே யாட்கொள்
என்றியம்ப வோமெனவே .....யி லுமையவளு
மியம்ப லுற்றாள். (8)

674. பதிஞன்கி விருநான்கிற் படிந்தீர்ந்த புனலிடைப்
பரிவு கூர்ந்தே
விதியாலே வேதத்தி னெமைப்பூசை புரியுமவர்
விருப்ப மெல்லாம்

---

672. பூமகள் - இலக்குமி. புவிமகள் - பூதேவி. பாமகள் - சரஸ்வதி. இதனுள்ளும் அடிகள் சிதைந்துள்ளன.

673. முன் திகழ்ந்து - முன் தோன்றி. இங்நீர் - சரஸ்வதி தீர்த்தம். ஓம் என்றே - அவ்வாறே ஆகுக என்று.

674. பதிஞன்கில் - சதுர்த்தசியில். இரு நான்கில் - அஷ்டமியில். திதிவலம் - காக்கும் வன்மை.

திதிவலத்தினுஞ் செய்வாமென் றுளத்துண்
வுள்ளஞ் செய்தாள் [மகிழ்ந்துதிரு
இதுதானே யேற்றவர மெனக்கென்று மன்னவனு
மிறைஞ்சி னானே. (9)

அரசன் சிவபுரமடைதல்

675. மன்னவனுக் கருள்புரிந்து மாதேவி திருவுருவின்
மருவ மன்னன்
அன்னையிரு பதம்பணிந்தே யார்வமுறத் தன்புரியை
யடைந்து காத்தே
இன்னலற வெவ்வுயிரு மெடுத்தவுடல் விடுத்தமல
....துஞ்
சின்மயன்றன் சிவபுரத்தின் செறிந்தனன்பே ரிலையத்திற்
சிவன்பா தத்தே. (10)

பலச்ருதி

676. பற்றிடுவர் பராபரைதன் சன்னிதியி லறமாதி
பகர்வா ராஞர்
பெற்றிடுவர் பேருலகும் பெண்ணையிதழ் தனிலெழுதிப்
பெருமான் காதை
கற்றுணர்வார்க் குதவினருங் ..... ருமருமறையிக்
கதையு மென்று
முற்றமொழி யினர்கேட்பர் தாமுமினி கயாதீர்த்தம்
மொழிகு வாமே. (11)

---

675. மாதேவி, திருவுருவில் சேர; நேர் தரிசனமளித்த பரசக்தி, தன் பீடத்துள் மறைந்தனள் என்க. சின்மயன் - ஞானமயமான சிவபெருமான். செறிந்தனன் - அடைந்தான். சிவ பிரான் அருள் பெற்றவர் இறந்தபின் சிவபுரத்தில் இருப்பதும், பின்பு இலயகாலத்தில் சாயுஜ்யம் அடைதலும் முன்பு பலவிடங் களிலும் கூறப்பெற்றுள்ளன.

676. அறம் ஆதி பற்றிடுவர் என்றும், பேருவரம் பெற் றிடுவர் என்று இயைக்க. பெண்ணை . இதழ் - பனையோலை. கற்று உணர்வார் - கற்றுணர்ந்து தெளிந்தவர்கள்.

வேறு

677. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (12)

சரசுவதிதீர்த்தச் சருக்க முற்றும்

---

16. கயாதீர்த்தச் சருக்கம்

ஆரூரின் எல்லை

678. பூர்வதிசை கயாதீர்த்தம் புண்டரிகக் கண்ணன்பொற்
பாத மேல்பால்
பார்பரவு முருத்திரன்றன் பாதந்தென் பால.....யு
மந்தப் பாதஞ்
சீர்நிலவுந் திருவாரூ ரெல்லைவட்டந் திகழ்ந்தஞ்சு
குரோசந் தேவர்
ஆர்வமுறத் தோன்றிப்புற் றிடங்கொண்டா லுலையமு
மதற்கு நாப்பண். (1)

கதைச் சுருக்கம்

679. சேர்ந்தனைய திருவாரூர்த் திருவெல்லைத் .....ததிக....ங்
கயாதீர்த் தத்தின்
வேந்தனெழில் விடுரதனுல் விதிவழியாற் சிராத்தவிளங்கச் செய்தே

---

678. பூர்வ திசை - கிழக்குத் திக்கில். பார் - உலகம் பரவு - துதிக்கின்ற. நாப்பண் - நடுவில். கிழக்கே கயா தீர்த்தம், மேற்கே திருமால் கோயில், தெற்கே உருத்திர (கோடி), வடக்கே ..... இந்த எல்லைக்குட்பட்ட பஞ்சகோச விஸ்தீரணத்துள் நடுவிலுள்ளது புற்றிடங்கொண்டான் ஆலயமாகும் எனபது இச் செய்யுளில் அமைந்த பொருளாகலாம்.

679. எழில் - அழகுடைய. விடுரதன் - கேகய நாட்டரசன். பிரேத உடல் - பேய் உடல்; இறந்தபின் பெறுவது. செய்த

தீர்ந்தொழியப் பிரேதவுடல் செய்தநன்றி கொன்ருனைத்
திருந்தி யன்ருன்
சார்ந்துதன துலகோம்பிச் சங்கரனின் னருள்பெற்ற
தகவுஞ் சொல்வாம். (2)

கேகயதேயத்தின் சிறப்பு

680. குடகடலிற் குணதிசையிற் கேகயமென் றெல்லோருங்
கூறுந் தேயம்
..... வொழுகு மீன்புனலெந் நாளுமுள
திருண்ட பாவ
நடலையினை நகிய.... ....தியாடு
மெவற்கு மென்றும்
திடமுறநால் வேதவிதி தேர்ந்து .....
.....ாத தென்பால். (3)

வேறு

விடூரதன் என்னும் வேந்தன்

681. வளமார் மாகிஷ் மதிநகரின்
வாழு மன்னன் வரமுடையான்
விளமார் சேனை விதமுடைய
வீர னவன்பேர் விடூரதனே

நன்றி கொன்ருனைப் பிரேதவுடல் தீர்ந்தொழியச் செய்தான் என்க.

680. குடகடல் - மேலைக்கடல். குணதிசை - கிழக்குத் திக்கில். மீன் ஒழுகு புனல், என்றியைக்க. ஒழுகு - இயங்கும். திடம் உற - உறுதி பொருந்த. இருண்ட பாவ நடலை - இருள் மயமான பாவமாகிய வஞ்சனை. இச் செய்புள் மிகவும் சிதைந்துள்ளது.

681. விளம் - வெள்ளம் என்பதன் திரிபாகலாம்; வெள்ளம் ஒரு பேரெண். ஊக்கம் - உள்ளக் கிளர்ச்சி. உதாரம் - ஈகைக் குணம். தளம் - இதழ். இதய கமலத்தில் - நெஞ்சத் தாமரையில். இதைய தளமார் கமலம் என வியைக்க. சச்சிதானந்தம் - உண்மை, அறிவு, மகிழ்வு.

உளமார் கருணை யுணர்வுக்க
முதலாம் வாய்மை யிவையுடையான்
தளமா ரிதய கமலத்தி
லுணர்ந்தான் சச்சி தானந்தம். (4)

விடூரதன் வேட்டையாடல்

682. தேரார் வீரர் புடையடைய
துந்து மாதி விதந்துவைப்ப
வாரார் வலிவே டருமிடைய
வாயால் வவ்விய ஞாளிகளும்
காரார் கரடி புலிகரிமான்
மரையுங் கண்டு கலுழ்ந்தொருவப்
போரார் புரவி தனையுகைத்து
வேட்டை விரும்பிப் புனம்புகுந்தான். (5)

683. கரத்தா லுரத்தாற் கனசிலையால்
கதிரா னிறைகூ று.....
சரத்தாற் றுணிந்தே சரபத்தின்
றலையைப் புலியின் றலைதனையும்
உரத்தா னடக்கு மோங்கலினைக்
கரடிதன்னை யுழைதனையும்
குருத்த தகரா மதைமற்றைக்
கோலக் கொடிய விலங்கினையும். (6)

---

682. துந்தும ஆதிவிதம் - துந்துமி முதலாகிய பல வாத்தியங்கள். மிடைய - நெருங்க. வவ்விய - கௌவிய. ஞாளிகளும் - நாய்களும். மரை - மானின் ஒருவகை. கலுழ்ந்து - அலறி. ஒருவ - நீங்க. உகைத்து - செலுத்தி. புனம் - காடு.

683. உரத்தால் - மார்பினால். கனசிலை - பெருமை பொருந்திய வில். சரபம் - சிங்கத்தைக் கொல்லும் எண்காற் பறவை. உரத்தான் - வலிமையான். நடக்கும் ஓங்கல் - யானை. உழை - மான். குருத்ததகர் - பருத்த ஆடு.

வேந்தன் வேட்டஞ்செய்து இளைத்தல்

684. துன்னுஞ் சேனை தொடரவதி
தூரஞ் சென்றுன் சுடவெயிலும்
இன்ன லெய்தித் தபனத்தாற்
பசியினலு மிகவயர்ந்தான்
என்ன செய்வா மெனமெவ்வண்ணி
யப்பா ..... தியங்கித்
தின்னுங் கனிகாய் விதமில்லா
வனத்தைச் சேர்ந்து செறிந்தனனே. (7)

வேந்தனிவர்ந்த புரவி அவனை வீழ்த்தீச் சென்றது

685. ....ந் தளைத்த
சேனைதனையுந் தான்கண்டான்
மன்னும்புரவி யினை..... .....
.....த் துகைத்து வளநாடு
தன்னை யடைவோ மென்றிவுளி
தன்மேற் செல..... .....
வின்ன லெய்திப் புரவிநிலத்
திடைவீழ்த் திடநொந் திரங்கினனே. (8)

பேய்களின் தோற்றம்

686. தனித்துத் தானே தரைமிசையிற்
முளா னடந்தான் றனக்கெதிரே
துணித்த பிரேத ரொருமூவர்
தோன்றக் கண்டா னவருடையயே

---

684. துன்னும் - நெருங்கும். அதிதூரம் - அதிக தூரம். உம்மை எச்சவும்மை; அதிதூரம் சென்ற இளைப்போடு வெயிலும் சுட என்னும் பொருட்டு. இன்னல் - வருத்தம். தபனத்தால் - தாகத்தால். அயர்ந்தான் - தளர்ந்தான். வனம் - பாலை நிலம்.

685. இவுளி - குதிரை. அடிகள் சிதைந்துள்ளன.

686. தாளால் - கால்களால் பிரேதர் - பேயுருவமுற்றவர்கள். பணித்தாள் - பரவிய பாதம். உலந்த - வாடிய. வயின் - வயிறு.

பணைத்தா ளுலந்த வயின்கரிய
பற்செங் கண்ணும் பார்த்தருண்டான்
மனித்த ருலகி லிவ்வடிவங்
காணே மென்று மதித்தறைவான். (9)

வேந்தன் பேய்களோடு பேசல்

687. இந்த வுருவங் கண்டஞ்சி
னிந்த வுலகு தனிலார்நீர்
சிந்தை தளர்ந்தி ருடலயர்த்துஞ்
சிறையுற் றயர்வா னிழிவற்றீர்
நுந்தம் பெயரு நுவன்றிடுமி
ஞெந்தேன் வேட்டை வனந்தன்னில்
வந்தே னென்பேர் விடுரதனே
மாதின் மதுரை மன்னனையும். (10)

பேய்களின் பெயர்

688. முன்னம் புரிந்த வல்வினையான்
முளைத்தே பிரேத வுருவாகி
இன்ன லுறுவே மிவ்வனத்தி
லென்பே ரூனுண் பானென்பார்

கரிய பல் - வெள்ளொளி மங்கிக் கருகிய பல். மனித்தர் - மனிதர்; விரித்தல். 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மானில்த்தே' (திருநா. தேவா. கோயில். 4).

687. உடல் அயர்த்தும் - உடல்சோர்வுறுத்தும். நுவன்றிடுமின் - சொல்லுவீராக. மாதின் மதுரை - பெண்ணினீன அரசியாகக்கொண்ட மதுரை; ஈண்டுப் பெண்ணென்றது தடாதகைப் பிராட்டியாரை. மன் - மன்னரை. விடுரதன் 'குணகடலிற் குண திசையில் கேகய' நாட்டு மன்னன் (680) என்று கூறியிருக்க, இங்கு 'மாதின் மதுரைமன்' என்று கூறியதன் பொருத்தம் ஆராயத்தக்கது.

688. வல்வினையான் - தீவினையால். முளைத்து - தோன்றி. ஏ - அசை. ஒருபேய் தம் பெயர்களை (1) ஊனுண்பான், (2) அழைவதன், (3) நன்றி கொன்றவன் என்று கூறிற்று எனக.

என்னி லிளையான் அதைவதனே
யிளையான் றனக்கு மிளையான்பேர்
செய்யு நன்றி யினைக்கொன்ற
வனென்றவரு ளொருவன் செப்புதலும். (11)

வேந்தன் நும் இரையாதெனப் பேய்கள் கூறல்

689. இந்த வுலகத் துடலெடுத்தா
ரெவரு மன்னந் திளைத்திருப்பர்
இந்த வுலகந் தனிலுதித்தே
யிருக்கின் றீர்நும் மிரையாதோ
சிந்தை திகழ வெனக்கிங்கே
செப்பீ ரெனலுஞ் செகத்திறைவன்
எந்த முணவு .....
.... மிசைக்கின் றான். (12)

பேய்களின் உணவுகள்

690. அருந்தும் பொழுது மனைவி.....
..... தேயொறுக்கு மவரருந்து
மருந்து மற்றை யனவெல்லாம்
பிரேதற் காமென் றேயதனை

---

689. அன்னம் - சோறு. திளைத்திருப்பர் - உண்டிருப்பர். இரை - உணவு. திகழ - விளங்குமாறு. இறைவன் - அரசன். ஈற்றடி சிதைந்துளது. பேய்களின் உணவு அடுத்துவரும் செய்யுள்களிற் காணப்பெறும்.

690. இச் செய்யுள் முதல் 699 முடிய பேய்களின் உணவுகள் கூறப்பெறுகின்றன. செய்யுள் சிதைந்துள்ளமையால் நேரான பொருள் காண்பது இயலாதாகின்றது. அருந்து; தொழிலாகு பெயர்; உணவு என்ற பொருளில் வந்துள்ளது. முதல் இரண்டடிகளின் பொருள், ஒருவர் உண்ணும்போது, மனைவி அருகிருக்க உண்பதே உண்பவரைச் சாரும்; மற்றவை யெல்லாம் பேய்களைச் சாரும் என்று பொருள் கொள்ளலாமோ எனத் தோன்றுகின்றது. சிறந்த பாடம் கிடைப்பின் நலம். 2—3 அடிகளில் சிவபிரானுக்கு நிவேதியாத அமுது பேய்களைச் சேரும் என்று கூறப்பெற்றது.

அக்கிரத்தில் - முதலில். விசுவதேவர் - சிவபெருமான்.

அருந்து முன்னே யக்கிரத்தில்
விசுவ தேவர்க் கமுதருத்தி
அருந்தல் கடனே யதுசெய்யா
தருந்துமன்ன மதுதானும், (13)

691. இரவிற் புரியும் பிதிர்தான
பலமு மெமக்கா மிளமதியோ
டிரவி யிசையும் பொழுதியற்ற
லினிதே சிராத்த மிதுதன்னை
எ.....யூட்டு மவர் பலமு
முள்ளும் புறம்பு மலகிட்டுப்
பரிவால் மெழுக்கிட் டலங்கரித்துப்
பரிந்து பண்ணப் பலந்தானும், (14)

692. பூத்தாள் கையாற் புணர்ந்தனவும்
பின்ன பாண்டம் பொருதனவும்
ஆர்த்தே சிராத்தத் தருந்தினர்க்குக்
கனகமுதவா தவர் பலனும்
வார்த்தை மதுரந் தனைத்தந்து
மகிழ்ச்சி செய்யார் வரந்தானும்
ஏத்து மறையி னொலியில்லா
மனையிற் சிராத்த மியற்றுதலும், (15)

---

691. இச் செய்யுளில் இரவில் செய்யும் பிதிர்தான பலனும், அமாவாசையில் செய்யப்படும் பிதிர்க்கடனை அங்ஙனே விட்டு வேறு வேளையில் செய்யும் பலனும், பெருக்கி மெழுகாத இல்லில் சமைத்த உணவின் பலனும் பேய்களுக்காம் என்பது தெரிவிக்கப் பெற்றது.

பிதிர் தானம் - பிதிரர்கட்காகச் செய்யும் தானம். மதியோடு இரவி இசையும்பொழுது - அமாவாசை யன்று. உள்ளும் - அகத்தும். அலகிட்டு - பெருக்கி (விளக்கி).

692. இச் செய்யுளில் பூப்பிலிருப்பவள் தன் கையாற் சமைத்த உணவும், உடைந்த பாத்திரங்களிற் சமைத்தனவும், சிராத்த காலத்தில் உணவு அருத்திப் பொன் முதலாய தக்ஷிணை கொடுக்காதவரின் சிராத்த பலனும், மறையொலி விளங்காத

693. விடலி பதியை மெய்தன்னின்
மிக்க விருப்புற் றவர்தம்மை
உடலிற் குறைந்த வுறுப்பினரை
யூட்ட லதுவுஞ் சிராத்தத்தின்
முடவர் குருடர் மூதலோரை
முனியார் பலனுஞ் சிராத்தத்தின்
கடனுங் கிரியை கனக்குறைத்தி த
யியற்று மவர்தங் கடனனைத்தும், (16)

694. ஆர்க்குங் கேட்கி லருவருப்பா
மன்னந் தானு மெமக்காகும்
பார்க்கு ளீ..... சித்த
பதமுங் கபத்தாற் பயின்றனவுஞ்
சீர்த்த வனமு மிருடன்னிற்
சிறுநீ ரொருங்கு கலந்தனவும்
பார்த்தி வர்க்கும் பதியாலு
யெமக்கா மென்று பகர்தலுமே, (17)

விட்டில் செய்யும் சிராத்த பலனும் பேய்களுக்காம் என்பது கூறப் பெற்றது.

பூத்தாள் - பூப்படைந்தவள். பின்ன பாண்டம் - உடைபட்டு ஒரு பக்கம் மூளியாகப்போன மட்பாண்டம். பலன் - பயன்.

693. சோர புருஷனைக் கூடும் மனைவியுடன் வாழும் அந்தணனையும், அங்கவீனரையும், முடவர் குருடர் முதலியோரையும் கொண்டு செவனவும், கிரியைகளைக் குறைத்துச் செய்வனமான சிராத்தங்களின் பயன் பேய்களைச் சாரும். விடலிபதி; 'மனைவி பிற்முகம் பார்க்கவும் வாஞ்சிக்கும் பனவன்' (சைவ. பொது. 246). விடலி - தூர்த்தப் பெண்; மலடியும் ஆம். குருடர் முடவரைச் சிராத்த காலத்தில் பார்த்தலும் ஆகாது என்றபடி. கடன் - கடமை.

694. அருவருப்பாம் அன்னம் - ஊன் முதலியன. கபத்தால் - சளியினால். பார்த்திவர்க்கும் பதியானுய் - அரசர்க்கெல்லாம் அரசனுனவனே.

பிரேத உடற்படுவார் இன்னர் என்பது

695. இந்தப் பிரேத வுடலந்தா
னென்னபாவ மியற்றி னர்க்கு
வந்து வருத்து மெனமன்ன
..... வயதித் துரைப்பான்
சிந்தை துயங்கிக் கோளுரையைச்
செப்பு வாருஞ் செகுத்துயிரைப்
புந்தி தனிலூன் பொருளென்றே
விதியைக் கடந்து புசிப்பாரும், (18)

696. இட்ட மாகத் தேவரடி
யருச்சித் தருந்த லினிததனை
விட்டே பிதிர்கா ரியத்தினையும்
விளையா தெய்தும் வினையினரும்
ஓட்டி யடியார் பசியினையு
மொழியா திருந்தே யுண்பாரும்
துட்ட ராகிப் பரர்பாரித்
தோளை விரும்பித் தோய்வாரும், (19)

---

695. இச் செய்யுள் முதல் 699 முடிய ஒரு தொடர். பிரேத வுடலுக்குக் காரணமான பாவங்கள் கூறப்பெறுகின்றன. பிரேத வுடல் - பேயுடல்.

துயங்கி - தளர்ந்து. கோளுரை - புறங்கூறல். உயிரைச் செகுத்து - பிராணிகளைக் கொன்று. பொருள் என்று - மேன்மையான பொருள் என்று. விதியைக் கடந்து - வேதவிதியைத் தள்ளிவிட்டு.

696. தேவபூஜை செய்யாமல் உண்பது; சிராத்தங்களைச் செய்யாதிருத்தல்; ஏழைகளின் பசி தீர்க்காமை; பிறர் மனைவியரைக் காமுறுதல் என்ற பாவங்கள் இங்குக் கூறப்பெற்றன.

இட்டமாக - விருப்பமாகக் கொண்டுள்ள. பிதிர் காரியம் - பிதுரர்க்குரிய சடங்குகள். அருந்தல் - உண்டல். விளையாது - செய்யாமல். பரர்பாரி - பிறர் மனைவியின். தோய்வாரும் - அணைவாரும்.

697. அபகா ரகரும் பிறர்பொருளை
.... வினைக்கும்
அபவா தியரு மருணிதியி
லாசை யதனற் கன்னிகையை
விபரீத ....ணைகினர்
விருத்த ரீன ரெ னுமிவற்குச்
சுபமின் றிதுதா னென்றெவருஞ்
சொலவு மூதவுந்துரி ..... (20)

698. விதியும் விளம்பும் வேதங்கள்
விரிய வுணர்ந்த விப்பிரரும்
உதரத் துறச்சூத்திர ரன்ன
முடலி லொழியி னவர்தாமும்
பதிதராகிப் பிரேதவுடற்
படுவ ரதனற் பார்த்திபனே
மதியி லுயர்ந்தோர் மறந்தேயுஞ்
சூத்திர ரன்ன மாந்தாரே. (21)

699. தேச நீதி குலாசாரஞ்
செய்யா தவருஞ் தெளியாதும்
பேசும் பிரேத யோனியினைப்
பெறுவா ரென்று பேசுத.....

---

697. செய்யுள் மிகவும் சிதைந்துள்ளதால் நேர் பொருள் காணக்கூடவில்லை. அபகாரகர் - அபகரிக்கின்றவர்களும். பிறர் பொருளை அபகாரகரும் என்க. அபவாதியர் - வீண்வாதம் செய்வோர். அருள் நிதியில் - அருட் செல்வத்தில். அருள் நிதியில் அபவாதரும் என்க.

698. விப்பிரர் - வேதியர். உதரத்து உற - வயிறு நிரம்ப. உடலி ஒழியின் - இறந்தபின். பதிதர் - வருணசிரம ஒழுக்கம் தவறியவர். மாந்தார் - உண்ணர்.

699. தேச நீதி - நாட்டுக்குரிய ஒழுக்கம். குலாசாரம் - குலத்துக்குரிய ஒழுக்கம். தெளியாதும் பேசும் - அறியாதும் பிதற்றும்.

.... னினியிந்த
வவலவுடல மடையாத
மாசில் லாத வழியுமுரை
யென்னவவ .... (22)

அரசன் மாசில்லா வழியுரை எனக்கேட்கப் பேயுரைத்தது

700. அன்னை யெனவே பரதார
மயலான் மனையா டனையன்ப
..... னன..... பிரேதவுரு
வெடுப்பா ரல்லா ரெந்நாளும்
மன்னு முலகின் மனிதரையு
மற்றை ....ரும்
பின்ன மலவே யெனவெண்ணித்
தமைப்போ லென்றும் பேணுநரும். (23)

701. பரிவோ.... கனக.... டெனவே
பார்ப்பார் தாமும் பசித்தடைந்தால்
உருகி யன்ன மூட்டினருந்
திலத்தை மறையோர்க் குதவினரும்
உரிய விதிநூல் மறவாதே
யோதி யதனை யுணர்வாரும்
விரத சீல முடையாரும்
பிரேத ராகார் விடுரதனே. (24)

---

700. பிறர் தாரத்தை அன்னையென நினைப்பவரும், உலக மனிதர் யாவரையும் தம்மைப்போல் கருதுபவரும் பேயுடல் அடையார் என்பது இச் செய்யுளின் கருத்து. பேணுதல் - காத்தல்.

701. அந்தணர்க்கு அன்னமளிப்பவர், விதி நூல்களை ஓதி யுணர்ந்தவர், விரதசில முடையவர் என்ற இவர் பேயுடல் அடையார் என்பது இங்குக் கூறியது. திலம் - எள். விரத சீலம் - விரத ஒழுக்கம்.

702. இன்ன லொருவன் செய்திடி னு
மினிமை யொருவன் செய்திடி னும்
முன்னை வினையின் பலனெனவே
யவரைநாடா முறையினரும்
பொன்னே வினையி னுந்தமது
புலத்திற் பதரே பொருந்தினுமுற்
கன்ம பலமே யிவைதாமு
மென்றே யோதுங் கணக்கினரும், (25)

703. தான தருமந் தனைப்புரியத்
தவரு விதிநூ றனையுணர
மான முடையார் தமக்கூக்க
வழியை விளம்பு மதியினரும்
பேனை முகுடு தனைப்பிறவும்
வதையா தவற்றைப் பேணுநரும்
ஈன மான பிரேதவுட
லெடுப்பா ரல்ல ரிறையவனே. (26)

704. என்றும் யாக மியற்றினரு
மீச னமரு மெல்லிதொறும்
சென்று சென்று பணிவாருஞ்
தீர்த்தந் தொறுஞ்சென் முடினரும்

---

702. பிறர் தமக்குத் தீமை செய்தாலும் நன்மை செய்தாலும், தம் நிலம் நன்முக விளைந்தாலும் விளையாவிட்டாலும், மகிழ்ச்சியோ துன்பமோ அடையாமல் எல்லாம் கன்மபலன் என்றிருப்பார் பிரேதவுடல் அடையார் என்பது இங்குக் கூறப் பெற்றது. புலம் - வயல்.

703. முகுடு - மூடு என்பதன் விகாரம்; மூட்டுப்பூச்சி.

704. துரிசு துடைக்கும் முறை - கழுவாய் முறை. சுவைப் பாரும் - படித்தறிவாரும்; அன்றிச் செய்வாரும் ஆம். கன்றும் - சினக்கும். அவனி காவலன் - அரசன்.

துன்றுந் துரிசு துடைக்குமுறை
சொல்லு மியலீலச் சுவைப்பாரும்
கன்றும் பிரேத வுடல்முற்றுக்
கலுழா ரவனி காவலனே. (27)

705. திகழ வாவி கூபாதி
செறிந்த சோலை செய்வாரும்
மிகழ வெவரும் வழிதன்னில்
தண்ணீர்ப் பந்தல் வைப்பாரும்
இகழு மிந்தப் பிரேதவுட
லெடுக்கா ரென்ப விறையவனே
புகழும் வினையின் விதம்புகன்றே
னினியென் குறிப்பும் புகன்றிடக்கேள். (28)

பேயின் வேண்டுகோள்

706. எடுத்தே பிரேத வுடலத்தை
யின்ன லுறுவே மிவரின்னல்
கெடுத்தே யிடுவா யென்றேநீ
யின்றே கயாதீர்த் தந்தன்னின்
முடித்தே யிடினே சிராத்தத்தை
யெம்மைக் குறித்து முறைவிதியால்
விடுத்தே யிந்த வெறுப்புடலை
யிருப்பே மமரர் விண்ணுலகின். (29)

அரசன் பேயின் வேண்டுகோட்கு ஒத்துக் கொள்ளல்

707. மற்றோர் பற்று மெமக்கில்லை
மன்ன நினையே தானன்றி
அற்ற ருற்ற துயர்மறுக்கை
கடனே யரையற் கென்றுற்றார்

---

705. வாவி - குளம். கூபம் - கிணறு. குறிப்பு - எண்ணம்.

706. இவர்.....யென்றே; இது, சிராத்த ஸங்கல்பத்தைக் குறித்தபடி. சிராத்தத்தை முடித்தேயிடின் என்றியைக்க. துளங்கல் - நடுங்கல். கயா, காசிக்கு அருகிலுள்ள ஒரு புண்ணியத்தலம்.

707. துயர் மறுக்கை - பசித்துயர முண்டாகாமல் தடுத்தல். இவ்வாறு உரைத்தவன் ஊனுண்பான் என்க. துளங்கேல் - நடுங்காதே.

அற்ரு னூனுண் பானுரைக்க
வுருகியரைய னதை நோக்கிச்
சொற்ற படியே யான்புரிவேன்
றுளங்கே லென்று சொல்லியபின், (30)

அரசன் பேய்கள் வானில் இயங்க ஆற்றல் பெற்றமைக்குக் காரணம் கேட்டல்

708. உணர்ந்தீர் ....
யுணர்த்து கின்றீ.... .....ரவம்
இணங்கி வானந் தனிலியங்க
லுற்றீ ரிந்த விதமான
குணங்க ளிவற்றுக் கேதுவினைக்
கூரு யெனலுங் குணமூன்றும்
இணங்கு மேது வித.....
..... விசைக்க விசைந்தனனே. (31)

பேயின் விடை

709. இமையோர்க் குரிய யோனிவிதத்
தொன்பதாவதெ .....
மிமையோர் போல்வர் காயத்தி
யங்க வல்லே மெமையறிவேம்

---

708. ஏது - காரணம். குண மூன்று - ஸத்துவர், இராஜஸம், தாமஸம் என்ற முக்குணங்கள்.

709. தேவயோனி விதம் ஒன்பது; பைசாசர், இராக்கதர், இயக்கர், கந்தருவர், இந்திரர், சௌமியர், பிராசேசுவரர், பிராமியர், மால் (சிவதருமோத்தரம்: சிவதருமவியல்; 27-28). பைசாச புவனத்திலிருப்பவர்க்கு எண்குணங்கள் கூறப்பெறுகின்றன.

மிக அரிய கருத்துக்களைக் கொண்ட இப் பாடல்கள் சிதைந்து போயினமை மிகவும் வருந்தத்தக்கது. இமையோர் காயத்து - தேவர் உடல்களில். கரீசன் - ?

கமைதா ரு..... .....
கழற வல்லேங் கரீசற்குத்
தமையே மதிக்குந் தவறெனவுஞ்
சாற்ற ..... ராபதியே. (32)

710. இவையே குணங்க ளெமக்கிவற்றை
யல்லா வெல்லா மிறையவனே
நவையே ..... யிப்பொழுது
நவிற்று கின்றேனடிக் கேள்
சுவையீன் ....
.....யக ..... வலமல்லேம்
குவையா மன்னங் கண்டாலுங்
குடி..... .... (33)

தாம் அப்பாலிவனத்தை விட்டு ஏக முடியாமையைப் பேய் கூறல்

711. இந்தத் தலத்தைப் பிரிந்தப்பா
லியங்க வெண்ணி லெஞ்சிரத்தின்
உந்தி யுந்தி யொறுப்பார்கள்
கையி ரும்பா லோவாதே
முந்த வினையின் முறையாலே
நமன்ரு னேவமு வேழும்
சிந்தை வருந்திச் செயலொழிந்து
நிற்போ மற்றென் செய்வோமே. (34)

பேய்கள் தம் துன்பங்களை மேலும் சொல்லி முறையிடல்

712. துன்ப ..... தனையுண்டு
துய்ப்பே மவைமுற் பரிந்து நிற்றல்
இன்ப மறியே மெவனெருவ
.....படி ....னகாயோ ராவா

---

710. இறையவனே - மன்னனே.

711. ஓவாதே இரும்பால் ஒறுப்பர் என்றியைக்க. ஓவாதே - நீங்காமல். உந்தி உந்தி - அடுக்கு, விரைவில் வந்தது.

அன்பி னிசியி னவலுடலின்
மருவி யருந்துவா மன்னவனே
அன்..... ..... வருத்துவர்தா
.... ககரியார். (35)

பேய்கள் தம்மைக் குறித்துச் சிராத்தம் செய்ய மன்னனை வேண்டுதல்

713. அறிந்த முறையா லறம்பாவ
மா..... ..... னியங்குதலால்
பிறந்த பிறப்பை யறிந்தமையாற்
பிரியா திந்தப் பிரேதவுடல்
நிறைந்த கரு..... .....தா
னியற்றிற் சிராத்த மெமைநினைந்தே
பிறிந்து போமிப் பிரேதவுடல்
மற்றைவிதி ....யாதோ. (36)

அரசன் அவ்வாறே செய்வதாகக் கூறல்

714. என்றே யழுங்கி யியம்புதலு
மிரங்கி யரைய னென்புரியிற்
சென்றே யெந்த விதத்தாலுஞ்
செய்வேன் சிராத்தஞ் சத்தியமே
என்றே தான்ற னிதயத்தைத்
தொட்டே யியம்பி யினியான்முன்
சென்றே தினைத்துப் பருகுதற்குத்
தெண்ணீ.... ..... தெருட்டெனலும். (37)

---

713. அறம் பாவம் அறிந்த முறையாலும், ஆகாயத்தில் இயங்குதலாலும், பிறந்த பிறப்பை அறிதலாலும் - இம்மூன்றும் பேய்களிடம் அமைந்த நன்மைகள். 'எமை நினைந்த நீ சிராத்தம் இயற்றின் எம் பிரேத உடல் பிரிந்துபோம்; மற்றை விதி இல்லை' என்று கேட்டுக்கொண்டன என்க. பிறிந்து, எதுகை நோக்கியது.

714. அழுங்குதல் - வருந்துதல். என்புரி என்றது தன்னகரத்தைச் சுட்டியது. இதயத்தைத் தொட்டுக் கூறுதல்; சூளுறவு முறை. தெருட்டு - சொல்.

பேய் நீர் இருக்கும் இடத்தைச் சுட்டுதல்

715. பறவை யனைத்தும் வடதிசையைப்
பார்த்தே யி..... ....ன்பால்
செறிக நீயு மத்திசையிற்
சிறந்த கனிகாய் தெண்ணீரும்
உறுமெய் ..... தன்னி
லுண்டு புரிசீ ருழலியினை
அறுக வெனலு மவர்தம்மைப்
பிரிந்தே யரைய னங்கடைந்தான். (38)

அரசன் சயமுனியைக் காணல்

716. கண்டா னினிய கனிமரங்கள்
கயத்து ணீருங் கயக்கரையின்
எண்டா னிறைந்த முனிகணங்கள்
சூழ விருந்த சயமுனியைக்
கண்டா னவர்தம் பதம்பணிந்தான்
கருணை கூர்ந்தே யவர்தாமும்
திண்டோ ளரைய னிவனென்றே
யாசிர் வாதஞ் செப்பினரே. (39)

முனிவர் வினதலும் அரசன் கூறுதலும்

717. தனித்து வந்தாய் வனந்தன்னிற்
றளர்ந்து மிருந்தாய் தராபதியே
எனத்தா னெண்ணு மெழிலுடையை
யாவ னீதா னியம்பெனலும்

---

715. உழலியினை அறுக - மனஞ் சுழல்தலை நீக்குக, அங்கு - நிருள்ள அவ்விடத்தை.

716. கயம் - குளம். எண் தான் நிறைந்த - பல. கணம் - கூட்டம். சயமுனி - வைசமினி முனிவர். பதம் - பாதம்.

717. தராபதி - அரசன். எழில் - அழகு. பனித்து - நடுங்கி. பானியம் - நீர். எனை தான் உமக்கு இயம்புவேன்; எனை - என்னை.

பனித்தென் பசியாற் றபனததுப்
பருகிப் பானீ யந்தன்னை
எனைத்தா னியம்பு வேனுமக்கென்
றியம்ப வெவரு மிரக்கத்தே, (40)

அரசன் வந்த காரணத்தைக் கூறல்

718. இந்தக் கயத்து ணீரருந்தி
யினிய கனியு மிசையென்ன
அந்தக் கயத்தி னறலருந்தி
..... கிக்கனியும் வனத்தருந்தி
வந்து பணிந்து மாதவர்தாள்
மாகின் மதிமா னகர்க்கிறையான்
வந்து புகுந்தேன் மனிதரொடு
வதைக்க வெண்ணி வனமிருகம். (41)

719. விரைந்தே யானும் பரிமிசையின்
வேறோர் வனத்தின் விரவுதலும்
பிரிந்தே யென்ற னுடன்வந்தார்
பிறழ்ந்து போனர் பிறவனத்தில்
வருந்தி வழியிற் பரிமரிக்க
வாடி யானும் பசியாலும்
புரிந்தே முன்னைப் புண்ணியத்தா
லடைந்தே னும்மை யெனப்புகன்றே, (42)

---

718. மிசை - உண். அறல் - நீர். யான் மாகிஷ்மதி என்ற பெரிய நகர்க்கு இறை என்று அரசன் கூறினன். மானகர்: மால் + நகர்; மால் - பெருமை. விலங்குகளை வதைக்க எண்ணி வனம் புகுந்தேன் என்றியைக்க.

719. விரவுதல் - சொல்லுதல். பிறழ்தல் - மாறுதல். பரிமரிக்க - குதிரை சாவ,

அரசன் தன் நகர்க்கு வழிகேட்க, முனிவர் இயம்புதல்

720. எனது புரியை யானடைய
வழிநீ ரியம்பு மின்னெனலும்
நினது புரியை யாமறியேம்
நீங்கி யிந்த வனந்தனையும்
மனித ரியங்கா மற்றையொரு
வனத்தில் வசிப்பே மதுபிரிவோம்
தினமு மிந்தவகை செய்வோ
மென்றார் மன்னுந் திகைத்திருந்தான். (43)

சூரியாஸ்தமனம்

721. காயங் கலந்த வுயிர்க்கெல்லாங்
கருத லின்றிக் கைம்மாறு
பாய விருளைக் கதிரொளியாற்
பாற்ற வானிற் படர்ந்திலியன்
ஆய வருக்க னத்தமன
மடைய முனிவ ரனைவருந்தாம்
சாயங் காலச் சந்தியினைச்
சமைத்தார் சமைத்தான் றராபதியும். (44)

---

720. முனிவர் அரசன் நகர்க்கு வழி தமக்குத் தெரியா தென்றும், தாம் அயலிலுள்ள ஒரு வனத்தில் வசிப்பதாகவும், தினமும் அந்தக் குளத்திற்கு வந்து அநுஷ்டானம் செய்து போவ தாகவும் கூறினர் என்க.

721. அருக்கன் - சூரியன். கைம்மாறு - உதவி. பாய இருள் - பரந்த இருள். பாற்ற - நீக்க. இனியனைய் - கண்ணுக்கு இனியனைக. சந்தி - சந்திக்குரிய நீர்க்கடன்களும், ஜபங்களும். தராபதியும் - அரசனும். சமைத்தான் - சந்தியா வந்தனம் செய் தான்.

சூரியன் உலக மக்களுக்குக் கைம்மாறு கருதலில்லாமல், அவர்களைச் சூழ்ந்த இருளை நீக்கிப் பிரகாசிக்கின்றான் என்பது முதலிரண்டடிகளின் பொருள்.

பரிசனங்கள் அரசனை அங்கு வந்து காணல்

722. இந்த வேலை தனின்வழியி
னிலைத்து மரித்தார் தமையொழிந்தார்
சிந்தை நொந்து செயலழிந்து
திறலார் மன்னன்ற னீத்தேடி
அந்த வரைய னடிச்சுவடு
மறிந்தே யந்த வழியேதாம்
வந்தார் கண்டார் மன்னவனைப்
பணிந்தா ரவன்றன் மலர்ப்பதத்தில். (45)

யாவரும் மகிழ்தல்

723. அரைய னுற்ற வருத்தங்க
ளனைத்து மறிந்தே யழுங்கினர்கள்
அரையன் முனும் வழியிலவ
ரல்ல லறிந்தே யறச்சலித்தான்
விரைய வந்து விரவினரே
யென்றே யெண்ணி மிகமகிழ்ந்தான்
அரையன் றன்னைக் கண்டமையா
லவருஞ் சலிப்பற் றகமகிழ்ந்தார். (46)

இரவு நீங்குதல்

724. தருவிற் சருகு தனைப்பரப்பிச்
சயன மாக்கி யதுதன்னில்
இரவிற் றுயின்ற ரெல்லோரு
மிரவி யெழுமு னெழுந்திறைதான்

---

722. இளைத்து மரித்தார் தமை ஒழிந்து - சோர்ந்து இறந்தவர் நீங்க. திறலார் மன்னன் - வலிமை மிக்க அரசன்.

723. அழுங்கினர் - வருந்தினர். அல்லல் - துன்பம். சலித்தான் - வருந்தினன். விரவுதல் - கூடுதல்.

724. சருகு - காய்ந்த இலை. சயனம் - படுக்கை. இரவி - சூரியன். இறை - கடவுள். பரவி - போற்றி. தவர் - தவசிகள். நியதி - அநுஷ்டானம். அரையற் கதிபன் - ராஜாதி ராஜன்.

பரவித் தவரு மப்புனலிற்
படிந்து நியதி பண்ணினர்கள்
அரையற் கதிபன் மூனிவரடி
பணிந்தே யவரி னருள்பெற்றே, (47)

அரசன் தன் நகர் அடைதல்

725. சேனை யுடனே பிரியாதே
சென்று விரைந்து செறிந்துயர்ந்த
கானைக் கடந்து நாடடைந்து
கண்டு கலந்து தன்கவினூர்
தானைத் தலைவர் தமையனுப்பித்
தங்கி மனையிற் றளர்வொழிந்து
மானைப் புரையும் விழிமடவா
ரேவ லியற்ற மகிழ்ந்திருந்தான். (48)

யார்யாருக்குச் சிராத்தம் உரியதென்பது

726. இடுக்கண் கெடுத்த வினியாற்கு
மெமக்குந் துணைநீ யலதிலையென்
றடுத்தார் தமக்கு மணியாற்கு
மன்ன நிலமு மருளாலே
கொடுத்தார் தமக்கு மடியார்க்குங்
கூடுந் தோழன் றனக்குமியற்
படித்த படியே சிராத்தத்தைப்
பண்ணல் கடனே யெனப்பார்த்தே, (49)

---

725. செறிதல் - நெருங்குதல். கவின் ஊர் கண்டு கலந்து - அழகிய தன் நகரைப் பார்த்து அதனுட் சென்று. அனுப்பி - அவரவர் இருப்பிடத்துக்குப் போக உத்தரவிட்டு. புரைதல் - ஒத்தல்.

726. இடுக்கண் கெடுத்த இனியான் - துன்பம் நீக்கிய இனிமைக் குணமுடையவன். எமக்கும்.....அடுத்தார் தமக்கும் - சரணமடைந்தவர்க்கும். அன்னமும் நிலமும் அருளாலே கொடுத்தவர்க்கும். அடியார்க்கும் நண்பர்க்கும். இயல் படித்தபடி - நூலில் கூறியபடி.

கயா சிராத்தம்

727. கங்கை நதியிற் றென்கரையிற்
காசி யென்னுங் கவினகரத்
தங்கி திசையிற் பற்குனியென்
றறையு மாற்றின் மேலடையில்
தங்கு தடமார் கயாதீர்த்தந்
தன்னைச் செறிந்து சதுர்வேத
அங்க மாறு மாராய்ந்த
வந்த ணாளர் தமையழைத்தே, (50)

ஊனருந்தினன் விண்ணுலகம் சேர்தல்

728. வேண்டும் பதார்த்த விதங்கூட்டி
விதியால் விருப்பால் வியப்புறவே
ஆண்டு புரிந்தான் சிராத்தத்தை
யவனைக் குறித்தூ னருந்தினனை
ஈண்டுஞ் சேணை யுடனங்கே
யிரவிற் றுயிலு மிடத்தவன்முன்
காண்டி யென்ன விமானத்திற்
கழிந்தேன் பிரேத மெனுங்காயம், (51)

---

727. கவின் நகரம் - அழகிய நகரம். அங்கிதிசை - அக்னி திக்கு; தென்கிழக்குத் திசை. பற்குனி - ஆற்றின் பெயர். மேல் அடை - மேல் கரை. கயா, என்பது தீர்த்தத்தின் பெயர். சதுர் வேதம் - நான்கு வேதம். ஆறு அங்கம் - சிக்ஷை, கற்பம், வியாகர ணம், நிருத்தம், சந்தோவிசிதம், சோதிடம்; சூடாமணி நிகண்டு பல் பெயர்க்கூட்டத். 56.

728. பதார்த்த விதம் - நிவகைகள். ஆண்டு - அங்கு. அவனைக் குறித்து - ஊன் அருந்தினனைக் குறித்து. ஈண்டும் சேணை - நெருங்கும் சேணை. துயிலுமிடத்து, என்றதால் அவன் கனவு கண்டமை கூறப்பெற்றது. பிரேதமெனும் காயம் கழிந் தேன்; விமானத்தில் காண்டி (என்று) அவன்தான் என்றியைக்க. இச் செய்யுள் குளகம்.

இரண்டாம் பேய் விண்ணடைதல்

729. விண்ணிற் புகுவே னின்னருளால்
வேந்த வென்றே விண்ணடைந்தான்
நண்ணுங் கனவை நனவுதனி
லுடி நயந்து நரபதியும்
பண்ணிச் சிராத்தந் தனமற்றைப்
பகலிற் .....தது விதைவனைக்
கண்ணைத் துயிலுங் காலத்தில்
கனவி லவனுங் கலித்தாங்கே, (52)

மூன்றும் பேய்க்காகச் சிராத்தம் செய்தல்

730. மன்ன வுன்ற னருளாலே
மலின வுடலந் தனமாய்த்தே
இன்ன லொழிந்தேன் விமானத்தி
லிமையோ ருலகந் தியங்குவேனென்
என்ன விழித்தே வெழிலரைய
னின்ப முற்றே மற்றையவன்
தன்னைக் குறித்துச் சிராத்தத்தை
யங்கே புரிந்தான் றவறறவே. (53)

அப்பேயின் கூற்று

731. வேந்தன் துயிலும் வேலைதனில்
விளங்கிக் கனவில் விறல்வேந்தே
வாய்ந்த வலியாற் சிராத்தத்தை
மதித்துச் செய்தாய் மகிழ்வுடனீ

---

729. நனவு - விழிப்பு. நாடி - ஆராய்ந்து. நயந்து - விரும்பி. நரபதி - அரசன். கலித்து - எழுந்து.

730. மலினம் - பாவம்; அழுக்கும் ஆம். மற்றையவன் - மூன்றும் பேய்.

731. செகுத்தல் - கொல்லல். அவனிதனில் - பூமியில்.

தீர்ந்த தில்லைப் பிரேதவுடல்
செய்த நன்றி செகுத்தேனுக்
கார்ந்த தூணைதா னவனிதனி
லாரே யுள்ளார் நினையல்லால். (54)

அப்பேயின் வேண்டுகோள்

732. எந்த வகையாற் பொல்லாத
விந்தப் பிரேத வுடல்விடுப்பேன்
அந்த வகையா லென்னவல
மறுத்தே யமர ருலகத்து
முந்தி யிருக்க வைத்திடுத
லுன்றன் கடனே முன்னளில்
உன்றன் சிறையை யொழிப்பேனு
னிதுசத் தியமே யெனவுரைத்தான். (55)

வேறு

சத்தியத்தின் பெருமையைக் கூறிப் பேய் வற்புறுத்தியது

733. சத்தியமே பரப்பிரமந் தவஞானஞ் சாத்திரத்தின்
கேள்வி தானும்
சத்தியத்தால் விண்ணிரவி தண்மதிதா ரகைதாமாச்
சலிக்கும் வானின்
சத்தியந்தா னுண்மையினுற் றடங்கடவா தலைகடலுட்
டயங்கி நிற்கும்
சத்தியத்தி னில்லாதார் தவமாதி சாதனத்தின்
பலத்தைச் சாரார். (56)

---

732. முன் நாளில் உன் தன் சிறையை ஒழிப்பேன் நான் - எதிர்காலத்தில் உன் உடற் சிறையை நான் நின்று தீர்ப்பேன் என்று பேய் கூறிற்று என்க.

733. இரவி - சூரியன். தாரகை - நக்ஷத்திரம். இரவி முதலானவை வானத்தில் தாமாகச் சஞ்சரிப்பதற்குக் காரணம் சத்தியமே. அலைகடல், சத்தியத்தின் உண்மையினால் தடம் கடவாது தலை உள் தயங்கி நிற்கும் என்க. தயங்குதல் - திகைத்தல்.

தருமத்தைவிடச் சத்தியமே சிறந்தது

734. வைத்தனர்முன் னெருதுலையில் வானவர்தாஞ்
மதித்துத் தாமே [சத்தியத்தை
வைத்தனர்மற் றெருதுலையி றருமத்தை யவர்தாமே
மகிழ்ச்சி கூர்ந்தே
எ.....லித் தமருந்தான் சத்தியத்துக் கும்பருமுள்
ளோகை யுற்றூர்
எத்தலத்துஞ் சத்தியமே வெல்லுமதற் கினையுயர்ச்சி
யில்லை யென்றும். (57)

நன்றிகொன்ற பேய் வேண்டியது

735. சத்தியஞ்செய் தன்றெமக்குத் தபனத்தைக்
சாற்ற லாலே [கெடுப்பலெனச்
சத்தியத்தைத் தவருதே சாதிக்கி லுனக்கெய்துந்
தவந்தா னிதி
உத்தமனே யாதலினு லொழித்தெனக்குச் சிறைதன்னை
யுயர்வா னத்தின்
வைத்திடுத லுன்றனக்கு வரமென்றுன் செய்ந்நன்றி
மறந்த வஞ்சன். (58)

பேய் கயாக்கரையில் சிராத்தம் செய்யச் சொல்லுதல்

736. ஒறுப்புறுமிப் பிரேதவுட லொழியுமுரை யுரைத்திடுநீ
யுரைத்த வாற்றால்
அறுப்பனினக் கவலவுட லெனவரைய னவனுமென
தவல வாகம்

ஒளி செய்தலும் ஆம். சத்தியத்தின் நில்லாதார் - உண்மையில் அடங்கி நிற்காதவர். சாதனம் - மோக்ஷ சாதனம்; வீட்டுக்கு வழி.

734. துலை - தராசுத்தட்டு. ஓகை; உவகை - மகிழ்ச்சி. என்றும் - எக்காலத்தும்.

735. தவம் ஆதி எய்தும் என்றியைக்க. வரம் - மேன்மை.

736. ஒறுப்பு - உடல் வருத்துகை. அவல உடல் - துன்ப உடல். அரையன் - அரசன். ஆகம் - உடல். ஏது - வழி. வனம் அயிலும் தேசம் - காடு அழகு செய்யும் இடம்.

துறப்பதனுக் கேதுவினைச் சொலக்கேண்மோ
லதிதூ ரத்தில் [தென்றிசையி
சிறப்புடைய காவேரித் தென்கரையில் வன்மயிலுந்
தேசந் தன்னில், (59)

737. திருவாரூர் தனிற்பரம சிவனமலன் சன்னிதிக்கீ
சான திக்கில்
கருவாதை தனைக்களையுங் கயாதீர்த்த முறுமங்கே
காரை யிச்சி
ஒருவாதே குசைவனத்தெள் ளுறுமவற்றூற்
யுறவே செய்நீ [சிராத்தமுறை
பிரிவேனிப் பிரேதவுடல் பெறுவேன்விண் ணவர்க்குரிய
பெரும்பே றெல்லாம். (60)

மன்னன் சிராத்தம் செய்தலும், பேய் சாபம் நீங்குதலும்

738. என்றியம்பக் கனவுதனைப் பிரிந்திறைவ னுணர்ந்துளத்தி
லின்ன நீர்ந்தே
சென்றடைவிற் றெசவிதங் கடந்தடைந்து காவேரி
நீரத் தாடி
அன்றடைந்தா ரூர்தன்னைக் கலிவலிக்கு மிகவஞ்சி
யவனி யின்கீழ்
ஒன்றியுறுங் கயாசிரத்தை யுணர்ந்த..... தாங்கேகூப
மொன்று செய்தான். (61)

---

737. ஈசானம் - வடகிழக்கு. கரு வாதை - பிறப்புத் துன்பம். காரை - ஒருவகைச் செடி. இச்சி - இத்தி மரம்; இஃது இச்சியால் என்றும் பெயர் பெறும். ஒருவாது - நீங்காமல். குசைவனம் - தருப்பைக் காடு.

738. கனவுதனைப் பிரிந்து - சொப்பனம் நீங்கி. இறைவன் - அரசன். அடைவில் - முறையில். கயாசிரம்; ஆசிரியம் என்றது ஆசிரம் என்று மருவிற்றுப் போலும் - கயா தீர்த்தத்தைக் குறித்தது. அது கலி வலிக்கு அஞ்சி தரைக்குள் ஒளித்திருந்தது; அதனை விடுதன் வெளிப்படுத்தினன் என்க.

739. கண்டனனங் குறுமிச்சி காரைகுசை யவத்தெள்ளு
மவற்றை யெல்லாம்
கொண்டுமறை யறைவிதியால் சிராத்தமவன்
செய்தான் செய்ய [றனைக்குறித்துச்
விண்டதெனைப் பிரேதவுடல் **விடுரதனே** நின்னருளால்
விமானத் தேறி
அண்டவுல கடைகின்றே னெனவானத் தவனறைத
லரையன் கேட்டான். (62)

கயாசிராத்தத்தின் பயன்

740. ஆதலினு லத்தலத்துக் கொத்ததல மிலையெங்கு
மாயுங் காலைக்
காதலினு லாங்கேதா னெட்காரை யிச்சிகுசை
கருதிக் கொண்டே
வேதவிதி யாலெவரு மிப்பொழுதுஞ் சிராத்தத்தை
விளங்கச் செய்யில்
ஏதமறப் பிதிர்களெல்லா மிமையவர்கள் புரத்திருப்பா
ரின்ப முற்றே. (63)

741. அங்கிசுவா காவாதி யாச்சியபா வாதியரு
மார்வத் தாங்கே
தங்குவர்க டணவாதே யாதலினுற் சிராத்தத்தைச்
சமைக்கி னங்கே

---

739. இச்சி, காரை, குசை இவை சிராத்தத்துக்கு உரியவை. அறை - சொல்லுகிற. அவன் தனை - அப் பேயை. விண்டது - நீங்கியது. அவத்து - அவஸ்து; பொருட்படுத்தத் தகாத எளிமையுடையது. எள், என்றதன் பொருளையும் ஆராய்க.

740. ஆயும் காலை - ஆராயுமிடத்து. எள், காரை, (இச்சி), இசை, குசை, என்று பிரிக்க. ஏதம் - குற்றம்.

741. அங்கி, சுவாகா ஆதி; அங்கி - அக்னி; சுவாகா - அக்னியின் தேவி; ஆதி - முதலானவை. ஆச்சிய பாவ ஆதி; ஆஜ்யம் - நெய்; நெய் முதலானவை. தணத்தல் - நீங்கல். உரைத்திடுங்கால் - சொல்லுமிடத்து. தம் குறிப்புக்கு இசைந்ததொரு சமயம் - தமக்குத் தோன்றிய காலத்தில். சமைத்திடல் - செய்தல்,

பொங்கியம ருலகத்தி லுறைவார்கள் பிதிர்கணரைத்
திடுங்கா லத்தில்
தங்குறிப்புக் கிசைந்தவெதாரு சமயத்திற் சமைத்திடினுந்
தவரு காதே. (64)

அரசனும் நற்கதியடைதல்

742. மன்னனவன் றிலைத்தாடி வரதேவ தீர்த்தத்தில்
வாலை ருற்ற
இன்னலினைத் தீர்த்தாண்ட விறையவனைப்
டிருப்பான் றன்னை [புற்றிடங்கொண்
என்னிதயம் பிரியானே யெனக்கினியா யென்றிறைஞ்சி
யேவல் பெற்றே
தன்னுரிமைத் தலம்புகுந்தாண் டமலேசன்
னரையன் மீண்டே. [புரஞ்சார்ந்தா

பலச்ருதி

743. கற்ருருங் கேட்டாருங் கயாதீர்த்த விசிட்டத்தைக்
கரிசு தன்னை
அற்ருர்கள் சிராத்தத்தை யாங்கியற்றி னுர்பலமு
மட்டைவார் வானத்
துற்றேயப் பாலுலக முறுவரினி விடக்கன்னி
யுதிக்கு மாறும்
பற்ருசு தனைத்தீர்க்கும் பசுபதிதன் பதமுன்னிப்
பகர்வாங் கேண்மின். (66)

---

742. ஏவல் பெற்று - கட்டளை பெற்று; விடைபெற்று. உரிமைத்தலம் - தனக்குரிய நாடு.

743. விசிட்டம் - மேன்மை. அப்பால் உலகம் - வீடு. விடக்கன்னி; ஒரு பெயர். பற்று ஆசு - பற்றுகிய ஆசு; பற்று என்னும் குற்றம். உன்னி - தியானித்து.

வேறு

744. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (67)

கயாதீர்த்தச் சருக்கம் முற்றும்

---

17. நற்பயனிட்டைச் சருக்கம்

விருகனுக்குப் பெண் பிறத்தல்

745. சந்திரன் மரபில் வந்த தராபதி மதுரை தாங்கும்
அந்தமன் னவன்றன் பேரும் விருகனே யவன்றன் பாரி
இந்துவின் முகத்தாள் சாத்து விகசுணி யிவர்தம் பாலே
சிந்தனை திகழ வாங்கோர் கன்னிகை சனித்தா ளன்றே.

அரசன் சோதிடம் கேட்டல்

746. அறிந்தியல் வழியிற் கால விதம்பல மதனையு மாராய்ந்
தறைந்திடு மந்த ணுளார் தமையழைப் பித்து வேந்தன்
பிறந்தன ளினையு மிந்தப் பெண்பிளை பிறந்த நாளால்
உறும்பலந் தனையு மாராய்ந் துரைமினுத் தமரே
[யென்றான். (2)

---

745. திருவாரூர்ப் புராணத்தில் இச் சருக்கத்திற்குப் பெயர் 'தன்ம நிட்டை தீர்த்தச் சருக்கம்' என்று கொடுக்கப் பெற்றிருக்கிறது

அரசன் பெயர், விருகன்; அரசி பெயர் சாத்துவிகசுணி. கன்னிகை - பெண்.

746. இயல் வழி - நூல் வழி.

நச்சுக்கன்னி என்ற பெயரிடல்

747. கன்னியிற் கதிரோன் றிங்கள் கலந்தசித் திரைமுற்
[காலிற்
கன்னிதான் பிறக்கிற் றுதை வதையினைக் காண்பா
[னிந்தக்
கன்னியக் காலந் தன்னிற் பிறந்தன ளதனை லிந்தக்
கன்னிதன் னை நச்சுக் கன்னியே கழறுங் காலே. (3)

சோதிடர் நச்சுக்கன்னியை அகற்றச் சொல்லுதல்

748. ஆதலா னச்சுக் கன்னி யிவளுன தகத்தி லுற்றுல்
வாதைநீ யுறுவை நீத்து வனத்திடை விடுவை யாகில்
நீதற வாழ்வை யென்று செப்பினர் செப்பக் கேட்டே
தாதையுந் தளர்ந்தான் பின்பு தனதெணஞ் சாற்ற
[லுற்றுன். (4)

அரசன் அவனை வளர்க்கத் துணிந்தமை

749. மரிக்குநா டன்னி னுரு மரிப்பரே மரிப்ப தன்றி
இருக்கவும் வல்லா ருண்டோ விருக்குநா டன்னி லாரும்
இருப்பரே யிருப்ப தன்றி மரிப்பரோ வென்று சொல்லி
இரக்கமே யெய்தி நச்சுக் கன்னியை வளர்த்தா னில்லில்.

அரசன் வதையுண்ணல்

750. இந்தநா டன்னில் வந்தா ரெதிர்ந்துதா யாதி மன்னர்
வந்தன ரெதிரே தான்போய்ப் பொருதனன் வதைக்கப்
[பட்டான்
அந்தமன் னவரா லந்த வரையரு மவன்ரு ணண்ட
அந்தமா நகரந் தன்னை யடைந்தன ரடைந்த போதில்,

---

747. கன்னியா லக்னத்தில் சூரியனும் சந்திரனும் கூடியிருக்க, சித்திரை நக்ஷத்திரத்தின் முதற் பாதத்தில் பெண் பிறந்தால் தந்தை இறப்பான் என்றது சோதிடம். நச்சு - நஞ்சு; விடம்.

749. ஆரும் - எவரும்.

சோதிடர் பகை மன்னரிடம் கூறியது

751. விதிமனை யுணர்ந்த வேத வேதியர் விரைந்து சென்றுங்
கதிபதி யோடு மற்றை யவரொடும் நச்சுக் கன்னி
வதிதலா லிங்கே யந்த மன்னவன் மாண்டா னிந்தப்
பதியுளார் தமக்குத் தீங்குண் டவடனைப் பார்த்தீ ராகில்,

கன்னிகை தானே நகரை நீத்து அடவி அடைந்தது

752. என்றன ரவருங் கேட்டே யிரங்கிநீத் தாரு மில்லை
அன்றவ ரறைந்த வார்த்தை யனைத்தையு மவளுங்
[கேட்டே
இன்றிகந் திடுவா மிந்தப் புரியென வெண்ணித் தானே
சென்றுநள் ளிருளிற் சேர்ந்தா ளடவியைச் சிந்தை
[செய்தே. (8)

கன்னி ஆரூர் அடைதல்

753. ஒருவியா ரணியந் தன்னை யொல்கியே செல்லும் போது
மருமலர்ச் சோலை யாரூர் வட்டமுன் மகிழக் கண்டாள்
அருமறை யோருஞ் சிலத் தருந்தவத் தோரு மார்ந்த
திருவெல்லை தன்னை முன்னஞ் செய்தநல் வினையாற்
[சேர்ந்தாள். (9)

அவள் தன் முன்பிறப்புச் செய்தி உணர்தல்

754. அணைந்தது மவள்முன் காலத் துப்புரி யதனை லிப்போ
துணர்ந்தனள் முன்ன முற்ற வடலுடற் செய்தி
[யெல்லாம்

---

751. மனைவிதி உணர்ந்த - அரசனை விதி (செய்தது) அறிந்த. அதிபதி - புதிய அரசர்.

752. நீத்தாருமில்லை - நகரை நீங்கவில்லை. இவ்வரலாற்றைக் கேட்ட கன்னி, தானாகவே நகரை நீங்கிக் காட்டை அடைந்தனள் என்க. அடவி - காடு.

753. ஒருவி - (நகரை) நீங்கி. ஒல்கி - நெருங்கி. வட்டம் - எல்லை.

754. தன் காலம் என்றது, முற்பிறப்புக் காலத்தை. செய்த பொய்கை தண் நீர நீரத்து அன்பால், என்று இயைக்க.

தினம்பெறு தீரப் பொய்கை செய்ததண் ணீரத் தன்பால்
அணங்குமை தன்னைத் தாபித் தருச்சனை புரிந்துய்ந்
[தாளே. (10)

முனிவர் அவள் முன்பிறப்பு வரலாறு கேட்டல்

755. எனமுனி சூதன் கேட்ட விருக்குமா முனிவ ரெல்லாம்
முனமவ ளெடுத்த வாக்கை யாதவண் முயன்று செய்த
வினையெது விமலை பாதம் விரும்பியர்ச் சனைசெய் தங்கே
புனிதையா கியவா றேது புகலெனப் புகல்வா மென்றான்.

கன்னியின் முன்பிறப்பு வரலாறு

756. முன்னையிற் பிறப்புப் பொல்லா முடையுடற் புலைச்சி
[யிந்தக்
கன்னியோர் பசுநீர் வேண்டி யானையி லிருக்கக் கண்டே
அன்னது மனையிற் சாரக் கூபநீர் தனை முகந்தே
இன்னலு மிளைப்புந் தீர விரக்கமுற் றருத்தி னாளே.

அவள் செய்த குற்றம்

757 அந்தநல் வினையால் வேந்தன் புதல்விதா னனை ளாரும்
நிந்தனை செய்யு நாளி லுதித்தது ; நிமலன் கோயில்
சுந்தரி பொன்னின் மேனி சோர்விலல் தொட்டுக்
[கையால்
அந்தன மென்ற கொண்ட நவையினு லந்த நாளில்.

---

755. விமலை - அம்பிகை. முனிவர், 'புகலென', சூதன் 'புகல்வாம்' என்றான் என்க.

756. முடை - நாற்றம். ஆனியில் இருக்கக் கண்டு - துன்பத்தில் இருக்கக் கண்டு. கூப நீர் - கிணற்று நீர். புலைச்சி ஒரு பசுவுக்கு நீர் அருத்தினாள். இஃது ஆரூரில் நடந்ததாகத் திருவாரூர்ப் புராணம் கூறும்.

757. பசுவுக்கு நீர் வார்த்த நல்வினையால் புலைச்சி மறுபிறப்பில் மன்னன் மகளாய்ப் பிறந்தாள். அவள் திய வேளையில் உதித்ததற்குக் காரணம், அவள் ஒரு நாள் கோயிலிலுள்ள

758. காவலர் மனித ரந்தக் கள்வியைத் தேடிக் கண்டார்
ஓவிய மன்ன மேனி யுற்றகை வாங்கிக் கொல்கை
பாவியமென் றெண்ண நண்ணிக் கல்லினும் பாசத் தாலும்
நோவுடற் குறவே செய்து நீக்கினர் நொய்யாள் தன்னை.

கன்னி கூபம் கண்டு அதனைக் குளமாக்கல்

759. அந்தநாட் டபன முற்ற வாவினுக் கருத்த லானீர்
இந்தநா ளரையன் பாலே யுதித்தன மென்றே கன்னி
சிந்தனை செய்தா ரூரிற் றேடிமுற் கூபங் கண்டாள்
அந்தமுற் கூபந் தன்னிற் செய்தனள் பொய்கை
[யன்பால். (15)

அங்கே தேவிக்கு ஓர் ஆலயம் சமைத்தது

760. ஈனமா முடலாற் றீண்டி யெடுத்தலா லுமையாள் மேனி
ஊனமாங் காலந் தன்னி லுதித்தன ளுதித்த வூனம்
தானறு மென்றே யந்தத் தடந்தன்னிற் சமைத்துக்
[கோயின்
ஞானநா யகியைப் பூசை விதிவழி நாடிச் செய்தாள்.

அம்பிகையின் ஆரத்தைக் களவாடிய குற்றத்தால், என்று இச் செய்யுள் கூறுகின்றது.

சுந்தரி - அம்பிகை. சோர்வினால் - மனமயக்கத்தால். பொன்னின் மேனி - பொன் போன்ற மேனி. கையால் தொட்டு என்று இயைக்க. தனம் - செல்வம்.

758. ஓவியம் அன்ன மேனி - தேவியின் திரு உடல். ஓவியம் - சித்திரம். உற்ற - தொட்ட. பாசம் - கயிறு. உடற்கு நோ உறவே செய்து என இயைக்க. நொய்யாள் - அற்பத் தன்மையள். நீக்கினர் - கொன்றனர். பிராட்டியின் திருவுடலைத் தொட்ட குற்றத்துக்காகக் கல்லாலும் கயிற்றாலும் அடித்து அவளைக் கொன்றனர் என்க.

759. தபனம் - தாகம். ஆவினுக்கு - பசுவுக்கு. முன் கூபம் - முன் பிறப்பில் ஆவுக்கு அருத்த நீர் எடுத்த கிணறு. அக் கிணற்றைக் குளமாக்கினள் என்க.

760. ஈனமாம் உடல் - புலைச்சி உடல். ஊனமாம் காலம் - கெட்ட காலம். உதித்த ஊனம் - தீய நேரத்தில் உதித்த குறைவு.

நற்பயனிட்டை என்ற நாமம் பெற்றது

761. முற்பவ முணர்ந்து கல்லிற் பெய்கைமொய் யாருந் தீரத்
தற்புத வணங்கைத் தாபித் தருச்சனை செய்தே யன்பால்
தற்பவந் தடுத்துத் தாதை பவத்தையுந் தடுத்த லாலே
நற்பய னிட்டை யென்று நாமமும் பெற்றுள் நங்கை.

நிட்டை, தீர்த்தமாடிப் பூசித்தமை

762. நற்பய னிட்டை கல்லும் பொய்கையி னுமந் தானும்
நற்பய னிட்டா தீர்த்த மென்னவே நவில லாகும்
நற்பய னிட்டை தீர்த்தந் தன்னினு டோறு மூழ்கி
நற்பய னிட்டை பூசை புரிவணு யகிநற் பாதம். (18)

மார்கழி முதல் பங்குனி முடிய பூசை இயற்றியது

763. ஆதிரை மாத மாதி யுத்திர மாத மந்தம்
சீதள நீரின் மூழ்கிச் சிறப்புறப் பூசை செய்து
போதக வல்லி பாதம் புசிப்பொழிந் தொருநாள் முற்றும்
ஓதன மற்றை நாளுண் டொருபொழு தொல்கி யுற்றுள்.

அக் குளத்துக்கருகில் அவள் ஒரு தேவி ஆலயம் கட்டி அதிற் பூசனை செய்தாள் என்க.

761. முன் பவம் - முன் பிறப்பு. மொய் - பெருமை. தீரம் - கரை. அற்புத அணங்கு - தேவி. கல்லில் தாபித்து - சிலையில் பிரதிஷ்டை செய்து. தற்பவம் - தன் பிறப்பு. தாதை பவம் - தந்தையின் பிறப்பையும். நற்பயனிட்டை என்ற பெயரும் பெற்றுள். நிட்டை - அசையாமை; தியானமுமாம்.

762. கல்லும் - தோண்டிய.

763. ஆதிரை மாதம் - மார்கழி மாதம். உத்திர மாதம் - பங்குனி மாத; மார்கழி முதல் பங்குனி முடிய. சீதள நீர் - குளிர்ந்த நீர். போதகவல்லி - ஞானவல்லி. புசிப்பு ஒழிந்து - உணவின்றி. ஓதனம் - உணவு. ஒல்கல் - குழைதல்.

தவநிலை

764. அருந்தின ளொருபோ தன்னம் வசந்தத்திற்
[பாரணத்தில்
அருந்தியே யடகு தன்னை யனலிடை நின்றுள் வேனில்
அருந்தியே யறலை வானத் திரமழை தன்னி னின்றுள்
அருந்தியே யனிலங் கூதிர் நின்றன ளாகா யத்தின். (20)

நிட்டை வருந்தல்

765 சென்றது மனேக காலந் திருவுளத் தென்னை யெண்ணி
முன்றிகழ்ந் துனக்கே திட்ட முரையென மொழிந்தா
[ளில்லை
தன்றனைச் சரணஞ் சார்ந்தார்க் கருள்புரி சயில வல்லி
என்றுளந் தன்னி லெண்ணி வாடியே யிருக்கும் போதில்,

தேவி, அயிராணிபோல் வந்து நிட்டையைச் சோதித்தது

766. இவளுள மளக்க வெண்ணி யிமையமா மலையின் மங்கை
தவளமா கரியின் மீதே தானயி ராணி போன்றே
பவளவாய்க் குவளைக் கண்ணி பாங்கியர் பரவத்
[தோன்றித்
துவளநுன் னிட்டஞ் சொல்நீ தருவமே யென்று
[சொன்னாள். (22)

---

764. வசந்தம் - வசந்த பருவம்; சித்திரை, வைகாசி; இள வேனிற் காலம். பாரணம் - உபவாசமிருந்து உண்கை. வேனில் - முதுவேனிற் காலத்தில்; ஆனி, ஆடியில். அடகு - இலை. அறல் - நீர். திர - ஸ்திரம்; நிலைகிற்றல். அனிலம் - காற்று. இள வேனிலில் ஒருபோது அன்னமும், வேனிலில் அடகும், மழையில் அறலும், கூதிரில் ஆகாயமும்.

765. இறைவி தன் முன் தோன்றவில்லையே என்று வருந்தியது இச் செய்யுளில் கூறப்பெற்றது. முன் திகழ்ந்து - முன்னே தோன்றி. சயிலவல்லி - இமயவல்லி; பார்வதி.

766. இமையமா மலையின் மங்கை - பார்வதி. தவளம் - வெண்மை. தவளமாகரி - ஐராவதம்.

நிட்டை, அயிராணி வாதம்

767. அப்பொழு தவளுந் தன்கை யஞ்சலி செய்து நின்றே
இப்பொழு தெனக்கு நின்னற் பெரும்பல னில்லை
[யென்றுள்
ஒப்பருந் தவத்தை யுன்னி யுனக்கருள் புரிய வுற்றேன்
இப்பொழு தெனக்கு நின்னற் பயனிலை யென்ற தென்னீ.

அயிராணி நிட்டையை வெருட்டல்

768. விண்ணவர் தாமு மற்றை வியனுல கத்து ளோரும்
துண்ணென வந்தென் பால்நான் சொல்லிய வேவல்
[செய்வார்
அன்னமாம் வனிதை நீயான் றரும்வர மறுத்த லாலே
திண்ணமுன் சிரஞ்சே திப்பேன் வச்சிரத் தென்றுள்
[செல்வி. (24)

நிட்டை அயிராணியை இகழ்தல்

769. என்றபோ தவளு நீயோ யென்சிர மிறுப்பை யான்முன்
கொன்றைமா மலருஞ் சூடுங் குழகனைக் கூத்தன் றன்னை
வென்றிவெள் விடையி னானை விமலனைப் பிரியா
[தென்றும்
ஒன்றியே யுறைவா ளேவற் சேடியென் றுரைத்த
[போதில். (25)

ஈசுவரி நிட்டையைச் சோதிக்க எண்ணி, அயிராணி போலத் தோன்றி, அவளுக்கு வரம் அளிப்பதாகக் கூறினள் என்க.

767. அவள் - நிட்டை.

768. வியன் உலகத்து உளோரும் - அகன்ற உலகங்களில் உள்ளவர்களும். துண்ணென, விரைவுக் குறிப்பு. அன்னமாம் வனிதை - அன்னப்பறவை போன்ற பெண். வச்சிரம் - வச்சிராயுதம். செல்வி - அயிராணி உருவில் வந்த தேவி.

769. குழகன் - அழகன்; சிவபிரான். விடை - இடபம். சேடி - தோழி.

தேவி தன்னுருக் காட்டல்

770. வெள்விடை யாக வெள்ளே வேழமவ் விடைமேற்
[ருேன்றித்
தெள்ளிய கணங்கள் போற்றச் சிவனெடுந் திகழ்ந்தாள்
[செல்வி
கள்ளவிழ் மலர்க ருவிக் கண்கணீர் பொழியக் கன்னி
உள்ளமு முருகத் தாழ்ந்து பணிந்தெழுந் துவகை யுற்றே.

துதி

771. விமலனே போற்றி போற்றி விமலனீ நீங்கா தொன்றும்
அமலனதன் பாதம் போற்றி யம்பிகை மலர்த்தாள்
[போற்றி
எமலமு மறுப்பாய் போற்றி யெனக்கினி திலியாய்
[போற்றி
சமலரைப் பெற்ற தாயே சங்கரீ போற்றி யென்ருள்.

வரம் வேண்டல்

772. மகிழ்ந்துமை தானும் வேண்டும் வரமுரை
தருவோ மென்னத்
திகழ்ந்த நின்கமலச் செல்வி திருவடி
காணப் பெற்றே
புகழ்ந்திடும் பலன்தான் மற்றென் னிதுவலாற்
புவியில் வாழ்வை
இகழ்ந்தொழித் திட்டே னென்று ளிட்டமு
மியம்ப லுற்ருள். (28)

---

770. வெள்ளே வேழம் வெள் விடை ஆக என மாற்றுக. கள் - தேன். சிவனெடும், என்றதால் சிவபெருமானும் அங்குக் காட்சி யளித்தனன் என்க. கண்கள் நீர் பொழிய. கன்னி - கிட்டை.

771. சமலர் - மானிடர்; மலங்களோடு கூடியவர்.

772. நின் கமலத் திருவடி, என இயைக்க. உன் இட்டம் - மனவிருப்பம். அங்கம் - உடல்.

இறைவி வரமருளல்

773. இங்குநா னியற்றுங் கோயி லிலங்கியே
வடிவி னென்றும்
தங்கிநீ பூசை கொண்டு தையலார்க்
கருள்செய் யென்ன
அங்கமு முயிரும் போலிவ் வுருவி னு
ளமர்ந்தே யென்றும்
மங்கையர் தமக்கு மிட்ட வரமகிழ்ந்
தளிப்பா மென்றுள். (29)

நீட்டை, இறைவியின் சேடியாகிக் கயிலை சென்றமை

774. இகழ்ந்தன ளிவளு மாக்கை யென்றுமை
யவளை நோக்கித்
திகழ்ந்துறச் சிவமெய்ஞ் ஞானந் திவ்விய
மாகி யாக்கை
உகந்துநீ யெமக்குச் சேடி யாகியெம்
முடன்போ தென்றே
புகழ்ந்திடக் கணங்க ளீச னெடுவட
கயிலை புக்காள். (30)

தீர்த்த விசேடம்

775. நீடிய மாதத் தோங்கு நிலவுமூன் றுவதொன்ற
நாடியே யுமையாள் பாத நற்பய னிட்டா தீர்த்தத்
தாடுவார்க் கிட்ட மான பலமுமை யருளு மென்று
வீடுமே யவர்கள் செய்த பாதக விதங்க ளெல்லாம்.

---

774. யாக்கை திவ்வியம் ஆகி - உடல் தெய்வத் தன்மை பெற்று. கணங்கள் புகழ்ந்திட; கணங்கள் - சிவகணங்கள்.

775. நிலவு மூன்றுவது - சுக்லபக்ஷத்துத் திரிதியை. உமையாள் பாதம் நாடி என்க. வீடும் - நீங்கும்.

பலச்ருதி

776. நாடொறு மிதயந் தன்னி லிவ்விய னவில்வார் பாவம்
.... மேலாம் விரும்பிப் பன்னுள்
பாடுவார் பருவந் தோறும் பாங்குறக் கேட்பார் தாமும்
நீடுவார் சிவலோ கத்தி னின்மலி யருளி னாலே. (32)

வருபொருள் சுட்டல்

777. நற்பய னிட்டை தீர்த்த நவின்றன னளின முற்றே
அற்புத மான பொய்கை மூன்றுள வவையுஞ்
[சொல்வாம்
நிற்குண னாகி யேதா னின்மல னுயிரு ணீங்கான்
சிற்குணன் சிவன்பொற் பாதஞ் சிந்தனை செய்து
[கேண்மின். (33)

வேறு

778. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (34)

நற்பய னிட்டைச் சருக்கம் முற்றும்

---

776. நின்மலி - தேவி.

777. நளினம் - தாமரை. நிர்க்குணன் - குணமற்றவன்; ரகரம் எதுகை நோக்கி வந்தது. அமலன் - மலமற்றவன். உயிருள் நீங்கான் - உயிரினுள் நீங்காமல் நிற்பவன். சித்குணன் - அறிவுக் குணம் நிறைந்தவன்.

18. புட்கரணித் திரயச் சருக்கம்

வேறு

779. ஒன்றியுறுங் கார்த்திகையிற் கார்த்திகையோ
[டுடுபதிதான்
அன்றுபுகுந் தருந்தீர்த்தத் தாடுமவர்க் கவலவினை
பொன்றுமுறும் புரிந்தபலம் பூதலத்து மீதலத்தும்
அன்றுகவு சிகன்குழகன் அந்தவனத் தினிலிருந்தான்.

விசுவாமித்திரன் புண்ணிய நீராடக் கருதியது

780. அக்கால மின்றன்றே வாகாச கங்கைதனில்
புக்காட லினிதுவு மதிதூரம் பூதலத்துள்
எக்காலத் தினும்பிரியா திறையுறையுந் திருவாரூர்
புக்காங்குப் புனிதமுறும் புனல்புரிந்தா டுவமன்றே. (2)

முனிவர் ஆரூர் வருதல்

781. எண்ணிவிரைந் தெழுந்தமல விறையுறையுந் திருவாரூர்
நண்ணினனித் தலந்தனினு நானுதிர்த் தங்களுள

---

779. புட்கரணி - குளம். திரயம் - மூன்று. மூன்று பகுதியதான சூரிய புட்கரணி என்க. கார்த்திகை மாதமும், கார்த்திகை நக்ஷத்திரமும், பௌர்ணமியும் கூடும் நாள். ஒன்றியுறும் - கூடும். உடுபதி - சந்திரன். கார்த்திகைத் திங்களில் சந்திரன் பௌர்ணமியன்று கார்த்திகை நக்ஷத்திர வீட்டில் இருப்பான் என்ப. அவல வினை பொன்றும் - தீவினைகள் அழியும். புரிந்த பலம் உறும் - நீராடியதால் உண்டாம் புண்ணியம் சேரும். மீதலம் - விண்ணுலகம். கவுசிகன் - விசுவாமித்திரன். குழகன் - அழகன்.

780. அக்காலம் - மேலே குறித்த புண்ணிய காலம். இறை - சிவபிரான். புனல் - தீர்த்தம். அப் புண்ணிய வேளையில் ஆகாய கங்கையில் நீராடத் தகும்; அதுவோ தொலைதூரத்தில் உள்ளது; ஆரூரில் சிவபிரான் என்றும் இருத்தலால் அங்குச் சென்று, ஏற்ற தீர்த்தம் கண்டு ஆடுவோம் என்று முனிவன் கண்டான் என்க.

781. தண் அடைய மிடைந்தோர் - தீர்த்தத்தை அடைய விரும்பி அங்குக் கூடியிருந்தவர். தரு நிழல் - ஒரு மர நிழலில்.

எணையிதக் காலத்துக் கேதோவென் றையுற்றே
தண்ணடைய மிடைந்தோருட் டருநிழலிற்
[ருளிருந்தான். (3)

ஆகாயவாணி முப்புனலின் இருப்புக் கூறியது

782. அப்பொழுது வான்வாணி யருமுனிவ வையமொழி
ஒப்பரிய பரமசிவ னுறைகோயிற் றென்மேல்பால்
அப்புநிறை வரதேவ தீர்த்தத்தி னயற்றென்பால்
முப்புனலுண் டவற்றினுக்குச் சின்னமுள
[மொழிவாமே. (4)

முப்புனலின் அடையாளம்

783. ஒருபொய்கைக் கமலமல ரோங்கியுறு மேல்முகமாய்
ஒருபொய்கைக் கமலமலர் புடைமுகமா யொன்றியுறும்
ஒருபொய்கைக் கமலமல ருற்றிடுங்கீழ் முகமாகக்
கருதிடுகக் கழறுமுறை யுத்தமமத் திமங்களிட்டம். (5)

நீராடுதலின் முறை

784. உத்தமநீர்ப் பொய்கையுறும் நள்ளிரண்டு முறுமழையின்
உத்தமத்தி னுடிடுக வுதயத்தி னுச்சிதனில்
மத்திமத்தி னுடிடுக மற்றையபச் சிமநீரின்
அத்தமனத் தாடிடுக வெந்நாளு மாதரவாய். (6)

---

782. ஐயம் ஒழி - ஐயப்படுவதை நீக்கு. தென் மேல்பால் - தென்மேற்கில். அப்பு - நீர். தேவதீர்த்தத்தின் அருகே அதன் கிழக்கில். முப்புனல் - திரிதீர்த்தம். சின்னம் - அடையாளம்.

783. அக் குளத்தின் முப்பிரிவுகளை அறியும் வழி இச் செய்யுளில் கூறப்படுகிறது. பொய்கை - குளம். ஒரு குளத்தில் மேல் முகமாய் தாமரை பூத்தோங்கி யிருக்கும்; ஒரு குளத்தில் தாமரை பக்கத்தில் சாய்ந்தவண்ணம் பூத்திருக்கும். மூன்றாங் குளத்தில் தாமரை கீழ்முகமாகப் பூத்திருக்கும். இதனால் உத்தமம், மத்திமம், கனிஷ்ட (உயர்வு, இடைநிலை, கீழ் நிலைகளை) அறிந்து கொள்க.

784. நள்ளிரண்டு முறுமழையின் உத்தமத்தின் உதயத்தில் ஆடிடுக; உச்சிதனில் மத்திமத்தில் ஆடிடுக; பச்சிம நீரில் -

அத்தீர்த்தத்தின் பயன்

785. தரிசிக்க விவைதம்மைத் தீர்ந்துவிடுந் தீவினைநோய் ;
பரிசித்தார் தமக்குமறும் பாவவித மெனப்பார்க்க ;
பரிசுத்த ராய்ப்படிவார் பற்றிடுவார் வாழ்வுலகம்
கரிசற்றே முன்னெடுத்த காயவித மாகளுலும். (7)

786. ஆடினருக் குத்தமத்தில் சுவர்க்.... ளவெனவணித்தாம்
ஆடினர்க்கு மத்திமத்தி லரைக்காத மெனவணித்தாம்
ஆடினற்குக் களிட்டத்திற் காதமென வணித்தாகுந்
தேடரிய போகவிதந் திளைப்பாரத் திவியினவர். (8)

787. அடங்கினைய தீர்த்தத்தோ ரந்தணனை யருத்துவித்தார்
கடனுறவே நால்வேதந் கற்றுணர்ந்த வந்தணரை
உடனுறுமோர் கோடியரை யிட்டான்ன மூட்டுவித்தார்
அடையுமரும் பலமமல னருளாலே யடைவாரே. (9)

மேற்குப்புற நீரில். மூன்றுவதனில், அத்தமனத்து ஆடிடுக. எந்நாளும், என்றதனால் மேலே குறித்த புண்ணிய நேரமன்றி எந்த நாளிலும் முழுகுதல் கூறப்பெற்றது.

785. தரிசிக்க - பார்க்க. பரிசித்தல் - தொடுதல். படிவார் - முழுகுவார். கரிசு அற்று - தீமைகள் நீங்கி. முன் எடுத்த காய விதம் ஆகளுலும் கரிசு - முன் பிறவிகளிற் செய்த மிகுந்த பாவங்களானவை யாவும். களுலும் - மிகும்.

786. முதலடி சிதைந்துள்ளது. உத்தமத்தில் ஆடினவர்க்கு சுவர்க்கம் மிக அணித்து ஆம். இச் செய்யுளில் ஆடினர்க்குச் சுவர்க்கம் எவ்வளவு அருகிலுள்ளது என்பது கூறப்பெற்றது.

787. அடங்கு - மூன்றுக அடங்கிய. அன்றி, மேற்சொன்ன பயன்கள் அடங்கிய. இனைய - இந்த. அருத்துவித்தல் - உண்பித்தல். நால்வேதம் கற்றுணர்ந்த ஒரு கோடி அந்தணர்க்கு அன்னமிட்ட பலன் அடைவர் என்க. இட்டான்னம் - விரும்பிய உணவு.

788. கொடுத்தநிதி யாங்கொன்று கோடியெனக் குணிதமுறும்
கொடுத்தவிரு நிலந்தானுங் கோடியெனக் குணிதமுறும்
கொடுத்தசுர பியுமொன்று கோடியெனக் குணிதமுறும்
கொடுத்தபடங் குடமற்றங் கோடியெனக் குணிதமுறும். (10)

789. உன்னுடனே யொருகாலெவ் வுயிர்க்குமுயி ராயவற்றுக்
கன்னியனல் லாதவனை வன்மீகந் தனிலறரும்
தன்னனையான் றனையதுவுங் கோடியெனத்
[தழைத்தோங்கும்
பன்னியமந் திரந்தானுங் கோடியெனப் பல்கிடுமே. (11)

சூரியன் அக்குளத்தில் ஒரு நாள் அமர்தல்

790. கார்த்திகையென் மாதத்தின் கார்த்திகையும் பூரணையும்
வாய்த்ததொரு வாரத்திற் சூரியனே ரங்குட்ட
மாத்திரத்திற் புருடனென வுத்தமமா மலரினுறும்
பார்த்தவனை முழ்குமவர்க் கறும்பிரம வதைப்பாவம்.

தீர்த்தத்தின் பயன்

791. உத்தமத்தி னுடிடுக வுதயத்தி னடைனினும்
மத்திமத்தி னுடிடுக மார்த்தாண்ட னுச்சிவரில்

---

788. நிதி - செல்வம். குணிதம் - எண் பெருக்கு. இருமை - பெருமை. சுரபி - பசு. படம் - ஆடை. குடம் - தீர்த்த பாத்திரம்.

789. தன் அனையான் - தனக்குத் தானே ஒப்பானவன். ஒருகால் உன் உடனே - ஒருமுறை நியானித்த மாத்திரத்தில். பல்கிடும் - பெருகும்.

790. பூரணை - பௌர்ணமி. வாரம் - நாள். அங்குட்ட மாத்திரம் - கட்டை விரலளவு. உத்தமம் என்ற பகுதியிலுள்ள தாமரையில் சூரியன் கட்டை விரலளவில் விளங்குவான் என்க. அவனைப் பார்த்து மூழ்கும் அவர்க்கு பிரமவதைப் பாவம் அறும் என்று இயைக்க. பிரம வதை - பிரம்மஹத்தி; அந்தணரைக் கொல்லும் பாவம்.

791. உதயத்தின் உத்தமத்திலும், உச்சியில் மத்திமத்திலும், அத்தமனத்தில் கனிட்டத்திலும் ஆடுக. நாள் தனி

அத்தமனத் தாடிடுக களிட்டத்தி னுர்வதனுல்
பத்தியினுற் றர்ப்பணமும் பணுகவிவை
[பண்ணினர்தாம், (13)

792. பெற்றிடு வரிட்டபலம் பெரும்பிணியும் பிரிந்துவிடும்
மற்றுல்ல வினையனைத்து மயனுலகந் தனையடைவர்
பற்றில்லா ரிம்மையினு மம்மையினும் படிவார்கட்
கற்றுவிடு மகவிருளு மவரமல னடியணைவார். (14)

793. என்றெழலு மினிதெனவே யென்றேகை யுகந்துமுனி
சென்றடைந்தா னுங்கமலன் றிருவருளைச் சிந்தித்தே
பொன்றிகழும் புண்டரிகப் போதுகளும் புகன்றமுறை
ஒன்றியுறும் புட்கரணி யொருமுன்றும் கண்டுகந்தான்.

முனிவர் முறைப்படி நீராடியது

794. ஆடினனே யுதயத்தி னுத்தமத்தி னதிகாலத்
தாடினனே மத்திமத்தி லருக்கனுற வானினடு
ஆடினனே களிட்டத்தி னத்தமன காலத்தில்
ஆடிவிதி வினைபுரிந்து நயந்தாங்கே தங்கிடுநாள். (16)

னும் - தினந்தோறும்; அன்றி, குறித்த நாளில் எனினும் ஆம். மார்த்தாண்டன் - சூரியன். ஆர்வத நூல் - பெருமை நிறைந்த விரத நூல்களிற் குறித்தபடி.

792. இட்ட பலம் - விரும்பிய பலம். அல்லவினை - தீவினை. பற்றில்லார் அடைவர் என இயைக்க. அகவிருளும் அற்றுவிடும் என்க. அக இருள் - அஞ்ஞானம். இதுவரை ஆகாயவாணி உரையாகும்.

793. எழலும் - அசரீரி எழ. ஏகை - ஏகுகை. புண்டரிகப் போது - தாமரை. புகன்ற முறை - முன் கூறிய முறையிலே.

794. அதிகாலம் - அதிகாலை. அருக்கன் வானின் உற ஆடினன் என்க. விதி - விதித்தபடி. வினை - தர்ப்பணம் செய்தல், தானங் கொடுத்தல் முதலிய வினைகள். நயந்து - விரும்பி.

ஓர் அரசன் அங்கு அடைந்தது

795. திறல்வேந்த னுரைத்..... தேசிதிகழ் பெயர்போல்வான்
விறல்வீர ரொடுவேட்டை விரும்பிவனந் தனிற்புகுந்தான்
அறல்வேண்டி யடைந்தனனப் பொய்கையதன் நிரத்துள்
உறைவானைக் கவுசிகனைக் கண்டனனுள் ளுறவானும்.

அரசன் ஆயிர இதழ்த் தாமரை காணுதல்

796. பரியின்மிசை நின்றிழிந்து பணிந்தெழுந்தான்
[மூனிபதத்தின்
அருமுனியு மவனையுகந் தறைந்தனனு சிர்வாதம்
புரவலனப் பொழுதுணநீ ருத்தமப்பொய்
[கையுட்புகுந்தான்
விரவியவா யிரவிதழால் விரிந்தமுள ரியைக்கண்டான்.

அம்மலரை அரசன் தொடுதலும், குஷ்டம் அடைதலும்

797. வேண்டிவிய னலர்தன்னை விரைந்துவலக் கரத்தாலே
தீண்டினனே தீண்டுதலு மறைந்ததது தெண்ணீருட்
காண்டிலன்றன் காயத்திற் குட்டமுறக் கண்டழுங்கி
ஏண்டிகழுங் கரையேறி முனிவனடி யினைப்பணிந்தே.

---

795. அரசனின் பெயர் பிருகதளன் என்று திருவாரூர்ப்புராணத்தால் தெரியவருகிறது. விறல் - வெற்றி. அறல் - நீர். அப்பொய்கை - புட்கரணித்திரயம். நிரம் - கரை. உள்ளுறவு - உளத்தெழுந்த நட்பு.

796. பதம் - பாதம். ஆசிர்வாதம் அறைந்தனன் என இயைக்க. நீர் உண - நீர் அருந்தும் பொருட்டு. ஆயிர இதழால் விரிந்த முளரியைக் கண்டான். முளரி - தாமரை.

797. வியன் - அகன்ற. தீண்டினன் - தொட்டனன். காண்டிலன் - கண்ணுக்கு மறைந்தது. காயத்தில் குட்டம் உற - தன் உடலில் குஷ்டரோகம் உண்டாக. அழுங்கி - வருந்தி. ஏண் - பெருமை; வலிவு.

அரசன் முனிவரிடம் விண்ணப்பித்தல்

798. என்னேதா னென்னுடலிற் பழுதுதித்த திதற்கேது
இன்னீரிற் பழுதோமற் றேதோதான் யானறியேன்
பன்னுவீ பண்டிதனே யெனமுனியும் பார்த்திபனே
உன்னுகத் துற்றபழு திலுக்கேது வுரைப்பாங்கேள்.

முனிவர் கூறியது

799. புனிதமுற வாஞ்சையுறப் பூதலத்திற் பொருந்தியுறும்
மனிதரிது தனிலாடல் வழக்கிதனைச் செய்நிலையிற்
பனிமலர வசரத்தின் தீண்டப்படுமோ பாரோரால்
உனதுகரத் துறப்பிடித்தா யுற்றதுநோ யுனக்கதனால்.

முனிவர் கழுவாய் கூறல்

800. என்றுருகி யியம்புதலு மிரங்கிமன்ன னெனக்கிதுதான்
பொன்றுமுறை புகலென்னப் போதகனும் புரவலனே
இன்றுமுத வித்தீரத் தீர்த்தத்தி லிரவிதனை
ஒன்றவிதி தாபித்தே புரிபூசை யுகப்புறவே. (22)

801. சிறப்புறவே யாதித்த வாரத்திற் செய்பூசை
மறப்பறவே வியறிந்தோர் வருடமுறப் புரிதலுமே
அறுத்திடுவ னுனதுடலத் தவலமெலா மாதித்தன்
உறப்பெறுவை யவனுலகு முடலந்தத் துவப்புறவே.

---

798. ஏது - காரணம். இ நீரின் பழுதோ - இந்நீரின் குற்றமோ? இன்னீர் என்றது, எதுகை நோக்கித் திரிந்தது. பன்னுதல் - சொல்லுதல்.

799. புனிதமுற - தூய்மையடைய. 'இதனில் முழுகுதல் வழக்கம்; நீ அதனைச் செய்திலை' என்றனர் முனிவர். பாரோரால் - பூமியிலுள்ளவர்களால்.

800. இது பொன்றும் முறை - இக் குஷ்டம் நீங்கும் வழி. போதகன் - ஞானி; விசுவாமித்திரன். தீர்த்தத்துத் தீரத்தில் - குளக் கரையில். இரவிதனை தாபித்து - சூரியனை நிறுவி. உகப்பு உற - மகிழ்ச்சி அடைய. பூசை புரி - பூஜை செய்.

801. ஆதித்தவாரம் - ஞாயிற்றுக்கிழமை. வருடம் உற - ஒரு வருஷ காலம் முடிய. ஆதித்தன் அறுத்திடுவன் என

802. என்றுருகி யியம்புதலு மிடரொழிந்தே மன்னவனும்
அன்றுவிதி வழியாலே யாலயமு மாக்குவித்து
இன்றெனக்குத் துணையான திவாகரனைத் தாபித்தே
நன்றுனக்கு நாண்மலரா லருச்சித்தே நாடோறும், (24)

அரசன் ஓராண்டு பூசை இயற்றியது

803. வெய்யவன்றன் வாரத்தூண் வெறுத்துவிய ரீர்மூழ்கிச்
செய்யமலர் செஞ்சாந்துங் கொண்டுசிறப் புறப்பூசை
மையலற விதிவழியால் மார்த்தாண்டன் றனக்கியற்றி
வைகிவரு தலுமாங்கே முற்றியதோர் வருடந்தான். (25)

804. தினகரன்ற னருளாலே தீர்ந்துடலிற் பழுதெல்லாம்
தினகரனைப் போலுறவே தேசுதன தேகத்தில்
தினகரனைப் பதம்பணிந்து சென்றுதன துலகாண்டு
தினகரன்ற னுலகத்திற் சேர்ந்திருந்தான் சிறப்புறவே.

சூரியனைப் பூசித்தலின் பயன்

805. தினகரவா ரந்தொறுமித் தீர்த்தத்திற் றினைத்தாடித்
தினகரனைத் தரிசிப்பார்க் கோராண்டு செல்லுதலும்
தினகரன்றன் னருளாலே தீர்ந்துவிடுந் தீவினைநோய்
இனியபல மும்பெறுவா .....யிலகு முகப்புறவே. (27)

இயைக்க. உடல் அந்தத்து - மரணத்தின் பின். அவன்:உலகு - சூரிய லோகம்.

802. இன்று எனக்கு; எனக்கு என்றது, முனிவரைக் குறித்தபடி. நன்று உனக்கு; உனக்கு என்றது, மன்னனைக் குறித்ததாகும். உனக்கு நன்றாகும் என்றபடி.

803. வெய்யவன் தன் வாரம் - ஞாயிற்றுக்கிழமை. ஊண் - உணவு. சாந்து - சந்தனம். மார்த்தாண்டன் - சூரியன்.

804. தினகரன் - சூரியன். தேசு - ஒளி. தனது உலகு - தன் நாடு.

806. ஈடுறமெய்ப் பழுதற்ற வேற்றினையித் திர்த்ததத்தில்
பூ.....த்து மலங்காரித்துப் பூரணையுங் கார்த்திகையும்
கூடியுறும் வாரத்திற் குழகனுக்குக் கொடுத்தார்கள்
வீடவினை விதமமலன் புரிபுகுவர் மீளாரே. (28)

பலச்ருதி

807. பத்தியினு லிந்தவியற் படிப்பாருங் கேட்பாரும்
சத்தியலோ கத்திருப்ப ரிட்டபலன் றனைத்திலைத்தே
உத்தமனுங் கவுசிகன்ற னுடலுதித்த வுனத்தைச்
சித்திரமென் றெனத்திர்த்த திர்த்தமினிச் செப்புவமே.

வேறு

808. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (30)

புட்கரணித் தீரயச் சருக்கம் முற்றும்

---

806. ஏறு - இடபம். குழகன் - சிவபிரான். வித வினைவிட, என்றியைக்க.

807. சித்திரமென - விசித்திரமாக; அழகாக.

19. விசுவாமித்திர குண்டச் சருக்கம்

தீர்த்த மகிமை

809. மனிதசஞ் சார மற்று மற்றெரு குற்ற மற்றும்
புனிதமாந் தலத்தா ருருட் பொங்கியே கங்கை தோன்றி
அனகரே யாக்குந் தன்பா லாடிடு மவரை யெல்லாம்
தினகரன் வாரந் தன்னிற் பாவியஞ் செறியும் போதில்.

810. சித்திரை மாதந் தன்னிற் றிதியுமூன் ருவ தொன்ற
அத்தடந் தன்னில் மூழ்கி லழகிலா ரழக ராவர்
புத்திர வாஞ்சை யுற்றூர் புதல்வரைப் பெறுவர் போதம்
அத்தமு மாகு மற்றும் விரும்பிய வனைத்து மாகும். (2)

வேடர் வேட்டையாடுதல்

811. வனத்துறு மரையு மானும் வல்லியம் வராகந் தானும்
தனித்தனி வெருவி யோடச் சரத்திடும் புகுந்து வேடர்
துனைத்தவை யோடு மெல்லை தொறுஞ்சரந் தூர்ந்த [போது
பனித்தொரு மான்றன் மெய்யிற் பட்டுறும் பாணத் [தாலே. (3)

---

809. குண்டம் - குழி; குளம். அனகர் - பாவமின்மையராய். பாவியம் - நீர்; இங்குக் கங்கைநீரைக் குறித்தது.

810. சித்திரை மாதம் திரிதியை. தடம் - குளம். வாஞ்சை - விருப்பம். போதம் - ஞானம். அத்தம் - செல்வம்.

811. மரை - மான் வகை. வல்லியம் - புலி. வராகம் - பன்றி. வெருவி - அஞ்சி. துனை - வேகம். வேடர்கள் வனத்தில், ஒரு சமயம், வேட்டையாடியபோது, ஓர் அம்பு ஒரு மானின் மீது பட்டதென்க.

அடிபட்ட மான் மேனகையானது

812. தென்றிரு வாரூர் சேர்ந்து செப்பிய தீர்த்தம் புக்குப்
பொன்றிய திரவி வாரம் பாலியம் பொருந்தும் போதின்
மின்றிக ழிடையு மொல்க மேனகை யாய்த்தான் றேன்றி
ஒன்றிவா னுலகின் முன்னை யுணர்வொடு முறையு
[நாளில், (4)

அவள் அங்குப் பலநாள் முழுகிவந்தமை

813. பருதிதன் வாரந் தன்னிற் பாலியம் புணர மூழ்கி
ஒருவிமா னுடலந் தன்னைத் திவித்தலத் துறையப்
[பெற்றேம்
இருநிலம் புகுந்த காலத் தின்னுமா டுவமே யென்றே
கருதியே யிருந்தா ளந்தக் கன்னிகை காலங்
[கண்டாள். (5)

814. மண்டலந் தனில்வந் தந்த வார்புனல்
மகிழ்ந்து மூழ்கி
விண்டலம் புகுந்தா ளென்றும் விரதமா
விந்தச் செய்கை

---

812. செப்பிய தீர்த்தம், முன் 809, 810 செய்யுட்களில் கூறப் பெற்ற தீர்த்தம். இதனில் அமைந்த வரலாறு; மேனகை ஒரு சாபத்தால் மானாகி, ஆரூர்க்கருகில் திரிந்து கொண்டிருந்த போது, ஒரு நாள் அது வேடர்களால் அடிபட்டு அக்குளத்தில் வந்து விழுந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை; அக் குளத்தில் கங்கை நீர் வந்து தோன்றுவதால் (809) அம் மான் சாபம் நீங்கி முன்னை உருப் பெற்றது.

இடை - இடுப்பு. ஒல்குதல் - அசைதல். முனை உணர்வொடு ஒன்றி என்றியைக்க. உறையும் நாளில் - அக் குளக்கரை வனத்தில் வாழ்ந்து வந்த காலத்தில்.

813. மான் உடலம் தன்னை நீங்கி - மான் உடம்பு பெற்றிருந்தமை நீங்கி. திவித்தலம் - திவ்விய தலம். இன்னும் - மேலும். காலம் கண்டாள் - பலநாள் கழித்தாள்.

814. நாள்தோறும் வான் சென்று திருப்பிவந்து, நீராடுதலை விரதமாகச் செய்து வந்தாள் என்க. மண்டலம் - மண்டலம்.

கொண்டுளா ளொருநா ளந்தக் குளிர்புனற்
குளிக்க வெண்ணி
மண்டலந் தலில்வந் தந்த வார்புனல்
மகிழ்ந்து மூழ்கி, (6)

கவுசிகன் மேனகையைக் காணல்

815. விண்ணவ ரியற்றும் புற்றில் விளங்கிய விமலன் பாதம்
கண்ணுறக் கண்டு தாழ்ந்து கடிமலர் தூவி வாழ்த்தி
அண்ணலி னருளைப் பெற்று மீண்டுவிண் ணடையும்
[போது
கண்ணுற வவளைக் கண்டான் கவுசிகன் கானந்
[தன்னில். (7)

மேனகை முனிவரைக்கண்டு மோகித்தல்

816. பண்ணின ஞிசிர் வாதம் பணிமொழி தானுந் தாழ்ந்தாள்
அன்னவன் பாதந் தன்னி லவனுட லழகைக் கண்டு ;
தன்மனந் தன்னில் வாஞ்சை தரித்தன டழுவ வெண்ணி
மன்மதன் பாணந் தன்னுல் மயங்கியுள் வருத்த முற்றே.

கவுசிகன் மறுத்தல்

817. அணைந்திட வுன்ற ஞைக மாதர வுடைய னென்ருள்
இணங்கியின் புறிஞ னுன்னை யிழப்பனென் விரத
[மென்ருன்
சினம்பெறு முனியப் போது திவிதல வேசி யான்ருன்
புணர்ந்திடென் றன்னை யல்லாற் பழியுனைப் பொருந்து
[மென்ருள். (9)

818. தழுவினே ஞகி லுன்னைத் தழைமயில் சாயல் நல்லாய்
வழுவுறும் பிரம சாரி விரதமும் வழுவ லாலே

---

815. கவுசிகன் - விசுவாமித்திரன்.

816. பணிமொழி - குளிர்ந்த மொழியாள்.

817. ஆகம் - உடல். ஆதரவு - விருப்பம்.

818. வழு உறும் - பிழைபடும். நிரயம் - நரகம்.

பழுதுறும் பாவம் பற்றும் படுகுழி நிரயந் தன்னில்
விழுவ தெனறே நின்னை வெறுத்தன னென்ற னன்
[மேலோன். (10)

மேனகை இட்ட சாபம்

819. வனிதையர் புணர வைத்த வாஞ்சையை மறுத்த
[வன்பன்
வனிதையர் தமைத்தம் கையால் வதைத்தமா பாவி யாவன்
எனதுளத் திச்சை யின்று மறுத்தனை யிதனல் நீதான்
எனையுன திருகை யாலு மிறுத்தபா தகத்தை யேய்வாய்.

முனிவன் விடை

820. எனறவ னியம்பக் கேட்ட முனியுமேந்
திழையோர் தம்மைக்
கொன்றதோர் பாவந் தீர்க்கும் விதியினைக்
கூறும் வேதம்
உன்றனைப் புணர்ந்தே னுகி லுறும்பழி
யொழிக்கும் வாக்கு
மின்றிக ழிடையி னுளே யில்லைமெய்
வேதத் துள்ளும். (12)

821. கன்னியர் கனலை யொப்பார் காளையர்
கமழ்நெய் யொப்பார்
கன்னியர் கலவி யுற்றூர் கரிசினை
யுற்று ரென்றும்

---

819. வன்பன் - வலிய மனமுடையவன். இறுத்த பாதகம் - கொன்ற பாவம்.

820. ஏந்திழையோர் - பெண்கள். மின் திகழ் - மின்னலைப் போல் விளங்குகின்ற.

821. கனல் - நெருப்பு. கமழ் - மணம் வீசும். கரிசு - குற்றம். தீர்ந்தார் - நீங்கியவர். காய்வர் - வெறுப்பர்.

கன்னியர் காதல் தீர்ந்தார் கரிசினைத்
தீர்ந்தா ரென்றே
கன்னியர் தம்மைக் காய்வர் விரதியர்
காதல் செய்யார். (13)

இருவரும் ஒருவர்மீதொருவர் சாபமிடல்

822. என்றுமா முனிவன் கூற யேந்திழை வெகுண்டு நோக்கி
உன்றன துடலி னுக குட்டநோ யென்ன வுற்றுள்
என்றனைச் சபித்த தென்னீ யெனமுனி தானுங் கோபித்
துன்றன துடலத் தாக நரைதிரை யென்ன வுற்றான்.

இருவரும் சாபம் தீர்தல்

823. சென்றன ளாரூர் முன்னந் திலோத்தநீர் திலோத்து மூழ்கி
அன்றுதன் னுடலிற் குற்ற மற்றுமுன் னழகு பெற்றாள்
கன்றிய முனிவன் ருனு மவள்செய லெல்லாங் கண்டு
சென்றது தன்னின் மூழ்கிச் சிறையுடற் பழுது
[தீர்ந்தான். (15)

மேனகை இறைவனைப் போற்றியது

824. வானவ ரியற்றும் புற்றின் மகிழ்ந்துறை வரதன் பாதம்
மேனகை வணங்கி நின்று விமலனே போற்றி போற்றி
கானிடை நடம தாடுங் கடவுளே போற்றி போற்றி
ஞானமே னியனே போற்றி நம்பனே போற்றி போற்றி.

வேறு

825. மானெனு முடற்சிறை யொழித்துவர நீரின்
மேனகை யெனத்திவித லத்தினை விதித்தாய்

---

822. உற்றான் - அடைந்தான்.

823. திலோத்த - ஆடிய. கன்றிய - சினந்த. அதுதன்னின் - அந்தத் தீர்த்தத்தில்.

825. வரநீர் - மேன்மையான தீர்த்தம். இது ஒழித்தாய் என்றது, முனி சாபத்தால் உண்டான நரை, முதலியவற்றை.

ஊனமுற வின்றுமெனு டற்கிதுவொ ழித்தாய்
ஞானமய னேநவிலு நான்மறையி னானே. (17)

826. போற்றிசய போற்றிசய பூதலனு மானுய்
போற்றிசய போற்றிசய பொன்னுலகு மானுய்
போற்றிசய போற்றிசய புண்ணியனு மானுய்
போற்றிசய போற்றிசய போதகனு மானுய். (18)

மேனகை விடைபெற்றுச் சென்றது

827. என்றுதுதி செய்துவிடை கொண்டுயி ரெவற்றும்
ஒன்றியுறை கின்றவொரு வன்னிருவர் தம்மில்
அன்றினர்த மக்கரிய வாதிபத முன்னிச்
சென்றன ளுகந்துரிமை யானதிவி தேசம். (19)

முனிவர் போற்றுதல்

828. அண்டர்க ளியற்றவுறு புற்றிலமர் வாணைக்
கண்டடிப ணிந்துமுனி யுங்கரிச றுத்தாய்
துண்டமதி சூடுசடை யாயசுரர் தமக்கும்
பண்டுவினை தீர்த்தவரு ளாளபர மேட்டி. (20)

வேறு

829. பூரண னேசய பூதிய னேவிதி போதக னேசய பூதியனே
ஆரண னேசய வாதிய னேசய வாதிரை நாளதிபா
காரண னேசய காரிய மாகிய காயமு மானவனே
நாரண நான்முக னுடரி யாய்சய நான்மறை நாயகனே.

---

827. தம்மில் அன்றினர் - தம்முள் பகைவர்களாய் நின்ற. இருவர் தமக்கு - பிரமன், திருமால் ஆகிய இருவருக்கும். உரிமை யான - சொந்தமான.

828. இயற்ற - சமைக்க. உறு - பொருந்திய.

829. முதலடியில் ஒருசீர் மிக்கிருக்கின்றது. பூதி - விபூதி; செல்வம். ஆரணம் - வேதம். ஆதிரைநாள் - திருவாதிரை நக்ஷத்திரம். நாட அரியாய் - நாடுதற்கு அரியவனே.

830. வானம லாய்சய வாயுவ லாய்சய வானமு மானவனே
கானம லாய்சய காயம லாய்சய காலமு மானவனே
பானம லாய்சய பாரும லாய்சய பானமு மானவனே
மானம லாய்சய மாயைய லாய்சய மானமு
[மானவனே. (22)

வேறு

முனிவர் கோயில் கட்டியது

831. எனத்துதி யியம்பி யிச னருள்செயப் பணிந்து நின்று
தனக்குடற் பழுது தீரத் தண்புனற் றீரந் தன்னில்
கனத்தகல் லாலே கோயிற் கட்டுவித் ததனு ணல்ல
தினத்து நாட்சிவ லிங்கத்தைத் தாபித்துப் பூசை
[செய்தான். (23)

832. இடம்பெறு குசைத்தண் டாலே கல்லியே
யந்தத் தீர்த்தம்
இடம்பெற வியற்றிப் பூசை நாடொறு
மீசற் கந்தத்
தடந்தனில் வைகித் தானுந் தவம்புரிந்
தனன்பல் காலம்
படிந்தது தன்னி லீசன் பதமல
ரருச்சிப் பார்தாம், (24)

பூசனைப் பயன்

833. அறுவரே யவல மெல்லா மம்லன தருளி னலே
பெறுவரே சிவலோ கத்தை மண்ணிடைப் பிறவா ரந்தச்
சிறையணி புனலின் மூழ்கிச் சிவனடி தரிசித் தாரும்
பெறுவரே சுவர்க்க மாங்கின் புறுவரே பிதிர்க
[ளோடே. (25)

---

830. காயம் - ஆகாயம்; உடலும் ஆம். பானம் - நீர். பார் - பூமி. மானம் - ஆகாயம்.

832. குசைத் தண்டு - தருப்பைத் தண்டு.

பலச்சுருதி

834. கற்றுரைப் பாரு மிந்தக் கட்டுரைக் கதையைக் காதல்
உற்றிடக் கேட்பார் தாமுஞ் சிவபுரத் துற்று வாழ்வார்
அற்புத மான தீர்த்த மரையுமுக் கோடி தானும்
பற்றியா ரூரின் வைகும் பாங்கிலிப் பகர்வங்
[கேண்மின். (26)

வேறு

835. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (27)

விசுவாமித்தீர குண்டச் சருக்கம் முற்றும்

---

834. அரையும் முக்கோடி - மூன்றரைக் கோடி.

20. சருவதீர்த்தாசிரயச் சருக்கம்

தேவர்களுடன் இந்திரன் யுகங்களின் தன்மைகளைக் கேட்டல்

836. அண்டருமா தவத்தோரு மரமகளிர் பலருமரு
மறையி னந்த
.....ங்க ..... மனைத்து மல்லாந்
தெண்டிரைநீர்க் கங்கைமுத னதிவிதமுஞ்சேரச்
சித்தர்களுங் குய்யர்களுஞ் சேடருமற் றையரும்
எண்டிசையும் புடையடைய விந்திரன்விண் ணுலகத்
திருந்து புராணவிதந் தேசிகன்ரு னியம்ப
[விண்ணோர்
புண்டரிக முகமலர்ந்து கேட்டுமகிழ் வுற்றுமிகு
போதகனே யினியுகத்தின் விதம்புகலா யென்ரு ன்.

யுகதருமம் உரைக்கலுற்றமை

837. அப்பொழுதங் கிரன்புதல்வ ..... கீசன்ரு னு
மவைதம்மை விரித்தறைவா ரா....லலா ரெனினும்
அப்பொழுது ....வற்றையியம் பிடுவாமெணுக
விந்திரனே யென்றுதன திதையமலர் தன்னில்

---

836. இச் செய்யுளிலுள்ள அடிகள் யாவும் திருத்தமாயில்லை. ஆசிரியம் - அடைதல்; ஆச்சயம், வடமொழி. அண்டர் - தேவர். அரமகளிர் - தேவ மகளிர். நதிவிதம் - பல நதிக்குரிய தெய்வங்களும். குய்யர் - குய்யகர் எனும் ஒரு தேவகணத்தர். சேடர் - நாகர். தேசிகன் - ஆசிரியன்; வியாழ பகவான். புண்டரிக முகம் - தாமரை போன்ற முகம்.

837. இதுவும் முன்னது போலவே அடிகள் சிதைந்தும், சீர்கள் மிக்கும் குறைந்தும் காணப்படுகிறது. எணுக - கருதுக. தேசிகர் இறைவனே உள்ளத்தில் தியானித்து, யுகங்களைப் பற்றிக் கூறலுற்றார் என்க.

திப்பியனே யனைத்துயிர்க்கு முயிராகி நிற்குஞ்
சின்மயனே நின்மலனே சிவனேயடி தாிசித்
தொப்பரிய வெழுத்தாறு நாவார வுரைத்தே
யுகநான்கு நிற்கும்வித முறவுரைக்க லுற்றாள். (2)

வேறு

யுகங்களின் வேறுபாடு

838. உத்தமம் கிருத மென்றே யுரைத்திடும்
பன்னூல் திரேத
மத்திம தன்ம மாகுந் துவாபர
மதிக்குங் காலக்
குத்திரங் கலிகாலத்தின் ..... கொடுமையிற்
கொடுமை யாகும்
இத்திரங் கட்குஞ் சொல்வாஞ் சாதன
மெ.....வோ யெல்லாம். (3)

யுகங்களுக்குரிய சாதனங்கள்

839. சிறந்தசா தனமிம் மைக்குந் தியானமே
கிருதந் தன்னில்
சிறந்தசா தனந்தான் மற்றைத் திரேதத்தின்
ஞான மாகும்
சிறந்தசா தனந்தான் மற்றைத் துவாபரத்
திகழும் வேள்வி
சிறந்தசா தனந்தான் மற்றைக் கலிதனிற்
செய்யுந் தானம். (4)

---

838. கிருதம் - உத்தமம்; திரேதம் - மத்திமம்; துவாபரம் - அதமம் என்க. அதமம், அதன்மன் என விரிந்தது. குத்திரம் - வஞ்சகம், குரூரம், பொய். சாதனம் - கருவி.

839. கிருதயுகத்தில் தியானமும், திரேதத்தில் ஞானமும், துவாபரத்தில் வேள்வியும், கலியில் தானமும் சாதனங்களாகும். துவாபரத்து என்பது துவாபரத் என நின்றது.

யுகத்திற்குரிய அதிதெய்வங்கள்

840. பிரமனே கிருத மென்னு முகத்ததி தெய்வம் பேண
இரவியே திரேத மென்னு முகத்ததி தெய்வ மெண்ணில்
அரியதி தெய்வ மாகுந் துவாபர யுகத்தி னுய்ந்து
கருதிடி னதிதெய்; வந்தா னுருத்திரன் கலிகா
[லத்தில். (5)

யுகங்களின் குணங்கள்

841. முந்திய யுகத்தி னிற்கு முதற்குண மதுத னக்குப்
பிந்திய யுகத்தி னுதி யிடையினைப் பெறுமற் குப்
பிந்திய யுகந்தா னிற்கும் பெற்றிடை வினைய தற்கும்
பிந்திய யுகந்தா னிற்கு மந்திய குணத்தைப்
[பெற்றே. (6)

---

840. கிருதயுகத்தில் பிரமன், திரேதாயுகத்தில் சூரியன், துவாபரயுகத்தில் திருமால், கலியுகத்தில் உருத்திரன் அதி தேவர்களாவர்.

முண்ட கத்தவி சுகந்தவன் முதலுகக் கடவுள்
விண்டொ டர்ந்தெழு கதிரிரண் டாவதின் வேந்தன்
தண்டு ழாய்நறுந் தாமன்மூன் றுவதின் தலைவன்
மண்ட லம்புக ழுருத்திரன் கலிக்கு மன்னவனே

என்ற, திருக்காளத்திப் புராணம் 30 : 2 செய்யுளைக் காண்க.

841. முதற்குணம் - ஸத்துவம்; இது முதல் யுகத்துக்கு. ஆதி, இடை - ஸத்துவமும், இராஜஸமும், இரண்டாம் யுகத்துக்கு ஸத்துவம், இராஜஸமும் குணங்களாம். இடை வினை - இராஜஸம். மூன்றும் யுகத்திற்கு இராஜஸம் குணமாம். அந்திய குணம் - தாமஸம்; நான்காம் யுகத்திற்குத் தாமஸம் குணமாம்.

சத்து வங்குண மாவது முதலுகந் தனக்குச்
சத்து வத்துட னிராசத குணமடுத் ததற்கு
வைத்த ராசத குணத்தினைத் துவாபர மருவும்
எத்தி றத்தினுங் கலியுகந் தாமத மெய்தும்

என்ற திருக்காளத்திப் புராணம் 30 : 3-ஆம் செய்யுளும் கூறும்.

842. இக்குண மிதனுக் கென்ரு லஃதுறு மேற்ற மாகி
அக்குணந் தன்னை யல்லாக் குணமுர மற்று நிற்கும்
இக்குண மூன்று நீங்கா துடலினை யெடுத்தார்க் கெல்லாம்
உக்கரு மூல நோய்முக் குணமுட லோடு மோடும். (7)

தருமதேவதையின் பாதங்கள்

843. சரித்திடு தரும நான்கு தாளினுற் கிருதந் தன்னில்
சரித்திடு தாண்மூன் ருலோர் தாள்திரே தத்தி லூனம்
சரித்திடு மிரண்டு தாளாற் றுவாபரைக் கிருதா லூனம்
சரீத்திடு மொருதா ளாலே கலிதனிற் ருள்மூன் றூனம்.

யுகத்திற்குரிய ஆண்டுகள்

844. ஆண்டுநா னூற்று முப்பத் திரண்டெனு மாயி ரந்தான்
ஈண்டிடுங் கலிக்கி ரட்டி துவாபரைக் கிரண்டு

[மொன்றும்

---

842. இந்த யுகத்துக்கு இக்குணம் என்று கூறுவதன் பொருள் சொல்லப்பட்ட குணம் அந்த யுகத்தில் மேலோங்கி, மற்றவை வலிமை அடங்கி நிற்கும் என்பதாம். உக்கு அரு மூல நோய் - போக்குதற்கு அருமையான ஆணவமலம்.

843. தரும்ம் - தருமதேவதை. சரித்தல் - நடமாடுதல். கிருத யுகத்தில் தருமம் நான்கு கால்களுடன் சஞ்சரிக்கும்; திரேதத்தில் ஒரு தாள் ஊனமாக ஏனைய மூன்று கால்களுடன் சரிக்கும். துவாபர யுகத்தில் இரண்டு கால்கள் ஊனமாய், எஞ்சிய இரண்டி னாலேயே தருமம் சரிக்கும்; கலியில் மூன்று கால்கள் ஊனமாய், ஒரு தாளினாலே சரித்திடும்.

844. கலிக்கு 4,32,000 ஆண்டுகள்.
துவாபரத்துக்கு 8,64,000 ஆண்டுகள்.
திரேதத்துக்கு 12,96,000 ஆண்டுகள்.
கிருதயுகம் 17,28,000 ஆண்டுகள்.

குணிதம் - பெருக்குத் தொகை; மடங்கு. ஏனைக்கு - மற்ற தான கலிக்கு. வானவர்க்கு ஈராருயிரம் அவற்றுக்கெல்லாம் -

தீண்டுமே திரேதந் தன்னிற் செறியுநாற் குணித மேனிக்
காண்டுவா ளவருக் கீரா யிரமவற்றுக் கெல்லாம்.

பிராயங்கள்

845. ஆண்டுதான் கலியி னாறுண் டாடவர்க்
கரிவை மார்க்கும்
ஆண்டுதான் குறைந்துஞ் செல்லு மவரவர்
திட்டத் திவ்வா
றாண்டிப ..... மென்ரு னசுவத்துக்
கொட்ட கத்துக்
காண்டகு பஃதென் மூன்று கர்த்தபக்
கரமா ராயில், (10)

846. எண்ணிரண் டாட்டுக் காகு மிரண்டுமீ
ரைந்து நாய்க்காம்
எண்ணிரண் டிருநான் கொன்று மேனைய
விலங்கி னுக்குக்
கண்ணொரு மணியாங் காக்கைக் காயிரங்
கழுகி னுக்கும்
எண்ணுக நாகத் திரா யிரநரிக்
கிரட்டி யேயும். (11)

தேவர்களுக்கு எல்லா யுகங்களுக்கும் பன்னிரண்டாயிரம் ஆண்டுகள் என்று கூறப்படுகிறது.

845. கலியுகத்தில் ஆடவர்க்கும், அரிவைமார்க்கும் பிராயம் நூறு; இவ் அளவு வரவர அதிட்டத்துக் குறைந்தும் செல்லும் என்க. இபம் - யானை. ஆன் - மாடு. அசுவம் - குதிரை. கர்த்தபக்கரம் - கார்த்தபம் அல்லது கழுதை: கர்த்தபம், கரம் என்பன ஒரு பொருளன.

846. ஆட்டுக்குப் பிராயம் பதினாறு ஆண்டு. நாய்க்குப் பன்னிரண்டு. பிற விலங்குகளுக்கு இருபத்துநான்கு. இருகண் கட்கும் ஒரே மணி பெற்ற காக்கை,

'காகத் திருகண்ணிற் கொன்றேமணி கலந்தாங்கு'

(திருக்கோவை. 71) என்றது காண்க. காக்கைக்கும் கழுகுக்கும் ஆயிரம் ஆண்டு; பாம்புக்கு இரண்டாயிரம்; நரிக்கு நாலாயிரம்.

ஆயுளின் அளவு

847. உற்றவிக் கலியின் மாந்தர்க் குரைத்தன மொருநூ றுயுள்
மற்றைய யுகத்தார் வாழும் வயதிரு நூற தற்கு
மற்றைய யுகத்தார் வாழும் வயதுமுந் நூற தற்கு
மற்றைய யுகத்தார் வாழும் வயதுநா னூறு வாய்க்கும்.

அறிவின் அளவு

848. அறிவி னும்விசிட்ட ராவர்முன் னுகத் தந்த ணாளர்
அறிவி னும்விசிட்ட ராவ ரரையர்மற் றையு கத்தின்
அறிவி னும்விசிட்ட ராவர்வசியரந் தியத்து முன்னே
அறிவி னும்விசிட்ட ராவர்சூத்திர ரந்தந் தன்னில். (13)

849. புண்ணிய பாவ முண்டு பூதலத் திவற்றைச் செய்தார்
நண்ணிடுஞ் சுவர்க்க முண்டு மற்றைய நரகந் தானும்
எண்ணியே பலன்க ளீயு மிறையம லனுமுண் டென்று
கண்ணுவர் கலிகா லத்திற் சூத்திரர் கதையுங் கற்பார்.

850. ஓதுவர் வேத மாதி யுற்றிடிற் கலியிற் பாதி
போதக ராவர் தாமே பூதலத் தோர்கட் கெல்லாம்

---

847. கலியில் மாந்தர்க்கு ஆயுள் 100; துவாபர மாந்தர்க்கு 200; திரேதாயுக மாந்தர்க்கு 300; கிருதயுக மாந்தர்க்கு 400.

இவ் ஆயுட் கணக்குப் பிறநூல்களிலும் காணலாம்.

848. முதல் யுகத்தில் அந்தணரும், இரண்டாம் யுகத்தில் அரசரும், மூன்றும் யுகத்தில் வணிகரும், நான்காம் யுகத்தில் சூத்திரரும் அறிவில் மேம்படுவர். விசிட்டர் - சிறந்தவர்.

849. கலிகாலத்தில் நான்காம் வருணத்தினர் அறிவு விளக்க மடையும் விதங்கள் இச் செய்யுளிற் கூறப் பெறுகின்றன. கண்ணுவர் - கருதுவர். கதை - புராண கதை முதலியன.

850. கலியிற் பாதி முற்றிடின், நான்காம் வருணத்தினர் செய்யும் செயல்கள் இங்குக் கூறப்படுகின்றன. வேதமாதி ஓதுவர் என இயைக்க. பூதலத்தோர் - பூமியிலுள்ளோர். போதகர் -

சாதக ராகித் தாமே தவத்தினைப் புரிவ ரீவர்
மாதவ மேற்பா ராகி மற்றைய வினையை மாய்ப்பான்.

851. ஆடுவார் தீர்த்தங் தேவ ராலயம் பணிவர் தேடிப்
பாடுவர் பத்தர் பாதம் பணிவர்கள் பரிவி னோடே
கூடுவ ரவர்தம் மோடு குழைந்துநன் மதுரங் கூறித்
தேடுவர் பாசந் தீர்க்குந் தேசிகன் றனையுந் தேர்ந்தே.

வைசியர் தன்மை

852. மறப்பரே வசியர் மெல்ல வேதமு மற்றை நூலும்
துறப்பரே நியம மற்பம் புரிவர்கள் துரிசுக் கஞ்சார்
அறக்கொடி தாக வட்டி வாங்குவ ரருளு மின்றிச்
சிறப்பொடு பூசை செய்யார் காதலால் தேவர்க்
[கெல்லாம். (17)

853 புரிந்தமுற் புணியந் தன்னுற் பொருளுற வதலு லிங்கே
அருந்துகின் றனமே யின்ப மாதலா லறத்தை யாக்கி
அருந்துவம் வயங்கு மின்ப மென்றறம் புரியா ரற்பம்
புரிந்திடு வாரு மூண்டு புண்ணியம் பொருளி னுலும்.

ஆசிரியர். சாதகர் - தவத்தினைச் சாதகம் செய்பவர். வினையை - பாவத்தை. மாய்ப்பான் - தீர்க்கும் பொருட்டு.

851. பரிவினோடு - அன்போடு. மதுரம் - இனிய சொல்.

852. வசியர் - வைசியர். நியமம் - செய்கடன்; நித்திய கருமம். அற்பம் புரிவர் - தாழ்மையான காரியங்களைச் செய்வர். துரிசுக்கு - குற்றம் செய்தற்கு. அறக் கொடிதாக - மிக்க கொடுமையாக.

853. புணியம் - புண்ணியம்; இடைக்குறை. "கலியுகத்தில் வைசியர்கள், 'முன் செய்த புண்ணியத்தால் பொருள் உண்டாக, இப்பொழுது இன்பம் நுகர்கிறோம்; ஆகவே அறத்தை ஆக்கியே இன்பம் நுகர்வோம்;' என்று எண்ணிச் செய்ய வேண்டியிருக்க, அறம் செய்யார்; சிலர் பொருளினால் புண்ணியங்களையும் அறங்களையும் அற்பமாகச் செய்கிறவரும் உண்டு' என்பது இச் செய்யுளின் பொருளாம்.

அந்தணர், வேந்தர் தன்மை

854. அடுத்தவா சிரமந் தானு மாண்டவை யறிந்து நூல்கள்
முடித்திடார் கலியி னாலே மூடராய் முடிப்ப ரிட்டம்
அடுத்தவா சிரம மூன்றுண் டவற்றினே விதியி னாலே
முடித்திடார் வேந்தர் தாமு மூர்க்கராய் முடிப்ப ரிட்டம்.

855. அருமறை தனையு மோதா ரங்கமு முணரார் நாளும்
கருமமு மியற்ற ரற்பஞ் செயவருங் காத லின்றி
இருநிதி யாசை யாலே யிறைமுறை யறவே கொள்வார்
உருகியே யுலக மோம்பா ருணர்விழந் தொறுப்பர்
[தாமும். (20)

எவரும் நினைப்பதும் செய்வதும்

856. மன்னவர் கொடுங்கோ லாக மழைபொழி
யாம லேதான்
அன்னமு மரிதே யாகி யாக்கையு
மழிதல் கண்டே
பன்னியென் பயன்வே தங்கள் பரமனைப்
பூசை பண்ணி
என்னகண் டனமிப் போதென் றிகழ்வரே
யெவரு நொந்தே. (21)

---

854. வருணச்ர தருமங்களை அந்தணரும் அரசரும் செய்யாமல் தம் இஷ்டப்படியே நடப்பர். வேந்தர்க்கு ஆசிரமம் மூன்று என்பது கூறப்பெற்றது.

855. அங்கம் - வேதத்தின் அங்கம். கருமம் - சந்தியாவந்தனமுதலிய நித்திய கருமங்கள். இருநிதி - பெருஞ்செல்வம். இறைமுறை அறவே கொள்வர் - வரிகளை முறையற்ற வழிகளிலே கொள்வர். இச் செய்யுளிலும் முதலிரண்டடி அந்தணர்க்கும், பின் இரண்டடி அரசர்க்கும் உரியன. உணர்வு - ஒப்ப நாடும் உணர்வு. உணர்வு இழந்து ஒறுத்தலாவது - அத்தகைய உணர்வு நீங்கிக் குற்றத்தின் அளவைக் கடந்து தண்டித்தலாம்.

856. அன்னம் - சோறு. பன்னி - சொல்லி. பரமன் - சிவபிரான். என்ன கண்டனம் - எப்பலனைக் கண்டுவிட்டோம்?

857. பொழிந்திடு மழைதா னிங்கே புரிந்திடின்
மகமென் றெண்ணி
விழைந்துவே தியர்தம் மாலே வேள்வியுஞ்
செய்வி யார்தாம்
ஒழிந்தவர் தம்மை வேத விதியினை
யுணர்ந்து நீக்கார்
ஒழிந்திலார் தம்மை வேத விதியினை
யுணர்ந்தோம் பாரே. (22)

அந்நியர் ஆதிக்கம் பெறல்

858. பழித்துவை திகத்து நீதி பாஞ்சராத் திரமுஞ் சேர்வார்
ஒழித்தலால் வைதி கத்தை யுணர்வற மிரண்டுங் குன்றி
இழப்பரா மிருந்த தேசம் புளினர்வந் தெதிர்ந்த போது
வழக்கறி யாத வந்த மறவருக் கொளிப்பர் மற்றென்.

வேந்தனுடைய அநீதியால் மழை பெய்யாமையும், யாக்கை அழிவும் நேர, மக்கள் 'வேதங்கள் ஓதி என்ன பயன்? பூஜை பண்ணி என்ன பயன்?' என்று சிரத்தை அற்று இருப்பார்கள் என்க.

857. வேள்வியும் செய்வியார்-யாகமும் செய்விக்கச் செய்யார். 'வேத விதியினை ஒழிந்தவர்: தம்மை உணர்ந்து நீக்கார்; வேத விதியினை ஒழித்திலார் தம்மை உணர்ந்து ஓம்பார்' என்று அமைக்க. ஓம்புதல் - பாதுகாத்தல். வைதிகர்களை அசட்டை செய்வதும் அவைதிகர்களை போற்றுவதும் கூறப்பட்டன.

858. பாஞ்சராத்திரம் - சைவத்திற்குப் புறச் சமயங்களு ளொன்று. புளினர் - வேடர். வைதிகத்து நீதி பழித்து என மாற்றுக. வைதிகத்தை உணர்வு - வேதமுறையின் உணர்ச்சி. இரண்டும் என்பன, வேத முறையும் பாஞ்சராத்திரமும். இதனல் விளைவது, புளினர் வந்தெதிர்த்தபோது, (தாம் இருந்த அருமை யான) தேசத்தை இழந்து, நாட்டு வழக்கம் அறியாத (அந்நிய நாட்டிலிருந்து வந்த) மறவருக்கு அஞ்சி ஒளிவர்.

859. அவர்களுக் கெளிய ராகி யடைக்கல மென்று புக்கே
அவர்களைத் தொழுது பின்சென் றவரருள் பெற்று
[வாழ்வர்;
அவரிவர் தம்மை யெல்லா மடியரைப் போலக் கண்டு
கவர்வரே யிவர்கள் பெற்ற கன்னியர் தமைக்கா முற்றே.

இன்னும் வரும் பிற நலிவுகள்

860. வேதியர் தாமு மெல்ல மெல்லவே மறப்பர் வேதம்
ஓதுதல் செய்யார் மற்றை யங்கமு முணரா ருள்ளத்
தாதர வுறவே செய்யார் மகவினை யமரர்க் கெல்லாம்
சாதலும் பிறத்த லுனுந் தவிர்த்திடத் தவமுஞ்
[செய்யார். (25)

தத்துவம் உணராமை

861. அகம்பரப் பிரம மென்னு மறிவினை யிழப்பர் மெல்ல
அகமிது செய்தே னென்பா ராட்டுவிப் பானைப் பாரார்
அகந்துவ மென்று ஞானம் விகற்பமென் றதனை நீக்கார்
அகந்தசை யுடலென் றெண்ணி யதுதனை யலங்க
[ரிப்பார். (26)

---

859. எளியராகி - தாழ்ந்தவராகி. கவர்வர் - கைப்பற்றுவார்கள். ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. காமுற்று - விரும்பி.

860. மெல்ல மெல்ல மறப்பர் - சிறிது சிறிதாக மறந்து விடுவர். மகவினை - யாகஞ் செய்தலை. அமரர்க்கு எல்லாம் உள்ளத்து மகவினை ஆதரவுறச் செய்யார் என்க. யாகத்தில் இடப்பெறும் ஆகுதிகளே தேவர்க்கு உணவாதலால், அமரர்க்கெல்லாம் ஆதர வுற, என்றார் என்க. தவத்தின் பயன் கடைசி அடியிற் கூறப் பெற்றது.

861. அகம் பரப்பிரமம்; மஹாவாக்யம்; தத்வமஸி என்பதும் இதுவே. அகம் இது செய்தேன் என்பார் - 'நான் இது செய்தேன்' என்று கூறுவர். ஆட்டுவிப்பான் - கடவுள். அகம்துவம் என்னும் ஞானம் விகற்பம் என்று - நான் வேறு, நீ வேறு என்ற இருவித விகற்ப அறிவை நீக்கார். அகம் - நான். நான்

எவரிடமும் சென்று உணவுபெற்று அருந்துதல்

862. பொருணசை யாலே சென்று புல்லியர் வாய்த மூறும்
இருமினென் றியம்பப் பெற்றே யிருந்தவ ரேவல்
[செய்தே
உருகியே யவரே தேனு முதவிய விதனை வாங்கி
அருவருப் பதுவு மின்றி யருந்துவர் நாண மற்றே (27)

வேதத்தையும் புண்ணியத்தையும் வியாபாரம் செய்தல்

863. கற்பரே வேதந் தன்னைக் கனகமுங் கொடுத்துத் தானும்
விற்பரே நிதியை வேண்டி யோதிய வேதந் தன்னை
அற்புத மான தீர்த்த மாடியே யதன்ப லத்தை
விற்பரே நிதியை வேண்டி வேந்தர்க்கும் விழைந்த
[யார்க்கும். (28)

பிற சமயங்களைச் சார்தல்

864. முந்திய வைதி கத்தை முனிவருங் கவுத மன்முன்
அந்தநா ளிட்ட சாபத் தறிவழிந் தரனைப் போற்றூர்
நிந்தனை செய்வர் பஞ்ச ராத்திரந் தன்னி னிற்பர்
மந்தரே யாக வாம தந்திரம் புரிவர் வட்கார். (29)

என்பது, (ஆன்மா என்று உணராமல்), தசை நிறைந்த உடல் என்றெண்ணி அதனை அழகு படுத்துவர். அத்வைத உணர்ச்சி அருகிப்போம் என்று கூறப்பெற்றது.

862. நசை - விருப்பம். புல்லியர் - அற்பர்கள். இருந்து அவர் ஏவல் செய்து எனப் பிரிக்க. அருவருப்பதுவும் - வெறுத்தலும். உம்மை எச்சப்பொருளது.

863. கனகம் - பொன். பணங்கொடுத்து வேதம் கற்பர்; பணம் பெற்று அதை விற்பர். புண்ணிய நீர்களில் ஆடிய புண்ணியத்தையும் விற்பர்.

864. முனிவு அரு கவுதமன் - வெறுத்தலில்லாத கவுதமர். கௌதமர் சாபத்தால் அரன் பூசை செய்தலைப் போற்றாது சைவத்தை நிந்தித்து, பாஞ்சராத்திரத்தில் நிற்பர்; மந்தரேயாக - மந்தமதி யுள்ளவராக. வாம தந்திரம் - ஒரு சமயம். வட்கார் - நாணமடையார்.

865. கள்ளினை யுண்ணை வெண்ணிக் கலப்பர்க்கா பாலர்
[தம்மைத்
தெள்ளிய திதுதா னென்றே வாகுளந் தீனியுஞ் சேர்வர்
அள்ளலென் றுதே மெள்ள வாருக ராவர் போதி
வள்ளலே தெய்வ மென்பர் வனிதையர்க் காளு மாவர்.

இன்னும் பல கேடுகள்

866. அறிவிலாத் தக்கன் செய்த வேள்வியி லன்று சென்று
மறுவறு முனித தீசன் வாக்கினுஞ் சபிக்கப் பட்டுப்
பிறிவற வுயிரு னிற்கும் பிஞ்ஞகன் பாதம் பேணர்
பெறுவர்தாழ்ந் துபதே சங்கள் சூத்திரர் பேசத் தாமே.

867. பாரியர் தம்மை விட்டுப் புணர்வரும் பரதா ரத்தைத்
தூரநில் லென்னப் பட்ட தோகையர் தோளுந் தோய்வர்
பாரியர் தாமும் விட்டுப் பதிபுயம் பயமு மற்றுச்
சோரநா யகன்றேட் சேர்வர் துறப்பருஞ் சிலர்தஞ்
[சுற்றம். (32)

---

865. கபாலர் மதம்; வாகுளர் மதம்; ஆருகர் மதம்; பௌத்த மதம்: இவை சமய விகற்பங்கள். இவற்றின் கொள்கை களே வல்லார் வாய்க் கேட்க. அள்ளல் - சேறு. போதிவள்ளல் - புத்தர். வனிதையர் - பெண்டிர்.

866. தக்கி முனிவர் தக்கன் யாகத்தில் அந்தணர்க்கிட்ட சாபம் பின்வரும் கந்தபுராணச் செய்யுளால் காணலாகும்.

பேசரிய மறைகளெலாம் பரனீயே யெனவணங்கிப் பெரிது
[போற்றும்
ஈசனையு மன்பரையு நிற்றெடுகண் டிகையினையு மிகழ்ந்து நீவிர்
காசினியின் மறையவரா யெந்நாளும் பிறந்திறந்து கதியு ருது
பாசமத விடைப்பட்டு மறையுரையா நெறியதனிற் படுதி
[ரென்றான்

(கந்த. தக்ஷகாண்டம்: 37). பிஞ்ஞகன் - சிவபெருமான்.

867. பரதாரம் - அன்னியர் மனைவியர். தூர... தோகையர் - பூப்புள்ள பெண்கள். பதி - நாயகன். பதி புயம் விட்டு என்க.

868. நாரியர்க் கினிய ராவர் நயிட்டிக விரதங் கொண்டார்
நாரியர் தாமு மந்த நயிட்டிகர்க் கினிய ராவர்
பாரியைத் துறந்தில் விட்டுத் தவம்பணும் பனவர் தாமும்
நாரியர் தோளைத் தோய்வர் நுகுதலு நாணு ராயே (33)

869. கன்னிகை தன்னை விற்கை கரிசெனக் கழறு நூல்கள்
பன்னுவர் பரர்க்குஞ் சொல்வர் சொல்லியும் பணத்தை [வாங்கிக்
கன்னிகை தன்னை விற்பர் கரிசினர்க் கொடுக்க மின்றிக்
கன்னிகை தானே தேடுங் கணவனைக் காதல் செய்தே.

870. அன்னமும் விற்பர் மெல்ல வபூபமும் விற்ப ராவின்
இன்னமிர் தினையும் விற்பா ரிரங்கியே யதனுக் கியார்
புன்னயந் தின்பால் வேண்டிச் சிலர்புரிந் தீய்வர் புல்லுங்
கன்னுவர் பூமி தன்னைக் கலப்பையும் பிடித்துக் [கையால். (35)

871. தம்மையே புகழ்ந்து தக்கோர் தமையிகழ்ந்
திடுவர் சாற்றிப்
பொய்ம்மையும் புறனுங் கோளும் புரவலர்
புடையே போவ

---

868. நைட்டிக விருதம் - பிருமசரிய விருதம். பணும் - பண்ணும்.

869. கரிசு - குற்றம். பன்னுதல் - சொல்லுதல். நூல்களை படித்துப் பிறருக்கும் உபதேசம் செய்கிறவர்களும் குற்றமிழைப்பர் என்க. ஒடுக்கம் - மனவொடுக்கம். கரிசினர்க்குக் கன்னிகைதன்னை விற்பர். கன்னிகை தானே கணவனைத் தேடுவாள் என்க.

870. அபூபம் - ஒருவகைப் பணியாரம்; வெல்ல அப்பம். ஆவின் அமிர்து - பசுவின் பால். அதனுக்கு - பசுவுக்கு. பால் வேண்டிப் புல் ஈவர் என்க. கன்னுதல் - கல்லுதல்.

871. தக்கோர் - சான்றோர். புரவலர் புடை - அரசர் பக்கம். பொய்மை சாற்றி என இயைக்க. புறன் - புறங்கூறல்.

அம்மையிற் காத லார்போ லருச்சனை
யாதி செய்வார்
இம்மையிற் பயனை யெண்ணி யாகமு
மியற்று வாரே. (36)

872. சூத்திரர் தம்பாற் சென்று சுருதியு மோது விப்பார்
பாத்திர மிவரென் றெண்ணிப் பதப்பொருள் பகர்வர்
[பாங்கால்
நாத்திகர் தம்மைச் சேவை பண்ணுவர் பொருளை நாடி
ஆத்திகர் தம்மைச் சேரா ரவர்தமக் கன்பு மற்றே. (37)

873. எழுதொணு வேதந் தன்னை யிதழினு மெழுதிக் கற்பர்
இழிகுலத் தினரைத் தீண்டி யிருப்பரே காத னத்தின்
வழுவிவர் மனையி லன்ன மென்றவ் மதிசெய் யாதே
விழைவுற மிசைவர் மற்றும் வேண்டிய தெல்லாஞ்
[செய்வர். (38)

874. வேதத்தின் சார மான விமலனூல் காமி காதி
ஓதித்தா முணர்ந்து பாச மொருவியே யமலன்
[செம்பொற்
பாதத்தை யடையார் பத்தி முத்திவித் தென்னுர் பாதஞ்
சேதித்தார் திறங்கள் கேட்டுள் ளுருகுதல் சிறிதுஞ்
[செய்யார். (39)

---

872. சுருதி - வேதம். பாத்திரம் - தகுதியுடையவர். பதப் பொருள் - வேத பதங்களின் பொருள். நாத்திகர் - தெய்வமில்லை யென்பார். சேவை பண்ணுதல் - வணங்குதல்.

873. இதழ் - ஏடு. ஏகாதசத்தின் - ஒரே ஆசனத்தில். அன்னம் வழு என்று, என இயைக்க. அவமதி செய்தல் - புறக் கணித்தல். மிசைவர் - உண்பர்.

874. காமிகாதி - காமிகம் முதலான ஆகம நூல்கள். பக்தி முக்திக்கு வித்து என்று சொல்லார். பாதம் - பாசுரங்களின் அடிகள். பாதம் சேதித்தல் - பதங்களைப் பிரித்துப் பொருள் விளங்கும் படி காட்டல். சேதித்தல் - சிதைத்தலும் ஆம்.

875. அந்தணர் கொடுமை யோமற் றனைவரும் கலியி னுலே
மந்தராய் வாக்கி னலு முடலுறு வலியி னலும்
சிந்தனை யாலுஞ் செய்வர் தீவினை விதங்க ளெல்லாம்
அந்தமா பாத கங்க டன்னையு மறைகு வாமே. (40)

கலியில் விளையும் மா பாதகங்கள்

876. பகைப்பருங் குரவ ரோடு படித்தமா னைவர்க டாமும்
பகைப்பரு மரையன் றன்னை யமைச்சரும் பயமு மற்றே
பகைப்பரு மடியார் வெஞ்சொற் பகர்ந்துதன் பதியைப் [பார்த்தே
பகைப்பரும் பாரி கொண்ட பாரகன் றனைப்பாங் கற்றே.

பெண்களின் குற்றங்கள்

877. குலத்திலிற் பிறந்த பெண்ணுங்
கொடியளாய்த் தனத்தை வாஞ்சித்
திலத்திருந் தொழுகா ணணு
மின்றித்தன் னிட்டஞ் செய்வாள்
குலத்தினு ணெய்யள் குற்றங்
கூறிடிற் றொலையு மோதாம்
இலத்திருந் தொழுகு வாருஞ்
சிலர்பல ரிட்டஞ் செய்வார். (42)

---

875. அந்தணர் மட்டும் கொடுமையுடையவராவர் என் பதோ? மற்றனைவரும் என்று பொருள் கொள்க. மந்தர் - சுறு சுறுப்பு அற்றவர்.

876. மாணவர் குரவனோடும் பகைப்பரும் என்றியைக்க. இவ்வாறே பிற அடிகளையும் காண்க.

877. வாஞ்சித்து - ஆசைப்பட்டு. இலத்து இருந்து ஒழு காள் - வீட்டில் இருந்த இல்லற ஒழுக்கம் புரியாதவளாய். நாணும் - வெட்கமும். இட்டம் - விரும்பிய செயல்களை. நொய்யள் - எளி யள். இத்தகைய பெண்டிரின் குற்றங்களைத் கூறத் தொடங்கினால் அவை முடிவடையுமோ? என்க. இலத்திருந்து ஒழுகுவார் - குடித்தனம் நடத்துகிறவர்களும். சிலர் பலர்; உலக வழக்கு.

878. மற்றைய வொருவ னெடு வாழ்சை யுற்
றவனுந் தானும்
பற்றித்தன் பதியைக் கையாற் பதைக்கவே
வதைகள் செய்வார்
பற்றிமற் றொருவன் றன்னை யவனெடு
மறைந்து போவள்
சுற்றமுந் துயர மெய்திப் பழியுறத்
துரிசுக் கஞ்சாள். (43)

பெரியோர்க்கு அடங்காமை

879. தந்தைசொற் றனையர் கேளார்; தாயுரை தனையுங்
[கேளார்;
நிந்தனை செய்து நீதா னெரென நிகழ்த்து வாரும்
பைந்தொடிப் பவளச் செவ்வாய்ப் பாரியைப் பயந்தான்
[றன்னை
வந்தனை செய்து செல்வர் வாயுரை வழியின் மாரூர்.

880. பாரிக்குப் பயந்து வேண்டும் பரற்குப காரம் பண்ணர்
பாரிசொற் பழுதென் னது பயனெனப் பற்றித் தாயைத்
தூரப்போ வென்று சொல்வர் துறப்பதுஞ் செய்வர்
[மற்றூர்
சேரத்தான் வல்லா ருண்டோ புலியுறுந் தூறு சேர்வார்.

---

878. கையால் வதைகள் செய்வார் என்றும், மற்றொரு வன் தன்னைப்பற்றி அவனெடும் மறைந்து போவள், என்றும் இயைக்க. துரிசு - குற்றம்.

879. தனையர் - பிள்ளைகள். நீ யார் என்று கேட்பர் என்க. பாரி - மனைவி. பாரியைப் பயந்தான் - மாமன்.

880. பரன் - அந்நியன். துறப்பது - விட்டுவிடுவது. தூறு - புதர்.

881. உருகியே யன்பி னுலே யுகந்துபெற்
றெடுத்த தாயை
வெருவவே நோக்கிக் கையாற் றீண்டியு
மடிப்பர் மெய்யின்
மருவலர் போலக் கோபத் தவளையும்
வதைப்பார் மற்றென்
ஒருவரு மில்லா வில்லி னெழிப்பர்தம்
முடலுந் தாமே. (46)

கோபத்தின் கொடுமை

882. பாவத்துக் கேது நீங்காப் பழியினுக்
கேது வென்றே
கோபத்தைக் கடிந்தார் தாமே யின்புறுங்
குணத்தா ரிங்குக்
கோபக்கூர் வாளு யுள்ள மெனுமுறை
வைத்துக் கொண்டார்
தாபத்தை யுறுவ ரிங்கு மாங்கு.....ரா
சார்பா வாரே. (47)

அரசமரம் பாதுகாவாமை

883. தருக்களை வளர்க்கை யூரின் வழியினுந்
தரும மென்றே
இரக்கமுற் றிவற்றை யோம்பார் போதியை
யிவற்றுண் மேலென்

---

881. உருகுதல், அன்பினுலே உகத்தல், தாயின் தன்மைகள். வெருவ - அஞ்ச. தீண்டுதல் - தொடுதல். மருவலர் - பகைவர். தம் உடல் ஒழித்தல் - தற்கொலை புரிந்து கொள்ளுதல்.

882. கோபம், பாவம் பழிகளுக்கு ஏது, என்று கூறப்பட்டது. கடிதல் - நீக்குதல். கோபம் வாளும், உள்ளம் உறையும் ஆம்; உருவகம்.

883. தரு - மரம். ஓம்புதல் - பாதுகாத்தல். போதி - அரச மரம். அதன் உறுப்பு ஒடிப்பர், வேரும் அரிப்பர் என்க; உறுப்பு-

றுரைக்குநூ லுணர்ச்சி யின்றி யதனுறுப்
பொடிப்பர் வேரும்
அரிப்பரே யதனைக் கொல்கை யந்தணன்
வதையென் றஞ்சார். (48)

884. தங்குவ னதன தாதி தனிற்சது முகனென் றோரார்
தங்குவன் சங்க மேந்தி யதனடு தனிலென் றோரார்
தங்குவ னதன துச்சிச் சங்கரன் றுனென் றெண்ணூர்
மங்கல மரமீ தென்றே வலஞ்செயார் வணக்கஞ்
[செய்யார். (49)

885. பாரிதா னரைய னுக்கு வேம்பெனப் பாரார் பார்ப்பான்
பாரியை வதைத்த பாவ மதன்வதை யென்றும் பாரார்
நாரகம் தெங்கு தன்னை நறுக்குவர் நாட்ட மின்றிப்
பாரிடை யிவற்றை யாக்கு மவர்பெறும் பலமும் பாரார்.

சிறந்த மரங்களை வளர்த்தலின் புண்ணியம்

886. ஆக்கின ரார்வங் கூர்ந்தோ ரரசினை யவனி தன்னில்
நோக்கிடார் நரகந் தன்னை நுவன்றவிப் பலந்தா னுகும்

கிளை. அரசமரம் கொல்கை அந்தணன் வதை, என்பது நூல் வழக்கு.

884. 'மூலதோ பிரும்ம ரூபாய, மத்யதோ விஷ்ணு ரூபிணே, அக்ரதச்சிவ ரூபாய, விருக்ஷராஜாயதே நம:' என்ற சுலோகம் இங்கு நினைக்கத் தக்கது. சதுமுகன் - பிரமன். சங்கமேந்தி - திருமால், சங்கரன் - சிவபிரான்.

885. அரச மரத்தின் மனைவி வேம்பு என்ற வழக்கைக் கருதார் என்றபடி. அரையன் - இங்கு, அரச மரம். வேம்பை வதைத்தல் மனைவியை வதைத்த பாவமாம் என்றபடி. நாரகம் - நாரத்தை. நாட்டம் - கண்ணோட்டம்; தயை. ஆக்குதல் - வைத்து வளர்த்தல்.

886. அவனி தன்னில் ஓர் அரசினை ஆர்வம் கூர்ந்து ஆக்கினர் நரகம் தன்னை நோக்கிடார்; உளத்து ஆர்வத்தாலே வேம்பு ஒன்று ஆக்கினர் தமக்கும், ஆலினை ஆக்கினர்க்கும், மூன்று வில்

ஆக்கினர் தமக்கும் வேம்பொன் மூலினை யாக்கி னுர்க்கும்
ஆக்கினர் தமக்கும் வில்வ மூன்றுளத் தார்வத்
[தாலே, (51)

887. ஆக்கினர் தமக்கு நெல்லி மூன்றினை யார்வத் தாலே
ஆக்கினர் தமக்கு மூன்று விளாவினை யார்வத் தாலே
ஆக்கினர் தமக்கு மைந்து தெங்கினை யார்வத் தாலே
ஆக்கினர் தமக்கும் பத்துப் புளிமர மார்வத் தாலே, (52)

888. ஆக்கினர் தாமுஞ் செண்ப காதியு மமலற் கென்றெ
நோக்கிடார் நரகந் தன்னை நொந்தழு நரகிற் சுற்றம்
நீக்கியே சிவலோ கத்தி லிறுத்துவ ரென்றே நேயத்
தாக்கிடா ரமலன் சூடு மலர்மரங் கலியா லற்பர். (53)

நான்காம் வருணத்தினரின் நடத்தை

889. வேதிய ராதி யோர்க்கு விழைந்துசென் றேவற்
[செய்யார்
ஆதனத் திருப்பர் வந்தா லவரடி தொழாரு மஞ்சிப்
பூதல வேந்தர்க் காளாய்ப் புரப்பர்சூத் திரரும் பூமி
வாதையும் புரிவ ரந்த ணுளரை மற்றை யாரும். (54)

வம் ஆக்கினர் தமக்கும், நூவன்ற இப்பலம்தான் ஆகும், என்று இயைக்க. நூவன்ற பலம் - நரகம் நோக்கிடாமை. வில்வம் மூன்று - மூன்று வில்வ மரங்களை.

887. மூன்று நெல்லிகளையும், மூன்று விளாவினையும், ஐந்து தெங்கினையும், பத்துப் புளி மரங்களையும் ஆர்வத்தினலே ஆக்கினரும். இச்செய்யுள் அடுத்ததனேடு முடியும்.

888. அமலர்க்கு என்றே சண்பகாதிகளையும், ஆக்கினரும் நரகம் நோக்கிடார்; நரகில் (வீழ்ந்த) சுற்றங்களை நீக்கி சிவலோகத்தில் நிறுத்துவர். ஆனல் கலிகாலத்திலோ அமலன் சூடும் அலர் மரங்களை ஆக்கிடார், என்க.

889. சூத்திரரும் ஆதனத்து இருப்பர்; அவரடி தொழார் என்றும், வேந்தர்க்கு ஆளாய்ப் பூமியைப் புரப்பர் என்றும், மற்றையாரையும் அந்தணுளரையும் வதைப்பர் என்றும் இயைக்க.

கபடர் செயல்

890. அற்றிலர் மண்ணி ளுசை யரிவையர் தம்பா லார்வம்
மற்றைய மகவின் வாஞ்சை மாநிதி யாவும் மற்றும்
பற்றறுப் பார்போன் மெய்யிற் பரித்துச்சை வர்தஞ் [சின்னம்
கற்பருங் கொண்ட கோலத் திசைவியல் கபட ராயே,

891. தெருண்டில ரேனுந் தம்மைத் தெருண்டவ
ரென்னத் தேற்றி
மருண்டவர் வம்மின் நீர்க்க மயக்கினை
யென்றுந் தம்பால்
திரண்டவர் பொருளும் வாங்கித் தெருட்டினர்
பொய்ந்நூல் செப்பி
உருண்டுகே ழோடு மூனர் பலர்சிலரி
ருந்துய் வாரும். (56)

892. உண்டொரு கடவுள் வேறற் றுயிர்தொரு
முறையும் பாசம்
விண்டிட வருளு மன்பர்க் கெனவிம
லனைத்தம் முள்ளங்

---

890. மண், பெண், மகவு, நிதி இவற்றில் ஆசையும் மற்றும் யாவும் அற்றிலர் என இயைக்க. சைவர்தம் சின்னம் - விபூதி, ருத்திராக்ஷம் முதலியவை. கபடராயே கொண்ட கோலத்து இசை இயல் கற்பரும் என இயைக்க. இயல் - ஒழுக்கம்; நூல் என்றும் கொள்ளலாம். இச்செய்யுள் குளகம்.

891. தெருள்தல் - தெளிதல். தேற்றி - மெய்ப் படுத்தி. மயக்கினை நீர்க்க வம்மின் என்று - 'உங்கள் மயக்கங்களைத் தீர்த்துக் கொள்ள எம்பால் வாருங்கள்' என்று. திரண்டவர் - கூடியவர். பொய்ந்நூல் செப்பித் தெருட்டினர் என்க. கீழ் உருண்டு ஓடும் ஊனர் என இயைக்க. ஊனர் - குறைபாடுடையர். பலர் சிலர், சிலர் பலர் என்றமைபோல். துய் - அறிவின் திரிபு; துய்வார் அதனை உடையவர்.

892. ஒரு கடவுள் உண்டு; அது உறையும்; அருளும் என்றியைக்க. எமையும் ஆண்டுகொள் என்று சொல்லமாட்டார்; வாக்கின் குற்றம் கூறுவர் என்க.

கண்டவ ரரிய ரென்றே கைதொழு
தவர்தா ளாண்டு
கொண்டரு ளெமையு மென்றூர் கூறுவர்
வாக்கின் குற்றம். (57)

பிற சமயங்களை அவமதித்தல்

893. சிவனது சின்னந் தன்னைச் சிலர்தரித் தயனை மாலை
அவமதி செய்வர் மாய குழியுந் தரித்துக் கொண்டே
சிவனையு நிந்தை செய்வர் சிலர்சிறைச் செயின ராகி
அவமதி செய்வர் வேத விதியினை யவமா மென்றே (58)

சமய சமரச மின்மை

894. ஒருதரி சினத்து ஞானங் கருமமென்
றிரண்டு முண்டாங்
கொருநெறி யுற்றூர் மற்றை நெறியினை
யுவந்து சொல்லார்
பரமனும் பருவ பேத முணர்ந்துபல்
சமயஞ் செய்தான்
உருகியென் றுணர்ந்து நிந்தை யொழிதலே
யொழுங்கென் றோரார். (59)

895. ஆக்கையி னுறுப்புத் தோறு மேற்றவ ராவி நிற்கும்
வாக்குறு முகத்தை யுக்த மாங்கமே யென்பர் மார்பை

---

893. சிறைச் செயினர் - உடலைச் சிறையாக்கி அவ்வுடலுக்குத் துன்பத்தை விளைக்கும் ஜெயினர்; ஒப்பு. 'வழுக்குடை யாக்கையிற் புகுந்த நும்முயிர், புழுக்கறைப் பட்டோர் போன்றுளம் வருந்தாது' (மணிமேகலை. 3 : 94-5). அவம் - வீண்.

894. தரிசனம் - சமயம்; தத்துவமுமாம். பருவ பேதம் - கால, இட, நிலை வேற்றுமை. ஓரார் - ஆராயார். ஒரே தரிசனத்துள்ளும் ஞான மார்க்கத்தைப் பின்பற்றுவர், கரும மார்க்கத்தினரை இகழ்ந்துரைப்பர் என்றபடி; எல்லாச் சமயங்களும் இறைவன் செய்தனவே என்பது கூறப்பெற்றது.

895. மேலே குறித்த கருத்துக்கு ஓர் உதாரணம் கூறுகிறார். உறுப்புத் தோறும் ஓர் ஆவியே நிலவுகிறது; எனினும் முகத்தை

நீக்கிய தாளை மத்தி மாங்கனி சாங்க மென்பர்
வாக்குறு முகத்தை வாழ்த்தி யிகழ்வரோ மார்புந்
[தாளும். (60)

தேசிக பூஜை

896. தேசிகன் பாதந் தீண்டிச் சிலரருச் சனையைச் செய்வர்
தேசிகன் சிரமுந் தீண்டிச் சிலரருச் சனையைச் செய்வர்
தேசிக னவர்செய் பூசை கண்டவர்க் கருள்கள் செய்வன்
தேசிகன் றன்னைப் போல்வன் சிவனுறுப் பென்னத்
[தேவர். (61)

தீமைகளின் வெற்றி

897. வெல்வரே கற்றூர் தம்மை மெல்லவே
கல்லார் புல்லர்
வெல்வரே வழக்கி லாதார் வழக்குளார்
தமைவெ குண்டே
வெல்லுமே மெல்ல மெல்ல மெய்யினைப்
பொய்மை தானும்
வெல்லுமே தருமந் தன்னை மெல்லவே
மிக்க பாவம். (62)

உத்தமாங்கம் என்றும் பிறவற்றை மத்திம, அதம அங்கங்களென்றும் கூறுவர்; ஆனால் ஒன்றைவிடப் பிறிதொன்று தாழ்ந்த தாமோ என்றபடி. ஏற்றவர் - (உயிர்) கொண்டவர். யுக்தம் - உசிதம்; சிறந்தது. மார்பு, மத்திமாங்கம்; கால், அதமாங்கம். கனிசம்; கனிஷ்டம் - கடைசியானது.

896. தேசிகன் - குரு. சிரம் - தலை. தேவர் சிவன் உறுப்பு என்பது. தேவர்களும் பூசைக்குரியவர் என்றது குறித்தபடி. பாதத்தில் அருச்சனையே நேர்மையானது; தலையில் அருச்சனை சிறவாதது; எனினும் தேசிகன் முதலோர் தம் அருளால் எதையும் ஏற்றுக்கொள்வர் என்று கூறியபடியாம். கலியில் ஈசுவர அபசாரமும் ஒப்புக்கொள்ளப் பெறுவது குறிக்கப்பெற்றது.

897. புல்லர் - அற்பர். வெகுண்டு - கோபித்து.

துன்ப மிகுதி

898. அல்லினி லலைக்கக் கள்வ ரரையரும் பகல லைக்க
ஒல்கியே வாடி வாடி யுறுவரே துயர முள்ளும்
பல்கியே யெறும்பு பாம்பு பாரிடை மூடி காதி
இல்லினு மலியத் துன்ப மிவற்றினு முறுவர் யாரும்.

நோய்ப் பெருக்கம்

899. வாதநோய் பித்தநோயால் மற்றைய நோயி னுலும்
வாதையே யுறுவ ரந்த வாதையை மாற்ற நூலில்
ஓதிய மருந்து தன்னை யுண்பரு முண்ணும் போதும்
வாதையே யுறுவர் துன்ப மலைதி.... மகிழ்ச்சி
[வாய்க்கும். (64)

வளங் குறைதல்

900. வான்மழை யருக்கிப் பெய்யு மண்டல வளமுங் குன்றும்
ஆன்முலைப் பாலுங் குன்று மாட்டினுக் கதிக மாம்பால்
மான்மட நோக்கி னுர்தம் மலைமுலைப் பாலு மல்கும்
கான்மரக் கனிக ளல்குங் கண்டக மரங்கள் பல்கும். (65)

901. உழுதுவித் தாதே மற்றை யுகந்தொறும்
பயிர்க ளோங்கும்
உழுதுவித் திடினே யிந்தக் கலிதனிற்
பயிர்க ளோங்கும்

---

898. அல்லினில் - இரவில். அலைத்தல் - வருத்தல். ஒல்கி - தளர்ந்து. உள்ளும் - மனத்திலும். பல்கி - பெருகி. மூடிகம்; மூஷகாதி - மூஷிகாதி; பெருச்சாளி, எலி முதலியவை.

899. வாதை - துன்பம்.

900. அருக்குதல் - சுருக்குதல். அல்கும் - குறையும். கண்டகம் - முள்.

901. வித்தாதே - விதைக்காமல். மற்றை யுகம் - கலி அல்லாத பிற யுகங்கள். புழு அரிப்பன, எனப் பிரிக்க. விழு - விழுது. வாழையின் வனம் எல்லாம் - வாழைத் தோட்டங்களெல்லாம். மற்று; அசை.

புழுவரிப் பனவு முண்டு புல்லிய
பயிரே மல்கும்
வழுவிடும் விளைவுங் குன்றும் வாழையின்
வளமற் றெல்லாம். (66)

902. மரங்களும் வளங்கள் குன்றி வன்னிபோ லாகு மெல்ல
நிரம்புத லின்றி நெல்லு நேரிதா யணுப்போ லாகும்
திரம்பெற லின்றி மற்றைத் தானிய விதமுந் தேயும்
சிரங்கர முரந்தா ளென்னு மவயவந் தாமுந் தேயும். (67)

ஈனர் பெருகுதல்

903. மூற்றிய கலியி னீனர் முற்றியே முறைமை யின்றி
மற்றையர் தம்மை யெல்லாம் வருத்துவர் புகுந்து
[கோயில்
பற்றுவர் தேவர் பண்டம் பருகுவர் பாவந் தன்னை
எற்றிடுந் திர்த்தந் தீண்டிக் குளிப்பது மென்னச்
[செய்யார். (68)

நல்லோர்களை இகழ்தல்

904. கலிநலி யாது பூசை காதலாற் புரிவார் தம்மை
.... மீச னடியிணைக் கன்பினாலே
பலவித மான நாமம் பகருநர் தமையும் பாங்கால்
மலரினு லிதன் பாதம் வணங்குநர் தமையு மாதோ.

---

902. வன்னி - ஒருவகை மரம். அணு - மிகச் சிறியதொரு அளவு. சிரம், கரம், உரம், தாள் - செடியின் பகுதிகள்.

903. ஈனர் - தாழ்ந்தோர். பண்டம் - பொருள்கள். பாவம் எற்றிடும் திர்த்தம் என்க. எற்றுதல் - கொன்றிடல்.

904. நலிதல் - மிகுதல். அரி - திருமால். சிவபூஜை, திருமால் பூஜை செய்பவரை இழிவுபடுத்துவர் என்பதாம்.

விக்கிரகங்களைத் திருடல்

905. செய்கசெம் பொன்னுற் றேவர் திருவருக்
கிருதந் தன்னில்
செய்கமற் றையவி ரண்டிற் றிகழ்வெள்ளி
தன்னுற் செம்பாற்
செய்கழீழ் கலிகா லத்துச் சிலையினுற்
றருவி னுலும்
செய்யினே செம்பொன் னுதி யாலவை
கொள்வர் தீயார். (70)

கலி நீங்க வழி

906. சிவனடிக் கன்பர் தம்மைச் செறிந்தடி பணிந்தன் பாலே
அவர்தமக் கன்ன பான மருத்தினு மார்வங் கூர்ந்தே
சிவனது பதிக டோறுஞ் சென்றுகந் தாடித் தீர்த்தம்
அவனடி தொழினு மஞ்சிக் கலிநலி யாதப் பாலாம்.

907. திருப்பதி தோறும் சென்று சிறப்புறுந் தீர்த்த மாடி
விருப்புற விமலன் பாதந் தொழுதுவெவ் வினையை
[வெல்வார்
அருத்திமுன் னன்பர்க் கன்ன மருந்துத லயலா ரன்னம்
வருத்தினு மருந்தார் மைந்தரில் மனையினு மருந்தார்
[மற்றும், (72)

---

905. நான்கு யுகங்களிலும் விக்கிரகங்கள் செய்ய வேண்டிய உலோகங்கள் முதலியனவற்றைக் கூறி, கலியில் திருடர்களுக்கு அஞ்சிச் செய்ய வேண்டிய முறையும் கூறியதாம்.

906. செறிந்து - நெருங்கி. கலி நலியாது அப்பால் ஆம் - கலி துன்புறுத்தாமல் விலகிப்போம்.

907. திருப்பதி - புண்ணியத் தலங்கள். அன்பர்க்கு முன் அன்னம் அருத்தி அருந்துதல். வருத்தினும் - வருந்தியழைத்திட்டாலும். மைந்தர் இல் மனை - பிள்ளையில்லாத வீடு.

சதல்

908. இரத்தலே யின்னை தென்றே யியம்புநா
லெல்லா நன்றென்
றுரைப்பினு மிரத்தல் தன்னை யூனமென்
றுழிக்கத் தம்பால்
இரப்பவர்க் கீகை நன்றென் றியம்புக
வின்னை தென்றே
உரைப்பினு மிரப்பார்க் கீக தாந்தமக்
குள்ள தேதும். (73)

துறவி மனையில் உண்ணலாகாது

909. உடலினை வெறுத்தார் தாமு மொருமனை
தனிலுண் ணுதே
அடுமிலந் தோறுஞ் சென்றேற் பவரிடு
மன்னந் தாங்கி
இடமுடைப் பொய்கைத் தீரத் திருந்தருந்
திடுக வன்பர்
மடமுறை ஙுங்குச் சென்றே யருந்துக
மற்றின் மாந்தேல். (74)

---

908. ஊனம் - குற்றம்.

'இரப்பவன் வாளா தேக விலனெனு மெவ்வங் கூரு
திரப்பினை நிரப்பல் நன்ரு மிதனினன் ரூவ தாகும்
இரப்பவ னிலனென் ரூர வியம்பிய வெவ்வஞ் சொல்லென்
நிரப்பினும் பிறர்பாற் கூரு திரக்கமொ டுதன் மைந்தா.

(விநாயக. பு. அரசியற்கை. 38 பார்க்க)

இச் செய்யுளில், 'ஆவிற்கு நீரென் நிரப்பினு நாவிற், கிரவி னிளிவந்த தில்' என்ற குறட்பொருளும், 'நல்லா றெனினும் கொளறீது மேலுல கில்லெனினு மீதலே நன்று' என்ற குறட் பொருளும் அமைந்துள்ளமை காண்க.

909. உடலினை வெறுத்தார் - துறவியர். மனை - வீடு. இடும் - தருகின்ற. ஏற்பவர் - இரப்பவர். தாங்கி - சுமந்து. இடம் உடை - விசாலமான. தீரம் - கரை. அன்பர் - அடியார். இல் - வீட்டில். அன்பர் மடம் - அடியார் மடங்கள். மாந்தல் - உண்டல்.

எவரைக் கண்டு கலி அஞ்சும் என்பது

910. இருண்மலத் தனுதி முத்த னேகனெவ் வுயிரு நீங்கான்
தருமிரு பயனு மொன்ரு யவர்களைச் சமயஞ் சார்ந்தும்
கருவினுட் கலவா ரிந்தக் கலியவர் தம்மைக் கண்டு
வெருவுறு மவர்க்கு வாய்க்கு மெளிதினி லரிய வீடும்.

நவகண்டங்களும் யுகங்களும்

911. நடுமக மேரு நிற்கப் புடைநவ கண்ட மென்றும்
கடல்புடை யுறும வற்றுட் பாரத மென்னுங் கண்டம்
படர்பனி யிமைய மென்னும் பருப்பதத் தென்பால்
[தெற்குக்
கடலடை வடபா லாங்குக் கலியுகங் கலவா தேட்டின்.

912. மற்றய கடல்கள் சூழ்ந்த மண்டல மிருமூன் றுள்ளும்
பற்றிடாக் கலிகா லந்தான் பரமமாங் கிருதம் போல
முற்றிடு முடலு ணர்ச்சி யாயுளு மோங்கு நோய்கள்
அற்றிடு மினிக்கே ளந்தக் கிருதமு மறைகு வாமே. (77)

கிருதயுகம்

913. ஆசையுங் கோபந் தானு மற்றவர் கிருதத் துள்ளார்
ஈசனைப் பூசை செய்தே யிருத்துவ ரெண்ணந் தன்னிற்

---

910. மலத்தினின்று விடுவிக்கின்றவன்; விட்டவன் எனினும் ஆம். ஏகன்-ஒருவன். இருபயன்-இம்மை மறுமைப் பயன்கள். கருவினுள் - கருப்பத்துள். கலி அவரைக் கண்டு அஞ்சும் என்க.

911. நவகண்டம் - வடபால் விதேகம், தென்பால் விதேகம், கிழ்பால் விதேகம், மேல்பால் விதேகம், வடபாலி ரேவதம், தென் பாலி ரேவதம், வடபாற் பரதம், தென்பாற் பரதம், மத்திம கண் டம்; (பிங்கலம்). கந்தபுராணம், அண்டகோசப் படலத்தில், நாவலந் தீவையாண்ட அங்கிதீரன் என்றவனின் ஒன்பது மக்கள் ஆண்ட பகுதிகளுக்கு நவகண்டம் என்பது பெயரென்று கூறப் பெறுகிறது. இவற்றின் விவரங்களைச் சிவதருமோத்தரம், கோபுர வியலினுள்ளும் காண்க.

912. இரு மூன்று - ஆறு. பரமம் - மேன்மை. கிருதம் - கிருதயுகம். அறைகுவாம் - சொல்லுவோம்.

913. ஆசையும் கோபந்தானும் அற்று, ஈசனை எண்ணம் தன்னில் இருத்துவர், என்க. பிறழ்வு அற - மாறுபாடு அற;

பேசிய முறையால் வேதம் பிறழ்வற நிற்பர் சாநாள்
நாசமாய்ச் சுவர்க்கந் தன்னை நண்ணுவர் நரகம் நாடார்.

கிருதயுகப் பெண்களின் தன்மை

914. துற்பக மில்லை மாதர்க் கனைவருஞ் சுபகை யாவர்
கற்புளர் கன்னி காளை யெனுமிவ ரிருவர் தாமே
உற்பவ மாவ ரென்று முடலுறு பிணிக ளில்லார்
நற்றவம் புரிவர் செய்யும் வினைகளிற் பயனை நாடார்.

பிற பெருமைகள்

915. அங்கனை மலடி யாகா ளவள்சுதன் மரணங் காணன்
மங்குத லிடையி லில்லை மரிக்குநாள் மரிப்பர் யாரும்
நிங்கள்மும் மாரி பெய்யுஞ் சிறந்துறுஞ் செல்வ
[மோங்கும்
தங்கிடுந் தான மெங்குந் தருகவென் றெவருஞ் சாற்றூர்.

916. கண்டக மரங்க ளில்லை கனிமர மெங்கும் வீங்கும்
விண்டிட வுழுவ தின்றி விளைவது பேசி னுமுன்
கொண்டுதா மாறி லொன்று குலமன்னர் குடியைக்
[காப்பார்
தண்டமு மில்லை தத்தம் முறைசெயுஞ் சாதி நான்கும்.

வேத விதிப்படி ஒழுகுவர் என்பது கருத்து. வேதம் பேசிய முறையால் என்க. சா நாள் நாசமாய் - இறக்கும் நாளில் உடல் அழிய; சா நாள் நாசமாய் என்பதற்கு, இனிப் பிறப்பு அற்றமையால் சாகும் நாளும் அற்றவராய் என்றும் பொருள் கொள்க.

914. துர்ப்பகம், சுபகை, இவையிரண்டும் எதிரிடைச் சொற்கள். அமங்கலமின்றி மங்கலம் பெறுவர் என்பது கருத்து. துர்ப்பகம், சுபகம் என்பன அரிய பிரயோகங்கள். துற்பகம், எதுகை நோக்கியது. கற்பு உளர். உற்பவம் - பிறப்பு. தவம் புரிவர்; பயன் நாடார் என்று கொள்க.

915. அங்கனை - பெண். சுதன் - மகன். மங்குதல் - வறுமையடைதல். தருக.....சாற்றூர் - இரப்பவரே இல்லை என்றபடி.

916. கண்டக மரங்கள் - முள் மரங்கள். வீங்கும் - மிகும். விண்டிட - பூமி பிளவுற. உழுவதின்றி விளைவது; தானே பூமி

அந்தணர்

917. அந்தண ரோதி வேத மங்கமும் பயனு ராய்ந்து
சந்திகண் மூன்று முற்றித் தவறற விதியி னலே
மந்திர நவின்று வாக்கால் மகவித மனைத்துஞ் செய்து
தங்குலா சார நான்கி னிற்பரே தகுதி யாலே (82)

அரசர்

918. வேந்தரு மோதி வேதம் விதிமுறை நியதி செய்து
காய்ந்துதங் கரிசு தன்னைக் காசினி முறையிற் காப்பர்
ஈந்திரு நிதியு மற்றும் வேதியர்க் கிட்டஞ் செய்யத்
தாந்தமக் குரிய மூன்று சிரமமுஞ் சரிப்பர் சால்பான்.

வணிகர்

919. அருமறை தன்னை யோதி யங்கமு மோதி யாய்ந்து
நிரிவறச் சந்தி மூன்று முறையுற விதியிற் செய்து
கருணையா லாக்கள் காத்துக் கரிசறக் கொண்டு விற்ற
இருவிதா சிரமந் தன்னி னிற்பரே வசிய ரென்றும். (84)

நான்காம் வருணத்தினர்

920. அந்தண ராதி யோர்கட் கடிதொழு தேவற் செய்து
மந்திர மின்றிச் சந்தி செய்துதன் மனைவாழ் வென்னும்

வினையும் என்றபடி. நாமுன் பேசினும் - நாம் முன் பேசினேம். ஆறிலொன்று தாம் கொண்டு மன்னர் குடியைக் காப்பர் என்றியைக்க. தண்டம் - தண்டனை.

917. சந்திகள் மூன்றும் - காலை, நண்பகல், அந்தி என்ற மூச் சந்திகள். திரிகால அனுட்டானங்கள். வாக்கால் நவின்று. மகவிதம் - பலவித யாகங்கள். நான்கு ஆசிரம ஆசாரங்களில் நிற்பர் என்பக.

918. நியதி - அரசியல் முறை. கரிசு - குற்றம். காசினி - பூமி. அரசர்க்கு மூன்று ஆசிரமங்கள் கூறப்பெற்றன.

919. ஆக்கள் - பசுக்களை. வணிகர்க்கு இருவித ஆசிரமமே கூறப்பெறுகிறது. வசியர் - வைசியர்.

920. மனை வாழ்வு என்னும் ஆச்சிரமம் - கிரகஸ்தாசிரமம்.

அந்தவா சிரமத் துற்றுச் சூத்திர ரன்பாற் றம்பால்
வந்தவர்க் கிட்ட மான பொருளினை வழங்கு வாரே. (85)

விலங்குகளிடை ஒற்றுமை

921. ஆனையுஞ் சிங்கந் தானும் பகையற வணுகி நிற்கும்
மானெடு வல்லி யந்தான் வயிரமற் றணுகி வாழும்
பூனையு மெலியுந் தம்மிற் பகையறப் பொருந்தி நிற்கும்
ஏனைய நகுலம் பாம்பு மிகலற வினங்கி நிற்கும். (86)

விலங்கும் பறவையும் பேசும்

922. விலங்குகள் பறவை மற்றும் விளங்கவே
விளம்பும் வார்த்தை
இலங்கவே யியம்பு மேனை யிரண்டுகந்
தவினு மெண்ணும்
இலங்கிடா திவற்றின் வாக்கு மகிழ்ந்திடுங்
கலிகா லத்திற்
சலம்பகை யிரண்டு முண்டு சாதியின்
பேதத் தாலே. (87)

திரேதாயுகத்தின் தன்மை

923. மற்றைய திரேதத் துற்ரு மனிதரும் வஞ்ச மில்லார்
அற்றன யாசை கோப மறிந்தற மாதி யீசன்
நற்பத முயிர்க்குத் தோன்ரூத் துணையென நாடி
[யென்றும்
நிற்பரே தத்தஞ் சாதி நிலைமையி றளர்வ ருதே. (88)

---

921. ஆனை - யானை. அணுகி - நெருங்கி. வல்லியம் - புலி. வயிரம் - பகைமை. நகுலம் - கீரி. இகல் - பகைமை. இணங்கி நிற்கும் - மனம் பொருந்தி நிற்கும்.

922. ஏனை இரண்டு உகம் - திரேதா, துவாபர யுகங்கள். சலம் - பொய்; தணியாக் கோபம்.

923. ஆசை கோபம் அற்றனர் என்க. பதம் - பாதம்.

924. அரனடி புரிவர் பூசை யரிபதந் தனினு மன்பால்
பரமனுஞ் சிவனைப் பூசை பண்ணுவர் பயில்வே தத்தால்
கரிமுகன் கமல பாதங் காதலாற் புரிவர் பூசை
ஒருபிணி தானு மில்லா ருறுகணு மற்ப முள்ளார். (89)

துவாபர யுகம்

925. விரித்தனன் வேத நான்கு விதமுற முனிவி யாதன்
உரைத்தனன் மற்று முள்ள நூல்வித முணர்ச்சி
[பெற்றே
தரித்தவர் முனிவ ரோதத் தலைமைய வந்த ணாளர்
பரித்தரை யருக்குஞ் சொல்வர் துவாபர யுகத்திற்
[பாங்கால். (90)

926. பண்ணுவர் சாந்தி தன்னை நாடொறும்
விதியைப் பார்த்தே
எண்ணியே பலத்தை யாக மியற்றுவோ
ரிமையோர்க் கெல்லாம்
நண்ணுமா சிரம நான்கி னடைவுற
நிற்பர் நாளும்
புண்ணியம் புரிவ ரற்பம் பாவமும்
புரிவர் பொய்த்தே. (91)

---

924. அரன் - சிவபிரான். அரி - திருமால். கரிமுகன் - விநாயகன். உறுகண் - துன்பம்.

925. வியாதன் - வியாச முனிவர். ஓதுதல் - படித்தல்; சொல்லுதலுமாம். பரித்து - காத்து. அரையர் - அரசர்.

926. சாந்தி - பரிகாரச் சடங்குகள். பலம் - யாகத்தினால் உண்டாம் பயன். இமையோர் - தேவர். அடைவு உற - முறைபடி; நிறைவுற எனலும் ஆம். துவாபரத்தில் பொய்மை சிறிதளவு தோன்றும் என்பது குறிக்கப்பெற்றது.

927. வேந்தரும் வேத மோதி விதியினை நிசித்தந் தன்னை
ஆய்ந்துநா டோறுஞ் செய்வர் விதியினை யயர்ச்சி யின்றித்
தாந்தமக் குரிமை யான வாசிர மங்கள் சார்வர்
காய்சினந் தம்மை வெல்வர் புரிவரே கரிசுங் கையார்.

928. மற்றைய வசி..... ....றைமற வாம லோதிக்
கற்றுமற் றையநூ லெல்லாங் கருத்துற நியதி நாளும்
முற்றுறுங் கடமை யான வினையினை முயன்று செய்வர்
நிற்பரா சிரம மான விரண்டினு மிசையி னீங்கார். (93)

929. வேதிய ராதி யோர்க்கு விதிமுறை யேவல் செய்வர்
மாதருந் தாமுங் கூடி மகிழ்வுற மனையின் வாழ்வர்
ஆதுலர் தம்பால் வந்தா லறிந்தவ ரிட்டந் தன்னை
காதலா லுதவிக் காப்பார் சூத்திரர் கரிசுங் கையார். (94)

930. உடலுறுந் துயர முள்ளார் துவாபர யுகத்தி னுற்றூர்
படர்பிணி விதத்தி னலு முன்னையிற் பாவத் தாலே
தொடருமே மனத்தின் துன்பச் சுதன்மர ணத்துஞ்
[சின்னுள்
மிடியினும் வருந்து வார்கண் மழையற விளையு
[ளற்றே. (95)

931. மழைபொழி யாம லாலும் வாதநோ யாதி யாலும்
குழுவினர் பிரிவி னலுங் கூடலர் வெல்கை யாலும்

---

927. விதி - கட்டளை. நிசித்தம் - விலக்கு. அயர்ச்சி - சோர்வு. கரிசும் கையார் - குற்றங்களை வெறுப்பார்களல்லர்; சிறு குற்றங்கள் இழைப்பர் என்றபடி; 929.

928. வசையின் நீங்கார் - (சில) குற்றங்கள் உடையராவர் என்பது கருத்துப் போலும்.

929. ஆதுலர் - வறியர். கரிசுங் கையார் 927.

930. சுதன் - மகன். மிடி - வறுமை. விளையுள் - விளைவு.

931. கூடலர் - பகைவர். ஒன்பது வாய் யாக்கைச் சிறை - ஒன்பது துவாரங்களையுடைய உடலாகிய சிறைச்சாலை. வழு -

ஓழுகுமொன் பதுவா யாக்கைச் சிறைதனி லுறைத
[லாலும்
வழுவுடன் மன்னு மொன்றே சிலரவ மதிசெய் வாரே.

932. வெறுத்தவ ருடலந் தன்னை விரும்புவர் விமலன் பாதம்
அறுத்தக விருள ஞதி யமலன தடியி னீழல்
நிறுத்திடுங் குரவ னெங்குத் தானென வோடி நேடி
மறுத்தெழு மனவி..... மற்றையர் வார்த்தை
[யெல்லாம். (97)

933. பண்டைய தவத்தி னலே பரமனுங் குரவன் றன்னைக்
கண்டடி பணிந்து கண்ணீர் பொழிந்திடக் கருணை யாளர்
விண்டிட வெங்கள் பாச விதமம லேசன் பாதம்
கண்டிடக் கருணை செய்தா னென்றவர் கழறக்
[கேட்டே, (98)

934. தேசிக னிரக்கஞ் செய்து சின்மயன் றன்னைச் சிந்தித்
திசனை யெண்ணந் தன்னி லிருண்மல வலியு மேனைப்
பாசமு மவற்கு நீங்கப் பார்த்தம லேசன் பாதம்
வாசமார் நிழலின் வைப்ப ரவர்தமை மற்றூர் வல்லார்.

கேடு. ஒன்றே - இஃதொன்றுதானே. அவமதி - கெடுமதியால் நிகழும் காரியங்கள்.

932. அறுத்து, நிறுத்தும் குரவன் என்றியைக்க. நேடி - தேடி.

933. இச் செய்யுளில் அடியார்கள் தாம் பெற்ற பேற்றைக் கூறத் தேசிகர் கேட்பர் என்பது கூறப்பெற்றது. கண்ணீர் பொழிந்திட; ஆனந்தபாஷ்பம் பொழிய; முன்பு அருள் பெருமையால் பட்ட துன்பத்தால் கண்ணீர் விட்ட செய்தி குறிக்கப் பெற்றதும் ஆம். பாசவிதம் விண்டிட, எனை இயைக்க.

934. தேசிகன் உபதேசம் செய்யுமுறை கூறப்படுகின்றது. சின்மயன் - ஞான மயனான ஈசன். அவற்கு - சாதகனுக்கு. ஆர் - நிறைந்த. மற்று ஆர் வல்லார் - குரவரை அன்றி வேறு எவர் வல்லவர்?

யுகந்தோறும் பலன் கிட்டும் முறை முதலியன

935. அய்யிரண் டாண்டு பூசித் தாம்பலங் கிருதத் தார்க்கு
மையனி கண்டன் றன்னை மற்றையற் கறுமா தத்தாம்
ஐயுறு வாரத் தாகுந் துவாபரை யார்க்கோர் வாரத்
தெய்திடுங் கலிகாலத்து விசைந்திடு மனிதர்க்

[கெல்லாம். (100)

936. கலியினுக் குற்ற வாண்டு கருதிடி னெட்டுக் கூரும்
நிறைமுறை குன்றி னுலாங் கூற்றினு னின்ற கூற்றின்
நிலைமுறை மிகவுங் குன்று நீண்டுறு முடலா யுள்ளும்
வலியுமாண் டாருன் பாலு யிரமொரு கூற்றின்

[வாய்க்கும். (101)

937. ஆருன்பா லுயிரத்து ளாதியு நூருண் டப்பால்
ஆருன்பா னிரட்டி தன்னு ளெண்பஃ தப்பா லுற்ற
ஆருன்பா னிரட்டி தன்னு ளெழுபஃ தப்பா லுற்ற
ஆருன்பா னிரட்டி தன்னு ளறுபஃ தரிவை

[மார்க்கும். (102)

938. மற்றைய வாருன் பாலில் வயதுதா னிருப தாகும்
பெற்றிடு மந்தப் பேதை பிள்ளையை யாண்டைந் துற்றே
பெற்றிடு மாறின் முற்றி யறுபகை தாயுட் பேதை
பெற்றிடு மேழின் முற்றி யெழுபகை தாயுட் பேதை.

939. பெற்றிடு மிரண்டு ராறின் முற்றியே பிள்ளை தன்னை
பற்றிய வயது தானெண் பஃதுறும் பாவை நல்லாள்
பெற்றிடு மெண்ணீ ராண்டின் முற்றியே பிள்ளை தன்னை
பற்றிய வயது நூறு முறும்பணி மொழியி னுளே.

---

935. கிருதத்தார்க்குப் பூசித்து ஆம் பலன் பத்து ஆண்டுகள் ஆகும். திரேதாயுகத்தார்க்கு ஆறுமாதம்; துவாபரையார்க்கு ஐந்து வாரங்களாகும். கலி காலத்தில் ஒரு வாரத்தில் ஆகும்.

936-940. இச்செய்யுட்கட்கு விளக்கமாய் உரை காண இயலவில்லை. செய்யுள்களும் திருந்தவேண்டி யுள்ளன.

940. குன்றலா னுயுள் மெல்ல மெல்லவே யாக்கை தானும்
குன்றுமே மெல்ல மெல்ல வுடல்வலி தானுங் குன்றும்
குன்றுமே மெல்ல மெல்லக் கூறுசொற் பொருளுங்
[கோளும்
குன்றுநல் லுணர்வு தானு நியதியு மெல்லக் குன்றும்.

941. மூன்று நூ ரூயி ரத்து முப்பதிற் றிரட்டி யின்மேல்
ஆன்றவொன் பதிற்றி ரட்டி யாயிர வாண்டு சென்றுல்
ஊன்றனு வொல்கி மாந்த ரொண்டொடி யார்கைப்
[பாவை
போன்றலும் புனைய மாட்டார் வனையினுட் புக்கு
[வாழ்வார். (106)

வேறு

942. மூந்தியுறும் பக்கத்தின் முளைத்தமதி மெல்லமெல்ல
முற்றல் போலச்
சிந்தனையு முடற்செயலு மெல்லமெல்லக் கிருதத்திற்
றிகழ்ந்தே யாங்கும்
பிந்தியுறும் பக்கத்தின் மெல்லமெல்ல மதிதேம்பும்
பெற்றி போலச்
சிந்தனையு முடற்செயலு மெல்லமெல்லத் திரேதாதி
தன்னிற் றேயும். (107)

---

940. ஆயுட் காலம் குன்றக் குன்ற மானிடரின் உடல் வலியும் குன்றும்; சொற் பொருள் கோள், உணர்வு, நியதி யாவும் குன்றும். சொற் பொருள் கோள் - சொல்லப்படும் பொருளை ஏற்றுக்கொள்ளும் திறமை.

941. மூன்று லக்ஷத்து அறுபது ஆண்டுகட்குமேல், பதினெண்ணுயிர ஆண்டுகள் சென்றுல், மாமிச உடல் குறைந்து, ஆடவர் பெண்களின் கைப் பொம்மை போலச் சிறுத்திடுவர். பொந்துகளில் புகுந்து வாழ்வர்.

942. கிருதயுகத்தில் வளர்பிறைச் சந்திரனைப்போல, மக்களின் சிந்தனைச் சக்தியும் உடல் செயலும் மேலும் மேலும் வளர்ச்சி

943. அத்திரியை முதலான வருமுனிவ ரெழுவருந்தா
மன்பு கூர்ந்தே
வித்தரித்து வேதத்தி னரும்பொருளீ முறையுறவே
விளம்ப லாலே
உத்தமமாங் கிரேதத்தி லுதித்தார்க ளுணர்வுசெய
லுடையா ராவர்
வித்தகன்வே தகனமல னேவலினு லவர்புரிந்த
வினையைப் பார்த்தே. (108)

தீர்த்த கன்னியர் ஆரூர் புகுதல்

944. எனவியம்பப் புடையிருந்த தீர்த்தவிதக் கன்னியர்க
ளிடுக்க ணெய்திப்
புனிதமறு மெங்கண்மெய் பொய்கைவிதந் தீண்டுதலாற்
புளினர் பொல்லா
மனிதரினிக் கலிநலியா வாறெமக்கு வாகிச
வருள்செய் யென்னப்
புனிதனமர் திருவாரூர் கலிநலியாப் புரியதனுட்
புகுமி னென்ருன். (109)

யடையும்; திரேதா யுகத்தில் தேய்பிறைபோல அவை தேய்ந்து வரும்.

943. கிரதத்தில் அத்திரி முதலான ஏழு முனிவர்கள் வேதப் பொருள்களீ விளம்பினதால், அந்த யுகத்தில் பிறந்தவர் கள், நல்லுணர்வு பெற்று நற்செயல்கள் உடையராயினர். அந்த யுகத்தில் மக்கள் (நல்) வினை புரிய, அவ்வினைகளுக்கு ஈடாக இறைவன் அவர்களுக்கு நல்லுணர்வு முதலியவற்றை அருள் கிருன்.

944. என. இயம்ப, இயம்பினர். புடை இருந்த - பக்கத்தில் இருந்தவர். தீர்த்த வித கன்னியர்கள் - கங்கை முதலான தீர்த்த தேவதைகள். புளினர் - வேடர். பொல்லாத மனிதர் எங்கள் பொய்கைகளீத் தீண்டுதலால், எமக்குக் கலி நலியாவாறு அருள் செய்ய வேண்டுமென்று வேண்ட, போதகன், 'திருவாரூர் கலி யால் நலியாத புரி; அங்குச் சென்மின்' என்ருன் என்க. பொய்கைகள், இங்குத் தீர்த்தங்களீக் குறிப்பன.

945. போதகன்ஞான் புகன்றமொழி தனைக்கேட்டுப்
கன்னி மார்கள் [பொங்குபுனற்
வேதியனைப் பதம்பணிந்து வேந்தனையுந் தொழுதுவிடை
கொண்டு மீண்டே
ஆதியமர் திருவாரூர் தனையடைந்த ஞதிமல
முத்தன் றன்னை
நாதனைப்புற் றிடங்கொண்ட நம்பனைக்கண் டடிபணிந்து
நயந்து நின்றே, (110)

கன்னியர் தோத்திரித்தல்

வேறு

946. பூனை வன்னி சூடினைப் புளின ஞகி யோடினைப்
வேனை யன்று வீட்டினைப் வேண வாவு மோட்டினைப்
காளி யோடு மாடினைப் கான மாய பாடினைப்
மீளி யேற தேற்றினைப் போற்றி போற்றி விமலனே.

947. அங்கை வன்னி யேந்தினை யால கால மாந்தினைப்
வெங்க ணரவ மாட்டினைப் வெய்ய வீனையை வீட்டினைப்
நங்கை பங்கு மேவினைப் நவிலும் வேத நாவினைப்
எங்க ளுள்ள மேவினைப் போற்றி போற்றி என்றுதாம்.

---

945. புனற் கன்னிமார் - தீர்த்த கன்னியர். வேதியன் - பிரகஸ்பதி. வேந்தன் - இந்திரன். ஆதி - சிவபிரான்; ஆதியமர் - ஆதியிலிருந்து விளங்கி வரும்.

946. பூனை, வன்னி - சிவபிரான் தலையிற் சூடும் தாவரவகைகள். புளினஞகி ஓடினது, அருச்சனனுக்குப் பாசுபதாத்திரம் கொடுக்கும் பொருட்டு. வேள் - மன்மதன். வேண் அவா - மிகுந்த ஆசை. கான மாய பாடினைப் - (சாதாரி முதலிய) பாடல்களைப் பாடியவனே. மீளி - வலிமை. ஏறு அது - இடமானதை; அது - அது பகுதிப் பொருள்விகுதி.

947. வன்னி - நெருப்பு. ஆலகாலம் - விடம். மாந்துதல் - பருகுதல். வெம் கண் அரவம் - கொடிய கண்களையுடைய பாம்பு. நங்கை - உமை. உள்ளம் - இதயம்.

சர்வதீர்த்தங்களும் ஆரூரை அடைந்தமை

வேறு

948. பெற்றமலன் றிருவருளைப் பெறற்கரிய தலமிதுதா
னென்று பேணி
முற்றுமகிழ் வினராகி முக்கோடி யரைக்கோடி
மூர்த்தி மாரும்
உற்றனரங் கொவ்வொருவர்க் கும்வீத மாத்திரத்தி
னெல்லை கொண்டே
புற்றிடங்கொண் டிருக்குமரும் பொருளமலன் கமலபதம்
புந்தி வைத்தே, (113)

ஆரூரின் பெருமை

949. இத்தலத்திற் பரமசிவ னிமையவர்செய் புற்றினுகந்
திருத்த லானும்
உத்தமமாந் தீர்த்தவித முக்கோடி யரைக்கோடி
யுறைத லானும்
இத்தலத்துக் கொப்பான தலமுலகின் மற்றிலையென்
றெண்ணி யீங்கே
சித்தருமா தவத்தோரு மிமையவரு மடைந்திட்ட
பலத்தைச் சேர்வார். (114)

950. ஆடுமவர் தீயவினை யறுத்தருள்செய் தீர்த்தவித
மீனத்து மிங்கே
கூடுதலா லேசருவ தீர்த்தங்கட் காசிரிய
மெனும்பே ரென்று

---

948. தீர்த்தங்கள், மூன்றரைக்கோடி என்பதும், அவை யாவும் அந்நகரில் ஓரோர் இட எல்லை கொண்டன என்பதும் கூறப்பெற்றன.

949. சித்தர், முனிவர், தேவர் முதலியோர் ஆரூரில் வந்து தங்குதற்குக் காரணம். இட்ட பலம் - விரும்பிய நன்மை.

950. சர்வ தீர்த்தங்களின் ஆசிரயம் என்ற பெயர்க்குக் காரணம் கூறப்பெற்றது. ஆசிரயம் - அடையுமிடம். கூப ஆதி -

நீடியுறு மித்தலத்தி னிலவியகூ பாதியினு
முற்ற நீரின்
ஆடியம லேசனடி பணிந்துறைவார்க் கிட்டவர
மனைத்து மாமே. (115)

பலச்ருதி

951. எடுத்தவுடற் பாவவித மெனைத்தனைத்து மொழித்திடுவீ
ரிந்த வாக்குப்
படித்துணர்ந்தார் கேட்டுணர்ந்தார் பத்தருமிங்
பரம போகம் [கின்புற்றுப்
அடுத்திடவே சிவலோகத் தனுபவிப்ப ரினிக்கேண்மி
னமலன் முன்னே
கடிக்கமலத் தொடுமிலங்கு மீச்சிரதீர்த் தாதிகளுங்
கழறு வாமே. (116)

952. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வள்ளமே. (117)

சருவதீர்த்தாசிரயச் சருக்கம் முற்றும்

கிணறு முதலியன. இத் தலத்திலுள்ள கிணறுகளும் புண்ணிய தீர்த்தங்களேயாம் என்றபடி.

951. எனைத்து அனைத்து - எவ்வளவோ அவ்வளவு. இந்த வாக்கு, இங்கு இப் படலத்தைக் குறித்தது. கமலம் - தாமரை.

21. மிச்சிராதி தீர்த்தச் சருக்கம்

மிச்சிர குண்டத்தின் பெருமை

953. உமையோடுங் கந்த னெடும் பிரிவ றவையு மீசன்
இமையவ ரிறைஞ்சி யேத்த வின்னருள் புரிவான்
[முன்னே
குமைவினைக் கொடுமை தீர்க்கு மிச்சிர குண்ட
[மொன்றுண்
டமரரு மதனி லாடி யடைவர்தம் மிட்ட மாங்கே. (1)

954. மாகத்துள் வளருந் திங்க ளட்டமி வாய்க்க மூழ்கி
மோகத்தை முனியு மந்தக் குண்டத்தின் முளைத்த
[திங்கட்
பாகத்தைச் சடையின் வைத்த பசுபதி பாதம் பார்த்தார்
ஆகத்தி னுதியா நீண்டான் டடைந்திருந் தமலத்
[தார்வார். (2)

அகத்திய தீர்த்தமும் அம்புயப் பொய்கையும்

955. அதனது பூர்வ திக்கி லகத்தியன் குண்டத் துள்ளும்
அதனது தென்பால் நீடு மம்புயப் பொய்கை யுள்ளும்
விதிமுறை மூழ்கி மீனத் தட்டமி தனில்விண் ணோர்க்குப்
பதிபதம் பார்த்தார் பற்றிச் சிவபுர மீளார் பாரின். (3)

---

953. குமை வினை - திரண்ட வினைகளின்; அழி. குண்டம் - குளம்.

954. மாக மாதம், வளர்பிறை, அட்டமியில் நீராடுதலின் சிறப்பு. மோகம் - காமம்; ஆசை. முளைத்தல் - வெறுத்து நீக்குதல். ஆகத்தின் உதியா - பிறப்பெடாமல்.

955. பூர்வ திக்கு - கிழக்குத் திக்கு. அம்புயப் பொய்கை - தாமரைக் குளம். மீனம் - பங்குனி மாதம். விண்ணோர்க்குப் பதி பதம் - இந்திரனது இடம். பாரின் மீளார், என்க.

வேறு

கபில நதி

956. அதற்குத் தென்பால் கபிலமென்
றறையு நதியொன் றுண்டதனின்
மதித்து விதியின் கபிலன்முன்
மூழ்கிப் புரிந்து மாதவங்கள்
இதத்தைப் புரியுஞ் சித்திவிதம்
பெற்முன் மற்று மெண்ணரியார்
அதற்குண் மூழ்கி யருந்தவங்கள்
புரிந்தே யரிய பலமடைந்தார். (4)

கபிலநதிக் கரையில் உள்ள கோயில்

957. அதற்குத் தரத்தி லுலயமொன்
றுளதாங் கமல னமர்ந்தியங்கும்
இதத்தைப் புரிய வெணியோகி
யாகி யன்பர்க் கிம்மையி னும்
பதத்தைப் பகர்ந்து பதவியிலும்
பயில்வித் தறிவித் தனும....பனுங்
கதத்தைக் கூவித் திமையவர்க்குங்
கதியை வழங்குங் கருணையனே. (5)

---

956. அகத்திய தீர்த்தத்திற்குத் தெற்கே, கபில நதி என்ற புண்ணிய தீர்த்தம் உண்டு; அதனில் கபிலன் மூழ்கி, தவங்கள் புரிந்து, பலவித சித்திகளைப் பெற்முன்; மற்றும் எண்ணரியர் அந்நதியில் மூழ்கித் தவம் புரிந்து அரிய பலனடைந்துள்ளார்கள் என்பது இச் செய்யுளின் கருத்து. அறையும் - சொல்லும்.

957. உத்தரம் - வடக்கு. ஆங்கு - அவ்வாலயத்தில். அமலன், அன்பர்க்கு இதத்தைப் புரிய எண்ணி, தான் யோகியாகி அமர்ந்து இலங்கும் என இயைக்க. 3, 4 அடிகளின் பொருள் நன்கு ஆராயப்பட வேண்டும். பதத்தைப் பகர்ந்து, பதவியிலும் பயில்வித்து, அறிவித்து, கதத்தைக் கூவித்து, இமையவர்க்கும் கதியை வழங்கும் என்பன யோகப் பயிற்சி முறைகளாகும்.

மறையவர் கூட்டமாக யோகீசுரரைக் காண ஆரூருக்கு வருதல்

958. காட்சி தனக்குங் கருத்தினுக்கு
மரிய கடவுள் கதையினுக்குங்
காட்சி தன்னு லாரூருட்
காணப் பட்டுக் கைதொழுவார்
காட்சி யாகச் சிவலோக
மருளு மென்ற ருளக் கேட்டே
சேட்சி தன்னிற் றென்றிசையின்
மறையோர் காண்பர் திரண்டன்றே. (6)

கடவுள் காட்சி யளித்தல்

959. கோடி மறையோர் திரண்டார்தாஞ்
சென்று செறிந்தார் குழைந்துள்ளம்
சேடர் வாழுந் திருவாரூர்
முந்தித் தரிசிப் பேனென்
றாடி ஞரொப் பிலிபதத்தை
யுணர்ந்தே யவர்தம் முன்னமலன்
நேடு மவர்முன் பலகோடி
மயமாய் நிரந்து நின்றனுமே. (7)

---

958. காண்பதற்கும், நினைப்பதற்கும், சொல்லுதற்கும் அரிய கடவுள், ஆரூருட் காட்சிக் கெளியராய்க் காணப்பெற்று விளங்கி, அவரைக்கண்டு கைதொழுபவர்க்கு, அக்கடவுள் பிரத்தியக்ஷமாகச் சிவலோகம் அருளுகின்றார் என்பதைக் கேட்டு, அந்தணர்கள் தென் திசையில் வெகு தூரத்திலுள்ள ஆரூரை நோக்கித் திரண்டெழுந்தார்கள் என்பது இச் செய்யுளில் கூறப்பெற்றதாகும்.

கதை - சொல். சேட்சி - சேய்மை.

959. உள்ளம் குழைந்து, என்றியைக்க. சேடன் - கடவுள். 'செங்குன்றூர் நின்ற சேடனதாள்' (தேவா. 923·7). ஊடினூர் - ஒருவரோடொருவர் பிணக்குற்றார். ஒப்பிலி - தனக்கு வேறு ஒப்பில்லாத இறைவனின். பதம் - பாதம். நேடும் அவர் - தேடும்

அந்தணர் வேண்டுகோள்

960. பணிந்தா ரெமக்கு மெதிர்நிரந்தான்
பரம னென்றே யவன்பதத்தை
அணிந்தே யவர்தஞ் சிரந்தன்னி
லழுதார் பிறப்பு மறுப்பானே
தணந்தே யிந்தத் தரைதன்னை
நினது தாட்டா மரைநீழற்
புணர்ந்தே யிருத்த வருள்புரியா
யென்றே பூசை புரிந்தேதாம். (8)

961. சயசய விகழ்தக் கனேநனி முனிவுற்
றவனது தலையைத் தடிவானே
சயசய வரியெச் சனுமென வுறமற்
றவனது தலையைத் தடிவானே
சயசய சமனுக் கொருபத முறமற்
றிருபத மதனைத் தடிவானே
சயசய விரவிக் கெயிறற முனிவுற்
றழலினை யொருகைத் தடிவானே. (9)

அம் மறையோர். இறைவன் தன்னை தேடி வந்த அந்தணர் முன் இறைவர் பல கோடி யோகியாக நின்று காட்சி யளித்தனர் என்பது ஈற்றடியில் கிடைப்பதாகும்.

960. பரமன் எதிர் நிரந்தான் என்றும், தம் சிரந்தன்னில் அணிந்தே என்றும், இயைக்க. தணத்தல் - செல்லல். இருத்த - இருக்கச் செய்ய.

961. இச் செய்யுளில் தக்கன், எச்சன் இவர்களின் தலைகள் அறுபட்டமை, காலனின் ஒரு கால் ஒடிபட்டமை, இரவியின் பற்கள் தகர்க்கப்பட்டமை, அங்கியின் கை அறுபட்டமை என்ற இவைகள் கூறப்பெற்றன.

அரி எச்சன் - அரியாகிய யஜ்ஞ புருஷன். சமன் - யமன், பதம் - பாதம். இரவி - சூரியன். அழல் - அக்னி.

962. சயசய சகலற் கவரெனு முருவுற்
றடியவர் தலைவைத் தருள்வானே
சயசய பிலயா கலவரை யெதிருற்
றவர்மல வலியைத் தகைவானே
சயசய சமலற் கவருள மலருற்
றகவிருள் வலியைத் தகைவானே
சயசய பரிபக் குவமுறி னிருளுக்
கிரவியி னதனைத் தகைவானே. (10)

வேறு

இறைவன் அந்தணர்க்கு விமானம் அருளல்

963. எனத்துதி யியம்பக் கேட்டே
யிறைவனு மகிழ்ந்து நீர்தாம்
மனத்தினுக் கினிய தேரிற்
புகுந்துகம் புரியில் வாழ்மின்
எனப்பகர்ந் திடலு மீசன்
பதம்பணிந் திசைந்தா ராங்கே
உனற்கரு மமலன்பாதத் துறுவர்பூ
..... வொடுங்கு நாளில். (11)

---

962. பிலயாகலவரை என்றது பிரளயாகலரைக் குறிக்கும். இதனுசிரியர் இயற்றிய பதிபசுபாசப்பனுவலில் 'பிலயாகலர்' எனக் கொண்டிருப்பதுங் காண்க. சகலர்க்கு மானிடவுருவுடன் வந்து உபதேசித்தலும், பிரளயாகலர் முன்தோன்றிப் பல வலியைத் தகைதலும், சமலற்கு அகவிருள் வலியைத் தகைதலும், கூறப்பெற்றன. சமலர் - இங்கே விஞ்ஞானகலர்.

963. அந்தணர்கள் துதிசெய, இறைவன் அவர்களுக்கு அருளி, சிவலோகத்திற்குச் சென்று அங்கே அவர்கள் வாழ அருள் புரிந்தனன்; அவர்களும் அவ்வாறு சென்று, பிரபஞ்சம் ஒடுங்கும் நாளில் விமலன் திருவடி அடைந்தனர் என்பது இச் செய்யுளின் பொருளாம். நம் புரி என்றது கயிலாயம். ஆங்கே இசைந்தார் என இயைக்க.

உருத்திர கோடி

964. உருத்திரர் கோடி யன்ன வமலனெங் கியவத் தானம்
உருத்திர கோடி யென்றே யுரைத்திடப் படுமெங் நாளும்
உருத்திர கோடி நாத னெனப்படும் யோகி தானும்
பரித்திடும் பத்தி தன்னை டவன்பதம் பணிந்து
[பார்ப்பார். (12)

உருத்திர கோடியைப் பூசிக்கவேண்டிய முறையும் பயனும்

965. தகுதிய வாடி மாத முதற்சதுர்த் தசியிற் றம்பாற்
பகையென வுற்ற பாவ விதமெலாம் பறியப் பாற்றி
நகுமல ரிரத மேறிச் சிவபுர நண்ணி வாழ்வர்
புகழ்தனு வினுமுன் மாதச் சதுர்த்தசி புணரும்
[போதும், (13)

966. ஒழிந்துண வுறக்க மங்ஙா ளோதியே யெழுத்தோ ராறும்
விழைந்திராப் பகலு மந்த யோகிதன் மேனி யுன்னி
மொழிந்தநூல் விதியி னலே பாரண முடித்தா கத்தை
ஒழிந்துமேற் சிவலோ கத்தி லுற்றிருந் தொழிப்பா
[ரூனம். (14)

---

964. கடவுள் கோடி உருத்திரர் ஸ்வரூபம் கொண்டு தோன்றிய இடம் உருத்திர கோடி என்றே பெயர் பெறும்; அங்கெழுந் தருளியுள்ள இறைவன் நாமம் உருத்திரகோடி நாதர்.

965. ஆடி, தனு, முன் மாதம்; ஆடி, கார்த்திகை, மார்கழி மாதங்களில்; சுக்கிலபக்ஷ சதுர்த்தசி என்று இச் செய்யுளில் காலம் குறிக்கப் பெற்றுள்ளது போலும்.

பறிய - ஓட. பாற்றுதல் - மாற்றுதல். நகு - விளக்கமுள்ள. மலர் இரதம் - புஷ்ப ரதம்.

966. உணவு, உறக்கம் ஒழிந்து என்க. விழைந்து - விரும்பி. உன்னி - தியானித்து. பாரணம் - உபவாசமிருந்து உண்கை. ஆகத்தை ஒழித்து - உடலை நீத்து. ஊனம் - குறைவு.

967. உன்னியே யுளத்தி னந்த
யோகிதன் னுருவந் தன்னைப்
பன்னிலா றெழுத்து நாற்றிறட்
டுருப்பல சிந்தை யுற்றிற
வன்னிமூன் னிருள்போல் பாவ
விதமெலா மாய்ந்து போக
மன்னுவர் சிவலோ கத்தின்
வருவரோ மண்ணின் வாரார். (15)

968. வெந்தழல் நடுவில் நின்று வேனலிற் றவஞ்செய் வாரும்
அந்தர முற்றே காரி லருந்தவம் புரிவார் தாமும்
பந்தநீர்ப் பொய்கை நீருட் பலிதனிற் படிவார் தாமும்
நந்திதன் னுமை மாங்கு நவிலுநற் கொவ்வார் நாடில்,

969. உன்னியே யோகி பாத முருத்திர சத்தந் தன்னைப்
பன்னிரு வாரம் பண்ணும் பனவரும் பாவ மெல்லாம்
பின்னம தாகச் சேர்ந்து பிஞ்ஞகன் புரத்து வாழ்வர்
அன்னிய மாகப் பாச மமல்ன தடியுஞ் சேர்வார். (17)

970. முடித்தவர் சிராத்தந் தன்னை யோகிதன் முன்னை [முன்னூல்
படித்தன வழியி னலே பாதாளத் தழுங்குஞ் சுற்றம்

---

967. வன்னி முன் இருள் போல் - நெருப்பின் முன் இருள் மாய்வதுபோல. மண் - பூமி.

968. உருத்திர கோடியில் முறைப்படி சிவபிரானின் பெயரை ஜபிப்பார்க்குப் பிற வழிகளில் தவம் செய்வார் ஒப்பாகார் என்பது.

969. யோகி - யோக உருவில் எழுந்தருளியுள்ள இறைவன். உருத்திர சத்தம் - உருத்திர சப்தம்; ருத்ர ஜபம். பன்னுதல் - சொல்லுதல். பலவர் - அந்தணர். பின்னமது ஆக - சிதற. பாசம் அன்னியமாக என இயைக்க.

970. அவ்விடத்தில் சிராத்தம் செய்தலின் பயன் கூறப் பெற்றது. பாதாளத்து அழுங்கும் சுற்றத்தார் விடுபட்டு, சிவ

எடுத்தெழிற் சிவலோகத்து ளிருத்தியே யிருப்பர் தாமும்
விடுத்திரு வினையும் வேரும் விமலன தடியுஞ் சேர்வார்.

971. அருமறை யினையு மாராய்ந் தமலன தடியுட் கண்டார்த்
திருவடி பணிந்தே யோகி திருமுனே கொடுத்தார் தேனுக்
கருவினுட் படிவா ரல்லர் சிவபுரங் கலந்து வாழ்ந்து
நிருமல னடியுஞ் சேர்வ ருலகெலா நீங்கு நாளில். (19)

பலச்ருதி

972. பன்னியே யிந்த வாக்குப் பரிவுறப் பகர்வார் தாமும்
மன்னிய மனத்தி னிச்சை மகிழ்வுறக் கேட்பார் தாமும்
அன்னிய மாகப் பாவ மடைவரே சிவலோ கத்தை
நின்மல னருளால் மூல மலத்தையும் நீக்கு வாரே. (20)

மேல் வரும் சருக்கம்

973. பர்கந்தன மிச்சி ராதி தீர்த்தமும் யோகி பாங்கும்
சகந்தனக் கதிப னான தசரதன் சார்ந்திவ் வாரூர்
திகழ்ந்திடச் சிவலிங் கத்தைத் தாபித்துச் செய்து பூசை
உகந்திடும் வரத்தைப் பெற்ரு னதனையு முரைப்பா
[மோர்மின். (21)

லோகத்தில் இருத்தப் பெறுவர். தாமும் சிவபிரான் திருவடியைச் சார்வர்.

971. ஆராய்ந்து, கண்டாரைத் திருவடி பணிந்தே, கொடுத்தார் என இயைக்க. திரு முன் - சந்நிதியில். தேனு கொடுத்தார் - பசுக்கானத் தானம் செய்தவர். கருவினுள் படிவார் அல்லர் - பிறப்பெடுக்க மாட்டார்.

972. வாக்கு, இங்குச் சருக்கம். அடைவரே - ஏகார விண அடையார் எனும் பொருட்டு. மூல மலம் - ஆணவம்.

973. பாங்கு - தன்மை. ஓர்தல் - ஆராய்தல்.

வேறு

974. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே (22)

மிச்சிராதி தீர்த்தச் சருக்கம் முற்றும்

---

22. தசரத சருக்கம்

அயன் ஆரூரில் பூசித்துப் பேறுபெற்றது

975. ஆதித்தன் மரபின் வந்த வரசனிவ் வாரூர் தன்னில்
தாபித்தே சைவ சத்தி தனையருச் சனையுஞ் செய்து
போதத்துக் கிட்ட மான வரமுறப் புவனி யாண்டு
சாதத்தை மரணந் தன்னை தடுத்தரன் புரத்தைச்
[சார்ந்தான். (1)

தசரதன் சனிபகவானை வென்றதும், இந்திரனுடன் தோழமை கொண்டதும்

976. அன்னவன் புதல்வ னெனதசர தன்யோத்தி யாள்வான்
பன்னிவே தாதி யாய்ந்த பண்டிதன் படர்ந்து வான்றன்

---

975. ஆதித்தன் மரபு - சூரிய வமிசம். அரசன், இங்குக் கூறப்பெற்றவன் தசரதன் தந்தையான அரசன் என்க; இஃது அடுத்த பாடலால் புலனாகும். சைவசத்தி, இங்குச் சிவபிரானையும் சக்தியையும் குறித்தது. போதத்துக்கு இட்டமான வரம் - அறிவுக்கு உகந்த வரங்கள். உற - பொருந்த. சாதத்தை - பிறப்பை. சாதத்தை .....புரம். பிறப்புக்களை நீங்கின சிவபெருமானுக்குரிய கையிலாயம்.

976. வேதாதி பன்னி ஆய்ந்த பண்டிதன் என்க. வான், தன் முன் உறும் சனி; ஒருமுறை சனிபகவான் ரோகிணியைப்

முன்னுறுஞ் சனியை வென்ற மைபுரந் தரன்கேட்
[டுண்டி
இன்னல்வீ ரியனைப் புல்கித் தோழனுய் விண்ணி
[லேய்ந்தான். (2)

தசரதன் விண்ணுலகு அடைந்து திரும்புதல்

977. என்னது தோழ னென விந்திரன்
றனைக்காண் பேனென்
றுன்னுமன் னவனுந் தேரை யூர்ந்துவா
னுலகஞ் சேர்ந்தான்
மன்னவன் வரவு நன்றென் றெழுந்துவா
சவனுங் கண்டே
தன்னது கையி னுலே தழுவினன்
றெழுதான் றன்னை. (3)

978. எண்ணருங் காலந் தானு மின்புற
விருவ ருந்தாம்
பண்ணுற மதுர வாய்மை பகர்ந்தினி
திருந்தார் பாங்கால்
மண்ணினுக் கரிய வெல்லாங் கொடுத்துமன்
னவசெல் கென்ற
விண்ணவர் கோனைப் போற்றித் தசரதன்
விடைகொண் டானை. (4)

பேதித்துக்கொண்டு வர, அதன் விளைவால் நாட்டில் பஞ்சம் தோன்ற, தசரதன் அவனிடம் சென்று போரிட்டுப் பின் அவன் பால் வரங்கள் பல பெற்றனன் என்பது ஐதிஹ்யம். புரந்தரன் - இந்திரன். இனல் வீரியனை - இந்தச் சிறந்த வீரனை தயரதனை. இன்னல் என்று திரிந்தது, எதுகை நோக்கி என்க. புல்கி - அணைத்து. விண்ணில் ஏய்ந்தான் - விண்ணுலகம் சென்றவன்.

977. வாசவன் - இந்திரன். தொழுதவன் தசரதன் என்க.

978. பண்ணுற மதுர வாய்மை - மிக இனிய பேச்சுக்கள். மண்ணினுக்கு அரிய - பூவுலகில் கிடைப்பதற்கரிய.

இந்திரன் தயரதன்பால் தோஷம் கண்டது

979. அருமறை யாய்ந்தா ரேனு மறம்பல புரிந்தா ரேனும்
உரிமைய புதல்வ னில்லா ருடலமும் புனிதமல்ல
இருமையு மவர்க்கே யில்லை யென்றெணி யிந்தி ரன்முன்
புரவல னிருந்த தானம் புரோக்கணம் புரிவித் தானே.

நாரதர் தயரதனிடம் கூறல்

980. நண்ணியே தசரதன்பால் நாரத முனிதான் முன்னுள்
விண்ணவர் வேந்த னீதான் மிதித்திட விருந்த தானம்
புண்ணிய வர்க்கி யத்தாற் புரோக்கணம் புரிவித் தானென்
றுண்ணகை யோடுங் கூற மன்னனு முளத்து
நொந்தே. (6)

தயரதன் மறுமுறை இந்திரலோகம் சேறல்

981. இந்திர லோகஞ் சேர்ந்தா னெதிரணைந் தவனு நீதான்
வந்தது நன்றே யென்று மதுரவாய் மொழிகள் கூறிச்
சிந்தனை திகழப் பூணுஞ் சிறப்புற வளித்துப் போரின்
முந்திய வீரர் வீர செல்கென மொழிந்த போதில், (7)

---

979. உரிமைய - உரிய. மக்கட் பேறில்லாதவர் உடல் புனித மன்று, என்று இந்திரன் தயரதன் இருந்த இடத்தை நீர்கொண்டு புரோக்ஷித்தான் என்க. இருமை - இம்மை, மறுமை. தானம் - இடம். புரோக்கணம், புரோக்ஷணம் - தூய்மை செய்ய நீர் தெளித்தல். புரிவித்தான் - செய்வித்தான்.

980. நண்ணி - அடைந்து. மிதித்திட இருந்த - மிதித்திருந்த. அர்க்கியம் - மந்திர நீரிறைக்க. உள் நகை - பரிகாசச் சிரிப்பு. நொந்து - வருந்தி. இச் செய்யுள், நொந்தே இந்திர லோகம் சேர்ந்தான் என்று அடுத்த செய்யுளுடன் முடியும்.

981. பூண் - ஆபரணங்கள். வீரர் வீர - வீரர்களுள் வீரனே.

இந்திரனைத் தயரதன் வினதல்

982. மன்னவன் பிரிந்தா னந்த மன்னவ னிருந்த தானம்
தன்னையும் புனிதஞ் செய்வித் திடத்தரை தரிப்பான்
[பார்த்தே
என்னயா னிருந்த வெல்லே விளக்கிய கார ணந்தான்
பன்னுக பழுதண் டாகிற் பாகசா தனனே யென்றான்.

இந்திரன் விடையும், தயரதன் திரும்புதலும்

983. புத்திரன் றன்னை யில்லா ருடலமும் புனித மல்ல
புத்தியை முத்தி தன்னைப் புணரவு மாட்டா ரென்றே
சுத்திசெய் வித்தே னென்று சுரர்பதி சொல்லக் கேட்டே
சித்தமு நொந்து மீண்டான் தசரதன் றனது தேசம்.

தயரதன் உட்கோள்

984. முன்னமுன் றிருவா ரூரின் முயன்றருந் தவங்க டன்னை
என்னது தந்தை யிட்ட வரமிறை யருளாற் பெற்ற
நன்னக ரடைந்தாங் கேதா னருந்தவந் திருந்தச் செய்தே
இன்னரு ளிறையாற் பெற்றுப் புதல்வனைப் பெறுவேன்
[யானும். (10)

வேறு

தயரதன் ஆரூரில் சிவபிரானைப் பூசித்து வரம் பெறுதல்

985. என்றியம்பி மந்திரிகட் கிறையமருந் திருவாரூர்
சென்றடைந்து சிவலிங்கந் தாபித்தர்ச் சனைசெய்தான்

---

982. தரை தரிப்பான் - பூமியை ஆள்பவனை தயரதன். விளக்கிய - இலங்கச் செய்த. பாக சாதனனே - இந்திரனே.

983. புத்தியை - அனுபவத்தை; புக்தி என்றது திரிந்தது. புத்தி - ஞானமும் ஆம்; பரிகாரம் என்றும் கூறுவர். சுரர்பதி - இந்திரன்.

884. முன்ன முன் - முதன் முதலில்.

985. மந்திரிகட்கு இயம்பி என்றியைக்க. வேணியன் - சடை முடியுடைய சிவபிரான். விழைவு எது - விருப்பம் யாது.

மின்றிகழும் வேணியனும் விளங்கியவன் முன்விழைவே
தென்றலுமே யெனக்கினியாய் புதல்வனேவேண்
டினனென்றான். (11)

986. அப்பொழுது மகிழ்ந்தமல னலர்க்கமலப் பொய்கையினை
இப்புரியி னியற்றியதன் தீரத்தி லெழிலரியைத்
தப்பறவே புரிபூசை யவன்றனைய னுவனென
அப்படியே தந்தவர மரனருளா லவன்பெற்றான். (12)

சூதர், தயரதன் சனிபகவானை வென்ற வரலாறு கூறல்

987. என்றியம்பச் சூதமுனி யிருக்குமறை முனிவரெலாம்
சென்றுதச ரதன்சனியைச் சயித்தனனென் றனையவனை
வென்றவிற லினையெமக்கு விளங்கவிளம் பெனவிருப்ப
இன்றறைவ மறிமினென வம்முனியு மியம்பினனே.

சனியின் நகர்ச்சியைத் தயரதன் அறிதல்

988. ஆதித்த னரும்புதல்வ னுனசனி ரோகிணியைப்
பேதித்தே நடுவியங்கு மினிமழைபெய் யாதுபசி
வாதிக்கு மண்ணுலகின் மனிதரையும் பன்னீராண்
டேதத்தைக் கொடுக்குமக மியற்றினரு மிலரியலால்.

---

986. கமல அலர் - தாமரை மலர். தீரம் - கரை. அரியை - திருமாலை. அவன் தனையன் ஆவான் - அத்திருமாலே உன் புதல்வன் ஆவான். வரம் பெற்றான் என்க.

987. இருக்கு மறை - இருக்கு முதலிய வேதங்கள். விறல் - வெற்றி.

988. சனி ஆதித்தனின் புதல்வனுவான். வாதிக்கும் - துன்புறுத்தும். மனிதரையும் வாதிக்கும் என இயைக்க. மகம் இயலால் இயற்றினரும் இலர் என்றியைக்க. இவ்வாறு தயரதனிடம் அவன் புரோகிதர் முதலியோர் கூறினர் என்க.

தயரதன் சனியுலகம் செல்லுதல்

989. என்றுதச ரதன்முன்னே யியம்புதலு மென்றுணர்ந்தார்
சென்றவனைச் சயிப்பமெனத் தசரதன்றே ரினையூர்ந்தே
அன்றவன துலகடைந்தா னவனுமினிக் கார்த்திகைவிட்
டொன்றுவமே ரோகிணியை யென்றிரத மூர்தலுமே,

சனிபகவான் தயரதனை நீயாவன் என்று வினதல்

990. பேதித்தே ரோகிணியைப் பிளந்துநடு வியங்கற்கு
வாதிப்பேன் வாளியினல் மறுத்தனையே லெனவசனம்
ஆதித்த னரும்புதல்வ வெனவரைய னவன்முனும்
காதிக்கட் டுரைசெய்த நீயாவன் கழறென்றான். (16)

தயரதன் விடை

991. ஆதித்தன் மரபுதித்த வன்புதல்வன் றசரதனென்
பேதித்தே ரோகிணியைப் பிளந்தியங்கி மண்ணுலகை
வாதிப்பை நீதடுத்து மழையினையு மெனமறையோர்
போதித்தா ரினிமகமும் புரிவார்தா மிலரென்றார். (17)

---

989. உணர்ந்தார் - விஷயமறிந்தவர்; சோதிடர், புரோகிதர் முதலியோர். சயிப்பம் - வெல்வோம். அவனது உலகு - சனி பகவானின் உலகு. அச்சமயம் கார்த்திகை நக்ஷத்திரத்தை விட்டு ரோகிணிக்குச் செல்லச் சனி இரதத்தின் ஏறிச் செலுத்தத் தொடங்கினபோது தசரதன் அங்குச் சென்றான் என்க.

990. அரையன், 'புதல்வ, மறுத்தனையேல், வாளியினல் வாதிப்பேன்' என, நீ யாவன் என்றான் என் இயைக்க. பேதித்து - பிரித்து. மறுத்தனையேல் - என் விருப்பத்திற்கு மாறுகச் செல்வாயானால்; இது தயரதன் கூற்று. காதுதல் - குறித்தல்; கூறு செய்தல்.

991. ஆதித்தன் மரபிலுத்தவன்; இங்கு, அயனைக் குறித்தது. வாதிப்பை - துன்புறுத்துவை. போதித்தார் - சொன்னார்.

992. கேட்டவர்வாய்க் கிளவியினே மண்ணுலகுக் குறுங்
[கேட்டை
மீட்டிடுவ லெனவெண்ணி விரைந்துனது பால்வந்தேன்
ஓட்டிடுத லொழிதேரை ரோகிணியி னடுவோட்டில்
வீட்டிடுவே னுனையென்ன நகைத்தவனும் வியப்புற்றே,

சனிபகவானின் விடையும், மன்னன் போற்றலும்

993. எனக்கெதிரே பொரநிற்பா ரெவ்வுலகத் தினுமில்லை
நினக்கிதுவே வெற்றியென நிகழ்த்தியரோ கிணிதன்னைத்
துனைத்துநடு வியங்குதலைத் துறந்துபுடை
[யுறச்சூழ்ந்தேன்
இனித்தேரை யூர்ந்திடுவே னெனவரைய னன்புற்றே,

994. ஒருநூறு சதிரியுகத் தளவுமித னிடையூடல்
ஒருபுடைசெல் லெனவுரைக்க வுருகியவ னேமென்றுன்
கருணையனே யிவனென்று கருதியவன் கழலடியைப்
பரிவுறவே பணிந்துதுதி பண்ணினனே பார்த்திபனும்.

995. பன்னியபா டலுங்கேட்டுப் பரிந்துசனி பகவானும்
இன்னுமுனக் கிட்டவர மியம்பிடுக தருவமென
உன்னடியைத் தொழுதிங்கே யானுரைத்த துதி நாளும்
பன்னுமவர் தமைநலியே லிதமேசெய் பரிந்தவர்க்கே.

---

992. கிளவி - சொல். தேரை ஓட்டிடுதல் ஒழி என இயைக்க. வீட்டிடுவேன் - கொல்வேன். அவனும் - சனியும்.

993. பொர - போர் செய்ய. இதுவே வெற்றி - என்னைப் பொர எண்ணி எழுந்த இவ்வீரமே உனக்கு வெற்றி. துனைத்து - விரைந்து. துறந்து - விட்டு. புடையுறச் சூழ்தல் - பக்கமாகச் சுற்றி வருதல்.

994. சதுர் + யுகம் - நான்கு யுகங்கள். ஊடல் - ஊடாதே; பிணங்காதே. ஓம் என்றல், சம்மதிக் குறிப்பு.

995. தயரதன் தான் செய்த தனித் துதியைச் சொல்வார்க்குச் சனிபீடை அகல வரன் கேட்டுப் பெறுதல்.

இன்னும் வரம் வேண்டல்

996. கோ..... யென்று கூறுமறு மூன்னென்று
நாணுநஞ் சுகியாகி நினைநினைத்து நவிலுநரை
மாணுத வல்வினைநோய் மற்றையவல் வினைபலவு
நாணுரு நலியாமற் காத்துதவு நயமவர்க்கே. (22)

997. நின்வாரந் தொறுந்தயிலத் துடனீரா டுநர்தம்மை
என்னுரு மிடர்செய்யே ..... மெண்ணெய்யும்
உன்வாரந் தனின்மறையோர்க் குதவுநர்பா
[லொறுப்பொழிநீ
அன்னுதி திலமுதவு மவர்தம்மை யட்டமத்தும். (23)

998. எள்ளினைத்தண் புனற்கழுவி யிருகலமல் லதுகலந்தான்
வெள்ளெருக்கும் விரும்பியணி விமலனது முடிக்கணிவர்
உள்ளுவந்து நற்றும்பை மலர்சூட்டு முத்தமருந்
தெள்ளியரென் றவர்தமக்குஞ் .....றப்பே
[செலச்செய்யேல். (24)

999. திலத்தோடா னெய்யாலு நின்வாரந் தொறுஞ்செந்தி
நலத்தாலோம் புநர்தம்மை நவியேலே முரையாண்டும்
இலத்தேவந் திரந்தார்க்குள் ளதுகொடுக்கு மினியரையும்
அலத்தாக மழியேலென் றரையன்வந் தறைதலுமே.

---

996. சனிபகவானைத் தியானிப்பவர்க்கு நல்வரம் பெறுதல்.

997. நின் வாரம் - சனிக்கிழமை. தயிலம்; தைலம் - திலத்திலிருந்து வருவது; நல்லெண்ணெய். ஒறுப்பு - துன்புறுத்தல். அன்னுதி - சோறு முதலியன. திலம் - எள். அட்டமத்தும் - சனி எட்டாம் இடத்தில் நிற்பது துன்பமாக்குவதாகும் என்பர்.

998. ஒரு கலம் அல்லது இரு கல எள்ளை இறைவன் முடியில் அணிவித்தல் சனிப்பிரீதி யென்பது கூறப்பட்டது.

999. ஆனெய் - பசுவின் நெய். ஓம்புநர் - பூசிப்பவர். ஏழரை ஆண்டு - சனி பீடிக்கும் காலம். இ(ல்)லத்தே வந்து - வீட்டிற்கு வந்து. ஆகம் அலைத்து அழியேல் - உடலைத் துன்புறுத்தி அழிக்காதே.

பகவான் வரம் இசைதல்

1000. இப்பொழுது நீயிசைந்த படியெல்லா மெந்நாளும்
தப்பறவே புரிந்திடுவா மென்றுரைத்தான் சனிபகவான்
அப்பொழுது தசரதனு மவனதடி தொழுதேத்தி
இப்புவனி தனையடைந்தாண் டிமையவர்கோன்
[புரத்திசைந்தான். (26)

பலச்ருதி

1001. ஓதியுணர்ந் திவ்வியலை யுரைப்பாருங் கேட்பாரும்
வாதையுறூர் சனிதன்னல் வரமுறுவ ரெந்நாளும்
போதனிமை யவரோடும் புரந்தரன்மா லொடுமிந்தப்
பூதலத்து வந்துமகம் புரிந்தமையு மினிப்புகல்வாம்.

வேறு

1002. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (28)

தசரத சருக்கம் முற்றும்

1000. இமையவர் கோன் - சிவபிரான்; இந்திரனும் ஆம்.

1001. போதன் - பிரமன்.

23. சதுமுகன் யாகச் சருக்கம்

பிரமன் ஆரூர் அடைதல்

1003 தரைத்தலத்துட் சமற்கார புரம்புனித மதுதனக்குச்
சமமு மில்லை
அரிந்திடவே மூலமலந் தனையன்பர்க் கருதிமல
முத்தன் பாதம்
பரித்திடவே யருள்புரியும் பராசத்தி யதிட்டேயப்
பதியென் றென்றே
விரைக்கமலத் தயனடைந்தான் விண்ணவர்க
விமல னூர். [ளோர்ந்துணரா

பிரமன் யாகம் புரிய விரும்புதல்

1004. போதகனைப் புற்றிடங்கொண் டிருக்குமரும்
புனிதன் றன்னைப் [பொருள்தன்னைப்
பாதமலர் பணிந்துதுதி பண்ணிமகம் பண்ணவனு
மதிபெற் றேங்கும்
போதலருஞ் சூரியபுட் கரணியிடைப் புனிதமுறும்
பூ..... தன்னிற்
பூதலத்துட் பூசுரர்க்கு மகவினையை யறிவிப்பான்
சாலை புக்கான். (2)

சாவித்திரியை நாரதன் அழைத்தல்

1005. இன்னுமணிந் திலள்சாவித் திரியமரர் மாதரொடும்
விரைய வெய்தப்
பன்னுகென நாரதனைத் தானேவப் படர்ந்தடைந்து
பிரம லோகம்

1004. போதகன் ; இங்குச் சிவபெருமான் ; நால்வர்க்கு அறம் போதித்தவனுதலின். மகம் - யாகம். அநுமதி - அநுஞ்ஞை. ஓங்கும் போது - மேலோங்கி மலரும் தாமரைப்போது. பூசுரர் - அந்தணர். சாலை - யாகசாலை.

1005. சாவித்திரி - பிரமன் பத்தினி. ஏவ, ஏவினவன் பிரமன். அன்னை - சாவித்திரி. அயன் ஏவல் - பிரமன் கட்டளையை.

அன்னேமுனே யயனேவ லறையமுனி வந்.....
....ணமரர் மாதர்
பின்னேயவ ரொடும்வருவே னென்றுவரு முனிதனக்குப்
பேசி னளே. (3)

சாவித்திரியிடம் புலத்தியனை அனுப்பல்

1006. மீண்டுமுனி யடைந்தாரூர் விரைக்கமலத் தயன்பாதம்
பணிந்து வேகத்
தாண்டணைந்துன் னேவலினே யறிவித்தே னவளுக்கிங்
கமரர் மாதர்
ஈண்டியபோ தணைவேனென் றனளெனலும்
யலரோ னேவ [புலத்தியனே
ஆண்டணைந்தே யவன்முனு மவள்செய்தி நாரதன்போ
லறைந்தான் மீண்டே. (4)

அயன் இந்திரனை ஒரு கன்னியைக் கொணர்கவெனக் கூறல்

1007. இந்திரனே நோக்கியய னினிச்செய்வ தென்னெனலு
முழையி னேய்ந்த
மந்திரமா தவர்தாமு மறையவரு மகந்தொடங்கக்
காலம் வாய்த்த
திந்தநிலத் தொருகன்னி தனைவேட்டு மகமியற்ற
வினிதே யென்ன
இந்திரனே யயன்முனேர் கன்னிதனைக் கொணர்கவென
வேவி னனே. (5)

1006. சாவித்திரி அமரர் மாதர் வந்தவுடன் அவர்களுடன் வருவதாகச் சொன்னள் என்று நாரதன் அயனிடம் வந்து இயம்ப, அவன் புலத்தியனை அனுப்ப, அவனும் அச் செய்திகொண்டே திரும்பினன் என்க.

1007. உழையின் ஏய்ந்த - அருகில் இருந்த. மாதவர் - முனிவர். இந்த நிலம் - பூவுலகம். வேட்டு - மணம் வேட்டு.

இந்திரன் ஒரு கன்னியைத் தேடிச் செல்லல்

1008. வானவரு மாதவரு மறையவரு பதித்துரைத்த
வார்த்தை தானும்
ஊனமில வென்றுணர்ந்து மகவானு முடன்பட்டு
விரைவுற் றூரூர்
மானகரந் தனிற்புகுந்து வீதிதோறுந் தேடிமணக்
கன்னி காணுன்
கானகமுங் கடிதடைந்து வழிநின்றுன் வழிநிற்குங்
காலந் தன்னில், (6)

இந்திரன் ஓர் இடைப் பெண்ணைக் காணல்

1009. மின்னிடைச்செந் துவர்வாய்வெண் ணகைக்கருங்கண்
சாயன் மேனிக் [மயிலனைய
கன்னிதனை வரக்கண்டான் கடத்தினுறுந் ததியுமவ
டலைமேற் கண்டான்
என்னகுல நினதென்று ளுபர்குலக் கன்னிகையா
னென்று ளென்ன
உன்னமணம் புணர்விப்பே னெப்பரியா
றுகந்து சொன்னுன். [னெருவருக்கென்

காயத்திரியின் பிறப்பு

1010 அனுமதித்தா டனைப்பற்றி யாவின்வாய்ப் பெற்றுதரத்
தாக்கி யோனி
சனனமுறச் சாதித்தே யவடன்னைக் கொடுபோகிச்
சபைமுன் வைத்தான்

1008. மகவான் - இந்திரன். மாநகரம், எதுகை நோக்கி மானகரம் என்றுயிற்று. இது, அடுத்த செய்யுளோடு முடியும்.

1009. கடத்தின் உறும் ததியும் - குடத்தில் வைத்த தயிரும்.

1010. ஆவின் வாய்ப் பெற்று, உதரத்தாக்கி, யோனி சனன முறச் சாதித்து - அவ் விடையர் கன்னிகையைப் பசுவின் வாயினுலிட்டு, வயிற்றில் செலுத்திப் பிறக்கச் செய்து: 'தேனு, வயின்றனி

அனகவயன் மகிழ்ந்தனன்பார்த் திவளாவி னுதரத்துற்
பவித்த லாலே
தனேயனேய சங்கரன்ரு னறிவள்கா யத்திரியெனப்பேர்
சாற்றி னனே. (8)

அயன் காயத்திரியைத் திருமணம் புரிதல்

1011. அண்டருமா தவத்தோரு மந்தணரு மியக்கருமற்
றனேவர் தாமும்
இன்றிவிதி வழியாலே யழலோம்பி விதிதனக்கும்
விளங்கு மந்த
ஒண்டொடிக்கு மணவினேயைப் புரிவித்தா
ளொருமை யுற்றே [ரதன்பின் னுள்
புண்டரிகத் தயன்வேள்வி புரிவாமென் றெண்ணினனப்
போது தன்னில், (9)

சிவபிரான் சோதித்தல்

1012. கட்டுரைக்கு மரியசிவன் கபாலியென்னு முருக்கொண்டு
..... காட்டிச்
சிட்டருறு மண்டபத்தைச் செறிந்துபசித் தேன்பசியைத்
தீர்மி னென்னத்
துட்டனிவன் மண்டபத்தைத் துன்னியதே
தூ..... .....கள் [னென்றவனேத்
இட்டமல வயனுக்கு மென்றுமறை யவர்தாமு
மியம்பி னரே. (10)

லுதிப்பித்து' என்பர் திருவாரூர்ப் புராணமுடையார். அனகம் - பாவமின்மை. உற்பவித்தல் - பிறத்தல். தனே அனேய சங்கரன் தான் - தனக்குத் தானே இணேயான சங்கரன்.

1011. இன்று இவ்விதி - இன்று இந்த விதி முறையாலே. விதி - பிரமன். உள் ஒருமை - மன ஒற்றுமை.

1012. கபாலி - காபாலகன். சிட்டர் - சிறந்த ஒழுக்கங்களே உடையவர். துன்னியது - நெருங்கியது. அயனுக்கும் இட்டம் அல - பிரமனுக்கும் விருப்பம் அன்று.

காபாலிகன் இட்ட சாபம்

1013. புரியுமக மண்டபத்திற் புலர்ந்தடைந்தார்க்
புசிப்பி யாரேல் [நோதனத்தைப்
அருகுமன முலகத்து நிருத்துக .....
மாகுங் குன்றின்
உரைசெய்யு மந்திரங்க ளியமானன் தனக்கூன
முண்டு லோபம்
.... தனத்தென்று மாவிரதி கபாலத்தை
வைத்துப் போனன். (11)

கபாலம் திரும்பத் தீரும்ப உண்டாதல்

1014. இதுதிண்டப் படுவதல சிசி..... முந்திடத்
துதைகோல் கொண்டே
அதுதன்னைப் புறத்தெறிய மற்றுமொரு கபாலந்தா
னங்கே தங்கும்
அதுதனையு மெடுத்தெறிய வப்படிமா முதுபினு
மங்குத் தங்க
விதியதனைக் கண்டுசிவன் விளையாட லிதுவென்று
வியப்ப முற்றே. (12)

1013. யாக மண்டபத்திலே பசியுடன் வந்தவர்க்கு உண வளிக்காவிடில், அங்குக் கூறப்படும் மந்திரங்கள் யாகத் தலைவனை ஊறுபடுத்தும் என்று சொல்லிக் காபாலிகன் தன் ஓட்டை வைத்துவிட்டுச் சென்றுவிட்டான் என்க. புலர்ந்து - வாடி. இய மானன்; எஜமானன் - யாகத் தலைவன். மாவிரதி - காபாலனுக்கு மாவிரதி என்ற பெயருண்மை சுட்டப் பெற்றது. கபாலம் - மண் டையோடு; காபாலி பிச்சை வாங்கும் பாத்திரம்.

1014. திண்டப்படுவது - தொடப்படுவது. கோல் கொண்டே முந்து இடத்து உதை, என்றியைக்க. விதி - பிரமன்.

காபாலீசுரம் அமைத்தல்

1015. சித்தவ னின்றதலங் காபாலீச் சுரமெனவே
சிவலிங் கத்தை
அத்தலத்திற் ரூபித்தே யருச்சித்தா னப்பொழுது
கபாலங் காணூர்
இத்தலத்தின் மகம்புரிவா ரென்றென்று மிவனடியை
யிறைஞ்சி யேத்திப்
பத்தியினு லருச்சிக்கி லிடையூறு தீர்ந்துமகம்
பாங்கி னாகும். (13)

1016. கார்த்திகைமுற் பதினன்கிற் கலந்தாட முக.....ா
கழித்தூண் டுஞ்சல்
ஆர்த்தமலன் றனையிந்த லிங்கத்தி னருச்சிக்கு
மறிவுள் ளார்தாம்
தீர்த்தவலச் சிறையுடலுஞ் சிவலோகத் தின்புற்றுச்
சிவன்ரூள் சேர்வர்
போர்த்துடல மெடுப்பரலர் போலீலயத் தனுபவிப்பர்
பேரா னந்தம். (14)

மகம் முடிதலும், சாவித்திரி வருதலும்

1017. என்றியம்பி யாவர்க்கு மிறைவனடி யிணைபணிந்தின்
னருளைப் பெற்றே
ஒன்றியிமை யவரோடு முனிவரொடு முணர்ந்தமறை
யோர்க ளோடும்

1015. சித்தன் - சித்துக்களை செய்பவன்; சிவபிரான். மகம் பாங்கின் ஆகும் - யாகம் நன்முடிவு அடையும்.

1016. முன் பதினன்கு - பூர்வபக்ஷம் சதுர்த்தசி. கலந்து ஆடுதல் - சூரிய தீர்த்தத்தில் மூழ்கல். ஊண், துஞ்சல் கழித்து - உணவு உறக்கங்களை நீக்கி. ஆர்த்து - நிறைத்து. அவலச் சிறை உடலம் தீர்த்து, என இயைக்க.

1017. விரிஞ்சன் - பிரமன். யாக முடிவில் சாவித்திரி வந்தமை கூறப்பெற்றது.

வென்றிமறை விதிவழியான் மகவினையை விரிஞ்சன்முன்
வியப்பச் செய்தான்
அன்ற..... தனபோ யெதிர்வருசா வித்திரிக்கு
மறிவித் தானே. (15)

சாவித்திரியின் துயரம்

1018. விரைந்தமரர் மாதரெல்லாங் கூடாத படியாலே
மெல்ல வந்தேன்
இரந்தவர்கள் கூடியபின் னென்றுமுனிக் குணர்த்....
னெஞ்ச நைஞ்சே
பரந்தவிமை யவரோடும் பங்கயத்தா னிருந்தவெலை
படர்ந்து பார்த்தாள்
இருந்தவர்க ளெல்லோருந் தூணைநோக்கா தொழுகாரா
யிருத்தல் கண்டாள். (16)

சாவித்திரி இட்ட சாபம்

1019. நோக்கியயன் றனைநீதா னெய்யாலைக் கைப்பிடித்தா
யதனை னெய்யை
ஆக்கிலுனக் கர்ச்சனையை யிவளுக்கு மாவதனி
லர்ச்சித் தார்கள்
ஏக்கழுத்த தனமின்றிப் புத்திரரு மின்றியெனச்
சாப மிட்டாள்
ஆக்கடமை மேய்த்துவனத் தடைகவிவள் குலத்தாரென்
றறைந்தாள் சாபம். (17)

1018. நைஞ்சே ; நைந்தே - வருந்தியே. பங்கயத்தான் - தாமரை மலரோன் ; பிரமன். நோக்காது ஒழுகாராய் இருத்தல் - நோக்காமலும் வணங்குதல் முதலிய ஒழுக்கம் செய்யாமலும் இருத்தலே.

1019. நெய்யாள் - அற்பள். நெய்யை - யும் அற்பனையும். அர்ச்சனையை உனக்கு ஆக்கில் இவளுக்கும் ஆவதனில் அர்ச்சித் தார்கள் (?) ஏக்கழுந்தம் - இறுமாப்பு ; மேன்மை. தனம் - செல்வம். இன்றி - இல்லாமலாவாய் ; முன்னில் எதிர்மறை வினை முற்று. ஆக்கள் தமை - பசுக்களை.

1020. தானவரா லலீலப்புண்டு தளர்கவென விந்திரனைச்
சபித்தாள் மாயன்
ஊனவுட லெடுத்தேமற் றொருவனுக்கே வலீலப்புரிக
வென்றுள் கன்றி
ஈனர்வினை தனைப்புரிக விழிந்தகுல மங்கையர்தோ
ளிணங்கி வாழ்க
தானமெவர் செய்வரெனத் தாழ்மினெனப்
சபித்தா டாளே. [பனவரையுஞ்

சாவித்திரி சிவபூஜை செய்தல்

1021. இப்படியே யனைவரையு மிகழ்ந்திமைய மாதரையு
நின்மி னென்றே
அப்புரியுட் செய்சிகரத் தமர்ந்திருந்தா ரமலனடி
யகத்துள் வைத்தே
அப்பெரிய சிகரத்தி னடிவாரத் தவளடியின்
சுவடொன் றுண்டு
தப்பறவே யதுதன்னைத் தரிசித்தே யருச்சிக்குந்
தக்கோர் தாமே. (19)

பலச்ருதி

1022. பண்ணியதீ வினையனைத்தும் பாற்றிடுவர் நினைத்தபலன்
பாங்காற் கூட
மண்ணுலகின் மகிழ்வுறவே வாழ்ந்துமல ரிதயத்தின்
வைகு வார்கள்

---

10 0. தானவர் - அசுரர். மாயன் - திருமால். ஏவலீப் புரிக - தொண்டு செய்க. கன்றி - கோபித்து. தானம் எவர் செய் வர் என, வாழ்க என இயைக்க. பனவர் - பார்ப்பார்.

1021. செய் சிகரம் - ஆலய விமானம். அமலன் அடி அகத் துள் வைத்தே அமர்ந்திருந்தான் என இயைக்க. அவள் அடி - சாவித்திரியின் திருவடி. இச் செய்புள் குளகம்.

1022. பாற்றியிடுதல் - நீங்கியிடல். விண்ணுலகில் வைகு வார்கள், என்றியைக்க. மலரிதையம் - மகிழ்வால் விரிந்த மனம்.

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUN 1997

விண்ணுலகி னிவ்வியலே விருப்பமுற விளம்பினருங்
கேட்பார் தாமும்
நண்ணிநல முறவிருந்து சிவபுரத்தி னடைந்திடுவர்
நம்பன் பாதம். (20)

1023. அனகவய னருமறையின் விதியாலே புரிந்தமக
மதனைச் சொன்னும்
இனிமுனிவ ரெழுவருந்தா முத்தீபெறு முறையினையு
மிசைப்பாங் கேண்மின்
பனிமதியும் படவரவும் படர்சடையில் வைத்தபர
மேசன் பாதம்
உனியுளத்தி லொருப்படக்கை தொழுதாறெ முத்தினையு
முரைத்து நாவால். (21)

வேறு

1024. என்று கூறினன் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே. (22)

சதுமுகன் யாகச் சருக்கம் முற்றும்

1023. அனகம் - குற்றமற்ற. உ(ன்)னி - எண்ணி. ஒருப்பட - சேர.

24. முனிவரெழுவரு முத்திபெற்ற சருக்கம்

பஞ்சம் தோன்றினமை

1025. மழைதான் வருட மீராறுள் பொழியா
தொழிய வனந்தனி னும்
தழையு மின்றித் தானியத்து ளொன்று
மின்றித் தவமின்றி
விழைவு மின்றி மகமின்றி வேத
மின்றி வேதியர்பால்
உழுவார் விளைப்பா ருதவிடுவா ரிவரு
ளின்றி யொருவருமே. (1)

பஞ்சகால நீகழ்ச்சிகள்

1026. தந்தை மைந்தர் தமைத்துறந்து தாயும்
புதல்வர் தமைத்துறந்து
மைந்தர் துறந்து மாதாவை வகுத்து
வளர்த்த பிதாவினையும்
பந்தமான பதி தன்னைப் பாரி
துறந்தும் பாரிதனை
ஐந்து வயதிற் கைப்பிடித்தா னவன்றன்
றுறந்து மருளறவே. (2)

1027. இழித்த பொருள்க ளெவற்றினையு முயர்ந்தோர்
தாழு முண்டிழிந்தோர்
கழித்த கல்லைக் களித்துண்டுங் கனிட்டர்க்
காட்பட் டவர்காட்டும்

1025. ஈராறு - பன்னிரண்டு. விழைவு - நுகர்வு; போகம். இவருள் ஒருவருமே இன்றி என இயைக்க.

1026. பதி - கணவன். பாரி - மனைவி.

1027. கழித்த கல்லை - உண்டு கழித்த எச்சிலிலையை. (பெரிய பு. கண்ணப்.) கனிட்டர் - தாழ்ந்தோர். கொடிறு - கதுப்பு.

தொழிற்குள் நாணந் தோன்றுதே தொடர்ந்து
புரிந்துஞ் சுழலவுடல்
குழித்த கண்ணும் புலர்வாயும் குழைந்த
கொடிறுங் கொண்டிளைத்தே. (3)

எழு முனிவர்பட்ட அவலம்

1028. செல்லும் பொல்லாக் காலத்திற் சிறந்த
முனிவ ரெழுவருந்தம்
அல்ல லறுப்பா னலம்வருவா னடைந்தா
ரளக மெனுந்தேசத்
தெல்லை குறுகி யிருந்தாங்கே கிடந்த
பிணத்தைக் கண்டெடுத்தார்
ஒல்லை யதனை யொளியழலின் வெதுப்பி யருந்த
வொருப் பட்டார். (4)

அந்நாட்டரசன் முனிவர்களைத் தடுத்தல்

1029. விரைந்த போது விகாரிவி யென்னும்
வேந்த னுங்கடைந்தான்
பரிந்து முனிவர் பதம்பணிந்தான் பரிபக்
குவவுன் பரிவோடும்
அரிந்து நரரூ னருந்துவரு மரக்க
ரல்லா ரருந்துவரோ
திருந்த விதியுந் தெருண்மூர்நீர் நரரூ
னவலந் தினலென்றான். (5)

1028. முனிவர் எழுவர் - அத்திரி, வசிட்டன், காசிபன், கௌதமன், பரத்துவாசன், விசுவாமித்திரன், சமதக்னி என்ற எழுவர்; 1035. அறுப்பான் - நீக்கும் பொருட்டும். நலம் வருவான் - நன்மையை வருவிக்கும் பொருட்டு. வெதுப்பி - சுட்டு. ஒருப்பட்டார் - மனமிசைந்தார்.

1029. நரர்ஊன் - மானிடர் மாமிசம். நீர் தினல் அவலம் என்றான் என்க.

முனிவர் மறுத்தல்

1030. கனிகாய் சாகங் கந்தவித மற்றுந்
தருவேன் கசிந்துள்ளம்
இனிய விவற்றை யருந்திடுமி னென்ரு
னென்ற பொழுதவரும்
நினது பொருள்கொண் டருந்தினர்க ணிரயத்
தழுந்தல் நிச்சயங்காண்
மனித ருடல்மாந் தியபாவம் விதி நூல்
மதித்து மாற்றுவங்காண். (5)

வேறு

கொடிய பாவங்கள்

1031. ஆட்டினை யறுத்தான் விற்பா னரும்பெரும் பாவி
[யெள்ளே
ஆட்டியே தயிலம் விற்பா னவனினு மதிகப் பாவி
நீட்டிய மரத்தின் பாளே நீர்மது வாக்கு வித்தே
ஊட்டுவ ரதனிற் பாவி சத்குண மெங்கு மோங்கும்,

1032. நேசமுள் ளில்லா ரேனு நெஞ்சமுற் றவர்போல்
[நோக்கிக்
காசினைக் கருதிக் காதற் காளையர் தோளைத் தோய்வார்
வேசியர வர்கைத் தான மிகப்பெரும் பாவம் வேந்தன்
ஆசற வளிக்குந் தான மதனினு மதிகப் பாவம். (8)

1030. சரகம் - இலை. கந்தம் - கிழங்கு. நிரயம் - நரகம். அடுத்து வரும் இரண்டு செய்யுள்களில் கூறப்பெறும் பாவங்கள் நிரயம் நிச்சயம் தரும் என்பதும் அரசன் அவற்றைச் செய்பவன் என்பதும் கூறப்பட்டன. ஓங்கும் என்பதனை அடுத்த செய்யுளி லுள்ள நேசம் என்பதனோடு கூட்டுக.

1031. மது - கள்.

1032. மிகப்பெரும் பாவமே வேசியர் கையால் செய்யப்பெறும் தானம்.

1033. ஆதலால் நீதா னீயு மடகருங் கனியுங் கொள்ளேம்
வாதைதான் வரினு மிந்த வூனையு மாந்தே மென்றே
போதக ரந்த வூனும் போட்டனர் புனித மான
சீதள நீரை வேண்டித் தென்றிசை நோக்கிச் சென்றார்.

வேறு

அரசன் செய்த சூழ்ச்சி

1034. முனிவரிகழ்ந் தனரெனது பொருளென்று
முகத்தும் வாடி [முனிந்தரையன்
இனியவரை யுபாயஞ்செய் திடுவமென விரணியத்தின்
சுண்ணம் வைத்துப்
புனிதவுதும் பர்க்கனியு ளவற்றையவர் போகுநெறிப்
பொருந்து வித்தான்
கனிகளிவை யினியனவென் றவற்றையவர்
கைக்கொண் டாரே. [கண்டெடுத்துக்

1035. அத்திரிநல் வசிட்டமுனி காசிபனே கவுதமனே
யமலன் முளிற்
பத்தியுள பரத்வாசன் கௌசிகனே செமதங்கி
யென்னப் பட்டார்
இத்தகையோ ரெழுவரருந் ததியோடு மெண்மரிவர்க்
கேவல் செய்யுஞ்
சத்தியவா சகனை சண்டனெடு மொன்பதின்மர்
சால்பி னரே. (11)

1033. அடகு - இலை. மாந்துதல் - உண்ணுதல். சீதளம் - குளிர்ச்சி.

1034. இரணியத்தின் சுண்ணம் - பொன் பொடி. உதும்பரக் கனி - அத்திப்பழம்; 1036. முனிவர்கள் செல்லும் வழியில் பொன் பொடிகள் உள்ளமைத்த அத்திப் பழங்களைப் போட்டு வைத்தான்.

1035. அருந்ததி - வசிட்டர் மனைவி.

1036. அவரருளு மத்திகனி யாராய்ந் தகவிழியா
லரையனருங் கனகம் வைத்தான்
துவருமுதும் பர்க்கனியு ளாதலினு லிவைதம்மைத்
துய்யே லிப்போ
தவிர்மின்க ளொழிமின்க ளெனவொழித்தா
துள்ளந் தன்னில் [ரனவருநொந்
புவனிதனைப் புரப்பானைப் புல்லியனென் றெல்லோரும்
புகன்றூர் தம்மில். (12)

முனிவர்கள் அக்கனியைத் தொடாது அகன்றனர்

1037. இக்கனியுள் வஞ்சனையா லிட்டகன கப்பொடிக
ளிகழ யாரும்
இக்கணமே சிறுசெந்து வாகவெனச் சிறுசெந்து
விலங்கிற் றங்கே
இக்கனியைக் காயினையு மருந்தற்க விடர்கடிவ
ரென்றுஞ் சொன்னர்
தக்கதல வென்றுயர்ந்தோர் தடுத்தபொரு ளருந்துவரோ
சான்றோர் தாமே. (13)

1038. உற்றிடுமே பாவவித முலகத்துட் பொருளாசை
யுற்றோர்க் கெல்லாம்
அற்றிடுமே பாவவித மாசையினை யற்றூர்கட்
காங்கு மின்பம்

1036. அகவிழியால் ஆராய்ந்து - மனக் கண்ணால் கண்டு. துய்யேல் - உண்ணுதே. உள்ளந் தன்னில் நொந்தார், என இயைக்க. புல்லியன் - அற்பன். முதலடியில் ஏழு சீர் வந்துளது.

1037. முனிவர்கள் கனியினுள் இடப்பட்ட கனகப் பொடி களைச் சிறு கிருமிகளாக மாற்றினர் என்க. செந்து - உயிர்ப்பிராணி. இலங்குதல் - விளங்குதல். இடர் கடிவர் அருந்தற்க என்றியைக்க. உயிர்ப் பிராணிகளை அருந்துதல் இடர்தருமாகையால் அருந் தற்க என்றார்.

1038. உயிர் நோய் - மும்மல நோய்.

பெற்றிருப்பர் பிறவார்க ளவருயிர்நோய் பிரிப்பார்நின்
மலன்பொற் பாதம்
பற்றிடுவ ரெனவொருப்பட் டனைவருந்தம் மனமகிழ்ந்து
பாடித் தானே. (14)

வேறு

முனிவர்கள் ஆரூரடைதல்

1039. வென்றவர்கள் புலனைந்தும் விரும்பினர்கள் [விதிநிசித்தம்
என்றதனை யிகழ்ந்தவர்க ளிருவினையி னிருபயனும்
என்றுமெமக் கருளுமிறை சிவனென்றவ் வெலைநீங்கிச்
சென்றடைந்தார் சமற்கார புரியென்னுந் திருவாரூர்.

முனிவர் தாமரை வனையம் எடுத்தலும், இந்திரன் அவற்றை ஒளித்தலும்

1040. அப்புரியு ளலர்க்கமலப் பொய்கையினை யடைந்தார்கள்
ஒப்பரிய வதனிற்கீ ழுறுங்கமல வனையந்தம்
கைப்பயந்தே யெடுத்தவற்றைக் கரையினுற [வைத்தார்கள்
அப்புனலின் மூழ்கியெழுந் தியற்றினர்தங் [கடனனைத்தும். (16)

1041. இந்திரன்சென் றவற்றைமறைத் தெடுத்தொளித்து
வைத்ததன்பின்
அந்தணன்போன் முங்கணிந்தா னவர்தாமு
மகமகிழ்ந்தே

1039. விதி நிசித்தம் - விதிகளையும் நிஷித்தங்களையும். இரு வினையும் இரு பயனும் இகழ்ந்தவர்கள்.

1040. அலர்க் கமலப் பொய்கை - சூரியபுஷ்கரணி. கீழுறும் கமலம் - கிழ்நோக்கி மலரும் தாமரை. கமல வனையம் - தாமரை வனையம்; தாமரைக்கிழங்கு; கந்தம் என்று 1043 கூறியுள்ளது காண்க.

1041. அறல் - நீர்.

இந்தவெலை நும்வரவு மினிதென்ரு
ரவன்ரு னும்
அந்தவறன் மூழ்கியெழுந் தியற்றினன்செய்
கடனனைத்தும். (17)

**தாமரை வனையம் காணமற்போக ஒவ்வொருவரும்
தாம் எடுக்கவில்லையென்று சபதங் கூறல்**

1042. கரையடைந்தா ரனைவருந்தாம் கண்டிலர்தா
[மரைவனையம்
இரையரிய காலத்தே யெவர்கவர்ந்தா ரெனநொந்தே
உரைசெய்தா ரறையுற்ரு ரொருப்பட்டா ருளந்தன்னில்
இரையிதனை மறந்தெடுத்தே னில்லையென
[வெல்லோரும். (18)

வேறு

அத்திரி கூறிய சபதம்

1043. பயந்தெடுத்த தாய்தந்தை படுமிடரைக் களையாத
பாவி தானும்
நயந்துதரு வேனென்று நவின்றுமறை யவர்க்குதவா
நரகன் ரூனும்
கயந்தொழியாக் கரிசர்கைத் தானங்கொ ளுங்கையன்
ரூனு மாவேன்
அயர்ந்துமெடுத் திடினிந்தக் கந்தமென வத்திரிமுன்
னறைந்தா னங்கே. (19)

1042. இரை அரிய காலம் - உணவு கிடைக்கப் பெருத காலம். அறையுறுதல் - சொல்லுதல்.

1043. தான் பாவி, நரகன், கையன் ஆவேன் என்று அத்திரி அறைந்தான். கயந்து ஒழியா கரிசு - மனம் கசந்து நீங்காத குற்ற மான. கைத்தானம் - இலஞ்சம். கையன் - கீழ்மகன். அயர்ந்தும் எடுத்திடின் - மறந்தும் அச்சுருளை எடுத்திருப்பின். கந்தம் - கிழங்கு.

வசிட்டன் கூற்று

1044. இருதுறிற்றன் மனவிதனை நாலாநா ளிந்தாநா
ளிணங்க லின்றிப்
பருதியுறும் பகற்பொழுதும் பா..... வரசை
யாதிப் பாலும்
மருவுமவன் கைமாறு மறுத்தன்ன மருந்துமவன்
மறையோர்க் கென் னும்
கரிசினரு மாவேனு னிவையெடுக்கி லெனவசிட்டன்
கழறி னனே. (20)

காசியபன் வஞ்சினம்

1045. வரையாதே வர்க்கினிய வனைத்தினையு மகிழ்ந்துண்பார்
வாழ்வார் வாயின்
உரையாவுங் கேட்டுழன் றேயுடலோம்பு முயர்குலத்தோ
னுயர்ந்தோ னென்றே
தரையோர்க டனமதிக்கத் தவம்புரிவான் றவறுஞ்சன்
ஞசி யென்ன
வருமிவரா வென்கந்த மெடுக்கிலெனக் காசியபன்
மதித்துச் சொன்னன். (21)

கௌதமன் கூற்று

1046. உச்சிதனி லணிந்தவரை யொழித்துண்பான் பாகம்வே
ருக்கி யுண்பான்
நச்சியிழிந் தவரன்ன நாணுதுண் பானமலன்
றனக்குப் பூசை

1044. இருதுறல் - பூப்படைதல். பருதி - சூரியன்.

1045. தேவர்க்கு இனிய அனைத்தினை - தெய்வங்களுக்குரிய பொருள்களனைத்தையும். தரையோர் - பூமியிலுள்ளோர். ஊரார் மதிக்கத்தவம் புரிபவன்; தவறும் சன்ஞசி - நெறி தவறும் சன்னியாசி. இவர் ஆவென் - இவர்களாக ஆவேன். கந்தம் - கிழங்கு.

1046. உண்ணல் கேடுகள் இங்குக் கூறப்பெறுகின்றன. ஒழித்து - வேருக்கி. பாகம் - சமையல். அன்னம் நச்சி என் றியைக்க. நச்சி - விரும்பி. கைச்சவராவேன்; கைத்தவராவேன்.

இச்சையுற வியற்றுதே யிட்டமுற வுண்பானென்
றியங்கப் பட்டுக்
கைச்சவரா வேன்கந்தங் கரந்தேனே லென்றுகவு
தமனுஞ் சொன்னன். (22)

பரத்துவாசன் பகர்ந்தது

1047. தேசிகற்குப் பூசைதனைச் செய்யாமற் படிப்பானூற்
செல்வர் வைப்பைப்
பேசுமவ னரையற்குப் பிரியாத கடுங்கோபி
பேசு வான்பொய்
ஆசிலரை யவமதிக்கு மவன்ருனு மாவேனிக்
கந்தந் தன்னைக்
கூசுதலில் லாதெடுக்கி லென்றுபரத் துவசமுனி
கூறி னனே. (23)

கௌசிகன் கூறியது

1048. அன்னியன்றன் பாரிதனை யணைவானு மனுபவத்தி
னுசை யாலே
கன்னிகைதோள் கலப்பானுங் கனகமது தனைத்திருடுங்
கள்வன் ருனும்
தன்னைமிக மதித்தானுந் தக்கோரை மதியாது
தவறு வானும்
என்னுமிவ ராவேனீ தெடுக்கிலெனக் கவுசிகனு
மியம்பி னனே. (24)

1047. தேசிகர் - ஆசிரியர். வைப்பு - சொத்து. அரையன் - அரசன். ஆசு இலர் - குற்றமற்றவர்.

1048. பாரி - மனைவி. கனகம் - பொன்.

ஜமதக்னி சபதம்

1049. விருத்தனுக்குக் கன்னிகையை வேட்பானும் விடலிதனை
விரும்பு வானும்
தரித்துநிதி தனைக்கன்னி தனைக்கொடுக்குங்
தாரந் தன்னைப் [தவற்றினனுந்
பிரிப்பலென வவடனத்தைப் பற்றியவ டனைப்பரியான்
ருனு மாவேன்
விருப்புமுறக் கந்தமிவை யெடுக்கிலெனச் செமதங்கி
விளம்பி னனே. (25)

அருந்ததி இயம்பியது

1050. பதிக்குமுனே யுண்பாளும் படுப்பதன்மூன் படுப்பாளும்
பற்றி நேயம்
மதிக்கமுதஞ் செய்யாளும் பதிக்குறவாய் வந்தாற்கு
வஞ்சிப் பாளும்
திரத்திரையு மாடவனு மவனுக்குப் பாரியரை
.... [யயலாரில்ல
....வேனீ தெடுக்கிலென வருந்ததியு
மியம்பி னளே. (26)

சண்டன் கூறியது

1051. தன்பதிக்குத் தவறியற்றுந் தறுகண்ணன் பிறர்கையிற்
றனத்தை வாங்கித்
தன்பலத்தைத் தான்கொடுப்பான் றனிலிழந்தா
தாழ்ந்து செய்வான் [னேவியது

1049. வேட்பான் - மணம் புரிவிப்பவன். விடலி ; விடலை என்பதன் பெண்பால் ; விடலை - திண்ணியன். நிதிதரித்து - பணம் வாங்கி. பரியான் - காக்காதவன்.

1051. பதி - தலைவன். தறுகண்ணன் - கொடியன். விலங்குதல் - வழிவிடுதல்.

அன்புடைய ..... னந்தணர்க்கு விலங்காதா
னவர்முன் செல்வான்
என்பவரு மாவெளிக்கி ழுங்கெடுக்கி லெனச்சண்ட
னியம்பி னனே. (27)

இந்திரன் கழறியது

1052. ஒளியழலைத் தவருதே யோம்புமறை யவன்முறையா
லோது வானூல்
உளமதனி லெவ்வுயிர்க்கு முயிரான வமலனடி
யுணர்ந்த ஞானி
அளியுடனுள் ளதுபிறர்க்கு வஞ்சனைசெய் யாதுதவு
மவனு மாவேன்
களவுசெயி னினைந்தக் கந்தமென விந்திரனுங்
கழறி யேதான். (28)

இந்திரன் வேண்டுகோள்

1053. கேட்டறியத் தருமநெறி.... னுங்கிளவி தன்னுலே
கந்தந் தன்னை
மீட்டிடவும் விழைந்துமக்கு விண்ணினின்று
விரைந்து வந்தேன் [மண்ணுலகின்
வாட்டமற வானுலகின் வம்மின்கள் வான்வளங்க
டருவே னென்று
காட்டினனிந் திரன்றனது கவினுருக்கண் டருந்தவருங்
களிகூர்ந் தாரே. (29)

1052. இந்திரன் கூறியதில் தானே களவு செய்த உண்மை புலப்படுவது காண்க. தான் களவாடியிருந்தால் மறையவனும் ஓதுவானும், ஞானியும், உதவுமவனும் ஆவேன் என்றான் என்க.

1053. நும் கிளவி தன்னுல் தருமநெறி கேட்டறியவும், கந்தந்தன்னை மீட்டிடவும் வந்தேன் என்று இந்திரன் கூறினன் என்க. கவின் உரு - அழகிய உருவம்.

முனிவர் கூற்று

1054. போகவித நிலையல்ல பொருளல்ல பொருவரிய
பொன்னே யன்ன
ஆகவித மவையெவையும் மவற்றிலெமக் காசையிலை
யாத லாலே
மோகமல மோசகனை யுயிர்க்குயிரை யனுதிமல
முத்தன் றன்னை
ஏகனைச்சின் மயன்றன்னை யடிபணிய விச்சையுளோ
மென்றே நின்றார். (30)

இந்திரன் கொடுத்த வரம்

1055. என்வரவு பழுதாகா வண்ணமுகக் கிட்டவரமி
....
வின்னவெலை யாசிரம மெம்பெயரா னென்றுமுற
வெமையு மாளும்
முன்னவ ....ங.....யை முட்டாதே கொளவுமருண்
முதல்வ வென்றார்
அன்னவர மமரேச னளித்துவிரைந் தமருலக
மடைந்தா னன்றே. (31)

முனிவர் இலிங்கங்கள் தாபித்துப் பூசை யியற்றியது

1056. ஆங்கவரு மிட்டலிங்கந் தாபித்தர்ச் சனைபுரிந்தா
ருயிரு ளென்றும்
நீங்கரிய நிருமலனை வன்மீக நாதனையு
னேயத் தாலே

1054. போகம், பொன், ஆகம் இவற்றில் தமக்கிச்சையில்லை யென்றும், மோக மல மோசகன் - மோகத்தைத் தரும் மலங்களி னின்று விடுவிப்பவன்.

1055. செய்யுள் மிகச் சிதைந்துள்ளது. இச் செய்யுள் ஏழு முனிவர்களும் தத்தம் பெயரால் ஆச்சிரமங்களும், ஏழு இலிங்கங் களும் இந்திரனால் பெற்றனர் என்று பொருள் அமைந்திருக்கக் காண்கிறோம்.

1056. தடம் - இடம். சாலை - பர்ணசாலை.

தேங்கமல மலரானு நாடோறும் பூசனையைச்
சிறப்பாற் செய்து
பாங்குறவே யத்தடத்திற் சாலிசமைத் திருந்துதவம்
பண்ணு நாளில், (32

முனிவர் செய்த துதி

1057. சென்றொருநாட் பூசனையைச் சிறப்புறவே
துயரந் தீர்த்தே [செய்திமையோர்
அன்றருள்செய் தவன்றன்னை வன்மீக மிடங்கொண்ட
வமலன் றன்னைக்
கொன்றைமலர்ச் சடையானே தில்லைமணி மன்றுடுங்
குழக னேசெம்
பொன்றிகழு முருவினனே போற்றிசய போற்றிசய
போற்றி போற்றி. (33)

1058. அருவமய மொருநான்கா யருவுருவ மயமொன்று
யன்பர் காணும்
உருவமய மொருநான்கா யுலகனைத்தும் படைத்துக்காத்
தொடுக்கு வானே

1057. சிவபூஜைக் குறைவால் தேவர்கள் துயருறுதலும், அதனால் உலகில் பஞ்சம் விளைதலும் முதலடியில் தொனிப்பது காண்க.

1058. அருவமய மொருநான்கு, அருவுருவமய மொன்று, உருவமய மொருநான்கு:—என்றவை சிவம், சத்தி, நாதம், விந்து வாகிய நான்கு அருவத்திருமேனிகளும் சதாசிவமாகிய அருவுருவத் திருமேனி ஒன்றும், மகேசன், உருத்திரன், மால், அயனாகிய உருவத்திருமேனி நான்கும் என்று நவந்தருபேதங்களைக் கூறியதாம்.

சிவசத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழு மீசன்
உவந்தரு ளுருத்தி ரன்றன் மாலய னென்றி னென்றாய்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மொன்றும்
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்.

என்ற சிவஞான சித்தியார் சுபக்கம், 2-ஆம் சூத். 74-ஆம் பாடலைக் காண்க. பருவமுறுதல் - சத்தினிபாத மடைதல். துருவ சிதானந்த கனம் - நிச்சயமாக சிதானந்தமாகிய பெருமைத்தானம்.

பருவமுறிற் பசுபாச முயிர்க்கதனைத் தடுத்துனது
பதமுங் காட்டித்
துருவசிதா னந்தகனந் துய்ப்பிப்பாய் சயபோற்றி
துணைவ போற்றி. (34)

1059. சமைத்தயனு யெண்பத்து நான்குநூ றுயிரமாந்
தனுக்க டம்மை
அமைத்தவற்றி னருயிரை யவ்வுயிர்க டோறுமுறை
யமல போற்றி
எமைப்பிறவிக் கடனீக்கி யெடுத்துனடி யிணைத்தடத்தி
னிறுத்தா யென்றே
தமக்கினியா னடிபணிந்தார் தண்ணளியாற் றுனுமவர்
தம்மைப் பார்த்தான். (35)

முனிவர் அத்துவிதப்பேறு பெறுதல்

1060. தேடாதே தேடினரப் போதுசிவ னடிதமதுட்
டிமிர நோயும்
வீடாதே வீடியதே வீடுதலான் மூலமலம்
விமலன் பாதம்
கூடாதே கூடினர்க ளெவராலுங் குறிப்பரிய
கோலத் தானை
நாடாதே நாடினர்க ளத்துவித மெய்ஞ்ஞான
நாட்டத் தாலே. (36)

1059. சமைத்து, அமைத்து, நீக்கி என இயைக்க. தனுக்கள் - உடம்புகள். தானும் - இறைவனும்.

1060. சிவனடி தேடாதே தேடினர்; நோயும் வீடாதே வீடியது; மூலமலம் வீடுதலான் பாதம் கூடினர்கள்; அத்துவிதம் நாடினர்கள்; என்றியைக்க. திமிரநோய் - இருள்நோய்; அஞ்ஞானம் குறிப்பு அரிய - இன்னதென்று குறிக்கவியலாத. அத்துவிதம் - இரண்டற்ற நிலை.

பூசை செய்வார் பயனுறுதல்

1061. உய்யலுறு வாரிந்த வொன்பதின்மர் தமையுமியல்
விதியை யோர்ந்திப்
பொய்கைதனிற் றடத்தினுறத் தாபித்துப் பூவானும்
பூசை செய்யின்
மையலறச் சிவபுரியுள் வாழ்வரய னத்தினுமிவ்
வாவி மூழ்கிச்
செய்யுநரும் பூசையினை யவர்பூசை செய்தசிவ
லிங்கந் தன்னை. (37)

பலச்ருதி

1062. இந்தவிய னூன்முழுது மிசையுறவே படித்தருத்த
மியம்பு வாரும்
சிந்தைமகிழ் வுறக்கேட்டுத் தெளிவாருந் தீயவினைத்
திறங்க டீர்ந்தே
அந்தநடு வாதியெனு மாசிலிதன் புரிதன்னை
யடைந்து வாழ்வர்
பந்தமறப் பேரிலய காலத்தி னனுபவிப்பர்
பரமா னந்தம். (38)

வேறு

நூல் கேட்டல் முறை

1063. முற்றும்பொழு தின்னூல்விதி முறையாலுறக் கேட்டே
அற்றந்தனை யரிக்கும்விதிக் குரவன்றனை யன்பால்
பொற்றண்டிகை பரிமாநிதி பூணீர்வளம் புவியும்
குற்றந்தனைக் குறைத்தானெனக் கொடுத்தேதொழல்
[குணமே. - (39)

1061. இயல் விதி - நூல் விதிகளை. மையல் - மயக்கம்; மாயை. அயனம் - தக்ஷிணாயனம், உத்தராயணம் என்றவை.

1062. அருத்தம் - பொருள். ஆசு இலி - குற்றமில்லாதவன்.

1063. அற்றந்தனை அரிக்கும் குரவன் - அழிவினைப் போக்கும் மேலோன்; புராணம் படிப்பவரைக் குறித்தது. தண்டிகை - பல்லக்கு. பரிமா - குதிரை. பூண் நீர் என்று பிரிக்க.

1064. வறியார்களு மகிழ்வோடிய ....
மறையோர்சிவ னடிநேசர்கள் வறியார்குழி வயிற்றூர்
குறையாரொடு பிணியாளரென் றவர்க்கும்பரிந் தன்னம்
கறியோடருத் திடிற்கேட்டவ ரவரெய்துவர் கனமே.

நூல் எழுதுதலின் பயன்

1065. கையாலித ழெழுதித்திகழ் கமலாலயச் சிறப்பை
மையாலணி செய்வார்திவி தேசந்தனில் வாழ்வார்
கொய்யார்மலர் சூட்டிக்குண முடையார்க்குறக்
[கொடுப்பார்
ஐயானன னுலகத்திருந் தடைவார்சிவ னடியும். (41)

இவ்வாறு, சூதன் முனிவர்க்கு உரைத்தான் என்றது

1066. என்றேயினி திசைத்தான்சிவ னிணையார்திரு வடியைத்
தன்றுமரை யிதயத்தலர் தனிற்கண்டது தனைவான்
வென்றுன்விறற் புலனைந்தையுஞ் சூதன்விதி வினையும்
இன்றேயறிந் தனமென்றெணு முனிவர்க்குற வின்பம்

முனிவரெழுவரு முத்திபெற்ற சருக்கம் முற்றும்.

—: o :—

கமலாலயச் சிறப்பு
எனனும்
தீருவாரூர்ப் புராணம்
முற்றும்.

1064. நூல் கேட்பவர் பெறும் பயன் கூறப்பெற்றது.

1065. இதழ் - ஏடு. மையால் அணி செய்வர் - மை பூசி அழகு செய்பவர். திவி தேசம் - இவ்ய தேசம். ஐ ஆனனன் - ஐந்து முகங்களை யுடையவன்; சிவபிரான்.

1066. தணத்தல் - நீங்குதல். சூதன் இசைத்தான் என்று முடிக்க.

அநுபந்தம் - I

தஞ்சாவூர், மகாராஜா சரபோஜி ஸரஸ்வதி மஹால் நூல்நிலையப் பிரதியால் பெற்ற நிறைவுகளும், பாடபேதங்களும்

(சருக்கங்கள் 1 முதல் 12 வரை)

நிறைவு

பாட்டு எண்	அடி எண்	சீர் எண்	நிறைவு
14	3	6	செய்யும்
	4	1	பணியது
18	3	5	மிடற்றை
34	3—4		மாசா ருயிர்க்கறுக்கு மருமறைபோ லிலங்குகவென், மாசா சறுமுறையா லறு மறுமோமணி நிரால்
42	4	4	னடியடைந்
46	1	5	சிறந்
94	2—4		நூலனையார் நுண்ணிடையா னுழைமதி யின் பிளவனையார் நுதலி னுலே, ஆலனையார் வயிறதனு லரவணையா ரல்குலினு லன்றிப் போர்செய், சேலனை யார் விழியிணையா லூசன்மிசைத் திகழ்ந்தாடுந் தெரிவை மாரே.
103	1—3		இலவவிதழ் வாயிழையா ரிடுகிடையார் பிடிநடையா ரின்சொ னல்லார், கலவ மயிற் சாயலினர் கனங்குழையார் மனங்குழைக்கும் கண்ணர் கற்றுப், பலகலையின் பரதத்தின் படிபயில்வார் நடம்பரமன் முன்னே தோன்றும்.
165	1—4		பார்த்தேயப் பொழுதமல னிந்திரனு நுமைத்துயரம் பண்ணி னுன்றன், மூர்த்தாவைச் சேதித்தீர் முக்கால மயமான மூரி வில்லால், கூர்த்தாரு மறிவுடையீர் கொடியானைக் குரைத் ததுநற் குணமிப் போது, தீர்த்தான முமைக்காக்கச் சிவலிங்க மயந்தன் னிற் றிகழ்ந்தே மிங்கே.

பாட்டு எண்	அடி எண்	சீர் எண்	நிறைவு
185	4	4	யுடரோறும்
205	1	1—5	மற்றிணை யில்லா தானை வானவரியற்ற
320	1—4		அதற்குத் தென்பால் கலியாண சவந்த ரன்ரு னருச்சித்தா னதற்குத் தென்பா லருச்சித்தார் சித்த ரென்னு மவரெல்லா மதற்குத் தென்பாற் ருபித்தே யருச்சித் தனர்சாக் கியரெல்லா மதற்கு நிருதி திசைதன்னிற் குயவ ரெல்லா மருச்சித்தார்.
324	3	4—5	வரமார் கோயி
349	3	3—4	யிமந்தன்னி லருந்தவத்தை
378	3	4	பாசுபதர்
382	3	2	வாண்டோ
396	2	2	மற்றைய
400	4	1	கண்ணிடுக
401	2	3—4	தாளாலே கடைந்தடைவர்
402	4	6	சொல்வாம்
403	2	1—2	கடியகனல் வைத்
405	4	4	யளவிட்டு

பாடபேதம்

பாடல் எண்	அடி எண	சீர் எண்	பாடபேதம்
12	4	4—6	அம்மைதாளினைத் துதிப்பாம்
14	3	1	தணிய
17	4	1—6	திருமலந் தீர்க்கு மிந்த வைந்தொழிற் சிவன்ற னுடல்
18	3	1—6	பைதலே வதைத்திட் டன்னம் படைத்து மூண் மிடற்றை யீர்ந்தும்
24	1	5	யார்கள்
	4	4	கணுகரும்
28	2	1	திரிவற
	2	3	சிவன்பரமன்
	2	5	தெளிந்த
	3	5—6	புகழை யெல்லாம்
	4	2	ஆரியத்தின்
30	4	5—6	வான நான்கும்
37	1	4	தாழ்ந்தருச்
	4	1	தேனுரும்
	4	5	இரங்கு
42	1	3	தெசரதன்
	4	1	அருந்தவர்
45	3	4—6	முற்றும் விளைத்து வித்திய
46	4	1—7	சங்க மெங்கணு மூளர் சைவர் மாதவர் தாமுமே
47	1	6	தாக்கணி
	2	4	பாலியின்
	3	1—7	மாழை யொண்களி மார்களி னின்னிசை மலருமள்ளல் வயற்றெறும்
	4	5	நிறைந்த
48	3	7	சாற்றிடும்
51	2	7	வாதுநாம்
	4	3	அருத்து
62	3	3	யன்றி
	4	1—6	காந்தமே யன்றி மற்றுக் கிரீடணஞ் செய்யார் கற்றோர்
72	2	3	யெரித்தவிழா
	3	1	புத்தனச்
84	1	2	யனுதலார்

பாடல் எண்	அடி எண்	சீர் எண்	பாடபேதம்
84	2	5—6	னிடையார் பாகின்
	3	4	நுடங்க
	4	2	வயற்றேறுங்
87	1	6	நீடும்
	2	4	பொழிலென்ன
	3	3—4	சார்வாருக் கேணியென
		5—6	தலைகாட்டாது
	4	1—6	நீழனிகழ் பூகனிரை வருக்கைவனங் திங் கனிமாம் பொழிலுநீடும்
94	1	1—3	பாலனையார் வயினதலா வனையா
97	1	2	கொடியிடைய
	2	2—4	மொழியினையார் திங்களினை மறுச்செய்து
	4	2—4	விழியுமுளார் பந்துகழங் காகிவினை
103	4	3	சித்தர்கள்
110	1	1	வானணவு
		4	துங்கமதி
	3	4	சித்தருமோர்
113	2	4	றாடுதலு
128	2	1—3	பரிந்துயிர்கட் கமலவுருப் பதித்திருக்கும்
	3	1	விரிந்துறவாய்
	4	4	யெனவவனும்
142	2	1—4	டாவவெனு மல்லொழிந்தா ரதனற்றே வாசிரய
	3	3—6	சமற்காரனெனும் பெயரான் காதல் கூர்ந்தே
	4	2	மசலனடி
144	1	3	துடற்பிரியா
	3	3	கனகநிறச்
	4	1	உற்றுனஞ்
148	2	3	கூட்டியிருந் தூகித்தொப்பரிய
	3	5	மூனைத்தற்
152	2	2	விறன்மாயன்
	3	2	குண்டத்தினுரு
167	1	4	விண்ணினது
	2	5	வரத்தை
	3	2—4	புரிவரறம் பொழிதலினுல் மழைபொழியு மழைக்குமேது
	4	1—2	கண்ணினதி னுலவன்றன்

பாடல் எண்	அடி எண்	சீர் எண்	பாடபேதம்
171	1	6	போற்றி
	2	1	அடியோங்கட்
		3	யருளெனலு
	3	2	யுறச்சேயோ
174	2	2	மூணர்ந்த முனிக்
	3	1	அறைத்தவர்கடம்
182	1	2	சிவபுரியுள்
	3	1—6	சேர்ந்து வசித்தார் மரித்தார் செனித்தாருஞ் செய்தவ மொன்றுகோடி.
	4	4	னெம்மன்பர்க்
183	1	3	தொழுவார்தந்
	4	5—6	செல்வார்மேலும்
192	1	1—2	ஆங்கேவந் ததுதோன்றிற்
	3	3—4	உயிர்க்குயிரை யுள்ளுணர்ந்த
	4	2	வரதேவ
	4	6	யேதாம்
195	2	3	நாதனேயு
	4	4—6	தன்குறிப்பைச் செப்பலுற்றான்
208	1	3	வுடலமலன்
	2	6—7	வாக்காதி வைகரி
	3	7—8	லதுதனே மூலத்து
	4	3—4	கலைமுதல் மாய்க்கண்
216	3	3—4	சதுரெனும்
220	3	2—3	உமைமாதிட முடையா
224	1	1	பண்ணேருற
	2	2—3	திடவாழ்ந்துவல்வினை
	3	4	யடைந்தே
245	1	1	அருந்தவற்றைப்
	3	4	கொண்மினெனப்
276	1	1—6	புக்கலமிப் புரிமூழ்கிக் கொய்தலர்நீர் வைசாக விசாகப்போதிற்
	2	2	வலர்தரித்தார்
	4	5—6	ளியங்கினேமே
349	1	5—6	தன்காயத்தை
	2	2	கழனிறுத்தி
	2	4	நாளுயர்வான்
	3	1—2	இடருறத்தண் புனன்மூழ்கி
	4	4	ளெடுந்தோன்றிப்

பாடல் எண்	அடி எண்	சீர் எண்	பாடபேதம்
370	3	4	மாருத
378	1	5—6	விதமண்ணுதி
382	1	4—6	லயண்டர் முதலெல்லோரும்
	4	4	பெருவிழவும்
388	4	4—5	சிவனடியுஞ் சேர்வர்
389	3	1	நாஞ்செயலி
	4	1	தாஞ்சிவன்ருட்
	4	4	தமோமலமுந்
390	2	5—6	பிரிவிப்பாஇன
	3	1	மறிமழுவுங் கரத்தேந்து
	3	6	கண்டார்
	4	3—4	திருவடியுஞ் சேர்ந்திருந்து
394	3	3—4	பனவரவர் தம்முள்ளுங்
396	2	2	வேறற மற்றைய
	4	4—6	ஊனுடலினுள்ளேவையாய்
397	1	3—6	கோகனனு மவனடிமுன்னிறைஞ்சியேற்றி
	2	1—2	நின்றியமனே யடைந்தென்
	3	1—2	யென்னுடலே விடுவேமென்
	4	1	நன்றெனக்கு
398	1	5	போதிற்
400	1	2	பாவவிதம்
	2	4	ரவையுனது
	4	1	சிலவவற்றுட்
	4	4—6	மேலனேத்துங் கதைப்பாரென்றுன்
401	2	4	கடைந்தடைவர்
	3	5—6	ளதன்மராழ்வார்
	4	3	கைப்பிடித்தா
402	1	1—6	நரகவிதம்.....ணடி
	2	3	கோடியுள
	3	1	கருதிடுக
	3	5—6	கரிசராழ்வார்
	4	5	துணிக்கச்
403	1	3	லிருப்புமய
	3	3	லோதனத்தை
	4	2	தூதரவர்
404	1	3—4	ரவுரவத்திற்துடலிருப்பு மக்குடத்தி
	3	1	மருண்டார்க்கு
	3	3	தேசிகன்றன்

பாடல் எண்	அடி எண்	சீர் எண்	பாடபேதம்
404	4	5—6	தமையுமோர்ந்தே
405	3	1—6	கொந்துமா.....கண்ணிணையைக் கூர்ந்த விருப்பழற்றுண் டப்புட்கள்கோடி
	4	5—6	நுவலலாமே
406	2	1	குரவனைத்தேவரைப்
407	3	5—6	தபனமெய்த
408	4	6	மிடித்தலாலே
409	2	4—6	திரத்தினுறுமளறுதன்னில்
410	1	4	கடனென்று
	2	5—6	மருத்தாதுள்ளே
	3	4—5	கபந்தனிலுமிழ்ந்தே
	4	4	யதன்பெயரு
411	1	3	தலையாரை
	4	3	லைதனிற்
413	1	4—5	முண்ணுமலனர்
	2	3—4	காகங்கள் பறித்தருந்தக்
414	4	1	துன்னியுறுங்
415	1	6	பெயராம்
	2	4—5	மினையனபிறர்
	4	5—6	டொருவாரே
417	3	1—6	பொதுமகளிர் தோள்புணர்ந்தார் புதல் வரெழு வாயரும் பொன்றிய தந்தைக்கு
418	3	1—2	எண்ணியவந் தணர்தம்மை
,,	,,	5—6	மெமதுதாதர்
,,	4	2	நிருப்பழலான்
419	3	1—2	அதன்மரையு
	4	1	கதமுடைய
420	3	4	பரந்த கொழுந்
421	1	3—4	மென்பாரையுந் தம்மை
	2	3	கொடியரையுங்
	,,	5—6	ளிலவத்தேற்றி
423	2	2—6	நீந்தவலரோ கற்றவினைச் சாங்காலீயா தார்
	3	5—6	மந்தணை
424	1	1—2	திருவுள்ளஞ் செய்தபடி
	2	1—2	செருநரகவிதந்தனின்
	3	4	சாற்றலுங்
	4	1—6	கருதிடுகோகன்ன வவைதன்னுட்

பாட்டு எண்	அடி எண்	சீர் எண்	பாடபேதம்
424	4	1—6	{ கருதிடு கோகன்ன னவைதன்னுட் சிலவி தங்கட் டுரைப்பா மென்ரூன்
425	2	2	மந்திர முஞ்
426	1	3	ஞண்ணுமற்
	3	2	யுடையாரும்
	4	4	லுறினுதவும்
427	3	2—3	ஞெருவனுள னென்றெண்ணி
430	1	1	இரங்கிநம
	4	3	புதியவல
431	1	2—6	தாபித்த புரிதன்னிற் சிவாகமத்தின் விதியினுலே
	2	1—3	தவறறுபூசனைபுரிந்தார் தணந்துகரிசினை
	3	3—4	மோங்கிடுநா
433	1	5—6	விடைகொண் டேதான்
	3	5—6	மின்ப முற்ரூர்
435	2	3—4	டமருனது சரீரத்தைத்
	3	4—5	கோகன னுக்கிசைந்த
436	2	1	அற்றவனைப்
	4	3	மகிழ்ந்துரைத்தான்
437	2	1—2	ஒருவழியினிடை
438	2	3	பிணிப்பித்த
	4	1—2	தண்மதிசேர் சடைமுடியாய்
440	2	1	அன்றியம்ப
441	1	5—6	பரமன் பாதஞ்
	2	5—6	சிறப்பி னேடே
	3	3—5	மொழினியா லெவ்வுயிர்க்கு முதலில்
	4	3—4	வடதிசையின் முடிவின்கண
443	1	1	முப்பொழுது
		4—6	கொய்து மொழிந்து வேதம்
445	4	2	வானந்தத்
446	1	4—6	னிசிதுயிலூண் செய்யா தாங்கே
	4	1	இகழுனரிம்
451	1	4	விடைகொண்டு
454	1	2	மிம்முறையாண்
459	2	1	வடிவினுணிங்
	3	5—6	யெய்வரிங்கே
463	3	1	நத்தழிய
466	2	1	முடித்து முறை

பாட்டு எண்	அடி எண்	சீர் எண்	பாடபேதம்
471	2	1—2	மன்னவன் வல்லியமாகி
	3	2—3	மற்றிடுநாண்முழையினுமேற்
487	1	2	பொதியெடுத்தும்
	3	4	முதவாத
	4	3—6	வதைபபார்வல் வினையுமுளென் மருந்தினலும்

அநுபந்தம் - II

அரும்பத முதலியவற்றின் அகராதி

அகத்தியன், 44
அகங்காரம், 208
அகப்பு, 54
அங்கம் ஆறு, 28
அங்கமாலை, 265
அங்குட்ட மாத்திரம், 790
அசம்-ஆடு, 480
அசித்து-மலம், 69
அசித்து ஆன்மதரர், 182
அசுரர் :— இரணியன், 614; இரணியன் மகள் இரமை, 614; கயாசுரன் 303; தயித்தியர், 213; தயித்தியன் 610, 616; தாருகன், 511; தாருகாசுரன், 366; துந்துமாரன், 313; துவட்டா 614; மதுகைடபர், 215; வலன், 21, 335, 371; வாணன், 321, 501; வாணேசுரன், 324; வாற்கலியன், 368; விருத்திரன், 610, 613, 619, 621, 635.....; விருத்திரன் தாய் இரமை, 614.
அர்க்கியங் கொடுத்தல், 126
அர்க்கியம், 69
அரசர் :— அரிச்சந்திரன், 343, 558; அருச்சுனன், 335; குலிசன், 38, 464, 504, 513; கேமசருமன், 651; சமற்காரன், 37, 142, 225, 227; சமற்காரன் சாபம் பெற்றமை, 228; சனகன், 328; தசரதன், 42, 342, 666, 673, 991; தசரதன் புத்திரன் அரக்கன் தலை அரிந்தது, 334; திரிசங்கு, 545, 563, 590, 603; திரிசங்கு உடலுடன் பொன்னுலகம் புகுந்தது, 145; நகுடன், 342; நளன், 311; பகீரதன், 191, 280, 319; பத்திரசேனன், 291, 268; பாண்டவர் 331; பூபுகன், 506; மனுமன்னன், 120; முசுகுந்தன், 4, 21, 299, 344, 371, 383; முசுகுந்தன் தியாகேசரைத்

தாபித்தது, 121; மூகன், 38, 669; யயாதி, 313; விகாரிவி, 1029; விசுவாதிகன், 301; விடுரதன், 679, 687; விருகன் 745.
அரசியர்:—காமலவதி - பத்திரசேனன் மனைவி, 282, 268; சாத்துவிகருணி 745; நச்சுக்கன்னி, 743, 747, 719; நச்சுக்கன்னியின் முன்பிறப்பு வரலாறு, 755-8; நற்பயனிட்டை என்ற பெயர் வந்த வரலாறு, 761.
அரவணை, 214
அருவமயம் நான்கு, 1058
அருவுரு, 5
அருவுருமயம் ஒன்று, 1058
அலகிடுதல், 69
அலந்தவர், 51
அலமரல், 71
அலரிரதம்-புட்பகவிமானம், 190
அவத்து-எள், 739
அவனி, 160
அவித்தை, 184
அறல்-நீர், 795
அறுபதின்மரொரு மூவரவரொடு ஒன்பதின்மர், 112
அன்றுதல், 827
அனகன், 135, 809
அனிட்டன்-விருப்பமற்றவன், 10
அனுதிமாயை, 596
அனுதியவசநோய், 207
அனுசயம், 178
அனுபூதி, 524
அனுமானம், 280
அனுலோமர், 80
அஸ்தமஸ்தகசையோகம், 78

ஆகமங்கள் எழு நான்கு, 28, 108
ஆகமம், 78, 131
ஆகுதி, 138, 150, 151
ஆச்சியம், 740
ஆசிரியர் செயல், 78
ஆசு, 7
ஆடலும் பாடலும், 95
ஆணவம், 7
ஆதித்தன் மரபு, 991
ஆதுலர், 59, 101
ஆரணம், 364
ஆரதம்-மாமிசமில்லாத மரக்கறி உணவு, 134
ஆரியம், 19, 24, 28, 99
ஆரியன்-குரு 485
ஆரூர்:—ஆரூர், 82, 104, 199, 211, 311.....; ஆரூரின் உட்டலங்கள்: அசலேசுரம்; 143, 261; அசலேசன் சாயையின் சிறப்பு; 258, 259, 260; அரநெறி 257; ஆடகேசுரம், 535; ஆனந்தேசுரம்; 265, 267, 272. 277, 281.....; உருத்திரகோடி 902; உருத்திரபாதம் - 442; கயாசிரம், 738; குலிசேசம், 509; கோகன்னலிங்கங்கள் 442; சோமாஸ்கந்தம் 353-5; முலட்டானம், 2, 27, 198; யயாதிசம், 318; பாதாளாலயம், 535; வன்மீகம், 2, 162, 179, 182, 189.....; ஆரூரின் தீர்ந்த மகிமை, 949-50; அகத்திய தீர்த்தம், 955; அம்புயப் பொய்கை, 955; கயாசுரக் கயம், 40; கயாதீர்த்தம், 528, 529, 676, 678, 706.....; கபிலநதி, 956; கௌமார தீர்த்தம், 303; சங்கதீர்த்தம், 233, 242; சமமிச்சிர தீர்த்தம், 41; சரசுவதி தீர்த்தம், 39, 49, 628, 664, 668; சூரிய புட்கரணி, 1004; தேவதீர்த்தம் 2, 39, 191, 192, 609.....; நற்பயனிட்டைத் தீர்த்தம், 41, 762, 775, 777; மிச்சிர குண்டம், 953; முப்புனல்,

782 ; மூன்றரைக்கோடி தீர்த்தம், 40.
ஆரூரின் வேறு பெயர்கள் :—கமலாலயம், 141, 223, 664, 699 ; சமற்காரபுரி, 142, 505 ; சிங்காரம், 140 ; திருவாரூர், 179, 191, 233, 234, 246 ..... ; தேவாசிரம், 142 ; பராசத்தி அதிட்டேயபதி, 156, 157, 1003 ; விசிட்டதலம், 131.
ஆரூர் எல்லை ஐந்து குரோசம், 678
ஆரூரின் பெருமைகள், 128, 132, 139, 182-4
ஆரூரில் பேறு பெற்றவர், 144
ஆரூர்ப் பிறந்தார் பெருமை, 123
ஆவண வீதி, 93
ஆவரித்தல்-நீக்குதல், 143
ஆறங்கம், 280
ஆறெழுத்து, 127, 960, 1023
ஆனனம்-முகம், 97
ஆனெய், 70

இகத்தும் பரத்தும், 356
இகல், 525
இச்சி, 740
இச்சி-ஒருவகை மரம், 739
இசைக் கருவிகள், 50, 95
இட்டவரம், 143
இடக்கை, 95
இடைப்பெண்ணைக் காயத்திரி ஆக்கியது, 1010
இணக்குதல், 170
இணுக்குதல், 169
இபம்-யானை, 626
இமயம், 149
இயல்-நூல், 1, 82
இரண்டற நிற்றல், 197
இரண்டாம் வேதம், 188
இரவாமல் அருள்தல், 1
இரித்தல்-ஓட்டுதல், 263
இருதுமதி, 618
இருபயன், 5
இரு மூன்றெழுத்து, 161
இருவினை, 203
இருள் காய்தல், 78
இருள் மலம், 203
இல்லறம் நல்லறம், 53
இலயம, 391
இறைவன் மூவிதப் பக்குவிகளுக்குப் போதிக்கும் முறை, 185
இன்பதுன்பம், 99
இன்ன வேளையிற் பெண் பிறத்தல் ஆகாது என்பது, 747

ஈசானம், 303
ஈருடலினேருயிர் போல், 99

உட்கரணம் புறக்கரணம், 175
உட்புலன் நான்கு, 263
உடலை வீதியில் உருட்டுதல், 73
உடுக்கை, 95
உடுபதி-சந்திரன், 311
உத்தரம்-வடக்கு, 294
உபவசி-பட்டினி, 241
உபவாசம், 453
உருத்திர சத்தம், 969
உருவமயம் ஒரு நான்கு, 1058
உலக வாழ்க்கை இன்பமற்றது, 75
உலவா இன்பம், 264
உவமைகள் :—இடபத்திற் பொதியெடுத்தே இழுதை யுறுதல், 487 ; இருளுக்குப் பருதி 139; இளம் பயிரிற் புழுவுக்கு மழை 139 ; செந்தழலில் திரணம் 632 ; பயிறு வெந்தால் மூளைக்காது, 209 ; பாம்பின் வாய்த்தேரை ஈச்சளி சுவைப்பது 75 ; பாம்புக்குக் கருடன் 139 ; மருளுக்குப் பரமசிவன் வாக்கு 139 ; வெயிற்புழு 137.
உழவாரம், 72

உற்பலம், 386
உற்பாதம், 160, 161

ஊனவிலை, 181
ஊனுண்ணுதலின் கொடுமை, 480

எண்டிசை, 163
எண்பத்து நான்கு லக்ஷம் தேவனுக்கள், 1059
எயில், 575
எரிநாவில் தேவர்க்கு அவி தருதல், 608
எல்லை-இடம், 81
எழுத்தாறு, 460, 837
எழுத்தைந்து, 269
எழுத்தொரைந்து, 22
எழுநிலை மாளிகைகள், 97
எழுவித மேகம், 161

ஏக்கழுத்தம், 1019
ஏண்-அழகு, 37, 797
ஏதம், 76

ஐந்திணை, 83
ஐந்து தாண்டவம், 16
ஐந்து பொந்து - ஐம்பொறிகள், 76
ஐந்துலிங்கம் கண்டவர் விடத்தால் அவியார், 325
ஐம்பூதங்கள், 67, 208
ஐம்பொறி, 208
ஐயவிபரீதங்கள், 156
ஐவகைக் கூத்து, 17

ஒளி மூன்று, 152
ஒன்னலர், 288, 554, 559

ஓங்கல்-யானை, 683
ஓதனம்-உணவு, 77, 1013
ஓமாதிய வாசகம், 7

கசடு, 481
கஞ்சா, 481
கட்டுரை, 399
கடலரையன், 213, 215
கடுவிடம், 8
கண்டகம்-முள், 480
கண்டிகை, 106
கண்டு-கற்கண்டு, 84
கணக்கு-காரியம், 167
கந்திருவர், 176
கபாலம், 1013, 1014, 1015
கமலாலயச் சிறப்பு, 33, 34, 1065
கயத்தல்-வெறுத்தல், 196
கரகம், 652
கரடி, 95
கரடி-ஒரு வாத்தியம் 176
கரதலத்தில் மறி மழு தோன்றல், 164
கரளம்-கழுத்து, 176
கரிசு-குற்றம், 90, 447
கரிடணம், 62
கருமாறுதல், 4
கரைமிடறு, 164
கல்லவடம், 95
காலம், 134, 137
கலிங்க வழி, 906-10
கலியில் மானிடர் இயல்பு, 852-82
கலியின் மக்களின் செயல்கள், 890-905
கலைகள், 208
கவ்வை, 84
கழங்காடல், 97
களம்-கழுத்து, 155
கற்பம், 650
கன்னல்-கரும்பு, 47
கன்னியர் காதல் கொடிது என்றது, 821
கனகம், 483, 162

காபாலி-காபாலிசன், 1012
காளம்-ஒரு வாத்தியம், 50
காசினி, 142

காந்தக்கல், 62
காந்தம்-ஒரு சிவபுராணம், 32
காந்தன், 58, 102
காம்பு-மூங்கில், 63
காயம்-உடல், 90
காரை - ஒருவகைச் செடி, 739, 740
காரைக்காலம்மையார் பதிகம் பாடியது, 12, 111
காலவங்கி, 153
காலை அர்க்கியம் விடல், 69
காளம், 95

கிருச்சிரம், 453

குசை-தருப்பை, 739
குட்டம்-ஒரு நோய், 228
குண்டம், 159, 174
குண்டர், 13
குணமூன்று, 708
குணித முறுதல், 788
குதை, 155, 159
குரவன், 548, 550, 568
குரவன்-ஆசான், 64, 546
குரவன் பெயரோதி வேதமோதுதல், 79
குரு என்னும் எல்லை, 148
குரு-நிறம், 396; பெருமை, கனம், 140
குவலயம், 656
குழக்கன்று, 497, 507
குழல், 95
குறிஞ்சி முதல் திணை ஐந்து, 82
குறும்பி, 214

கூபம், 705

கோக்கரி, 95
கொப்பு-ஒரு காதாபரணம், 56

கோகன்னன், 394, 397, 399
கோதானம், 183
கோயிற் பணிகள், 69, 70

கோளுரைத்தல், 477

சகலர், 185, 962
சங்கம்-சங்கு, 95
சச்சிதானந்தம், 681
சட்டெனவே, 399
சடங்கு, 249
சடைமுடி, 164
சண்டேசுர நாயனார், 10
சண்டேசுவரன் வரலாறு, 10
சத்கரித்தல், 620
சத்தியத்தின் பெருமைகள், 733
சத்தியம் தருமத்தினும் சிறந்தது, 734
சத்திய லோகம், 162
சத்தியவாதி, 579
சதி வழியில் நடம் புரிதல், 261
சதுரன், 216
சந்ததமும்-எப்போதும், 101
சந்தி மூன்று, 74
சந்துட்டன், 213
சம்பந்தர் இரண்டரையாண்டுள் ஞானப்பால் உண்டமை, 13
சமலர்-மனிதர், 771
சயிலங்கள், 160
சயிலத்தனு, 579
சரபம், 626, 667, 683
சரித்தல்-சஞ்சரித்தல், 132
சல்லரி, 95

சான்மலி-ஒரு மரம், 46
சாடுதல், 160
சாதம்-பிறப்பு, 975
சாதுர் மாஸ்கம்-ஒரு விரதம், 466
சாந்திராயணம், 453
சாமவேத கீதம், 595
சாரணர், 110

சிகை, 456
சிட்டர், 1052
சித்தசன்-மன்மதன், 96
சித்தம் சிவமாதல், 67, 78

சித்தர், 319
சித்தர் கணம், 450
சித்திர சிகண்டி, 344
சிதடர், 477
சிதத்துவயவானந்தம், 445
சிதானந்தம், 184
சிந்துரம்-யானை, 92, 561
சிராத்தம் யார் யாருக்கு உரியது, 626
சில கொடிய பாவங்கள், 1031-2
சிவசத்தி, 154
சிவ சின்னங்கள், 138
சிவ தேசிகர், 78
சிவபிரான் :—அகாரணுபகாரி, 594-6; அடிமுடியும் பார்ப் பரியான், 113; அதிபதி, 194, 504; அதிபதியாரானவர்க் கும் அதிபதி, 127; அதுலன், 221; அந்தகன் தனக் கந்தகன், 70; அமலவரன், 384; அமலன், 105, 107, 142, 147, 195.....; அமலேசன, 6, 52, 163, 172, 271,.....; அரன், 9, 38, 43, 117, 526.....; அரும் பொருள், 127, 604; அறிவரியன், 112; அனந்தன், 285; அனகிசுத்தன், 81; அனதி மலமுத்தன், 3, 106, 122, 127, 194; அனதிமுத்தன், 29, 32, 136, 203; ஆதி, 3; ஆதி நடு அந்தமில்லான், 270; ஆதிரை நாளதிபன், 829; ஆமை பூணு மார்பன், 595; ஆலநிழலமலன், 132; இதய மலர்ப் பிரியான், 127; இந்து சேகரன், 74; இறை, 180; ஈசன், 51, 66, 279, 533; உமாபதி, 108; உமைபாகன், 220; உருத்திரன், 153, 174; உரு மூன்றன், 152; உலக மூத்தி, 203; எப்பொருளுந் தானுனவன், 180; எவ்வுயிர்க் கும் பெருந்துணைவன், 112; என்னுளிருப்பான், 15; ஏகம், 198; ஐயானனன், 1064; ஒப் பிலி, 959; ஒளியோங்கு கண் டத்தன், 152; ஓங்காரத்துப் பொருள், 182, 197, 346. 381; கண்ணுதல், 40, 164, 661; கயிலை மலையான், 315; கருணையன், 194; கறைமிடற் றன். 661; காரணன், 335, 829, கானமதில் நடம்ாடும் கட வுள், 179; குணங் குறியில்லா தான், 374; குழகன், 226, 266, 292, 351, 449.....; கூத்தன், 383; சங்கரன், 217, 261, 272, 442, 503.....; சடைமுடியான், 288, 314; சதாசிவன், 3, 217, 260; சம்பு, 595; சிந்தனைக் கரியான், 35; சிவலோகம், 183, 184, 205; சிவன், 81, 133, 168, 178, 216.....; சின்மயன், 3, 20, 168, 180, 348...; சேடன், 959; சொன்மயன், 578; ஞாலத் தின் உள்ளுறைவான், 162; ஞானமயன், 162, 179, 193; தற் பரம், 376; தனேயொப்பான், 3; தாணு, 37; திப்பியன், 837; திரியம்பகன், 542; துட்டப்பிர தன், 302; நக்கர், 69; நம்பன், 12, 124, 193, 211, 285.....; நாகபூடணன், 264; நாதாந்த நாயகன், 604; நான்மறை நாய கன்,.....; நிட்களன், 144; நித்தன், 291, 544. நிமலன், 147, 212, 234, 544; நிமித்த காரணன், 596; நிருத்தன், 595; நின்மலன், 239, 240, 289, 291, 474.....; பசுபதி, 382, 451; 954; பரசுபாணி, 19; பரப்பிரு மம், 733; பரம்பரன், 289, 483; பரம்பொருள், 108; பரமசிவன், 27, 105, 112, 133, 139.....; பரமன், 104, 329, 345, 360,

523 ; பரமானந்தேசன், 283 ; பரமேசன், 174, 191, 222, 254; 350 .... ; பரமேட்டி, 222, 262; பரன், 12, 37 ; பராபரன், 5, 454, 514 ; பிஞ்ஞகன், 174, 508, 969 ; பிரான், 278 ; பிறப் பிலி, 174 ; புராணன், 286 ; புராரி, 286, 647 ; புனிதன், 108, 205 ; பூதநாதன், 286 ; பூரணன், 364, 829 ; பொருவிலி, 127, 605 ; போதகன், 108, 647, 829 ; போதவாகனன், 286 ; மருந்து, 207, 240, 263, 524 ; மனத் துணை, 195 ; மனமெழு வாய்க் கறிவரியன், 109 ; மனுதிக்கெட் டான், 3 ; முக்கணடிகள், 100 ; முக்கணன், 257 ; முக்காலத் தான், 152 ; முக்குணத்தான், 152, 166 ; முத்தன், 209, 538, மூன் று காலத்தான், 166 ; மூன்று நி ற த் தா ன், 166 ; வரதன், 135, 201 ; வாலோர் குரவன், 337 ; விகிர்தன், 220 ; விடையான், 220 ; விமலன், 16, 194, 223, 224, 239 .. ; விஜப் பகவன், 239 ; வெண்ணீற்றன் 661 ; வெள்ளிப் பொருப்பன், 286 ; வேதகன், 206 ; வேதபுரு டர், 298 ; வேதமுதல், 288.

சிவபிரான் அருளிச் செயல்கள் :— அக்கினியின் கரம் தடிந்தது, 578 ; அயன் தலையைத் தடிந் தது, 579 ; அயன்மால் முன் எரியாய் நின்றது, 113, 525 ; அரிக்குச் சக்கரம் ஈந்தது, 579 ; ஆலமுண்டது, 594 ; ஆல்வன த்திலாடியது, 111 ; ஆலின்கிழ லிருந்து வேதமருளியது, 262 ; இயமனைச் சங்கரித்தது, 70, 455, 510 ; இயமனைப் பாதம் தடிந்தது, 901 ; எச்சன் தலை யரிந்தது, 262, 578. 761 ; ஏயர் கோன் கலிக்காமன் பிணக்குத் தீர்த்தது, 116 ; கானமதில்நட மாடியது, 193 ; சந்திரனை மிதித் தொறுத்தது, 262 ; சுந்தர் திருமணம் தடுத்தது, 115 ; சூரியன், பல் இறுத்தது, 262, 961 ; தக்கன் தலையையரிந்தது, 262, 578, 961 ; தக்கனுக்கு ஆட்டுத்தலை அளித்தது, 578 ; தலையிற் பலி தேர்ந்தது, 455 ; தாருகனைக் கொன்றது, 511 ; திரிபுரம் எரி வித்தது, 456 ; திருநீலகண்டனுக்காகவாயில் வகுத்து யாழ் கேட்டது, 118 ; திருமாலுக்கருள் புரிந்தது 4 ; தேவர்க்குக் காட்சி யளித்தது, 264 ; ஈசன் நந்திகேசற்கு அறம்நான்கு உரைத்தது, 29 ; டரவைபால் தூதுவனைது, 113 ; பரிமேல் வந்தது, 111, பிறைதரித்தது, 220, 511 ; புரிமூன்றும் எரித்தது, 221 ; மனுமன்னனுக்கருள்புரிந்தது, 120 ; முப்புரம் எரித்தது, 579 ; யோகி உருவம் கொண்டது, 964, 970, 71 ; விமலையால் அருள் புரிந்தது, 122 ; விறன் மிண்டனுக்கருளியது, 117 ; வேள் எரித்தது. 72.

சிவபிரான் தாளடைந்தார் பஞ்சவித கிருத்தியம் பண் ணுமை, 445

சிவ மெய்ஞ்ஞானம் 774

சிவயோகர், 107

சிவலிங்கம், 132

சிவனடியார்கள், வாழ்த்து, 20

சிவாகமம், 20

சின்னம், 782

சுக்கிரன் மரித்தவரை உய்யச் செய்கை அறிந்தது, 144

சுண்ணம், 1034

சுந்தரர் :— சுந்தரர் அருளால் குரு டன் பேறு பெற்றமை, 115 ;

சுந்தரர் அருளால் கூனன் பேறுபெற்றமை,144;பரமனைப் பரவை பால் தூதனுப்பியது, 15; வெள்ளானை ஊர்ந்தது, 15; சுந்தரர் துதி, 15.
சுத்தாபாதானந்தனிலையமாதல், 5
சுரஞ்சி 191
சுரபி - பசு, 491, 497, 788

சூதம் - மா, 46
சூலுதல், 48
சூளிகை, 49

செருத்தல், 625
செஞ்சாலி, 83, 86, 93
செம்பருங்கனகமாதல், 533
செல் - கறையான், 158
செற்றை, 72

சையமெனும் பொருப்பு, 83
சைவர், 27, 28
சைவர் சிவன் முகத்துத் தோன்றியவர், 20
சைவன், 18

சொம்பித்தல் - ஸ்வயம்புவாதல், 35
சொன்றி - சோறு, 527

சூமலி, 551

ஞானி, 682
ஞானசம்பந்தர் - என்பு பெண்ணாக்கியது, 13; தென்னவன் கூன் தீர்த்தது, 13
ஞானமறையவன், 13
ஞானைதயம், 8

தக்கன், 325
தக்கையிணை, 95
தகர் - ஆடு, 683
தட்டழி, 95
தண்டமிழ்ப் புலவோர், 48
தண்டி - சண்டேசுவரன், 10
தண்ணுமை, 95
தண்மதி, 164
தணத்தல், 1066
தத்துவங்கள் ஒடுங்கும் முறை, 208
தத்துவமசி வாக்கியம், 67
ததி - தயிர், 1009
தபனம், 38, 717, 735
தம்பம், 162
தமம், 579
தமோகுணம், 137, 168
தர்ப்பணம், 791
தரளம், 90, 219
தரும தேவதையின் பாதங்கள், 843
தவமுறைகள், 968
தன்மாத்திரைகள் ஐந்து, 209
தனுகரணபுவனம், 197

நாண்டவம், 272
தாமரை வனீயம், 1040
தாரகை, 646
தாரணி, 364
தாரம் - ஒருவகைப் பண், 92, மனீவி, 250
தாளம் - கருவி, 95

திங்களிணை மறுச்செய்தல், 97
திரோதானம் செயல், 154
திப்பியம், 576
திமிரம் - இருள், 64
திரிபையமற ஆய்தல், 99
திரிமலம், 17
திருஞான சம்பந்தர், 73
திருத்தொண்டத் தொகை, 112
திருநாவுக்கரசர் 14; வேதவனத்தில் கதவு திறந்தமை, 14
திருநீலகண்டத்துப் பெரும் பாணன், 118
திருநோக்காய்ச் சுத்திசெய்தல், 180

திருமஞ்சனம், 218
திருவாதவூரர், 16
திருவாதவூராளி, 111
திருவாதவூராளி திருவாக்கு திருவாசகம், 111
திருவை - வேதம், 455
திலம், 701
திவிதலம், 582

தீக்கை - தீகை, 588

துகள், 256
துட்டபாவனம், 156
துடி, 95, 176
துடி - ஒரு வாத்தியம், 50
துணித்தல், 239
துந்துமி, 95, 176
துயக்கம், 138
துர்ச்சனன், 168
துரிசு, 183, 477
துருவசிதானந்தகனம், 1058
துலை, 378
துவாரபிலம், 324
துனி, 620
துணித்து - வேகமாகி, 811.

தூல உடம்பு, 208

தேசம்:—அர்த்தம், 227; குரு, 149; கேகயம், 504, 680; தெசானனல் தேசம், 521..
தேவதாரு, 348
தேவயோனி விதம் ஒன்பது, 708
தேவர்கள்:—அக்னி, 166; அனலோன், 294; ஆயிரம் முகமுள்ளவன், 80, 294: அசுவனிகள், 171, 175, 295: அருக்கன், 69, 166; அலர்கதிரோன், 311; ஆதித்தன், 975; தபனன், 395; தினகரன், 456, 804, 809; திவாகரன், 802; பருதி, 618; மார்த்தாண்டன், 791, 803: ஆகா - ஒரு கந்தருவன், 409: ஆதிசேடன், அனந்தன், 324; பணிராசன்; ஆயிரம் முகமுள்ளவன், 80: இந்திரன், 1052; சசிபதி 166; தேவர்பெருமான், 3; புரந்தரன், 166, 197, 976; மகவான், 295, 613, 628, 640; வாசவன், 38, 179; மூன்று யுகம் விண்ணுலகு ஆள உரியன், 641: இயமன், 302; அந்தகன், 70; சமன், 455, 961; தருமபுத்திரன், 333; தருமத்ததிபதி, 333; தருமேசன், 396, 399; நமன், 296; தருமன் இயல்பு, 398: எச்சன், 169, 343, 961: கருடன், 334; வயினதேயன், 337: காமன், 312; மன்மதன், 816; மாரன், 61; வேள், 72: கின்னரர், 321: சண்டதருமன், 651: சண்டேசன், 313: சனி, 976, 1000; சனி ரோகிணி நடுவே செல்லப்பஞ்சம் உண்டாம் என்றது, 988; சனிப்பிரீதி, 997-9: சாத்தா, 312: சாத்தியர், 319: சாரணர், 321: சுவாயம்புவெனும் மனு, 348.

திருமால்:—கண்ணன், 148, 167, 293; சார்ங்கபாணி, 373; மாதவன், 179; மாயன், 217; வசுதேவன் புதல்வன், 335; திருமால் இரண்டு வரங்கள் பெற்றமை, 170; திருமால் சோமாஸ்கந்த உருவம் அமைக்கக் காரணம், 352; திருமால் மதுகைடபரை அழித்தது, 214; நந்திகேசுரன், 9, 30, 312.

பிரமன் :—அலரோன், 147, 294 ; நான்முகன், 178 ; பங்கயன், 583; போதன் 525; விரிஞ்சன், 42, 166, 639, 1017 ; அயன், 135, 136 ; பிரமன் அகம்பரம் என்றது, 113.
புதன், 339
முருகன் ; ஆறுமுகவன், 319 ; கார்த்திகேயன், 339 ; வேலாயுதன், 8 ; வேதாகமபோதக தேசிகன், 8 ; சூரனுடல் சீர்ந்தது, 91 ; தாருகாசுரனை வதைத்தது, 366.
வருணன், 316
வாயு, 317 ; பவமானன், 609
விசுவதேவர், 298, 690
விசுவகன்மா, 618
விநாயகன், 1, 300 ; ஐங்கரத்தோன், 302 ; கயமுகன், 91 ; வாதாவி விநாயகன், 7-8 ;
வியாழன் கலைகளுணர்ந்தது, 144 ;
வீரபத்திரன், 310 ;
தேவியர் :—அம்பிகை, 315, 771; அமலை, 771 ; அயிராணி, 766 ; அரமகளிர், 836 ; இரதி, 96 ; இறைவி, 365, 372 ; உடுபதி, 779 ; உமை, 772 ; உமை சசன் ஆகமானது, 6 ; உமை புடையில் நிற்றல், 164; உமை மாலுக்குச் சாபமிடல், 351 ; உமையாள், 6 ; எழுமாதர், 301 ; கமலாலயநாயகி 6, 267 ; கமலை, 213, 217 ; கமலை-இலக்குமி, 293 ; கமலை பாற்கடலில் தோன்றியது, 213 ; கமலச் செல்வி, 772 ; காயத்திரி, 1010 ; காளி, 311 ; காளி தாருகனை சடழித்தது, 91 ; கௌமாரி, 303, 304 ; சங்கரி, 771 ; சத்தமாதாக்கள், 300 ; சரசுவதி, 671 ; சாவித்திரி, 1005, 1017 ; சாவித்திரி அந்தணர்க்குச் சாபமிடல், 1020 ; சாவித்திரி இந்திரனைச் சபித்தல், 1020 ; சாவித்திரி காயத்திரிக்கு இட்ட சாபம், 1019 ; சிவனுக்கும் உமைக்கும் அபேதம், 358 ; சுந்தரி, 757 ; சுவாகா - அக்கினியின்தேவி, 741 ; சேட்டை, 296 ; ஞானநாயகி-அம்பிகை, 760 ; தக்கன் புதல்வி, 309 ; தீர்த்தகன்னியர், 944 ; துர்க்கை, 300 ; நாயகி, 365 ; நிருமலை - பராசத்தி, 17 ; பதுமம் என்னும் அணங்கு, 212 ; பராசத்தி, 5, 139, 140, 154, 181 ; பராசத்தி அனைத்துயிர்க்கும் உயிர், 5 ; பராசத்தி சுருதி தந்தமை, 5 ; பராசத்தி துதி, 5 ; பராபரை, 676 ; பவானி, 309 ; பார்ப்பதி, 309 ; வல்லி, 365 ; வாக்கின்செல்வி, 298 ; விசையை, 310 ; விநதை, 334 ; விமலை, 122, 219, 454.

தைசதம், 208
தைத்தியர், 637

நகரம் :—அதிகை, 14; அயோத்தி, 560, 666 ; ஆலங்காடு, 12 ; ஆலவனம் - திருவாலங்காடு, 111; ஆலவாய், 65, 650; இராமேசுரம், 65 ; கன்னி - கன்னியாகுமரி, 66 ; காசி, 43, 283 ; காஞ்சி, 268, 271, 281 ; குமரித்துறை, 65 ; குருக்கேத்திரம், 172, 173 ; சிவபுரம், 115, 123, 388 ; 392, 460, ... ; சிவபுரி, 114, 140, 182, 288, 389, ... ; சுப்பிரசித்தம் 407 ; திருவெண்காடு, 216 ; பிரயாகை, 127, 639 ; மதுரை

(வட) 394, 650, 765; மற்றவனம், 231; மாகிஷ்மதி 681; மாயூரம், 246; வெண்ணெய்மாநகர், 19; வைசிதம், 724; வேதவனம், 14; வைகுண்டம், 4; வைசிதமாநகரம், 274
நடஜை, 388, 463, 482, 585
நடஜையுடல், 136, 193

நதிகள்:—ஆகாச கங்கை, 780; கங்கை, 43, 65, 66, 129. 149 .....; கடுவாயாறு, 81; கோதாவிரி 1; சரசுவதி - 672; சுரநதி, 280; பகீரதி, 639; பாதாளகங்கை, 191; பொன்னி, 43, 66, 79, 81, 83, 246.....; யமுனை, 129, 149, 307, 394
நந்திமாகாளர், 9
நந்தினி - பசு, 493-4, 504, 499-500, 507
நமிநந்திதிருப்பணி, 119
நரகங்கள் இருபத்தெட்டுக் கோடி, 402
நரகங்கள் இருபத்தொன்று, 402

நரகம்:—அசிதால வனம், 422; அந்ததமம், 405; கண்டகம் 414; கததம், 417; கிலாகலம், 418; குற்சிதம், 410; சான்மலி, 421; சித்திரதுந்துமி, 415; துர்க்கடம், 413; துர்ச்சகம், 412; துரகதம் 411; நிசிதசத்திரம் நிதாகம், 420; நிரயம், 400 நிகும்பம், 408; பிரமுகம் 406; பீபற்சம், 409; புன்னகம், 416; மகாரௌரவம் 403, 404; வைதரணி, 528
நல்லறங்கள், 425-8
நல்லார் சாபம் நன்மையே தரும் என்றது, 506
நவகண்டங்கள், 911
நன்முகூர்த்தம், 148
நனவு, 647

நாகங்கள்:—கார்க்கோடகன், 324; தக்ஷன், 219; வாசுகி, 324
நாதவதீதம், 8
நாராசம் - சந்து, 92
நால்வேதம், 280
நாறுநாற்று, 83
நானமறை 89

நிகளம், 196
நியமம் - கோயில், 456
நிரந்துற, 150
நிருபன் - அரசன், 258

நீறுதரித்தல், 18

நுங்குதல், 235

நூல் சிவனருளைக் காட்டும் கை, 33
நூலியற்றிய இடம், 27
நூலின் காலம், 26
நூலின் பெயர், 33
நூலின் வழி, 28

நோடித்தல், 368

நோக்கால் பாசம் தீர்தல், 29
நோக்கிலை அவித்தை அறுதல், 16
நோக்கிலை ஏதம் அறுதல், 76
நோலினன் - வலியவன், 368

பங்கம் - சேறு, 63
பங்கயம், 217
பங்குனி உத்திர அபிடேகம், 380
பச்சிம திக்கு, 256
பச்சிமம், 784

பசு புலியிடம் கூறிய சபதங்கள், 476-492
பஞ்சக்கொடுமை, 1026-7
பஞ்சகம்-ஐந்து, 263
பஞ்சகிருத்தியம் புரிதல், 17
பஞ்சசுத்தி, 20
பஞ்சவித கிருத்தியம், 445
படகம், 75
படம் - ஆடை, 788
பண்டரங்கன், 217
பணை - மூங்கில், 85
பதவிதி, 668
பதிதர், 698
பதுமபாதம், 187
பரசுராமன், 318
பரத்துவாச கோத்திரம், 651
பரத்தை, 652
பரதகண்டம், 134
பரமசிவனை அருச்சிக்கை பரத கண்டத்துரிமை என்றது, 134
பரமானந்தம், 289
பரித்தல், 77, 217, 212. 225
பரிவு - இரக்கம், 263
பருவரல், 555
பவுத்திரர், 249
பன்னிரு பரிதியர், 161
பனகமணி, 135
பனவர் - அந்தணர், 1020
பனுவல், 224
பனுவலன, 503
பாசம், 210
பாசுபதம், 124
பாதவிதி செய்யும் ஆடல், 104
பாதாளம் ஏழு, 402
பார்த்திபர், 249
பாரகர், 99
பாரி - மனைவி, 35
பால் வேலை, 361
பாற்கடல் கடைந்தது, 213
பாற்குண்டம், 243
பாற்றிடுதல், 1022
பானியம் - நீர், 717, 812
பிரணவம், 163
பிரமச்சாரி விரதம், 818
பிரமவதை, 790
பிரளயாகலர், 185
பிரேத உடற்படுவார் இவர் என்றது, 695-699
பிரேதம் - பேய், 786,688
பிரேதர் ஆகாதவர் இவர் என்றது, 700-705
பிலியர் - பிரளயாகலர், 962

புண்டரிகம், 48, 314
புண்ணியகருமங்களைப்பாதுகாத்தல், 883-8
புட்கரணி, 793
புத்திரன் இல்லார் முக்தியடையார் என்றது, 983
புரோக்கணம், 979-80
புலியன் கோலம், 551
புலனைந்து, 263
புற்கை, 161

பூசுரர், 89, 100, 102, 104

பெண்ணை - பனை, 676

பேரானந்தம், 210
பேரிகை, 95, 176
பேரிலயம், 184

பைங்கூழ், 89
பைதல், 18

பொதியில் - பொதுவில், 455

மகம் - யாகம், 107, 524
மடம், 107
மதி - சந்திரன், 166
மந்திர நாவினர், 248
மயம் - உருவம், 353, 370
மரவகைகள், 87-8
மலங்கள் மூன்று, 207

மலத்தின் சத்தி, 209
மலபரிபாகம், 185
மலமாசுகள், 220
மலநிரதம், 224
மழு, 219
மள்ளர், 83
மறுகு, 95
மறைநான்கு, 108
மனோரதம், 132

மாந்துதல், 145
மாயை, 208
மாளிகைத் தேவர் முதலோர் செந்தமிழ், 111
மானம் - அளவை, 193
மானவிதம் மூன்று, 193
மானுதல் - ஒத்தல், 58

மிசைதல், 718
மிடி - வறுமை, 397
மிடியர், 101

மீளி, 946

முகத்தை மதியென்று அரவம் மயங்குதல், 85
முகநயஞ்செய்தல், 178
முகுடு - மூட்டைப் பூச்சி, 703
முசுகுந்தன் தியாகேசனைத் தாபித்தது, 21
முத்தி, 219
முப்பொழுது பூசித்தல், 20, 168, 140, 195, 443
முப்பொழுது மருச்சித்தல், 189
முழவு, 95
முனிவர் :—அகத்தியன் கடல் மாந்தியது, 145 ; அகத்தியன் வாரியுண்டது, 44 ; அங்கிரன், 129, 131, 133, 837 ; அங்கிரன் புதல்வன் வாம முனி, 128 ; அத்திரி, 338, 1035, 1043 ; அநசூயை, 338; அருந்ததி, 308, 1035, 1050 ; ஆங்கிரன், 450 ; ஆங்கிரன் தன் மைந்தன் சய்யு, 156 ; உபமுனி, 318 ; எழு முனிவர், 1028 ; எழு முனிவர் தாபித்த லிங்கங்கள், 1056, 1061 ; கபிலன், 956 ; கவுசிகன், 40, 779, 815 ; கவுசிகன் பிரம முனி ஆனது, 145 ; கவுதமன், 1035, 1045 ; காசியபன், 174, 316, 1035, 1045 ; கிருது 327 ; கோகனர், 39 ; கௌசிக முனிவன், 316 ; கௌசிகன், 326, 564, 601 ; கௌதமன், 317 ; சங்கமுனி, 235, 236, 237, 238 ; சண்டன் - முனிவரின் சிடன், 1035, 1051 ; சதக்ருது, 156 ; சங்கமுனி, 239 ; சயமுனி, 324 ; சயமுனி - ஜமதக்கினி, 716 ; சரணபுலி - வியாக்கிரபாதன், 657 ; சனகமுனி, 327 ; சனற்குமாரன், 11, 30, 134, 329, 526 ; சனற்குமாரன் முதலியோர் துதி, 11 ; சியவனன், 334 ; சிருங்கமுனி, 341 ; சிவமுனி, 591 ; சிவமுனிவர் வாழ்த்து, 22 ; சுக்கிரன், 296, 619, 621 ; சூதமுனி, 128, 534, 613 ; சூதன், 11, 31, 126, 127, 211, 226.....; செமதங்கி—ஜமதக்கினி, 1035 ; ததீசி, 627 ; தும்புரு, 307 ; துருவாசன், 357, 464, 466 ; நாரதன், 306 ; பதஞ்சலி, 32 ; பாரத்வாசன், 317, 1035, 1017 ; பிருகுமுனி, 317 ; பிருங்கி, 313 ; புலகன், 326 ; புலத்தியன், 326 ; மார்க்கண்டன், 341 ; முனிவர் சபதமிடல், 1043—1051 ; யாஞ்ஞவற்கர், 529 ; ரோமாசமா முனிவன், 357 ; லிகிதமுனி,

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUN 1997

235, 236, 237; வசிட்டமுனி, 309, 545, 548, 563, 590 1035, 1044; வாமமுனி, 130, 133; வாற்கலியன், 369; விசுவாமித்திரர் சிருஷ்டி, 600; விசுவாவசு, 308; வியாதமுனி, 336; வியாதர், 30; வியாதன், 126; வேதவியாதன், 11.

மூர்த்தா - தலை, 35, 175
மூரல், 61
மூலநோய், 203
மூலமலம், 122, 1060
மூன்றுவித உயிர், 221

மெய்கண்ட தேவர் ஆரியத்தைத் தமிழாக்கியது, 19
மெய்கண்டதேவர் துதி, 19
மெய்கண்டதேவன், 19
மெய்ஞ்ஞானம், 29

மேதை - நரம்பு, 285

மைந்து, 641
மொழி தவறுதல் வெவ்வினையாகாவிடங்கள், 498

மோசனம், 504
மோசித்தல், 198
மோதகம், 206

யதுகுலம், 464

யாப்பு, 645
யாழ், 95

யுகம்:—யுகங்களின் அறிவின் அளவு, 848—51
யுகங்களின் பிராயங்கள், 845—6
யுகங்களின் அதிதெய்வங்கள், 840
யுகங்களின் குணங்கள், 841
யுகங்களின் தாரதம்மியங்கள் 838
யுகங்களுக்கு ஆண்டுகள், 844
யுகங்களுக்குரிய சாதனங்கள், 839
யுகந்தோறும் பலன் கிட்டும் முறை, 935—43; கிருதயுகம், 838; சதிரியுகம், 994; திரேதயுகம், 838; கிருதயுகத்தின் இயல்புகள், 913—22; திரேதயுகத்தின் தன்மைகள், 923—4; துவாபர யுகத்தின் தன்மைகள், 925—34.

வச்சிரம், 626
வசி, 102
வசி என்னும் வித்தை, 154
வயின் - வயிறு, 686
வராகம் - பன்றி, 811
வல்லி, 317
வல்லியம், 228, 471, 475, 500, 811
வன்றொண்டன், 117
வனசமலர், 135
வாசவன், 977
வாஞ்சித்தல், 100
வாஞ்சை, 146, 195, 211, 522
வாமம் - இடப்பக்கம், 27
வாய்த்தலை, 45
வாய்தல் - வாயில், 96
வாரம் வசித்தல், 183
வாலி, 305
வான்வாணி, 259, 511, 660
வானவில்லின் வரலாறு, 167

விக்கிரகம், 58
விசிட்டம், 211, 234, 255, 522, 542, 651
விஞ்ஞானன், 344
விஞ்ஞானகலர், 185

விடதரம் - பாம்பு, 139
விடலிபதி, 693
விடியுமுன் செய்யவேண்டியவை, 68
விடை - இடபம், 9
விதி - பிரமன், 190
விப்பிரர், 132, 247, 278, 592, 637, 660
விரதியர், 124
விருத்தம் - மாறுபாடு, 64
விலங்குகளை அடிக்கலாகா நிலைகள், 229

வீணை, 95
வீறு, 152

வெறுக்கை - பொன், 478

வேழம் - கரும்பு, 47
வேள், 268
வேளி, 985
வேதவனம், 14

வைகரி, 208
வைசுரன், 153
வைதரணியாறு, 401
வைதிகர், 27
வைகுண்டம், 4

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUN 1997
MADRAS-600 008

குறிப்புதவிநூல்

[COURTESY : SRI. V. S. THYAGARAJA MUDALIAR]

கமலாலயம் — தேவதீர்த்தம்